கங்கையும் வந்தாள்

'லக்ஷ்மி'

பூங்கொடி பதிப்பகம்

பதிப்புரை

பொறுமைக்கு பூமியையும், சகிப்புத் தன்மைக்கு கங்கையையும் உதாரணமாகச் சொல்வார்கள். இந்த நாவலில் வரும் கதாநாயகி கங்கா பொறுமையில் பூமியையும், சகிப்புத் தன்மையில் கங்கையையும் ஒத்தே விளங்குகிறாள். ஆழமான அர்த்தத்தோடுதான் அவளுக்கு கங்கா என்று பெயர் சூட்டியிருக்கிறார் ஆசிரியை.

பம்பாயிலிருந்து மெயில் வண்டியில் புறப்படுகிறான் கதாநாயகன் நரேந்திரன். கதையும் அதே மெயில் வேகத்திலேயே ஓடுகிறது. அவன் நம்பி வந்த ரத்னசாமி வைரப்பிள்ளையார் விஷயத்தில் அவனை ஏமாற்றினாலும் கூட, எந்த வைரத்திற்கும், வேறு எந்த விலை மதிக்க முடியாத பொருளுக்கும் இல்லாத பெருமையுடைய கங்காவின் அன்பை அவன் அடைய அவர் காரணமாகிவிடுகிறார்.

தான் ஏமாற்றப்பட்டுவிட்ட ஆத்திரத்தில் கொதிக்கும் நரேந்திரன் பழி வாங்கத் துடிக்கிறான். மாதா பிதா செய்த பாவம் மக்கள் தலையில் என்பது போல ரத்னசாமி செய்த குற்றத்திற்கு கங்கா தண்டனையடைய நேர்கிறது. அவளை ஒதுக்கி வைத்தது மட்டுமல்ல; எந்தப் பெண்ணாலுமே சகிக்கவோ மன்னிக்கவோ இயலாதபடி அவளது கற்பிற்கே களங்கம் கற்பிக்கிறான்.

ஆனால் பெண் அன்பின் வடிவமல்லவா! இவ்வளவு துயரத்தையும் சகித்துக் கொண்டு தன் மகனுக்காக வாழும் கங்கா, தன் கணவன் தலையில் அடிபட்டு கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் இருக்கிறான் என்றதும் துடிக்கிறாள். ஓடுகிறாள். பணிவிடை செய்து அவன் உயிரை மீட்டு வருகிறாள். அவன் குணமடைந்ததும் பெண்மைக்கே

உரிய ரோஷத்துடன் தான் முன்னர் முடிவு செய்திருந்தபடி வெளியேற முனைகிறாள். சிவகாமி அம்மாளின் அன்புக் கட்டளையும், நரேந்திரனது கெஞ்சுதலும் அவளுள்ளே உறைந்து கிடந்த காதலைத் தூண்டிவிடவே அவளது முடிவை மாற்றிக் கொள்கிறாள். பெண் எதையும் மன்னிக்கும் தாயின் வடிவமல்லவா!

இறுதியில், நம்முடைய பிரச்சினைகளை மட்டுமல்ல, நமக்குப் பிரச்சினையாக இருக்கும் பொருட்களையும் கூட ஆண்டவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்பது போல இவ்வளவு மனக்கசப்புக்கும் காரணமாக இருந்த வைரப்பிள்ளையாரை வேங்கடவனின் உண்டியலில் சேர்ப்பித்து விட்டு நிம்மதியாகத் திரும்புகின்றனர் கங்காவும், நரேந்திரனும். இதில் வரும் ஏனைய பாத்திரங்கள் அனைவருமே என்றென்றும் நம் நெஞ்சில் நிழலாடக் கூடியவர்கள்.

'தேவி' வார இதழில் தொடர்கதையாக வந்த இந்த அருமையான நாவலை வெளியிட எங்களுக்கு அனுமதியளித்த ஆசிரியை திருமதி லக்ஷ்மி அவர்களுக்கு எங்கள் நன்றி.

வே.சுப்பையா.
பூங்கொடி பதிப்பகம்

கங்கையும் வந்தாள்

1

பம்பாய் தாதர் எக்ஸ்பிரஸில் தன் இருப்பிடத்தைத் தேடி அமர்ந்து கொண்டான் நரேந்திரன். தனது இருக்கையின் கீழேயே, கையிலிருந்த பெட்டியைத் தள்ளிவிட்டான்.

''ஸார்'' யாரோ கூப்பிட்டார்கள். நரேந்திரன் நிமிர்ந்து பார்த்தான்.

''உங்களுக்கு கீழ் 'பெர்த்' போலிருக்கு. தயவு செய்து ஒரு உதவி செய்ய முடியுமா?'' எதிரே அமர்ந்திருந்த தடித்த மனிதர் தெளிவான ஆங்கிலத்தில் கேட்டார்.

நரேந்திரன் ''சொல்லுங்க'' என்றான் தமிழில். தடித்த மனிதர் முகத்தில் புன்னகை. சொந்த மொழியைக் கேட்கும் பொழுதுதான் என்ன ஆனந்தம்!

''என் மனைவிக்கு 'மேல் பெர்த்' போட்டுக் கொடுத்துட்டாங்க. எனக்கும் வயசாயிட்டுது. ஏறமுடியாது...'' தமிழில் சினேக பாவத்துடன் கூறியபடி புன்னகைத்தார்.

''கவலைப்படாதீங்க. நான் 'மேல் பெர்த்'துக்கு மாத்திக்கறேன்.''

''நன்றி'' நிம்மதிப் பெருமூச்சுடன் திரும்பினார்.

பேரனை அணைத்தபடி அமர்ந்திருந்த மனைவி பக்கம் திரும்பி, ''அவர் சரின்னிட்டார். நீ கீழ் பெர்த்திலேயே தூங்கிக்கலாம்'' என்றார்.

''கவலை விட்டது.''

''எனக்கும் கவலை விட்டது'' மனதிற்குள் எண்ணியபடி பெட்டியை எடுத்து மேல் 'பெர்த்தில்' வைத்தான். தோள் பையை கவனத்துடன் தொட்டுப் பார்த்துக் கொண்டான். மடியில் கனம் என்றால் வழியில் பயம் என்று சும்மாவா சொல்கிறார்கள். அந்தப் பெட்டியில் உள்ள சக பயணிகள் அத்தனை பேருமே, அவனது தோள் பையில் உள்ள வைரப் பிள்ளையாரை ஊடுருவிப் பார்ப்பது போல ஒரு பிரமை. இரவு சாப்பாட்டிற்குப் பிறகு மேல் 'பெர்த்'தில் ஏறிப் படுத்து விட்டால் போதும் என்றிருந்தது அவனுக்கு.

''பாட்டி...! பாட்டி! ரயில், குகைக்குள்ள போகும்னு சொன்னியே, எப்ப போகும்?'' பேரன் அரிக்கத் துவங்கினான்.

பாட்டி அவனை உறுத்துப் பார்த்தாள். ''அஞ்சு வயசுக்குள்ள உலக அறிவெல்லாம், குழந்தை மண்டைக்குள்ளே திணிக்க ஆத்திரப்பட்டே, அதுதான்'' கணவர் கேலி செய்தார்.

''அதுக்காக, குகைக்குள்ளே போற சிங்கம் மாதிரி உறுமிக்கிட்டே இருக்கானே'' கடுகடுத்தாள் மனைவி.

பக்கத்திலிருந்த வாலிபன் ஒருவன் புத்தகத்தைப் பிரித்துக் கொண்டான். அருகிலிருந்த அவனது நண்பன், ''என்னது? வயிறு பசிக்குது, சாப்பிடாம கன்னா, பின்னா புத்தகத்தைப் படிச்சுகிட்டு'' என்று கிண்டல் செய்தான்.

''செவிக்குணவு இல்லாதபோதுதான் வயிற்றுக்கு ஈயப்படும்னு திருவள்ளுவர் சொல்லி இருக்கார்.''

''வள்ளுவர் சொன்னது இந்தப் புத்தகத்துக்கு இல்லைப்பா'' நண்பன் கூறியதும், புத்தகப்பிரியன் சிரித்தான்.

''ஷோலாப்பூர் நிறுத்தம் வரணும் சாப்பாட்டுக்கு அதுக்குள்ள ஏன் பசி, பசின்னு பறக்கறே, சிகரெட் வேணுமா?' புத்தகக்காரன் கேட்டான்.

''இப்ப ஏதாச்சும் வேணும்'' நண்பன் பிடிவாதமாகக் கூறினான். நரேந்திரன் வயிற்றையும் பசி சுருட்டியது. ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான்.

பிஸ்கட், வறுவல் வண்டிக்காரன் அருகில் நின்று கொண்டிருந்தான். கையை நீட்டி இரு பொட்டலங்களை வாங்கி பத்திரப்படுத்தினான். சில நொடிகளில் வண்டி நகரத் துவங்கியது. அலை மோதிக் கொண்டிருந்த பிளாட்பார மனிதக் கும்பலிலிருந்து வண்டி வேகம் பிடிக்கத் துவங்கியது.

வறுவல் பொட்டலத்தைக் காலி செய்துவிட்டு, மேல் 'பெர்த்'தில் தாவி ஏறிவிட்டான் நரேந்திரன். தோள் பையிலிருந்த பிளாஸ்டிக் குப்பி தண்ணீரைப் பருகிவிட்டு தாகத்தைத் தணித்தான். இடது கையால் மெல்லப் பையினுள்ளே துழாவி அந்தப் பொட்டலத்தைத் தொட்டுப் பார்த்து திருப்தியடைந்தான். கண்களை மூடி சிறிது களைப்பாற நினைத்தான். மனம் இளைப்பாற மறுத்தது.

''பாட்டி! அம்மா ஸ்டேஷனுக்கு வருவாங்களா?'' குழந்தையினுடைய, மழலை சுரீரென நெஞ்சைத் தாக்கியது. அவனது அம்மா வராத இடத்துக்கல்லவா போய் விட்டாள்!

அம்மாவின் நினைப்பு நெஞ்சை அடைத்தது. அழைப்பு மணியை ஒருமுறை அழுத்தினதுமே ''நரேன்'' என்றபடி அன்பு தழைக்க அழைக்கும் குரலை இனி கேட்க முடியுமா?

ரோஜா வண்ண நூல் சேலை, சிவப்புத்தோடு, முன்புறம் முழுதும் நரைத்து, மூக்குக் கண்ணாடி பளபளக்க நின்ற சுத்தமான மெலிந்த உருவம், இனி மீண்டும் தோன்றுமா? இல்லை அம்மா செத்து சாம்பலாகவில்லை. அவள் அதே அன்பின் உருவமாக, இருக்கிறாள். ''அம்மா! நீ சாகவில்லை, அது பொய் பொய்'' மனம் அலறியது.

''அம்மா சாதம் ஊட்டறாப்பல நீ எனக்கு ஊட்டு பாட்டி'' ரயிலின் கடகட சப்தத்தை மீறி குழந்தையின் மழலை கேட்டபோது, நெஞ்சிலே ஒரு வேதனை.

இருபத்தைந்து வருடங்கள் அவனும் அம்மாவின் பிள்ளையாகவேதான் வளர்ந்தான். அம்மா, இறப்பதற்கு சில நாள் முன்புகூட, சமையலறையில் அம்மாவுடன் நின்று கொண்டிருந்தான்.

''கையைக் கழுவிக்கலே, வாயிலே போட்டுடுங்க அந்த பலகாரத்தை'' என்று விளையாடியபோது அம்மா, ''நீ இன்னும் குழந்தைடா'' என்று சிணுங்கினாள். அப்போது அவள் முகத்தில் வழிந்த பெருமையை மீண்டும் காண முடியுமா? கண் இமையோரத்தில் நீர் சுட்டது.

''சே ஆண்பிள்ளைங்க அழலாமா!'' என்று அம்மாவின் குரல் காதருகில் கேட்பது போன்றிருந்தது.

''குகை வருது, குகை வருது'' குழந்தை கிரீச்சிட்டான். தடக், தடக்கென்று முழங்கியபடி, வண்டி வெளிச்சத்திலிருந்து இருளுக்குள் மறைந்தது.

''அடே சே! சமயம் பார்த்து...'' என்று அலுத்தபடி புத்தகத்தை மூடினான் புத்தகப்பிரியன்...

''ரொம்பவும் சுவாரஸ்யமான பகுதியோ'' நண்பன் சீண்டினான்.

''இல்லை... துப்பறியும் இன்ஸ்பெக்டர் கிட்ட வரார். சமயம் பார்த்து இருட்டு.''

''ஏண்டா இந்தக் கண்ராவியெல்லாம் படிக்கறே. இவங்க கதையா எழுதறாங்க. கொலைதான் பண்றாங்க.''

''ஆமா, உன்னுடைய அபிமான கதாசிரியை, சும்மா குடும்பக் கதைன்னு வீட்டையே சுத்தி வருவாங்க. அதைப் படிச்சிட்டு நீ மட்டும் கண்கலங்கலாம்?''

''அதுல உண்மையான வாழ்க்கை சம்பவம் இருக்கே.''

''இதுல கொலை இருக்கு. போலீஸ் இருக்கு.''

''சரி! சரி! இப்ப வெளிச்சம் இருக்கு. பேசாம இரு.''

வெளிச்சமா? நரேந்திரனது வருங்காலம் ஒரே இருளில் மூழ்கிக் கிடக்கிறதே! அம்மா இனி பிழைக்க மாட்டாள் என டாக்டர்கள் கைவிட்டபோது, அவளை அவன் வீட்டிலேயே வைத்துக் கவனித்துக் கொண்டிருந்தான்.

ஒருநாள் நள்ளிரவில் அம்மா தெளிவுடன் விழித்துக் கொண்டாள். ''நரேன்! இன்னும் நீ தூங்கலியா?'' தாயின் அன்பான குரல் அவனைத் திடுக்கிடச் செய்தது.

''இல்லேம்மா''

''அப்ப ஒரு காரியம் செய். என் தலையணை அடியில் ஒரு சாவிக் கொத்து இருக்கு. எடு, அந்த அலமாரியைத் திற, அதுல அடித்தட்டில் ஒரு நகைப்பெட்டி இருக்கு. அதுல வேறு எதுவும் இல்லே. ஒரே ஒரு பொட்டலம் இருக்கும். அதை எடுத்திட்டு வா'' என்றாள் மெல்ல.

வியப்புடன் அம்மாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தான்.

''பொட்டலத்தைக் கவனமா பிரி''

அவன் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. நீலம், பச்சை என்று பலஜால வர்ணங்களை அள்ளி வீசியபடி, ஒரு விநாயகரின் உருவம் உள்ளே இருந்தது.

''என்ன பார்க்கிறே. இது வைரப் பிள்ளையாரப்பா. ஒரே கல்லில் செதுக்கினது. விலை எக்கச்சக்கம். நம்ம குடும்பத்து பரம்பரைச் சொத்து இது. உங்க கொள்ளுத் தாத்தாவோட அப்பா குஜரத் சமஸ்தானத்தில் திவான் ஒருத்தர் கிட்ட வேலையா இருந்தாராம். அவரது நாணயத்துக்காக கொடுத்த பரிசு இது. உங்கப்பா சொத்தையெல்லாம் குதிரை ரேசில தொலைச்சு, வேலை வெட்டின்னு செய்யாம அழிஞ்சு போனார். இந்த பிள்ளையாரை, கண்ணுக்குத் தெரியாம ஒளிச்சு வச்சிருந்தேன். ஏன் தெரியுமா?'' அம்மா நிறுத்தினாள்.

''சொல்லுங்க.''

''உனக்கு ஒண்ணும் வைக்க முடியலே.''

''ஏம்மா கஷ்டப்பட்டு என்னை எம்.ஏ. படிக்க வச்சிருக்கீங்களே.''

அந்தப் படிப்புக்குக்கூட ஒழுங்கான வேலை கிடைக்காம திண்டாடறியே.''

''இங்க கிடைக்கும். இந்த பம்பாய் நகரிலே வேலை வாய்ப்புக்கள் அதிகம்மா. கொஞ்சம் பொறுமையா...''

''போதும் பொறுமையா இருந்தது. நான் பட்ட அவஸ்தை நீயும்பட வேணாம்பா. நீ பேசமா நம்ம ஊர் பக்கம் புறப்பட்டு போ. நான் ஏன் இப்பிடி பேசறேன்னு நினைக்காதே.''

''சரியம்மா. அப்படியே செய்யறேன். முதல்லே உங்க உடம்பு நல்லா ஆகட்டும்.''

''என்னைப்பத்திக் கவலைப்படாதே. முதல்ல நான் சொல்ற முகவரியை எழுதிக்க. உங்கப்பாவோட சிநேகிதர் நகை வியாபாரி ரத்னசாமின்னு ஒருத்தர் திருவல்லிக்கேணி அஞ்சாம் நம்பர் முத்துவீரன் தெருவில இருக்கார். அவர் உதவியை நாடினா, இத நல்ல விலைக்கு வித்துக் குடுப்பார். அபூர்வ கலைப்பொருள் சேகரிக்கறவங்க கிட்ட இதை அவராால விக்க முடியும். அவரது வேலைக்குக் கமிஷன் குடுத்துடு. இதை நானே செய்துடலாம்னு நினைச்சேன். உடம்புக்கு வந்திட்டது. நீ ஆண் பிள்ளையாச்சே. என்னைவிட துணிச்சலா இதை செஞ்சு முடிச்சிடுவே பாரு. இதை வித்த பணத்திலே நல்லதா ஒரு வியாபாரத்தை ஆரம்பிச்சு உன் எதிர்காலத்தை காப்பாத்திக்கோ.''

அந்த பலவீனமான நிலையிலும், மகனின் வருங்காலத்தைப்பற்றிய கவலை அவளுக்கு. இனி அப்படி அவனைப்பற்றிக் கவலைப்பட யார் இருக்கிறார்கள்? கண்களில் நீர் புரண்டது.

''சே! சே! அழக்கூடாது'' அம்மாவின் குரல். ஆமாம், அவன் இனி துணிச்சலாக செயலில் இறங்க வேண்டும்.

குகைக்குள்ளிருந்து வெளிச்சத்துக்கு வருவதும் மீண்டும் குகை இருட்டுக்குள் மறைவதுமாக ரயில் வேகமாக கண்ணாமூச்சி விளையாடியது.

''பதினாலு குகை தாண்டியாச்சு'' குழந்தை மகிழ்ச்சியுடன் உரக்கக் கூவினான்.

''சாயந்திரம் பூனாவில ஒரு கப் 'சாய்' 'படாடா' வடை சாப்பிடணும்'' நண்பன் பசிக்குரல் கொடுத்தான். புத்தகப்பிரியன் எரிச்சலுடன் புத்தகத்தை மூடினான்.

''எப்பப்பாரு பசி, வயித்தைக் கட்டிக்கிட்டு அழு. அதுதான் நாம்ப உருப்படறதே இல்லை.''

நண்பன் விடவில்லை. புனாவில் படாடா வடையும், டீயும் வயிற்றினுள் இறங்கியதும்தான் அவன் ஓய்ந்தான். நரேந்திரன் பசியை அடக்கிக் கொண்டு ஷோலாப்பூர் சாப்பாட்டிற்கு டிக்கட் எடுத்துவிட்ட நிம்மதியில் இருந்தான்.

ஷோலாப்பூர் நிறுத்தத்தில் பயணிகளிடையே ஒரு கலகலப்பு.

''தாலி (தட்டு) சாப்பாடு வருது'' என்று குழந்தை குரல் கொடுத்தான். பஞ்சத்தில் அடிபட்ட பிச்சைக் குடும்பம் போல, காசை முன்னதாகவே கொடுத்தவர்கள் கையை நீட்டினார்கள்.

நரேந்திரன், தோள் பையுடன் மெல்லக் கீழே இறங்கி அமர்ந்தான். டிக்கட்டைக் கொடுத்து தட்டுச் சாப்பாட்டை பெற்றுக் கொண்டான். ஒருபிடி வாயில் வைத்தான். ''சாப்பாடா அது?'' தொண்டையில் இறங்க மறுத்தது. அம்மா வாய்க்கு ருசியாக சமைத்துப் போட்டு, அவனது ருசியை வளர்த்து விட்டிருந்தாள். இனி கிடைத்ததைச் சாப்பிடத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏன்? இனி வாழ்க்கையில் எத்தனையோ சங்கதிகளை மாற்றி அமைத்துக் கொள்ள முயல வேண்டும்.

ஷோலாப்பூரில் உணவை முடித்துக் கொண்டு படுத்தவன் உறங்கவில்லை. மறுநாள் காலையில் பல்துலக்கி,

அவ்வப்போது வண்டியினுள் விற்ற டீயைப் பருகியதோடு சரி, பிற்பகல் சாப்பாடு எதுவும் வேண்டியிருக்கவில்லை.

''அரக்கோணம் வந்திடுச்சு. நல்ல காப்பி வாங்கிக்கலாம்'' புத்தகப் பிரியனின் நண்பன், அந்த நிறுத்தத்தில் இறங்கினான். சூடான காப்பியை நரேந்திரனும் இறங்கி வந்து பருகினான். அடிக்கடி தோள் பையை இறுக்கமாக அணைத்துக் கொண்டு, சுற்றுமுற்றும் திகிலோடு கவனித்தான். யாரோ அவனைப் பின் தொடர்வது போல ஒரு பயம்.

ரயில் 'பேஸின் பிரிட்ஜ்' அடையும் வரை நேரம் ஒரு யுகமாக நீண்டது. பயணிகள் அவர்களது மூட்டை முடிச்சுகளை முன்பக்கமாகத் தள்ளத் துவங்கினார்கள்.

பேஸின் பிரிட்ஜில் பெருமூச்சு விட்டபடி, நின்ற ரயில் இலேசில் கிளம்ப மறுத்தது. ''எப்புவும் இப்படித்தான். ஒரு கெடப்பில் இங்க போட்டுப்பிடுவான்'' குழந்தையின் தாத்தா.

''அவங்களுக்கு 'ஸிக்னல்' கிடைக்க வேணாமா'' நண்பன் புத்தகப் பிரியனிடம் கூறினான்.

பெட்டியுடன் கீழே இறக்கத் தயாராக அமர்ந்திருந்த நரேந்திரனுக்கும் பொறுமை குறைந்து விட்டிருந்தது. காசை மிச்சப்படுத்த இந்த கஷ்டமான பயணம். பிளேனில் வந்திருக்கலாம் என்று நினைத்துக் கொண்டான். கையிருப்பு உதைக்கிறதே! சென்னை சென்ட்ரலில் வழக்கமான தாமதத்துடன் பயணிகளை, தாதர் எக்ஸ்பிரஸ் வெளியே பிளாட்பாரத்தில் கொட்டியது.

வீட்டை அடைய வேண்டும் என்ற பரபரப்பில், கூட்டத்தில் நீந்தி வெளியே வந்தான், நரேந்திரன். முதலில் வந்த ஆட்டோவினுள் தாவி அமர்ந்தான்.

''திருவல்லிக்கேணி போப்பா'' அவனுக்கு சென்னை மாநகரம் புதிய இடம் இல்லைதான். சில ஆண்டுகளுக்கு முன் அம்மாவுடன் அவன் வந்திருக்கிறான். ஆனாலும் ஒரு மருட்சி.

முத்துவீரன் தெரு 5-ம் எண் வாயிலில் ஆட்டோவை நிறுத்தி இறங்கிக் கொண்டான்.

பழைய காலத்து மாடிக் கட்டடம். சுண்ணாம்புப் பூச்சு கண்டு வருடங்களாகி விட்ட நிலை. இரண்டு ஓட்டு வீடுகளுக்கிடையே, மாட்டிக் கொண்டு திணறுவதைப் போன்ற பழைய கட்டடம். கம்பி போட்ட வராந்தா. உள்பக்கக் கதவில் 'ரத்னசாமி' என்ற பெயர் பலகை தொங்கியது. கேட்டு முகப்பில் இருந்த அழைப்பு மணியை அழுத்தினான். மாலைப் பொழுது மங்கிய நேரம். வெளிச்சம் அகலவில்லை. இந்தப் பழைய பாணி கட்டடத்தினுள்ளிலிருந்து வெளிப்படப் போகும் ரத்னசாமி எப்படி இருப்பார். கட்டை குட்டை பிரஷ் மீசையுடன் என்று கற்பனை செய்து கொண்டு நிற்கையில் "யாரது" என்று அதட்டும் பெண்ணின் குரல் கேட்டு திடுக்கிட்டான்.

மறுகணம் உள் பக்கத்துக் கதவைத் திறந்து கொண்டு, அவன் சமீபமாக கம்பிக் கதவருகே வந்து நின்ற பெண்ணைக் கண்டு வாயடைத்துப் போனான்.

கண்கள் மினு மினுக்க, வட்ட முகத்துடன் தங்கச்சிலை போல வந்து நின்ற இந்தப் பெண் யார்? ரத்தினசாமிக்கு என்ன உறவு? பேசத் தெரியாமல் திகைப்புடன் நின்றான்.

2

முகத்தில் முத்து முத்தாகப் பூத்த வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டான் நரேந்திரன்.

"இது நகை வியாபாரி திரு. ரத்னசாமி அவர்களின் வீடு தானே?" சில வினாடிகளுக்குப் பின்னர்தான் நாக்குப் புரண்டது.

"ஆமாம்" தலையை ஆட்டினாள் அவள்.

மங்கிக் கொண்டு வந்த வெளிச்சத்தில் அவளது முகம் செவேலென்று காணப்பட்டதைக் கவனித்தான்.

''நீங்க அவருக்கு...?'' மேலே தொடர முடியாது ஊன்றிப் பார்த்தான். நகை வியாபாரி ரத்னசாமி அவனது தந்தையின் நண்பர் என்றால் கட்டாயம் வயது ஐம்பதிற்கு மேலிருக்கும். இந்தப் பெண் ஒரு சமயம் அவரது இளைய மனைவியோ...? காரணமற்ற ஒரு பொறாமை நெஞ்சில் குறுகுறுத்தது.

''நான் அவரோட மகள்...'' அவள் மெல்லிய குரலில் சொன்னபோது 'அப்பாடா' என்றதொரு நிம்மதி அவனுக்கு.

வாயில் அழைப்பு மணியை அழுத்திய சில வினாடிகளில் கதவைத் திறந்தவுடன் சொந்தம் கொண்டாடதுடிக்கும் மனதின் போக்கு ரொம்ப வேடிக்கைதான்! தன்னையே கடிந்து கொண்டான்.

''நீங்க யாருன்னு சொல்லலியே'' அவளது குரல் தேனாக இனித்தது.

''பம்பாயிலிருந்து வரேன். முருகேசன் என்பவரின் மகன். திரு. ரத்னசாமி என் தந்தையோட நண்பர். ஒரு முக்கிய வேலையாக அவரை நான் பார்க்கணும்.''

''அவர் இப்ப கடையில் இருப்பார். ஒன்பது மணிக்குத்தான் வீட்டுக்கு வருவார். அதுக்கு முன்னே பாக்கணும்னா, பீட்டர்ஸ் ரோடுல 'அமராவதி ஜுவல்லர்ஸ்'னு கடை பேரு, அங்க பாக்கலாம்'' மெலிதாக முறுவலித்தாள்.

சிறிது மட்டும் பளிச்சிட்ட அவளது வரிசைப் பற்களை வியப்புடன் பார்த்தான். கதவை அவள் சட்டென்று தாளிட்டுக் கொண்டதும், இருள் அவனைச் சூழ்ந்து கொண்டது போல திகைப்பில் ஆழ்ந்து போனான்.

நரேந்திரன் எதையும் தீவிரமாகக் கவனிப்பவன். அவளுடன் பேசிய அந்த சில வினாடிகளிலேயே அவன் கண்கள் அவளது தோற்றத்தை மேலும் கீழும் ஆராய்ந்தது உண்மை.

நகை வியாபாரி மகள் என்பதற்கு விளம்பரம் போல அவள் அதிக நகைகள் அணிந்து கொண்டிருக்கவில்லை. காதுகளில் முத்துக் கம்மல், மூக்கில் வெள்ளைக் கல் மூக்குத்தி, கழுத்தில் மெல்லியதாக தங்கச் சரடு, கைகளில் கண்ணாடி வளையல்களினூடே ஒரே ஒரு தங்க வளையல். இடையில் வெள்ளைப் பூக்கள் போட்ட நீலவண்ண வாயில் சேலை. அதற்கு ஏற்ற ரவிக்கை என்று மிக எளிமையாகத்தான் அலங்கரித்துக் கொண்டிருந்தாள். ஆனால் மனதிற்கு நிறைவாக இருந்தாள்.

இன்னும் எத்தனையோ கேட்க விரும்பினான் அவன். ஆனால், அவள் கதவை அடைத்துக் கொண்டு விட்டாள். அந்நியனுடன் வார்த்தையாட அச்சம் போலும்! இனி அவன் என்ன செய்ய வேண்டும்? கையில் கனத்த பெட்டியை வைக்க ஒரு இடம் தேடியாக வேண்டும்.

புறப்படுமுன் தன் நண்பன் சிகாமணியிடம் சொல்லிக் கொண்டுதான் கிளம்பினான். அவனுக்கு சென்னை மாநகரின் சந்து பொந்துகள் எல்லாம் அத்துப்படி. மலிவான, வசதியான லாட்ஜுகள் சிலவற்றைப் பற்றி எடுத்துக் கூறி இருந்தான். நரேந்திரன் தன் டைரியில் அவற்றின் முகவரிகளைக் குறித்து வைத்திருந்தது நல்லதாகி விட்டது. ராயப்பேட்டை முக்தா தெருவிலிருந்த 'சங்கரன் லாட்ஜ்' தான் மிக அருகில் இருப்பதாகப் புலப்பட்டது. ஒரு ஆட்டோவில் புறப்பட்டான்.

முக்தா தெரு, அசுத்தமானதொரு சந்து. சங்கரன் லாட்ஜ் மனதிற்கு மகிழ்ச்சி ஊட்டவில்லை. ஒரு பழைய மாடிக் கட்டடம். கீழ்ப்பகுதியில் மேஜை நாற்காலிகள் போடப்பட்டு சாப்பாட்டு ஹாலாக மாற்றப்பட்டிருந்தது.

கல்லாப் பெட்டியருகே அமர்ந்திருந்த பருமனான குங்குமப் பொட்டுக்காரர் சந்தேகத்துடன் அவனைப் பார்த்தார்.

கையில் ஒரு பெட்டி, தோளில் ஒரு பை என்று கச்சிதமாக

உடை உடுத்தி வரும் வாலிபர்களைக் கண்டால் அவருக்குப் பலவிதமான சந்தேகங்கள். முந்திய அனுபவங்கள் அவரை விழிப்படையச் செய்திருந்தன.

பெயர், ஊர், தங்கப்போகும் நாட்கள் எல்லாவற்றையும் விசாரித்தார். ஒரு நோட்டுப் புத்தகத்தில் அவற்றைக் குறித்துக் கொண்டு, முன்னதாக மூன்று நாள் வாடகையை வசூலித்த பின் அறைச்சாவியைக் கொடுத்தார்.

''பையா! ரூமை ஐயாவுக்குக் காட்டு'' உரத்த குரலில் உத்தரவிட்டார். அழுக்குப் பிடித்த சீருடையில் இருந்த பையன் ஓடி வந்தான்.

''இப்படி வாங்க'' என்று மேலே அழைத்துச் சென்றான்.

குறுகலான படிகளைத் தாண்டி அசிங்கமான வராந்தாவினுள் புகுந்தபோது, அதை ஒட்டி வரிசையாக சில அறைகள் இருப்பதைக் கவனித்தான்.

''எல்லாருக்கும் பொது குளியல் அறை, கழிவறை'' என்ற பையன், கழிவறை அருகிலே பூட்டப் பெற்றிருந்த அறையின் கதவைத் திறந்து விட்டான்.

கட்டிலின் மீது விரிக்கப்பட்டிருந்த சிகப்பு வண்ண விரிப்பு தண்ணீரைக் கண்டு பல நாளான சேதியை விளம்பரப் படுத்திக் கொண்டிருந்தது. 'கும்'மென்ற மக்கல் வாசனை மூக்கைத்தாக்கவே பையன் பரபரப்புடன் ஜன்னல் கதவுகளைத் திறந்து விட்டான்.

ஓடிச்சென்று ஒரு துடப்பத்தையும் தகர முறத்தையும் எடுத்து வந்து அறையை சுத்தப்படுத்தினான். காலியான மண் கூஜாவை எடுத்துச் சென்று நீர் நிரப்பிக் கொண்டு வந்து, முக்காலி மீது ஒரு கண்ணாடி டம்ளருடன் வைத்தான்.

''இங்கே காலை, மாலை இரண்டு வேளை காப்பி, டிபன்தான் கிடைக்கும். சாப்பாட்டைப் பக்கத்து பரமசிவன் ஓட்டலில்தான் வச்சிக்கணும். ஐயாவுக்கு வேணுமானா

எடுப்புச் சாப்பாடு கொணர்ந்து தர முடியும்'' பையன் தலையைச் சொறிந்தான்.

''தேவையில்லே. நான் டவுனில் சாப்பிடப் போறேன்'' என்று கூறிவிட்டு பர்சைத் திறந்து ஒரு ரூபாய் நாணயத்தைக் கையில் வைத்தான்.

''கொஞ்சம் பாத்துக்க'' என்று கூறிவிட்டுப் பெட்டியை மட்டும் உள்ளே வைத்துவிட்டு, கதவைப் பூட்டிவிட்டுக் கீழே வந்தான்.

மீண்டும் ஆட்டோ பிடித்து பீட்டர்ஸ் சாலை வந்தபோது விளக்குகள் பளிச்சென்று எரிய ஆரம்பித்து விட்டிருந்தன. மளிகைக் கடை ஒன்றின் அருகே சிறு பெட்டிக்கடை தான் 'அமராவதி ஜுவல்லர்ஸ்' என்று அறிந்தபோது அவனுக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

திண்டின் மீது சாய்ந்து கொண்டு தராசு இருந்த கண்ணாடிப் பெட்டிமேல் கையை ஊன்றியபடி கட்டை குட்டையாக வழுக்கைத் தலையுடன் அமர்ந்திருந்த பிரஷ் மீசைக்காரரைக் கண்டு மனம் சோர்ந்து போனான்.

எதிரே போடப்பட்டிருந்த பெஞ்சியின் மீது இரண்டு பெண்மணிகள் அமர்ந்திருந்தனர். கிரிஸ்டல் மாலை வாங்க வந்தவர்களிடம் கடுமையான பேரம் பேசிக் கொண்டிருந்தார் கடைக்காரர்.

கடை எதிரே பாதை ஓரத்தில் நின்ற அவனைக் கடைக்கண்ணால் கவனித்தார் ரத்னசாமி.

''சாருக்கு என்ன வேணும்?'' ஆவலுடன் விசாரித்து விட்டு திரும்பி ''வாங்க இஷ்டம் இருந்தா வாங்குங்க; இல்லாட்டிப் போங்க'' காரமான குரலில் அவர் அதட்டவே அந்தப் பெண்கள் இருவரும் இறங்கி நடந்து விட்டனர்.

''இப்படி வந்து உக்காருங்க'' உபசாரமாகக் கூறிய ரத்னசாமி தங்கப்பல் தெரிய சிரித்தார்.

கடைக்குள் யாரையும் காணவில்லை. அவற்றில் தொங்கிய சில கண்ணாடிப் பெட்டிகளில், முத்து, பவளம் வெள்ளி நகைகள் மட்டுமே இருந்தன.

''நான் பம்பாயிலிருந்து வரேன். முருகேசனின் மகன். என் அப்பா இந்தக் கடைக்காரர் ரத்னசாமியின் சிநேகிதர்னு அம்மா சொன்னாங்க.''

''நாந்தான் ரத்னசாமி! ஆமா...? எந்த முருகேசன்?'' கம்பளிப் பூச்சிகள் போன்ற புருவத்தை உயர்த்தினார் ரத்னசாமி.

''திருநெல்வேலி டி.கே.முருகேசன்.''

''நம்ம முருகேசன் மகனா நீ, அடே! நீ சொன்ன பிறகு தான் அவன் சாயல் உன் முகத்திலே தெரியுது. அவன் இறந்து போய் ரொம்ப வருஷமாகுதே?''

''ஆமாம். பல வருஷமாயிட்டது. இப்ப அம்மாவும் போயிட்டாங்க? பம்பாயில் இருக்கப் பிடிக்காம புறப்பட்டு வந்திருக்கேன்'' என்று நிறுத்தியவன் சுற்றுமுற்றும் பார்த்தான்.

பிறகு தாழ்ந்த குரலில் ''என்கிட்ட குடும்ப சொத்தான ஒரு வைரப் பிள்ளையார் இருக்கு'' என்றான்.

ரத்னசாமி நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''அதை நீங்க வித்துக் கொடுக்க முடிஞ்சா...''

''இப்பக் கையோட கொண்டு வந்திருக்கியா தம்பி!'' ஆவலுடன் எழுந்து கண்ணாடிப் பெட்டிபோல ஒன்றை நகர்த்தினார். ''உள்ளே வா'' என்று அழைத்தபடி உள் பக்க அறைக்குள் அவனை அழைத்துச் சென்றார்.

ஒரு சிறு மேஜை, இரும்பு பீரோ எனப் பலவும், இந்த சிறு இடத்தில் மிக நெருக்கமாகத் திணிக்கப்பட்டிருந்தன. மேஜை இழுப்பறையிலிருந்து ஒரு பூதக் கண்ணாடியை எடுத்துக் கொண்டார்.

''தம்பி! வைரத்தைக் காட்டுங்க.''

தோள் பையிலிருந்த அந்தப் பொட்டலத்தைப் பிரித்து பஞ்சுச் சுருளிலிருந்து அந்தப் பிள்ளையாரை விடுவித்து மேஜை மீது வைத்தான்.

''அம்மா இதை வித்துக் கொடுக்க உங்க பேரைத்தான் சொன்னாங்க.''

கண்கள் விரிய, வைரப் பிள்ளையாரை எடுத்த ரத்ன சாமியின் கரங்கள் நடுங்கின. பூதக்கண்ணாடி வழியே உற்றுப் பார்த்தார்.

''புரூ ஜாகர் கல்லிலே செதுக்கி இருக்காப்பல தோணுது. ரொம்ப அபூர்வமான கலைப் பொருள்! இதை உடனே மதிப்பிடறது ரொம்பக் கஷ்டம். ஒரு வேலை செய். என்னோட வீட்டுக்கு வா. அப்படியே ஒரு வாய் சாப்பிடு. இதை நிதானமா பார்த்து மதிப்பு சொல்றேன். யாருகிட்ட விக்கலாம். எவ்வளவு கிடைக்கும்றதை தீர்மானிக்கலாம். என் வீட்டு முகவரியைச் சொல்லட்டுமா?''

''அம்மா குடுத்த விவரத்தை வச்சிகிட்டு முதல்ல உங்க வீட்டுக்குத்தான் போனேன். உங்க மக இருந்தாங்க. அவங்க இந்தக் கடை முகவரியைக் குடுத்தாங்க.''

''ஒன்பது மணிக்கு கடையை சாத்திடுவேன். அதுக்கு மேல் நீ வீட்டுக்கு வந்தா நல்லாயிருக்கும்'' என்றார்.

''நான் லாட்ஜில் தங்கியிருக்கேன். போய் குளிச்சு உடை மாத்திக்கிட்டு வரேன்.''

''பிள்ளையாரை எடுத்துவர மறந்திடாதே'' ரத்னசாமி தங்கப்பல்லைக் காட்டினார்.

'உங்கள் மகளை மறுபடியும் பார்க்கும் வாய்ப்பை இழப்பேனா' மனதிற்குள் எண்ணியபடி, தோள்பையை இறுக்கமாக அணைத்தபடி கிளம்பினான்.

3

பச்சைத் தண்ணீரை வாளியில் நிறைத்துவிட்டு, அழுது வடிந்த குளியலறைக் கண்ணாடியில், மங்கிய விளக்கு வெளிச்சத்தில் முகத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான் நரேந்திரன். பம்பாயை விட்டுப் புறப்படுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்தான் முகத்தை மழித்துக் கொண்டிருந்தான். மறுபடியும் அவசரமாக முகத்திற்கு ஒரு மழிப்புத் தேவை என்பதை பச்சையாகத் தெரிந்த தாடை தமுக்கடித்தது.

பெட்டியைத் திறந்து வேண்டியவைகளை எடுத்துக் கொண்டு குளியலறையில் புகுந்து விரைவாக முகத்தை முதலில் சீராக்கினான். பயணக் களைப்புப் போகப் பச்சைத் தண்ணீரில் குளித்துவிட்டு... லேசாக எரிந்த முகத்தின் மீது ஷேவிங் லோஷனைச் சிறிது அப்பிக் கொண்டான்.

கட்டில் மீது எடுத்து வைத்திருந்த வெள்ளை சட்டையையும், பழுப்பு வண்ண பேண்ட்டையும் அணிந்து கொண்டான். தன்னுடன் கொணர்ந்திருந்த சிறிய கண்ணாடியை மேஜை மீது சாய்வாக வைத்துவிட்டு கிராப்பு முடியை நன்றாக வாரிவிட்டுக் கொண்டான்.

தாயைப் போன்ற சுருண்ட முடி, தீர்க்கமான மூக்கு, ஒளிமிகுந்த கண்கள், நல்ல நிறம், இவைகளை அவன் கொண்டிருந்தான். பார்ப்பவர்கள் மனதைக் கவரும் தோற்றம், நல்ல படிப்பு, எல்லாமே இருந்தன. ஆனால், அதிர்ஷ்டம்? அது குறைவாக இருந்ததால்தானே தக்க வேலை கிடைக்காது திண்டாடிப் போனான்!

கைக் கடிகாரத்தை எடுத்து அணிந்தபடியே அதை உற்றுப் பார்த்தான். ரத்னசாமி கடையை மூடி வீட்டுக்கு வர அதிக நேரம்

இருந்தது. அதுவரை அவன் லாட்ஜில் உட்கார்ந்திருக்க விரும்பவில்லை. கதவைப் பூட்டிவிட்டு, தோள் பையை இறுக்கமாக அணைத்தபடி வெளியே வந்தான்.

சாலையில் போக்குவரத்தும், நடைபாதையில் மனித நடமாட்டமும் அதிகமாகிவிட்ட வேளை. மேலே யாராவது இடித்தால் கூட பதை பதைத்துப் பிள்ளையாரை தோள் பைக்குள் கையால் தடவிப் பார்த்துத் தெளிந்தபடி மெல்ல நடந்தான். பழக்கடை ஒன்றின் அருகே வந்தபோதுதான் அந்த நினைப்பு ஏற்பட்டது.

முதல் முதலாக அவர்கள் வீட்டுக்கு வெறும் கையுடனா போவது? மேல்தட்டில் அடுக்கி வைத்திருந்த ஆப்பிள்களைப் பார்த்தபோது சிவந்து போன அவளது கன்னங்கள் கண்களில் தோன்றி மறைந்தன. சட்டென்று ஆறு ஆப்பிள்களையும், ஒரு டஜன் மலைவாழைப் பழங்களையும் வாங்கி எடுத்துக் கொண்டான்.

பொழுதை ஓட்ட இன்னம் கொஞ்ச தூரம் நடந்தான். அம்மாவின் மறைவிற்குப் பின்னர் ஓட்டல் சாப்பாடு என்று மாறிவிட்ட அவனது வாழ்க்கை அலுப்பாகத்தான் இருந்தது. ருசியான உணவைக் கண்டு பல நாட்களாகி விட்டிருந்தது.

வீட்டு சாப்பாட்டை நாக்கு தேடியது. அவனது மனம் அவளை மீண்டும் பார்க்கக் கிடைத்த சந்தர்ப்பத்தையும் வெகுவாக நாடியது. சாலையில் ஓடிக் கொண்டிருந்த ஆட்டோ ஒன்றைப் பிடித்து ஏறிக்கொண்டான்.

மறுபடியும் அந்த வீட்டு வாயிலில் நின்று மெல்ல அழைப்பு மணியை அழுத்தியதும், மனதிலே ஒரு விதமான கவலை உணர்வு பொங்கிப் புரண்டது.

ரத்னசாமிதான் வந்து கதவைத் திறந்தார். கடைக்கு உடுத்திச் சென்ற பாண்ட், சட்டைகளைக் களைந்து விட்டு, வேட்டியும், பனியனுமாகத் தோளில் துண்டுடன், நெற்றியில் பட்டையாகத் திருநீறு சகிதம் நின்றார்.

''வா தம்பி. உள்ளே வந்து உட்காரு...'' மிகவும் அன்பான குரலில் பலமாக வரவேற்று உபசரித்தார்.

மங்கலாக விளக்கெரிந்த நடையில் பாதணிகளைக் கழற்றிவிட்டு பளிச்சென்று குழல் விளக்கு ஒளி வீசிய கூடத்திற்குள் வந்தான். அங்கே ஒரு பக்கத்தில் உட்கார ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. மற்றொரு பக்கத்தில் சாப்பாட்டு மேஜையும், நாற்காலிகளும் காணப்பட்டன. அவன் வரப்போவதை எச்சரித்து விட்டிருந்தார் போலும். மேஜை மேல் சாப்பாட்டு தட்டுக்கள் வைக்கப்பட்டிருந்தன.

''நான் பகல் நேரச் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வரதில்லை. காலையிலயே கையோட கொஞ்சம் டிபனை எடுத்திட்டு போறது வழக்கம். அதனால் வீட்டுக்கு வர்றதுக்குள்ளே ரொம்ப பசி எடுத்துடுது. முதல்ல சாப்பிடுவோம். பிறகு பேசலாமா?''

நரேந்திரனுக்கும் நல்ல பசி. உள்ளேயிருந்து வந்த வெங்காயத்தின் மணம் நாவில் நீர் சுரக்கச் செய்தது.

''முற்றத்திலே அண்டாவிலே தண்ணீரும், அருகே செம்பும் இருக்கு, கை கழுவிக்க தம்பீ. இது பழைய காலத்து வீடு. கொஞ்சம் சீர்திருத்தி அப்படியே வச்சிருக்கேன். இந்தப் பக்கம் ஊசி குத்த இடம் கிடைக்கறது அரிது.''

''சென்னையிலும் குடியிருக்க வீடு கிடைக்கிறது அரிது போல இருக்கு.''

''இந்த வீட்டை நாலு லட்சத்துக்கு கேக்கறாங்க. வாங்கி இதை இடிச்சு பத்துமாடிக் கட்டடம் ஒண்ணைப் போட்டுடுவாங்க. நான் இப்ப சத்தியா விக்கறதா இல்லே. எனக்கு இருக்கறதெல்லாம் ஒரே பொண்ணு. அதைக் கட்டிக் கொடுத்து, வருகிற மருமகனுக்கு வீட்டையும் தந்துடறதா ஒரு யோசனை.''

''அப்படியா?'' அதற்கு மேல் பேசத் தோன்றாமல் பார்வையைத் திருப்பினான்.

தான் கொண்டு வந்திருந்த பழப் பொட்டலத்தை மேஜை மீது வைத்தான்.

''என்னப்பா இதெல்லாம்'' அன்புடன் கடிந்தபடி ரத்னசாமி ''கங்கா'' என்று குரல் கொடுத்தார்.

''என்னப்பா கூப்பிட்டீங்களா?'' மல்லிகைப் பூவின் மணம் லேசாகக் கூடத்தில் மிதந்தது.

அவன் சாப்பிட வருகிறான் என்று அப்பா சொன்னதும் முகத்தைக் கழுவித் துடைத்துப் பவுடர் போட்டுக் கொண்டு, பொட்டும் பூவுமாக முன்னைவிடப் பளிச்சென்று காணப்பட்டாள் அவள்.

முற்றத்தில் இறங்கி இருவரும் கால் கை கழுவினார்கள்.

''சீக்கிரம் சாப்பாட்டைப் பரிமாறும்மா. எங்களுக்குப் பேச வேண்டிய சங்கதி நிறைய இருக்கிறது'' என்றார் ரத்னசாமி.

எதிர் எதிராக நாற்காலிகளில் சாப்பாட்டு மேஜையருகில் அமர்ந்ததும், ''கங்கா! போன வாரம் நீ போட்ட மாங்காய் ஊறுகாயையும் கொண்டு வந்து வைம்மா'' என்று முன்கூட்டியே கூறிய ரத்னசாமி அவன் பக்கம் திரும்பினார்.

''கங்காவுக்கு ஆதரவா என் விதவை அக்கா பார்வதி என்னோட தங்கிட்டு இருந்தாங்க. அவங்கதான் கங்காவை வளர்த்தாங்க. போன வருஷம்தான் கங்கா பி.ஏ. முடிச்சா. அவ கல்யாணத்தைப் பத்தி யோசிக்கறதுக்கு முன்னே எங்கக்கா மாரடைப்பால் இறந்திட்டாங்க. வருஷம் ஒண்ணு முடியலே'' தடைப்பட்ட குரலில் பேசினார்.

''கேட்க வருத்தமா இருக்கே'' என்று முனகினான் நரேந்திரன்.

''அக்கா கெட்டிக்காரங்க. அவங்கக்கிட்ட வீட்டை நிர்வகிக்கிற சகலதும் கங்கா கத்துக் கொண்டிருப்பதாலே, எனக்கு இப்போ சிரமம் இல்லாம இருக்கு. கங்கா நல்லா சமைப்பா.''

மவுனமாக முறுவலித்தான் அவன். மெல்லிய காலடி ஓசை அருகில் கேட்டபோது அவன் நெஞ்சம் வேகமாகத் துடித்தது.

''நான் முன்கூட்டியே சொல்லி இருந்தா கங்கா நிறைய பதார்த்தங்கள் செய்திருப்பா. என்னவோ நாங்க சாப்பிடற கூழை உன்னோட பகிர்ந்துக்கலாம்னு ஆசைப்பட்டுக் கூப்பிட்டேன். என் நண்பன் மகன் என்றதும் பழைய நினைப்புகளெல்லாம் வந்து மனசை என்னவோ செய்திட்டது'' என்றார்.

கங்கா வாய் பேசாமல் பரிமாறிக் கொண்டிருந்தாள். புடலங்காய் பிரட்டலும், வெங்காய சாம்பாரும் மிகவும் ருசியாகவே இருந்தன. அத்துடன் அவள் கொண்டு வந்து வைத்த ஊறுகாய்... உப்பும், காரமுமாக சாப்பாட்டை வேகமாக விழுங்கச் செய்தது.

இத்தனை மாதங்களில் அவன் இப்படி ருசியான உணவை சாப்பிட்டதே இல்லை என்ற திருப்தியுடன் எழுந்து கைகளைக் கழுவிக் கொண்டான்.

உள்ளுக்கும் கூடத்துக்கும் பலமுறை நடந்த கங்காவை நிமிர்ந்து நன்றாகப் பார்க்க வேண்டும் என்ற ஆசை பலமாகத் தானிருந்தது. ரத்னசாமி தவறாக எண்ணி விட்டால்? உணவைப் பரிமாறிய கைகளையும், மெல்ல நடந்த பாதங்களையுமே பார்த்து திருப்தியடைந்தான்.

சாப்பாட்டிற்குப் பின்னர் மகள் கொண்டு வந்து வைத்த வெற்றிலைத் தட்டை முன்னால் நகர்த்தினார் ரத்னசாமி.

''எனக்கு இதெல்லாம் பழக்கம் கிடையாது. சிகரெட் கூடக் குடிப்பதில்லை'' என்றான் புன்னகையுடன்.

''பம்பாயில வசிச்சும் நீ... பாட்டிலைக் கூட...''

''குடிப்பழக்கம் கிடையவே கிடையாது.''

''முருகேசனைப் போலவே நீயும்னு சொல்லு. அவன் வெத்திலையைக் கூட கையால் தொட மாட்டான். கெட்ட

பழக்கம் எதுவுமே அவனுக்குக் கிடையாது'' நண்பனைப் புகழ்ந்தார் அவர்.

'எல்லாத்துக்கும் சேத்து ஒட்டு மொத்தமா ரேசுக்குப் போற பழக்கம் இருந்ததே! எங்க சொத்து பூராவும் அழிஞ்சு அம்மாவும், நானும் வறுமையில் திண்டாடினோமே' நெஞ்சுவரை எழுந்த வார்த்தைகளை அடக்கிக் கொண்டான் அவன்.

''வாப்பா! இனி நம்ப காரியத்தைக் கவனிப்போம்'' என்று அவனைக் கூடத்திலிருந்த பெரிய அறைக்குள் அழைத்துச் சென்று விளக்கைப் போட்டார்.

அவரது படுக்கையறை போலக் காணப்பட்ட அது மிகவும் சுத்தமாக இருந்தது. மின்விசிறியை சுழலவிட்டு அவனை ஒரு நாற்காலியில் அமரச் செய்தார். தமது இரும்பு பீரோவைத் திறந்து கட்டுகளாக அடுக்கியிருந்த நோட்டுப் புத்தகங்களுக்கிடையே எதையோ தேடினார். பின்னர் ஒரு நடிமனான போட்டோ ஆல்பத்தை இழுத்து எடுத்து ஒரு பக்கத்தைப் புரட்டி எடுத்து மேஜை மீது வைத்தார்.

''பாத்தியா, உங்கப்பா பம்பாய்க்கு புறப்படுமுன் என்னோட எடுத்துக்கிட்ட போட்டோ'' முருகேசன் தன் நண்பன்தான் என்பதை நிரூபிப்பது போல அதைச் சுட்டிக் காட்டினார்.

அவர்கள் வீட்டு ஆல்பத்திலும் அதே போல ஒரு புகைப்படம் இருந்தது. அம்மா அதைக் குறிப்பிட்டுக் காட்டித்தான் ரத்னசாமியை அறிமுகம் செய்திருந்தாள்.

''பள்ளியில படிச்சப்ப, காலேஜில படிச்சப்பன்னு நிறைய போட்டோ இருக்கு. அதையெல்லாம் தேடி எடுக்கணும்'' என்றவர் ஆல்பத்தை மூடிவைத்தார்.

எழுந்து சென்று அறைக் கதவை மூடிவிட்டு, ''வியாபார விஷயங்கதி பேசறப்போ, ரகசியமா நமக்குள்ளே பேசணும். எங்கே

அந்தப் பிள்ளையாரை எடு'' என்றபடி அருகிலே வந்தார்.

அவன் பத்திரமாக வைரப் பிள்ளையாரை எடுத்து மேஜை மீது வைத்தான். பீரோவிலிருந்து பெரிய பூதக் கண்ணாடி ஒன்றை எடுத்து வந்து பிள்ளையாரைப் பரிசோதித்தார் அவர்.

''உத்தேசமா என்ன பெறும்?'' ஆவலாகக் கேட்டான்.

''ரெண்டு லட்சம் தேறலாம். இது கலைப்பொருள். வைரத்தோட மதிப்பைவிட, கலைப்பொருள் என்பதாலே கூடுதலாகக் கிடைக்கலாம்னு நம்பறேன். எதுக்கும் இதை மதிப்பு தெரிஞ்சவங்ககிட்டக் காட்டி கேட்கணும். ஒண்ணு செய்யேன் தம்பி. இதை என்கிட்ட நம்பி விட்டுட்டுப் போனியானா நல்லது.''

நரேந்திரன் தூக்கிவாரிப் போட நிமிர்ந்தான்.

''இது மாதிரி விலை உயர்ந்த பொருளை தோள் பையில் தொங்கவிட்டுக்கிட்டு தெருவில நீ நடக்கிறது ஆபத்து. எவனாவது ஜேப்படிக்காரன், பிளேடு போட்டுக் கிழிச்சி எடுத்துடலாம்.''

நரேந்திரன் குழம்பிப் போனான். முதல் முதலாக அறிமுகமான ரத்னசாமியை நம்பி அவனது குடும்பச் சொத்தான அந்தப் பிள்ளையாரை விட்டுப்போவது சரியா? அவர் சொல்வது போல வழியில் திருடன் எவனாவது அடித்துக் கொண்டு போய்விட்டால்!

''உன்கிட்டே இன்னும் ஏதாவது விலை உயர்ந்த பொருள் இருக்கா!''

ரத்னசாமி கேட்டதும் நிமிர்ந்தான்.

''அம்மாவோட கம்மல் — கழுத்துச் செயின் — கை வளையல்கள் எல்லாம் வச்சிருக்கேன்.''

''அப்போ எல்லாத்தையும் இங்கே வச்சிட்டுப் போ. பீரோ லாக்கர்லே வச்சுப் பூட்டி வைக்கிறேன்.''

அவன் மறு பேச்சின்றி பிள்ளையாரையும், இதர பொருள்களையும் அவரிடம் கொடுத்தான். அவன் கண்முன்னே அவைகளை லாக்கரில் வைத்துப் பூட்டினார். அவன் நெஞ்சு ஏனோ படபடவென்று துடித்தது. இனம் காணாத ஒரு பயத்தில் உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது.

லாட்ஜுக்குத் திரும்பிப் படுக்கையில் விழுந்ததும்தான் ரத்னசாமியை நம்பியது சரியா என்ற மன உளைச்சல். மின்விசிறி எழுப்பிய ஏகப்பட்ட சத்தம். ஊசியாகக் குத்திய மூட்டைப் பூச்சிகளின் உபத்திரவம்... கழிவறையினின்று எழுந்த லேசான நாற்றம்... அவனுக்கு உறக்கம் வரவில்லை. படுக்கை மீது புரண்டான்.

தந்தைக்குப் பின்வந்து நின்று கொண்டு கண்களால் சிரித்தபடி அவனுக்கு விடை கொடுத்த கங்காவிற்கு அவனைப் பிடித்திருக்க வேண்டும். இல்லையில்லை... அவளும் தந்தையுடன் சேர்ந்து நடத்திய சதி நாடகமா அந்தக் காந்தப் பார்வை...?

''யாரையும் நம்பி இந்த வைரப்பிள்ளையாரை மட்டும் கொடுத்திடாதே'' நோயில் நலிந்த நிலையிலும் அம்மா அவனை எச்சரித்திருந்தது நினைவை உறுத்தியது.

''எவனும் இந்தக் கலைப் பொருளைப் பார்த்தா மயங்கி விடுவான் ஜாக்கிரதை...'' என்றாங்களே அம்மா... இப்போ நான் என்ன செய்வேன்...? ரத்னசாமியை நம்பியது பிசகா?... முனகிக் கொண்டு படுக்கையில் மீண்டும் புரண்டான் - இரவு முழுவதும் அவன் உறங்கவே இல்லை.

4

திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான் நரேந்திரன். பொழுது - விடிந்து வெளிச்சம் நன்றாகப் பரவத் தொடங்கியிருந்தது. விடியுமுன்பே எழுந்து விடும் பழக்கப்பட்டவன்.

புதிய இடம் - புதிய ஊர் - வெகுநேரம் குழம்பிவிட்டு பின்னர் கண்களை மூடியதன் விளைவு நன்றாகவே தூங்கி விட்டிருந்தான்.

லாட்ஜ் பையன் கதவை லேசாகத் தட்டினான்.

''காப்பி டிபன் சாப்பிட கீழே வரீங்களா - ரூமுக்குக் கொண்டு வரவா!''

அறைக்குள்ளேயே சிறைபட்டுக் கிடக்க அவனுக்குப் பிடிக்கவில்லை. ''கீழே வந்து சாப்பிட்டுக்கிறேன்'' என்றுபதில் கொடுத்துவிட்டு சோப்பு பெட்டி துவாலையுடன் கதவைத் திறந்து கொண்டு வெளிவந்தான்.

பொது குளியலறை அருகே ஒரு க்யூ. அவனுக்கு எரிச்சலாக இருந்தது. பம்பாய் வாசத்தில் அவர்களது பொருளாதார நிலையில் ஒரு சிறு தனி ஃபிளாட்டில்தான் அவனும், அம்மாவும் வசித்தனர். ஒரே அறை கொண்ட அந்த சிறு குடியிருப்பு இடத்தை அம்மா மிக சுத்தமாக வைத்திருந்தாள். உடம்புக்கு முடியாது படுக்கையில் விழும் வரை அம்மா மிகவும் சுறுசுறுப்பாகத்தான் வாழ்ந்தாள். சோம்பலுடன் திரிய அவனுக்கும் பிடிக்காத சங்கதி. பம்பாயின் பரபரப்பான வாழ்க்கையில் சோம்பலுடன் படுத்துக்கிடப்பது அவனைப் போன்ற மத்திய வகுப்பாருக்குக் கட்டுப்படியாகாத சங்கதி.

பிதுக்கி வைத்த பற்பசையுடன் பிரஷ்ஷை வாயில்விட்டுக் கொண்டு தேய்த்தபடி வராந்தாவை அளந்தான். கடைசியாக

உள்ளே சென்ற குண்டு மனிதர் ஆ ஊ என்று சத்தமிட்டு விட்டு மெல்ல வெளியில் வந்தார். உள்ளே கால் வைக்க முடியாதபடி சோப்பு நுரையையும், தண்ணீரையும் கூட விட்டுப் போயிருந்தார் மகராஜன்.

ஒரு வழியாகப் பல்துலக்கிக் குளியலை முடித்துக் கொண்டான். முதல்நாள் அணிந்த உடைகளை மடித்துப் பத்திரமாகப் பெட்டிக்குள் வைத்துவிட்டு - வேறு ஒரு பாண்ட் சட்டையை எடுத்து அணிந்து கொண்டான்.

கிராப்பை வாரி ஒழுங்கு செய்து கொண்டு பெட்டியிலிருந்த தன் கையிருப்பைக் கணக்கிட்டுப் பார்த்தான்.

இந்த லாட்ஜ் வாசத்தில் சிக்கனமாக செலவு செய்து இரண்டு வார காலத்தை சுலபமாக ஓட்ட முடியும். வைரப் பிள்ளையார் விலை போக அத்தனை நாட்களா ஆகும்? சீக்கிரம் விற்பனையை முடித்துக் கொண்டு கிடைக்கும் தொகையை வங்கியில் போட்டு ஒழுங்கு செய்துவிட்டு அவன் அடுத்தபடியாகத் திருநெல்வேலிக்குக் கிளம்ப வேண்டும்... அங்கேதான் சித்தப்பா கதிரேசன் தன் அண்ணனையும் அவன் குடும்பத்தையும் மறந்து வாழ்ந்து கொண்டிருந்தார்.

என்ன வித்தையோ? அவருக்கு திடீரென்று அவர்களின் நினைப்பு வந்துவிட்டது. வயதும், நோயும் வந்து விட்டாலே உறவினர்களின் நெருக்கத்தைத் தேடும ஒரு ஆசை வந்துவிடுமோ?

ஆண்டின் ஆரம்பத்தில் பொங்கலுக்கு சில தினங்களுக்கு முன்னர் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் சித்தப்பா அவர்களுக்குக் கடிதம் போட்டிருந்தார். அது அவனது டைரிக்குள் பத்திரமாக இருந்தது. அதை மறுபடியும் படிக்க விரும்பினான்... எடுத்துப் பிரித்தான்.

அன்புள்ள நரேந்திரனுக்கு சித்தப்பா கதிரேசன் ஆசிகளுடன் எழுதிக் கொண்டது.

என் அண்ணனது இறுதிச் சடங்குக்கு வந்தபின் ஊர் திரும்பிய நான் மறுபடி உங்களை ஒரு தடவைகூட பார்க்க முடியவில்லை. வியாபாரத்தில் மிகவும் அழுந்திப் போய் விட்டேன்! அண்ணியும், நீயும் இந்தப் பக்கம் வரவே முயன்றதில்லை. தொடர்பு கொள்ளாதது யாருடைய பிசகு என்று விவாதிப்பதை மறந்து விடுவது நல்லது. சமீபகாலமாக என் ஆரோக்கியம் மிகவும் கெட்டு விட்டிருக்கிறது. கடைகளை பார்த்துக் கொள்ளவும் எனக்கு கூட இருந்து உதவவும் நம்பிக்கையான ஒரு ஆள் தேவைப்படுகிறது.

நீ எம்.ஏ.வரை படித்தவன் என்று தெரியும். என்னுடன் நீயும், அம்மாவும் வந்து தங்கினால் உபகாரமாக இருக்கும். உன் சின்னம்மாவின் மறைவுக்குப் பின் வீடு வெறுமையில் மூழ்கி விட்டுள்ளது. என் உள்ளம் துயரத்தில் ஆழ்ந்து விட்டிருக்கிறது. தயவு செய்து சிந்தித்து உங்கள் பதிலை விவரமாக எழுதவும்.

அன்புள்ள சித்தப்பா
கதிரேசன்.

அவனது தாய், மகனுடன் ஒரு பயணம் திருநெல்வேலிக்குப் போக விரும்பினாள். அதற்குள் உடல்நலம் கெட்டு அந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளாது அவள் போய் சேர்ந்துவிட்டாள்.

வைரப் பிள்ளையாரைப் பற்றி எச்சரித்தபோது அவன் தாய் உடனடியாக ஒரு ஆலோசனையையும் கூறியிருந்தாள்.

''சரியான விலை கிடைக்காட்டி பொருளை உன்னிடமே வச்சுக்கோ. உன் வருங்காலத்துக்கு ஒரு சமயம் சித்தப்பா ஏதாச்சும் வழி செய்யக்கூடும். பட்டணத்தில் வீண் பொழுதை ஓட்டாம சித்தப்பாவிடம் போய்ச் சேர். ஒரு வேலை போட்டுக் கொடுப்பார். பிறகு நல்ல நேரம் வரப்போ... இதை வித்து உன் வருங்காலத்துக்கு உபயோகிச்சுக்கோ... சித்தப்பாகிட்டே இதைப்பத்தி மூச்சுவிடாதே!''

அம்மா நலிந்த குரலில் உறுதியாகச் சொன்னது... காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.

ரத்னசாமிக்கு சில நாட்கள் அவன் அவகாசம் தரவேண்டும். பிறகுதான் திருநெல்வேலி பயணம்... என எண்ணியபடி பெட்டியை மூடிவிட்டு கதவைப் பூட்டிக் கொண்டு கீழே வந்தான். சாப்பாட்டறையில் கூட்டம் நிறையத் தொடங்கியிருந்தது. வேலைக்குக் கிளம்பும் ஊழியர்களும், லாட்ஜில் தங்கியிருந்த ஒரு சிலரும் காப்பி பலகாரத்திற்கு ஆஜராகி விட்டிருந்தனர்.

ஓரமாகக் கிடந்த மேஜையருகே வந்து உட்கார்ந்து கொண்டான். மசாலா தோசை, காப்பி என்று பையனிடம் சொல்லிவிட்டு எதிரே உட்கார்ந்திருந்த மனிதனிடம் பேசப் பிரியமின்றி ஜன்னலைப் பார்த்துக் கொண்டிருந்தான். லாட்ஜைப் போலத்தான் காப்பி, பலகாரமும் இருந்தது. லேசான ஊசல் வாசனையும் கருகிய எண்ணையும் மணத்த தோசையை அவனால் திங்க முடியவில்லை. கருத்த நீர் போலத் தெரிந்த காப்பி பார்க்க மிக அருவருப்பாக இருந்தது. ஒரு வாய் பருகிவிட்டு எழுந்து விட்டான். கல்லா பெட்டி மனிதரிடம் காசைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தான்.

சென்னையில் அவனுக்கு உறவினர்களும் யாருமே கிடையாது. நண்பர்களும் இல்லை. பாதையோரமாக நின்று டைரியைப் புரட்டிய போது ஒரு முகவரியைக் கண்டுபிடித்தான்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் பம்பாயில் அவன் சந்தித்து தோழமை கொண்ட ஒரு தமிழ் இளைஞன் - அவர்கள் வீட்டிலேயே இரண்டு நாட்கள் தங்கி விட்டுப்போன ராம மூர்த்தியை போய் பார்த்தால்? புரசவாக்கம் - பகவதி அம்மன் தெரு, பன்னிரெண்டாவது எண் வீட்டுக்குக் கிளம்பினான். அங்கே போய் வருவதற்குள் நேரம் சரியாக இருக்கும்.

ரத்னசாமியை அவரது கடையிலேயே சந்தித்து பேசியாக வேண்டும்... என்று எண்ணியபடி ஆட்டோ ஒன்றைப் பிடித்துக் கொண்டான்.

புரசவாக்கத்திலிருந்த பகவதியம்மன் தெருவைக் கண்டுபிடிப்பதற்குள் நகரத்தையே ஒருமுறை வலம் வந்து விட்டார் ஆட்டோக்காரர்.

அவன் எதிர்பார்த்தது போல அது நகரத்தின் நெருக்கமான சந்துக்களில் ஒன்றல்ல. புத்தம்புது வீடுகள் கொண்டதொரு குடியிருப்புப் பகுதி.

பன்னிரண்டாவது எண் வீடு மிக அழகானதொரு குட்டி பங்களா. அழைப்பு மணியைத் தொடு முன் - உள்ளேயிருந்த நாயின் பயங்கரமான குரைப்பைக் கேட்டுப் பதறிப் போனான்.

''யார் அது?'' அதட்டியபடி பருமனான ஒரு பெண்மணி - வியர்வையில் நெற்றி மீது பரவிவிட்ட குங்குமப் பொட்டும், இடையில் பட்டுச் சேலையுமாக எட்டிப் பார்த்தாள்.

பயங்கரமாகக் குரைத்த நாய் ஒரு சிறு பொமரேனியன் குட்டி... எஜமானிக்குப் பின்னிருந்து அவனைக் கோபமாக முறைத்தது. நாயை அள்ளி எடுத்து அணைத்துக் கொண்டாள். அவனை சந்தேகத்துடன் உறுத்துப் பார்த்தாள்.

''ராமமூர்த்தி வீடு இதுதானே?'' மெல்லிய குரலில் விசாரித்தான். ''இந்த பெயரில் இங்கே யாரும் கிடையாது... தவறான இடத்துக்கு வந்திருக்கீங்க - அக்கம் பக்கத்தாரை விசாரியுங்கோ!'' படபடத்த அவள் படார் எனக் கதவை அடைத்துக் கொண்டு போய் விட்டாள்.

அருகிலிருந்ததொரு வெற்றிலை பாக்குக் கடையில் குளிர்பானம் வாங்கி அருந்திய போதுதான் சங்கதி தெரிந்தது. அங்கிருந்த ஓட்டு வீடுகளையெல்லாம் வாங்கி இடித்துத் தள்ளி குட்டி பங்களாக்களாக கட்டி அதிக விலைக்கு விற்று ஒரு கண்டிராக்டர் பெருத்த பணக்காரராகி விட்டார் என்று கடைக்காரர் சொன்னார்.

ஓட்டு வீட்டில் வசித்த ராமமூர்த்தி இப்போது எங்கே போய்விட்டான்? இத்தனை பெரிய நகரத்தில் அவனைத் தேடிக் கொண்டு எங்கே போவது? சலிப்புடன் திரும்பினான். அதற்குள் நேரம் பத்து மணியை நெருங்கி விட்டது.

பஸ்சை விட்டிறங்கி மெல்ல நடந்து அந்த கடைக்கு முன் வந்து நின்றான்.

''வா! தம்பி! வா...!'' பலத்த வரவேற்பு கொடுத்தார் ரத்னசாமி.

அவரது மகிழ்ச்சி ததும்பிய முகத்தைக் கண்டதும் அவனது கவலைகள் மாயமாகின - மனதில் தெம்பு ஏற்பட்டது.

''வா உள்ளே - ஒரு சில நிமிஷங்கள் அவகாசம் கொடு வந்துட்டேன்!'' என்றபடி அவர் மேஜை இழுப்பறையினின்று ஒரு ஊதுவத்தியை எடுத்து கொளுத்தி சுவற்றில் தொங்கிக் கொண்டிருந்த மகாலக்ஷ்மியின் படத்தின் சட்டத்திலே சொருகினார்.

கையெடுத்துக் கும்பிட்டு... வணங்கினார். அவன் பக்கம் திரும்பி பெரிதாக சிரித்தார்.

''உனக்கு தெய்வ நம்பிக்கை உண்டா அப்பா? இந்தக் காலத்து இளைஞர் சிலர் நாத்திகம் பேசுகிறாங்க... நான் பழைய காலத்துக் கட்டை... சாமி பூதம்னு நம்பறேன். என் மகள் கங்காவுக்கு கடவுள் பக்தி ரொம்ப அதிகம்...'' - சிரித்தார்.

''உட்கார்! உன்னைப்பத்தி நினைச்சேன் - நீ வந்துட்டே. உனக்கு ஆயுசு நூறு. தாகத்துக்கு ஏதாச்சும் தருவிக்கவா?'' பரிவுடன் கேட்டார்.

நாற்காலி ஒன்றில் அமர்ந்தான் - அவனது நெஞ்சு வேகமாகத் துடித்தது... தந்தையின் நண்பரான ரத்னசாமியை அவன் சந்தேகிப்பது சரியா?

''அதெல்லாம் தேவையில்லை - உங்களைப் பார்த்துட்டுப் போக வந்தேன்'' முனகினான் நரேந்திரன்.

''புரிகிறது உன் கவலை! நீ என் ஆருயிர் நண்பன் மகன்; உனக்கு உதவ வேண்டியது என் கடமை. நீ ஒரு வாரமாவது எனக்கு அவகாசம் தரணும். அவசரப்படக் கூடாது. நீ என்ன காட்டிலா இருக்கே. பட்டணத்தில் பொழுது வேகமாக ஓடிடும். அடடா சொல்ல மறந்துட்டேனே. நீ இங்கே இருக்கிற வரை தினமும் ராத்திரிக்கு எங்க வீட்டுக்கு சாப்பிட வந்துடணும்...!'' என்றார் உரிமை தொனித்த குரலில்.

''எதுக்கு உங்களுக்கு சிரமம்!'' புன்னகைத்தான் அவன்.

''கங்கா சமைக்கிறா, நீ சாப்பிடப் போறே! இதில் எனக்கென்ன சிரமம்... கூச்சப்படாதே தம்பி. எங்க வீட்டை உன் வீடா நினைச்சுக்கோ. அந்த நாளில் நானும் உன் அப்பாவும் பள்ளிக்கூடத்திலே படிச்ச நாளில் ஒருத்தர் மேலே ஒருத்தர் எத்தனை அன்பு வச்சிருந்தோம். அதெல்லாம் பெரிய கதை. வீட்டுக்கு வா. நிதைக்கும் உன் அப்பாவைப் பத்தி நிறையப் பேசறேன்...'' சிரித்தார்.

அந்த முகத்தில் பரவி நின்ற பரிவு - கண்களில் தெரிந்த கனிவு... அவர் பேசிய தோரணை எல்லாம் அவன் மனதிற்கு இதமாக இருந்தது.

'இத்தனை நல்லவரைப் பற்றி மனம் குழம்புவது மதியீனம்... அவர் சொல்படி அவசரப்படுவதில் நியாயம் இல்லையே' தன்னையே கடிந்து கொண்டு விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான்.

அன்று மாலைப் பொழுது எப்பொழுது வரும் என்று காத்திருந்து ஆவலுடன் கிளம்பினான்.

முதல்நாள் போலவே ரத்னசாமி அவனுக்காகக் காத்திருந்து கதவைத் திறந்தார்.

நெய்யும், மசாலாவும் மணத்த பிரியாணி - தயிர் குழம்பு, புதினா பச்சடி என அவனுக்குப் பிடித்த உணவு. இன்று அவன் சற்று துணிவாகவே மேஜைக்கருகே வந்து பரிமாறிக்

கொண்டிருந்த கங்காவைத் துணிவுடன் பார்த்தான்.

'ரோஜா வண்ண ஷிபான் புடவையில்' அன்றலர்ந்த மலர் போல அவள் முதல் நாளைவிட இன்னும் கூடவே அழகாகத் தெரிந்தாள். நெஞ்சம் சிலிர்த்துப் போனான்.

''சாப்பிடு'' என்று ரத்னசாமி உபசரித்த போது தன் உணர்வுகளை மறைக்க சுவற்றைப் பார்த்தான்.

''அதுவா? அவள்தான் கங்காவின் தாய்! சாயலில் கங்கா அப்படியே அம்மாவின் அச்சு!'' சுவற்றில் தொங்கிய படத்தைப் பார்த்துப் பெருமையாகச் சொன்னார்.

அன்று உணவுக்குப் பின் அதிகநேரம் தங்காது கிளம்பி விட்டான். அடுத்த நாளும் அதே பலத்த உபசரிப்புதான். அதற்கடுத்த நாள் அவன் வைரப் பிள்ளையாரின் நினைவை ஒரு பக்கம் ஒதுக்கிவிட்டு பலமுறை கண்களால் தன்னைப் பரிவுடன் பார்த்து முறுவலித்த கங்காவைப் பற்றி சிந்திக்கலானான்.

ஒரு வார காலம் நிமிடமாக ஓடிச் சென்றது. ஆனால் அந்த குடும்பத்துடன் ஓராயிரம் ஆண்டு பழகி விட்டது போன்ற பரிவுணர்வில் கரைந்து போய் விட்டான்.

''நாளைக்கு உன் பொருளைப் பற்றி முடிவா ஒரு சேதி சொல்ல முடியும். மறக்காம சாப்பாட்டுக்கு வந்துரு...'' முதுகைத் தட்டி அவர் விடை கொடுத்த போது... அவன் மனம் உற்சாகத்தில் திளைத்தது.

வைரப்பிள்ளையார் விலை போய் அவனுக்கு நல்ல தொகை கிடைத்துவிட்டது என்று அவன் ரத்னசாமியின் தொடர்பை துண்டித்துக் கொள்ள மனமில்லை.

கண்களில் பேசி மனதைக் கவர்ந்து கொண்டுவிட்ட கங்காவை அவன் உள்ளத்திலிருந்து உதறிவிட முடியாது.

அப்பாவின் நண்பர் ரத்னசாமி... அவர்களது வகுப்பைச் சேர்ந்தவர். ஜாதி பிரச்சனை கிடையாது... அவன் படித்தவன் -வைரப்பிள்ளையார் விலை போனபின்... கொஞ்சம் பணம்

படைத்தவனாகி விடுவான்... திருநெல்வேலிக்கு புறப்படுமுன்... மெள்ள அவரிடம் தன் மனதைத் திறந்தால்... அம்மா உயிருடன் இப்போது கூட இருந்திருந்தால்... கட்டாயம் சம்பந்தம் பேசிவிடுவார்களே?

ரத்னசாமிக்கு அவனை மருமகனாக அடைய கசக்கவா செய்யும்?

பஸ்சிலிருந்து இறங்கி அவன் லாட்ஜை நோக்கி நடந்த போது அவன் காதுகளில் கல்யாண மேள சத்தம்... கேட்டது... மனக்கண்முன்... மணப்பந்தலின் கோலாகலம் தெரிந்தது. இன்பமாகப் பெருமூச்சு விட்டான்.

5

இரண்டு வார காலம் யுகமாக மெல்ல நகர்ந்தது.

ரத்னசாமி சொன்னது போல பட்டணத்தில் பொழுதை அவனால் வேகமாக விரட்ட முடியவில்லை.

உறவினர்கள், நண்பர்கள் என்று தேடிக் கொண்டு போக யாரும் இருக்கவில்லை. லாட்ஜில் நாள் முழுவதையும் கழிக்க முடியாது தவித்தான். அண்ணாசாலையில்தான் எத்தனை தடவைகள் நடப்பது. அப்படியும் காட்டில் அலைவது போன்றதொரு தனிமை அவனை அலைக்கழித்தது.

மகாபலிபுரத்திற்குப் போய் வந்தான். கடற்கரையிலே உலவினான். பாதையோரத்துக் கடைகளைப் பார்வையிட்ட வண்ணம் எதிரே போவோர் வருவோர் மேல் இடித்து திட்டுகளை வாங்கிக் கட்டிக் கொண்டான்.

''என்ன பாக்கிறே? என்ன வேணும்?'' என்று அதட்டிய பழைய புத்தகக் கடைக்காரருக்கு பதில் சொல்ல முடியாது தனக்கு தேவையில்லாத ஒரு புத்தகத்தை விலைக்கு வாங்கிக் கொண்டான்.

ஆரஞ்சு பழங்களை வாங்கி உரித்து - பாதையோரத்தில் நின்று கொண்டு பஞ்சத்தில் அடிப்பட்டவன் போல தின்றான். சில சினிமாக்களுக்கு டிக்கெட் வாங்க நீண்ட கியூவில் நின்று முடிவில் உள்ளே சென்று என்ன பார்த்தோம் என்ற நினைவின்றி தன் கவலைக்குள்ளே முழுகியவனாக வெளியே வந்தான்.

மண்டை வெடித்துவிடும் போன்ற இறுக்க உணர்விலே தவித்துக் கொண்டுதான் அன்று காலை அவன் எழுந்திருந்தான்.

ரத்னசாமி வீட்டில் ஒரு வேளைதான் சாப்பாடு கிடைத்தது. மீத நேரத்தில் அவன் லாட்ஜிலும்... வெளியே கண்ட ஓட்டலிலும் சாப்பாட்டை முடித்துக் கொள்ள நேர்ந்தது.

கணக்குப் பார்த்துதான் செலவு செய்து கொண்டிருந்தான். ஆனாலும் கையிருப்பு வேகமாகக் கரையத் தொடங்கியது. ஈக்கிரம் ஊருக்கு வரப் போவதாக சித்தப்பாவுக்கு ஒரு கார்டு போட்டிருந்தான். விரைவாக அவன் கிளம்பியாக வேண்டும். ரயில் பயணத்திற்கு பணம் தேவையாயிற்றே? அங்கே போனதும் என்ன செலவுகள் ஏற்படுமோ? சித்தப்பா தங்க இடமும் - பசிக்கு சோறும் தரக்கூடும். மற்ற செலவுகளுக்கு பணம் தேவைப்பட்டால் அவரிடம் கைநீட்டி யாசிக்க இயலுமா? வெட்கக்கேடு.

ஓங்கி உயரமாக வளர்ந்திருக்கிறான். பட்டப்படிப்பை முடித்தவன் கையில் காசில்லாமலா பம்பாயிலிருந்து புறப்பட்டிருக்கிறான்? என்று சித்தப்பா அவனை எடுத்த எடுப்பிலேயே மட்டமாக நினைத்துக் கொள்ளக்கூடும்.

ஊகும்! இனியும் தொடர்ந்து அவன் சென்னையில் அந்த லாட்ஜில் தங்கிக் காலத்தை ஓட்டுவதில் பயன் இல்லை. இரண்டு வாரங்களில் சாதிக்க முடியாத காரியத்தை இன்னும் சில நாளில் ரத்னசாமி முடித்துக் கொடுத்து விடுவார் என்ற நம்பிக்கையில்லை.

அன்று இரவு அவர் வீட்டுக்கு சாப்பிடப் போகும் பொழுது கட்டாயம் கொடுத்த பொருள்களைத் திரும்பி கேட்டு வாங்கி வந்துவிட வேண்டும்... அம்மா சொல்லியபடி சித்தப்பாவுக்கும் பிள்ளையாரைப் பற்றி சொல்லாது ரகசியமாக வைத்திருந்து வேளை வந்த போது அவனே விற்று முதலாக்க வேண்டும்.

திரும்பத் திரும்ப இதையே யோசித்து குழம்பிப் போய் இங்குமங்கும் அலைந்து... பஸ்சில் ஏறி இறங்கிவிட்டு மாலை பொழுது மங்கியதும் ரத்னசாமி வீட்டிற்குக் கிளம்ப ஆயத்தமானான்.

கதவை கங்காதான் திறந்தாள்.

ஆரஞ்சு வண்ண வாயில் சேலையில் - தலைகொள்ளா கனகாம்பரத்துடன் - உதட்டில் புன்னகையுடன் நின்றவளை பிரமிப்புடன் விளக்கொளியில் பார்த்தான்.

ரத்னசாமியின் மகளின் அழகு அவனது உள்ளத்தை அள்ளிக்கொண்டு விட்டது.

நெஞ்சம் படபடக்க - மூச்சுத் திணறிவிடும் போன்ற தவிப்பில் அவளை நிமிர்ந்து நன்றாகப் பார்த்தான்.

''அப்பா குளிச்சிக்கிட்டிருக்கிறார். நீங்க வந்தா உள்ளே அழைச்சு உட்கார வைக்கச் சொன்னார்...'' தோற்றத்திற்கொப்ப இனிமையாக ஒலித்த குரல் அவன் காதுகளை மெல்லத் தழுவியது.

மவுனமாக அவள் பின்னால் மெல்ல நடந்தான்.

''அப்பாவுக்கு இன்னிக்கு பிறந்த நாள்...'' முல்லை மொட்டுகள் போன்ற வரிசை பற்கள் தெரிய அவள் சிரித்தாள்.

வைரப் பிள்ளையாரை மறந்து போனான். பளிச்சென்று எரிந்த குழல் விளக்கொளியில் காலோடு தலை அவளைப் பார்த்து சொக்கிப் போனவனாக... சோபா ஒன்றில் சாய்ந்து கொண்டான்.

'ஆச் - ஊச்' என்ற சப்தங்களை எழுப்பியபடி வேட்டி

பனியனில் ஈரத்துண்டை கைமடக்கில் போட்டுக் கொண்டு ரத்னசாமி வெளியே வந்தார்.

''வா தம்பி! இன்னிக்கு நீ எங்கே வராது போயிடறியோன்னு கவலைப்பட்டேன்... கொஞ்ச நேரம் காத்துபாத்துட்டு குளிக்கப் போனேன். இன்னிக்கு இந்த கிழ குழந்தைக்கு அறுபத்து மூணு வயது - கட்டாயம் பிறந்த நாளை கொண்டாடணும்னு கங்கா பிடிவாதம் செய்தா...'' உரக்க சிரித்தார் உற்சாகமாக.

''போன வருசம் பிறந்த நாள் போது அப்பா காய்ச்சலாக படுத்திருந்தார். அதனால்தான் இந்தத் தடவையாவது...'' முடிக்காது முறுவலித்தாள் கங்கா.

தந்தையின் எதிரில் அவன் முன்னே அதிகம் நிற்காது இதுநாள்வரை மறைந்து கொண்டிருந்த கங்கா இன்று சகஜமாகப் பேசினாள். ரத்னசாமியும் அதைக் கண்டு கொள்ளாதவர் போல் இருந்தார்.

''இன்றைக்கு புது வேட்டியும் - பனியனும் போட்டுக்கணும்னு கங்காவின் உத்தரவு. பிள்ளையில்லா வீட்டிலே கிழவன் துள்ளி விளையாடுகிறான்னு சொல்வாங்க... கங்காவுக்கு கல்யாணமாகி இந்த வீட்ல ஒரு குழந்தை தவழும் வரை இந்தக் கிழவன் விளையாடணும் போல இருக்கு... அப்படித்தானே அம்மா...'' வேடிக்கையாகப் பேசினார், உற்சாகமாகச் சிரித்தார்.

செவேலென்று முகம் சிவக்க... தன்னை அன்போடு கங்கா பார்த்ததைக் கண்டு பரவசமாகிப் போனான் நரேந்திரன்.

''நீயும் வந்து உட்காரும்மா - எல்லாரும் சேர்ந்து சாப்பிடலாம்!'' அப்பா உத்தரவிட்டதும்... சாப்பாடு பாத்திரங்களை மேஜை நடுவில் கொண்டு வந்து வைத்து விட்டு நரேந்திரன் எதிரில் அவள் உட்கார்ந்து கொண்டாள். மூவரும் தங்களுக்கு வேண்டியதை எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடத் தொடங்கினர்.

''அப்பா மோர்க்குழம்பு போட்டுக்கோங்க - உங்களுக்குப் பிடிச்ச கத்திரிக்காய் பொறியல் செய்திருக்கேன் - அதையும் நிறைய வச்சுக்கோங்க...'' கொஞ்சியபடி தந்தைக்கு உபசாரம் செய்தாள்.

''உங்களுக்குத்தான்... எடுத்து போட்டுக்கோங்க...'' என்று அவளது கண்கள் நரேந்திரனை பரிவோடு உபசாரம் செய்தன.

மிக்க நெருக்கமாகிவிட்ட அவளது அருகாமையில் அவன் மகிழ்ச்சியில் திளைத்துப் போனான்.

அவளது அழகிய முகத்தையே பார்த்தபடி உணவை மெல்ல விழுங்கிக் கொண்டிருந்தான். ரத்னசாமியிடம் பேச வந்த சங்கதியை முற்றிலும் மறந்தே போனான்.

கையைக் கழுவிக் கொண்டு - கூடத்தில் வந்து உட்கார்ந்தவன் அருகே பால்பாயசக் கிண்ணத்தைக் கொண்டு வந்து வைத்தாள் கங்கா.

ராஜவமிசத்தவர்கள் தான் பாயசத்தை கடைசியில் சாப்பிடுவாங்களாம். கங்காவுக்கு நாங்க ராஜகுலம்னு நினைப்பு...? இப்போ நீயும் ராஜாவாயிட்டே, சாப்பிடு!'' உற்சாகமாக பச்சிளம் பிள்ளைபோல கலகலவென்று சிரித்தார் ரத்னசாமி.

''பால்பாயசம் பிடிக்குமோ என்னவோ...?'' பின்னால் இருந்து வந்த அவளது குரல் பாயசத்தை விட இனிக்கவே, அவன் புன்முறுவலுடன் கிண்ணத்தை எடுத்து உறிஞ்சினான்.

''இன்னும் கொஞ்சம் போட்டுக்கோங்க அப்பா!'' பாயச பாத்திரத்துடன் தந்தையருகே கங்கா நெருங்கினாள்.

''தம்பிக்கு ஊற்று... எனக்கு இதுவே அதிகம்!'' என்றார் ரத்னசாமி.

''வேண்டாம்!'' என்று மறுக்க நீட்டிய அவன் கரம் அவளது கை மீது மெள்ள பட்டதும்... மின் விசையால் தாக்குண்டது போன்ற அதிர்ச்சி. மெய் சிலிர்த்துப் போனான். 'மன்னிச்சுக்

கோங்க...!' என்று மெல்ல முனகினான். நல்ல வேளை ரத்னசாமி கவனிக்கவில்லை என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டான்.

முடிவில் வெற்றிலைப் பாக்குத் தட்டுடன் உட்கார்ந்த ரத்னசாமியின் சிரித்த முகத்தில் சட்டென கவலை படர்ந்தது.

''தம்பி! முக்கியமா பேச வேண்டியதை விட்டுட்டு என்னென்னவோ உளறிக் கிட்டிருந்துட்டேன்! மடையன் நான். உன் பொருளை பலரிடம் விற்க முயன்றேன். ஒரு பெரிய ரூபா கூட தேறாது போலிருக்கு. அதனால்...!'' முடிக்காது அவன் முகத்தைப் பார்த்தார்.

திடீரென்று தலை மீது குளிர்ந்த நீரைக் கொட்டி விட்டது போன்றதொரு திகைப்பில்... குழம்பிப் போனான் நரேந்திரன். தாங்க முடியாத அந்த ஏமாற்றம் மனதைக் குடைந்தது.

''அழி விலைக்கு கேட்கிறாங்க உள்ளூர் வியாபாரிகள். உனக்கு மறுப்பு இல்லேன்னா அடுத்த வாரம் ஹாங்காங்கிலிருந்து ஒரு புள்ளி இங்கு வருகிறார். கலைப்பொருள்கள் சேகரிப்பதில் ஆர்வம் கொண்டவர். அவர்கிட்டே கட்டாயம் உன் பொருள் நல்ல விலைக்குப் போகலாம்...!''

இன்னும் ஒரு வார காலம் காத்திருக்க அவனுக்குப் பொறுமையில்லை. கையிருப்பும் இல்லை; தன் பொருள்களைக் கேட்டு வாங்கிக் கொண்டு போக வேண்டுமென்ற ஆவல் அவன் உள்ளத்தை உந்தியது. நெஞ்சு படபடத்தது...

''சார்! பரவாயில்லை. என் சாமான்களை என்னிடம் கொடுத்துடுங்கோ... அவசரமா அழிவிலைக்குத் தர வேண்டாம். பிறகு சாவகாசமா வித்துக்கலாம்...'' என்றான்.

''நாளைக்குக் கடையில் வந்து எடுத்திட்டுப் போறியா''

''இல்லே இப்பவே எடுத்துப் போக வந்திருக்கேன்'' என்றான் துணிவுடன்.

''ராத்திரி வேளையிலா? அதுவும் இந்த நேரத்திலா? சரி உன் இஷ்டம்!'' என்று எழுந்திருந்து உள்ளே சென்றார். இரும்பு பீரோவைத் திறந்து ஒரு மஞ்சள் வண்ண பிளாஸ்டிக் பெட்டியை எடுத்து வந்தார்.

''எல்லாத்தையும் இதுக்குள்ளே பத்திரமா வச்சிருக்கேன். பார்த்துக்கோ'' என்றபடி சாப்பாட்டறை மேஜை மேல் விளக்கடியில் பெட்டியை வைத்துத் திறந்து காண்பித்தார்.

''இதோ பார் உன் பிள்ளையார் - இதுகள் உன் அம்மாவின் நகைகள்... நல்லா கணக்கு வச்சுக்கோ'' என்று பஞ்சு சுருளில் பொதிந்து கிடந்தவைகளை எடுத்துக் காட்டி அவன் கண் முன் திரும்ப உள்ளே வைத்து பெட்டியை மூடினார். திருப்தியுடன் நரேந்திரன் தலையை ஆட்டினான்.

''எல்லாத்தையும் ஒப்படைச்சுட்டேன். உனக்கு எப்பப் பிரியமோ அப்ப வந்து மறுபடி கொடு... முயன்று பார்க்கிறேன்'' என்று புன்முறுவலித்த ரத்னசாமி கடிகாரத்தைப் பார்த்தார்.

'கிளம்பு நேரமாகிறது!' என்று அவரது பார்வை சொல்லியது.

''அம்மா கங்கா! கொஞ்சம் சில்லுனு தண்ணி குடிக்கக் கொண்டா!'' மகளுக்குக் குரல் கொடுத்தார். உள்ளே இருந்து விரைவாக வந்த கங்கா தண்ணீர் தம்ளரை வைக்க கை நீட்டியபோது நரேந்திரன் கொஞ்சம் நகர்ந்து நிற்க வேண்டியிருந்தது.

''சரி - நான் வருகிறேன். சிரமத்துக்கு மன்னிக்கவும். விருந்தோம்பலுக்கு மிக்க நன்றி'' என்று கூறிவிட்டு பிளாஸ்டிக் பெட்டியை தோள் பையில் பத்திரப்படுத்தினான். கள்ளத்தனமாக கங்காவை ஒரு தடவை பார்த்துவிட்டு மகிழ்ச்சியுடன் வெளியே வந்தான்.

நல்ல வேளை, தெரு முனையில் ஒரு ஆட்டோ தென்பட்டது. ஏறிக் கொண்டு லாட்ஜுக்கு விரைந்தான். வேகமாகப் படியேறி தன் அறைக் கதவைத் திறந்து விளக்கைப் போட்டு விட்டு உள்ளே நுழைந்து உடனே கதவைத் தாளிட்டுக் கொண்டான். அவசரமாக தோள் பையின் ஜிப்பை நீக்கிவிட்டு பிளாஸ்டிக் பெட்டியை எடுத்து படுக்கை மீது வைத்தான்.

''அப்பாடா கொடுத்த பொருளை திரும்ப சாமர்த்தியமாக வாங்கிக் கொண்டு வந்து விட்டோம்!'' என்ற நினைப்பிலே நெஞ்சில் ஒரு பரபரப்பு... மெள்ள பெட்டியைத் திறந்து பஞ்சுச் சுருளில் பொதிந்து கிடந்த பொருள்களை ஒவ்வொன்றாக எடுத்து படுக்கை மீது வைத்தான்.

அம்மாவின் நகைகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வெளிவந்தன. ஆனால் பிள்ளையாரைக் காணவில்லை. திக்கென்றதொரு கிலியில் உடல் வியர்த்துக் கொட்ட நெஞ்சு பதற - விரல்கள் நடுங்க தேடினான் தேடினான்... அவனுக்குப் பயத்தில் வாய் உலர்ந்து போனது.

ரத்னசாமி வீட்டில் விளக்கொளியில் - வர்ண ஜாலங்களை வாரி வீசிய வைரப் பிள்ளையாரை அந்தப் பெட்டிக்குள் காணவில்லை.

6

காலைவரை காத்திருந்து விசாரிக்க முடியாத சங்கதி. உடனே திருவல்லிக்கேணிக்குப் புறப்பட வேண்டும்.

ரத்னசாமி இத்தனை ஒரு மோசடிக்காரராகவா இருப்பார்?

நம்ப முடியவில்லையே? பின் பிள்ளையார் எங்கே மாயமாகிப் போனார். தந்தையின் நண்பர் என்று ஏமாந்து விட்டேனே?

அம்மாவின் எச்சரிப்பை மறந்து அவரது பகட்டுச் சொல்லுக்கு மயங்கி... அவனது சொத்து முழுவதுமான அந்த விலை உயர்ந்த பொருளைக் கொடுத்துவிட்டு வந்தது எத்தனை மதியீனம். படித்திருந்தும் ஒரு முட்டாளாகவல்லவா போய் விட்டான். ஐயோ! அவன் இப்போது என்ன செய்வான்!

இமைகளை கண்ணீர் சுட - நெஞ்சம் பதற -தொண்டையை இறுக்கிய துயரத்தை விழுங்கிக் கொண்டு மறுபடி அந்த பிளாஸ்டிக் பெட்டியை மூடி - தோள் பைக்குள் வைத்து ஜிப்பை இழுத்து மூடினான். தோள்பையை தூக்கிக் கொண்டு, விளக்கை அணைத்து விட்டு கதவைப் பூட்டிக் கொண்டு மாடிப்படிகளில் வேகமாக இறங்கி வெளியே வந்தான்.

நேரம் நடு நிசியை நெருங்கிக் கொண்டிருந்த சமயம். தெரு முனையில் பாதை ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த குப்பைத் தொட்டியைச் சுற்றி இரண்டு நாய்கள், தேடி இழுத்த எச்சில் இலைகளுக்கு சண்டையிட்டு உறுமிக் கொண்டிருந்தன. வெறுமையாகத் தெரிந்த சாலையில் பின்புறத்திலிருந்து வேகமாக ஓடிய ஒரு கார் அவனைத் தாண்டிக் கொண்டு சென்றது. திடுக்கிட்டு ஒதுங்கினான். எதிர்புறமாக தலையில் ஒரு துண்டை போட்டுக் கொண்டு வந்த மனிதன், விளக்கு அருகில் வந்தபோது மது போதையில் தள்ளாடிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

தான் தாள முடியாத துயரத்தில்... ஏமாற்றத்தில் நடக்க முடியாது தள்ளாடுவதை உணர்ந்தான். கண்கள் எட்டிய தூரம் வரை ஆள் நடமாட்டமே இருக்கவில்லை. நெஞ்சு வேகமாகத் துடிக்க, மூச்சு அடைக்க, பத்து நிமிஷம் நடந்தான். நேரம் வேகமாக விரைவது போன்று அரண்டு போனான்.

திருவல்லிக்கேணி தொலை தூரத்தில் இருப்பது போன்றதொரு பிரமையில் அவனுக்கு அழுகையே வந்து விட்டது. கொஞ்ச தூரத்திலே ஒரு ஆட்டோ நடைபாதையருகே நிற்பதைக் கண்டு... வேகமாக நடந்தான்.

உள்ளே ஓட்டுநர் ஆசனத்திற்குள் சுருண்டு குறட்டை விட்டபடி நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார்.

''அய்யா! அய்யா!'' என்று கூப்பிட்டுப் பார்த்தும் ஆள் அசையாது போகவே மெல்லத்தட்டி எழுப்பினான்.

திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்த ஓட்டுனர் அவனைத் தூக்கம் நிறைந்த கண்களால் வெறித்துப் பார்த்தார்.

''திருவல்லிக்கேணி வரமுடியுமா அய்யா... கேட்ட பணம் தருகிறேன். ரொம்ப அவசரம்'' என்று கெஞ்சினான் நரேந்திரன்.

''விடியற்காலை சவாரி ஒண்ணுக்காக இங்கே காத்துக் கிட்டிருக்கேன் - அங்கேயெல்லாம் இப்போ வரமுடியாது'' என்று கூறிவிட்டு மறுபடியும் ஆசனத்தில் முடங்கிக் கொண்டு விட்டார் ஓட்டுநர்.

ஏமாற்றம் தாளாது நரேந்திரன் மேலே நடந்தான். வண்டி எதுவும் கிடைக்காவிடில் ரத்னசாமி வீட்டுக்கு நடந்தே போய்விட வேண்டும் என்றதொரு ஆத்திரத்துடன் மேலே விரைந்தான். சற்று தூரத்தில் ஒரு ரிக்ஷா வண்டிபாதை ஓரத்தில் நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டான். ரிக்ஷாக்காரன் உட்கார்ந்த நிலையில் வண்டிக்குள் தூக்கத்தில் ஆடிக் கொண்டிருந்தான்.

''அய்யா! அய்யா!'' மறுபடியும் குரல் கொடுத்து மெல்லத் தொட்டு அவனை எழுப்பினான்.

''திருவல்லிக்கேணிக்கு சவாரி வரமுடியுமா... கேட்டதைக் கொடுக்கிறேன்'' நரேந்திரன் குரல் கெஞ்சிக் குழைந்தது.

''பத்து ரூபா தருவியா...?'' என்றதும் தலையை ஆட்டினான். அப்பாடா என்றதொரு சிறு நிம்மதி...

''ஏறி உட்கார். விளக்கைப் பொருத்தறேன்...'' என்று கூறிவிட்டு ரிக்ஷாக்காரன் ஆயத்தமானான்.

நரேந்திரனுக்கு ஒரே அவசரம். ஆனால் அந்த பழைய ரிக்ஷா... ஆடிக்கொண்டு மெல்ல நகர்ந்தது. இறக்கைக் கட்டிக்கொண்டு பறக்க மாட்டோமா என்ற ஆதங்கத்தில் வழி

நெடுகிலும் துடியாகத் துடித்துப் போனான். ஒரு வழியாக வண்டி ரத்னசாமியின் வீட்டு வாயிலை அடைந்தது. பேசிய கூலியை வாங்கிக் கொண்டு மேலே காத்திருக்க முடியாது என்று மறுத்து விட்டு ரிக்ஷாக்காரன் புறப்பட்டுப் போய் விட்டான்.

வைரப் பிள்ளையாரைப் பற்றிய நினைவில் அவன் திரும்பிப் போவதைப் பற்றி கவலைப்படவில்லை. பூட்டப்பட்டிருந்த கேட்டின் முகப்பிலிருந்த அழைப்பு மணி பித்தானை அழுத்தமாக அழுத்தினான். கணகணவென்று சத்தம் தெருவின் முனைவரை கேட்டது.

''யாரது'' என்று ரத்னசாமியின் அதட்டல் குரல் உள்ளேயிருந்து வந்தது. சில வினாடிகளில் வாசல் விளக்கு பளிச்சென்று எரிந்தது. ரத்னசாமி கதவைத் திறந்தார். கேட்டருகே வந்து, ''என்னப்பா தம்பி, இந்த வேளையில் வந்து தொந்தரவு செய்கிறே? என்ன வேணும்?'' காரமாகக் கேட்டார்.

''தயவு செய்து கேட்டைத் திறங்கள் - உள்ளே வந்து சொல்றேன் - வாசலில் நின்றபடி பேசுகிற சங்கதியல்ல'' என்றான் பிடிவாதமாக நரேந்திரன்.

அரைமனதுடன் கேட்டைத் திறந்தார். அவன் உள்ளே வந்ததும் கதவைத் தாளிட்டு விட்டு கூடத்து குழல் விளக்கை பொருத்தினார். உள் பக்கமிருந்து எட்டிப்பார்த்த கங்காவை கோபத்துடன் வெறித்தான் நரேந்திரன்.

திருட்டுக் கள்ளி? அப்பனுக்கு ஏத்த மகள் - பரிவான பார்வையும், புன்னகையுமாக நாடகம் போட்டு... பற்களைக் கடித்துக் கொண்டான்.

''என்னப்பா சங்கதி? நாளைக்கு கடைக்குச் சீக்கிரம் போகணும். அதனாலே என் தூக்கத்தைக் கெடுக்காதே... வந்ததை சொல்லிவிட்டு கிளம்பு...'' அதட்டலாக சொன்னார் ரத்னசாமி. அவர் முகத்தில் இவ்வளவு நாட்களாக, தேங்கி நின்ற சிநேகபாவம் மறைந்து கடுமை அப்பிக் கொண்டு விட்டது.

''இங்கே அதிகநேரம் தங்கணும்னு உத்தேசமில்லை சார். என்னுடைய வைரப்பிள்ளையாரைக் கொடுத்துட்டா மறுவினாடியே நான் கிளம்பிடறேன்!'' சொல்லி முடிப்பதற்குள் அவனது இதயம் வாயிற்குள் வந்து விட்டதைப் போன்றதொரு திகிலில் துவண்டு போனான்.

''உன் பொருள் அனைத்தையும் உனக்குக் காட்டி உன்கிட்டே ஒப்படைச்சுட்டேனே? இது என்ன புதுக்கதை?'' சீறினார் ரத்னசாமி.

''கதையில்லை, உண்மை. நான் லாட்ஜிற்குப் போய் பெட்டியைத் திறந்தப்போ பிள்ளையாரைக் காணவில்லை. ஐயா! தயவு செய்து என் பொருளை என்கிட்டே கொடுத்துடுங்கோ. அதைத் தவிர எனக்கு சொத்து - சுகம் ஏதும் கிடையாது!'' கண்களில் நீர் பனிக்க... தொண்டையைத் துயரம் அடைக்க... மெல்லிய குரலில் கெஞ்சினான்.

''வேடிக்கைதான் தம்பி! கொடுத்த சாமான்களைத் திருப்பி வாங்கிட்டுப் புறப்பட்டுப் போனவன் திரும்பி வந்து கதை அளக்கிறியே? வழியில் ஜேப்படி திருடன் அடிச்சுகிட்டு போனானோ என்னவோ?''

''ஐயா ஆட்டோவில் தான் போனேன். மற்ற சாமான்கள் பெட்டியில் இருக்கே. யாரும் அதை மட்டும் திருடியிருக்க முடியாதே...!''

''உன் லாட்ஜில் பறிகொடுத்துட்டு இங்கே வந்து பசப்புறியா?''

''அதற்கும் சாத்தியமில்லே. பெட்டியைத் திறந்ததும் பிள்ளையாரைக் காணவில்லை. உடனே கையோடு பெட்டியுடன் புறப்பட்டு வந்திருக்கேன். வேண்டுமானால் நீங்களே பார்த்துக்கோங்க...?''

தோள் பையைத் திறந்து அந்த பிளாஸ்டிக் பெட்டியை எடுத்து முக்காலி மீது வைத்தான். மூடியைத் திறந்து ''ஐயா! பார்த்துக்கோங்க. இதில் என் வைரப்பிள்ளையாரை காணலை!'' என்று தழுதழுத்தான்.

''எனக்குப் புரியுது - இப்படி சொல்லிகிட்டு என்னை பயமுறுத்திப் பணம் வாங்கும் திட்டத்தோட வந்திருக்கே... அதெல்லாம் என்கிட்டே நடக்காது... மரியாதையா வெளியே போ... இல்லாட்டா நான் பொல்லாதவனாயிடுவேன்!'' உரத்த குரலில் கூச்சலிட்டார். கண்களை உருட்டி விழித்தார் - பற்களை நறநறவென்று கடித்தார். வெடுக்கென நிமிர்ந்தான் நரேந்திரன். இவரிடம் கெஞ்சுவதில் பயனில்லை, என்று வெகுண்டான்.

''அனாவசியமா விவாதிக்காம இந்த பிளாஸ்டிக் பெட்டியிலிருந்து நான் கவனிக்காத போது களவாடிக் கொண்ட பிள்ளையாரைக் கொடுத்திடுங்கோ - இல்லாட்டி பெருத்த அவமானம் ஏற்படும்.நான் விலை மதிப்பு இல்லாத வைரத்தை உங்ககிட்ட தோத்துட்டுப் போக பம்பாயிலிருந்து இங்கே வரலை. நேரே இப்பவே போலீசுக்குப் போய் புகார் கொடுப்பேன்!'' அவன் மேலே பேசுமுன் ரத்னசாமி கைகளைத் தட்டி உரக்கச் சிரித்தார்.

''பலே! பலே! போலீசில் போய் புகார் செய்ய உனக்கு மட்டும்தான் தெரியுமாக்கும்? ஆரம்பத்திலே நான் சந்தேகப் பட்டது சரியாப் போச்சு. இந்த வைரப்பிள்ளையாரை நீ எங்கேயோயிருந்து திருடிகிட்டு வந்திருக்கே - நீயே போய் வித்தா அகப்பட்டுக் கொள்வேன்னு தெரிஞ்சு என் தலையில் கட்டினே. சனியன் விட்டால் போதும்னு நான் உங்கிட்ட திருப்பிக் கொடுத்திட்டேன். இப்போ வந்து பயமுறுத்தறே. இரு ரெண்டு பேருமே சேர்ந்து காவல் நிலையத்துக்கு போவோம். அங்கே உனக்கு என்ன கிடைக்கிறதுன்னு பார். கிளம்பு! திருட்டுப் பொருளைக் கொண்டு வந்து என்கிட்டே விக்கச் சொல்லி வற்புறுத்தினேன்னு உன் மேலே நான் புகார் கொடுக்கிறேன். அயோக்கியப் பயலே! என்ன நினைச்சுக்கிட்டு இப்போ வந்து கலாட்டா பண்றே'' உரத்த குரலில் கூச்சலிட்டார். ஒரு கணம் அதிர்ந்து போனான் நரேந்திரன்.

ரத்னசாமி மோசடிக்காரர் மட்டுமல்ல - படு அயோக்கியன். கதையை ஒரேயடியாகத் திருப்பிப் போடுகிறானே மனிதன்?

நகை வியாபாரி என்கிற மதிப்புப் போர்வையில் வாழ்கிற ரத்னசாமி பேச்சுக்குத்தான் போலீசில் மதிப்பு அதிகம் இருக்கும். ஊருக்குப் புதியவனான அவனை போலீஸ் சந்தேகிக்கலாமே. அதன் விளைவு - பல சங்கடங்களில் சிக்கிக்கொள்ள நேரலாம்.

இப்பொழுது அவன் என்ன செய்வான்!

''என்ன யோசிக்கிறே? கம்பி எண்ண வச்சிடுவாங்கன்னு பயமா? போகட்டும் என் நண்பன் மகன் என்கிற காரணம் பற்றி மன்னிக்கிறேன். வெளியே போ - இல்லாட்டா...!'' என்று இரைந்தார்.

வெளிரடைந்த முகத்துடன் - கலவரமாக விழித்த கங்காவைப் பார்த்தான் நரேந்திரன்.

ஆவேசமாக ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

''பாவி! அப்பாவுடன் சேர்ந்து நாடகம் போட்டு என்னை மோசம் செய்துட்டியே... அப்பனும், மகளும் முன்கூட்டியே திட்டம் போட்டு என்னை ஏமாளி ஆக்கி விட்டீங்களே. நீங்க ரெண்டு பேரும் நல்லாவா இருப்பீங்க...! நாசமாப் போயிடுவீங்க...!'' தனக்குள்ளே புலம்பிக் கொண்டு பெட்டியை எடுத்து தோள் பையில் போட்டு ஜிப்பால் மூடி தோளில் மாட்டிக் கொண்டு திரும்பினான்.

அன்று முன் இரவுவரை அன்பு முகம் காட்டி வரவேற்று உட்கார வைத்து உபசரித்த ரத்னசாமி, அவனை இப்போது நிற்க வைத்தே பேசி வெளியே விரட்டினார்.

இப்படிப்பட்ட கசடனிடம் வந்து மாட்டிக் கொண்டு... வைரப்பிள்ளையாரை தோற்று விட்டோமே... என்று தன்னையே நொந்து கொண்டான் நரேந்திரன்.

இனி என்ன செய்வேன் - யாரிடம் முறையிடுவேன்.

தொலைத்த பொருளை எப்படி மீட்பேன்... நெஞ்சு கொதித்துக் கூக்குரலிட்டது.

''இன்னொரு தடவை இந்த வீட்டுப் பக்கம் வந்தியோ... காலை வெட்டிடுவேன்!'' உறுமினார் ரத்னசாமி...

இந்த அநியாயத்தைக் கேட்க இந்த பட்டணத்தில் யார் இருக்கிறார்கள். கடவுளே - உனக்குக் கண் இல்லையா... உள்ளம் குமுற... பதைபதைத்தவனாக வெளியே வந்தான். கேட்டைப் பூட்டிக் கொண்டு கதவைப் படீர் என சாத்தின ரத்னசாமி விளக்கை அணைத்தார். அவனது வருங்காலமே இருளில் மூழ்கிவிட்ட திகைப்புடன் தெருவில் தள்ளாடிக் கொண்டு நடந்து மெல்ல சாலைக்குள் புகுந்தான்.

அதற்கு மேல் அவனால் துயரத்தின் பளுவைத் தாங்க முடியவில்லை. நடைபாதையின் ஓரத்தில் தொப்பென்று உட்கார்ந்தான். ''அம்மா! அம்மா! ஏமாந்து போயிட்டேன் -என்ன செய்வேன் அம்மா!'' என்று புலம்பியபடி கைகளால் முகத்தை மூடிக்கொண்டு உடல் குலுங்க - தேற்றுவார் இன்றி நரேந்திரன் அழுதான்.

7

நேரம் எவ்வளவு ஆயிற்றோ? அவனுக்கே தெரியாது. லாரி ஒன்று இடது பக்கமாக அவனைத் தாண்டிக் கொண்டு பெருத்த சத்தத்துடன் விரைந்த பொழுது அவன் திடுக்கிட்டு உணர்வுகளைத் திரும்பப் பெற்றவனாக நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''பால்! அம்மா பால்!'' அருகிலிருந்த சந்து ஒன்றிலிருந்து ஒரு பெண் குரல் கொடுத்தது கேட்டது.

சட்டென்று தன் கைக்கடிகாரத்தை விளக்கொளியில்

பார்த்தான். விடியற்காலை பொழுது நான்கு மணியைத் தாண்டி விட்டிருந்தது. வெறுமையான சாலையில் இப்போது மனித நடமாட்டம் லேசாகத் துவங்கி விட்டிருந்தது. அவன் உட்கார்ந்திருந்த இடத்திற்குப் பின்னாலிருந்த டீக்கடையின் முகப்புக் கதவை வேலைக்காரப் பையன் வேகமாகத் திறந்து வைத்தான். ஒரு சில நொடிகளில் கடையின் முன்னே ஒரு சிறு கூட்டம் திரண்டு விட்டது. நடைபாதையிலே நின்றபடி சூடான தேநீரைப் பருகிக் கொண்டிருந்தனர், விடியலுக்கே வேலைக்குப் போக அவசரப்பட்ட தொழிலாளிகள் சிலர்.

நரேந்திரன் மெல்ல எழுந்து நின்றான். கன்னத்தில் வழிந்த கண்ணீர் காய்ந்து போய் விட்டிருந்தது. பயங்கரமானதொரு துயர உணர்வு நெஞ்சை பாராங்கல்லாக அமுக்கிக் கொண்டிருந்தது. ஏமாற்றப்பட்டோமே என்ற திகில் அக்னியாக வயிற்றில் இன்னமும் எரிந்து கொண்டிருந்தது. வெகு நேரம் தன்னை மறந்து உட்கார்ந்து விட்டதால் கால்கள் மரத்துப் போய் உடனே நடக்க முடியாது தடுமாறினான்.

''இன்னிக்கு டீ ரொம்ப நல்லா இருக்கில்லையா? சும்மா சொல்லக்கூடாது, கதிரேசன் கடை டீக்கே ஒரு தனி ருசி...'' சிலாகித்த வண்ணம் ஒருவர் தேநீரைப் பருகிக் கொண்டிருந்தார்.

அம்மாவுடன் வாழ்ந்த காலத்தில் விடியுமுன் எழுந்து பல் துலக்கி, குளித்து அவன் ஆயத்தமாகி விட்டால் அவன் தாய் அவனுக்கு சூடான தேநீரோ, காப்பியோ தயாரித்து கொடுத்து விடுவாள். சூடாக ஏதேனும் பருகா விட்டால் அவனுக்கு வேலையே ஓடாது.

ஆனால் இன்று அவனுக்கு தாகம் - பசி எதுவுமே இல்லை. இனிமேல் இருக்குமா? கண்கள் உறக்கத்தை நாடுமா... என்பது சந்தேகமாக இருந்தது.

'ஐயோ! என் சொத்தை தோத்து விட்டேனே? ஏமாளியாகி விட்டேனே' என்று உள் மனம் ஓயாது புலம்பியது. மெல்ல மேலே நடந்தான். சொல்லி வைத்தாற் போல ஒரு ஆட்டோ

விரைந்து வந்து அவன் அருகில் நின்றது.

''எங்கே போகணும் சார்...?'' ஆட்டோக்காரர் கேட்டார்.

நரேந்திரனுக்கு துயரத்திலும் சிரிப்புத்தான் வந்தது.

முதல்நாள் இரவு அவன் சீக்கிரம் ரத்னசாமி வீட்டுக்கு விரையத் துடித்த போது வண்டியே கிடைக்கவில்லை. திண்டாடிப் போனான். இப்பொழுது வலியவே வந்து ஆட்டோக்காரர் கேட்கிறார். அவனுக்கு அத்தனை அவசரமாக லாட்ஜுக்குப் போய் ஆக வேண்டியது ஒன்றுமில்லையே?

வெறுப்போடு தலையை அசைத்து விட்டு மெல்ல நகர்ந்தான். கால் ஓயும்வரை நடக்க வேண்டும்... இத்தனை பெரிய ஏமாளியாக இருந்த அவனுக்கு வண்டி ஒரு கேடா... தன் மேலேயே வெறுப்புடன் மெல்ல நடந்தான். தான் தங்கியிருந்த லாட்ஜை நடந்தே அடைந்து விட்டான்.

அதற்குள் பொழுது பலபல வென்று விடிந்து விட்டது. இருள் பிரிந்து வெளிச்சம் பரவத் தொடங்கியது. மாடிக்கு விரைந்து தன் அறையைத் திறந்து கதவை தாளிட்டுக் கொண்டு படுக்கை மீது விழுந்தான்.

மறுபடியும் தாங்க முடியாது... பச்சை குழந்தை போல விம்மி அழுதான்.

''ஆண் பிள்ளை அழுகலாமா?'' - அம்மா சொல்லி அவனை சிறுபிராயத்தில் கண்டிப்பது உண்டு.

அம்மாவின் அன்பு மகனாக வளர்ந்த காலத்தில் அவர்களது வாழ்வில் எத்தனையோ இடர்கள் - துன்பங்கள் எட்டிப் பார்த்ததுண்டு.

அவன் தந்தை இறந்த பொழுது பள்ளிப் பருவத்து சிறுவனான அவன் மரணம் தந்த அதிர்ச்சியில் நடுநடுங்கி அழுதான். தாயை நிரந்தரமாகப் பிரிந்து விட்டபோது துயரத்தில் மனம் நொறுங்கி குமுறி அழுதான் - பரம்பரை உடமைப் பொருளை ஒரு பாதகனிடம் பறிகொடுத்து விட்டோமே...

என்ற ஏக்கம் தந்த திகிலில்... வெகுநேரம் அழுதான்! தாள முடியாத துக்கத்தின் சுமை நெஞ்சை நொறுக்கினால்... ஆண் பிள்ளைகளும் அழத்தானே செய்வார்கள்.

''இன்னுமா தூங்குகிறீங்க!'' லாட்ஜ் பையன் உரத்த குரலில் கூறி கதவைப் பலமாகத் தட்டினான். திடுக்கிட்டு எழுந்து படுக்கை மீது உட்கார்ந்தான் நரேந்திரன். ஜன்னல் வழியே உள்ளே பளிச்சென்று வீசிய வெளிச்சம் கண்களைக் கூசியது... அழுது வீங்கி உப்பியிருந்த இமைகள் நெருப்பாக எரிந்தன. மெல்ல சென்று கதவைத் திறந்தான்.

லாட்ஜ் பையன் மிரண்டு விட்டான். ''என்ன சார் உடம்புக்கு? மூஞ்சி உப்பியிருக்கு - கண்கள் சிவப்பா இருக்கு?''

அவனது அனுதாபம் நரேந்திரன் புண்பட்ட மனதிற்குக் கொஞ்சம் இதமாக இருந்தது.

''ஒண்ணுமில்லே - லேசா காய்ச்சல் போல இருக்கு'' தாழ்ந்த குரலில் முனகினான்.

பையன் சட்டென்று அருகில் வந்து அவனது கன்னத்தில் கை வைத்துப் பார்த்தான்.

''ஆமாம் சார்! உடம்பு சுடுதே - பல் விளக்கிட்டு பேசாம படுத்துக்கோங்க, நான் சூடான காப்பி கொண்டு வந்து தரேன்! காய்ச்சல் அதிகமானால் கவலைப்படாதீங்க - லாட்ஜ் பக்கத்திலேயே ஒரு டாக்டர் இருக்கார், ரொம்ப நல்லவர். அவரைக் கூட்டி வருகிறேன். குடிக்க வெந்நீரை ஒரு ஃபிளாஸ்கிலே ஊத்தி கொண்டு வந்து வைக்கிறேன்'' பரிவுடன் சொன்னான்.

கண்கலங்கிப் போனான் நரேந்திரன். அம்மாவுக்குப் பின் உண்மையான அன்புடன் பேசியவன் லாட்ஜ் பையன் ஒருவன்தான்.

பல் விளக்கிவிட்டு கதவை அடைத்துக் கொண்டு

படுக்கையை ஒழுங்கு செய்துவிட்டு தோள் பையிலிருந்து பிளாஸ்ட்டிக் பெட்டியை எடுத்தான்.

அதைக் காணும்போதே அவனுக்கு ஆத்திரம் மண்டிக் கொண்டு வந்தது. அவனது உடமைகளைப் பத்திரமாகப் பெட்டியில் வைத்துத் தருவது போல சாகசம் செய்தார் ரத்னசாமி... என்ற நினைப்பு உள்ளத்தை உலையாக்கியது.

அந்த பெட்டிக்குள் இருந்த தாயின் நகைகளை எடுத்து தன் கைக்குட்டையில் போட்டு முடிந்து கொண்டு பெட்டியை வெறுப்புடன் குப்பைக் கூடைக்குள் போட்டான். மணிபர்சையும் - நகை முடிப்பையும் தலைமாட்டில் மெத்தையின் அடியில் கட்டில் பலகை மீது வைத்து மெத்தையை இழுத்து மூடி - படுக்கை விரிப்பை சரிப்படுத்தி தலையணையைப் போட்டு படுத்துக் கொண்டான்.

அவனையும் மீறி தலைமாட்டில் மெத்தைக்கடியே இருக்கும் அவனது பொருள்களை யாரும் திருடிக் கொள்ள முடியாது என்ற நினைப்பு...

பையன் சொன்னது உண்மைதான். கொஞ்ச நேரத்தில் உடல் முழுவதும் சூடாகி... காய்ச்சல் மும்முரமடைந்தது. தலையைக் கோடாலி கொண்டு பிளப்பது போன்ற தலைவலி. முட்டிகளை முறுக்கிப் பிழிவது போன்ற வேதனை... 'அம்மா... ஐயோ!' என்று துடித்தான்.

மறுபடி பையன் வந்து கதவைத் தட்டியபோது அவனால் எழுந்திருக்கக்கூட முடியவில்லை... சிரமப்பட்டு கதவைத் திறந்தான். பிளாஸ்க்கில் வெந்நீரும் - டபரா டம்ளரில் காப்பியுமாக பையன் உள்ளே வந்தான்.

''சார் காப்பியை சாப்பிடுங்கோ... டாக்டரை கூட்டி வரேன்'' என்றான் மிகவும் அனுசரணையுடன்.

ஒரு வாய் காப்பி உள்ளே சென்றதும் வயிறு குமட்டியது. இரண்டு தடவை கழிவறைக்கு ஓடி வாந்தி எடுத்துவிட்டு

வந்தான். உடல் சோர்ந்து தள்ளாடிப் போய் படுக்கையில் விழுந்து விட்டான். கதவைத் தாளிடாது விட்டு விட்டான். யார் வேணுமானாலும் உள்ளே புகுந்து அவனது பெட்டியையோ தலைமாட்டில் உள்ள உடமைகளையோ எடுத்துப் போகட்டும்... என்ன வேணுமானாலும் நடக்கட்டும். எனக்கு அக்கறையில்லை என்றதொரு விரக்தியில் கண்களை மூடியபடி அரற்றிக் கொண்டு இருந்தான்.

கொஞ்ச நேரத்தில் லாட்ஜ் பையன் டாக்டருடன் உள்ளே வந்தான். வைத்தியர் நரேந்திரனை நன்கு பரிசோதித்து விட்டு... ''ஒன்றுமில்லை... ஃபுளூ காய்ச்சல் - மருந்து சாப்பிட்டு ஒரு வாரம் ஓய்வாக இருந்தால் பூரண குணமாகிவிடும்!'' என்று ஆறுதல் சொன்னார்.

'ஒரு வாரமா?' திக்கென்று அதிர்ந்து போய் விட்டான் நரேந்திரன். லாட்ஜுக்கு வாடகை - டாக்டருக்கு பணம் - மருந்து வாங்கவும் - சாப்பாட்டிற்கும் செலவு... எல்லாம் போக அவனிடம் கையிருப்பு எதுவுமே இருக்காதே...

திருநெல்வேலி ரயில் பயணத்திற்கு காசு வேண்டுமே? கையில் பணமில்லாது தொடர்ந்து லாட்ஜில் தங்கினால் முதலாளி கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளினால், தெருவிலே பசியோடு அலையவா பம்பாயிலிருந்து வந்தான்? காய்ச்சலின் வேதனையைவிட பணப் பிரச்சனை அவனை புரட்டி எடுத்துக் கொண்டிருந்தது.

நல்ல வேளை முன் பணம் தரவேண்டும் என்று லாட்ஜ் முதலாளி வற்புறுத்தவில்லை. டாக்டரும் கை மேல் காசு என்று பயமுறுத்தவில்லை. காலை, மாலை பையன் வாங்கித் தந்த காப்பி, ரொட்டிக்கும், மருந்துக்கும் மட்டுமே பணம் செலவாகியது.

ஒரு வார காலம் அவன் கிழித்துப் போட்ட நாராகக் கிடந்தான். மருந்து வேகத்தில் தன்னையுமறியாது தூங்கிப் போனவன் அசைந்து புரண்டு படுத்ததினால்... தலை மாட்டில்

பத்திரப்படுத்தி வைத்திருந்த மணிபர்ஸ் நழுவி கீழே விழுந்து விட்டது. அடுத்த நாள் காலை உள்ளே வந்த பையன் பர்சை பார்த்துவிட்டு எடுத்துக் கொடுத்தான்.

அவன் முயன்றிருந்தால் பர்சையும் - நரேந்திரன் தலைமாட்டிலிருந்த நகை முடிப்பையும் தட்டிக் கொண்டு போயிருக்கலாம். குறைந்த சம்பளத்தில் வேலை செய்து கொண்டிருந்த லாட்ஜ் பையன் நாணயமானவனாக இருந்தான்.

வசதியாக வீடும் வியாபாரமுமாக வாழ்ந்த ரத்னசாமியோ வடிகட்டின அயோக்கியராக... பிறர் பொருளுக்கு பேயாகப் பறக்கும் பாதகனாக இருந்தார்... அவரை அவனால் மறக்கத்தான் முடியுமா - அவரது துரோகச் செயலை நினைவினின்று நீக்கத்தான் முடியுமா?

காய்ச்சல் இறங்கி உடம்பு சிறிது குணமானதும் நரேந்திரனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அன்று காலை முகத்தை மழித்துக் கொண்டு பையன் கொண்டு வந்து தந்த வெந்நீரில் குளித்து முடித்தான். டாக்டர் பீஸ், லாட்ஜ் வாடகை இத்யாதிகளைக் கொடுத்துவிட்டு பையனுக்கு அன்பளிப்பாக பதினைந்து ரூபாய்களைத் தந்துவிட்டு வெளியே கிளம்பினான்.

மீதி அவனது பர்சில் இருபத்தைந்து ரூபாய்கள் தானிருந்தன.

ரயில் பயணத்திற்கும்... மற்ற செலவிற்கும் கொஞ்சம் கணிசமாகப் பணம் தேவையாயிற்றே.

ஒரு ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு நகரத்தின் நடுவே நெருக்கமாக ஓடிய அந்த தெருவுக்குள் புகுந்தான்.

ஒரு தடவை அடிபட்டவன் - உள்ளமும், உடலும் உடைந்து போகுமளவு ரத்னசாமி கொடுத்த அடி பலமானதுதான். மறுபடியும் அவன் யாரிடமும் ஏமாந்து போக விரும்பவில்லை... வரிசையாக இருந்த பல நகைக்கடைகளையும் பார்வையிட்டபடி மெல்ல தெருவில் மேலும் கீழும் நடந்தான்.

அடிக்கடி தன் தோளிலிருந்த பையை இருக்கமாகப் பற்றி தடவிப் பார்த்துக் கொண்டான்.

துன்பம் வரும்போது தனியாக வருவதில்லை. கட்டு கட்டாக வந்து வருத்தித் தொலைக்கும் என்று எங்கேயோ படித்த ஞாபகம். ரத்னசாமியிடம் ஏமாந்து துயரப்பட்டது போதும். இப்போது ஜேப்படி திருடனிடம் இருக்கும் உடமையைப் பறிகொடுத்து விட்டு பரதேசியாக யாரும் தெரியாத சென்னையில் அவனால் அலைய முடியாது... பற்பல சிந்தனையுடன் முடிவாக ஒரு சிறு கடைக்குள் நுழைந்தான். கைக்குட்டை முடிப்பில் பத்திரமாக வைத்திருந்த அம்மாவின் கைவளைகளில் ஒன்றை எடுத்துக் கடைக்காரரிடம் நீட்டிய போது அவன் கை விரல்கள் நடுங்கின. கண்கள் பனித்தது.

''அம்மா இறந்தும் மகனைக் கைவிடாது காப்பாற்றுகிறாளே! அம்மா! உங்கள் அன்புக்கு மதிப்பே இல்லையம்மா. வைரப்பிள்ளையார் கூட அதுக்கு ஈடு இல்லையம்மா!''

கன்னத்தில் வழியத் துடித்த கண்ணீரை விழுங்கிக் கொண்டான். ஊகும்! இனி அவன் ஒரு பேதையைப் போல கலங்கி... கண்ணீர் விடப்போவதில்லை. அவன் ஒரு ஆண்மகன். சிங்கத்துக்கு ஒப்பானவன். என்று... எந்த நிலையிலும் கலங்காது துணிவோடு இருக்கப் போகிறான். தன்னுள்ளே உறுதி எடுத்துக் கொண்டான்.

உரை கல்லில் தேய்த்துப் பார்த்துவிட்டு கடைக்காரர் உதட்டைச் சுழித்தார். ''மாத்து குறைவா இருக்கே...'' என்றபடி தராசில் போட்டு நிறுத்தார். ஒரு துண்டு காகிதத்தில் கணக்குப் போட்டார்.

அவனால் பேரம் செய்ய முடியவில்லை. கணக்கிட்டு கடை க்காரர் எண்ணிக் கொடுத்த தொகையை வாங்கிப் பர்சில் திணித்துக் கொண்டு வெளியே வந்தான். அம்மாவையே

விலைக்கு விற்றுவிட்டது போன்றதொரு அவமான உணர்வில் உடல் குறுகிப் போனான்.

லாட்ஜுக்குத் திரும்பியவன் பகல் உணவை முடித்துக் கொண்டு கிளம்பினான்.

அன்று இரவு அவன் புகைவண்டியில் திருநெல்வேலிக்குப் பயணப்பட்டுக் கொண்டிருந்தான்.

ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தவன் கண்களில் நட்சத்திரம் கூட இல்லாத வானத்து இருள்... கப்பியது...

அவனது வருங்காலம்... இருளாகத் தெரிகிறதே... அதில் எப்பொழுது வெளிச்சத்தைப் பார்க்கப் போகிறான்? பெருமூச்சு விட்டான் நரேந்திரன்.

8

இரவு முழுவதும் அவன் தூங்கவேயில்லை. தன் பக்கமிருந்த திறந்த ஜன்னல் வழியே இருளை வெறித்துக் கொண்டிருந்தான். கீழ்வானம் சிவக்கத் தொடங்கியதும் நரேந்திரன் நிமிர்ந்து உட்கார்ந்தான். தோள்பையை இறுக்கமாகப் பற்றிக் கொண்டிருந்த கை, பிடியைத் தளரவிட மறுத்தது.

இனி அவனது வருங்காலம் முழுவதும் அந்த தோள் பையிலிருந்த கையிருப்பில்தானே அடங்கியிருக்கிறது? அவன் மறுபடியும் ஏமாளியாக முடியாதே!

சில்லென்று காற்று... முகத்தில் மோதியபோது உடம்புக்கு இதமாக இருந்தது. இருட்டை விரட்டிக் கொண்டு வேகமாகத் தொடர்ந்த வெளிச்சம் அவனுக்கு தெம்பை ஊட்டியது. முதல்நாள் இரவு வேதனையில் கனத்த மனம் லேசாகி போய் விட்டதை உணர்ந்தான்.

காலத்திற்கு எத்தனை சக்தி? இரவின் கருமையில் அசுர வடிவில் அச்சுறுத்திய அவனது வருங்காலத்தை வெளிச்சத்தில் அவனால் துணிவுடன் நோக்க முடியும் போன்றதொரு தெம்பு... மனதில் உருவாகுவதை உணர்ந்தான்.

சே! அவன் ஏன் கோழையாக உணர்வுகள் தொய்ந்து சிந்திக்க இயலாது மனம் நொறுங்கித் தவிக்க வேண்டும்? எத்தனை இடர்கள் வந்த போதிலும் தைரியமாக அவைகளை எதிர்நோக்கி சமாளிக்கத் தெரிந்து கொள்ளப் போகிறான் அவன். அதற்காகத்தானே இந்தப் பயணம்? பலவும் எண்ணியபடி ஜன்னல் வழியே வெளியே பார்த்தான்.

கண்ணாமூச்சி காட்டி நகர்ந்து கொண்டோடிய நீலமலைத் தொடரை நோக்கி ரயில் விரைந்து கொண்டிருந்தது. அதற்குப் பின்னால் தெரிந்த வானம் பளிச்சென்று வெளிச்சத்தைக் கூட்டிக் கொண்டிருந்தது. இடது பக்கம் பாயாக விரித்துக் கிடந்த பசிய வயல்களும் அடுத்தடுத்து பனங்குடில்களும் எதிர் திசையில் வேகமாக மறைந்து கொண்டிருந்தன.

இனம் விளங்காத ஒரு உணர்வு நெஞ்சைக் கவ்வ... அவன் தன் இடத்தில் மீண்டும் உட்கார்ந்து கொண்டான். உறக்கத்தினின்று விடுபட்ட பயணிகள் பலர்... பல் துலக்கப் புறப்பட்டு விட்டனர். வண்டி எழுப்பிய ஓசையைத் தவிர அமைதியாகக் கிடந்த பெட்டியில் இப்போது மனிதக் குரல் கலகலத்தது.

அவன் மறுபடி வெளியே வெறித்துக் கொண்டிருந்தான். மனம் பலவற்றை எண்ணி பரபரத்துக் கொண்டிருந்தது.

திருநெல்வேலி சந்திப்பிலே காலை பத்து மணி அளவில் அவன் வண்டியை விட்டு இறங்கினான்.

தன் பெட்டியைத் தானே தூக்கிக் கொண்டு பிளாட்பாரத்தில் கொஞ்ச தூரம் நடந்தான். சுள்ளென்று கிளம்பி விட்டிருந்த வெளிச்சம் கண்களைக் கூசியது. அருகிலிருந்த குழாயில் நீர் பிடித்து வாய் கொப்பளித்து முகத்தைக் கழுவிக்

கொண்டான். மரத்தட்டில் தேநீர் நிரம்பிய கண்ணாடி டம்ளருடன்... டீ டீ என்று கூவிக் கொண்டு ஓடிய ஒரு பையனிடமிருந்து தேநீரை வாங்கிக் குடித்தான். தாகத்தில் வரண்டு விட்டிருந்த தொண்டைக்கு அது இதமாக இருந்தது.

சித்தப்பாவைத் தேடிக் கொண்டு அவன் இன்னும் முப்பது கிலோ மீட்டர் போக வேண்டியிருந்தது.

''கலிய நல்லூர் — ஒரு காலத்தில் சின்ன கிராமம். ஆனால் இப்போது ரொம்ப விரிவடைஞ்சு விட்டிருக்கு.'' அம்மா சொன்ன ஞாபகம். சீக்கிரம் போக வேண்டுமென்ற ஆவல் உந்த... பயணிகள் நிலையத்தை விட்டு வெளியேறக் காத்திருந்தவன்... வெளியே நடந்தான்.

நோயாளி சித்தப்பாவைக் காணப் போகிறான் — வெறும் கையோடு போவது அழகில்லையே.

அல்வா கடை ஒன்றின் முன் தயக்கத்துடன் நின்றான்.

அவர் ஊர் சமாசாரத்தை அவருக்கே கொண்டு தருவதா? முணுமுணுத்தபடி அரைகிலோ அல்வாவை வாங்கி அட்டை பெட்டியை தோள் பைக்குள் திணித்துக் கொண்டு மேலே நடந்தான்.

பஸ் நிலையத்தை அடைந்த போது பயணிகள் நிறைந்ததொரு பஸ் புறப்படத் தயாராக இருந்தது. நல்ல வேளை, அவனுக்கு அதில் இடம் கிட்டியது. பயணச்சீட்டை வாங்கிக் கொண்டு — உள்ளே ஏறி உட்கார்ந்தான். பெட்டியை காலடியில் வைத்துக் கொண்டு... தோள் பையை மடி மீது வைத்து இறுக்கமாகத் தழுவிக் கொண்டான்.

பஸ் பெருத்த குலுக்கலுடன் கிளம்பியது. ஜன்னல் வழியே மறுபடியும் நீலமலைத் தொடரையும், பசிய வயல்களையும்... பனங்குடில்களையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். செழிப்பான அந்த சூழ்நிலை கண்களுக்கு சுகமாக இருந்தது. சித்தப்பாவின் குணம் மனதிற்கு ஒத்ததாக இருந்து விட்டால்...

என்னென்னவோ... கணக்கிட்டபடி உட்கார்ந்தவன் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான்.

''கலியநல்லூர்! இறங்கறவங்க... சீக்கிரம்! சீக்கிரம்'' என்று குரல் கொடுத்தான் கண்டக்டர்.

பெட்டியுடன் இறங்கி சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் ஒருவன் மட்டுமே அந்த நிறுத்தத்தில் இறங்கிய பயணி. சாலை மரம் ஓரமாக சைக்கிளுடன் நின்று கொண்டிருந்த ஒரு பையனிடம் விசாரித்தான். சாலையினின்று உள்ளே பிரிந்து சென்ற கலியநல்லூர் வெகு தொலைவில் இருக்கவில்லையென்று தெரிந்தது.

பெட்டியுடன்... தோள்பையை இறுக்க அணைத்தபடி மெல்ல அந்த பாதையில் நடந்தான். இப்போது சூரியன் மிகவும் எரிச்சலாகி விட்டிருந்தது. நெற்றியிலிருந்த வியர்வைத் துளிகள் கழுத்திலே புரண்டோடியது... மண்பாதையில் செருப்புகள் புதைந்து இடறின.

கடைத் தெருவுக்குள் புகுந்தவன்... மருந்துக் கடைக்காரரிடம் விசாரித்துக் கொஞ்ச தூரத்தில் இடது பக்கமாக ஓடிய தெருவில்தான் சித்தப்பா கதிரேசன் வசிக்கிறார் எனத் தெரிந்து கொண்டான்.

மெல்ல நடந்து சித்தப்பா வசித்த சுடலையான் தெருவுக்குள் நுழைந்தான். பட்டணத்து வீதிகளைவிட அது அகலமாகவும் சுத்தமானதாகவும் காணப்பட்டது. இரு மருங்கிலும் ஓட்டுக் கூரை வீடுகள் அடுத்தடுத்து சந்துவிட்டுக் கட்டப்பட்டிருந்தன. இடையே இங்குமங்கும் காரைக் கட்டடங்கள் சில தெரிந்தன.

சித்தப்பா கதிரேசன் வீடு தெருக்கோடியில் தள்ளி ஒதுக்குப்புறமாக அமைந்திருந்ததொரு ஓட்டுக்கூரை வீடு. கதவு திறந்தபடி கிடந்தது. மெல்லப் படியேறி ரேழியைக் கடந்து தாழ்வாரத்திற்கு வந்தான்.

''யாரது வீட்டில்?'' ஓங்கிக் குரல் கொடுத்தான்.

''நீங்க யார்?'' கேட்டபடி வயதான ஒரு பெண்மணி உள்ளேயிருந்து எட்டிப்பார்த்தாள்.

''யார் அது?'' கூடத்திலிருந்த அறையினின்று அதட்டும் ஆண் குரல் கேட்டது. தொடர்ந்து இருமல் சத்தம்.

கால் அணிகளை ஓரமாக கழற்றி வைத்துவிட்டு பெட்டியை தரை மீது வைத்தான் நரேந்திரன். தோள் பையை இறுக்கமாகத் தழுவிக் கொண்டு சப்தம் வந்த அறைக்குள் புகுந்தான்.

''நான்தான் நரேந்திரன் வந்திருக்கிறேன்.. சித்தப்பா'' என்றபடி... அறையின் சுவர் ஓரமாகக் கிடந்த பெரிய மரக்கட்டிலின் அருகே வந்து நின்றான்.

அறை மிகவும் பெரியதாக - காற்றோட்டமுள்ளதாகக் காணப்பட்டது. கட்டிலின் மீது விரிக்கப்பட்டிருந்த பஞ்சு மெத்தையும் விரிப்பும் படு சுத்தமாக இருந்தன.

வெள்ளை வேட்டி, பனியனில் நரைத்த முடியும் —மழிக்கப்படா நரைத்த தாடி மீசையுமாக... காய்ந்த சருகு போல சித்தப்பா படுக்கையில் சுருண்டு கிடந்தார்.

அவனைக் கண்டதும் விடுக்கென்று எழுந்து தலையணை மீது சாய்ந்த வாக்கில் உட்கார்ந்தார்.

''எங்கே வராது போயிடுவியோன்னு பயந்து கிட்டிருந்தேன் — வாப்பா!'' தடுமாறியபடி கையை நீட்டி அவனது கரத்தை அன்போடு பற்றியவரின் குரல் நடுங்கியது.

''அண்ணியோட சாவுக்கு நான் வரமுடியலை. என்னைப் பாரு எப்படி கிடக்குறேன். வயசும், வியாதியும் என்னை நாளுக்கு நாள் உருக்குலைச்சுகிட்டு வரது... உட்கார்!'' என்று தழுதழுத்தார். அவரது கண்களில் நீர்முட்டிக் கொண்டது.

''கடைகளைக் கூட கவனிக்க முடியாம ரெண்டு நாளா... முட்டிவலியோட பாடுபடறேன்...'' கதிரேசன் முனகினார்.

''கவலைப் படாதீங்க சித்தப்பா... நீங்க கேட்டுக் கொண்டபடி வந்து விட்டேன். என்னால் ஆன உதவிகளை நான் தடையில்லாமல் செய்வேன்'' சொல்லிவிட்டு தோள் பையிலிருந்து அல்வா பெட்டியை எடுத்து அவரிடம் கொடுத்தான்.

சித்தப்பா கண்களைத் துடைத்துக் கொண்டு பச்சைக் குழந்தையைப் போல சிரித்தார்.

''டாக்டர் சர்க்கரை பண்டங்களை கண்ணால் கூட பார்க்கவே கூடாதுன்னு தடை உத்தரவு போட்டிருக்கார். ஒரு துண்டு அல்வா சாப்பிட நான் ஒரு வாரமா ஆசைபட்டுக் கிட்டிருந்தேன். நீ வாங்கிட்டு வந்தது நல்லதா போச்சு. போகிற உசிரை யாரும் பிடிச்சு வச்சுக்க முடியாது...'' புன்னகைத்தபடி ஒரு பெரிய துண்டத்தை எடுத்து வாயில் போட்டு சுவைத்துத் தின்றார்.

''அண்ணி, அண்ணன் ரெண்டு பேர் சாயலையும் கொண்டு வந்திருக்கே... நீ திடுதிப்புன்னு வந்து நின்னப்போ என் அண்ணனைப் பார்த்துவிட்டது போல திகைப்பு ஏற்பட்டது... பேசறப்போ... என் அண்ணி போல சிரிச்ச முகம்... பரவாயில்லை... கடைசி காலத்திலாவது உறவுவிட்டு போகாம நாம ஒண்ணு சேர்ந்துட்டோம்... சரி. சரி மீதிப் பேச்சுக்களை பிறகு வச்சுக்கிறேன். முதல்லே நீ குளிச்சிட்டு பசியார ஏதாச்சும் சாப்பிடு! அபிராமி... நம்ப பிள்ளையாண்டானை கொஞ்சம் கவனி அம்மா...!'' உரத்துக் கூவினார்.

''பின்னாலே தாவாரத்திலேதான் குளியலறை இருக்கு. காலையிலே ரொப்பி வச்ச தண்ணி அண்டாவிலே அப்படியே இருக்கு'' என்று வழி காட்டினாள் அபிராமி என்ற அந்த வயோதிகப் பெண்மணி.

பெட்டியைத் திறந்து சோப்பு — துவாலை, மாற்றுடை இத்யாதிகளை எடுத்துக் கொண்டு கூடவே தோள் பையையும் சுமந்து கொண்டு பின்பக்கம் சென்றான்.

மறந்தும் தோள் பையை அவன் கீழே வைக்க விரும்பவில்லை. குளித்து மாற்றுடை அணிந்து கொண்டு கூடத்திற்குள் வந்தான்.

''மாடத்திலே செப்புக் கிண்ணத்தில் இருக்கிற துண்ணூறைக் கொஞ்சம் வச்சுகிட்டு உட்காருப்பா - இலை போடறேன்!'' அபிராமி சொன்னாள்.

விரத நாட்களில் விபூதி அணிந்து கொண்டு சாப்பிட உட்காரச் சொல்லி அம்மா வற்புறுத்துவாள். அந்த நினைவு நெஞ்சைப் பரிவோடு தடவியது.

கூடத்து தரையில் விரித்திருந்த வாழை இலையில் அபிராமி தோசையையும் - சட்டினியையும் பரிமாறினாள். கீழே உட்கார்ந்து சாப்பிட அவனுக்கு சங்கடமாகத் தானிருந்தது. கிணற்று நீர் சாப்பிடக் கடுத்தது.

சித்தப்பா தயவில் வாழ வந்திருக்கிறான். அவரது வீட்டு வாழ்க்கை நிலைக்கு ஒத்தபடி தன் பழக்க வழக்கங்களை அவன் மாற்றிக் கொள்ள வேண்டும். பட்டணத்தில் வாழ்ந்தவன் என்ற நாகரீகத்தில் நெளிந்து - வளைந்து தடுமாறக்கூடாது... கதிரேசன் அறைக்குள் மறுபடி புகுந்து... அவர் காட்டிய நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

சித்தப்பா... தலையணை அடியில் கிடந்த இரு சாவிக்கொத்துக்களை எடுத்து அவனிடம் நீட்டினார்.

''கடைகளின் சாவிகள் இவை. இது வீட்டு சாவிக்கொத்து. ரெண்டையும் நீயே வச்சுக்கோ... கடைத் தெருவிலே நமக்கு ஒரு மளிகைக் கடையும் மின்விசைப் பொருள் கடை ஒன்னும் இருக்கு. ஒரு காலத்திலே ஒகோன்னு இருந்தவன்தான் இப்போ அத்தனை பணவசதி கிடையாது. ஆனால் வசிக்க இடம், தின்னச் சோறுன்னு பஞ்சமில்லாம இருக்கேன். கடைகளின் கட்டிடம் நம்முடையதுதான். இதைத் தவிர இந்த வீட்டுக்குப் பின்னாலே பெரிய காய்கறி தோட்டம் இருக்கு. அதிலே பயிராகிறதை நம் வீட்டு உபயோகத்துக்கு போக மீதியை டவுன் கடையிலே வித்து காசாக்கிடணும். வயசும், வியாதியும் வியாபாரத்தை சீர்குலைச்சுட்டது. இதுகளை நீதான் இனி கவனிச்சுக்கணும். ரெண்டு நாளா கடைகளை மூடி வச்சிருக்கேன். என்ன செய்வேன் சொல்லு?'' இருமல் அவரது உடலைக் குலுக்கியது.

''மெதுவா பேசுங்கோ சித்தப்பா... உடம்பை அலட்டிக்காதீங்க. என்ன செய்யணும்னு சமயத்துக்கு ஆலோசனை கொடுங்கோ போதும்... வீட்டு கொத்து சாவி இப்ப உங்ககிட்டேயே இருக்கட்டும். கடை சாவிகளை மட்டும் வச்சுக்கிறேன்'' என்றபடி அந்த கொத்து சாவியை அவரிடம் திருப்பிக் கொடுத்தான்!

சித்தப்பா உரத்த குரலில் சிரித்தார். இருமினார்... கண்களில் நீர் வர சிரித்தார்.

''எனக்குப் புரிகிறது... இந்த சாவியை வச்சுக்க தகுதி உடையவ இந்த வீட்டுக்கு வரப்போற மருமகள்னு சொல்லாம சொல்றே? இருக்கட்டும். உடம்பு தேறி எழுந்ததும் முதல் வேளையா ஒரு பெண்ணை பார்த்து உனக்கு கட்டி வச்சுடறேன். வீட்டுக்கு விளக்கேத்தி வைக்கிறதோட வேளைக்கு உனக்கும் எனக்கும் சோறு போடுவா மகராசி!'' மறுபடியும் சிரித்தார்.

நரேந்திரன் நெஞ்சு படபடத்தது.

கல்யாணம் என்றதும் அவனது கற்பனையில் வரிசைப் பற்கள் தெரிய கன்னம் குழிய சிரித்த கங்கா வந்து நின்றாள்.

இன்னமும் அந்த சாகசக்காரியை பற்றிய நினைப்பா? சே! அவளைப பற்றி அடியோடு மறந்தல்லவா போக வேண்டும்? கற்பனையால் கூட அவளைத் திரும்பிப் பார்ப்பது பாவமாச்சே. மாயக்காரி... மயக்க வந்த மோகினிப் பிசாசு... உள்ளூர வெகுண்டபடி கைகுட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

அப்படியே நெஞ்சிலிருந்த அவளது நினைவையும் துடைக்க முயன்றான்.

9

அடுத்த நாள் முதல் அவன் கடைகளைத் திறந்து கவனித்து கொண்டால் போதும் என்று சித்தப்பா கதிரேசன் சொல்லிவிட்டார். அன்று முழுவதும் தம் அருகில் உட்கார வைத்துக் கொண்டு வியாபாரத்தில் அவன் தெரிந்து கொள்ள வேண்டியவைகளைப் பற்றி விரிவாகச் சொல்லிக் கொடுத்தார்.

இரவு உணவுக்குப் பின் வெகுநேரம் அவரிடம் பேசிக் கொண்டிருந்துவிட்டு உறங்கச் சென்றான் நரேந்திரன்.

கூடத்தின் மறு பக்கத்திலிருந்த அறையை அவன் உபயோகித்துக் கொள்ளலாம் என்று சித்தப்பா அனுமதி தந்தார்.

அபிராமியம்மாள் பரபரப்புடன் அறையை சுத்தப்படுத்தி நடுவே கிடந்த கட்டிலின் மீது பஞ்சு மெத்தையை போட்டு வெள்ளை விரிப்பைப் பரத்தி... தயாராக்கித் தந்தாள். தோட்டத்தை நோக்கியிருந்த ஜன்னல் வழியே குளிர்ந்த காற்று சுகமாக வீசியது.

மின் விசிறியை லேசாகச் சுழலச் செய்து குழல் விளக்கை அணைத்துவிட்டு படுக்கை மீது சாய்ந்தான் அவன். பசிக்கு நல்ல உணவு, உடல் அலுப்புக்கு இதமான படுக்கை, மனச்சோர்வுக்கு உற்சாகம் தந்து அரவணைத்துக் கொண்ட இடம்... இத்தனையும் தந்து உதவிய சித்தப்பாவின் அன்பை நினைத்த போது நன்றிப் பெருக்கில் கண் கலங்கிப் போனான். என்னென்னவோ எதிர்பார்த்து சென்னைக்கு வந்தவன் ஏமாற்றத்தில் துவண்டு போனான்.

எதுவும் எதிர்பார்க்க முடியாத நிலையில் கவலையுடன் வந்தவனுக்கு கணிசமான ஆதரவு கிடைத்தது வியப்புதான்... தோட்டத்திலிருந்து சில்லென்று காற்று எங்கேயோ பூத்துக்

குலுங்கிய மல்லிகையின் வாசத்தை அள்ளிக் கொண்டு வந்தது. உடல் சிலிர்த்து படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்தான். குப்பென்று முகத்தில் மோதிய மலரின் மணம் அவனுக்குக் கங்காவின் நினைவை அழுத்தமாக உணர்த்தியது.

''சே! என அவன் தன்னையே கடிந்து கொண்டான். அவனும் ஒரு மனிதன் என்று சுதந்திரமாகத் தலை நிமிர்ந்து வாழ ஒரு வழியைத் தேடிக் கொள்ள வேணும். அதற்குப் பின்னர் சந்தர்ப்பமா கிட்டாது? அப்போது சொல்ல வேண்டும்.

''பார்! சதிகாரியே பார், உன் அப்பனுடன் சேர்ந்து என் வாழ்க்கையை நசுக்கப் பார்த்தாய். ஆனால் உன் திட்டம் நிறைவேறவில்லை... பார்...'' எனச் சொல்லி வார்த்தைகளால் குத்திக் குதறி...

சே! அவளைப் பற்றிய நினைவு இப்பொழுது ஏன்?... பற்களைக் கடித்துக் கொண்டு படுக்கை மீது சாய்ந்தான். ரயில் பயணத்தின் அலுப்பும் - வயிறு முட்ட உண்ட உணவின் களைப்பும் ஒருங்கு சேர அவன் பின்னர் ஆழ்ந்து உறங்கிப் போனான்.

அடுத்த நாள் காலை சீக்கிரமே எழுந்து கிணற்று நீரைத் தானே இரைத்துக் குளித்தான். சுத்தமான பாண்ட் சட்டை அணிந்து சித்தப்பாவின் அறைக்கு வந்தான்.

நோயாளியாகப் படுத்துக் கிடந்த போதிலும் சித்தப்பா பல் துலக்கி, முகத்தைத் துடைத்துக் கொண்டு மாற்றுடையில் வெகு சுத்தமாக எழுந்து உட்கார்ந்திருந்தார். முதல் நாள் காணப்பட்ட அசதியும் சோர்வும் அவரிடம் இப்போது இருக்கவில்லை.

''நம் கடை ஆள் இங்கே வருவான். காப்பி பலகாரத்துக்குப் பின் அவனுடன் போய் கடைகளைத் திறந்து வை. ஒன்பது மணிக்கு மேல் நல்ல நேரம்!'' சித்தப்பா சொல்லிவிட்டு இருமினார்.

சிறிது நேரம் சென்றதும் கடை ஆள் முத்துசாமி வந்தான்.

பார்த்த அளவிலேயே நரேந்திரனுக்கு அவனைப் பிடித்து விட்டது.

சித்தப்பா சொன்னபடி கடைகளைத் திறந்து வைத்து... அவைகளைக் கவனித்து வந்த ஆட்களை மேற்பார்வை செய்தான். மளிகைக் கடையில் சரக்குகள் பல தேவைப்பட்டன. மின் விசைப் பொருள் விற்பனைக் கடையில் சாமான்கள் தாறுமாறாக வைக்கப்பட்டிருந்தன.

நகரத்திற்குச் சென்று இரு கடைகளுக்கும் தேவையான பொருள்களை வாங்கி வந்தான். எல்லாவற்றையும் ஒழுங்காக வைத்து கடையின் பார்வையைக் கூட்டினான்.

'எப்பொழுதும் அவன் வரக்கூடும். கணக்கை சோதிக்கக்கூடும்' என்றதொரு கண்டிப்பு ஏற்படவே... அதுவரைக் கடைகளை கவனித்து வந்த ஆட்கள் உஷாராகினார்கள். இரு கடைகளும் சீராக செயல்படத் தொடங்கின.

நஷ்டத்தில் ஓடிய கணக்கை... ஒரே மாதகாலத்தில் லாபத்தைக் காட்டும் வகையில் நடத்திக் கெண்டு போனான். ஓய்வு நாட்களில் அவன் பொழுதை வீணாக்காது... தோட்டக்காரனுடன் பின் பக்கத்தில் காய்கறி தோட்டத்தை மேற்பார்வையிடலானான். சித்தப்பாவின் ஆலோசனைகளை அவ்வப்போது கேட்டு... கொஞ்ச நாட்களில் தோட்டத்தைப் பக்குவமாக பராமரிக்கவும் புரிந்து கொண்டு விட்டான்.

இவைகளுடன் அவன் தன் பொறுப்பை நிறுத்திக் கொண்டுவிடவில்லை.

வழக்கமாக சித்தப்பாவை கவனிக்கும் டாக்டர் பூபதியை அணுகி அவரது உடல் நிலையைப் பற்றி தெரிந்து கொண்டான்... அவருக்கு கொடுக்கப்பட வேண்டிய மருந்துகளைப் பற்றி கேட்டறிந்து கொண்டான். பகல் சாப்பாட்டின் போதும்... இரவு உணவிற்குப் பிறகும் சித்தப்பாவின் நோய் நிலமையை விசாரித்துக் கொண்டு தன்

கையாலேயே மருந்துகள் கொடுத்து பணிவிடை செய்தான்.

காலையிலிருந்து இரவு படுக்கும் வரை அவனது நேரத்தை கடைகளும்... தோட்டமும்... சித்தப்பாவும் ஆக்கிரமித்துக் கொள்ளவே... வேறு சிந்திக்கவே பொழுது இருக்கவில்லை. நோயாளி கதிரேசன் குணமடைந்து மெல்ல எழுந்து நடமாடத் தொடங்கினார்... சில நாட்கள் பொடி நடையாக அவனுடன் கடைத் தெருவுக்குச் சென்று... தமது கடைகளை மேற்பார்வையிட்டார். வியாபாரம் விருத்தியடைந்து கொண்டு வந்தது. சித்தப்பாவின் உடல்நிலையில் நல்ல திருப்பம் ஏற்பட்டிருந்தது.

முன்போல் அவன் காலை வேளையில் கிணற்றடியில் குளிக்காது சித்தப்பாவுடன் அருகிலிருந்த தாமிரபரணிக்கு புறப்படத் தொடங்கினான். குழாயடியில் குளித்து வளர்ந்தவனுக்கு ஆற்று நீரில் இறங்கி... நீந்திக் குளிப்பது ஒரு மகிழ்ச்சிகரமான அனுபவமாக இருந்தது.

தந்தையும், மகனும் ஜோடியாக ஆற்றிலிருந்து ஈர வேட்டியுடன் மனம் திறந்து பேசி மகிழ்ந்தபடி வீடு திரும்பினர். அருகருகே அமர்ந்து காப்பி பலகாரம் சாப்பிட்டனர்.

பகல் உணவுக்கு கடைகளை அடைத்துவிட்டு வீடு திரும்பும் போது... சாப்பாட்டிற்குப் பின்னர் முன்போல் கோழித் தூக்கம் போட்டு நேரத்தை ஓட்டாது அவனுடன் உட்கார்ந்து ஒரு சுற்று புலியும் ஆடுகளும்... விளையாடினார் கதிரேசன்.

அவர் புலியாக பாய்ச்சல் காட்ட, அவன் ஆடுகளாக நகர்ந்து ஓடிக் கொண்டிருக்க... சின்னக் குழந்தைகளாக இருவரும் சிரித்து மகிழ்ந்தனர்.

இப்படி ஒரு வருட காலம் இனிமையாக, வேகமாக மறைந்து ஓடிவிட்டது.

கிராமத்து பழக்க வழக்கங்களில் இணைந்து போன

நரேந்திரன் பார்க்கவும் சற்று மாறி விட்டிருந்தான்.

கவனிப்பான உணவு அவனது கன்னக்கதுப்புகளை உப்ப வைத்திருந்தது. முன்னைவிட இன்னமும் கொஞ்சம் நிறம் கூடி உடம்பில் சதைப்பிடிப்பு ஏற்பட்டுப் பார்க்க... நகநகவென்றிருந்தான். இடமும், உணவும் தந்த சித்தப்பா அவனது வேலைக்கு ஒரு தொகை ஊதியமாகவும் தந்து உதவினார். தன் கையிலிருந்த மீதிப் பணத்தை வந்த புதிதில் கிராமத்திலிருந்த அரசு வங்கியில் போட்டு பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டிருந்தான்... அந்த கணக்கில் தன் சம்பளத்தின் ஒரு பகுதியை மாதந்தோறும் சேமித்துக் கொண்டிருந்தான்.

கணிசமானதொரு தொகை சேர்ந்துவிட்ட போது... அவன் மனதிலும் நம்பிக்கையும்... தெம்பும் அதிகமாகின... வியாபார நுணுக்கங்களை நன்றாகப் புரிந்து கொண்டதும்... இனி தன்னால் வாழமுடியும். வாழ்க்கையின் மேடு பள்ளங்களைத் துணிவாகச் சந்திக்க முடியும் என்ற திடமான எண்ணம் ஏற்பட்டு விட்டது... அதன் சாயல் அவனது முகத்தின் கம்பீரத்தைக் கூட்டிவிட்டது.

நாணயமான அவனது போக்கு சித்தப்பாவை வெகுவாகக் கவர்ந்து கொண்டு விட்டது.

தன்னந்தனியாக நோயுடன் சிரமப்பட்டவருக்கு ஊன்றுகோல் போல அவன் தந்த உதவிகளை எண்ணி அவர் தம் மனதிற்குள்ளே அவனை மிகவும் மதித்தார். நன்றி பாராட்டினார்.

ரத்தபாசம் முடிவில் வெற்றி கொண்டது. அந்த குறுகிய காலத்திற்குள் அவருக்கு அவன் மேல் பெற்ற மகனைப் போன்றதொரு பாசம் அழுத்தமாக உருவாகி விட்டிருந்தது. அவனுக்கு தந்தை போன்ற நினைப்பில் நேசம் வளர்ந்தது.

அன்று மாலை பகல் உணவுக்கு வீட்டுக்குத் திரும்பிய கதிரேசனுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அவரது அருமை நண்பர்... பட்டணத்தில் வசிக்கப் போனவர், படுத்த

படுக்கையாகிவிட்டார் என்றும்... ஒரு தடவை அவரைப் பார்க்க விரும்புகிறார் என்றும் கடிதத்தில் செய்தி வந்திருந்தது.

முன்போல் நோயின் கடுமையான பிடியில் அவதிப்பட்டுக் கொண்டிருந்தால்... கதிரேசன் துணிந்திருக்க மாட்டார். இப்போது உடம்பு கொஞ்சம் சுகமாகி விட்டிருக்கிறது என்ற ஆறுதல்... துணைக்குத்தான் நரேந்திரன் இருக்கிறானே என்ற தெம்பு...

''இந்த வார இறுதியிலே... ஒரு நாள் கடைகளை ஆட்கள் வசம் ஒப்புவிச்சுவிட்டு நாம ரெண்டுபேரும் சென்னைக்கு ஒரு நடை போய் வரணும். ஏற்பாடு பண்ணு!'' என்று அவர் உத்திரவிட்டபோது திடுக்கிட்டுப் போனான் நரேந்திரன்.

சென்னை என்றதுமே அவனது உடலும், உள்ளமும் சிலிர்த்துப் போயின.

நீறுபூத்த நெருப்பாக அவனது அடி மனதில் அடங்கிக் கிடந்த கங்காவின் நினைவு நெஞ்சை வருடியது.

''நானும் வரணுமா சித்தப்பா?'' உணர்ச்சிக் குழப்பத்தில் தடுமாறினான்.

''உன் துணையில்லாமல் நான் எப்படிப் போய் வரமுடியும்? ஒரே ஒரு தடவையாவது என் நண்பரைப் பார்த்துட்டு வரணும்னு மனம் தவிக்கிறது. அப்பத்தான் எனக்கு நிம்மதி ஏற்படும். உனக்கு இப்போ புரியாது. வயசு காலத்திலே என்னென்னவோ ஆசைகள் மனசை அலைக்கழிக்கும்...!'' என்று புன்முறுவலித்தார்.

அந்த வார இறுதியில் அவர்கள் இருவரும் சென்னைக்குப் பயணப்பட்டனர்.

முன்போல அவன் அழுக்குப் பிடித்த லாட்ஜில் தங்க வேண்டிய அவசியம் இப்போதிருக்கவில்லை.

சித்தப்பா தாராளமாக செலவழித்து சுகமாக வாழும் பழக்க முடையவர். சவுகர்யம் நிறைந்த நல்லதொரு ஓட்டலிலேயே

தங்க விரும்பி ஏற்பாடு செய்யச் சொன்னார்.

பயணக் களைப்பு போகக் குளித்து... காலைப் பலகாரம் சாப்பிட்டான். இருவரும் ஆட்டோவில்... அண்ணா நகரில் வாழ்ந்த அந்த நோயாளி நண்பரைத் தேடிக் கொண்டு போனார்கள். வழியில் சித்தப்பா... ஒரு துணிப்பை நிறைய பழங்களும் மிட்டாயும் வாங்கிக் கொண்டார்.

படுத்த படுக்கையாக பலவீனமாகிவிட்ட நண்பரைக் கண்டு நெஞ்சுருகி... வெகுநேரம் அங்கேயே தங்கிவிட்டார். நண்பர் மகனது வற்புறுத்தலில் இருவரும் பகல் உணவுக்கு அங்கேயே தங்கிவிட்டு பின்னர்தான் திரும்பினார்கள்.

அன்று மாலை — கதிரேசன் வெளியே எங்கும் செல்ல விரும்பவில்லை. ஓட்டல் அறையிலேயே ஓய்வாக இருக்க நினைத்தார். ஆனால் நரேந்திரனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. சென்னை மண்ணை மிதித்ததிலிருந்து அந்த துடிப்பு. கொஞ்ச நேரம் வெளியே சுற்றிவிட்டு வருவதாகச் சொல்லிக் கிளம்பினான்.

ஆட்டோவில் உட்கார்ந்தவன் — மின் விசையால் உந்தப் பட்டவன் போல ''திருவல்லிக்கேணி முத்து வீரன் தெரு...'' என்றான். முதல் முதலாக அவன் அங்கு வந்த அதே மாலை நேரம், பொழுது அமர்ந்து இருள் லேசாகப் பரவத் தொடங்கி விட்டிருந்த சமயம்.

வாயில் அழைப்பு மணியை அழுத்தமாக ஒலிக்க விட்டான். கையும், காலும் பதறிப் போயின. மேனி நடுங்க வாய் உலர்ந்து போய்... கதவு திறக்கப்படும் காட்சியைக் காண நேரம் யுகமான தவிப்புடன் நின்றான்.

வெளி விளக்குப் பளிச்சிட்டது. 'யாரது?' என்று அதட்டிய அந்த குரல்... அவன் மேனியைப் புல்லரிக்கச் செய்தது.

கதவைத் திறந்து கொண்டு வாயிற்படியருகே நின்றவள் பிரமித்துப் போனாள்.

'நீங்களா! நலந்தானே...?' கேட்டபடி புன்னகைத்தாள். ஒரு வருஷத்திற்கு முன்பு பார்த்த அதே கங்காதான் - எந்த விதமான மாற்றமும் இன்றி அதே மாயப்புன்னகையுடன் நின்றாள்.

என்னென்னவோ பேச நினைத்தவன் வாயிழந்தவனாக... அவளை திக்பிரமையுடன் பார்த்து... ''ஒன்றுமில்லை, சும்மா பார்க்க வந்தேன்...'' என்று முணுமுணுத்தபடி சட்டென்று திரும்பினான்.

''அப்பா இன்னிக்கு சீக்கிரமா வந்துடுவார்!'' தயங்கினாள்!

'உன் அப்பாவையா பார்க்க வந்தேன்—?' என்றது அவன் பார்வை.

''சென்னையிலா இத்தனை நாளா இருக்கீங்க?'' அவள் கேட்டதற்கு இல்லை என தலையை அசைத்தான்.

அதற்குமேல் நின்று கொண்டிருந்தால் அவள் மேல் கொண்டிருக்கும் வெறுப்பும், விருப்பும் கலந்த அந்த உணர்வு... விஷமாக அவன் நெஞ்சுவரை ஏறிவிடும் என்ற அச்சம்.

சட்டென்று திரும்பி மவுனமாக நடந்தான். இதென்ன பைத்தியக்காரத்தனம்? எதற்கு இவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல்? தன்னையே சாடிக்கொண்டான்.

காதல் என்பதும் ஒரு பைத்தியக்காரச் செயல்தானே?

ஆமாம், அவனுக்கு இன்னுமா... அவள் மேல் காதல்... பற்களைக் கடித்தபடி - கோபத்துடன்... சாலைக்குள் புகுந்தான்.

10

இரண்டு தினங்களுக்குப் பின்னர் அவர்கள் ஊர் திரும்பிவிட்டனர். பல ஆண்டுகளுக்குப் பின்னர் தமது நண்பனை மறுபடி பார்க்க முடிந்தது என்பதிலே சித்தப்பா மகிழ்ச்சியும் மன அமைதியுமாக இருந்தார்.

ஆனால் அவன்?

கங்காவை மறுபடி பார்த்ததினால் ஏற்பட்ட உணர்ச்சி கொந்தளிப்பில் அமைதியின்றி தவியாகத் தவித்தான்.

எத்தனையோ முயன்று பார்த்தான். அவனது வருங்காலத்தையே நாசமாக்கிய தன் தகப்பனுடன் சேர்ந்து சதி செய்த மோசக்காரி என்று வெறுத்து ஒதுக்கப் பாடுபட்டான். ஆனால் ஏனோ அவளை மறக்கவே முடியவில்லை. எவ்வளவுக்கெவ்வளவு அவளை அவன் வெறுக்க முயன்றானோ அவ்வளவுக்கவ்வளவு மனதிலே அவளது நினைப்பு நிழலாடிக் கொண்டு அவனை வருத்தித் தொலைத்தது. ரத்தத்திலே கலந்து கொண்டு உயிருடன் ஒட்டிக் கொண்டு விட்டாற் போன்ற அவளது நினைவை அவனால் உதறவே முடியவில்லை...

இந்த உபாதைக்கு வேலை ஒன்றுதான் தற்சமயம் அவனுக்கு அமைதி தரும் மருந்தாக இருந்தது.

அதனால் காலையில் எழுந்ததிலிருந்து... இரவு படுக்கையில் சரியும் வரை... உழைத்தான்... உடல் அயரும் வரை கடுமையாக உழைத்தான்.

சித்தப்பா இதைக் கவனிக்கத் தவறவில்லை. அண்ணன் மகனது அன்பிலும் — நாணயமான உழைப்பிலும் மகிழ்ந்து விட்டிருந்த அவருக்கு லேசாகக் கவலையும் ஏற்படத் தொடங்கியது.

ஊர் உலகத்து இளம் பிள்ளைகளைப் போல மற்ற எதிலும் நாட்டமின்றி வேலை ஒன்றே கவனமாக இருக்கிறானே! இது நல்லதல்லவே?...

அவர் மனதிலிருந்ததைக் கேட்டு விட்டார்.

''இள வயதிலே உழைக்கணும். ஒத்துக்கறேன். ஆனால் அதுக்காக ஓய்வே இல்லாது உடம்பை ஓடாக்கிக்க முடியுமா? அடுத்த டவுனிலே ஏதோ புதுசா திரைப்படம் ஓடுதாம்.

ஞாயிற்றுக் கிழமைகளிலே நீ ஏன் போய் பார்த்துட்டு வரக்கூடாது?'' சொல்லிப் பார்த்தார்.

சித்தப்பாவுக்கு பதிலளிக்காது புன்னகைத்தான் நரேந்திரன். ஞாயிற்றுக் கிழமைகளில் தான் அவன் மற்ற நாட்களை விட கடுமையாக உழைத்தான். மேலே வழித்து இறுக்கிக் கட்டிக் கொண்ட வேட்டியும் வெற்று மார்புமாக... முழங்கால் வரை மண் அப்பிக் கொள்ள... கையில் மண் வெட்டியுடன் தோட்டக்காரனுடன் ஜோடியாக வேலை செய்தான்.

''உன் வேலையை மற்றொருவன் செய்து உனக்காக ஊதியம் திரட்டித் தருவான் என்று எதிர்பார்க்காதே. உனக்காக நீயேதான் உழைச்சாகணும்?'' அவனது அம்மா அடிக்கடி சொல்வது வழக்கம். அது முற்றிலும் உண்மை என்பதை அங்கு வந்தவுடனேயே புரிந்து கொண்டு விட்டிருந்தான்.

இடுப்பில் கைகளை ஊன்றிக் கொண்டு பட்டுக்கரை வேட்டி மேல் ஈர மண்படாது ஒதுங்கி நின்றபடி தோட்டக் காரனை ஏவுவதைவிட, கூடவே அவனுடன்... ஒரு உழைப்பாளியாக மண் வெட்டியுடன் புறப்பட்டால்... வேலை எத்தனை துரிதமாக சிறப்பாக நடந்தது என்பதை அறிந்து கொண்டான்.

தோட்டம் இந்த ஒரு வருஷ காலத்திலே... பசேலென்று... கண் கொள்ளக் காட்சியாக மாறி... முந்தைய ஆண்டுகளை விட மும்மடங்கு விளைச்சலைத் தந்ததும் உண்மை.

சித்தப்பாவுக்கு தன் அண்ணன் மகனைப் பற்றி மிக்கப் பெருமையாக இருந்தது. நண்பர்களிடம் அவனைப் பற்றி புகழ்ச்சியாகப் பேசி மகிழ்ந்தார்.

நாட்கள் வேகமாக விரைந்து — மாதங்கள் ஓடி... விரைவில் ஓராண்டு காலம் முடிந்து போனது.

சித்தப்பாவின் உடல்நிலை நன்றாகத் தேறி விட்டிருந்தது.

அவரால் ஒரு கடையைத் தனியே மேற்பார்வை செய்ய முடிந்தது. அவனது வேலையின் பளுவைச் சிறிது குறைக்க அவன் வசம் ஒரு கடையின் பொறுப்பை மட்டும் தந்திருந்தார். வியாபாரம் முன்னைவிட மும்மடங்கு அதிகரித்து விட்டிருந்தது. தோட்டத்தின் விளைச்சல் பலமடங்கு அதிகமாகி... சந்தையிலிருந்து கணிசமான வரவு ஏற்பட்டது.

சித்தப்பா அவனுக்குத் தந்த மாதத்தொகையை இரட்டிப்பாக்கி விட்டிருந்தார். கடைக்குப் போய் வரவும் டவுனுக்கு சாமான்கள் வாங்கிவரவும் உபயோகிக்க ஒரு ஸ்கூட்டரை வாங்கித் தந்து விட்டிருந்தார்.

நரேந்திரன் அந்த குறுகிய காலத்திலே சித்தப்பாவின் அன்பைக் கவர்ந்து கொண்டதுடன்... ஊரில் உள்ள பெரியவர்களின் மதிப்பையும் தேடிக்கொண்டு விட்டிருந்தான்.

''யாரது! ஸ்கூட்டரிலே போறது, நம்ப கதிரேசன் அண்ணன் மகன். நல்ல பிள்ளை, இவன் மட்டும் சமயத்துக்கு வந்து உதவாட்டா கதிரேசன் போன இடம் காடு முளைச்சிருக்கும்...!''

''அங்கே போகுதே... அந்த பிள்ளையாண்டானைத்தானே சொல்றே?... பார்க்க நல்லாதான் இருக்கான். படிச்சவன். பட்டணத்திலிருந்து வந்தவன்னு சொல்றே... பட்டணத்து பையன்னு அலட்டிக்காத நல்ல பிள்ளை — நம்ப மரகதத்துக்கு அவனை ஏன் பார்க்கக்கூடாது?...''

''மத்தவங்க போய் விழறதுக்கு முந்தி... நீ ஏன் உங்க அக்கா மகளுக்கு அவனை சம்பந்தம் பேசக்கூடாது?''

''கதிரேசனுக்குப் பின்னாடி சொத்து எல்லாம்... இந்த பிள்ளையைத்தான் சேரப்போகுது. படிப்பும், திறமையும்... நல்ல குணமும் சொத்துமா... இப்படிப்பட்ட ஒரு நல்ல இடம் சட்டுனு கிடைக்காது. உன் உறவுக்காரர் அந்த பெரிய தனக்காரர் மகளை இவனுக்கு கட்டிக்கொடுத்தா பொருத்தமா இருக்கும். நீ ஏதாவது ஏற்பாடு செய்யேன்...!''

...ஊரிலிருந்த பெண்களின் கண்களில் வரவேற்கத் தகும் தகுதி வாய்ந்த மாப்பிள்ளையாகத் தென்பட்டான்.

இடுப்பில் குடத்துடன் நதிக்கரைப் பக்கம் போன இளம் பெண்கள்... ஈர வேட்டியுடன் சித்தப்பாவுடன் சிரித்துப் பேசிக்கொண்டு வந்து கொண்டிருந்த அவனைக் கடைக்கண்ணால் பார்த்து... பெருமூச்செறிந்தனர்.

''இவனைக் கட்டிக்கப் போற மகராசி யாரோ?'' என்ற ஏக்கம் அவர்களுக்கு...

ஆனால் நரேந்திரன்... தன்னைச் சுற்றிலும் ஒரு இரும்பு வேலியை அமைத்துக் கொண்டவன் போல... யாரையும் அதிகம் நெருங்க விடாது... பட்டும் படாததுமாக வாழ்ந்து கொண்டிருந்தான்.

அந்த சமயந்தான்... அபிராமி ஒருநாள் சித்தப்பாவிடம் திடுக்கிடும் தகவலைத் தெரிவித்தாள்.

அவளது பேத்தி... பக்கத்து கிராமத்தில் வாழ்க்கைப் பட்டிருப்பவள் தாய்மையடைந்துள்ளாள். பேறுகாலம் நெருங்கி விட்டதால் கூட இருந்து உதவ வேண்டும்... தாயில்லாத பெண்ணைப் பாட்டிதானே அரவணைக்கணும்?

திகைத்துப் போய் விட்டார் கதிரேசன்...

'மறுபடி எப்போ திரும்பி வருவேம்மா?'' மெல்லக் கேட்டார்.

''எனக்கும் வயசாச்சு... குந்தி அள்ளித்தின்ன வேண்டிய நாளில் ஓடி அலைஞ்சு வேலை செய்ய முடியாது... ஏதோ உங்க உடம்பு நல்லாவரவரை இருக்கலாம்னு பல்லைக் கடிச்சுட்டிருந்தேன். பேத்தியைக் கவனிச்சு... அவபுருஷன் வீட்டுக்கனுப்பின பிறகு... என் கிராமத்தோட நான் கஞ்சியோ கூழோ குடிச்சுகிட்டு... திண்ணையிலே விழுந்து கிடக்கப் போறேன்...'' மிகவும் கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர்... அவள் தன் பெட்டி

படுக்கையுடன்... ஊருக்குக் கிளம்பிப் போய்விட்டாள்.

சித்தப்பாவைப் போல அந்த திருப்பத்தைக் கண்டு நரேந்திரன் கலங்கி விடவில்லை.

அவனது தாய் ரொம்பவே புத்திசாலி. ஆண்பிள்ளை என்று அவனுக்கு அதிகமான சலுகைகள் கொடுத்து வளர்க்கவில்லை.

பம்பாயின் பரபரப்பான வாழ்க்கையில் அவன் தன் தாயாருக்கு ஒரு பெண் மகவைப் போல... வீட்டு வேலைகளிலும் உதவ நேரிட்டது. அம்மா வியாதியாகப் படுத்து விட்டபோது சமையல் பொறுப்பு கூட அவன் தலையில்தான் விழுந்தது. ஓட்டலில் சாப்பாடு எடுத்துக் கொண்டு வாழ முடியாத நிலை... அம்மாவுக்கு பத்தியச் சாப்பாடு தயாரிப்பதிலிருந்து தன் வயிற்றுப் பாட்டை கவனிக்கும் வரை... அவனேதான் எல்லாவற்றையும் செய்ய நேர்ந்தது.

அந்தப் பயிற்சி இப்போது பெருத்த அளவில் உதவியது. அபிராமி புறப்பட்டுப் போன மறுநாளே விடியுமுன்பே குளித்துவிட்டு அடுப்பங்கரையில் ஆஜராகி விட்டான் அவன்.

அவசரமாக அவன் தயாரித்துப் பரிமாறிய உப்புமா... மிகவும் சுவையாகத்தான் இருந்தது.

பையனுக்கு பூரி உருளைக்கிழங்கிலிருந்து பிரியாணி வரை நன்றாகச் சமைக்கத் தெரிந்திருப்பதைக் கண்டு வியப்பில் மூழ்கிப் போனார் சித்தப்பா...

அன்று... பரோட்டாவையும்... குருமாவையும் கொண்டு வந்து தட்டில் பரிமாறிவிட்டு எதிரே உட்கார்ந்த இளைஞனைப் பரிதாபமாகப் பார்த்தார்.

இந்த நிலையில் இவனை நீடித்துத் தவிக்க விடுவது நியாயமா? அவரது அன்பு மனம் பாகாய்க் கரைந்தது.

படித்தவன் — பட்டணத்திலிருந்தவன் என்றாலும் பதவிசாகப் பழகுகிறான்... நாணயமாக உழைக்கிறான்...

என்பதற்காக - அவனை சமையல் வேலையிலும், ஈடுபடுத்தி சங்கடப்படுத்துவது முறையா? ஊகும்! இதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்ற உறுதி ஏற்பட்டது சித்தப்பாவுக்கு.

ஊரில் அவருக்கு மிகவும் நெருக்கமான நண்பர் துரைசாமியுடன் கலந்து ஆலோசித்தார்.

''இது என்னப்பா பெரிய சமாச்சாரம். பழவநல்லூர் பெரிய தனக்காரரோட சின்ன மகளை பேசி கட்டிவச்சுட்டாப் போச்சு! சரியான கல்யாண வயசு — நாளை வீணாக்காம சட்டுனு ஒரு முடிவு செய்துடு...'' உசுப்பி விட்டார்.

அன்று காலை நரேந்திரன் எழுந்து காப்பி தயாரிக்க சமையலறைக்குள் நுழைந்த போது சித்தப்பா இருமிக்கொண்டே பின்னால் வந்து நின்றார்.

''நரேந்திரா. இதுக்கெல்லாம் ஒரு முடிவு நான் எடுத்துட்டேன். கடையில் வேலை பார்க்கிற ஒரு ஆண்பிள்ளை நீ — கரண்டியைப் பிடிச்சுட்டு நிற்கிறதைப் பார்க்க எனக்கு வேதனையா இருக்கு...!''

''நம் வயத்துக்கு நாம சமைச்சுக்கிறோம் — இதிலே வேதனை என்ன சித்தப்பா?'' அவன் வெகுளித்தனமாக சிரித்தான்...

''எல்லாத்தையும் நீ ஒருத்தனே சமாளிக்க முடியாது. அதனாலே பொறுப்பைப் பகிர்ந்து கொள்ளரது நல்லது...!''

''என்ன சொல்றீங்க சித்தப்பா?''

''உனக்கு ஒரு நல்ல இடத்திலே பெண் பார்க்க உத்தேசித்துட்டேன். இன்னிக்கு மாலை... நல்ல நேரமா பார்த்து உன்னைக் கூட்டிக்கிட்டு பெண் வீட்டுக்கு வர்ரதா... சொல்லி அனுப்பிவிட்டேன். பெரிய இடத்து பெண்தான் — உன் படிப்புக்கும் தகுதிக்கும் ஏத்தவதான். இன்னிக்கு தோட்ட வேலையை விட்டுட்டு... மாப்பிள்ளையா லட்சணமா நீ பெண் பார்க்க என்னோட வரணும்...'' சிரித்தார் மகிழ்ச்சியுடன்.

நரேந்திரன்... அதிர்ந்து போனான். அவனுக்குக் கல்யாணமா? கங்காவைத் தவிர, அவன் மனதில் இன்னொரு பெண்ணுக்கு இடமா?

''என்னப்பா அப்படி திகைச்சுப் போய் நிக்கிறே? —கிராமத்துப் பெண் படிப்பு அறிவில்லாம இருப்பான்னு நினைக்காதே — பழவநல்லூர் பெரிய தனக்காரர் தமது மூன்று பெண்களையும் பக்கத்து டவுனுக்கு அனுப்பி படிக்க வச்சிருக்கார்- முதல் ரெண்டு பேரையும் நல்ல இடத்தில் கட்டிக்கொடுத்து விட்டிருக்கார். நாம் பார்க்கப் போறது அவரது மூணாவது பெண். கிடைக்கக்கூடாத பெரிய இடம். இதை நழுவவிடக் கூடாது. பெண் பார்க்க அழகா இருப்பான்னு கேள்வி—!'' சித்தப்பா மகிழ்ச்சியுடன் புன்முறுவலித்தார்.

கால்கள் தரையில் பதிந்து விட்ட உணர்வில் தயங்கி நின்றான் அவன்.

இப்போது அவன் என்ன பதில் சொல்வான்?

எனக்குக் கல்யாணம் வேண்டாம் என்று ஒரேயடியாக மறுத்தால்...

இத்தனை வசதிகள் கொடுத்து பிற்காலத்தில் சொத்தைக் கொடுக்க உத்தேசித்து சொந்தப் பிள்ளைபோல கவனிச்சுக் கொண்டும்... தன் பேச்சை மதிக்கவில்லை என்று சித்தப்பா மனத்தாங்கல் அடைந்தால்?

சரி என்று தலையை ஆட்டிவிட்டு... பெண் வீட்டாருக்கு அவனைப் பிடித்துப் போய் கல்யாணம் கூடிவிட்டால்?...

இன்னொரு பெண்ணுடன் அவன் இல்வாழ்க்கை நடத்த முடியுமா? சித்தப்பாவிற்கும் — அவர் தரப்போகும் சொத்துக்கும் அடிமை ஆவதா?...

''இதிலே நீ யோசிக்கிறதுக்கு எதுவும் இல்லே —சாயங்காலம் மாப்பிள்ளையா அழகா ஜம்முனு கிளம்பத் தயாரா இரு...!'' சித்தப்பா சிரித்துக் கொண்டே அவன் தந்த காப்பி டம்ளரை கையில் எடுத்துக் கொண்டார்.

11

பழவநல்லூர் பெரிய தனக்காரர் வீட்டு வாசலில் வில் வண்டி வந்து நின்றதும் தெருவில் பல தலைகள் தெரிந்தன.

''அவரது கடைசி மகள் மாலதியைப் பெண் பார்க்க கலியநல்லூரிலிருந்து கடைக்காரர் கதிரேசன் வந்திருக்கார். அவரது அண்ணன் மகன்தான் மாப்பிள்ளையாம். பட்டணத்திலே படிச்ச பையன்'' என்று முன்னதாகவே செய்தி தம்பட்டமடிக்கப்பட்டிருந்தது.

அந்த பட்டணத்துப் பையன் எப்படியிருக்கிறான் என்று அறிய தெருப்பெண்கள் எட்டிப் பார்த்தனர்.

''பெரிய தனக்காரர் அப்படி என்ன நம் ஊரில் இல்லாத பெரிய வரனைத் தேடிப் பிடிச்சிருக்கார்...'' என்று சிறிது பொறாமையுடன் வெளியே வந்து வேடிக்கை பார்த்தனர் ஆண்கள் சிலர்.

மாடியறையிலிருந்த மாலதியிடம் தோழிகள் மூச்சு இறைக்க ஓடி வந்தனர்.

''அவங்கள்ளாம் வந்துட்டாங்க. மாப்பிள்ளை எப்படி இருக்கார்னு இப்பவே நல்லா பார்த்து வச்சுக்கோ'' உசுப்பி விட்டனர்.

மாலதி ஜன்னல் வழியே கீழே பார்த்தாள். பழுப்பு வண்ண சபாரி சூட்டில் கச்சிதமாகத் தெரிந்த நரேந்திரனைக் கண்டதும் அவளது நெஞ்சு மகிழ்ச்சியில் வேகமாகத் துடித்தது. மாப்பிள்ளையைச் சற்று தொலைவில் பார்த்த அளவிலேயே அவளுக்குப் பிடித்து விட்டது.

தட்டில் வைக்கப்பட்டிருந்த மல்லிகை சரத்தை எடுத்து ஆசையுடன் தலையில் சூட்டிக் கொண்டாள். கண்ணாடிமுன்

நின்று தன்னை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டாள்.

அவளது மூத்த இருசகோதரிகளைக் காட்டிலும் அவள் நல்ல நிறம். ஒடிய உயரமாக இருந்தாள். கண்களும், மூக்கும் கதை சொல்லின. அவர்களை விட அதிகம் படித்தவள். வீணை வாசிக்கத் தெரிந்தவள் என்ற கூடுதலான ஒரு தகுதி... பெண்ணையும் - அவள் மேல் போட்டிருக்கும் பொன்னையும் கொடுத்து, ஒரு பகுதி சொத்தையும் பெரிய தனக்காரர் தந்துவிடப் போகிறார். அவளைக்கட்டிக் கொள்ள எவனுக்கு கசக்கும்...

கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு தன்னுள்ளே மெல்ல சிரித்துக் கொண்டாள் அவள்.

அவளது அத்தை மகள் அமெரிக்காவில் தன் கணவனுடன் வாழ்வது போல அவளும் வெளிநாட்டு மாப்பிள்ளைக்குத்தான் மாலையிட விரும்பினாள். பக்கத்து கிராமத்திலிருந்து பையன் வருகிறான் என்ற போது பட்டிக்காட்டிலேயா அப்பா மருமகனைத் தேர்ந்தெடுக்கப் போகிறார் என்று உள்ளூர சங்கடப்பட்டுக் கொண்டிருந்தாள்.

நரேந்திரனைப் பார்த்த அடுத்த நொடி அவளது அமெரிக்கா ஆசை அடியோடு மறைந்து போனது. கலிய நல்லூரிலேயே கால முழுவதும் அவனுடன் கிராமத்துப் பெண்ணாக வாழ்ந்து விட களிப்புடன் தீர்மானித்தாள்.

''இந்த ரோஜா வண்ண சைனா சில்க்கில் நீ எப்படி இருக்கிறே தெரியுமா... நம்ம தோட்டத்திலே பூத்திருக்கிறப் புத்தம்புது மலர் போல்...!'' செல்லமாகக் கன்னத்தைக் கிள்ளினாள் தோழி ஒருத்தி...

''உன் வருங்கால மாமனார் வீட்டை நல்லா பார்த்துக்கோ — இந்த வட்டாரத்திலேயே பெருத்த பணக்காரர்... கிராமத்திலே ரொம்ப செல்வாக்கு...! இந்த இடம் அமைஞ்சுட்டா... நீ பெருத்த அதிர்ஷ்டக்காரன். சமீபத்திலே இவர் டவுனிலே ஒரு மாபியா பாரக் கடையைத் திறந்திருக்கார்.

ஒரு சமயம் தன் கடைசி மருமகனுக்கு அதைக் கொடுத்து உதவலாம்னு உத்தேசம் இருக்கு'' — சித்தப்பா கிசுகிசுத்தார்.

''சித்தப்பா, நமக்கு இருக்கிற இரண்டு கடைகளைக் கவனிக்கவே நேரம் போதலை. இன்னும் வேறே பொறுப்பு எதுக்கு — மேலும் என்னைப் பணத்துக்காக நான் வித்துக்க முடியுமா?'' நரேந்திரன் மெல்லக் கேட்டான்.

தெருவுக்குள் வண்டி புகுந்ததுமே அவன் மனம் சஞ்சலத்தில் தவிக்கத் தொடங்கியது.

''பெரிய இக்கட்டில் வந்து சிக்கிக் கொண்டு விட்டோமே!'' என்றதொரு திகிலுடன் அவன் வண்டியை விட்டு இறங்கி நின்றான்.

''வாங்கோ!'' கனத்த குரலில் வரவேற்றுக் கொண்டு கை கூப்பியபடி வாசலுக்கு வந்த வைர மோதிரக்காரரை நிமிர்ந்து பார்த்தான்.

பட்டுக்கரை வேட்டி — மல்ஜிப்பா — சரிகை உருமால் அலங்காரத்தில் வாட்டசாட்டமாக நின்றார் பெரிய தனக்காரர்.

கர்வம் மிதந்த அவரது கண்களை நேருக்கு நேர் சந்தித்த போது அவன் மனதில் ஒரு மிரட்சி ஏற்பட்டது.

இவ்வளவு தூரம் வந்துவிட்டு பெண்ணை பிடிக்கவில்லை என்று உதறிவிட்டு ஓடினால் ஆசாமி அந்த தோல்வியை ஏற்கமாட்டார் போல பிடிவாதம் ததும்பிய அவரது முகத்தைக் கண்டு அரண்டு போனான் அவன்.

பணம் — பதவி என்பதற்கு ஆசைப்பட்டு சித்தப்பா ஆழம் தெரியாத ஒரு இடத்தில் காலை விட்டிருக்கிறாரே?... என உள் மனதில் ஒரு உளைச்சல் ஏற்பட்டது.

சித்தப்பாவின் வீட்டைப் போல அதுவும் கிராமத்து பாணியில் கட்டப்பட்ட வீடுதான் — ஆனால் இரண்டு மடங்கு பெரியதாகக் காணப்பட்டது. வாசலில் தேக்கு மரக்கதவிலே பெங்காரம் அதிகம் தெரிந்தது. நடையும், கூடமும் சிவப்பு

சிமெண்ட்டில் பளபளத்தது. கால் செருப்புகளை நடையில் கழற்றி வைத்து விட்டு மெல்ல சித்தப்பாவின் பின்னால் கூடத்திற்குள் நுழைந்தான்.

அங்கே பலர் உட்கார பிரம்பு நாற்காலிகள் தயாராகப் போடப்பட்டிருந்தன. மாலைநேரம் மங்காத போதிலும் குழல் விளக்குகள் பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தன. சந்தனமும் — மல்லிகையும் மணத்தை வாரி வீசிக்கொண்டிருந்தன.

பெரிய தனக்காரரின் உறவினர் — நண்பர்கள் சிலர் வந்து கலந்து கொள்ளவே கூடம் நிரம்பி வழிந்தது. பேச்சும் சிரிப்புமாக பெண் பார்க்கும் படலம் ஆரம்பமாகியது.

பாதாம் அல்வா, ஓமப் பொடி கொண்ட தட்டுகளை வேலையாட்கள் வந்தவர்களுக்குப் பரிமாறினார்கள்.

பசும் பாலில் கலந்த காப்பியைப் பளபளத்த ஸ்டீல் தம்ளர்களில் நிறைத்து ஆட்கள் வேகமாக விநியோகித்தனர்.

புடவை சரசரக்கும் ஓசையுடன் — வளையல் சப்தமும் மெல்ல எழுந்து மூக்கில் மோதிய மல்லிகையின் நறுமணமும் அவனைத் திரும்பிப் பார்க்கச் செய்தது.

பெரிய தனக்காரர் மனைவி காஞ்சிபுரப் பட்டும் நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டுமாக மெல்ல முன்னால் வர — இரண்டு பெண்கள் இடையே மாலதி தங்கப் பொம்மை போல தயக்கமாக வந்து நின்றாள்.

'பெரியவருக்கு வணக்கம் செய்யம்மா!' வந்தவர்களில் ஒருவர் குரல் கொடுக்க... மாலதி முன்னால் வந்து கதிரேசன் முன் குனிந்து பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டு நிமிர்ந்தாள்.

''நல்லா பார்த்துக்கோம்மா... பிறகு தவிக்கத் தேவையில்லை!'' வீட்டிற்கு வந்திருந்த வயதான பெண்மணி உரிமையோடு கேலி செய்ய — ''பையனும் நல்லா பெண்ணை இப்பவே பார்த்துக்கட்டும். பிறகு அவனும் கவலைப்பட வேண்டாம்!'' என்று ஆண்கள் பகுதியிலிருந்து ஒருவர் குரல்

கொடுக்க... வீடு சிரிப்பொலியில் குலுங்கியது.

முகம் சிவந்து போன மாலதி... அவனை ஆவலுடன் உற்றுப் பார்த்தாள். வெட்கத்திலே காதும், மூக்கும் சூடாகிப் போன நரேந்தினும் அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

பெண்ணின் அழகைப் பற்றி குற்றம் சொல்ல முடியாது —அந்தஸ்தைப் பற்றியும் குறை காணமுடியாது. படிப்பைப் பற்றி கோளாறு சொல்ல முடியாது... ஆனால்... இவைகள் எல்லாம் அவனது உள்ளத்திலே அட்டையாக ஒட்டிக் கொண்டிருக்கும்... கங்கா மேல் கொண்ட அன்பை அகற்றிவிட முடியுமா?...

''பெண் நல்லா பாடுவா — வீணை வாசிப்பா...'' கர்வம் ததும்பிய கனமான குரலில் கூறிய பெரிய தனக்காரர் தமது பிடி மீசையை ஆசையாகத் தடவிக் கொண்டார்.

''எங்கள் பையன் மட்டும் சோடையில்லை. எம்.ஏ. படிச்சவன். வியாபார நுணுக்கம் தெரிஞ்சவன். அடக்கமான பிள்ளை. வெத்திலை பாக்கு போடும் பழக்கம் கூட கிடையாது!'' — சித்தப்பா பெருமையோடு சொல்லிக் கொண்டார்!

''சரி இன்னும் ஏதாச்சும் இரண்டு பேருக்கும் தெரியுமா —அதை சபை முன்னாலே தெரிவிச்சுட்டா நல்லதாச்சே'' வேடிக்கையாக ஒருவர் கேட்க மறுபடியும் கூடத்திலே ஒரே சிரிப்பு.

''எங்க பெண் நல்லா தைப்பா, வீட்டுக்கு வேண்டியதை அவளே மிசினில் தைத்து விடுவா — பூ வேலை செய்யக்கூட கத்துகிட்டிருக்கா...!'' பெரிய தனக்காரர் மனைவி மெல்லிய குரலில் பெருமை பொங்கக் கூறினாள்.

''ஒரு அவசரம் போதுக்கு எங்க பிள்ளை அடுப்பங்கரையிலே பூந்து நாமெல்லாம் அசந்து போறாப்பல நல்லாவே சமைப்பான். ஆச்சரியமா இருக்கா... நாளைக்கு

உங்க பெண் நம்ப வீட்டுக்கு வந்ததும்... ஒருநாள் அவள் மிசின்கிட்டே உட்கார்ந்து தைக்கிறதைப் பார்த்தா போதும் உடனே தைக்கவும் கத்துக் கொண்டு விடுவான் — கண் பார்த்தால் கை செய்யும். அப்படி ஒரு திறமை இவனுக்கு உண்டு...!'' சித்தப்பா பெருமிதத்துடன் பேசினார்.

''எங்க பெண்ணுக்கு வியாபாரத்தைப் பற்றி கொஞ்சம் கோடி காட்டி விட்டா போதும்... பின்னாடி பல யோசனைகள் சொல்லிக் கொடுக்கிற அளவுக்கு கத்துக் கொண்டு விடுவா. ரொம்ப புத்திசாலி!'' பெரிய தனக்காரர் சிரித்தபடி தம் மகளின் பிரதாபத்தை விளக்கினார்.

''சரி...! ஒத்துக்கிறோம். ரெண்டு பேரும் பார்க்க நல்லா இருக்காங்க, படிச்சவங்க, புத்திசாலிகள். அவங்களுக்கும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்ததுமே பிடிச்சிருக்காப்பல தோணுது... அதனாலே நாம பெரியவங்க மத்ததைப் பேசலாமா?'' என்று கூறிவிட்டு ஒரு வயதானவர் எழுந்தார்... மற்றவர்களும் எழுந்திருக்க... பெரிய தனக்காரர் தமது சில உறவினர் நண்பர்களுடன்... ஒரு பக்கமாக நாற்காலிகளை இழுத்துப் போட்டு உட்கார சித்தப்பா மட்டுமே அவர்களுடன் கூட கலந்து கொண்டார். மற்றவர்கள் விடை பெற்றுக் கொண்டு நகர்ந்து விட்டனர்.

தன்னந்தனியே விடப்பட்ட நரேந்திரன் மெல்லத் திரும்பிப் பார்த்தான். மாலதியும் மற்ற பெண்களும் அங்கிருந்து அகன்று விட்டனர்.

கூடத்தில் ஒரு புறமாக ஒதுங்கிக் கொண்டிருந்த அவர்களிடமிருந்து பணம், நகைகள் — சீர்... கல்யாணக் கச்சேரி என்ற வார்த்தைகள் துண்டு துண்டாகக் கேட்டன. சித்தப்பா அவனை வைத்துக் கொண்டு விலை பேசுகிறாரே என்று அவனுக்கு அவமானமாக இருந்தது. இந்த பேச்சு வார்த்தை ஒரு முடிவுக்கு வந்து வீட்டுக்கு கிளம்ப மாட்டோமா என்று சலிப்பாகவும் இருந்தது.

விளக்கு வைக்கும் தருணத்திலே ஒரு வழியாக அவர்கள் வெற்றிலை பாக்கு முதலிய மரியாதைகளைப் பெற்றுக் கொண்டு கிளம்பினார்கள்...

வண்டி தெருவைவிட்டு... சாலைக்குள் புகுந்ததும் சித்தப்பா மகிழ்ச்சியுடன் அவன் பக்கம் திரும்பினார்.

''பொண்ணு பிடிச்சிருக்குன்னு நினைக்கிறேன் — எனக்கு பிடிச்சுப் போச்சு — நமக்கு ஏத்த இடம். மத்த சங்கதிகளிலும் பெரிய தனக்காரர் தாராளமாக நடந்துப்பார்னு தெரியுது!''

''மத்த சங்கதின்னா என்ன சித்தப்பா...?'' கேட்டான் நரேந்திரன் ஆவலை அடக்க மாட்டாது.

''வரதட்சிணை — சீர்... இத்யாதிகளைப் பத்திதான் சொல்றேன். எல்லாம் நாம் கேட்கிறபடி செய்துடறதாக ஒப்புக் கொண்டார். ஒரு நல்ல நாள் பார்த்து நிச்சயத்துக்கு ஏற்பாடு செய்யப் போறாங்க... பிறகு சீக்கிரமா ஒரு முகூர்த்தத்திலே கல்யாணத்தை நாம் சிறப்பா எடுத்து செய்துடணும் —அவ்வளவுதான்!''

''வரதட்சணையா? சித்தப்பா... கேட்கவே அசிங்கமா இருக்கே?'' தோள்களைக் குலுக்கினான் நரேந்திரன்.

''மத்த பெண்களுக்கு ஏராளமான வரதட்சணை கொடுத்துத்தான் கட்டிக் கொடுத்திருக்கிறார் பெரிய தனக்காரர். எனக்கு இந்த சங்கதி பிடிக்காததுதான் — ஆனால் வரதட்சணை வேண்டாம்னா ஏதோ உனக்கு ஒரு குறை உடம்பிலே இருக்குதுன்னு நினைச்சுக்குவாங்க. அதுக்காகவாவது ஏதோ ஒரு தொகையை வாங்க வேண்டியிருக்கே!''

''சித்தப்பா... நீங்க சிரமப்பட வேண்டாம் — எனக்கு இந்த கல்யாணத்திலே விருப்பம் இல்லே?''

திடுக்கிட்டுப் போனார் கதிரேசன்... நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''நரேந்திரா, இப்ப வந்து சொல்றியே நியாயமா? பெண் பார்க்கிறதுக்கு முந்தியே சொல்லியிருந்தா நாம் அங்கே போய்

இருக்கத் தேவையில்லை? பெரிய தனக்காரர் சிங்காரம் ரொம்ப பொல்லாதவர்... எல்லாம் தீர்மானமான பிறகு எங்களுக்கு பிரியமில்லைன்னு ஒதுங்கினா மனுஷன் நம்மை சும்மா விட மாட்டான் — அவனால் இந்த அவமானத்தைத் தாங்க முடியாது. இது பெரும் கவுரவப் பிரச்சனையாச்சே... ஆமாம் நான் தெரியாமத்தான் கேட்கிறேன் — உனக்கு அந்தப் பெண்ணை ஏன் பிடிக்கலை?''

'என் மனதை வேறு ஒருத்தி கொள்ளை கொண்டு விட்டிருக்கிறாள்!' சொல்லத் துணிவில்லாது விழித்தான் நரேந்திரன்.

''புத்தி கெட்டத்தனமா பேசாதே. நல்ல இடம், நல்ல அழகான பெண். அடக்கமா தெரியறா... நான் முடிவு செய்துட்டேன். நரேந்திரா... என் பேச்சைக் காப்பாத்து. அதுதான் நான் உன்கிட்டே கேட்கிற வேண்டுகோள்!'' என்றார். அவர் குரலில் ஆதங்கமும் துயரமும் சிறிது கோபமும் தொனித்தன.

''சித்தப்பா!'' — அவன் மேலே பேசுமுன் குறுக்கிட்டார்.

இதில் மறுக்கவோ — வெறுக்கவோ ஒண்ணும் இல்லை. எல்லோரும் கூடி முடிச்ச சங்கதி. அடுத்த மாதம் முதல் வெள்ளிக்கிழமை நிச்சயதார்த்தம் வச்சுக்கிறதா ஏற்பாடு. நம் வீட்டில் பெண்கள் யாரும் இல்லாததால் நானே டவுன் பக்கம் போய் புடவை — நகை இத்யாதிகளை வாங்க வேண்டியிருக்கும். உன் சித்தியோட நகைகள் சிறிது இரும்பு பீரோ லாக்கரில் இருக்கு. அதுகளை வச்சு நிச்சயத்தை ஓட்டி விடலாம். பெரிய தனக்காரர் மகளாச்சே புதுசா ஒரு மோதிரமாவது வாங்கிப் போடாட்டா மரியாதையா இருக்காதே...!''

''சித்தப்பா! சித்தப்பா!'' என்று அலற வேண்டும் போல ஆத்திரமும், துயரமும் நெஞ்சை அடைக்க... பேச முடியாது மவுனமாகி விட்டான் அவன்.

சித்தப்பா என்ன காரியம் செய்து விட்டார். அவனைக் கலந்து கொள்ளாது கல்யாணம் வரை போய் விட்டாரே... ஐயோ! அவன் என்ன செய்வான்... மனம் வழி நெடுகிலும் புலம்பியது...

12

அதற்குப் பின்னர் நரேந்திரன் நிம்மதியை இழந்து விட்டான் — உணர்வுகளின் இறுக்கத்தில் தலை வெடித்து விடும் போன்ற வேதனையில் வாடிக் கொண்டிருந்தான்.

சித்தப்பாவுக்கு ஏன் இந்த அவசரம்? அவனை நன்றாகக் கலந்து ஆலோசிக்காது வாக்கு கொடுத்து விட்டாரே?

இப்போது அவன் என்ன செய்ய? கடையில் வேலை செய்யும் போதும் — தோட்டத்தை மேற்பார்வை செய்யும் போதும், வீட்டிலே உணவு தயாரிக்கும் சமயமும் தன் உள்ளத்தைக் கேள்விகளால் குதறிக் கொண்டிருந்தான்.

எப்படியெல்லாம் யோசித்தும் நாலாபுறமும் அவனை ஒரு வலுவான இரும்புச் சுவர் சூழ்ந்து கொண்டு விட்டது போன்றும் அந்த சிறையினின்று நகர முடியாது போன்றும் ஒரே மலைப்பாக இருந்தது.

ஆனால் சித்தப்பா மிகவும் உற்சாகமாக இருந்தார். பெரிய தனக்காரர் வீட்டு சம்பந்தம் கிடைத்து விட்டதே என்று பூரித்துப் போனார். அண்ணன் உயிருடன் இருக்கும் போது கவனிக்காது அசட்டையாக இருந்து விட்ட தவறுக்கு ஈடு செய்வது போல நரேந்திரனை மகனாக ஏற்றுக் கொண்டு அவனுக்கு திருமணம் செய்து வைத்து வசதியான வாழ்க்கை அமைத்துத் தந்துவிட வேண்டுமென்று அவர் மிகவும் விரும்பினார்.

அடுத்த சில நாட்கள் கடையை கவனிக்கும் பொறுப்பை

நரேந்திரனிடம் கொடுத்து விட்டு பக்கத்து டவுனுக்கு அடிக்கடி போய் வந்து கொண்டிருந்தார்.

ஒருநாள் மாலை அவர் வீட்டுக்குத் திரும்பிய போது நரேந்திரனிடம் ஒரு கடித உறையைக் கொடுத்தார்.

''சித்தப்பா! இது என்ன கடிதம்!'' என்று ஆவலுடன் அவன் கேட்டதும் கதிரேசன் மெல்லச் சிரித்தார்.

''எடுத்துப் பிரித்துப் பாரேன்!'' என்றார் மர்மமாக...

உறையினின்று தடிமனான ஒரு கடிதத்தை இழுத்தெடுத்தான் அவன்.

''என்ன சித்தப்பா — இது உங்க உயில் போல இருக்கே. நான் அவசியம் இதை பார்க்கணுமா?'' தயக்கத்துடன் கேட்டான்.

''அவசியம் நீ படிக்கணும் — பிறகு இதை உன்கிட்டே பத்திரமாக வச்சுக்கணும். எல்லாத்தையும் காலா காலத்தில் செய்யணும்னு நான் ரொம்ப விரும்பறேன். அந்த சிங்காரம் உன்னைப் பத்தி தாழ்வா நினைச்சுக்கக் கூடாது. காசு பணம் இல்லாத வெத்துப் பயலுக்கு பெண்ணைக் கட்டிக் கொடுத்து அவன் தகுதியைத் தானே உயர்த்தி விட்டதாக அந்த பெரிய தனக்காரர் பெருமைப்பட்டுக்கக் கூடாது... அதுக்காகத்தான் இந்த காரியத்தை செய்தேன்...!'' என்றார் கதிரேசன்.

நரேந்திரன் வேகமாக அவரது உயிலைப் படித்தான்.

தமக்குப் பின் தமது சொத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு உள்ளூர் கோயில் திருப்பணிகளுக்கும், கிராமத்து பள்ளிக் கூடத்தின் வளர்ச்சிக்கும் ஒதுக்கிவிட்டு மீதி எல்லாவற்றையும் அவனுக்கு எழுதி வைத்திருந்தார்.

''சித்தப்பா என்ன காரியம் இது? எனக்கு சம்பளம் கொடுத்து சாப்பாடு போட்டு காப்பாத்துகிறீர்களே அது போதாதா?'' திகைப்புடன் கேட்டான்.

''போதாது. நான் திடீர்னு போய் விட்டால் மேலே

தொடர்ந்து கடைகளை நடத்திக் கொண்டு போக நீ சிரமப்படக்கூடாது. சட்டப்படி நீதான் என் வாரிசுன்னு ஒழுங்கு செய்திருக்கேன். அவ்வளவுதான்'' என்றார்.

நெஞ்சுருகிப் போனான் நரேந்திரன்.

அவரை அண்டி அங்கே வாழ வந்த போது அவன் அதிகம் எதுவும் எதிர்பார்க்கவேயில்லை. இருக்க இடம் தந்து... ஒரு வேலை தேடி உதவுவார் என்ற ஒரே ஒரு எதிர்பார்ப்புடன் வந்தான்.

இடம் கொடுத்து — உணவு தந்து — வேலை தந்து... இப்போது சொத்துக்களையும் தந்துவிட ஏற்பாடு செய்து விட்டாரே இப்போது அவரது பேச்சுக்குக் கட்டுப்பட வேண்டியது நிர்பந்தமாகி விட்டது.

மறுப்புத் தெரிவித்தால் நன்றி கெட்டவனாகிப் போவான். எத்தனை பெரியதொரு சங்கடத்தில் சிக்கி விட்டிருக்கிறான்?

''நன்றி சித்தப்பா... எனக்கு வேறே என்ன சொல்லறதுன்னே தெரியலை...!'' தழதழத்தான்.

''ஒண்ணும் சொல்லத் தேவையில்லை. நான் பார்த்து முடிச்சிருக்கிற சிங்காரத்தின் பெண்ணைக் கட்டிக்கிட்டு சுகமா இருந்தா போதும்!

அப்படியென்றால் இனி அவன் தப்ப மார்க்கம் இல்லையா? கவலையில் மூழ்கிப் போனான்.

அடுத்த சில நாட்களுக்குப் பின் ஒருநாள் மாலை வெளியிலிருந்து திரும்பிய சித்தப்பா மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். நடையில் கால் செருப்புகளைக் கழற்றிவிட்டு சாய்வு நாற்காலியில் மெல்ல சாய்ந்து கொண்டார்.

'என்னப்பா நரேந்திரா... உள்ளே என்ன வேலை செய்து கிட்டிருக்கே? இப்படி வா!'' பரிவுடன் அதட்டினார்.

காப்பியைக் கலந்து எடுத்துக் கொண்டு அவர் அருகே வைத்தான் நரேந்திரன்.

'இந்த வேலை இன்னும் சில நாட்கள்தான். அடுத்த மாசம் பத்தாம் தேதி பெரிய தனக்காரர் நிச்சயத்துக்கு ஏற்பாடு செய்துட்டார். இப்போ நான் அங்கே அவர்கிட்டே பேசி முடிவு செய்துட்டுதான் வரேன். வர வெள்ளிக்கிழமை நிச்சயப் பத்திரிக்கையை அவர் அச்சுக்கு அனுப்பப் போறார். நாமும் நம்ப பக்கத்து முகூர்த்தப் பத்திரிக்கையை சீக்கிரம் அச்சடிக்க அனுப்ப வேண்டாமா... வர வழியிலே நம்ம கீழ்த்தெரு ஜோசியர்கிட்டே கேட்டுட்டுதான் வந்திருக்கேன். வர மாசம் பதினைஞ்சாம் தேதி முகூர்த்த நாளாம். நாளைக்கு அவரே நல்ல நேரம் பார்த்து பத்திரிகை எழுத இங்கே வரதாக சொல்லியிருக்கார்...'' படபடவென்று மகிழ்ச்சியுடன் பேசினார் கதிரேசன்.

திடுக்கிட்டுப் போனான் நரேந்திரன்.

யாரோ வலுவான சங்கிலியால் அவனைக் கட்டிவிட்டது போன்றதொரு பயங்கர உணர்வில் அவன் அதிர்ந்து போய் விட்டான்.

பெண்களைத்தான் சில சமயம் வற்புறுத்திக் கட்டிக் கொடுக்கிறார்கள். ஆண்களுக்கும் அந்த நிலையா?

சமூகத்திற்கு பயந்து பெண், வற்புறுத்தலை ஏற்று கழுத்தை நீட்டுகிறாள். அவன் ஒரு ஆண் மகன்... வற்புறுத்தலுக்கு அடிபணியத் தேவையில்லையே எதற்காகத் தன்னை அவன் பலி கொடுத்துக் கொள்ள வேண்டும்.

சித்தப்பாவுக்கு நன்றியாக இருக்க வேண்டும் — அதற்காக அவன் தன்னை நாசம் செய்து கொள்ள முடியாதே, வங்கியில் உள்ள தன் சேமிப்பை எடுத்துக் கொண்டு சித்தப்பாவுக்கு விவரமாக ஒரு கடிதம் எழுதி அதில் தன் மன நிலையை தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு... ஓசைப்படாது இரவு ரயிலில் கிளம்பி... ஊரை விட்டு ஓடிவிட வேண்டியதுதான் சரியான மார்க்கம்.

''என்ன யோசிக்கிறே?... டவுனிலிருந்து வர வழியில உனக்கு அல்வாவும், கார பக்கடாவும் வாங்கிட்டு வந்திருக்கேன். காப்பியோட சாப்பிடலாம் உட்கார்! என்று உபசரித்தார் சித்தப்பா.

அல்வா துண்டம் வேப்பங் காயாகத் தொண்டையில் கசந்து வழிந்தது.

அடுத்த நாளே அவன் தன் தீர்மானத்தை நிறைவேற்ற எண்ணியபடிதான் படுக்கச் சென்றான்.

எப்படியாவது இந்த திருமணத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற நினைவில் அமைதியடைந்த வனாக... முதல் முதலாக சில நாட்களுக்குப் பின் அவன் நன்றாக ஆழ்ந்து உறங்கிப் போனான்.

நடு இரவின் போது... சித்தப்பாவின் அறையிலிருந்து முனகல் சத்தம் கேட்டது. திடுக்கிட்டு விழித்துக் கொண்டான். வேகமாக அவரது அறைக்குள் புகுந்து விளக்கை எரிய விட்டான்.

சித்தப்பா எழுந்து படுக்கை மீது உட்கார்ந்திருந்தார். தலைக்கு மேலே மின் விசிறி சுழன்ற போதிலும் அவர் நெற்றியில் வியர்வை பூத்து காதோரங்களில் வழிந்து கொண்டிருந்தது. முகம் வெளேர் என்று தெரிந்தது — மூச்சுவிட முடியாது திணறிக் கொண்டிருந்தார்.

''என்ன சித்தப்பா? என்ன ஆச்சு?'' பதற்றமாகக் கேட்டான். ஓடி வந்து அவரைத் தாங்கிக் கொண்டான்.

''நரேந்திரா! எனக்கு நெஞ்சை வலிக்கிறது. முன்னே இப்படித்தான் ஒரு தடவை நெஞ்சுவலி வந்தது. டாக்டர் பார்த்துட்டு லேசா மாரடைப்பு வந்திருக்குன்னு சொன்னார்... இப்போ வலி ரொம்ப அதிகமா இருக்கு'' திக்கித் திணறினார்.

நரேந்திரன் எச்சிலை விழுங்கிக் கொண்டான். அம்மா பட்ட அவஸ்தை ஞாபகத்திற்கு வந்தது. அடி வயிற்றில்

சில்லென்ற உணர்வு தாக்க... ஓடிச்சென்று டம்ளரில் நீர் முகந்து வந்து சாப்பிடக் கொடுத்து உபசரித்தான்... முகத்தை துவாலையால் துடைத்து விட்டான். மெல்ல அவரைப் படுக்கையில் சாய்த்துவிட்டு, "கொஞ்சம் பொறுத்துக்கோங்க சித்தப்பா... டாக்டரைக் கூட்டிகிட்டு வரேன்!" என்றபடி வாயிற் கதவைச் சாத்திக் கொண்டு ஸ்கூட்டரில் விரைந்தான். கொஞ்ச நேரத்தில் டாக்டருடன் வந்தான். ஆனால் பயன்?

அவன் உதவியுடன் வருவதற்குள் சித்தப்பா கதிரேசனது உயிர் பிரிந்து விட்டிருந்தது.

உண்மையா? சித்தப்பா இறந்து விட்டாரா? என்று தன்னையே பலமுறை கேட்டுக் கொண்டு... படுக்கையின் விளிம்பின் மேல் அதிர்ச்சியுடன் செய்வதறியாது... சிறிது நேரம் உட்கார்ந்திருந்தான்.

விடிந்ததுமே... அந்த செய்தி தெரு முழுவதும் பரவி விட்டது. வருங்கால சம்பந்தி சிங்காரம் தமது நண்பர்களுடன் வந்து சேர்ந்து விட்டார்.

கதிரேசனது இறுதிக் காரியங்கள் துரிதமாக நடந்தேறின.

சித்தப்பா இல்லாத வீடு வெறுமையில் மூழ்கி விட்டதை உணர்ந்து அவன் வேதனைப் பட்டான். அவரை விட்டு ஓட முயலுமுன்பே அவர் அவனை விட்டுப் போய்விட்டது அவனுக்கு மெத்த அதிர்ச்சியாகத்தானிருந்தது. மிக்க துயரமாகவும் இருந்தது.

சித்தப்பா மறைவினால் நடக்கவிருந்த சுபகாரியத்தைக் கொஞ்ச காலத்திற்குத் தள்ளிப் போட வேண்டியிருப்பதாக சிங்காரத்திடமிருந்து அவனுக்கு செய்தி வந்தபோது அவனுக்கு விழிப்பு ஏற்பட்டது.

இதைவிட ஒரு வசதியான சந்தர்ப்பம் அவனுக்கு கிட்டுமா? மெல்ல இந்தத் தளையிலிருந்து அவன் விடுவித்துக் கொள்ள வேண்டும் என்று ஒருநாள் காலை பரபரப்புடன் ஒரு கடிதம் எழுதினான்.

''அன்புடைய பெரிய தனக்காரர் திரு. சிங்காரம் அவர்களுக்கு பணிவுடன் எழுதிக் கொள்ளும் கடிதம். எனது அருமை சித்தப்பா திடீரென்று மாரடைப்பால் இறந்து போனதினால் நான் மிகவும் துயரவசப் பட்டிருக்கிறேன். இந்த மனநிலையில் என்னால் தற்சமயம் கல்யாணம் செய்து கொள்ள விருப்பம் சிறிதும் இல்லை. எனவே தாங்கள்... தங்களது மகளுக்கு வேறு இடத்திலே முடிவு செய்து கொள்வது நலம் என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்... இங்ஙனம் நரேந்திரன்!...''

துணிவுடன் கடிதத்தை சிங்காரத்திற்கு தபாலில் சேர்த்து விட்டான்.

இரண்டு தினங்கள் கூட முழுவதும் ஆகவில்லை. சிங்காரத்தின் சார்பில் அவனைப் பார்க்க இரண்டு பெரியவர்கள் விடிந்ததும் விடியாததுமாக வந்து சேர்ந்தனர்.

''தம்பி! உன் கடுதாசி வந்தது... ஆனால் சிங்காரம் அதுக்கு ஒத்துக்க மாட்டேன் என்கிறார்'' என்று ஆரம்பித்தார் ஒருவர்.

''அதெப்படி பெண் பார்த்துட்டு... நீ ஒத்துக் கொண்டு மேற்கொண்டு சம்பிரதாயங்களைப் பேசி முடிச்ச பிறகு... துக்கம் ஏற்பட்டதுன்னு நிறுத்திட முடியுமா? போனவர் போயிட்டார்... அதுக்காக இருக்கிறவங்களை மனக்கஷ்டப்பட வைக்கலாமா?...'' இன்னொருவர் அழுத்தமாகப் பேசினார்.

''நாங்க வந்து பெண் கேட்ட நேரம் நல்லா இல்லைன்னு நினைக்கிறேன். அதனாலே அவங்க வேறே இடத்துலே பார்த்துக்கறதுதான் நல்லது'' என்றான் அவன்.

''ஊர் சொல்லுனு போயிடுமே...? வீணா அந்தப் பெண் பேர் கெட்டுப் போயிடாதா யோசிச்சுப் பார்...!'' என்றார் முதலாவதாகப் பேசினவர்.

''நல்லா யோசிச்சுப் பார்த்துட்டுத்தான் சொல்றேன். பெரிய

தனக்காரருக்கு எடுத்துச் சொல்லுங்கோ... எனக்கு இப்போ சத்தியமா கல்யாணமே வேண்டாம்னு மனம் முறிஞ்சு போயிருக்கு...!'' என்றான் மிகவும் பிடிவாதமாக நரேந்திரன்.

மனத்தாங்கலுடன் அவர்கள் இருவரும் எழுந்து சென்று விட்டனர். அப்பாடா கால் விலங்கு கழண்டு கொண்டது... என்று நிம்மதி பெருமூச்சு விட்டான் அவன்.

13

சித்தப்பாவின் மறைவுக்குப் பின் நரேந்திரன் அந்த கிராமத்தில் நீடித்துத் தங்கியிருக்க விரும்பவில்லை.

விரைவில் தாம் இறந்து போய் விடக்கூடும் என்று எண்ணியவர் போல கதிரேசன் தமது கடைகளை அவன் பெயருக்கு மாற்றிவிட்டு சொத்துக்களை அவனுக்கு எழுதி வைத்துவிட்டுப் போயிருந்தார்.

அது ஒரு வழியில் அவனுக்கு நல்லதாக அமைந்து விட்டிருந்தது. சித்தப்பா மறைந்த சில மாதங்களிலேயே அவன் கடைகளை நல்ல லாபத்திற்கு விற்று விட்டான்.

வீடும் மற்ற சொத்துக்களும் சட்டப்படி அவனுடையதாகும் வரை காத்திருந்து அவைகளை விற்று முதலாக்கிக் கொண்டான். இரண்டு மாத காலத்திற்கு அந்த வீட்டில் தங்கியிருந்து விட்டுப் பின்னர் காலி செய்து கொடுத்து விடுவதாக விற்றவருக்கு வாக்குக் கொடுத்திருந்தான். அதற்குரிய வாடகையைத் தந்து விடுவதாகவும் ஒப்புக் கொண்டு இருந்தான்.

தன்னந்தனியாக இனி அவன் அந்த கிராமத்தில் வாழ வேண்டிய நிர்பந்தம் இருக்கவில்லை.

கையில் ··தாராளமாக முதல் சேர்ந்து விட்டிருந்தது.

பட்டணத்திற்குச் சென்று ஏதாவது ஒரு வியாபாரத்தில் முன்னேறி தனக்கும் சாமர்த்தியம் இருக்கிறதென்பதை அந்த பத்னசாமிக்கு உணர்த்த வேண்டும் என்று அடிக்கடி அவரை நினைத்து ஆத்திரத்தில் குமைந்தான்.

பவழநல்லூர் பெரிய தனக்காரர் தம் மகளுக்கு வேறு இடங்களில் மாப்பிள்ளை தேடிக் கொண்டிருக்கிறார் என்ற செய்தி காதில் பட்டதும் அவனுக்கு பெருத்த நிம்மதி. விருப்பமில்லாத கல்யாணத்திலிருந்து விடுதலை அடைந்தோமே என்று மகிழ்ச்சியுடன் இருந்தான். வீட்டை விற்று முடிந்ததும், கொஞ்ச நஞ்சமிருந்த பந்தமும் அகன்று விட்ட உணர்வில் சென்னைக்கு புறப்பட்டான். பத்து தினங்கள் ஒரு நல்ல ஓட்டலில் தங்கிக் கொண்டு அங்கே வசிக்க வீடு தேடத் தொடங்கினான்.

சென்னையில் குடியிருக்க வீடு பிடிப்பது அத்தனை ஒரு சுலபமான காரியமாக இருக்கவில்லை... வீட்டு தரகர்களுடன் அவன் காலையிலிருந்து இரவு வரை... அலைந்து திரிந்தான். முடிவில் மந்தைவெளிப் பகுதியில் புதிதாக உருவாகி விட்டிருந்ததொரு குடியிருப்புப் பகுதியில் ஒரு தனி வீட்டை வாடகைக்கு பேசி முடித்தான். ஆறு மாத வாடகையை முன் பணமாகத் தந்துவிட்டு சாவியை பெற்றுக் கொண்டான்.

இனி மறுபடி கிராமத்திற்குத் திரும்பி... தேவைப்பட்ட சாமான்களை மட்டும் லாரியில் அனுப்பிவிட்டு... மீதியை விற்று அங்கே கவனித்து முடிக்க வேண்டிய காரியங்கள் அனைத்தையும் நிறைவேற்றிவிட்டு சென்னைக்கு நிரந்தரமாகத் தங்க கிளம்பிவிட வேண்டியதுதான் பாக்கி...

அவன் வீடு தேடிக்கொண்டு சென்னைக்கு வந்தது முதல் அவன் மனதை அந்த நினைவு வருடிக் கொண்டுதான் இருந்தது.

வீட்டுப் பிரச்சனையை ஒரு வழியாக முடித்துக் கொண்டதும்... கட்டாயம் ஊரு திரும்பு முன் அவன் அவளைப் பார்த்தாக வேண்டும்... பல மாதங்களுக்கு முன் சித்தப்பாவுடன்

அங்கு வந்த போது தவிக்க முடியாத ஆசையில் அவளைப் பார்த்து வரப் போனான்.

இப்போது அந்த ஆசை நெருப்பாக அவனை தகித்துக் கொண்டிருந்தது.

அதற்கு முன் அந்த ஏமாற்றுக்காரன் ரத்னசாமியைப் பார்த்தால்... முன்னைவிட லேசாக பருத்து — உடல் நிறத்தில் கூடி — முகத்திலே பணத்தின் தெம்பு பிரதிபலிக்க... நிம்மதியாக இருக்கும் அவனை இப்போது அந்த மனிதன் பார்த்தால்?...

காசைப் பற்றிக் கவலைப்படாது... ஓட்டல் வாசலில் நின்றதொரு டாக்சியில் ஏறிக்கொண்டு பீட்டர்ஸ் ரோடுக்கு விரைந்தான். மாலை மங்கும் நேரத்தில் போக்குவரத்தில் நீஞ்சிக் கொண்டு சென்ற வண்டி நின்றதும் இறங்கினான். அமராவதி ஜ்வல்லர்ஸ்சின் கதவு இழுத்துப் பூட்டப்பட்டிருந்தது.

ஒன்பது மணியளவில்தானே மனிதன் கடையைச் சாத்துவார்... ஆமாம் அவருக்கு என்ன வந்து விட்டது! அல்லது கங்காவுக்கு ஏதேனும் நேர்ந்து விட்டதா?

படபடவென்று நெஞ்சு அடித்துக் கொள்வதை உணர்ந்தான். முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு மீண்டும் டாக்சியில் ஏறிக் கொண்டான்.

திருவல்லிக்கேணி முத்து வீரன் தெரு ஐந்தாம் எண் வாசலில் இறங்கிக் கொண்டு டாக்சிக்கு பணம் கொடுத்துவிட்டு அழைப்பு மணியை அழுத்தினான். இன்னமும் பொழுது முழுதும் அமிழவில்லை. ஆயினும் வாசல் விளக்கு பளிச்சென்று எரியத் தொடங்கியது.

"யாரது?" — அதே குரல்... இனிமையாக அவனது மூளை முடுக்கையெல்லாம் தொட்டதும்... புல்லரித்துப் போனான்.

சே! ஏன் இந்த மயக்கம்? தன்னைத்தானே சாடியபடி பல்லைக் கடித்துக் கொண்டான்.

கதவைத் திறந்த கங்கா வாசலில் நின்றவனைப் பார்த்து நிகைத்துப் போனாள்.

''உள்ளே வாங்கோ!'' கேட்டிலிருந்த பூட்டைத் திறந்து வழி விட்டாள்.

பாதணிகளை நடையில் கழற்றி வைத்து விட்டு... கூடத்திற்குள் தயக்கமாக நாற்காலியில் உட்கார்ந்தான்.

சுற்றுமுற்றும் கண்களால் அவன் துழாவுவதை கங்கா கவனித்தாள்.

''அப்பாவுக்கு உடல் நலமில்லை...?'' மெல்லிய குரலில் சொல்லிவிட்டு கூடத்து குழல் விளக்கைப் பொருத்தினாள்.

பளிச்சென்று வீசிய விளக்கொளியில் அவளை நிமிர்ந்து நன்றாகப் பார்த்தான். முன்னைப் பார்த்தது போலவே எள்ளளவும் மாறுதல் இன்றி தென்பட்டாள். ஆனால் முகத்தில் மட்டும் அந்தப் பழைய பிரகாசம் இருக்கவில்லை... கண்களில் கவலை மிதமிஞ்சித் தெரிந்தது.

''என்ன அவருக்கு? அறையில்தானே படுத்திருக்கார்?'' என்று விசாரித்தான்.

''அப்பாவுக்கு இரண்டு வாரத்திற்கு முன் மாரடைப்பு வந்து விட்டது. சாப்பிட உட்கார்ந்தவர் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு மயக்கமா விழுந்துட்டார். நான் ரொம்பவே பயந்து போய் விட்டேன். நானே ஓடிச் சென்று டாக்டரை அழைச்சிட்டு வந்து காட்டினேன். மாரடைப்பு உடனே ஆஸ்பத்திரியில அனுமதிக்கணும்னு சொல்லி, நமக்கு தெரிஞ்ச சித்ரா மருத்துவமனையில் அனுமதிக்க உதவினார்... இன்னமும் அங்கேதான் இருக்கார்...!''

''அப்படியா கேட்க வருத்தமா இருக்கு... எல்லாத்தையும் நீங்க தனியாவா சமாளிச்சீங்க...?''

''நெருங்கின உறவினர்கள் யாரும் பட்டணத்திலே

கிடையாது. அப்பாவுக்கு யாருடனும் நெருங்கி பழகவும் பிடிக்காது. அதனாலே அக்கம் பக்கத்தவர்களிடம் கூட சட்டுன்னு ஓடி உதவி கேட்க முடியலை... டாக்டர் பாவம் ரொம்ப நல்லவர்... நிறைய உதவி செய்தார். இல்லாட்டா தவிச்சுப் போயிருப்பேன்...!'' தழுதழுத்தாள். பொங்கி வந்த கண்ணீரால் அவளது கண்கள் பளபளப்பதை பாராதவன் போல பார்த்துக் கொண்டான்.

''ஐயோ! பாவம்!'' என்று ஒரு கணம் இரக்கத்தில் கரைந்த அவன் மனம் சட்டென்று அந்த நினைப்பு வந்ததும் இறுகியது.

''தனியாக பாவம்... ரொம்ப சங்கடந்தான்!'' மெல்ல முனகினான். ''எங்கள் குடும்ப டாக்டர் தனக்குத் தெரிஞ்ச ஒரு வயதான அம்மாவை என்னுடன் சில நாள் துணையாக இருக்க ஏற்பாடு செய்திருப்பதால் அத்தனை சங்கடம் இல்லை... அவங்க சமையலறையில் வேலையை கவனிச்சி கொண்டிருக்காங்க — நீங்க வந்தது அவங்களுக்கு தெரிஞ்சிருக்க நியாயமில்லை... ஏன்னா அவங்க காது செவிடு!''

''அப்படியா?'' என்று கேட்டவன்... ஒரு கணம் தயங்கிவிட்டு சொன்னான்.

''உங்களைப் பார்த்ததில் ஒரு கேள்வி கேட்கணும்னு... கடந்த ஒரு வருஷகாலமா தவிச்சுட்டிருக்கேன்... ஆமாம் உங்க அப்பா அந்த வைரப்பிள்ளையாரை என்ன செய்தார், வித்துட்டாரா? உண்மையை எனக்கு சொல்ல முடியுமா!'' குரலில் காரம் தொனிக்க கேட்டான்.

திகைத்து முகம் வெளிறிப் போனாள்.

''எனக்கு அப்பாவின் வியாபார விவகாரம் எதுவுமே உண்மையாகத் தெரியாது. என்னிடம் அவர் அவைகளைப் பற்றி பேசும் வழக்கம் இல்லை. நீங்கள் அவரிடம் என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்பது அந்த கடைசிநாள் வரை எனக்குத் தெரியாது. உங்களது பொருளை விற்க முடியவில்லை என்று

அப்பா கூறிவிட்டு மஞ்சள் பிளாஸ்டிக் பெட்டியை மேஜை மேல் வைத்து 'இதோ பார்! உன் பிள்ளையார் என்ற போது கூட எனக்கு புரியவில்லை. பிறகு நீங்கள் அதே இரவு திரும்பி வந்து வாதாடிய போது என் வைரப்பிள்ளையாரைக் கொடுத்துட்டா மறு வினாடியே நான் கிளம்பிடறேன்னு சொன்னதும் தான்... ஏதோ ஒரு உயர்ந்த பொருளை அவர்கிட்டே கொடுத்து வச்சிருந்தீங்கன்னு புரிஞ்சு கொண்டேன்!''

''அந்த வைரப்பிள்ளையார் பல லட்சம் பெறும். அதை உன் தந்தை என்னிடமிருந்து களவாடிக் கொண்டு விட்டார் சந்தேகமே இல்லை... நம்பினவனைத் துரோகம் செய்த பாவம் சும்மா விடாது!'' சீற்றத்துடன் அவளைப் பார்த்தான்.

''அந்த பாவத்தின் பலனை இப்போ அனுபவிக்கிறார் —சீக்களியாகி மருத்துவமனையில் கிடக்கிறார்... திரும்பி வராம செத்துப் போயிடுவார்னு கோபத்தோட நீங்க சொல்ல நினைக்கிறீங்க!''

''நான் வயிறெரிந்து சொல்றதிலே தவறு இல்லையே...?''

''நோயும், மரணமும் யாருக்கும் வரக்கூடியதுதானே. பாவம் செய்கிறவங்களுக்கு மட்டுமே வரும் சங்கதியில்லையே — மேலும் மரணம் என்பது யாருக்கும் ஒரு தண்டனையல்ல — எல்லோருக்கும் ஏற்படக்கூடிய இயற்கையின் நியதி... இந்த விவகாரத்திலே நான் எந்தவித பங்கும் ஏற்கவில்லை — நான் குற்றமற்றவள்!'' சொல்லி முடிப்பதற்குள் அவளது கண்கள் கலங்கிப் போயின.

உதட்டைக் கடித்துக் கொண்டு அவன் எழுந்திருந்தான்.

''நான் கேட்க நினைத்ததைக் கேட்டு விட்டேன். என் மூதாதையரின் கலைப்பொருள் அந்த வைரப்பிள்ளையார். என்னை மோசம் செய்திருந்தால் கட்டாயம்...'' மேலே சொல்ல கூசியவனாக சினத்துடன் வெளியே செல்லத் திரும்பினான்.

''உட்காருங்க! தாகத்துக்கு ஏதாச்சும் சாப்பிட்டுவிட்டு

போகலாம்'' மெல்லிய குரலில் குழைவாக உபசரித்தாள்.

''உங்க வீட்டிலே நிறைய சாப்பிட்டு விட்டிருக்கேன். அதன் பலனையும் ரொம்பவே அனுபவிச்சிருக்கேன்... நன்றி!'' என்று ஏளனமாகக் கூறிவிட்டு... திரும்பி பாராது வெளியே நடந்தான்.

பல்வேறு உணர்ச்சிகளின் கொந்தளிப்பில் மனம் அலக்கழித்தது. தன் தந்தையின் மோசடியில் தனக்கு சிறிதும் பங்கு இல்லை என்பதை அவன் எப்படி நம்ப முடியும்?

ஆமாம். அவளுக்கு என்ன துணிச்சல்? ரொம்ப பழகியவள் போல அந்தி வேளையில் அன்னிய புருஷனை வீட்டுக்குள் அழைத்து வச்சு பேசுகிறாளே? அப்பன் திருடன் என்றால்... மகள் அப்படி இருப்பாளோ...?

நினைக்கும் போதே அவனுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. ஆமாம் நடத்தையில் மாசு உள்ளவளாக இருப்பாள் என்று நினைக்கிற அவளை... மனம் ஏன் இன்னமும் நாடுகிறது? இதென்ன அசம்பாவிதம்? அவனது வாழ்க்கைப் பிரச்சனையில் ரத்னசாமியையும் — அவரது மகளையும் ஏன் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏன்? ஏன்?...

தன்னையே பலமுறை சாடிக் கொண்டு ஓட்டலுக்கு திரும்பினான். அடுத்தநாள் அவன் திரும்ப கிராமத்திற்குப் பயணமானான். அதற்குப் பின்னர் அவனுக்கு கவனிக்க வேண்டிய காரியங்கள் பல இருந்தன.

கங்கா நினைவில் நிழலாகிப் போனாள். பக்கத்து டவுனிலிருந்து லாரி ஒன்றைப் பேசி தேவைப்பட்ட சாமான்களை ஏற்றிச் சென்னைக்கு அனுப்பிவிட்டு... மீதமிருந்தவைகளை விலைக்குப் போட்டு முடித்தான். உட்கார ஒரு ஒடிந்த நாற்காலி கூட இல்லாத வீட்டில் அவன் கடைசி நிமிஷ காரியங்களை கவனிக்க இரண்டொரு தினங்கள் தங்க நேரிட்டது.

வீட்டை வாங்கியவர்... அவன் கிளம்பும்போது சாவியைத் தம் கிராமத்தில் அதே தெருவில் வசித்த தம் உறவினர் ஒருவரிடம் கொடுத்துப் போகும்படி சொல்லிவிட்டு வெளியூருக்கு ஏதோ வேலையாகப் போய் விட்டிருந்தார்.

அன்று மாலை அவன் டவுனிலிருந்து திரும்புவதற்குள் இருட்டி விட்டிருந்தது. பஸ்ஸை விட்டிறங்கி ஊரை நோக்கிச் செல்லும் மண் பாதையில் புகுந்து மெல்ல நடந்தான். கிராமத்திற்கு மின் விளக்கு வசதி வந்து விட்டிருந்த போதிலும் நெடுஞ்சாலையிலிருந்து உள்ளே பிரிந்த அந்த மண் பாதையில் விளக்குகள் கிடையாது.

''யாரது அங்கே?'' அதட்டிய குரல் அவனைத் திடுக்கிடச் செய்தது. அவன் சட்டைப் பையில் அப்போது அதிக பணம் இருக்கவில்லை. தோளில் தொங்கிய துணிப்பையில் இரவு சாப்பாட்டிற்காக அவன் டவுன் ஓட்டலில் வாங்கி வந்த மசாலா தோசைப் பொட்டலம்தான் இருந்தது.

மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம்... பின்னால் ஒலித்த காலடியைப் பொருட்படுத்தாது அவன் வேகமாக நடந்தான்.

''யார்டா அவன் — குரல் கொடுக்காம போறவன்'' அதட்டலாகக் கேட்டவன்... அருகில் வந்து தன் கையிலிருந்த டார்ச்சை அவன் முகத்தில் வீசினான்.

வெளிச்சத்தில் கூசிய கண்களை இடுக்கிக் கொண்டு... ''யார் நீங்க?'' பதிலுக்கு அதட்டினான் நரேந்திரன்.

உன் மச்சாண்டா என்று கேலியாகச் சிரித்தவன் முகம் இருளில் தெரியவில்லை.

மேலே என்னவோ சொல்ல நரேந்திரன் வாயைத் திறக்கு முன் அவன் பின் கழுத்தில் ஓங்கி ஒரு குத்து விழுந்தது.

''நம்ம ஆள் தாண்டா... வாங்கோ...'' என்று குரல் கொடுத்தபடி அடித்தவன் மேலும் பலமாக தோள்பட்டை மீது

குத்த... ''ராஸ்க்கோல் யாருடா திருட்டுப் பயல்'' என்று கத்திக்கொண்டு கையை நரேந்திரன் ஓங்க — தலை மீது டொக்கென்று கழியால் யாரோ ஓங்கி அடிக்க... வேதனை தாள முடியாது அவன் அலற... வாயின் மேல் சூடாக பிசுபிசுவென்று திரவம் வழிவதை உணர்ந்த மறுகணம் நினைவை இழந்து மண்பாதையில் விழுந்து விட்டான்.

14

லேசாக விழிப்பு ஏற்பட்டதும் கண்களைத் திறந்து பார்த்தான் அவன்.

''எங்கே இருக்கிறோம்?'' என்ற பெருத்த திகைப்பு. உடம்பெல்லாம் ஒரே வலி... மெல்ல புரண்டான். இதென்ன? கயிற்றுக் கட்டிலின் மீது படுத்துக் கொண்டிருக்கிறானே? நரேந்திரனுக்கு மிக்க வியப்பாக இருந்தது.

கழுத்தைத் திருப்பிய போது தலை விண் விண் என்று வலித்தது. இடது கையை தூக்கி மெல்ல தொட்டுப் பார்த்தான். தலை மீது நெற்றி வழியாக பெருத்ததொரு கட்டு போடப்பட்டிருந்தது.

ஜன்னல் வழியே மெல்ல சூரிய ஒளி அறையை வெளிச்சமாக்கிக் கொண்டிருந்தது. இருட்டுக்குள் மூழ்கிக் கிடந்த அவனது நினைவும் மெல்ல பளிச்சென்று பழைய நிலையை அடைந்தது. சங்கிலித் தொடர் போல எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது.

அருகிலிருந்த முக்காலி மீது அவனது கைக்கடிகாரமும் மணிபர்சும் இருப்பதைக் கவனித்தான்.

மெல்ல கையை நீட்டி கடிகாரத்தை எடுத்துப் பார்த்தான். நேரம் காலை ஏழு மணியைத் தொட்டுக் கொண்டிருந்தது.

அவன் கீழே விழுந்தும் கடிகாரம் உடையவில்லை. சேதமாகவும் இல்லை... ஆச்சர்யந்தான். மணிபர்சை எடுத்துப் பார்த்தான். டவுன் கடைத் தெருவிலிருந்து திரும்பிய போது பர்சுக்குள் எண்ணிப் பார்த்து வைத்த இருபத்து மூன்று ரூபாய் எண்பது பைசா சில்லரை அப்படியே இருந்தது.

அப்படியென்றால் அவனைத் தாக்கியவர்கள் திருடர்கள் இல்லையா? ஆமாம். அவனை ஏன் தாக்க வேண்டும்? கட்டிலினின்று மெல்ல எழுந்து உட்கார அவன் தலையைத் தூக்கினான். அறையே சுற்றுவது போல மயக்கமாக இருந்தது.

''இப்போ எப்படி இருக்கு தம்பி! அப்படியே படுப்பா. உடம்பை அலட்டிக்காதே. இரண்டு நாளாவது ஓய்வா இருக்கணும்னு டாக்டர் சொல்லியிருக்காரே?'' வெள்ளை வேட்டியும் - மேல் துண்டுமாக மீசை தாடி நரைத்துப் போன அந்த கிழவர் யார்?

''தம்பி நீ என்ன நினைக்கிறேன்னு புரியுது. இந்த தோட்டத்திலே பயிர் பண்ணிட்டு வாழறவன் நான். பேரு குமரேசன். உன் சித்தப்பாவுக்கு என்னை நல்லா தெரியும். இப்போ நீ என் வீட்டிலே இருக்கே...!''

''பெரியவரே நான் இங்கே எப்படி வந்தேன்!'' மெல்லிய குரலில் கேட்டான்.

ஒரு கணம் தயங்கியவர் போல குமரேசன் மவுனமாக அவனைப் பார்த்தார்.

கதிரேசன் அண்ணன் மகன் வந்து சித்தப்பனுக்கு ரொம்ப உதவி செய்கிறான்னு எல்லாரும் சொல்லிக்கிட்டிருந்தாங்க. நான் உன்னைக் கடைத் தெருவில் பலவாட்டி பார்த்திருக்கேன். ஆனால் பேசின பழக்கமில்லை. பவழ நல்லூர் பெரிய தனக்காரர் மகளை உனக்குப் பேசி முடிச்சிருப்பதாக சங்கதிகூட காதில் பட்டது.

''அதெல்லாம் இப்போ இல்லை அய்யா...''

''அதனால்தான் இந்த சங்கடம் உனக்கு ஏற்பட்டது.''

''என்ன சொல்றீங்க?'' வியப்புடன் கேட்டான். தலையை திருப்ப முடியாது கனமாக இருந்தது. உடம்பெல்லாம் வலித்தது. வேதனையுடன் பெருமூச்சு விட்டான்.

''அவரோட ஆட்கள் உன்னை அடிச்சுப் போட்டு போயிருக்கானுங்க. ஊர் போற பாதையிலிருந்து யாரோ கத்தறது கேட்டது. நான் அப்போதுதான் சாப்பிட்டு எழுந்தேன். வேகமா கையை கழுவிகிட்டு லாந்தரும் குண்டாந்தடியுமா கிளம்பினேன். பக்கத்து வீட்டு சங்கரனும் அவன் தம்பியும் ஓடி வந்தார்கள். நாங்க திமுதிமுன்னு ஓடிவரக் கண்டதும் அந்த பயல்கள் ஓடிப் போய் விட்டான்க. இல்லாட்டா உன்னை உசிரோட கூட பார்த்திருக்க முடியாது. நீ தலையெல்லாம் ரத்தமா... நினைவு இல்லாம மண் மேலே கிடந்தே. தூக்கிட்டு வந்து வீட்டுலே போட்டோம். சங்கரன் தம்பி சைக்கிளில் ஓடி டாக்டரைக் கூட்டி வந்தான். பாவம் அந்த புண்ணியவான் உடனேயே கூட தம் ஸ்கூட்டர்லே வந்துட்டார். டாக்டர் காயத்தை சுத்தப்படுத்தி தையல் போட்டு ஊசிபோட்டு முடிக்கிறதுக்குள்ளே நீ கொஞ்சம் கண்ணைத் திறந்து முணகினே.

''பெரிய ஆஸ்பத்திரிக்கு உன்னை எடுத்துட்டு போகனுமான்னு கேட்டோம். வேண்டாம் இங்கேயே ஓய்வா சில நாள் இருந்தா போதும் என்றார். இன்னிக்கு உன்னைப் பார்க்க மறுபடி டாக்டர் வருவார். அதுவரை நீ கட்டிலைவிட்டு எழுந்திருக்காதே. வெளிவாசல்லே போகணும்னா என்னை கூப்பிடு... கைத்தாங்கலா அழைச்சிட்டு போரேன்...!'' குமரேசன் விபரமாகச் சொன்னார்.

''பவழநல்லூர் பெரிய தனக்காரரின் ஆட்கள் என்னை ஏன் அடிச்சுப் போடணும்?'' தடுமாறியபடி கேட்டான் நரேந்திரன்.

''விஷயம் தெரியாத பிள்ளையா இருக்கியே நீ? அவர் மகளை கட்டிக்க முடியாதுன்னு நீ கடிதாசி போட்டுட்டியாமே, நிசந்தானே?''

தலையை ஆட்டினான் நரேந்திரன். அவனது சொந்த சங்கதிகள் இப்படியா ஊர் அறிந்த கதையாகி விட்டது.

வியப்புடன் அவரைப் பார்த்தான்.

அதனாலே அவருக்குக் கோபம். கிழவர் குமரேசன் குரலைத் தாழ்த்திக் கொண்டார்.

''பெரிய தனக்காரர் சிங்காரம் பெரிய ரவுடி. ஒரு சமயம் அவர் வாங்க உத்தேசித்த ஒரு கூரை வீட்டை அவர் கிராமத்து பக்கத்து தெரு பழனிதான் வாங்கி விட்டான். அந்த கோபம் தாங்காம அவர் ஆள் வச்சு பிள்ளை குட்டிக்காரன் பழனியை நல்லா அடிச்சுப் போட்டு விட்டார். இரண்டு மாசத்துக்கு மேலே பழனி ஆஸ்பத்திரியிலே கிடந்தான்.''

என்ன அநியாயம்? கசந்து கொண்டான் நரேந்திரன். பணமும், செல்வாக்கும் அதிகமான சிலர்கிட்டே அநியாயமும் அதிகமாகிடறது. அது கிடக்கட்டும். நீ பல் தேய்ச்சு... மூஞ்சி கழுவிட்டு சூடா கொஞ்சம் பால் சாப்பிடு. நீர் ஆகாரம் கொடுக்கலாம்னு டாக்டர் சொல்லியிருக்கார்!'' என்றபடி குமரேசன் திரும்பி, 'பூரணி' என்று குரல் கொடுத்தார். 'ஏம்மா இத்தனை நேரம்?' அன்பாக அதட்டினார்.

''குளிச்சிட்டு வர கிணத்தடிக்குப் போயிருந்தேன் தாத்தா!'' என்ற இனிய குரலைத் தொடர்ந்து மெல்லிய காலடி ஓசை கேட்டது.

குப்பென்ற சந்தன சோப்பின் மணத்துடன் அறைவாசலில் நின்ற பெண்ணை திகைப்புடன் பார்த்தான் அவன். இருபது வயதிருக்கும் — ஒடிய உயரமாக அவள் நின்றாள். ஊதா நூல் சேலையும் — பச்சை வண்ண ரவிக்கையும், கழுத்தில் பவள மாலையும், கைகளில் கண்ணாடி வளையல்களும், நெற்றியில் குங்குமப் பொட்டும் — அதன் கீழ் திருநீற்று கீற்றுமான அலங்காரத்தில் தனது கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டு

கச்சிதமாகத் தெரிந்தாள். மாநிற மேனி... பருவத்தின் செழிப்பில் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது.

''எழுந்திட்டாரா தாத்தா...?'' அவனைப் பார்த்து முறுவலித்தாள்.

மின்னலடித்தது போன்று அந்த முகத்தில் ஒரு அலாதி கவர்ச்சி தோன்றி மறைந்ததை அவன் பிரமிப்புடன் பார்த்தான்.

''டாக்டர் சொன்னபடியே... காலையிலேயே முழிச்சிக்கிட்டார் அம்மா. நீ கொஞ்சம் சுடுதண்ணியும் பல் துலக்க பல்பொடியும்... முகம் கழுவ சோப்பு... துண்டு இதுகளை எடுத்துக்கிட்டு வா'' உத்தரவிட்டார் தாத்தா.

ஆகட்டும் தாத்தா... என்று திரும்பியவள் முகத்தில் ஜன்னல் வழியே வீசிய சூரிய ஒளிபட்ட போது... அவள் அணிந்து கொண்டிருந்த சிவப்புக்கல் தோடும், மூக்குத்தியும் கன்னத்தில் நெருப்பாக ஒளி வீசின...

''பல் துலக்கிட்டு இந்த சட்டியிலேயே கொப்பளிச்சுடுங்கோ. இந்தாங்க சோப்பு... முகத்தை கழுவிகிட்டு நல்லா துடைச்சுக்கோங்க!'' அன்புடன் அவள் பணிவிடை செய்தாள்.

அவனது தயக்கத்தை உணர்ந்தவள் போல சொன்னாள். ''புதுத்துவாலை... கஞ்சிபோல துவைச்சு காயவச்சிருந்தேன். சோப்பு கட்டிகூட புதுசுதான்!'' மெல்லச் சிரித்தாள்.

அவளது குழைவான பேச்சு... கவனிப்பு... எல்லாம் நெருப்பாக எரிந்த அவனது உடல் சிராய்ப்புக் காயங்கள் மீது மருந்து தடவியது போல இதமாக இருந்தது.

பயிற்சி பெற்ற நர்சைப் போல அவன் கொப்பளித்து துப்பிய சட்டி நீரை அருவருப்பின்றி எடுத்து சென்று வெளியில் கொட்டிவிட்டு வந்தாள்.

ஈரத்துவாலையால் முகத்தை துடைத்துக் கொண்டு அவன் தயாராகுமுன் சமையலறையிலிருந்து சூடான பால் நிறைந்த டம்ளருடன் வெளிப்பட்டாள்.

''எங்க செவலைப் பசுமாட்டுப் பால் ருசியா இருக்கும். சாப்பிடுங்கோ. டாக்டர் வந்து பார்த்த பிறகு புழுங்கரிசி கஞ்சி தயாரிச்சுத்தரேன்'' பரிவாகச் சொன்னாள்.

பாலைக் குடித்துவிட்டு டம்ளரைக் கீழே வைத்தான். கொஞ்சம் தெம்பு வந்தது போன்ற உணர்வில் வீட்டை நோட்டம் விட்டான். சுள்ளென்ற எரிச்சலுடன் புறப்பட்டிருந்த சூரியன் மேலே எழும்பத் தொடங்கியதும்... அறையில் நன்றாகவே வெளிச்சம் பரவிவிட்டிருந்தது. அது ஒரு சிறிய ஓட்டு வீடு. சுவற்றில் புதிதாக சுண்ணாம்படித்திருந்தது தெரிந்தது. அந்த வீட்டின் ஒரே அறைக்குள் அவனைப்படுக்க வைத்திருந்தார்கள். கதவு திறந்து கிடந்த வாயில் வழியே தெரிந்த தோட்டம் பசுமையாகக் கண்களுக்குக் குளிர்ச்சியாகத் தோன்றியது.

''உன்னைப் போல நானும் வெளியூரிலிருந்து இங்கே பிழைக்க வந்தவன்... மாமன் மகளைக் கட்டிகிட்டு இங்கே தங்கிட்டேன். இது மனைவி வழியா கிடைச்ச சொத்து. ஒரு பெண்ணை பெத்து போட்டுட்டு அவ போயிட்டா... மகளை வளர்த்து என் பிறந்த ஊரிலேயே சொந்தத்திலே கட்டிக் கொடுத்தேன். நாங்க திருச்சியைச் சேர்ந்தவங்க. பேத்தி பனிரெண்டு கிளாசு படிச்சு முடிக்கிறதுக்குள்ளே... மருமகனும் மகளும், ஒருத்தர் பின்னாடி ஒருத்தர் போயிட்டாங்க... தாய் தந்தை இல்லாத பூரணியை நான் இங்கே அழைச்சு என்னோட வச்சுக் கொண்டிருக்கேன். இந்த வயசு காலத்திலே அவகூட இருக்கிறது எனக்கு ரொம்ப ஆதரவா இருக்கு... ஆனால் எத்தனை காலம் அவ என்னோட இருக்க முடியும்'' குமரேசன் மேலே பேசுமுன் வாயிலில் ஸ்கூட்டர் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

''டாக்டர் வந்துட்டார்!'' என்று கூவிக்கொண்டு கிழவர் வெளியே சென்றார்.

கையில் மருந்து பெட்டியுடன்... பாண்ட் சட்டையில் குமரேசனை ஒத்த வயதும் வழுக்கை தலையுமான டாக்டர் உள்ளே வந்தார். அவரை அவன் அங்கே அதுவரை பார்த்ததில்லை.

முகத்தில் புன்னகை பொங்க... கனிவான குரலில் அவனது நலனை விசாரித்தார். டாக்டர் சிறிது நேரம் அவனை நன்றாக சோதித்தார்.

''இரண்டு நாள் ஓய்வாக இருக்கணும். மண்டையில காயம், அதனாலே தொடர்ந்து நான் கவனிச்சாகணும். கொஞ்ச ரத்த இழப்பு ஏற்பட்டிருக்கு. அதனாலே பலகீனமா இருக்கு. அதெல்லாம் சரியாயிடும். மண்டை காயத்தினாலே மூளை உள்ளே ரத்த கசிவு ஏதும் ஏற்படக்கூடாது என்றுதான் நான் கவலைப்பட்டேன். இனி ஏற்பட வழியில்லை. ஆனாலும் ஓய்வு உங்களுக்கு அவசியம்...'' என்று கூறிவிட்டு சாப்பிட வேண்டிய ஆகாரம்... மருந்துகளைப் பற்றி... வேகமாக தமது பெயர் பதித்த காகிதத்தில் எழுதி முக்காலி மீது வைத்தார். மவுனமாக இருந்த நரேந்திரன் டாக்டரிடம் மெள்ளக் கேட்டான்.

''எங்க வீட்டுக்குப் போய் நான் நிறைய ஓய்வு எடுத்துக்கிறேன். மாட்டு வண்டியிலே பயணப்படலாம் இல்லையா?'' விசாரித்தான்.

''என்ன தம்பி... என்ன சொல்றே? அங்கே உன்னை கவனிக்க யார் இருக்கா... கூச்சப்படாதே. கதிரேசனுக்கு நான் ஒரு வழியிலே உறவுக்காரன்... ரொம்ப வந்து பூசிக்கொண்டதில்லை. மத்தப்படி இதுவும் உன் வீடுதான்'' அடித்துப் பேசினார் குமரேசன்.

''ஆமாம். இங்கேயே நீ சில நாள் தங்கியிருப்பது நல்லது. இவங்கள்ளாம் உன்னை கவனிச்சுப்பாங்க... எனக்கும் உன்னை வந்து பார்த்து போக சவுகர்யமா இருக்கும்'' டாக்டர் உத்திரவிட்டு விட்டு கிளம்பினார்.

''உங்களுக்கு ரொம்ப சிரமம்... டாக்டர் பீஸ், மருந்து செலவு இதுகளை நான் கொடுத்துடுவேன்... ஒப்புதல் தந்தால்தான் நான் இங்கே இருக்க முடியும்'' கண்டிப்பாகச் சொன்னான் நரேந்திரன்.

''காயங்கள் ஆறி தெம்பு கூடினதும் டாக்டர் காயத்திலே போட்ட தையலைப் பிரிச்சுட்டு உங்க வீட்டுக்குப் போகலாம்னு உத்திரவு தந்ததும்... மெள்ள நீ கணக்குப் பார்த்து பணத்தை கொடுத்தா போதும். ஆனால் நாங்கள் செய்கிற இந்த உதவிக்கு எதையும் பிரதியா எதிர்பார்க்கலைங்கிறதை புரிஞ்சுக்கணும்'' என்றார் கிழவர்.

சிறிதுநேரம் அங்கே ஒரு முக்காலி மீது உட்கார்ந்திருந்து விட்டு குமரேசன் கிளம்பினார்.

விடியற்காலையிலேயே செய்திருக்க வேண்டிய வேலை... வெண்டைக்காயை அறுத்து இன்னிக்கு டவுன் கடைக்கு அனுப்பர வேலை. தோட்டத்திலே உதவி செய்கிற பிள்ளையாண்டான் என்ன பண்ணிகிட்டிருக்கான்னு பார்க்கணும். நான் வரேன். எனக்காக காத்திருக்க வேண்டாம். நான் கொஞ்சம் பழைய சோறு திங்கிர பழக்கம் - எனக்கு காபி அத்தனை பிடிக்காது. பேத்திதான் காபி, டீன்னு அலைவா. அவளுக்கு காலை வேளையிலே சூடா இட்டிலி, தோசை எதினாச்சும் சாப்பிடாட்டா வேலை ஓடாது. படிக்கிறப்போ ஹாஸ்டலில் இருந்த வழக்கம் - உங்களுக்கு இன்னிக்கு கஞ்சிதான் ஆகாரம். உடம்பு கொஞ்சம் தேறினதும் நாளையிலிருந்து சாதாரணமான சாப்பாடு தரலாம்னு டாக்டர் சொல்லிட்டு போயிருக்கார். வெளிவாசலுக்குப் போகணும்னா என்னைக் கூப்பிடச் சொல்லுங்க'' என்று படபடவெனப் பேசிவிட்டு துண்டை உதறி தோளில் போட்டுக்கொண்டு கிழவர் வெளியேறி விட்டார்.

''ஒரு வாரகாலமா இங்கே இருக்கணும்?'' என்று முணகியபடி படுக்கை மீது சாய்ந்தான் நரேந்திரன்.

''ஏங்க அப்படி அலுத்துக்கிறீங்க. உங்க சித்தப்பா வீட்டைப் போல எங்க வீடு அத்தனை பெரிசு இல்லை... ஆனால் மனம் ரொம்ப பெரிசு - நன்றாகவே கவனிப்போம்...'' என்றபடி அவன் காலருகில் கிடந்த வெள்ளை விரிப்பை எடுத்து கழுத்துவரை போர்த்திவிட்டாள் பூரணி.

அவளது கண்களில் தெரிந்த கனிவுக்கும்... குழைவான அந்த பேச்சிற்கும் பொருள் என்ன? குழம்பிப் போனான் அவன்.

15

ஒரு வாரகாலம் ஓடிச் சென்றது.

''தலையில் பட்ட அடி நெற்றி ஓரத்தில் ஒரு காயத்தை மட்டும் உண்டாக்கி விட்டிருந்தது. நல்ல வேளையாக மூளையில் ரத்தக் கசிவு போன்ற ஆபத்துகள் நேரவில்லை'' என்று கூறியபடி டாக்டர் காயத்தின் மீது தாம் போட்டிருந்த தையலைப் பிரித்துவிட்டு மருந்தால் துடைத்து பிளாஸ்திரியால் காயாத அந்த வடுவை மூடிவிட்டார்.

''கொஞ்ச நாட்களில் வடு தானாக மறைந்துவிடும். அப்படி தெரிந்தாலும் ஒரு சிறு கோடுபோலதான் தென்படும். தலைமுடியை அந்த பக்கம் சிறிது தழைத்து வாரிக் கொண்டால் அதுவும் பிறர் கண்ணுக்குத் தெரியாது'' என்று புன்னகைத்தவர் - அவன் பின்னர் சாப்பிட வேண்டிய மருந்துகள் சிலவற்றை எழுதிக் கொடுத்துவிட்டு கிளம்பினார். மருந்துப் பெட்டியைக் கையில் தூக்கிக் கொண்ட டாக்டர் இறுதியாகச் சொன்னார்.

''நீங்கள் சென்னைக்குப் போனதும் அங்குள்ள பிரபல நரம்பியல் நிபுணரிடம் சோதனை செய்து கொள்வது நலம். உங்களது காயம் பூரண குணமடைந்து விட்டது - அதனால் எந்தவித ஆபத்தும் இல்லை என்று எனக்கு புரிகிறது. உங்களது

முழுச் சந்தேகமும் தீர... நீங்கள் நிபுணரின் ஆலோசனையை ஏற்பது நலம்.''

இரத்த இழப்பினால் பலவீனமடைந்திருந்த அவனது உடம்பு ஒருவார கவனிப்பில் நன்றாகத் தேறிவிட்டிருந்தது. பூரணி அவனுக்கு வாய்க்கு ருசியாக உடம்புக்கு தேவையான நல்ல உணவு வகைகளைச் சமைத்துப் போட்டாள். அருகில் வந்து அமர்ந்து கொண்டு அவள் செய்த உபசாரம் கொஞ்ச நஞ்சமல்ல. அவனைப் பார்க்கும் போதெல்லாம் அந்தக் கண்களில் தெரிந்த அன்பை அவனால் இனம் காண முடியவில்லை.

அவளது குரல், ஓசைப்படாது மெதுவாக வீட்டிற்குள் வளைய வந்த பதவிசு எல்லாம் அவனுக்கு அவன் தாயை நினைவுறுத்தியது.

அவன் எழுந்து பல் துலக்கியவுடன் சாப்பிட தம்ளர் நிறைய காய்ச்சிய பசும்பாலை கொடுத்து விட்டு... கிழவரும் பேத்தியும் தோட்டத்திற்கு போய் விட்டிருந்தனர். எழுந்து மெல்ல நடந்து அவன் தோட்டத்தின் பக்கம் வந்தான். சில்லென்று வீசிய காற்றிலே நித்ய மல்லியின் வாசம் மூக்கிலே மோதியது.

கிழவர் மேற்பார்வை செய்ய பூரணியும், வேலையாள் ஒருவனும் காய்களைப் பறித்துக் கூடையில் நிரப்பிக் கொண்டிருந்தனர். குமரேசன் அவனைப் பார்த்ததும் வேகமாக வந்தார். ''என்னப்பா? தம்பி! உடம்பு இப்போ தெளிவாகத்தானே இருக்கு?'' என்று கேட்டபடி... கிணற்று மேடையருகேயிருந்த தோய்க்கும் கல்மீது அவனை உட்காரச் சொல்லி உபசரித்து விட்டு... அருகில் தெரிந்ததொரு கல் துண்டின் மீது அமர்ந்தார்.

''விடியுமுன்பே வேலையை ஆரம்பிச்சுட்டீங்களே?'' வியப்புடன் கேட்டான்.

''இந்த நிலமும் வீடும்தான் என் சொத்து. இதில் விளையறதை டவுன் கடையிலே போட்டு வரதைக் கொண்டு

நாங்க வாழ்க்கையை நடத்திக்கிட்டு போறோம்... உழைச்சாத்தானே நிம்மதியா உட்கார்ந்து ஒரு பிடி சாப்பிட முடியும்...'' என்றார். அவரது குரலில் தொனித்த துயரம் அவன் மனதை லேசாகக் கிள்ளியது.

''உங்களுக்கும், உங்க பேத்திக்கும் நான் ரொம்பவே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கேன். எனக்காக செலவழிச்ச பணத்துக்கு நான் புறப்படுமுன் ஈடு செய்துட்டு போக விரும்புகிறேன்'' என்றான்.

''தம்பி முன்னமேயே சொன்னேன் - டாக்டர் எங்களது குடும்பத்து நண்பர். உன்னை கவனிக்க என்று தனியாக அதிகம் எதுவும் வாங்கலை. மருந்துகளுக்குக் கொஞ்சம் செலவானது. அதை நீ கணக்கில் வச்சுக்கொள். பின்னர் ஒரு சமயம் தேவைப்பட்டால் நாங்க கேட்போம். நீ கணக்கைத் தீர்க்கலாம்...'' பலமாகச் சிரித்தார்.

அருகிலிருந்த வெண்டைச் செடிகளிலிருந்து பிஞ்சுகளைப் பறித்து கூடையில் நிறைத்துக் கொண்டிருந்த பேத்தி பூரணி அவர்கள் பக்கம் திரும்பினாள்.

கிராமத்தில் வசிக்கும் பெண்... விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் தாத்தாவுடன் உதவியாக மண்ணை கையால் துலவிக்கொண்டு... தோட்டம் முழுதும் வளைய வந்த போதும் - எந்த நேரத்திலும் பார்க்க பளிச்சென்று அவள் சுத்தமாகக் காணப்படும் ரகசியம்? வியப்புடன் அவளை உற்றுப்பார்த்தான்.

ரோஜா வண்ண மல்மல் சேலையில் அவள் தோட்டத்து மூலையில் நித்யமல்லி கொடியருகே சட்டியில் மலர்ந்து நின்ற ரோஜா மலரைப் போல... மென்மையாக... அழகாக... பார்க்க மனதில் இதம் ஊட்டுகிறவளாக... நின்றாள்.

''தாத்தா இவர் என்ன சொல்கிறார்?'' பற்கள் பளிச்சிட லேசானதொரு புன்னகையுடன் கேட்டாள்.

''இங்கே தங்கியிருந்ததற்கு உண்டான செலவின் கணக்கைக் கேட்கிறார்.''

''மறக்காம நர்ஸ் வேலை பார்த்த என்னுடைய பீசையும் சேர்த்தே போட்டுக் கொடுங்கள்...'' சொல்லிவிட்டு கலகலவென்று சிரித்தாள்.

மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்து அவள் சிரிக்கும்போது ரொம்பவே அழகாகத் தெரிகிறாளே, அதிசயத்துடன் அவளை மறுபடி உற்றுப் பார்த்தான்.

''கொஞ்சம் குடிக்க மோர் எடுத்துவாம்மா... தம்பிக்கும் சேர்த்து கொண்டா...'' என்று உத்தரவிட்ட கிழவர் தமது குரலை தாழ்த்திக் கொண்டு பேசத்தொடங்கினார்.

பவழநல்லூர் பெரிய தனக்காரர் விரோதத்தை வீணாக வாங்கிக் கட்டிக் கொண்டுவிட்டே தம்பி... அதனாலே நீ தொடர்ந்து இங்கே தங்கி இருப்பது அத்தனை நல்லதல்ல...

''நானே ஒரு தீர்மானத்துக்கு வந்து சென்னையில் குடியேற எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டேன் அய்யா.''

''எவ்வளவு சீக்கிரம் இங்கிருந்து கிளம்ப முடியுமோ அத்தனை சீக்கிரம் நீ புறப்பட்டால் நல்லது. ஏன்னா பெரிய தனக்காரரது கோபம் சட்டென்று ஆறாது. அவரது மகளை ஏற்காமல் நீ ஒதுக்கிவிட்டது பெருத்த கவுரவப் பிரச்சனையாகி விட்டது. ஒரு உண்மையை நான் உன்னிடம் சொல்லியாகணும் இப்போ. இரண்டு தினங்களுக்கு முன்னாடி... பெரிய தனக்காரரின் கையாள் சங்கிலி என்னை டவுனில் சந்தித்தான். ''ஐயாவுக்கு வேண்டாதவங்களை வீட்டில் வச்சு விருந்து நடத்தறதாகக் கேள்விப்பட்டேன். இந்த சங்கதி ஐயாவுக்கு இன்னம் தெரியாது...'' என்றான்.

''அப்படியா... அந்த பிள்ளையாண்டான் ஐயாவுக்கு வேண்டாதவன்னு தெரியாது. யாரோ திருடன்கள் தாக்கி கீழே விழுந்து கிடக்கிறான்னு நினைச்சு தூக்கி வந்து உதவி செஞ்சேன்.''

''எச்சரிச்சுட்டேன். பிறகு உன்பாடு'' என்று பயமுறுத்திவிட்டு நகர்ந்தான். நான் அதைக்கேட்டு எனக்காக பயந்துவிடவில்லை. வல்லவனைக் கண்டு - சோர்ந்தவன் பயந்துகொண்டு கிராமத்திலே வாழ முடியாது. அப்புறம் போலீஸ் - பஞ்சாயத்து இதுகள் எல்லாம் எதற்கு இருக்கு? நீ பட்டணவாசி... கிராமத்தோட ஒன்றி வாழ முயன்றே. இனி தேவையில்லை... உன் ஊருக்கே புறப்பட்டு போறது நல்லது. மறுபடியும் உன்னை துன்புறுத்த இந்த காவாலிப்பசங்க துணிஞ்சாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை...''

''வங்கியில் போட்ட தொகையை சென்னையில் நான் புதிதாக திறந்த வங்கி கணக்குக்கு மாற்ற ஏற்பாடு செய்து விட்டேன். அங்கே குடியிருக்க ஒரு வீடு தேடிக் கொண்டு விட்டிருக்கிறேன். சித்தப்பாவின் வீட்டை வாங்கியவர் சொன்ன இடத்தில் சாவியை ஒப்படைத்துவிட்டு கிளம்ப வேண்டியதுதான். இந்த விபத்து மட்டும் ஏற்படாதிருந்தால் நான் சென்னைக்குப் போய் விட்டிருப்பேன்'' என்றான்.

அன்று மாலை அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு நரேந்திரன் தன் வீட்டிற்குக் கிளம்பினான்.

கதவைத் திறந்தவனுக்கு ஒரு ஆச்சர்யம் காத்திருந்தது. பின் பக்கத்து கதவை பலத்த முயற்சியால் யாரோ திறந்து உள்ளேயிருக்கும் பொருளை களவாட முயன்ற அடையாளங்கள் தெரிந்தன.

திருடுவதற்கு வீட்டில் விலை உயர்ந்த பொருள்கள் ஏதும் கிடையாது. வீட்டை விற்குமுன்பே எல்லாவற்றையும் அப்புறப்படுத்தி விட்டிருந்தான். சமையல் செய்வதைக்கூட நிறுத்திவிட்டு - ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அடுப்பங்கரையில் ஒரு அலுமினியத் தட்டுகூட இருக்கவில்லை. மாற்று உடைகள் வைத்திருந்த பெட்டியை உள்ளே புகுந்தவர்கள் ஆணி போட்டுத் திறந்து... வாரி கூடத்தில்

இறைத்து விட்டுப் போயிருந்தனர். அவனது சட்டை பாண்ட் எதையுமே எடுத்துப் போகவில்லை.

அப்படியானால் வந்தவர்கள்?

கிழவர் குமரேசன் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. முதுகுதண்டில் சில்லென்றதொரு உணர்வு ஏற்பட அவன் மருண்டு போனான். பவழ நல்லூர் பெரிய தனக்காரர் தொடர்ந்து அவன்மீது விரோதம் பாராட்டுகிறார் என்பது நிதர்சனமாகி விட்டது.

வாயிற்கதவை இழுத்து மூடிவிடும் பூட்டு... அதைக்கண்டு ஏமாந்து அவன் உள்ளேயிருப்பதாக எண்ணி - பின் வழியாகப் புகுந்து பார்த்திருக்கிறார்கள். அவனைக் காணாத ஆத்திரத்தில் அவன் பெட்டியைத் திறந்து... எல்லாவற்றையும் வாரி இறைத்து விட்டு போயிருக்கிறார்கள். அவர்கள் கட்டாயம் மறுபடி இங்கே வரக்கூடும்.

அதற்கு மேல் அவனுக்கு அந்த வீட்டில் சிறிதுநேரம் நிற்ககூட அச்சமாக இருந்தது.

முற்றத்தில் கவிழ்ந்து கிடந்த பெட்டியை எடுத்து... தன் உடமைகளை பொறுக்கிப் போட்டுக் கொண்டு - சிரமப்பட்டு அதை சாத்தி - பூட்டி... தூக்கிக் கொண்டு உடனேயே வெளியேறிவிட்டான். வீட்டு சாவியை... விலைக்கு வாங்கியவர் சொன்னபடி அவரது நண்பரிடம் கொடுத்துவிட்டு... மண்பாதையில் விரைவாக நடந்து... மறுபடி கிழவர் குமரேசன் வீட்டிற்கு வந்தான்.

சங்கதியைக் கேட்ட குமரேசன் கவலைப்பட்டார்.

''தம்பி! நீ நீடித்து இங்கே தங்குவதும் ஆபத்து. உடனடியாக நாளை வண்டிக்கே புறப்பட்டு விடு... உன்னை இங்கே எத்தனை காலமானாலும் நான் தங்க வைத்துக் கொள்ள தடையில்லை - ஆனால் பெரிய தனக்காரரின் ஆட்கள் வேட்டை நாயாக அலைகிறார்கள்'' என்றார்.

அன்று இரவு முழுவதும் அவனுக்கு உறக்கமே இருக்கவில்லை. வெளியே சிறிய சத்தம் கேட்டாலும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான்.

அவனது வாழ்க்கையிலே ஏன் இப்படி விரோதிகள் வந்து நடுவில் முளைக்க வேண்டும்?

முதலில் ரத்னசாமி என்ற அயோக்கியன் அவனது வருங்காலத்தில் மண்ணை அள்ளிப் போட்டார். இப்போது அவனது உயிரையே பறிக்க பெரிய தனக்காரர் அலைகிறார்.

ஊகும்! அவன் தொடர்ந்து அங்கே ஒரு நிமிஷம்கூட தங்கக்கூடாது... மறுநாள் இரவு வண்டியில் புறப்பட்டாக வேண்டும் என்ற தீர்மானத்துடன் படுக்கையில் அமைதியின்றி புரண்டான்.

அடுத்தநாள் பகல் சாப்பாட்டின் போது... பூரணி அவனுக்கு வடை பாயசத்துடன் விருந்து படைத்தாள். ''இதெல்லாம் என்ன?'' என்று ஆவலுடன் கேட்டான் அவன்.

''ஊரை விட்டுப் போகப்போறே...! கதிரேசன் ஒரு வழியில் எனக்கு வேண்டியவர்... அந்த ஞாபகத்திற்கு'' என்று கூறிவிட்டு சாப்பாட்டை முடித்து கொண்டு கிழவர் கையை கழுவ எழுந்திருந்தார்.

அவரைத் தொடர்ந்து எழ முயன்றவனை பூரணி கை அசைத்து அமர்த்தினாள்.

''இன்னும் கொஞ்சம் பாயசம் ஊத்துகிறேன்... சாப்பிட்டுவிட்டு எழுந்திருக்கலாம்'' என்று புன்னகைத்தபடி... இரண்டு கரண்டி பாயசத்தை அவன் இலையில் தாராளமாக ஊற்றினாள்.

''இந்த விருந்து உங்க சித்தப்பாவின் நினைவாக தாததா ஏற்பாடு செய்கிறார். இந்தப் பாயசத்தை நான் உங்களுக்காகவே தயாரித்தேன்... இதன் சுவையை நீங்கள் வெகுகாலம் மறக்கக்கூடாது என்பதற்காகத்தான் இரண்டாவது முறையாகப் பரிமாறுகிறேன்...''

அவள் சிரித்தபோது... வியப்புடன் அவளை நிமிர்ந்து பார்த்தான். முகம் சிவக்க... கண்களில் லேசாக நீர் மிதக்க அவள் நின்ற கோலம் அவன் மனதை என்னவோ செய்தது.

'இந்தப் பெண் என்ன சொல்ல இப்படியெல்லாம் சுற்றி வளைக்கிறாள்?...' அவனுக்கு பெருத்த திகைப்பு!

16

சென்னைக்கு வந்ததும் அவனுக்குத் தொடர்ந்து பல வேலைகள் இருந்தன. வீட்டை கவனித்துக் கொள்ளவும், தோட்டத்தை பராமரிக்கவும், சமைத்துப் போடவும் அவன் ஒரு வயதான தம்பதியரை அமர்த்திக் கொண்டான். தன் போக்குவரத்துக்கு உபயோகமாக ஒரு பழைய காரை விலைக்கு வாங்கிக் கொண்டான். ஒரு சில நாளில் காரை ஓட்டக் கற்றுக் கொண்டு லைசென்சும் வாங்கி விட்டான். தானே காரை ஓட்டிச்சென்று நகரத்தின் பல பாகங்களையும் தானே தெரிந்து கொண்டான்.

என்ன வியாபாரத்தை... எங்கே ஆரம்பித்தால் வசதியாக இருக்கும் என்பதுபற்றி தீவிரமாக சிந்தித்தான். நாளேடுகளில் வரும் வியாபார விளம்பரங்களைக் குறிப்பாக பார்த்துக் கொண்டு வந்தான்.

'கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு தரும்' என்பார்கள். அவனுக்கு நல்ல காலம் பிறந்து விட்டிருந்தது போலும். வைரப்பிள்ளையாரை பறிகொடுத்து விட்ட போதிலும் சித்தப்பா வைத்துவிட்டுப் போன சொத்து கணிசமான தொகையாக வங்கியில் இருந்தது.

முன்பின் தெரியாத பட்டணத்தில் வசிக்க நல்லதொரு

பகுதியில் வீடு கிடைத்து விட்டிருந்தது. பணிவுடன் விசுவாசமாக வேலை செய்ய இரண்டு பேர்கள் கிடைத்து விட்டிருந்தனர். எல்லாவற்றிற்கும் சிகரமாக அவன் தேடிக்கொண்டிருந்தது போல ஒரு சிறு வியாபாரம், கட்டிட சாமான்கள் விற்பனை செய்யும் கடை ஒன்று விலைக்கு வந்திருந்தது. விலை கூடுதலாக இருந்த போதிலும் துணிவுடன் அதை வாங்கி விட்டான்.

இத்தனையும் அவன் சென்னையில் குடியேறிய சில மாதங்களிலேயே நிறைவேறின. கடையைத் தன்னுடையதாக்கிக் கொண்டு அவன் வியாபாரத்தில் மும்முரமாகிப் போனான்.

வியாபாரம் செய்வது... அதில் பணம் சம்பாதிப்பது எனும் பந்தய உணர்வு அவனைப் பேய் போலப் பற்றிக் கொள்ளவே தாகம், பசி, உறக்கம் என்று ஒன்றையும் லட்சியம் செய்யாது தன் ரத்தத்திலே ஒன்றி விட்டிருந்த கங்காவையும் மறந்தவனாக அவன் ஓயாது உழைத்தான்... வியாபார சூசனை அவனுக்கு சித்தப்பா தந்துவிட்டுப் போன சொத்துக்களில் இன்னொன்றாக இருந்தது.

சென்னையில் குடியேறிவிட்ட ஒரே ஆண்டு காலத்தில் அவனது வியாபாரம் நான்கு மடங்காக விரிவடைந்து போனது. கட்டிட பொருள்களை விற்பனை செய்வதோடு அல்லாமல் அவன் வீடுகளை வாங்கி விற்கும் எஸ்டேட் ஏஜென்சியில் நுழைந்து விட்டிருந்தான்.

கொள்ளை லாபத்தைக் கொழித்துக் கொண்டதுடன்... தான் வசிக்க... தனக்கு சொந்தமாக மிகவும் நாகரீகமானதொரு வீட்டை நுங்கம்பாக்கத்தில் பிரபல மனிதர்கள் வசிக்கும் ரேமெண்ட் அவன்யூவில்... கட்டிக்கொள்ளத் துவங்கினான்.

நுங்கம்பாக்கத்திலே பங்களா... நகரத்திலே கட்டிடப் பொருள்கள் விற்பனைக்கூடம்... அதன் அருகிலேயே மொத்த வியாபாரக்கிடங்கு... அண்ணா சாலையில் எஸ்டேட் ஏஜென்சி

அலுவலகம் என்று விரிந்து படர்ந்த அவன் இரண்டாவது ஆண்டின் ஆரம்பத்திலேயே... ஒரு திடீர் பணக்காரனாகி விட்டான். புதுப்பணக்காரத் தனத்தின் ஆடம்பரமும் அவனிடம் அட்டகாசமாகச் சேர்ந்து விட்டது.

கோட்டும் சூட்டுமான அலங்காரத்தில்தான் அலுவலகத்திற்கு சென்று வந்தான். பழைய காரை விற்றுவிட்டுப் புத்தம்புது அம்பாசிடரை வாங்கிக் கொண்டு வளைய வந்தான்.

பங்களா கட்டி முற்றுப்பெற்று விட்டிருந்தது. தேவையான சாமான்களை வாங்கிப் போட்டு அழகு செய்து முடித்தான்.

ஒரு குறித்த நாளில் வீடு குடிபுகும் நாளை கோலாகலமாகக் கொண்டாட உத்தேசித்து... நாள் குறிப்பிட்டு - பத்திரிகை அச்சிட்டு தான் புதிதாகத் தெரிந்து கொண்ட நண்பர்கள் - தூரத்து உறவினர்கள், வியாபாரிகள் எல்லோருக்கும் அனுப்பிவைத்த போதுதான் அவனுக்குத் திடீரென்று அந்த நினைவுகள்... ஏற்பட்டன.

கிராமத்திலிருந்து அவன் சென்னைக்கு திரும்பியதும் குமரேசனுக்கும், பூரணிக்கும் நன்றி தெரிவித்து ஒரு கடிதம் எழுதியிருந்தான். அவர் பதில் போட்டார். பின்னர் ஒரு தடவை அவன் மறுபடி அவர்களை விசாரித்து கடிதம் எழுதியிருந்தான். அதற்குப் பின்னர் அவர்களை மறந்து போகுமளவு அவனுக்கு சொந்த வேலைகள் பல இருந்துவிட்டன.

சென்னைக்கு வந்து குடியேறிய சில நாட்கள்தான் அவனுக்கு கங்காவை பார்க்க வேண்டுமென்ற ஆசை நெஞ்சை வருடியது. வியாபாரத்திற்கு மும்முரமாகி... அது தந்த வெற்றியில் வெறிபிடித்து உற்சாகமடைந்து... நாலாபுறமும் வியாபாரத்தைப் பெருக்கி தன் நிலையை உயர்த்திக் கொள்ள பாடுபட்டவன்... கங்காவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை அறவே மறந்து விட்டிருந்தான்.

காண்டிராக்டர் பங்களா சாவியை அவன் கையில்

கொடுத்ததும்... கதவைத் திறந்து பல பகுதிகளையும் பார்வையிட்ட போதுதான் அவனுக்கு திடீரென்று மறுபடி கங்காவின் நினைப்பு நெஞ்சை அழுத்தமாகக் கவ்வியது.

ஆனால் இப்பொழுது ரத்னசாமி எப்படி இருக்கார்!

உடம்புக்கு முடியாமல் மருத்துவமனையிலிருந்தவர் குணமாகி மறுபடியும் கடையைத் திறந்து வியாபாரம் செய்கிறாரா?

அவர் ஏன் மறுபடி வியாபாரம் செய்து திண்டாட வேண்டும்... அவனிடமிருந்து அபகரித்துக் கொண்ட அந்த வைரப்பிள்ளையாரை கலைப்பொருள்கள் சேகரிக்கும் எவனிடமாவது விற்று அந்த பணத்தில் மனிதன் நிம்மதியாக ஓய்வடைந்து விட்டிருக்கலாமே... மகளுக்கு வேண்டிய வரதட்சணையை வாரிக்கொடுத்து... அவளையும் வாழ வைத்திருக்க முடியுமே?

ரத்னசாமி என்னவானார் என்று பார்க்க வேண்டாமா? ஒரு வழியில் அவன் அவரது துரோகத்திற்கு நன்றி செலுத்தினான்.

அவரால் ஏமாற்றப்படாதிருந்தால் நரேந்திரன் தன் சித்தப்பாவைத் தேடிக்கொண்டு அவசரமாக போயிருக்க மாட்டான். கணிசமான முதல் கிடைத்திருக்காது... வியாபார நுணுக்கங்களைப் புரிந்து கொண்டிருக்க மாட்டான். அத்துடன் முன்னுக்கு வர வேண்டுமென்ற வேகம் புயலாகப் புறப்பட்டிருக்காது... எல்லாம் நன்மைக்குத்தான் என்று பலவும் சிந்தித்தபடி தனது காரை பீட்டர்ஸ் சாலை வழியே ஓட்டினான்.

அமராவதி ஜ்வல்லர்ஸ் எனும் அந்த கடையின் வாசலில் பூட்டு தொங்கியது.

காரை ஓதுக்குப் புறமாக நிறுத்திவிட்டு அருகில் சென்று பார்த்தான். கதவின் மேல் தூசி படிந்துகிடந்தது. அப்படியென்றால் பல நாட்களாகக் கடையைத் திறக்க வில்லையா? ஒருசமயம் ரத்னசாமி மாரடைப்பில்... மரணமடைந்து விட்டாரா?

திடீரென்று ஏற்பட்ட திகைப்பில் அவன் ஒரு கணம் அயர்ந்து போனான்.

''என்னங்க பார்க்குறீங்க?'' பக்கத்து மளிகைக்கடை பையன் ஆவலுடன் விசாரித்தான்.

''இந்த கடை முதலாளியைப் பார்க்க வந்தேன். அவர்...'' முடிக்காது நிறுத்தினான்.

''அவர் உடம்புக்கு முடியாம இப்போ வீட்டோட இருக்கார்... கடை ஆறுமாசமா பூட்டிக்கிடக்கு. உள்ளே வச்சிருந்த நகைகள் எல்லாத்தையும் வித்துட்டதாக கேள்வி. கடையைக்கூட விக்கப் போறதாகச் சொல்றாங்க...'' வினாடியில் பல அக்கப்போர்களை அவிழ்த்து விட்டான் பையன்.

திடீரென்று ஏற்பட்ட ஆவலைத் தவிர்க்க முடியாது... அவன் காரை ரத்னசாமியின் வீடு இருந்த திருவல்லிக்கேணி முத்துவீரன் தெருவுக்கு ஓட்டினான்.

காரை ஓரமாக நிறுத்திவிட்டு... தன் பிரீஃகேசிலிருந்து ஒரு அழைப்பிதழை எடுத்துக் கொண்டு... வாயில் அழைப்பு மணியை அழுத்தினான். கதவு திறப்பதற்குள் நெஞ்சு விரிந்துவிடும் போல வேகமாக அடித்துக் கொண்டது.

மாலைப் பொழுது மஞ்சளாகிவிட்ட நேரம்.

''யாரது?'' என்று வழக்கம் போன்ற அதே பாணியில் அதட்டி விசாரித்த கங்கா, கதவைத் திறந்தவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

அடையாளம் கண்டு கொள்ள அவளுக்குச் சில நிமிடங்கள் ஆகின. கடைசி முறையாக அவனைப் பார்த்ததைவிட லேசாக உப்பி — சிவந்து காணப்பட்ட நரேந்திரன்... கோட் சூட் அலங்காரத்தில் ரொம்பவே ஆடம்பரமாகக் காணப்பட்டான்.

தெருவோரம் நின்ற காரை அவள் பிரமிப்புடன் பார்த்தாள்.

அவளும் கொஞ்சம் மாறுதலாகத்தான் தெரிந்தாள். முன்னைவிட இளைத்து... கவலை படர்ந்த முகமும், கலக்கமான கண்களுமாகக் காணப்பட்டாள். கைவேலையாக இருந்தவள் போல ஆடை அலங்கியிருந்தது. வியர்வையில் குங்குமம் நெற்றியில் பரவி வழிந்து கொண்டிருந்தது.

''வாங்கோ... அப்பாவைத் தானே பார்க்க வந்திருக்கீங்க?'' கேட்டபடி சட்டென்று உள்ளே நகர்ந்தாள்.

அலங்கிய கூந்தலும், நசுங்கிய ஆடையுமாக அவன் எதிரே நிற்க அவளுக்கு மிக்க கூச்சமாக இருந்தது.

''யாரது கங்கா...?'' ரத்னசாமியின் கரகரத்த குரல் கிணற்றிலிருந்து ஒலிப்பது போல் மெல்ல கேட்டது.

''அவர்தான் உங்க சிநேகிதர் மகன்... பம்பாய்க்காரர் வந்திருக்கார் அப்பா!'' கூறிவிட்டு அவள் பின்பக்கம் விரைந்தாள்.

அறையினின்று தள்ளாடியபடி எழுந்து வந்த ரத்னசாமி கூடத்து குழல் விளக்கைப் போட்டார். எதிரே நின்றவனை ஆச்சரியமாகப் பார்த்தார்.

நரேந்திரனா அவன்?... இந்த தடபுடல் தோற்றம் எப்படி வந்தது? அவருக்கு வியப்பு தாங்க முடியவில்லை...

''வணக்கம் அய்யா... உங்களை இன்னிக்குத்தான் வந்து பார்க்க முடிஞ்சது... கொஞ்சகாலமாக எனக்கு என் வேலையே சரியா இருந்தது. உங்களுக்கு உடம்பு சுகமில்லைன்னு கேள்விப்பட்டேன். மனது கேட்கலை. நேரில் வந்து பார்த்துவிட்டு, அப்படியே உங்களையும், உங்கள் மகளையும் என் வீட்டு புதுமனை புகும் வைபவத்திற்கு அழைச்சிட்டு போகலாம்னு வந்தேன்!'' என்றபடி தன் கையிலிருந்த அழைப்பிதழை அவர் பார்வைக்கு மேஜைமேல் வைத்தான்.

ரத்னசாமியால் நம்பவே முடியவில்லை... நுங்கம்பாக்கம் ரேமெண்ட் அவன்யூவில் சொந்த பங்களாவா?...

நரேந்திரன் திடீரென்று எப்படி பணக்காரனானான்? கொள்ளையடித்தானா... லாட்டரி சீட்டு விழுந்து கோடீஸ்வரனாகி விட்டானா? அல்லது கள்ளக் கடத்தல் வியாபாரம் செய்து கபகபவென்று முன்னுக்கு வந்து விட்டானா? பலவும் எண்ணி பிரமித்தபடி... ''உக்காரப்பா... உக்கார்... நீ நல்லா முன்னுக்கு வருவேன்னு எனக்கு அப்பவே தெரியும்'' என்றார். ஒரு நாற்காலியில் ஆயாசமாகச் சாய்ந்து கொண்டார்.

அதற்குள் கங்கா முகத்தை கழுவித் துடைத்து பொட்டிட்டுக் கொண்டு... முடியை சீராக்கி கொண்டையிட்டு முடித்துவிட்டு... அலமாரியில் பெட்டி போட்டு அடுக்கி வைத்திருந்ததொரு வாயில் சேலையில் தன்னை அலங்கரித்துக் கொண்டாள்.

''கங்கா... நம்ப தம்பி நரேந்திரனுக்கு சாப்பிட காப்பி, ஹார்லிக்ஸ் ஏதாச்சும் கொண்டு வா...?'' மகளுக்கு உத்தரவிட்டார்.

பேசி முடிப்பதற்குள் அவருக்கு மூச்சு வாங்கியது. முன்னைவிட பாதியாக இளைத்து... நலிந்து நோயாளியாகத் தென்பட்ட ரத்னசாமியின் கண்களில் மட்டும் அந்த பேராசைக் குறி இன்னும் மாறவில்லை.

அவனைக் கண்டதும் அது இரட்டிப்பாக பளபளத்தது.

''தம்பி... இத்தனை பெரிய பங்களாவில் தன்னந்தனியாகவா இருக்கப் போரே... வீட்டைக் கட்டணும். பிறகு கல்யாணமும் பண்ணிக்கணும் இல்லையா!''... கேட்டார்.

கால் மேல் கால் போட்டுக் கொண்டு அழுத்தலாக உட்கார்ந்த நரேந்திரன், உள்ளிருந்து வந்த கங்காவைப் பார்வையால் விழுங்கினான்.

அடிமனதிலே நீறுபூத்த நெருப்பாக அமுங்கிக் கிடந்த

அவனது ஆசை... அவளைக் கண்டதும்... தீயாக திகுதிகுவென்று... நெஞ்சு வரை நீண்டு மூண்டு விட்டதை உணர்ந்தான்.

''நான் இங்கே வந்ததின் நோக்கம் உங்ககிட்ட மன்னிப்பு கேட்கத்தான் ஐயா... அந்த வைரப்பிள்ளையாரை நான் வழியில் எங்கேயோ காணாமல் போக்கிவிட்டு உங்களிடம் வந்து, தவறாக தர்க்கம் செய்தது பற்றி ரொம்ப விசனப்படறேன் —என்னை நீங்க மன்னிக்கணும்!''

கங்கா அவனை ஆச்சர்யமாகப் பார்த்தாள் — நரேந்திரன் உண்மையில் அவர்களை அந்த சம்பவம் பற்றி மன்னித்து விட்டானா?

''உங்க ஆசியினாலே நான் இப்போ எஸ்டேட் ஏஜென்சி வச்சு நல்லாயிருக்கேன்.''

''நல்லா நீ இருக்கணும் என்கிறதுதான் என் ஆசை... அந்த பழைய சங்கதியை நான் அப்பவே மறந்துட்டேன். என் சிநேகிதன் மகன் நீ... உன்னை நான் வெறுக்க முடியாதே தம்பி... சரி விட்டுத்தள்ளு... இனி நாம் அதைப் பத்தி பேசவே வேண்டாம்... எஸ்டேட் ஏஜென்சி வச்சு நடத்துகிறியே, எனக்கு ஒரு உபகாரம் செய்வியா...?''

''சொல்லுங்கோ, தாராளமா செய்ய காத்திருக்கேன்...!'' என்றபடி கங்கா கொண்டு வந்து வைத்த காப்பியை வேகமாகப் பருகினான்.

''எனக்கு இப்போ ரொம்ப கடனா போயிட்டது. வியாபாரத்தை மூட்டை கட்டி வச்சுட்டேன். இந்த வீட்டையும் கடையையும் வித்து... கங்காவுக்கு ஒரு வழி பண்ணணும்... இந்த வீட்டையும் கடையையும் எனக்கு வித்து கொடுத்து உதவுவாயா?...''

'கதை இப்படி மாறுகிறதா?'... தனக்குள் சிரித்துக் கொண்டான்.

''அதுக்கென்ன அந்த உதவியை நான் கட்டாயம் செய்வேன். மறுக்காம நீங்க... என் வீட்டு கிரகப் பிரவேசத்துக்கு வரணும். வேண்டுமானால் காரை அனுப்பி அழைக்கிறேன்'' என்றான் பரிவுடன்.

''கட்டாயம் வரோம். நடுவிலே நமக்குள்ளே ஏற்பட்ட அனாவசிய மனத்தாங்கல் இத்தோட போகட்டும். என்றும் நாம் நண்பர்களாக இருக்கனும்...'' என்றார் மிகவும் குழைந்த குரலில்.

''அப்படியே இருப்போம்'' என்று எழுந்திருந்த நரேந்திரன் கண்கள் கங்காவை மென்மையாகப் பார்த்தன.

'நண்பர்கள் மட்டுமல்ல — உறவினர்களாகவும் இருப்போம்!' என அவளுக்கு மட்டும்... அவை... பேசாமல் பேசின.

17

வஞ்சகமானதொரு மகிழ்ச்சியால் ஏற்பட்ட உணர்வுகளின் இறுக்கம் அவனது உறக்கத்தைக் கெடுத்தது. ரத்தினசாமியையும், அவரது மகள் கங்காவையும் பற்றி சிந்தித்தபடி படுக்கையில் புரண்டதின் விளைவு உடம்பு கனத்தது. தலை பாரமாக இருந்தது.

கண்கள் கோவைப் பழமாக சிவந்து காய்ச்சல் வந்தவனைப் போல தடுமாற்றத்துடன் குளியலறையிலிருந்து அன்று காலை அவன் வெளிப்பட்டபோது தாயம்மாள் பார்த்தாள். இரண்டு ஆண்டு காலமாக வீட்டோடு உழைத்துக் கொண்டிருந்த அவளுக்கு அவன் மீது தாய் போன்ற பரிவு.

முதல் நாள் இரவு... நடுநிசி வேளையில் அவள் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். காஸ் அடுப்பை மூட

மறந்து விட்டோமோ என்ற சந்தேகம் தோன்ற அவள் பின்பக்கமிருந்து தங்கள் அறையினின்று மெல்ல எழுந்து வந்து பார்த்தாள்.

அது சமயம் மாடியறையினின்று வெளிப்பட்டு படிகளில் நரேந்திரன் வேகமாக இறங்கி வருவதைக் கண்டாள். பிரிட்ஜைத் திறந்து குளிர் நீர் பாட்டிலை எடுத்து ஒரே மூச்சாக குடிப்பதைக் கவனித்தாள்.

அடுப்பை சோதித்துவிட்டு திருப்தியுடன் பின்பக்கம் திரும்பியவள்... நரேந்திரன் மாடிக்கு திரும்பாது முன்னறையில் விளக்கைப் போட்டுக் கொண்டு சோபா ஒன்றின் மீது அமர்ந்து கண்களை மூடிக் கொண்டு... சாய்ந்து கொண்டதைப் பார்த்தாள்.

அவன் அந்த வேளையில் அங்கே வந்து எதற்காக உட்கார வேண்டும்? என்னத்தைப் பற்றி ஆலோசனை.

'எழுந்து போய் படுங்கோ அய்யா... இப்போ நேரம் என்ன ஆகுது தெரியுமா?' என்று சொல்ல வேண்டும் போன்ற தவிப்பு.

ஆனால் அவளுக்கு அத்தனை உரிமை கிடையாதே? யஜமானுக்கு கல்யாணமாகி வீட்டுக்கு ஒருத்தி வந்திருந்தால் இப்படி இரவு கண் விழித்துக் கொண்டு என்னவெல்லாமோ யோசித்தபடி தூக்கம் கெட உட்கார்ந்திருப்பதை அனுமதிப்பாளா?

ஒரு சமயம் புதுமனை புகுவிழாவுக்கு செய்ய வேண்டிய ஏற்பாடுகளைப் பற்றி தீவிரமாக சிந்திக்கிறாரா?

அவர் சிறிதும் கவலைப்பட தேவையில்லையே? அவரது அந்தரங்க காரியதரிசி என்று காலையிலிருந்து இரவு வரை கை கட்டியபடி நிழலாகப் பின் தொடர்ந்து நிற்கும் அந்த மனிதன் யோகநாதன் எல்லாவற்றையும் செய்து முடிப்பாரே? எள் என்றால் எண்ணையைக் கொண்டு வந்து நிற்கும் அசகாயச் சூரராச்சே!

வீடு வாசல் என்றிருந்தும் இவர் ஏன் இன்னமும் கல்யாணம் செய்து கொள்ளாது தனிக் கட்டையாக வாழணும்?

புது வீடு கட்டி முடிந்ததும்... நல்ல நாள் பார்த்து பருப்பும், தண்ணீரும் வைக்க காரியதரிசி தமது மனைவியை அழைத்துக் கொண்டு வந்திருந்தார்.

மிட்டாய் டப்பாக்களுடன் வெற்றிலை பாக்கு தட்டை சுமந்து கொண்டு அந்தம்மாளுக்கு உதவியாக நரேந்திரனின் புது பங்களாவுக்கு அவள் போயிருந்தாள்.

வீடா அது? கடல் போல் எத்தனை பெரிய பங்களா? சுற்றிப் பார்ப்பதற்குள் கால் ஓய்ந்துவிடும் போன்ற பிரமிப்பைத் தந்தது. இந்த அழகான பங்களாவில் யஜமானனோடு வாழ எந்தப் பெண்ணுக்கு கொடுத்து வைத்திருக்கிறதோ என்று பெருமூச்செறிந்தாள் அன்று.

சமையலறை அருகே வந்த நரேந்திரன் சொன்னான். ''கொஞ்சம் சூடா காப்பி மாத்திரம் எடுத்து வாங்க. இன்னிக்கு காலைப் பலகாரம் எதுவும் தேவையில்லை. வயிறு சரி இல்லை'' என்றான்.

விடியுமுன்பே எழுந்து குளித்து சுத்தமாக உடுத்திக் கொண்டு சமையலறைக்குள் புகுந்தவள், அவனுக்காக அவன் விரும்பி சாப்பிடும் இடியாப்பத்தைப் பக்குவமாகத் தயாரித்திருந்தாள். தேங்காயைத் துருவி பால் எடுத்து ஒரு கிண்ணத்தில் தயாராக வைத்திருந்தாள்.

மல்லிகைப் பூப் போன்று வெளேரென்று மிருதுவான இடியாப்பங்களை தட்டில் வைத்து, தேங்காய் பால் ஊற்றி சர்க்கரை தூவி அவன் முன்னால் வைத்தாள்... ஆவலோடு எடுத்து சாப்பிட்டு விட்டு, 'தாயம்மா! சும்மா சொல்லக் கூடாது. நீங்க சமையலில் ரொம்பவே திறமைசாலி... எங்கம்மா செய்கிறாப்பல இடியாப்பம் செய்திருக்கீங்க. வாயிலே கரையுதே!' என்று வியப்போடு புகழ்வதைக் கேட்க மனம் ஆவலில் துடித்தது.

பலகாரம் வேண்டாம்... காப்பி போதும் என்றபோது அவளுக்குப் பெருத்த ஏமாற்றமாகத் தான் இருந்தது.

சாப்பாடு மேஜையருகே உட்கார்ந்தவன் முன்னால் காப்பி டம்பளரை வைத்தாள்.

தன் கையிலிருந்த சரிகை காகித அட்டையை உரித்து... இரண்டு வெள்ளை மாத்திரைகளை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு காப்பியை வேகமாக அவைகளுடன் விழுங்கினான் நரேந்திரன்.

அவள் கணவன் தங்கப்பன் கொண்டு வந்து மேஜை மேல் வைத்த நாளேட்டை மேலெழுந்தவாரியாகப் புரட்டி விட்டு துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு மாடிப் பக்கம் போய்விட்டான். தாயம்மாள் தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டு சமையலறைக்குத் திரும்பினாள்.

'இப்படி பட்டினியா ஆபீசுக்குக் கிளம்பினா உடம்பு என்னத்துக்கு ஆகும்... இவருக்குன்னு ஒருத்தியிருந்தா விடுவாளா? என்னதான் வேலைன்னாலும் இப்படித்தானா? நேரத்தோட ஒரு நாள் கூட சாப்பிட வந்ததில்லை. நேரத்தோட தூங்கியதில்லை... இதையெல்லாம் எப்போ ஒரு மகராசி வந்து கவனிக்கப் போறாளோ?' — பெருமூச்சு விட்டபடி தன் காரியங்களில் ஆழ்ந்தாள்.

அது சமயம் வாசலில் கட்டியிருந்த அவனது அருமை நாய் திம்மன் ஆக்ரோஷமாகக் குரைப்பது கேட்டது.

அவளும் அவள் கணவனும் அங்கு வேலைக்குச் சேர்ந்த புதிதில் திம்மனும் வந்து சேர்ந்து விட்டிருந்தது. அப்படி ஒன்றும் ஒரு உயர்ந்த ரக நாய் அல்ல அது. தெருவில் அலைந்து கொண்டிருந்த ஒரு மட்டரக நாயின் குட்டிகளில் ஒன்று அது.

தாயைப் பிரிந்து தடுமாறிக் கொண்டு போக்குவரத்தின் சத்தத்திற்கு அஞ்சி... அவன் வீட்டு வாசலில் கேட்டருகே வந்து ஒண்டிக் கொண்டிருந்தது. காரை ஓட்டிக் கொண்டு வந்த

நரேந்திரன் அந்த நாய்க்குட்டியைக் கண்டு பரிதாபப்பட்டு... அதைத் தூக்கி வந்து உள்ளே சேர்த்தான்.

சேரும் இடத்தில் வந்து அது சேர்ந்துவிட்டதால் அதற்கு ராஜயோகம் அடித்தது.

சில நாட்களுக்குள்... கொழு கொழு வென்றதொரு அழகான நாயாக வளர்ந்து தன் நன்றிக்கடனைக் கழிப்பது போல அந்த வீட்டை பத்திரமாக பாதுகாத்துக் கொண்டிருந்தது. காற்று கவறி கேட்டின் மீது வீசி அசைத்து விட்டால் கூடபோதும்... வீடு கிடுகிடுக்க... குரைத்து... திம்மன்... எச்சரித்து விடும்...

''தாயம்மா... தங்கப்பா! யாராவது ஒருத்தர் வாசல் பக்கம் போய் பாருங்க. திம்மன் ஏன் இப்படி குரைக்கிறது?'' என்று கேட்டபடி அலுவலகம் போக அலங்கரித்துக் கொண்டு மாடியினின்று நரேந்திரன் இறங்கி வந்தான்.

தங்கப்பன் கை வேலையை போட்டுவிட்டு வாசலுக்கு விரைந்தான்.

கேட்டருகே தயங்கிக் கொண்டு கையில் ஒரு பெட்டியுடன் நின்று கொண்டிருந்தாள் ஒரு இளம் பெண். வெகு தொலைவிலிருந்து பயணப்பட்டு வந்தவள் போல் முகம் சோர்ந்து... முடி புரண்டு ஆடைகள் நலுங்கிக் காணப்பட்டாள்.

அவளுடன் கூட ஒரு பள்ளிச் சிறுவன் நின்று கொண்டிருந்தான்.

''இதுதானே திரு.நரேந்திரன் அவர்களது வீடு?'' தயக்கமாக மெல்லிய குரலில் கேட்டாள் அவள்.

''ஆமாம் நீங்க...?'' என்று தங்கப்பன் கேட்டு முடிக்கு முன் ''அக்கா எனக்கு பள்ளிக் கூடத்துக்கு நேரமாச்சு... அம்மா உங்களுக்குத் துணையாக விட்டுவரச் சொன்னதை செய்து முடிச்சுட்டேன். வரேன்?'' என்று ஓட்டமாக சிறுவன் ஓடி மறைந்து போனான்.

கேட்டை திறந்து கொண்டு அவள் உள்ளே வந்தது தான்

தாமதம். திம்மன் தலைவெடிக்கும்படி குரைக்கத் தொடங்கி விட்டது. கழுத்தில் பிணைக்கப்பட்டிருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு அவள் மேல் பாய்ந்து விடும்போல ஆர்ப்பாட்டங்கள் செய்யவே அவள் பயந்து போனாள்...

''நாய்... நாய்...!'' என்று குழறினாள்.

''பயப்படாதீங்க. அதைக் கட்டி வச்சிருக்கோம். அய்யாவைப் பார்க்கணுமா? உள்ளே வாங்கோ. அவர் ஆபீசுக்குப் புறப்படற நேரம். நீங்க யார்னு அவர்கிட்டே சொல்லட்டும்?'' தங்கப்பன் மிகவும் கனிவுடன் கேட்டான்.

கையில் பெட்டியுடனும், மூட்டையுடனும்... வந்து காலை வேளையில் யாசகத்திற்கு நிற்கும் பெண்ணாகத் தெரியவில்லை. அந்தக் குடும்பத்திற்கு உறவு போன்று காணப்பட்டாள்.

தங்கப்பன் வாயிற் கதவை அகலத் திறந்து வைத்துவிட்டு அவள் கையிலிருந்த பெட்டியை வாங்கிக் கொண்டு வேகமாக முன்னே நடந்தான்.

''பூரணி வந்திருக்கிறாள்ன்னு சொல்லுங்கோ - அவருக்குத் தெரியும்'' என்றாள் மெல்லிய குரலில்.

''யாரது'' என்று கேட்டபடி முன்னறைக்கு வந்த நரேந்திரன் திடுக்கிட்டுப் போனான். ''பூரணியா! அதிசயமா இருக்கே. வாம்மா - தாத்தாவும் கூட வந்திருக்காரா?'' என்று அவன் கேட்டு முடிப்பதற்குள் அவள் குலுங்கி அழுதாள்.

''தாத்தாவுக்கு என்ன ஆச்சு? உட்கார்ந்து விவரமா சொல்லும்மா!''... பதறினான் நரேந்திரன்.

''தாத்தா போனமாத இறுதியில் உடம்புக்கு முடியாம போய் நகரத்து ஆஸ்பத்திரியிலே படுத்தவர்... திரும்பி வரலை...!'' தட்டுத் தடுமாறி சொல்லிவிட்டு, முன்னறை இருக்கை ஒன்றில் அமர்ந்து கொண்டு, தன் கரங்களால் முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

நரேந்திரன் குற்ற உணர்வில் தவித்துப் போனான். இந்த இரண்டு ஆண்டு காலத்தில் அவன் அவர்களைப் பற்றி மறந்தே போனது எத்தனை பெரிய பிசகு. ஆபத்துக்கு உதவிய கிழவரை அவன் நினைவினின்று ஒதுக்கி விட்டது எத்தனை பெரிய தவறு?

சென்னைக்கு வந்ததும் நன்றி தெரிவித்து தன் வீட்டு முகவரி தந்து ஒரு கடிதம் போட்டான். அதற்குப் பின் தொழில் அவனை ஆட்கொண்டு விட்டது. அதன் பிடியில் சிக்கிப் போய் அவன் தன்னை அரவணைத்துப் பாதுகாத்த அந்த இருவரையும் பற்றி மறந்தே போய் விட்டிருந்தான். ''அழாதே பூரணி. கண்களைத் துடைத்துக்கொள்!'' என்று ஆறுதலாகச் சொல்லிவிட்டு - ''தாயம்மா சூடா கொஞ்சம் காப்பி கொண்டு வாங்கோ!'' என்று குரல் கொடுத்தான்.

''நீங்க அங்கிருந்து வந்த பிறகு எங்கள் வாழ்க்கையில் கொஞ்சம் சிரமம் ஏற்பட்டது. தாத்தா அடிக்கடி உடம்புக்கு வந்து படுத்துக் கொண்டார். விவசாயமும் அத்தோடு படுத்துப் போனது.''

''எனக்கு ஒரு கடிதம் போட்டிருக்கக்கூடாதா? நான் உதவமாட்டேனா?'' ஆதங்கத்துடன் கேட்டான் நரேந்திரன்.

இந்த இரண்டு ஆண்டுகளில் பூரணி தோற்றத்தில் கொஞ்சம் மாறி விட்டிருந்தாள். கருத்து - இளைத்து... ஒடுங்கிப் போய் காணப்பட்டாள். பாவம்! என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான் அவன்.

இந்த இரண்டாண்டு காலத்திலே எத்தனை வித்தியாசமாக காணப்படுகிறார். வெளியில் சந்தித்திருந்தால் அடையாளம் கூட தெரிந்திருக்காதே... முன்னைவிட சிவந்து - லேசாக பருத்து... என்று எண்ணியபடி தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

''தாத்தாவுக்கு யாரிடமும் உதவி கேட்க பிடிக்காது. அதனால் தெரிவிக்கவில்லை. மேலும் உங்களது முகவரி

கொண்ட கடிதத்தை நான் எங்கேயோ தொலைத்து விட்டிருந்தேன். தாத்தா உடம்பு அதிகமாகியது பற்றியும் வீட்டையும், நிலத்தையும் விற்று அந்த பணத்திலே அவருக்கு மருத்துவமனை சிகிச்சை கொடுக்க முயன்றது பற்றியும், அவர் காலமானது பற்றியும் எதுவுமே எழுத முடியாது... நான் தனியே தவித்துப் போனேன். தாத்தாவின் மறைவிற்குப் பிறகு... நகரத்திலே எங்க தூர உறவுக்காரர் வீட்டில் தங்கிக் கொண்டு ஒரு வேலை தேடிக் கொள்ள முயன்றேன்.''

''காப்பியை சாப்பிடு முதலில் - பிறகு பேசலாம்!'' அன்போடு உபசரித்தான் நரேந்திரன்.

தாயம்மா கொண்டு வந்து வைத்த காப்பியை எடுத்து ஆவலுடன் பருகினாள். அவளுக்கு ரொம்பவே பசி - இரவு பயணத்திற்கு முன் அவள் எதுவுமே சாப்பிடவில்லை.

''வேலை கிடைக்காது திண்டாடிய போது உங்க நினைப்பு வந்தது. என் நல்ல காலமாக காணமற் போன உங்க கடிதம் என் பெட்டியில் ஒரு புத்தகத்திற்குள் அகப்பட்டது. முகவரி தெரிந்ததும்... சென்னைக்கு புறப்பட்டு பக்கத்து வீட்டு அம்மாவோட வந்துட்டேன். நேத்து முழுவதும் அவங்க வீட்டிலிருந்தேன் - இன்னிக்கு அவங்க பேரன் என்னோட துணைக்கு வந்து விட்டுட்டு போனான்...!'' விம்மலுக்கும், விசும்பலுக்கும்... இடையே கூறி முடித்தாள்.

''நல்லவேளை... இங்கே வந்து சேர்ந்தே... கவலையை விடு!'' என்று கூறிவிட்டு... ''தாயம்மா...! இவங்க தங்குவதற்கு எதிரே உள்ள பெரிய அறையை சுத்தப்படுத்தி கொடுங்கோ. குளிச்சிட்டு ஏதாச்சும் சாப்பிட்டு விட்டு ஓய்வா இருக்கட்டும்...'' என்றான்.

''இனி தவலையில்லை. கட்டாயம் எனக்கு நீங்க ஒரு வேலை தேடிக் கொடுப்பீங்கன்னு நம்பிக்கை இருக்கு!'' கண்ணீரிடையே புன்னகைத்தாள் பூரணி.

''வேலை எதுக்கு? இந்த வீடு உன்னுடையது. இதிலே என்

பாதுகாப்பில் நீ எப்பவும் இருக்கப்போரே...! பிறகு வந்து பேசிக்கிறேன். அவசரமாக அலுவலகம் போக வேண்டியிருக்கு... கொஞ்சமும் கூச்சப்படாம... தேவைப்பட்டதையெல்லாம் கேட்டு தாயம்மா கிட்டே வாங்கிக்கோ'' என்றான்.

''தாயம்மா! இவங்க இனி இங்கே நம்மோட இருக்கப் போறாங்க. பார்த்துக்கோங்க!'' என்றபடி வெளியே நடந்தான்.

தாயம்மாவின் கண்கள் வியப்பில் விரிந்தன. வீட்டுக்கு வந்திருக்கும் மகராசி... அழகாகவே... ஐயாவுக்கு பொருத்தமானவளாக இருக்காளே!

அத்தை மகளோ - மாமன் பெண்ணோ? ஏதோ உறவுமுறை? இந்த உறவு நிரந்தரமானதாக இருவரையும் பிணைக்கட்டும்... என்று எண்ணி மகிழ்ச்சியுடன் உள்ளே விரைந்தாள்.

18

பூரணி கண்ணாடி முன் நின்றாள். அவளால் நம்பவே முடியவில்லை.

கழுத்திலும் - கைகளிலும் தங்கம் பளிச்சிட - காதுகளிலும், மூக்கிலும் வைரம் ஒளிவிட சரிகைக்கரை மின்னிய காஞ்சிபுர பட்டுச் சேலையில் அவள் சீமான் மகள்போல பணக்காரத்தனமாகத் தெரிந்தாள்.

தன் உருவத்தை இன்னொரு முறை ஏற இறங்கக் கண்ணாடியில் பார்த்துவிட்டு... வெட்கத்துடன் அறையைவிட்டு வெளியே வந்தாள்.

''அட! ஆளே மாறி விட்டிருக்கியே?... இப்பத்தான் உன்னை இந்த வீட்டுப் பெண்ணுன்னு பார்ப்பவங்க

நம்புவாங்க!'' வரிசைப் பற்கள் தெரிய மோகனமாக நரேந்திரன் சிரித்தான்.

''எனக்கு தங்க ஒரு இடம் தந்து உதவினிங்களே. அது போதும். இதெல்லாம்...!'' முடிக்காது முகம் சிவந்து கூச்சத்துடன் அவனைப் பார்த்தாள்.

அன்று மாலை அவன் தன்னுடைய காரில் அவளை அழைத்துக் கொண்டு கடைத்தெருவுக்குச் சென்றான். நகைக்கடை ஒன்றிற்குள் முதலில் அவர்கள் புகுந்தார்கள். கடைக்காரருக்கு அவனை மிகவும் தெரியும் போலும்! எத்தனை உபசாரமான வரவேற்பு அவர்களுக்கு... பிரமித்துப் போனாள் பூரணி...

கடை முதலாளி ஏ.சி.யில் குளிரைக் கொட்டிக் கொண்டிருந்த தமது அறைக்குள் அழைத்துச் சென்று மெத்தென்ற சோபாக்களில் அமர்த்தினார். ''சூடாக காப்பியா, ஜில்லுனு குளிர்பானமா?'' மகிழ்ச்சியுடன் கேட்டார்.

''இப்போத்தான் டிபன் சாப்பிட்டுவிட்டு புறப்பட்டிருக்கோம். அதெல்லாம் தேவையில்லை. வைரத்தோடு - மூக்குத்தி இவைகளை இவங்க பார்க்கணும்... கொண்டு வந்து காட்ட முடியுமா?'' என்றான்.

''நிறைய டிசைன்கள் இருக்கு கொண்டு வரேன்!'' வெளியேறிய கடை முதலாளி வெல்வெட் பெட்டிகள் சிலவற்றை எடுத்து வந்து திறந்து அவள் முன் மேஜை மேல் வைத்தார்.

''பிடிச்சதா பார்த்து எடுத்துக்கோ...!'' நரேந்திரன் அன்புடன் கூறினான். அவளுக்கு மிக்க திகைப்பாக இருந்தது.

தனக்கு விலையுயர்ந்த நகைகள் வேண்டும் என்று அவள் அவனிடம் கேட்கவில்லையே?

குழப்பத்துடன் அவள் தயங்குவதை உணர்ந்து சட்டென்று நகைகளை அவனே பொறுக்கி எடுத்தான்.

கடைக்காரர் கொடுத்த பில்லை வாங்கி பையில் போட்டுக் கொண்டு அவன் தன் பிரிஃப்கேஸைத் திறந்து காசோலையை எடுத்து வேகமாக எழுதத் தொடங்கினான். பூரணி அவன் தோளைத் தாண்டி பார்வையை ஓட விட்டவள் திடுக்கிட்டுப் போனாள்.

ஐம்பதாயிரத்துக்கு மேல் ஓடிய கணக்குக்கு அவன் காசோலையை அசட்டையாக எழுதிக் கையெழுத்திட்டுக் கொண்டிருந்தான்.

''அம்மாவுக்கு நகைகள் பிடிச்சிருக்குன்னு நம்பறேன்... இவங்க...?'' கடைக்காரர் இழுத்தார்.

''நம்ப உறவுக்காரங்கதான்...!'' பட்டென்று பதிலளித்துவிட்டு அவன் நகை பார்சலுடன்... கிளம்பினான்.

அடுத்ததாக அவர்கள் புடவைக் கடைக்குள் புகுந்தனர். வண்ண வண்ண சேலைகளை விற்பனையாளர் வாரி மேஜை மேல் பரத்திப் போட்ட போது... அவளுக்கு தலையே சுற்றியது.

''வேண்டியதை எடுத்துக் கொள்!'' என்று அவன் உத்திரவிட்டாலும் அவளுக்கு ரொம்பவே தயக்கமாகவே இருந்தது.

இந்த விலை உயர்ந்த புடவைகள் எல்லாம் அவளுக்கு இப்போது எதற்கு?...

இங்கேயும் அவனே அவளுக்கு வேண்டியவைகளை பொறுக்கி எடுத்தான்.

வீட்டுக்குத் திரும்பும் முன்னர் நுங்கம்பாக்கம் ரேமண்ட் அவன்யூவிலிருந்த அவனது பதிய பங்களாவைக் காட்ட அழைத்துச் சென்றான்.

இன்னும் ஒரு வாரத்திலே இந்த பங்களாவுக்கு நாம் குடிவரப் போகிறோம் - அடுத்த வெள்ளிக்கிழமையன்று ''புதுமனை புகும் விழா நடக்க இருக்கிறது...'' என்று கூறியபடி அவளுக்குப் பங்களாவைச் சுற்றிக் காட்டினான்.

நகை - புடவைகள் தந்த திகைப்பை விட அந்த பங்களாவின் அழகு அவளை ஆச்சரியத்தில் திணறச் செய்தது.

இத்தனை பெரிய பணக்காரரா அவர்களது ஏழைக் குடிசையில் அவர்களது ஆதரவில் தங்கியிருந்தார்?

வியப்புடன் பங்களாவின் ஒவ்வொரு பகுதியையும் அவை அலங்கரிக்கப்பட்டிருக்கும் நேர்த்தியையும் பார்வையிட்டபடி வளைய வந்தாள்.

வீட்டுக்கு வந்ததும் அவன் சொற்படி நகைகளை அணிந்து கொண்டு புதிய சேலை ஒன்றை உடுத்திக் கொண்டு முன்னறைக்கு வந்து நின்றாள். மனதிலே ஒரு பெருத்த நெருடல்.

இவைகளையெல்லாம் அவளுக்கு வாங்கியளிக்கும் நரேந்திரனின் நோக்கம் என்னவாக இருக்கும்?

அவளது எண்ணத்தை உணர்ந்து கொண்டவன் போல அவன் சட்டென்று பதிலளித்தான்.

''உனது தாத்தா மட்டும் அன்று என்னைக் காப்பாத்தியிராவிட்டால் இந்நேரம் நான் போன இடம் புல் முளைச்சிருக்கும். இரவும், பகலும் நீ செய்த பணிவிடையை என்னால் மறக்க முடியாது.''

விருக்கென்று நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

''அதுக்கெல்லாம் ஈடு செய்யத்தான்... இதுகளை வாங்கித் தந்திருப்பதாகச் சொல்கிறீர்களா?''

அவமானத்தில் காது மடல்கள் கபகபவென எரிய அவனைப் பார்த்தாள்.

''சே! நான் அப்படி மட்டமாக நினைப்பவன் இல்லை. உங்க உதவிகளை இதுகளோட மதிப்பிடவே முடியாது. தாத்தாவும் இல்லாம வேற நெருங்கிய உறவினர்களும் இல்லாம... தனியாகிட்ட உன்னை நான் ஆதரிக்க வேண்டியது கடமை... இவைகளை நான் வாங்கித் தந்ததிற்கு ஒரு காரணம்

இருக்கு... நகரத்திலே ஓரளவு நான் பிரபலமாகி விட்டிருக்கேன். என் நண்பர்களுக்கு உன்னை என் உறவுக்காரியென்று அறிமுகப்படுத்துவேன்...!''

''புரிகிறது... நைந்து போன நூல் சேலையும் - கண்ணாடி வளைகளுமாக நிற்பவளை உங்கள் அந்தஸ்துக்கு ஏற்ற உறவுக்காரியாக அறிமுகப்படுத்த வெட்கமாக இருக்கும்... இல்லையா!''

''பூரணி தயவு செய்து என்னைப் புரிந்துகொள். அது ஒரு காரணம்னு வச்சுக்கோ... இன்னொரு முக்கிய காரணம் இருக்கு. இத்தனை சம்பாதிக்கிறேன் நான்! இதை என்னோடு பகிர்ந்து அனுபவிக்க யாரும் இல்லையே... என்று எத்தனையோ முறை மனம் வருந்தியிருக்கிறேன். காயம் அடைந்து உங்க வீட்டிலே படுத்து கிடந்தப்போ... என்னை உன் சொந்தம் போல் பாவித்து கவனிக்கவில்லையா...? அந்த சொந்தத்தை நான் இப்போ தொடருகிறேன். என் அந்தஸ்துக்குத் தக்கபடி உன் அந்தஸ்தை உயர்த்தி... மரியாதை செய்யறேன். அவ்வளவுதான்!''

''அவ்வளவுதானா?...'' அவளுக்கு இன்னமும் அவனைப் புரியவில்லை. குழப்பத்துடன் மவுனமாக நின்றாள்.

''இந்த புடவை உனக்கு மிகவும் நன்றாக இருக்கு - நம் வீட்டு புதுமனை புகு விழாவுக்கு நீ இப்படி உடுத்திக் கொண்டு... வருகிற விருந்தாளிகளை என் சார்பில் வரவேற்று, உபசரித்துக் கவனிக்கணும். இந்த வீட்டையும் இனி நாம் குடிபுகப் போகும் அந்த வீட்டையும் நிர்வகிக்கிற வேலை உன்னுடையது... உனக்கு ஒரு வேலை வேணும்னு கேட்டுக் கொண்டு வந்தே. இந்த வேலையை கொடுக்கிறேன். ஒத்துக் கொண்டு என்னைக் கவுரவிக்க மாட்டியா?''

நன்றி உணர்வு நெஞ்சை அடைக்க, லேசாகக் கண்களில் பனித்த கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு... தலையை அசைத்தாள்.

வந்த இரண்டு நாட்களில் பூரணி எல்லாவற்றையும் புரிந்து

கொண்டாள். தாயம்மாளிடம் வீட்டு நிர்வாகத்தை கேட்டு தெரிந்து கொண்டாள். ஒரு சில நாட்களில் அவள் பல ஆண்டு பழக்கப்பட்டவள் போல வீட்டை சீராக நிர்வகிக்கத் தொடங்கினாள்.

புதுமனை புகு விழாவன்று வீட்டையும் தோட்டத்தையும் நிறைத்த கூட்டத்தைக் கண்டு அவள் அயர்ந்து போய்விட்டாள். ஆனாலும் துணிவுடன் செயல்பட்டாள்.

விழாவுக்கு வந்தவர்களை புன்முறுவலுடன் வரவேற்றாள். அவர்கள் கொண்டு வந்து தந்த பரிசுப் பொருள்களை நரேந்திரனின் காரியதரிசியிடம் ஒப்படைத்துக் குறித்துக் கொள்ளச் சொன்னாள். பின்னர் அவர்களுக்குக் காப்பி டிபன் தந்து உபசரித்தாள்.

மாலைப் பொழுது அமிழத் தொடங்கிய போது -பங்களாவிற்குள்ளிருந்த அத்தனை விளக்குகளும் பளிச்சிட்டன.

வாயில் புறத்திலும்... தோட்டத்து மரங்கள் மீதும்... தோரணமாகக் கட்டப்பட்டிருந்த வண்ண விளக்குகள் கண்களைச் சிமிட்டிக் கொண்டு எரிந்து கொண்டிருந்தன. காரிலும் - ஸ்கூட்டரிலும்... பல்வேறு வாகனங்களிலும் வந்து இறங்கிக் கொண்டிருந்த விருந்தாளிகளால் பங்களா கலகலக்க... சிரிப்புக்கும், பேச்சுக்கும் இடையே... ஒலிபெருக்கியால் நாலாபுறமும் பரவி காற்றோடு... அசைந்து கொண்டிருந்த... வீணை நாதமுமாக விழா களைகட்டி விட்டிருந்தது.

பொழுது அமிழ்ந்து இருள் பரவிவிட்ட சமயம். முன்னதாக வந்தவர்கள் விடைபெற்றுக் கொண்டு நகர, புதிதாக வந்தவர்கள்... புன்னகையுடன் உள்ளே வர... கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்த சமயம்.

நரேந்திரனின் அம்பாசிடர் கார் வாசலில் வந்து நின்றது. மல்ஜிப்பா - வேட்டி அலங்காரத்திலே தள்ளாடியபடி காரினின்று சற்று வயதான வழுக்கைத் தலை மனிதர்

இறங்குவதை பூரணி பார்த்தாள். கைகூப்பி புன்னகையுடன் வரவேற்க... அங்கே விரைந்த போது, நரேந்திரன் தான் பேசிக் கொண்டிருந்த விருந்தினரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வேகமாக அங்கே ஓடி வந்தான்.

''வாங்கோ... வாங்கோ!'' என்று உரத்த குரலில் கைகூப்பி வணங்கியபடி வரவேற்றான்.

அவனுக்குத் தெரிந்த யாரோ வியாபாரத்தில் முக்கிய புள்ளி போலும் என எண்ணியபடி வேறு ஒரு விருந்தினரை வரவேற்க திரும்பிய போதுதான் பூரணி கவனித்தாள்.

காரினின்று ஒரு இளம் பெண் அவருக்குப் பின்னால் இறங்கினாள்.

''நீங்க ரெண்டு பேரும் வந்தது பற்றி ரொம்ப சந்தோஷம்!'' என்று நரேந்திரன் உற்சாகமாகப் பேசியதைக் கண்டு... வந்தவளை வியப்புடன் காலோடு தலைவரை ஊன்றிப் பார்த்தாள் பூரணி.

உயரமாக ஒடிசலாக இருந்த அந்தப் பெண் பிரிண்டெட் சில்க் புடவையில் எளிய அலங்காரத்தில் மிக அழகாகத் தெரிந்தாள்.

நரேந்திரன் அருகே அலங்காரப் பதுமை போல் நின்ற பூரணியையும் அந்தப் பெண் அதிசயமாகப் பார்த்தாள்.

''பூரணி! இவங்கதான் மிஸ்டர் ரத்னசாமி... இவங்க அவரோட மகள் கங்கா... மிஸ்டர் ரத்னசாமி என் தந்தையோட நெருங்கின நண்பர்... இவர்களை என் உறவினர்கள் என்று கூட சொல்லலாம்'' சிரித்தான்.

பாதாம் அல்வாவும்... வறுத்த முந்திரி பருப்பும்... தயிர் வடையும் கொண்டு வந்து ஆட்கள் மேஜை மீது வைக்க... பூரணி மிக வேகமாகக் காப்பி டம்ளர்களை வைத்து... சாப்பிடுங்கோ என புன்னகையுடன் உபசரித்தாள்.

மேலும் கீழும் அவளை வியப்புடன் கங்கா பார்ப்பதை கவனித்து விட்டான் நரேந்திரன்.

ரத்னசாமி தன் பக்கத்தில் அமர்ந்திருந்த ஒருவரை அடையாளம் கண்டு கொண்டு... மும்முரமாகப் பேசத் தொடங்கி விட்டார். அவர் கவனிக்காத... சமயம்... மெல்ல கங்காவின் அருகில் வந்து மிகவும் தாழ்ந்த குரலில் நரேந்திரன் சொன்னான்.

''மன்னிக்கவும், நான் பூரணியை அறிமுகம் செய்து வைக்க மறந்துவிட்டேன். பூரணி என் மாமன் மகள்... என்னோட தங்கியிருக்க வந்திருக்கிறாள்! இனி இங்கேயேதான் இருக்கப் போகிறாள்...!''

கங்கா முகம் வெளுத்துப் போனாள்... அவளது இதயம் படபடவென்று ஏனோ துடித்தது.

மாமன் மகள் என்ற இந்த அழகி - கூடவே தங்கப் போகிறாள் என்றால்...?

பாதாம் அல்வா விழுங்க முடியாது... தொண்டையில் சிக்கிக்கொண்டு விட்டது போன்றதொரு தவிப்பு உணர்வு. வீட்டிற்கு வந்த போதெல்லாம்... கண்களால் மென்மையாகப் பார்த்து... மவுனமாக என்னவெல்லாமோ ஆசைகாட்டி... அவளை கற்பனை உலகிலே தள்ளி விட்டிருந்தான் நரேந்திரன்.

அவளது கனவுகளுக்கும்... கற்பனைக்கும்... மனதிலே கொந்தளித்துக் கொண்டிருந்த ஆசைகளுக்கும்... மாமன் மகள் ஒரு முட்டுக்கட்டையா?...

மறுபடியும் ஒரு முறை... பூரணி பக்கம் தன் கண்களை ஓட விட்டாள் கங்கா... கோபத்துடன் கீழ் உதட்டை அழுத்திக் கடித்துக் கொண்டாள். அழுகை நெஞ்சுவரை முட்டிக் கொண்டு வந்தது.

19

வீட்டுக்கு திரும்பியதும் ரத்னசாமி முற்றத்தில் மெதுவாக இறங்கி கை, கால், முகம் கழுவிக் கொண்டார்.

தமது அறைக்குள் நுழைந்து விழாவுக்கு உடுத்திச் சென்ற ஆடைகளைக் களைந்துவிட்டு லுங்கி பனியனில்... கூடத்து சோபாவில் சாய்ந்து கொண்டார்.

அவருக்குத் தாங்க முடியாத வியப்பு. அத்தனை பெரிய பங்களாவையும், அந்த ஆடம்பரமான விழாவையும் வந்து கூடியிருந்த பெரிய மனிதர்களையும் பார்த்து ரொம்பவே அயர்ந்து போய் விட்டிருந்தார்.

கங்காவும் மாற்றுடை அணிந்து கொண்டு அங்கே வந்தாள்.

''அப்பா ராத்திரிக்கு என்ன சாப்பிட விரும்புகிறீங்க...'' மெல்லிய குரலில் கேட்டாள்.

''சாப்பாடா? நெஞ்சு வரை தயிர் வடையும், அல்வாவும் முட்டிகிட்டு நிக்கிறது. வேண்டாம்னேன்... ரொம்ப வற்புறுத்தி நிறைய அல்வாவைக் கொண்டு வந்து... வச்சுட்டான்... ஒண்ணும் வேணாம்மா... ஒரு டம்ளர் தண்ணியைச் சாப்பிட்டுட்டு மருந்துகளை விழுங்கிவிட்டு படுத்தா போதும்'' முணுமுணுத்தார்.

''அல்வாவிலே ரொம்ப நெய் - எனக்கும் நெஞ்சுவரை அது கரிச்சுகிட்டு வரது. நான் கொஞ்சம் மோர் மட்டும் சாப்பிடப் போறேன்!'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள் கங்கா.

சிறிது பொழுதில் பின் அறையிலிருந்த பாயை எடுத்து வந்து கூடத்துத் தரைமீது ஒரு பக்கம் விரித்தாள். தலையணையைத் தட்டிப் போட்டுவிட்டு துப்பட்டி ஒன்றை கால் பக்கம் கொண்டு வந்து வைத்துக் கொண்டாள். தந்தை

வழக்கமாக சாப்பிடும் மருந்துகளை - அலமாரி தட்டிலிருந்து எடுத்து அவர் அருகே முக்காலி மீது தண்ணீர் டம்ளருடன் வைத்தாள்.

சிறு புட்டிகளிலிருந்து மாத்திரைகளை ஒவ்வொன்றாக எடுத்துத் தம் உள்ளங்கையில் வைத்துக் கொண்டு வேதனையுடன் பெருமூச்செறிந்தார் ரத்னசாமி.

நாளைக்கு எத்தனை மருந்துகள்... சம்பாதிக்காது வீட்டோடு ஓய்வாகக் கிடக்க நேரிட்டதில் எத்தனை பொருள் நஷ்டம்?

வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய வாங்கிய கடன் தொகை வட்டியுடன் விஷமாக ஏறிவரும் தொல்லை...

வேதனையுடன் மருந்துகளை வாயில் ஒருங்கே போட்டுக் கொண்டு தண்ணீரைக் கொட்டி விழுங்கினார்.

''அப்பா... வேறே எதுவும் வேண்டாமா?'' மகள் கனிவுடன் கேட்டாள்.

''ஒண்ணும் வேணாம்மா. நீயும் நேரத்தோடு படுத்துக்கோ...'' என்று கூறியபடி மகளை ஓரக்கண்ணால் பார்த்தார்.

மனைவியை இழந்துவிட்ட பின்னர்... வீட்டை கங்காதானே சாமர்த்தியமாக நிர்வகித்துக் கொண்டு வந்தாள்.

படித்த பெண்ணானாலும் ரொம்பவே பயந்த சுபாவம். வாயைத் திறந்து - அது வேணும் இது வேணும் என்று அடம்பிடித்தவள் இல்லை. அப்பாவின் அடிமை போல வீட்டுக்குள்ளேயே அடைந்து கொண்டு ஒரு இளம் பெண் எத்தனை காலந்தான் வாழ்வாள்?

ஆமாம்! அவருக்கு திடீரென்று ஏதாவது நேர்ந்து விட்டால்... அவள் கதி?

வியாபாரம் நன்றாக நடந்து கொண்டிருந்த சமயத்தில் தேடியிருந்தால் நல்ல இடத்து மாப்பிள்ளை கிடைத்திருப்பான்.

இப்போது?... மெல்ல எழுந்திருந்தார். சட்டென்று தம் அறைக்குள் போகாது மகளை நிமிர்ந்து பார்த்தார்...

''ஏம்மா? உனக்கு நம்ப முடிகிறதா?''

''எதை அப்பா...'' கங்கா திகைப்புடன் கேட்டாள்.

''இரண்டு வருஷத்துக்கு முன் நாலு சட்டை இரண்டு பாண்ட்னு பட்டணத்துக்கு வந்தவன் நரேந்திரன் - இப்போ ஆள் எப்படி மாறிவிட்டான்? நான் இத்தனை வருஷமா சம்பாதிக்க முடியாததை இவன் எவ்வளவு சீக்கிரத்திலே அள்ளிக் குவிச்சுட்டான்?''

''சில பேருக்கு அப்படி ஒரு அதிர்ஷ்டம்!'' அவள் நரேந்திரனைப் பற்றி அப்படி குறிப்பிடவில்லை. மாமன் மகளான அந்த பூரணி அவனுடன் தங்கி வாழ வந்திருப்பதை பற்றி நினைத்துதான் அப்படிச் சொன்னாள்.

''படுத்துக்கறேன். ரொம்ப களைப்பா இருக்கு!'' என்றபடி தள்ளாடிக் கொண்டு உள்ளே சென்று... மகள் தட்டி கொடுத்தப்படுத்தி புதுவிரிப்பு போட்டிருந்த கட்டிலின் மீது சாய்ந்தார்.

கண்களை இறுக்க மூடிக்கொண்டு தூங்க முயன்றார். மனதிலே பல சிந்தனைகள் அலை பாய்ந்தன - ஆசை அலைக்கழித்தது.

வீட்டையும், கடையையும் விற்கும் பொறுப்பை ஏற்று அதைப்பற்றி பேச அடிக்கடி நரேந்திரன் வருவான். அப்போது மெல்ல அவன் கல்யாணத்தைப் பற்றி பேச்சுக் கொடுத்தால்... அவன் மட்டும் கங்காவைக் கட்டிக் கொள்ள ஒப்புக் கொண்டு விட்டால்? பேராசையுடன் பெருமூச்சு விட்டார் ரத்னசாமி. படுக்கையில் அமைதியின்றி புரண்டார்.

குழல் விளக்கை அணைத்துவிட்டு நடையில் மின்விளக்கை எரியவிட்டு பாயின் மீது சுருண்டு கொண்டாள் கங்கா.

அன்று அவளுக்கு அதிகமான வீட்டு வேலைகளிருந்தன. அப்பாவை அழைத்துக் கொண்டு அவள் மாதமொருமுறை அவரை கவனித்து வந்த டாக்டரின் கிளினிக்குக்குப் போக நேர்ந்தது. அங்கு வரிசையில் வெகுநேரம் காத்திருக்க வேண்டி வந்துவிட்டது. திரும்ப அப்பாவை ரிக்ஷாவில் அழைத்து வந்து அவர் களைப்பு தீர பழரசம் கொடுத்து உபசரித்து விட்டு அதுவரை வாசலில் உட்கார்ந்திருந்து காத்திருக்க மறுத்துவிட்ட வேலைக்காரி போட்டுவிட்டுப் போன அத்தனை வேலைகளையும் அவள் ஏற்க நேர்ந்தது.

சமையலுக்குமுன் வீட்டைப் பெருக்கி துடைத்து சுத்தம் செய்து பாத்திரங்களைத் துலக்கி வைத்து... துணிகளைத் துவைத்து காய வைத்து விட்டு... உணவு தயாரிப்பதற்குள் அவளுக்கு முதுகு பிளந்துவிடும் போல வேதனை.

அத்தனை உடல் சோர்வையும் ஒரே சிந்தனையில் அவள் தாங்கிக் கொள்ள முடிந்தது.

அன்று மாலை நரேந்திரன் கார் அனுப்பி அவர்களிருவரையும் தன் வீட்டுக்கு... புதுமனை புகுவிழாவில் கலந்து கொள்ள அழைக்கப் போகிறான்...

மீண்டும் ஒருமுறை அவனை கங்கா சந்திக்கப் போகிறாள். காந்தம் போன்ற அந்தக் கண்களால் அவளை மென்மையாக நோக்கி... பார்வையிலே ஆயிரம் எண்ணங்களை சொல்லப் போகிறான்... என்ற மகிழ்ச்சியான கற்பனையில்... அவள் எல்லாவற்றையும் மறந்து இருந்தாள்.

ஆனால் அங்கே போன பின்பு... அவனுடன் ஜோடியாக விழாவுக்கு வந்தவர்களை உபசரித்தபடி வளைய வந்த பூரணியைப் பார்த்த போது... எப்படி திடுக்கிட்டுப் போனாள்.

யார் இவள்? என்று திகைத்துக் கொண்டிருந்தவளுக்கு நரேந்திரன் அறிமுகம் செய்து வைத்த போது உடல் சில்லிட்டுப் போனாள்.

காலடியிலிருந்த பூமி நழுவுவது போன்றும், எங்கேயோ ஒரு பள்ளத்திற்குள் தலைக்குப்புற அவள் விழுவது போன்றும் ஒரு பயங்கர உணர்வில் ஆடிப் போய் விட்டாள்.

நரேந்திரனுக்கு மட்டும் அவளது அன்பு புரியுமானால் இத்தனை பணத்திற்கும் பதவிக்கும் அதிபதியாகுமுன்... சாதாரணமான நிலையில் அவர்கள் வீட்டு வாசல் அழைப்பு மணியை அழுத்திவிட்டு நின்ற அன்றே... அவளுக்கு அவனைப் பிடித்துவிட்டது என்ற உண்மை தெரிந்தால்...

அவன் வீட்டுக்கு வந்த ஒவ்வொரு தடவையும் உணவைப் பரிமாறும் போதும் தன் உள்ளத்து உணர்வுகளையும் பரிமாறினாள் என்ற உண்மை புரிந்தால்...

அவனது பணத்தைக் காதலிக்கவில்லை... பதவியை நேசிக்கவில்லை. அவனுக்காக அவன் மீது அன்பு கொண்டிருக்கிறாள் என்ற ரகசியம் தெரிந்தால்... அவளது கண்ணுக்குப் படாது வேறு ஒரு ஊரில் வசித்துக் கொண்டிருந்த போதும் அவனைத் தன் மனதிற்குள்ளேயே பிடித்து வைத்துக் கொண்டிருந்தாள் என்ற சங்கதி தெரிந்தால்... ஒரு சமயம் அவளது அன்பை ஏற்பானோ?

இல்லை இது... ஒருதலைக் காதலாக இருக்குமோ? அந்தப் பெண் பூரணி அவனது மாமன் மகள்... அவனது வருங்கால மனைவியோ? அதனால்தான் அத்தனை பெருமையுடன் அறிமுகம் செய்து வைத்தானோ?

கொடுத்து வைத்தவள். மிகவும் அழகாக இருக்கிறாள். எத்தனை அழகாக அலங்கரித்துக் கொண்டிருந்தாள். பணக்காரப் பெண் போலும். பணம்... பணத்தோடுதானே போய்ச் சேரும்...

கங்காவை ஒரு சமயம் நரேந்திரன் உள்ளூர வெறுக்கக் கூடும்... அதற்கு இடம் இருக்கிறதே. அப்பாவிடம் கொண்டு வந்து தந்த வைரப் பிள்ளையார் காணாமற் போனதில் அவளுக்கும் பங்கு உண்டு என்ற சந்தேகம் அவன் மனதிலிருந்து மறையாதிருந்தால்...

அவளுக்கு அதற்குமேல் நினைக்கவே முடியவில்லை. பூரணியின் அழகிய உருவம் மீண்டும்... அவள் மனக்கண் முன் வந்து நின்றது.

இருவரும் நெருக்கமாக நின்று கணவன்... மனைவியைப் போல விழாவில் பெருமையாக வளைய வந்ததை... நினைத்துப் பார்த்தாள். நெஞ்சை என்னவோ வேதனையுடன் இறுக்கியது.

கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர்த்துளிகள் கழுத்தின் மீது விழுந்து நெஞ்சை நனைத்தது.

''நரேன்! நரேன்...!'' என்று அவளது உடலில் உள்ள ஒவ்வொரு அணுவும்... அன்பில் குழைந்து கூவியது.

உயிருக்கு மேல் தன்னை கங்கா நேசிக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டு அவன், அவளை பரிவுடன் முன் வந்து மணந்து கொண்டால்...

இந்த போக பாக்கியம்... எதுவும் இல்லாத ஒரு சாதாரண தொழிலாளி என்ற நிலையில் இருந்தாலும்... அவனைக் கால முழுவதும் காதலித்து... நல்லதொரு மனைவியாக, தோழியாக, தாயைப் போன்ற பரிவுடன்... அவனுடன் இந்த கங்கா வாழ்வாளே?

''நரேன்! என் இதயத்தின் புலம்பல் உன் காதுகளுக்கு எட்டவில்லையா?'' பெருமூச்சு விட்டாள், விம்மினாள். அழுதாள்.

நரேந்திரன் மேல் கொண்ட அவள் காதல்... இரவு முழுவதும் கண்ணீராக வழிந்தோடியது.

சில நாட்களுக்குப் பின்னர்... ஒருநாள் மாலை அவள் தந்தை அருகிலிருந்த கோவிலுக்குப் புறப்பட்டு தனியே சென்று விட்டிருந்தார்.

நோயில் உருக்குலைந்து பலகீனப்பட்டிருந்த அவர் வெளியே தனியே நடமாடுவதை அவள் விரும்பவில்லை.

ஆனால் ரத்னசாமி பிடிவாதக்கார மனிதர். வீட்டுக்குள்ளே அடைந்திருந்து வெறுப்படைந்து போய்தான் புறப்பட்டு விட்டிருந்தார்.

சமையலறை மேடையைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தவள், வாயில் அழைப்பு மணி அழுத்தமாக ஒலிப்பதைக் கேட்டு திடுக்கிட்டுப் போனாள்.

அப்பாவுக்கு மறுபடி நெஞ்சுவலி வந்துவிட்டதா... அதனால்தான் இவ்வளவு சீக்கிரம் திரும்பி விட்டாரா?

கலவரத்துடன் கையைக் கழுவிக் கொண்டு - ஈரக் கரங்களைப் புடவைத் தலைப்பில் துடைத்துக் கொண்டபடி... ஓடி வந்து வாசல் கதவைத் திறந்தாள்.

திடுக்கிட்டுப் போய் நின்று விட்டாள். வாசலில் நரேந்திரன் நின்று கொண்டிருந்தான்... ஓரமாக அவனது கார் நிறுத்தப்பட்டிருந்தது.

நெஞ்சு படபடக்க... மேனி புல்லரிக்க பேசத் தோன்றாது நின்று விட்டாள்.

''மிஸ்டர் ரத்னசாமியைப் பார்த்துப் பேச வந்தேன்... உள்ளே வரலாமா...?''

''வாங்கோ... உட்காருங்கோ... அப்பா கொஞ்ச நேரத்தில் வந்து விடுவார். கோயிலுக்குப் போயிருக்கார்...!''

கூடத்து சோபா ஒன்றில் வந்து அமர்ந்து கொண்டான் நரேந்திரன்.

''உன் தந்தையிடம் நான் பேச வந்த சங்கதியை நீ முதலில் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியம்...!''

கங்காவின் முகம் சூடாகிப் போனது - நெஞ்சில் இனங்காணாத ஒரு பதட்டம்... கால்கள் நிலை கொள்ளாது போல தள்ளாடின...

''எங்கள் வீட்டையும், கடையையும் வாங்க யாராவது கிடைத்திருக்காங்களா... அதைப் பத்திதானே பேச வந்திருக்கீங்க...?''

நரேந்திரன் அவளை நிமிர்ந்து பார்த்து மோகனமாகப் புன்னகைத்தான்.

''இல்லை... நம்மைப் பற்றிய சங்கதி... உன்னுடனும் உன் தந்தையுடனும் பேசித் தீர்மானிக்க வேண்டிய மகிழ்ச்சியான சங்கதி... இன்னும் புரியலையா?''

அவன் பேசி முடிக்குமுன் நடையில் காலடி ஓசை கேட்டது.

''யாரது...? நரேந்திரன் தம்பியா... எப்ப வந்தாப்பல -ரொம்ப நேரமாச்சா... நான் கோவில் வரை போயிட்டு வரேன்...!'' என்றபடி ரத்னசாமி தன் பாதணிகளை கழற்றி நடையில் விட்டு உள்ளே புகுந்தார்.

''இப்பத்தான் வந்தார் - உட்காரச் சொன்னேன் - நீங்களும் வந்துட்டீங்க!'' தடுமாறிய மகள், சமையலறைக்குள் புகுந்து கொண்டு சுவற்றின் மேல் சாய்ந்து கொண்டாள்.

நெஞ்சு வேகமாகத் துடிக்கத் தொடங்கியது - ஆனந்தத்தில் மூச்சே நின்று விடும் போன்று ஒரு பிரமிப்பு...

நரேந்திரன் சொல்வது உண்மையா? அப்படியென்றால்... அவர் அவளை நேசிக்கிறாரா? - கண்களை மூடிக்கொண்டு ஆனந்த பரவசத்தில் தன்னை மறந்தபடி நின்று கொண்டிருந்தாள்

20

ரத்னசாமி அதிகம் களைத்து விட்டிருந்தார். அவருக்கு மூச்சுத் திணறியது. எச்சிலை விழுங்கிக் கொண்டு நரேந்திரனை மேலும் கீழும் பார்த்தார்.

''தாகத்துக்கு எதாச்சும் முதலில் சாப்பிடு தம்பி... பிறகு

பேசலாம்!'' என்றபடி தமது முகத்தில் பூத்திருந்த வியர்வையை மேல் துண்டால் துடைத்துக் கொண்டார்.

''இப்போதான் காப்பி சாப்பிட்டு விட்டு வரேன்... ஒண்ணும் தேவையில்லை!'' என்று முறுவலித்த நரேந்திரன் அவரை ஓரக்கண்ணால் பார்த்தபடி எதிரே அமர்ந்திருந்தான். முன்னைவிட ரத்னசாமி மிகவும் வயதானவராகக் காணப்பட்டார்.

நோயின் கடுமையினால் அவர் உடல் ஒடுங்கிவிட்டிருந்தது. கண் ஓரங்களிலும், நெற்றியிலும் சுருக்கங்கள் அதிகமாகத் தெரிந்தன. அவரது கட்டை மீசை முற்றிலும் நரைத்து விட்டிருந்தது.

''என்னவோ பேசணும்னு சொன்னியாமே. வீட்டையும், கடையையும் வாங்க தகுதியான ஆசாமியைக் கண்டுபிடிச்சுட்டியா? அதைச் சொல்லத்தானே வந்திருக்கே. அந்த பொறுப்பைத்தான் உன்கிட்டே விட்டு விட்டேனே?'' மெல்ல முறுவலித்தார்.

''அவைகளைப் பற்றிய கவலை இனி உங்களுக்குத் தேவையே இல்லை... எவ்வளவு அதிக விலைக்கு விற்க முடியுமோ அவ்வளவுக்கு விற்றுத்தர முடிவு செய்து விட்டேன் அவைகளை நீங்கள் விற்று விட்டதாக நினைத்துக் கொள்ளலாம்.''

''ஒரே ஒரு சின்ன சங்கடம் இருக்கு தம்பி. கடையை வாங்கிக் கொள்கிறவன் உடனேயே அதில் தன் வியாபாரத்தைத் துவங்கிக் கொள்ளலாம் - ஆனால் வீட்டை வாங்கிக் கொள்கிறவன் உடனடியாக காலி பண்ணிக் கொடுக்கச் சொல்லி நிர்ப்பந்தித்தால் எங்களுக்கு சிரமமாக இருக்கும்...''

''நீங்க அதைப்பத்தியும் கவலைப்படாம நிம்மதியாக இருக்கலாம். வீட்டையும், கடையையும் எங்கள் கம்பெனியே வாங்கிக் கொள்ளப் போகிறது. உங்கள் கால முழுவதும் நீங்கள் இந்த வீட்டிலேயே நியாயமான வாடகையைக் கொடுத்துட்டு

தங்கிக் கொள்ளலாம். அந்த ஏற்பாடுகளை எல்லாம் பின்னாலே பேசிக் கொள்வோம்... நான் வந்து என் வீட்டைப் பற்றித்தான் பேச வந்திருக்கேன்!''

நிமிர்ந்து உட்கார்ந்தார் ரத்னசாமி. என்ன சொல்கிறான் இவன்? அவருக்குக் குழப்பமாகத்தான் இருந்தது.

''உன் பங்களா ரொம்ப பிரமாதமாக இருக்கே தம்பி; நல்ல ரசனையோட கட்டியிருக்கே. அழகா வசதியா அலங்காரம் செய்திருக்கே. அன்னிக்கு வந்தப்போ கீழ் பகுதியை மட்டும் கொஞ்சம் பார்த்தேன் - என்னால் மாடிக்கு ஏறிப்போய் பார்க்க முடியலை. மாடியும் நேர்த்தியா கட்டப்பட்டிருக்குன்னு பேசிக்கிட்டாங்க. தோட்டத்தை கூட பூரா சுத்திப்பார்க்க முடியலை... என் உடம்பு முன் போல இல்லை!''

''உங்க உடம்பு ரொம்ப பலவீனமாகறதுக்கு முன்பே நீங்க எல்லாத்தையும் பத்தி தீர்மானம் செய்துடணும்.''

''அதான் வீட்டையும், கடையையும் உன்கிட்டே ஒப்படைச்சுட்டேனே... என் வீட்டை விட்டுத்தள்ளு... உன் வீட்டைப் பத்தி என்னமோ பேசணும்னியே?'' மெல்ல முறுவலித்தார் ரத்னசாமி.

''வீடு வசதியா அழகா இருக்கு... ஆனால் அதில் இன்னம் நிறைவு இல்லையே!''

''ஓ... அப்படி சொல்றியா? ஒரு நல்ல பெண்ணா பார்த்து சீக்கிரம் கல்யாணம் செய்து கொண்டா... வீடும் நிறைந்து உன் மனமும் நிறைஞ்சு இருக்கும்!''

''ஒரு பெண்ணை ஏற்கனவே பார்த்து முடிவு செய்து வச்சிருக்கேன். நீங்க ஆசி வழங்கி என்னை வாழ வைக்கணும்...'' என்றபடி எழுந்து நின்றான்.

ரத்னசாமி ஒன்றும் விளங்காது விழித்தார்.

சட்டென்று குனிந்து அவரது கால்களைத் தொட்டுக் கும்பிட்டான் நரேந்திரன்.

''என் தந்தையின் நெருங்கிய நண்பர் நீங்கள். அந்த நெருக்கம் உறவினால் இன்னும் பலப்பட வேண்டும் என்கிறது என் ஆசை. தங்களது மகளை நான் திருமணம் செய்து கொள்ள விரும்பறேன். ஒப்புதல் தந்து எங்களை நீங்க வாழ வைக்க வேணும்...?'' மிகவும் பவ்யமாக... கனிவான குரலில் பேசினான் நரேந்திரன்.

ரத்னசாமியின் இதயம் அவரது மார்புக் கூண்டு மீது வேகமாக மோதிக் கொள்ளத் தொடங்கியது.

எதிர்பாராத இந்த ஆனந்தமான அதிர்ச்சியை அவரால் தாங்கிக் கொள்ள முடியாது போன்று ஒரு கணம் திணறி விட்டார்.

அவரது மகள் கங்காவுக்கு இத்தனைப் பெரிய அதிர்ஷ்டமா? பட்டணத்திற்கு பரதேசி போல வந்த பயல்... முயற்சியால் முன்னுக்கு வந்து ஓகோன்னு வாழ்கிறானே... இவனது சொத்து சுகங்களை அனுபவிக்கப் போகிறவள் யார்? என உள்ளூர ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்தாரே? அந்த அவள் அவருடைய மகள் கங்காவா... அதிசயம்!

கட்டுக் கொள்ள முடியாத மகிழ்ச்சியில் பொங்கிப் போனார். எழுந்து நின்று அவனது கரங்களை பரபரப்பாகப் பிடித்துக் கொண்டார்.

''தம்பி! எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை. என் ஆருயிர் நண்பன் மகனே எனக்கு மருமகனாகப் போகிறான்னு நினைக்கும் போதே என் நெஞ்சு பெருமையாலே விம்முகிறது. கங்கா ரொம்ப கொடுத்து வச்சவ... உன் பணம் காசு ஒரு பக்கம் இருக்கட்டும்... அதுக்கு நான் மயங்கிட மாட்டேன்... உன்... குணம்... உன் அன்பான போக்கு... பண்பு இதுகளைப் பத்தி யோசிக்கும் போது உன் போல ஒரு மருமகன் எனக்கு கிடைக்கிறது ரொம்ப பெரிய பாக்யம்னு நான் நினைக்கிறேன். எனக்கு பூரண சம்மதம்...'' கண்கள் பனிக்க... உடம்பெல்லாம் பதற நாத் தழுதழுக்கச் சொன்னார்...

''நன்றி ஐயா...! கங்காவைக் கூப்பிட்டு ஒரு வார்த்தை கேட்டுவிடுங்க... அப்போதுதான் நல்லது... எல்லோருக்கும் மனம் திருப்தியா இருக்கும்...''

''என் மக நான் கிழிச்ச கோட்டை தாண்டவே மாட்டா. என் பொண்ணுன்னு நான் பெருமை பேசிக்கலை. அவளை நான் படிக்க வைச்சேன் - பாட்டு கத்து வச்சேன். வீணை கூட வாசிப்பா. பாவம் தாய் இல்லாத பெண்... ரொம்ப பயந்த சுபாவம். அடக்கமானவ... எதிர்த்து பேசவே தெரியாத வெகுளி... என்னை தன் கண்போல கவனிச்சுக் கொண்டு வந்தா... கல்யாணமாகி அவ உன் வீட்டுக்கு வந்த பிறகு நான்தான் தனியாகி நோயோடு வேதனைப்பட்டுக் கொண்டிருப்பேன்... என்ன செய்கிறது. பெண் என்று பிறந்துட்டா... அவ ஒரு நாளைக்கில்லாட்டி ஒருநாள் வேறு ஒருவன் வீட்டுக்குப் போய் விடணுமே... நரேந்திரா! எனக்கு சம்மதம்னா அவளுக்கும் சம்மதம்னு அர்த்தம்...!'' தாங்க முடியாத ஆனந்தத்தில் தடுமாறினார். அவனது கரங்களைப் பிடித்துக் குலுக்கினார்.

''இந்தத் திருமணத்திற்கு கங்காவின் பூரண சம்மதமும் எனக்குத் தேவை. உங்களது வற்புறுத்தலால் அவள் என்னை மணந்து கொள்வதை நான் விரும்ப மாட்டேன்!''

''என்னப்பா நரேந்திரா! உன்னைக் கட்டிக் கொள்ள எந்தப் பெண்ணுக்குக் கசக்கும்...? படிச்சவன் - பதவியிலிருக்கிறவன் - பணக்காரன் - அழகன். இத்தனை தகுதிகள் இருக்கே... நீ சரியின்னு தலையாட்டினா இப்போ உன் எதிரில் பல பெண்கள் வந்து கியூவில் நிற்குமே!'' சிரித்தார்...

''இருக்கலாம்...! அந்த கியூவில் உங்கள் மகள் கங்கா நிற்பாள் என்று என்ன நிச்சயம்? ஒரு சமயம் என்னை ஏதோ காரணத்துக்குப் பிடிக்காம இருந்தா?''

''நீ ரொம்பவே சந்தேகப்படறே...! இரு அவளைக் கூப்பிடுகிறேன்'' என்றவர், ''கங்கா! இப்படி வாம்மா!'' உற்சாகமாக ஓங்கிக் குரல் கொடுத்தார்.

கூடத்தில் அவர்கள் பேசிக்கொண்டிருந்த அத்தனையையும் உற்றுக் கேட்டுக் கொண்டு விட்டிருந்தாள், அவள்.

முகம் சிவந்து நெஞ்சு பதற... கால்கள் தள்ளாட அவள் சுவற்றின் அருகே ஒண்டிக் கொண்டிருந்தாள்.

''இதோ வந்துட்டேன் அப்பா...!'' என்றபடி மெள்ளக் கூடத்துக்கு வந்தாள். ''தம்பி நரேந்திரன் இங்கே என்னோட என்ன பேச வந்திருக்கு தெரியுமா?''

மவுனமாக அவள் தரையைப் பார்த்தாள். நெஞ்சு திக்திக்கென்று இன்பத்தில் அடித்துக் கொண்டது.

''உன்னைத் தனக்குக் கட்டிக் கொடுக்கச் சொல்கிறார். எனக்கு சம்மதம் - உன் விருப்பத்தை நேரடியாகக் கேட்கணுமாம். நீயே சொல்லிவிடும்மா...!'' புன்முறுவலித்தார் ரத்னசாமி.

''உங்க பேச்சுக்கு நான் மறு பேச்சு சொன்னதில்லையே அப்பா...'' முணகினாள் அவள்.

''அது போதாது. உண்மையா உனக்கும் விருப்பமா என்கிறது எனக்குத் தெரிய வேண்டாமா?'' நரேந்திரன் புன்னகைத்தான்.

மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்... காதுமடல்கள் சூடாகின... மேனி சிலிர்த்துப் போய்... நெஞ்சில் நிறைந்த இன்ப உணர்வு வாயை அடைத்து விட்டது போன்று... தடுமாறிப் போனாள்.

''உங்களைக் கட்டிக் கொள்ள எனக்கும் பூரண சம்மதம்!'' கூறிவிட்டு சட்டென்று உள்ளே மறைந்து விட்டாள்.

அவளுக்கு மகிழ்ச்சி தாங்கவே முடியவில்லை. இப்படிப்பட்டதொரு பெரிய யோகமா அவளுக்கு?

''சரிதானே தம்பி... கங்கா உன் கேள்விக்கு பதில் சொல்லிட்டா... இந்த மகிழ்ச்சியான சங்கதியை மேற்கொண்டு கவனித்து நடத்திக் கொடுக்க வேண்டியவனும் நீதான்... ஏன்னா முன்போல எனக்கு உடம்பில் தெம்பில்லை... நான் நல்லா இருந்தா கல்யாணத்தை நல்லாவே செஞ்சு முடிப்பேன். முன் போல பொருளாதார வசதியும் இப்போ இல்லை... அந்த காலமாக இருந்தா கங்காவுக்கு சீர் எடுத்து... ஒரு குறையும் இல்லாது கச்சிதமாக கல்யாணத்தை நடத்தி வைப்பேன்... இருந்தாலும் என் மகளுக்கு அவள் தாய் விட்டுப்போன நகைகள் கொஞ்சம் இருக்கு. இந்த வீட்டையும், கடையையும் விற்று வரப்பணத்திலே கொஞ்சம் செலவழிக்க... அவளுக்கு தேவைப்பட்டதை வாங்கித் தந்துடறேன். வெறுங்கையோட என் மகளை உன் வீட்டுக்கு அனுப்பறது முறையா?'' மேலே பேச முடியாமல் திணறினார்.

''ஐயா! உங்கள் உடல் நிலையைப்பற்றி புரிஞ்சு கொண்டதாலே இந்தக் கல்யாணத்தை நானே எடுத்து செய்கிறதுன்னு முன்னதாகவே முடிவு செய்துட்டேன்.''

''அப்படியா? நன்றி!''

''கங்காவை எனக்கு கட்டிக் கொடுக்க நீங்க சம்மதிச்சதுக்கு நான் நன்றி சொல்லணும். வேறு எதுவும் எனக்குத் தேவையில்லை. வீட்டை விற்று பணத்தை நீங்கள் வங்கியில் போட்டுக் கொண்டு அதன் வட்டியிலே சுகமா இருக்கணும்னு நான் விரும்பறேன்!''

''தம்பி! உனக்கு ரொம்ப நல்ல மனசு...!' பேச முடியாது உணர்ச்சி வசத்தில் கண்களில் பொங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். ''எனக்கு ஏதாவது நேர்ந்தா கங்கா அனாதையாகி விடுவாள்னு ரொம்ப மனச்சங்கடப்பட்டுக் கொண்டிருந்தேன். இப்போ எனக்கு பெரிய நிம்மதி...'' என்றவர், 'கங்கா!' என்று மீண்டும் குரல் கொடுத்தார்.

''என்னப்பா?''

''ரெண்டு பேருக்கு சூடா சாப்பிடக் கொஞ்சம் பாதாம்பால் கலக்கிட்டு வா...!''

''ரெண்டு பேருக்கு மட்டுமா கொண்டு வரச்சொல்றீங்க. கங்காவுக்கு எதுவும் தேவையில்லையா...?'' வேடிக்கையாகக் கேட்டு சிரித்தான், நரேந்திரன்.

''அட, அவளை மறக்க முடியுமா... அவதானே இந்த மகிழ்ச்சியின் நாயகி... அவளுக்கும் சேர்த்து... மூணுபேருக்கு எடுத்து வாம்மா!'' சிரித்தார் ரத்னசாமி.

மூவருக்கும் டம்ளரில் பாதாம்பால் நிறைத்து தட்டில் வைத்துக் கொண்டு வந்தாள் கங்கா.

ஒரு டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டான் நரேந்திரன். கங்காவின் கையிலிருந்த டம்ளருடன் தன் கையிலிருந்ததை மெல்ல இடித்து... 'ஆல் தி பெஸ்ட்!' என்றான்.

''நீங்க ரெண்டு பேரும் நல்லா சுகமா வாழணும்னு வாழ்த்திவிட்டு... இந்த பாலை நான் சாப்பிடறேன்'' என்றபடி ரத்னசாமி டம்ளரிலிருந்ததை சுவைத்து சாப்பிட்டார்.

கடைக்கண்ணால் அவனை ஆசையுடன் பார்த்தபடி கங்கா... மெல்ல பருகி முடித்தாள்.

காலி டம்ளர்களை உள்ளே கொண்டு சென்று கழுவி துடைத்து மேடை மீது வைத்தாள். எனினும் அவளது கருத்தும் - காதும் கூடத்திலேயே பதிந்திருந்தன.

''இன்னும் ஒரு சங்கதி. தங்களது ஆசியோடு அதையும் மகிழ்ச்சியாக செய்து முடிக்க விரும்பறேன்'' என்ற நரேந்திரன், கூடக் கொண்டு வந்த பிரிஃப்கேசை மெல்லத் திறந்தான். அதற்குள் அடங்கியிருந்ததொரு சிறு வெல்வெட் பெட்டியை எடுத்தான்.

''கங்காவை நான் மணந்து கொள்ள சம்மதம் பெற்றதிற்கு அறிகுறியாக அவளை இதை அணிந்து கொள்ளச் சொல்லுங்கள்.. நிச்சயத்தின் பரிசு என்று அவள் இதை

ஏற்கட்டும்...'' என்று அந்தப் பெட்டியை அவரிடம் நீட்டினான். ஆவலுடன் கிழவர் திறந்து பார்த்தார்.

உள்ளே கண்ணைப் பறிக்கும் ஜொலிப்பில் ஒரு அழகான வைர மோதிரம்! ''நரேந்திரா... இதை உன் கையால அவள் விரலில் போட்டு விட்டால் நிச்சயதார்த்த வைபவம் இனிதாக முடிந்துவிட்ட மகிழ்ச்சி எல்லாருக்கும் ஏற்படுமே...!'' என்று கூறியவர் 'கங்கா... இங்கே வாம்மா!' என்றார்.

கூடத்திற்குள் மறுபடி வந்து நின்றாள் கங்கா.

மிக துணிவுடன் அவளது இடது கரத்தைப் பற்றி... அந்த வைர மோதிரத்தை... அணிவித்தான், நரேந்திரன்.

''என்ன ஆச்சரியம்! அளவெடுத்தது போல விரலுக்கு சரியா இருக்கே!'' வியப்போடு சொன்னான்.

''ரெண்டு பேர் மனசும் பொருந்தியிருப்பதாலே... எல்லாமே பொருந்தியிருக்கு... ரெண்டு பேரும் இன்று போல் என்றும் நேசமாக, அன்பாக வாழணும்...'' தழுதழுத்தார் ரத்னசாமி.

சொன்னதையெல்லாம் கேட்டு அடிபணியும் பணக்கார மாப்பிள்ளை வசமாக தம் கையில் பிடிபட்டு விட்டிருக்கிறான் என்று அவர் உள்ளூர மனம் பூரித்தார்.

ஆனால் அதே சமயம் நரேந்திரன் நினைத்தது வேறு!

21

தாயம்மாள் லேசாகக் கதவைத் தட்டியபோதுதான் பூரணிக்கு விழிப்பு ஏற்பட்டது.

காலை வேளைகளில் வெகு சீக்கிரமே எழுந்துவிடும் அவள் அன்று அயர்ந்து உறங்கிவிட்டிருந்தாள்.

வந்த சில நாட்களிலேயே அவள் நரேந்திரனது பழக்க வழக்கங்களை ஓரளவு புரிந்து கொண்டு விட்டிருந்தாள். காலை வேளைகளில் மட்டுமே அவன் நிம்மதியாக உட்கார்ந்து காப்பி பலகாரம் சாப்பிட்டான். பின்னர் கொஞ்ச நேரம் காலை நாளேடுகளை புரட்டிப் பார்த்து விட்டு உடனேயே அலுவலகம் கிளம்பி விடுவான் - பகல் உணவுக்கு அவன் வீட்டுக்கு வருவது அபூர்வம் - தங்கப்பன் தான் சைக்கிளில் டிபன் செட்டை எடுத்துச் சென்று பகல் உணவைக் கொடுத்துவிட்டு வருவது வழக்கம்.

மாலை வீடு திரும்பும் நரேந்திரன் காலை வேளையைப் போல சற்று நேரம் நிதானமாக வீட்டில் தங்கியிருந்து தேநீர் சாப்பிட்டுக் களைப்பை நிவர்த்தி செய்து கொண்ட பின்னர்தான் மறுபடி வெளியே கிளம்புவது வழக்கம்.

இரவு அவன் வீடு திரும்ப வெகு நேரம் ஆகும் - யாரும் தனக்காக சாப்பிடாது காத்திருக்கத் தேவையில்லை என்பது அவனது உத்திரவு. மேலும் இரவு வேளையில் அவன் சாப்பிரதாயமான சாப்பாட்டை விரும்புவதில்லை. ஒரு டம்பளர் பாலும் - ஒரு வாழைப்பழமும் மட்டுமேதான் அவனது ராத்திரி சாப்பாடாக இருந்தன.

தாயம்மாள் அவனுக்காக சூடான பாலை பிளாஸ்கில் நிறைத்து சாப்பாட்டறை மேஜை மீது வைத்து விட்டுப் போய்விடுவாள்.

சில நாட்களில் வெளியே சென்ற இடத்தில் ஏதாவது சாப்பிட நேர்ந்தால்.... மேஜை மீது பாலும் பழமும் தொடப்படாமல் அப்படியே இருப்பதை பூரணி கவனித்ததுண்டு.

வேகமாக பல்துலக்கிக் குளித்துவிட்டு மாற்றுடை அணிந்து பூஜையறை விளக்கை ஏற்றிவிட்டு சாப்பாட்டறைப் பக்கம் வந்தாள் பூரணி.

பாலும் பழமும் தொடப்படாமல் மேஜை மீது அப்படியே இருந்தன.

அவைகளை உள்ளே கொண்டு வைத்துவிட்டு... காலை டிபனுக்காக தட்டுகளைக் கொண்டுவந்து மேஜை மேல் வைத்தாள். தண்ணீர் டம்ளர்களை வைத்துவிட்டு... மற்றவைகளை எடுத்துவர அவள் திரும்பிய போது, மாடியினின்று விரைவாக இறங்கி வந்த நரேந்திரன் அங்குவந்து கலந்து கொண்டான்.

வேட்டி ஜிப்பாவில் அவன் மிகவும் நிம்மதியுடைய வனாகக் காணப்பட்டான். வழக்கமான பரபரப்பு துளிக்கூட இல்லாது முகத்திலே... மகிழ்ச்சி நிறைந்த புன்னகையுடன் அருகில் வந்தான். ''பூரணி - நீ உட்கார். தாயம்மாள் டிபனைக் கொண்டு வந்து பரிமாறட்டும். உன்னிடம் பேச வேண்டிய சில சங்கதிகள் இருக்கின்றன....'' என்றான்.

வியப்புடன் மவுனமாக அவள், அவனுக்கு எதிர்பக்கம் இருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

தாயம்மாள் ஓசைப்படாது நடந்து வந்து சூடான இட்டிலிகளை தட்டுகளில் பரிமாறி... சட்டினி, சாம்பார் கிண்ணங்களை அருகே வைத்துவிட்டு... காப்பி டம்ளர்களை எடுத்துவரச் சென்றாள்.

சாம்பாரை இட்டிலிகள் மீது ஊற்றி விட்டு... பிட்டு துழாவிக் கொண்டிருந்த நரேந்திரனுக்கு பசி இருக்கவில்லை தான். நினைத்தபடி காரியத்தை சாதித்துக்கொண்டு விட்ட திருப்தியில் அவன்.... யோசனையுடன் மேஜையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

காப்பி டம்ளர்களை எடுத்துக் கொண்டு வந்து தட்டுகள் அருகே வைத்துவிட்டு தாயம்மாள் சமையலறைக்குள் மறைந்து கொண்டாள். ஏதாவது தேவை என்றால் அழைத்தால் ஒழிய அவர்கள் சாப்பிடும் போது அடிக்கடி வந்து நிற்கும் வழக்கம் அவளுக்குக் கிடையாது.

''என்னவோ முக்கிய சங்கதியை என்னிடம் சொல்ல வேண்டும் என்றீர்களே?....'' மெல்லிய குரலில் பூரணி அவனுக்கு நினைவூட்டினாள். நிமிர்ந்து அவளைப் பார்த்து லேசாக முறுவலித்தான் நரேந்திரன். ''ஆமாம். மிக முக்கியமான சங்கதி - உனக்கு மகிழ்ச்சி தரும் சங்கதி... நான் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துவிட்டேன். பெண் அருகிலிருக்கும் போது.... எனது திருமணத்தை இன்னமும் தள்ளிப்போட்டுக் கொண்டு போவதில் அர்த்தமில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டிருக்கிறேன்.''

குபீரென்று ரத்தம் முகத்தில் ஏறி-உடம்பு முழுவதும் சூடாகிவிட்ட உணர்வில்....நெஞ்சு படபடக்க மெல்ல அவனை உற்றுப் பார்த்தாள்.

உண்மையா?... நரேந்திரன் சொல்வது உண்மையா?... விவரிக்க இயலாத ஆனந்தத்தில் மனம்பொங்கிப் புரண்டது. ''நம் வீட்டின் புதுமனை புகு விழாவின் போது வந்த விருந்தாளிகளில் ரத்னசாமி என்பவரை உனக்கு அறிமுகப்படுத்தினேனே நினைவிருக்கிறதா?''

அவன் சொல்லப் போவதை ஊகிக்க முடியாது சூழம்பினாள் பூரணி.

''அவருடன் வந்திருந்தாளே... அவர் மகள் கங்கா.... அவளை உனக்கு ஞாபகம் இருக்கா...''

ஓங்கி சம்மட்டியால் தலையில் யாரோ அடித்து விட்டது போன்ற அதிர்ச்சியும், வேதனையும் எய்தியவளாக பேச முடியாது தலையை ஆட்டினாள்.

அவன் மேலே விவரிக்கத் தேவையிருக்கவில்லை. ஒரே வினாடியில் அவள் புரிந்து கொண்டு விட்டாள்.

''நம் வீட்டு அம்பாசிடரில் வந்து இறங்கினார்களே வயதான ஒரு மனிதரும்.... அவருடைய மகளும்.... இப்போ ஞாபகத்துக்கு வருதா....?''

அதற்குமேல் அவன் சொல்லத் தேவையிருக்கவில்லை. அன்று நம் வீட்டு காரில் வந்தவள் விரைவில் இந்த வீட்டு எஜமானியாகிவிடப் போகிறாள் என்றுதானே சொல்லப் போகிறார்.

உற்சாகத்திலே பொங்கிப் புரண்ட உணர்வுகள் அடங்கிப் போய் மனம் தொய்ந்து போனாள் அவள். கண் இமைகளை நனைத்த கண்ணீரை சட்டென்று விழுங்கிக் கொண்டாள். நெஞ்சை இறுக்கிய துயரத்தை சமாளித்துக் கொண்டு மென்மையாக முறுவலித்தாள்.

''நன்றாக ஞாபகம் இருக்கிறது. மிகவும் எளிமையாக அலங்கரித்துக் கொண்டிருந்த போதிலும்.... ரொம்ப அழகாக இருந்தாங்க — அதைப் பார்த்து நான் அதிசயப்பட்டுப் போனேன். அவங்களைத்தானே சொல்றீங்க...''

''ரத்னசாமி என் தந்தையின் நண்பர், கங்கா அவரது ஒரே மகள். அவளை நான் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து ரத்னசாமியின் ஒப்புதலை வாங்கிவிட்டேன்.''

பூரணியின் எதிர்பார்ப்புகள் - கற்பனைகள் அனைத்தும் பொடிப் பொடியாகிவிட்டதொரு அதிர்ச்சியில்.... நெஞ்சு தடும் தடும் என்று அடித்துக் கொண்டது. எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

''மிக்க மகிழ்ச்சி... இந்த வீட்டை நிர்வகிக்கவும் பொறுப்பேற்கவும் கங்கா வருகிறார்கள் என்பதைக் கேட்க மிகவும் ஆனந்தமாக இருக்கிறது... அப்பாடா என்ற நிம்மதியும் ஏற்படுகிறது...'' மெல்ல சிரிக்க முயன்றாள்.

''கங்காவை உனக்குக் கட்டாயம் பிடிக்கும் என்று நினைக்கிறேன். உன்னைப் போலவே அடக்கமான சுபாவம்.''

''திருமணம் விரைவில் நடக்கப் போகிறது - கங்கா வந்து பொறுப்பை ஏற்றுக் கொண்டு விட்டதும் உனக்கு விடுதலை என்றுதானே மேலே சொல்ல விரும்புகிறீங்க...''

''இந்த வீட்டின் பொறுப்பு எப்பொழுதும் போல என்னுடையதாகவே இருக்கப் போகிறது என்றுதான் சொல்ல விரும்புகிறேன்''

''அது நியாயமாக இருக்காதே - கட்டின மனைவிக்கு இல்லாத உரிமையும் பொறுப்பும் எனக்கு எப்படி...'' பேச முடியாது திணறினாள் பூரணி.

''கங்கா என் மனைவியாக இருப்பாள் - நீ என் கூடப்பிறவாத சகோதரி... என் சகோதரிக்கு இந்த வீட்டில் சகல உரிமைகளும் உண்டு... என் திருமணத்தினால் உனக்கு இதுவரை நான் தந்துள்ள உரிமைகளும் - அந்தஸ்தும் துளியும் மாறாது. கவலைப்பட வேண்டாம். உரித்த காலத்தில் உனக்கு நல்ல இடமாகப் பார்த்து திருமணம் செய்து வைக்க வேண்டியது இந்த அண்ணனின் கடமையாகும் - புரிந்ததா பூரணி...''

'புரிந்தது - புரிந்தது...' என்று ஓவென்று கூச்சலிட்டுக் குமுறி அழ வேண்டும் போன்றதொரு தாங்கமுடியாத துக்கம் அவளது நெஞ்சை அமுக்கியது.

அந்த வீட்டிற்குள்ளே வந்து அவனது பாதுகாப்பில் அடைக்கலமான நாளிலிருந்து அவள் உள்ளத்தில் உருவான கற்பனைகள் என்ன?...

அவைகளைத் தவிடு பொடியாக்கும் வண்ணம் அவன் சொன்ன புதுத் தகவல்தான் என்ன?

கால முழுவதும் அவனுடன் சேர்ந்து வாழும் யோகம் கிட்டப் போகிறது என்று கனவுகளில் மிதந்து கொண்டிருந்தவளுக்கு எத்தனை பெரிய வீழ்ச்சி...

உதட்டை அழுத்தமாகக் கடித்துக் கொண்டாள். துக்கத்தை சமாளித்தாள். ஏமாற்றத்தை ஒளித்துக் கொண்டாள்.

''நான் தொடர்ந்து இங்கேயே தங்குவது முறையாக இருக்குமா?''

''அண்ணனது ஆதரவில் தங்கை வாழ்வதில் தவறு என்ன இருக்கிறது?''

''வெளியே எனக்கு நீங்கள் ஒரு நல்ல வேலை தேடிக்கொடுக்க முடியாதா?''

''இந்த வீட்டை நிர்வகிக்கும் வேலையை நீ வந்த அன்றே கொடுத்து விட்டேனே? இதைவிட வேறு வேலை உனக்கு தேவைதானா?''

மேலே விவாதிக்க முடியாது அவள் எழுந்தாள்.

கையைக் கழுவிக் கொண்டு கண்களில் புரண்ட கண்ணீரை அவசரமாகத் துடைத்துக் கொண்டாள்.

அலுவலகத்திற்குப் புறப்பட்ட நரேந்திரன்.... தலையை ஆட்டி மகிழ்ச்சியுடன் விடை பெற்றுக் கொண்டு காரில் ஏறிக்கொண்டான். தோட்டத்தைத் தாண்டி கார்... சாலைக்குள் மறையும் வரை வாயிலிலே நின்று விட்டு உள்ளே வந்த பூரணிக்கு - கண் முன் எல்லாம் இருளில் புதைந்து விட்டன போல பிரமிப்பாக இருந்தது.

''அம்மா மாடி அறைகளை சுத்தம் செய்ய உங்களுக்காக வேலைக்காரி காத்துக் கொண்டு நிற்கிறாளே....'' தாயம்மாள் கூறியதும் விடுக்கென விழித்துக் கொண்டாள்.

''என்னம்மா? என்னமோ போல இருக்கீங்களே -உடம்புக்கு ஏதாச்சும்...'' தாயம்மாள் தன்னை ஊன்றிக் கவனிப்பதை உணர்ந்து அவள் வெட்கிப் போனாள்.

''ஒண்ணுமில்லை நல்ல சமாச்சாரந்தான். இன்னும் கொஞ்ச நாளில் நம் வீட்டில்... மேள சத்தம் கேட்கப் போகிறது...'' வலுக் கட்டாயமாகச் சிரித்தாள்.

''என்னம்மா... சொல்றீங்க... ஐயா கல்யாணம் செய்துக்க தீர்மானிச்சுட்டாரா? நான் நினைச்சேன்... கூடிய சீக்கிரம் கல்யாணம் நடக்கும்னு... கணக்குப் போட்டுக் கொண்டிருந்தேன்... அது சரியாவே போச்சு...'' என்று ஆர்ப்பரித்தவள்... ''மச்சான் இங்கே வாங்க... சங்கதியைக்

கேளுங்க'' என தன் கணவன் தங்கப்பனை கை தட்டி அழைத்தாள்.

பின் பக்கம் காரியமாக இருந்த தங்கப்பன் கை வேலையைப் போட்டுவிட்டு விழுந்தடித்துக் கொண்டு வந்தான்.

''நம்ப ஐயா... கல்யாணம் செஞ்சுக்க தீர்மானிச்சுட்டார். நாம அடிக்கடி பேசிக் கொண்டிருந்தோமே அதுபோல...'' தாயம்மாள் முடிக்குமுன்... பூரணி சொல்லி விட்டாள். ''ரத்னசாமி என்கிற தன் தந்தையின் நண்பர் மகள் கங்காவை இந்த வீட்டு ஐயா விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போகிறார். இது நம் எல்லோருக்கும் மகிழ்ச்சியான செய்தி....''

திடுக்கிட்டுப் போனார்கள் அவர்கள் இருவரும். ''என்ன அம்மா சொல்றீங்க... ஒரே குழப்பமா இருக்கே...'' திகைப்புடன் கேட்டாள் தாயம்மாள்.

''நாங்க என்னவோ நினைச்சிக் கொண்டிருந்தப்போ ஏதோ சொல்றீங்களே'' ஆதங்கத்துடன் கேட்டான் தங்கப்பன்.

''நடக்கப்போற உண்மையைச் சொன்னேன்...''

''அப்போ நீங்க...'' பேசமுடியாது குழறினாள் தாயம்மாள். அவளுக்கு தாங்க முடியாத அதிர்ச்சி....

''இந்த வீட்டில் தொடர்ந்து வசிக்க என் அண்ணன் ஆணையிட்டிருக்கிறார். யாருமில்லாது வந்து நின்றபோது அரவணைத்துக் கொண்ட அண்ணனுக்கு திருமணம் என்றால் தங்கச்சி சந்தோசப்படணும் - சிறப்பாக நடத்தி வைக்கக்கூட பாடுபடணும். இல்லையா!...'' புன்முறுவலுடன் கேட்டுவிட்டு உள்ளே சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள். படுக்கைமீது குப்புற விழுந்தவள் குலுங்கக் குலுங்க அழுதாள்.

22

வழக்கம் போல இரவு உணவுக்கு புழுங்கலரிசிக் கஞ்சியைதான் அவர் சாப்பிட்டு விட்டிருந்தார். பாதியளவுதான் அன்று அவரால் சாப்பிட முடிந்தது. மீதியை தம்ளரில் விட்டு விட்டு எழுந்து கையைக் கழுவி வாயைத் துடைத்துக் கொண்டு நேரே தமது அறைக்குள் வந்து கட்டிலின் மீது உட்கார்ந்து விட்டார்.

உடம்பின் அசதி பாதி என்றால் உள்ளத்து குழப்பம்... ஏற்படுத்திய சலிப்பு பாதி காரணமாக அவருக்கு மிகவும் ஓய்ச்சலாக இருந்தது.

வெகுநேரம் படுக்கை மீது அமைதியின்றி ரத்னசாமி புரண்டு கொண்டிருந்தார். இன்னும் சில நாட்களில் அவரது மகளின் திருமணம் நடக்கவிருந்தது.

உள்ளூர பெருத்த மகிழ்ச்ி என்றாலும் அவ்வப்போது அவர் மனதைச் சில சந்தேகங்கள் - சிறு கவலைகள் உறுத்திக் கொண்டிருந்தன. திருமணத்தைத் தானே எடுத்து நடத்தப் போவதாக நரேந்திரன் ஆரம்பத்திலேயே சொல்லி விட்டிருந்தபடி... விரைவாக செயல்பட்டுக் கொண்டிருந்தான்.

நிச்சயதார்த்தம் என்று தனிப்பட்ட நிகழ்ச்சி தேவையில்லை என்று ஒதுக்கிவிட்டிருந்தான்.

திருமண அழைப்பிதழ் அச்சடிக்க அவரிடம் சில விவரங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ள காரைக் கொடுத்தனுப்பி தனது பங்களாவிற்கு அன்று மாலை வரச் சொல்லியிருந்தான்.

வரவேற்பறையில் மெத்தென்று ஒரு சோபாவிலே சாய்ந்து கொண்டு கண்களை நாலா பக்கமும் ஓட்டியபடி உட்கார்ந்திருந்தார் ரத்னசாமி. அலுவலக உடையைக் களைந்து

யிட்டு... வேட்டி சட்டையில் மாடியினின்று இறங்கி வந்த நரேந்திரன் அங்கே வந்து கலந்து கொண்டான்.

திருமண அழைப்பிதழை எழுத அவனது அந்தரங்கக் காரியதரிசி யோகநாதன் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

இன்னார் மகளை - இன்னார் மகனுக்கு என்ற விவரம் எல்லாம் எழுதி முடித்த பின்னர் கல்யாணம் திருத்தணி கோயில் மண்டபத்தில் நடப்பதாக இடத்தை குறிப்பிட்டதைக் கேட்டு ரத்னசாமி திடுக்கிட்டுப் போனார்.

நரேந்திரனைப் போல குறுகிய காலத்தில் ஓகோவென்று முன்னேறி - மிகவும் வசதியாக வாழத் தெரியாது போனாலும்.... ரத்னசாமி தமது சாமர்த்தியத்தால் முன்னுக்கு வந்தவர்... பற்றாக்குறை இன்றி பதவிசாக வாழ்ந்து கொண்டிருப்பவர்.

நரேந்திரனுக்குப் பெண் கொடுக்கப் போகிறோம் என்றதும் மனிதனுக்கு ஒரு பெரிய ஆசை வந்து விட்டிருந்தது. கல்யாணம் அவன் செலவில்தானே நடக்கப் போகிறது நகரத்தில் உள்ள பிரபலமானதொரு கல்யாண மண்டபத்தில் திருமணத்தை தடபுடலாக நடத்த ஆலோசனை சொல்ல வேண்டும். மந்திரிகளும் வியாபார உலகில் முக்கியமானவர்களும் வந்து வாழ்த்த மண்டபங் கொள்ளாது வந்து நிறைந்து விட்டிருக்கும் அத்தனை பேருக்கும் சிறப்பான கல்யாண சாப்பாடு போட்டு - மாலை ரிசப்ஷனுக்கு பரதநாட்டியக் கச்சேரியும் இரவு பிரபல வித்வானின் நாதஸ்வர இசையும்.... வைத்து ஜமாய்த்துவிட வேண்டும். இதுமாதிரி கல்யாணம் சமீபத்தில் யார் வீட்டிலும் நடந்ததில்லை என்று பார்த்தவர்கள் பிரமிக்க வேண்டும்.... என்றெல்லாம் பல கற்பனைகள்.

கோவில் மண்டபத்திலே கல்யாணமா? அவருக்கு பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

அதைப்புரிந்து கொண்டவன் போல நரேந்திரன்

புன்னகைத்தான். ''ஏதாவது ஒரு கோவிலில் என் கல்யாணம் மிக எளிமையாக நடத்தப்பட வேண்டும் என்பது என் தாயின் விருப்பம்... அதனாலே...''

''ஆமாம்! ஆமாம்! மறைந்து போன பெரியவங்க விருப்பப்படிதானே செய்யணும்.... அதனாலே என்ன? கல்யாணத்தை கோவிலில் வைத்துக் கொண்டு ரிசப்ஷனை சென்னையில் வைத்துக் கொண்டால் போகிறது'' என்றார்.

''என் கல்யாணத்தில் ரிசப்ஷன் கிடையாது.... கல்யாணமான கையோடு அங்கிருந்தே நாங்கள் மைசூருக்கு காரில் தேன்நிலவுக்குக் கிளம்புவதாக ஏற்பாடு'' என்றான் நரேந்திரன்.

அதற்கு மேல் அவரால் குறுக்கே எதுவும் பேச முடியவில்லை. எப்படியோ போகட்டும். கங்காவின் கழுத்தில் மூன்று முடிச்சுகள் விழுந்தால் போதும் என்றவரை... தலையை அசைத்து எல்லா ஏற்பாடுகளையும் ஆமோதித்தார்.

''பூரணி! எல்லோருக்கும் காபி டிபனுக்கு ஏற்பாடு செய்!'' என்று நரேந்திரன் குரல் கொடுத்தபோது உள்ளேயிருந்து வந்த அந்த உறவுக்காரப் பெண்ணைக் கவனித்தார்... மனதிலே சுருக்கென்றதொரு சந்தேகம் முள்ளாக வேதனையுடன் நெருடியது.

யார் இந்த பூரணி?

இடுப்பிலே கொத்து சாவியும்... முகத்திலே பணக்காரத் தனமுமாக தெரிகிறாளே... யார் இவள்?

அவனது மாமன்மகள் என்று அரைகுறையாகக் கேள்விப்பட்டிருந்தார். உறவுப் பெண் இருக்கும்போது ஒதுக்கிவிட்டு ஊர் பெண்ணைக் கட்டிக் கொள்ள முன்வருவானேன்? கல்யாணமாகாத அந்த இளம் பெண் அங்கே இன்னும் எவ்வளவு காலம் தங்கியிருப்பாள்?

கை கழுவும் பீங்கான் அருகே எழுந்து சென்றபோது நரேந்திரனிடம் அவராகவே ஆரம்பித்தார்.

''பாவம் பூரணிக்கு தாய்... தந்தை இருவரும் இல்லை போலிருக்கு!''

லேசாக முறுவலித்தான் நரேந்திரன். அவரது கேள்வியின் முழு அர்த்தமும் அவனுக்கு நன்றாகவே விளங்கி விட்டது.

''பூரணி உண்மையில் என் மாமன் மகள் அல்ல. கேட்பவர்களுக்கு அப்படி சொல்லி வைத்தேன்....''

''அப்படியா?'' திகைப்புடன் கேட்டார் ரத்னசாமி. அவரது குழப்பம் இன்னும் அதிகமாகியது.

''எனக்கு ஒரு சமயம் உதவி செய்து உயிரைக் காப்பாற்றித் தந்தார் இவளது தாத்தா; அவர் இறந்ததும் இவள் அனாதையாகி விட்டதால் ஆதரவு தந்து என் பாதுகாப்பில் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

எச்சிலை விழுங்கிக் கொண்டார் ரத்னசாமி.

'பாதுகாப்பு என்றால் என்ன அர்த்தம். பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள். ஒரு சமயம் நெருக்கமானதொரு தொடர்பு ஏற்கனவே இருவரிடையே ஏற்பட்டு விட்டிருக்கிறதோ என்னவோ. பணம் நிறைய வந்ததும் மனிதனுக்குக் கூடவே பந்தாக்களும் வந்து சேர்ந்து விடுவது உலக இயல்பு. இவனுக்கு என்னென்ன பழக்கங்கள் ஏற்பட்டிருக்கிறதோ யார் கண்டார்கள்?'

ஒப்புதல் கொடுத்தாகிவிட்டது. இனி வாக்குப் பிரளமுடியாதே - மனைவி என்ற உரிமை கங்காவுக்கு வந்ததும் பூரணி இடுப்பில் தொங்கும் கொத்து சாவி தானே இடம் மாறிவிடும். பின்னர் மெல்ல பூரணியை அந்த இடத்திலிருந்து வெளியேற்ற முடியாமலா போய்விடும்? ஒரு சமயம் பூரணி அவனது ஆசை நாயகியாக இருந்து தொலைந்தால்.... உடனடியாக அவளைக் கிளப்பிவிட முடியாதே...

இவைகளையெல்லாம் பற்றி இப்போது சிந்தித்து என்ன

பயன்? ஆண்பிள்ளை நரேந்திரன், பணத்தில் புரளுகிறான். அந்தத் திமிர். ஆசைக்கு ஒருத்தியும் அந்தஸ்த்துக்கு ஒரு மனைவியையும் வைத்து வாழ விரும்பினால் அவர் முட்டுக்கட்டை போட முடியுமா?

கங்காதான் பொறுமையாக இருந்து இந்த சங்கடத்தை சமாளிக்க வேண்டும்.

இது ஒரு அந்தரங்கமான சங்கதி... ஒரு தாய் மகளிடம் சொல்ல வேண்டிய ஆலோசனை.

அவர் ஒரு தந்தை - மகளிடம் வீட்டு நிர்வாகத்தைப் பற்றிகூட மனம் விட்டுப் பேசியவர் இல்லை.

இப்போது திடீரென்று பூரணியைப் பற்றி வெளிப்படையாக தமது சந்தேகத்தை மகளிடம் எப்படி சொல்லிக் கொள்ள முடியும்?

மேல் துண்டால் கையைத் துடைத்துக் கொண்டு மறுபடியும் வரவேற்பறை சோபாவில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

''கல்யாணத்தை எளிமையாக நடத்துவது உங்க பிரியம்! எனக்கு மறுப்பு இல்லை. ஒரு ஞாபகத்துக்கு வீடியோ காமிராவில் பிடிச்சு வச்சுக் கொள்வது நல்லதில்லையா?''

''அதற்கென்ன அப்படியே செய்து விடலாம்... உங்களுக்கும் ஒரு பிரதி எடுத்துத் தந்துவிட ஏற்பாடு செய்துடறேன். மகிழ்ச்சிதானே?''

''எனக்கு என்னத்துக்கு எங்க வீட்டில் வீடியோ பெட்டி கிடையாதே!''

''கவலைப்படாதீங்க மாமா...! உங்களுக்கு ஒரு நல்ல கலர் டீ.வியும் வீடியோ பெட்டியும் வாங்கி எங்கள் பரிசாகத் தந்து விடுகிறேன். மகளைக் கட்டிக் கொடுத்துவிட்டுத் தன்னந்தனியாக நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கும்போது மகளின் திருமணப் படத்தை வீடியோவில் போட்டுப்பார்த்து

திருப்தியடையலாம்...!'' மெலிதாக சிரித்தான் நரேந்திரன்.

அன்று மாலை நடந்ததெல்லாவற்றையும் நினைத்துக் கொண்டு பெருமூச்சுடன் படுக்கையில் புரண்டார் ரத்னசாமி. சமையலறையை கங்கா சுத்தம் செய்யும் ஓசைகேட்டது. மெல்ல நடந்து அவள் கூடத்திற்கு வரும் ஓசை தொடர்ந்தது. பாயை உதறி... தரைமீது விரித்து தலையணையைத் தொப்பென்று போடும் சப்தம் துல்லியமாகக் கேட்டது.

வியாபாரம், பணம் சேர்ப்பது என்று வாழ்க்கையை யந்திரமாக்கிக் கொண்டிருந்தவருக்கு... திடீரென்று மகளைப் பற்றிய இரக்க சிந்தனை மனதைக் குடைந்தது. சூதுவாது எதுவும் தெரியாத பேதைப் பெண் கங்கா. அம்மா இறந்த பின்னர் வீட்டுப் பொறுப்பை ஏற்று அக்கறையாக நிர்வகித்து -எதிர்த்து பேசத் தெரியாது அடக்கமாக வாழ்ந்து பழகிவிட்ட பெண்...

முதல் முதலாக அவரைச் சந்தித்த நரேந்திரன் வேறு -வியாபாரத் துறையில் முன்னணியில் நிற்கும் நரேந்திரன் வேறு - பணத்திமிரினால் அவர் மகள் கங்காவை அவன் ஆட்டிப் படைத்தால்...?

சே! என்ன எண்ணம் இது. தானே விரும்பி வந்து பெண் கேட்டுத்தானே மணந்து கொள்கிறான். கங்காவிடம் கடினமாக நடந்துகொள்ள மாட்டான்.

வெளியே ரொம்ப முரடுபோல காண்பித்துக் கொள்ளும் இளைஞர்கள் எல்லாம்... மனைவி என்று ஒருத்தி வந்ததும் எப்படி அடங்கிப் போகிறார்கள். அவர் கூட சின்னவயதில் ரொம்ப பிடிவாதக்காரராக இருக்கவில்லையா? மனைவி வந்ததும்... எப்படி மாறிப்போனார்....

பலவும் எண்ணி படுக்கையினின்று எழுந்து -கூஜாவிலிருந்த நீரைக் கொஞ்சம் குடித்துவிட்டு... மறுபடி தலையணை மீது சாய்ந்து கொண்டார்.

கூடத்து குழல் விளக்கை அணைத்துவிட்டு நடையில் விடிவிளக்கை எரியவிட்டு, பாயின் ஓரத்தில் அமர்ந்தபடி சுவரில் சாய்ந்து கொண்டாள் கங்கா.

அவளுக்கும் உறக்கம் வரவில்லை. மனதிலே பல எண்ணங்கள் பொங்கிப் புரண்டு கொண்டிருந்தன.

''திருத்தணியில்தான் கல்யாணமாம்... ரொம்ப எளிமையாக நடத்தப் போகிறாராம் மாப்பிள்ளை!'' என அப்பா சொன்னபோது கங்கா புன்னகைத்தாள்.

''எனக்குக்கூட ஆடம்பரமான திருமணத்திலே விருப்பம் இல்லை அப்பா...'' மெல்லிய குரலில் வெட்கத்துடன் சொன்னாள்.

ரத்னசாமி உதட்டைக் கடித்துக் கொண்டார்.

இந்தப் பெண் இப்பவே நரேந்திரன் பேச்சுக்கு தலையாட்ட ஆரம்பித்து விட்டாள்.... தாலி கழுத்தில் ஏறியதும் என்ன செய்வாளோ... என்று முணு முணுத்தபடி நகர்ந்தார். அது கங்காவுக்கு நன்றாகக் கேட்டது... முகம் சிவந்துபோய் தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள்.

திருமணத்திற்குப் பின் கணவன் சொற்படி கேட்க வேண்டியது நியாயந்தானே... என எண்ணியபடி காரியங்களை கவனிக்கலானாள்.

அதற்குப் பின்னர்.. பாய்மேல் வந்து உட்கார்ந்தவளுக்கு எத்தனை எத்தனை.. சிந்தனைகள்?

விடியற்காலை முகூர்த்தம் என்று அப்பா சொன்னார். மாங்கல்யம் சூட்டப்பட்டதும், மற்ற சம்பிரதாயங்கள் முடிந்தவுடன் அவள் கணவனுடன் படியேறி கோவிலுக்கு சென்று முருகனுக்கு அபிஷேக ஆராதனை செய்துவிட்டு தான்... கல்யாண விருந்தில் கலந்து கொள்ளவேண்டும். வீட்டிலிருந்து திருத்தணிக்கு புறப்படும் முன்பே அவள் தனியாக ஒரு பெட்டியில் தேவைப்பட்ட புடவை மற்றவைகளை எடுத்து

வைத்துக் கொள்ளவேண்டும். அங்கிருந்து நேரே மைசூருக்குத் தேன்நிலவுக்குப் புறப்பட வேண்டியிருக்குமென்று அப்பா சொன்னாரே!...

திருமணம் நிச்சயிக்கப்பட்டதுமே... அடுத்த இரண்டு நாள் கழித்து நரேந்திரன் அங்கே வந்து அவளைத் தன்னுடன் காரில் அனுப்பிவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். கல்யாணப் புடவை, நகைகளை... அவளே பார்த்து வாங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக வெளியே அழைத்துப் போக விரும்புவதாக ரத்னசாமியின் உத்திரவைகேட்டு நின்றான்.

அவர் மறுக்கவில்லை... பூரண சம்மதத்துடன் அனுப்பிவைத்தார். காரை அவனேதான் ஓட்டினான். அவன் அருகே முன் ஆசனத்தில் அமர்ந்திருந்தபோது மேலே படாது... சற்று எட்டி கதவோடு ஒட்டியபடிதான் உட்கார்ந்திருந்தாள்.

அதைப்பற்றி அவன் கண்டு கொள்ளாதது போல இருந்துவிட்டான்.

புடவை, நகை கடைகளில் அவள் கண்ணில் பட்டவைகளைப் பேராசையுடன் வாங்கிக் குவித்துக் கொள்ளவில்லை.

கூறைப்புடவையை அவனே தேர்ந்தெடுத்தான். அவள் தன் உபயோகத்திற்கு இரண்டு பட்டுச்சேலைகளை மட்டும் சாதாரண விலைக்குள் அடங்கியதாக தேர்ந்தெடுத்தாள். நகைக் கடையில் அவன் தனக்கு பிடித்தவைகளை வாங்கி முடித்தான். அவள் ஒரே ஒரு தங்க சரட்டை மட்டும் வாங்கிக் கொண்டாள்.

''அம்மாவின் நகைகள் எனக்கு போதுமானது இருக்கு -அதிகம் வேண்டாம்....!'' என்றபோது அவன் சிரித்தான்.

'வைரம்-தங்கம்-பட்டு - பனாரஸ் இவைகளுக்கு மேல் உங்களது தூய அன்பு மட்டும் எனக்குக் கிட்டினால் போதும்!' என்று சொல்ல வேண்டுமென்ற அவா...

ஆனால் நாக்குப் புரள மறுத்தது.... உண்மையில் அவள்

வேண்டியது என்ன? உண்மை உணர்வுடன் நேசிக்கும் கணவனுடன் கூடிவாழும் இன்பமானதொரு இல்வாழ்க்கை...

அவளுக்கு அது கிட்டுமா—?

ஆமாம்.... அந்த பூரணி தொடர்ந்து அவர்களுடன் அந்த வீட்டில் தங்கியிருப்பாளா...?

அப்படியென்றால்...? இனம் காணாத ஒரு கலவரம் அடிவயிற்றைப் பிசைய..... இத்தனை எதிர்பார்ப்புகளின் நடுவே... நெஞ்சை அழுத்தும் வேதனையின் பிடியில் உணர்வுகள் நொறுங்கி... கண்கள் கலங்கிப்போய்.... கண்ணீர் முத்துகள் கழுத்தை நனைப்பதை உணர்ந்தாள்.

23

கல்யாண மண்டபத்தில் அத்தனை கூட்டம் இருக்கவில்லை. நரேந்திரனுக்கு உறவு என்று சொல்லிக் கொள்ள யாரும் இருக்கவில்லை. மாப்பிள்ளை வீட்டவர்களாக பூரணி, தாயம்மாள், தங்கப்பன் மூவர் மட்டுமே வந்திருந்தனர்.

கல்யாணத்திற்கு ஐயா எடுத்துக் கொடுத்த பட்டுச் சேலையில் பெருமையாக வளைய வந்து கொண்டிருந்தாள் தாயம்மாள். காற்றோட்டமாக இருந்த வாசல் பக்கம் புது வேட்டி சட்டை அலங்காரத்தில் வாயில் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு மகிழ்ச்சியுடன் நின்று கொண்டிருந்தான் தங்கப்பன். கூடத்தில் அமைக்கப்பட்டிருந்த மணமேடையில் உட்கார்ந்திருந்த மணமக்களை அடிக்கொரு தடவை உள்ளே வந்து பார்த்து விட்டு பற்களைக் காட்டித் தன்னுள் சிரித்தபடி உலவிக் கொண்டிருந்தான்.

நரேந்திரனது காரியதரிசி யோகநாதன் தன் குடும்பத்தினருடன் கல்யாணத்திற்கு முதல் நாளே அங்கு

வந்துசேர்ந்து விட்டிருந்தார். கல்யாண ஏற்பாடுகளின் பொறுப்பு அத்தனையும் அவருடையதாக இருந்தது.

சுள்ளென்று விடியலுடனேயே புறப்பட்டு விட்டிருந்த கோடை சூரியனின் எரிச்சலில் பட்டு வேட்டி, ஜிப்பாவிலே வியர்த்து கொட்டிய வண்ணம், சமையற்கட்டிற்கும் வாசல் பந்தலுக்கும் நடைபயின்று கொண்டிருந்தார் அவர்.

நரேந்திரனின் வியாபார நண்பர்கள் சிலர், அலுவலக ஊழியர்கள், அவர்களது மனைவி மக்கள் என்று பொறுக்கி எடுத்தாற்போன்றதொரு கூட்டம் மண்டபத்தை நிறைத்துக் கொண்டிருந்தது. ரத்னசாமிக்கும் உறவினர்கள், நண்பர்கள் என்று பலர் வந்துவிடவில்லை.

திருத்தணியில் கல்யாணமா.... விடியற்காலை முகூர்த்தம்... யாரால் அந்த வேளைக்கு அத்தனை தூரம் போக முடியும்? என்று பலர் கல்யாணப் பத்திரிகையை வாசித்துப் பார்த்ததுமே திருமணத்தில் கலந்துகொள்ளும் முயற்சியை கைவிட்டு விட்டனர்.

ரத்னசாமிக்கு நெருங்கிய உறவினர்கள் யாரும் கிடையாது. சுபாவத்தில் அவர் யாருடனும் ஒட்டாத பிறவி. அடி நாளிலேயே அவர் தமது உறவினர்களை நெருங்க விட்டதில்லை. தாம் உண்டு தம் வியாபாரம் உண்டு என்று சுயநலத்துடன் வாழ்ந்தவர். அதனால் பெண் வீட்டைச் சேர்ந்தவர்கள் என்று ஒரு பெருத்த கூட்டம் வந்துவிடவில்லை.

வியாபாரம் செய்த காலத்தில் தெரிந்தவர்கள் என்றிருந்த ஒரு சிலர் மட்டும் நாசூக்காகத் தனியே புறப்பட்டு வந்திருந்தனர். கிராமத்தில் தன்னந்தனியாகத் தவித்த அவரது ஒன்றுவிட்ட விதவை சகோதரி காயம்பூ பத்திரிக்கையைக் கண்டதும் இரண்டு நாட்கள் முன்னதாகவே வந்து விட்டிருந்தாள். ஒரு காரணம் பற்றி அவளை வரவேற்றுத் தம்முடன் வைத்துக் கொண்டு கல்யாணத்திற்குக் காரில் அழைத்துக் கொண்டு வந்திருந்தார் அவர்.

திருமணத்துக்குப் பின் காயம்பூவைத் தம்முடன் வீட்டில் தங்க வைத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்திருந்தார். மகள் கணவன் வீட்டிற்குப் போனதும்... அவரையும்... வீட்டையும் கவனிக்க ஒரு ஆள் வேண்டுமே! காயம்பூ அந்த ஏற்பாட்டிற்கு முழு மனத்துடன் ஒப்புக் கொண்டுவிட்டிருந்தாள்.

அரை நாள் பட்டினியாக... எந்த மழைக்கு அவளது மண் வீடு இடிந்து தலையில் விழுந்து விடுமோ எனப் பயந்து வாழ்ந்து கொண்டிருந்தவளுக்கு.... நிம்மதியாக வாழ இடமும், வயிறு நிறைய சோறும் கிடைப்பதென்றால் கசக்கவா செய்யும்!

கல்யாணத்திற்குப் பின்னர் அவர் வீட்டில் தொடர்ந்து தங்கியிருக்கப் போகும் அவள், மண்டபத்தில் ஒரு பக்கம் எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தாள். எல்லாம் சரிவர நடந்துகொண்டு வருவதை எண்ணி ரத்னசாமிக்கு பெருத்த மனத்திருப்தி.

பட்டு வேட்டி, ஜிப்பாவில் கசகசத்துக் கொண்டு கையிலிருந்த ஓலை விசிறியை ஆட்டியபடி இங்குமங்கும் பார்வையை ஓட்டிக் கொண்டிருந்தார்.

மணமேடையிலிருந்த தமது மகளைப் பார்த்து உள்ளூர மகிழ்ந்து போனார். பிடித்தாலும் புளியங்கொம்பை பிடித்து விட்டிருக்கிறோம் என்றதொரு கர்வம், அவர் மனதைக் கவ்விக் கொண்டிருந்தது. மண்டபத்தை வியாபித்துக் கண்களைக் கரித்த புகையை அவர் பொருட்படுத்தவில்லை. காற்றே இல்லாது இறுக்கும் மூச்சைத் திணறச் செய்ததைப் பற்றி அவர் கவலைப்படவில்லை.

விடியற்காலை முகூர்த்தம் என்று அழைப்பிதழில் கண்டிருந்தபடி குறிப்பிட்ட நேரத்தில் 'கெட்டிமேளம்' என்று புரோகிதர் ஓங்கிக்குரல் கொடுக்க, குழந்தைகளின் கூச்சல், பெண்களின் சிரிப்பு, வந்தவர்களின் பேச்சுக்குரல் அத்தனையையும் அமுக்கிவிட்டு மண்டபம் அதிர

கெட்டிமேளம் முழங்க... நரேந்திரன் அவரது மகளின் கழுத்தில் மூன்று முடிச்சுகளைப் போடுவதைக் கண்டு ஆனந்தத்தில் கண்கள் பனித்துப் போனார் அவர்.

பூரணி பின்னால் நாத்தியாக காமாட்சி விளக்கைக் கையில் வந்தி நிற்பதைக் கண்டு அவர் மனதில் குமுறிக் கொண்டிருந்த புகைச்சல் அடங்கிப் போனது. பத்து பேர் முன்னிலையில் பூரணியை அவன் தங்கையாக பாவிப்பதை நிரூபித்து விட்டானே-இனியும் ஏன் அவளைப் பற்றி கவலைப் படவேண்டும்? என்று ஆறுதல் அவருக்கு. மாலையும் கழுத்துமாகத் தம்மை முதலில் வந்து வணங்கிய மணமக்களை மனதார வாழ்த்தினார். கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

காயம்பூவுடன் காரில் அவர் கோவிலுக்கு விரைந்து அங்கே மணமக்கள் வரவுக்காக முன்னதாகக் காத்திருந்தார். நரேந்திரனது அந்தரங்க காரியதரிசியின் குடும்பத்துடன் மணமக்கள் படியேறி கோவிலை மெல்ல அடைந்தனர்.

அபிஷேக ஆராதனையை முடித்துக் கொண்டு அவர்கள் அனைவரும் கீழே வருவதற்குள் கல்யாணத்திற்கு வந்தவர்கள் சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஊர் திரும்ப தயாராகி விட்டிருந்தனர். திருமணத்திற்கு அமர்த்தப்பட்ட பஸ்ஸில் அலுவலக ஊழியர்கள் தங்களது குடும்பத்தை அடைத்துக் கொண்டு கிளம்பிவிட்டனர். காரில் வந்தவர்கள் வெற்றிலை பாக்குப் பையை வாங்கிக்கொண்டு வேகமாக விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டனர்.

தாயம்மாள், தங்கப்பன், பூரணி மூவரும் மீதமான சாமான்களுடன் ஊருக்கு திரும்பி விட்டனர். அதற்குப் பின் மண்டபம் காலியாகத் தெரிந்தது.

மணமக்களும் - யோகநாதனும் அவர் குடும்பத்தாரும், முத்னசாமியும், காயம்பூவும் மட்டுமேதான் இருந்தனர்.

மணமக்களுடன் உட்கார்ந்து சாப்பாட்டை முடித்துக்

கொண்டு கையைக் கழுவி வாயை துடைத்துக் கொண்டு வாசலுக்கு வந்தார் ரத்னசாமி - குளிர்ச்சியாகக் காற்று குளத்திலிருந்து வீசியதை அனுபவித்தபடியே நின்றவர் மனம் பூரித்துப் போனார்.

மிக எளிய முறையில் திருமணம் நடந்து முடிந்தது ஒரு வகையில் அவருக்கு நல்லதாகவேபட்டது. நகரத்திலே அமர்க்களமாக நடந்து விட்டிருந்தால் பெண்ணின் தந்தை என்ற வகையில் பந்தலில் இங்குமங்குமாக ஓடி, வந்தவர்களை எதிர்கொண்டு வரவேற்று உபசரித்து மிகவும் அலண்டு போயிருப்பார். இதயம் பலவீனமாகி நோயாளியாகி விட்டிருக்கும் அவருக்கு அந்த அலைச்சல் தாக்குப் பிடிக்கு முடியாத சங்கதியாகி விட்டிருக்கும். வெற்றிலையை மென்று கொண்டே மெல்ல கூடத்திற்கு வந்தவர் முன்னால் மருமகன் வந்து நின்றான்.

''யோகநாதன் குடும்பத்தோடு நீங்க சென்னைக்குத் திரும்பலாம்... நானும் கங்காவும் கொஞ்ச நேரத்தில் மைசூருக்குப் பயணப்படப் போகிறோம்.... காரை நானே ஓட்டிக் கொண்டு போகப் போகிறேன்... சரிதானே'' புன்முறுவலித்தான்.

காலையிலிருந்து மனதில் மூலையில் ஒரு பக்கம் லேசாக நெருடிக் கொண்டிருந்த அந்த சங்கதியை பட்டென்று சொல்லிவிட்டார் ரத்னசாமி.

''கோவிலில் கல்யாணத்தை உன் தாயாரின் விருப்பப்படி முடிச்சுக் கொண்டுட்டே. எனக்கும் நிம்மதிதான். மைசூருக்குப் புறப்படுமுன் திருமணத்தை இங்குள்ள பதிவு திருமண அலுவலகத்தில் பதிவு செய்துவிடுகிறது நல்லதில்லையா?''

''தேவையா மாமா... கடவுளின் சாட்சியை விட சட்டத்தின் சாட்சிதான் உங்களுக்குப் பெரிதாகத் தெரிகிறதா?'' வேடிக்கையாகச் சிரித்தான் நரேந்திரன்.

மகளின் திருமணத்தை பல விதத்திலும் உறுதியானதாக்க ரத்னசாமியின் உள்ளம் தவித்தது.

''அதுக்கில்லை மாப்பிள்ளை. ஒரு சமயம் நீங்க வியாபார சம்பந்தமா வெளிநாடு போக வேண்டியிருந்தா கங்கா கூட வரணும்னு விரும்பினா விசா வாங்க பதிவுத் திருமணச் சான்றிதழ் பெரிதும் உபயோகப்படுமே. இங்கே பதிவு செய்து கொள்ள சவுகர்யம் இருப்பதாலே சொன்னேன்...'' குமுறினார்.

''கவலைப்படாதீங்க மாமா. நான் அதற்கும் ஏற்கனவே ஏற்பாடு செய்திருக்கேன். அந்த அலுவலகத்தில் என் வரவை எதிர்நோக்கி அலுவலர்கள் இருப்பார்கள். அதை முடித்துக் கொண்டுதான் மைசூர் புறப்படுவதாக உத்தேசம்'' என்றான்.

''அப்பாடா!'' என்று நிம்மதி பெருமூச்சு விட்டார் பத்மனாபசாமி. சிறிது நேரம் கழித்ததும் யோகநாதனுடன் அவரும் கூடச்சென்று பதிவுத் திருமணத்தையும் முடித்துக் கொண்டு திருப்தியுடன் திரும்பினார்.

மணமக்கள் புறப்பட்டதும் - யோகநாதன் குடும்பத்துடன், காயம்பூவைக் கூட்டிக் கொண்டு சென்னைக்கு நிம்மதியாகக் கிளம்பினார் அவர். வழி நெடுகிலும் அவர் மனம் பலவும் எண்ணி மகிழ்ச்சியில் கொந்தளித்துக் கூத்தாடியது.

இனி அவர் கவலைப்படத் தேவையே இல்லை. கோவிலில் எளிமையாகத் திருமணம் நடந்தேறிய போதிலும் சட்டத்தின் முன்வெகு உறுதியாகிவிட்டது. நரேந்திரன் பணத் திமிரினால் அவரது மகளை ஆட்டிப் படைக்க முடியாது. அழுத்தமான அந்த உறவை உடைத்து விட்டு அவன் தன் இஷ்டப்படி நடக்க முடியாது. இரும்புப்பிடியாகச் சட்டம் அவனை நன்றாகச் சிக்க வைத்துக் கொண்டு விட்டிருக்கிறது.

மனதிற்குள் மகிழ்ந்தபடி அவர் ஊர் வந்து சேர்ந்தார். நிம்மதியாக சாப்பிட்டார்.... உறங்கினார்.... வீட்டில் வளைய வந்தார்.

ஒரு வார காலம் ஒரே நொடியில் ஓடிச் சென்று விட்ட

திகைப்பு கங்காவுக்கு. அது மறக்க முடியாத இனிய அனுபவம். நரேந்திரன் அவளிடம் மிகவும் அன்பாக நடந்து கொண்டான். பிருந்தாவனத் தோட்டத்தில் அவளை இங்குமங்கும் நிற்க வைத்து புகைப் படங்களை எடுத்தான். மைசூரில் அவள் பார்க்க விரும்பிய இடங்களுக்கெல்லாம் அழைத்துச் சென்றான். அவள் ஆசைப்பட்ட பொருள்களை எல்லாம் உடனுக்குடன் வாங்கித் தந்தான்.

கங்காவின் மனம் பெருமையில் விம்மியது. நரேந்திரனைப் போன்ற அன்பான கணவன் அவளுக்குக் கிடைத்தது எத்தனை பெரிய பாக்கியம்? இதற்கு அவள் என்ன விதத்தில் ஈடு செய்ய முடியும்?

வீட்டுக்குத் திரும்பியதும்... கருத்துடன் அதை நிர்வகித்து.... கண்ணின் கருமணியைப் போலக் கணவனைப் பரிவும்.... பாசமுமாக கவனித்துக் கொண்டு அவனது இன்ப துன்பங்களை சமமாகப் பகிர்ந்து கொண்டு அவனது அன்பு மனைவியாக... பண்பான பெண்ணாக அவள் நடந்து கொள்ளப் போகிறாள்... இதுதான் அவள் இந்த பாக்கியத்திற்கு செய்யும் ஈடு... பற்பல எண்ணி இன்பப் பெருமூச்செறிந்தாள்.

மறுநாள் முழுவதும் கடைகளுக்கு அலைந்து கொண்டிருப்பதிலேயே பொழுது கழிந்து போனது.

பல இடங்களில் ஏறி இறங்கி அவள் மிகவும் களைத்துப் போய்விட்டிருந்தாள். அன்று இரவு அடித்துப் போட்டது போல உறங்கி விட்டிருந்தாள். விடியற் காலையே ஊர் திரும்பப் பயணப்பட வேண்டுமென்று அவன் சொல்லி விட்டிருந்தான்.

வாங்கின சாமான்களை அவசரமாகப் பெட்டிகளில் திணித்துக் கொண்டு விடியுமுன் பயணத்திற்கு தயாராவதற்குள் அவள் மிகவும் சோர்ந்து போனாள். மைசூரில் இருந்து பெங்களூர் வரும்வரை அவள் காரின் கதவோரத்திலேயே சாய்ந்தபடி தூங்கிப் போனாள்.

பெங்களூரில் ஒரு ஓட்டல் முன் காரை நிறுத்தி அவளை

காப்பி பலகாரம் சாப்பிட அழைத்துச் சென்றான்.

சென்னைக்கு வண்டியை ஓட்டுமுன்... அவள் பக்கம் திரும்பி மெல்லிய குரலில் சொன்னான்.

''நம்ப கல்யாணத்துக்கு உன் அப்பா அதை நமக்கு பரிசாகத் தந்து விடுவார்னு எதிர்பார்த்தேன்!''

திடுக்கிட்டு கங்கா கணவன் பக்கம் திரும்பினான்.

''எதைச் சொல்றீங்க?'' கவலையுடன் கேட்டாள்.

''அந்த வைரப் பிள்ளையாரைப் பற்றிதான் சொல்றேன். அதை உன் தந்தை இனியாகிலுமாவது திருப்பித்தந்து தாம் செய்த பிசகுக்குப் பிராயசித்தம் தேடிக் கொள்ளலாம் அல்லவா! ஆனால் மனிதர் லேசுப்பட்டவர் அல்ல. பெருத்த மோசடிக்காரர்!''

தன் தந்தையை அவன் மட்டமாகப் பேசியது - மனதில் கருக்கென்று தைக்கவே.... வேதனையிலும், வெட்கத்திலும் அவள் துவண்டு போனாள்.

''என்ன பதிலைக் காணோமே...?'' காரை ஓட்டிக் கொண்டே அவளை சிறிது கோபத்துடன் வெறித்தான்.

கங்கா நடுங்கிப் போய் விட்டாள்.... சற்று நேரம் முன்வரை காதலில் அவளுடன் குழைந்து கொஞ்சிப் பேசிய கணவன் இப்படிக் கடுமையாக அவளை அதட்டுகிறான்? நெஞ்சு படபடக்க... மேனி நடுங்க அவள் மெல்லிய குரலில் மறுமொழி கூறினாள்.

''உண்மையில் எனக்கு எதுவுமே தெரியாது.''

''அப்பாவுக்கு ஏற்ற மகள் நீ தப்பாமல் பிறந்திருக்கே. என்னை ஏமாற்றி விட்டதாக உன் தந்தை நினைத்துக் கொண்டிருக்கிறார். உண்மையில் ஏமாறப் போவது அவர்தான்!''

என்ன சொல்கிறான் கணவன்? எனப் புரியாது

குழப்பத்துடன் விழித்த கங்காவுக்கு அவன் முகத்தைப் பார்க்கவும் பயமாக இருந்தது. அவள் செய்த குற்றம் என்ன?... அவளை எதற்காகக் கடுமையாக கோபிக்கிறான்?... புரியாது... பேசத் தோணாது... வழி மு ழுவதும் வேதனை நெஞ்சைக் குடைய.... காரின் கதவோரத்தில் ஒட்டிக்கொண்டு கண்களை மறைத்த கண்ணீரை விழுங்கிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

கடவுளே? இது என்ன சோதனை.... அவளது உள்ளம் ஓவென்று.... புலம்பிக் கொண்டிருந்தது.

24

சுள் என்று வெய்யில் எரித்த பிற்பகல் நேரம். சாலை ஓரத்தில் வண்டியை நிறுத்தினான் நரேந்திரன்.

முன்கூட்டியே ஓட்டலில் காப்பியை வாங்கி பிளாஸ்கில் நிறைத்துக்கொண்டு வந்திருந்தான் - பிளாஸ்க்கைத் திறந்து இரண்டு தம்பளர்களில் காப்பியை ஊற்றினான். டாஷ்போர்டில் சொருகி வைத்திருந்த பிஸ்கட் பொட்டலத்தை எடுத்துத் திறந்து பிளாஸ்ட்டித் தட்டில் கொட்டி... காப்பியுடன் அதை அவளிடம் நீட்டினான்.

''சாப்பிடு! வீட்டுக்குப் போவதற்குள் இருட்டிடும். வழியிலே ஓட்டலில் சாப்பிட நிறுத்த எனக்கு நேரம் இல்லை...'' என்றான்.

அவனது முகத்தை நிமிர்ந்து பார்க்கத் துணிவின்றி அவள் காரை விட்டு இறங்கினாள். முகத்தில் கலைந்து விழுந்த முடியை சீராக்கிக் கொண்டாள். கொளுத்தும் வெய்யிலுக்கு சாலை ஓரத்து புளியமரத்து நிழல் சுகமாக இருந்தது. அவன் கொடுத்த தட்டையும் டம்ளரையும் வாங்கிக் கொண்டு... எதிரே தெரிந்த வயல் பக்கம் பார்வையைத் திருப்பிய வண்ணம் நின்று

கொண்டாள். பிஸ்கட் நமத்துப் போய் விட்டிருந்தது. ஒன்றை எடுத்து காப்பியில் நனைத்து மெல்ல வாயில் திணித்துக் கொண்டே வேடிக்கை பார்க்கலானாள்.

சற்றுத் தொலைவில் தெரிந்த களத்து மேட்டருகே ஒரு சிறு ஓட்டு வீடு. அருகே சிறு கிணறு ஒன்று காணப்பட்டது. நடுத்தர வயதான பெண் ஒருத்தி கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தாள். வைக்கோல் போருக்குப் பின்னாலிருந்து தெரிந்த அந்த மனிதன் தன் தலையிலிருந்த முண்டாசை அவிழ்த்துத் தோளில் போட்டுக் கொண்டு கிணற்றருகே வந்தான். வாளியில் அவள் இறைத்து ஊற்றிய தண்ணீரில் முகம் கால் கை கழுவிக் கொண்டு துண்டால் முகத்தை துடைத்துக் கொண்டான். வீட்டில் வாசலருகே வளர்ந்து நிழல் பரப்பிக் கொண்டிருந்த மரத்தடியில் கிடந்த கயிற்றுக் கட்டிலின் மீது சாய்ந்து கொண்டான்.

உள்ளே சென்ற அந்த பெண்மணி அலுமினியத் தம்ளர் ஒன்றில் நீரோ-மோரோ கொண்டு வந்துகொடுக்க சாப்பிட்டு விட்டு கால்களை ஆட்டிக் கொண்டு கட்டிலில் அமர்ந்தபடி ஏதோ அவன் சொல்ல சிரித்துக் கொண்டு... அவள் கட்டிலில் காலடியில் உட்கார்ந்து கொண்டு... வெற்றிலைக்கு சுண்ணாம்பு தடவி... சுருட்டி அவனிடம் தந்து கொண்டிருந்தாள்.

சினிமாவில் பார்த்ததொரு காட்சிபோல... தென்பட்ட அதை வேடிக்கை பார்த்தபடி காப்பியை வேகமாகப் பருகி முடித்தாள் அவள்.

''என்ன பார்க்கிறே?... காரும் பங்களாவும் இல்லாம களத்துமேட்டிலே குடித்தனம் செய்தாலும் புருஷன் மனைவி இரண்டு பேரும் எத்தனை ஆசையும், பாசமுமா இருக்காங்கன்னுதானே அவங்களைப் பார்த்துட்டு யோசிக்கிறே?'' நரேந்திரன் சிரித்தான்.

திடுக்கிட்டுப் போனாள் கங்கா.

எப்படி அவள் நினைத்ததை அவன் யூகித்தான்?

அவள் வாழ்க்கையில் வேண்டியது அன்பான கணவனைத்தானே? அந்தஸ்து - ஆஸ்தி இவைகளை எதிர் பார்க்கவே இல்லையே... அந்த சாதாரண தம்பதியரைப் போல அவளும், அவனும் மனம் ஒன்றி வாழ முடியாதா?.... என எண்ணியபோதே.... அந்த ஏக்கம் கண்களைப் பனிக்கச் செய்து விட்டது.

கண்ணீரை விழுங்கிக் கொண்டு உதட்டைக் கடித்துக் கொண்டாள். அவனை மவுனமாகப் பார்த்தாள்.

''நாமும் இவர்களை விட மிகவும் அந்நியோன்ய மானவர்களாக வாழ ஆரம்பித்திருக்க முடியும். ஆனால் உன் அப்பா நமது அன்பில் மண்ணை வாரிப் போட்டு விட்டிருக்கிறாரே - என்ன செய்ய?'' என்றான்.

அவள் பதில் பேசவில்லை.... காலியான டம்ளர்களையும் பிளாஸ்க்கையும் எடுத்து கூடைக்குள் வைத்து காரின் ஆசனத்தின் கீழ் வைத்தாள். மீதமிருந்த பிஸ்கட்டுகளை பொட்டலத்தில் சுருட்டி கூடைக்குள் திணித்தாள்.

எங்கிருந்தோ ஒரு பரட்டைத் தலை சிறுவன் -ஆட்டுக்குட்டிகள் சிலவற்றின் பின்னால் ஓடிக் கொண்டிருந்த அழுக்குப்பிடித்த அரை நிஜார்க்காரன், இடதுகை கட்டை விரலை சூப்பிக் கொண்டு.... கையில் பிடித்திருந்த காய்ந்த குச்சியை மார்புடன் அணைத்தபடி அவர்கள் கார் அருகே வந்து ஆவலுடன் பார்த்தபடி நின்றான்.

''அந்த பிஸ்கட் பொட்டலத்தை பையன் கிட்டே கொடு. உன் அப்பாவைப் போல எல்லாத்தையும் தனக்கே என்று முடக்கி வைக்க வேணாம்...!''

முகம் சிவந்து போனாள் அவள். நெஞ்சு படபடவென்று துடித்துக் கொண்டது.

'இது உங்க சொத்து. உங்க உத்தரவின்றி எப்படி எடுத்துக் கொடுப்பேன்?' பளிச்சென்று பதிலுக்குக் கேட்க கோபத்தில் அவள் நா துடித்தது.

ஊர் திரும்பும் வழியில் கணவனுடன் வம்பும் வழக்கும் ஏன்? பதில் பேசாது பொட்டலத்தை எடுத்து சிறுவன் கையில் கொடுத்துவிட்டு காரில் ஏறிக்கொண்டாள்.

மறுபடியும் அவர்களிடையே நீண்டமவுனம். வெய்யில் தாழ்ந்து குளுமையாக வீசிய காற்று அவளது கூந்தலைப் புரட்டிக் கொண்டிருந்தது. காரின் கதவோரத்திலே மழைக்கு ஒண்டிய குருவி போல அவள் ஒட்டிக் கொண்டிருந்தாள்.

பொன் மாலைப்பொழுது மெல்ல நகர அந்த வானம் செம்மையாகி...மலைக்கு பின்னால் சூரியன் அமிழ்.... லேசாக இருள் பரவத் தொடங்கி கொஞ்ச நேரத்தில் கருமையாகி விட்டது.

அவர்களது கார் சாலையில் வீசிய விளக்கொளியையும் எதிரே பூதத்தின் கண்கள் போல் பிரகாசமாக வெளிச்சத்தை வீசிக்கொண்டு வந்த வாகனங்கள் பரப்பிய ஒளியையும் தவிர -எங்கும் ஒரே இருளில் தனியாக தங்கள் வீட்டில் அப்பாவின் வருகைக்காக காத்திருப்பது போன்றதொரு கலவரம் அவள் மனதை அடைத்துக் கொண்டிருந்தது.

தலைக்கு மேலிருந்த போக்குவரத்தை வழி காட்டும் கண்ணாடியின் ஓரத்தில் இருந்த கடியாரம்.... சிவப்பு எண்களை ஓடவிட்டுத் துடித்துக்கொண்டிருந்தது.

இரவு எட்டு ஐம்பது என்று அவள் நேரத்தை தெரிந்து கொண்டபோது வண்டி நெடுஞ்சாலையினின்று நகரத்தின் எல்லையை சமீபித்து விட்டிருந்தது. இன்னும் முக்கால் மணி நேரத்தில் வீட்டை அடைந்துவிடுவோம் என்று எண்ணியவள் மீண்டும் திடுக்கிட்டுப் போனாள்.

அவளது கணவன் பங்களாவை அடைந்ததும் அவள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

கவலையுடன் பலவும் எண்ணி கண்களை மூடிக்

கொண்டிருந்தவள் நேரத்தையே மறந்து போனாள். மெல்லக் கண்களைத் திறந்து கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தவளுக்கு ஒரு அதிர்ச்சி. அவன் வண்டியை திருவல்லிக்கேணி முத்துவீரன் தெருவுக்குள் ஓட்டிக்கொண்டிருந்தான். ஐந்தாம் எண் வீட்டருகே நிறுத்திவிட்டு... "நீ இறங்கிப் போய் அழைப்பு மணியை ஒலிக்க விடு. நான் வருகிறேன்..." என்றான்!

சுற்றும்முற்றும் திகைப்புடன் பார்த்துக் கொண்டு அவள் தங்களது வீட்டு வாயிலின் முன் வராந்தாவிலிருந்த கேட்டருகே நெருங்கினாள்.

அது சமயம் இரவு உணவை முடித்துக் கொண்டு முற்றத்திலே கைகளை கழுவிவிட்டு... கூடத்தில் கிடந்த தமது சாய்வு நாற்காலியில் வந்து அமர்ந்து கொண்டிருந்தார் ரத்னசாமி.

மகள் இல்லாத வீடு அவருக்கு வெறுமையாகத் தெரிந்த போதிலும் அதை சாமர்த்தியமாக சமாளித்து விட்டிருந்தார். கல்யாணத்திற்கு வந்த காயம்பூவை அங்கேயே தங்க வைத்துக் கொண்டது மிகவும் நல்லதாகி விட்டது என்று எண்ணி தமக்குள் மகிழ்ந்தபடி... வெற்றிலைபாக்கு பெட்டியை தமது காலடியிலிருந்த சிறுமேஜைக்கு நகர்த்திக் கொண்டார்.

சுவற்றில் தொங்கிய காலண்டரைப் பார்த்தார்.... தேனிலவுக்குப் போயிருந்த மணமக்கள் திரும்பிவர இன்னும் சில நாட்கள் இருந்தன. நரேந்திரன் மைசூரில் குறைந்தது இரண்டு வாரங்களாவது தங்கப் போவதாகச் சொல்லி விட்டிருந்தான். பத்து நாட்கள் கூட இன்னும் ஆகவில்லையே?...

வாசனைப் பாக்கை அள்ளி வாயில் போட்டுக் கொண்டு கும்பகோணம் வெற்றிலையை துண்டால் ஒவ்வொன்றாகத் துடைத்து தமது தொடை மீது அடுக்கி வைத்துக் கொண்டு வாசனை சுண்ணாம்பைத் தடவி நார் கிழித்து மடக்கி வாயில் அடைத்துக் கொண்டபோது அவருக்கு ஏற்பட்ட குஷி!

சமீபகாலமாக அவர் தமது நோயின் காரணமாக பத்திய

உணவில் இருந்தார் - வெற்றிலை போடுவதை நிறுத்தி விட்டிருந்தார். காப்பியை கண்ணாலே பார்ப்பதில்லை. மகளின் மேற்பார்வை இல்லாத காரணத்தால் ரத்னசாமி பத்திய உணவை ஒதுக்கிவிட்டு - தமக்கு பிடித்ததை சமைத்துப்போடச் சொல்லி உண்டு மகிழ்ந்தார்.

வயிற்றை புரட்டிக் கொண்டிருந்த மாத்திரைகளை மறந்து நிம்மதியாக இருந்தார். நினைத்தபோது அரைக்கவுளி வெற்றிலையை வைத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் அரைத்து தீர்த்தார்.

வாயில் அழைப்புமணி அழுத்தமாக ஒலித்தது.

திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார் ரத்னசாமி... இந்த வேளைக்கு யார் அவரைத் தேடிக் கொண்டு?

குதப்பிக் கொண்டிருந்த வெற்றிலையை பளிச்சென்று முற்றத்தில் காரித் துப்பிவிட்டு - அவசரமாக டம்ளர் தண்ணீரில் வாயைக் கொப்பளித்துக் கொண்டார்.

அதற்குள் மறுபடியும் அழைப்புமணி பலமாக ஒலித்தது. கைமடக்கில் நழுவிய துண்டை வாரித் தோளில் போட்டுக் கொண்டு வாயிலுக்கு விரைந்தார்.

கதவைத் திறந்தவருக்கு மகிழ்ச்சியானதொரு அதிர்ச்சி.

தேன்நிலவிலிருந்து மகளும்-மருமகனும் திரும்பி வந்து விட்டிருக்கிறார்களே என்றதொரு வியப்பு.

''வாங்கோ மாப்பிள்ளை!'' வாயெல்லாம் பல்லாக வரவேற்றார் ரத்னசாமி.

பெரிய பெட்டி ஒன்றையும் சாமான்கள் நிறைந்ததொரு பிரம்புக் கூடையையும் சுமந்து கொண்டு... அவரைத் தாண்டி உள்ளே நுழைந்த நரேந்திரன் கூடத்தில் அவைகளை வைத்தான்.

''இதுகள் ரெண்டு மட்டும்தானே உன் சாமான்கள்?'' என்று அதட்டும் குரலில் அவன் கேட்க, கங்கா தலையை ஆட்டினாள்.

''உங்க பெண்ணை பத்திரமாக உங்ககிட்டே சேர்த்துட்டேன். நான் கிளம்பிக் கொண்டிருக்கிறேன்...'' நரேந்திரனின் அழுத்தமான பேச்சு அவருக்கு மெத்த குழப்பத்தைத் தந்தது.

''பயணத்திலே ரொம்ப அலுப்பு ஏற்பட்டிருக்கும். இரண்டு நாள் என்ன? நாலு நாள் கூட தாராளமா இங்கே தங்கியிருக்கட்டும். பிறகு ஒருநாள் பார்த்து கங்காவை நீங்க அழைச்சுட்டு போகலாம்...!'' சிரிக்க முயன்றார் ரத்னசாமி. ஆனால் மகளின் சோக முகத்தைப் பார்த்ததுமே அவர் ஆடிப்போய் விட்டார்.

''இங்கேயேதான் கங்கா இனி இருக்கப்போறா! என் வீட்டுக்கு நான் அழைச்சுட்டுப் போகப் போறதில்லை...''

''மாப்பிள்ளை, என்ன சொல்றீங்க?'' அலறி விட்டார் ரத்னசாமி.

''கங்காவை என் வாழ்க்கையிலிருந்து நீக்கி விட்டேன். புரிஞ்சுதா?'' கோபத்துடன் கேட்ட நரேந்திரன், விர் என்று வெளியேறி காரை வேகமாகச் செலுத்திக் கொண்டு போய்விட்டான்.

''என்னம்மா? என்னம்மா நடந்தது? உங்களுக்குள் ஏதாவது தகறாரா?'' ரத்னசாமி மகளிடம் கனிவான குரலில் கேட்டார்.

பணத்தையும்... அவன் ஆர்ப்பாட்டங்களையும் நம்பி பெண்ணைக் கொடுத்ததற்கு முகத்தில் கரியைப் பூசி விடுவானோ? கங்கா என்ன தவறு செய்தாள். இத்தனை கோபத்துடன் வெளியேறி விட்டான் மாப்பிள்ளை?

ஐயோ கடவுளே.,.. பெரிய இடத்திலே பெண்ணைக் கொடுத்து விட்டோம் என்று இறுமாந்து கொண்டதில் இப்படி ஒரு இடியா? கால் நழுவிக் கீழே விழுந்து விடுவார் போல உடம்பு நடுங்க-உணர்வுகள் தொய்ந்து... மூச்சு நின்று விடும்

போலத் திணறிக் கொண்டு கதவைத் தாளிட்டு விட்டுக் கூடத்திற்கு வந்து நாற்காலியில் தொப்பென்று விழுந்தார். காயம்பூவுக்கு கூடத்தில் நடந்த பேச்சு வார்த்தை அத்தனையுமே நன்றாகக் கேட்டு விட்டிருந்தன.

உண்மை சங்கதி என்ன என்று தெரிந்து கொள்ள அவள் தலை வெடித்தது. கிராமத்திலே ஊர் வம்பை உழக்கால் அளந்து வாழ்ந்து பழக்கப்பட்டவள்... பட்டணத்தின் வாழ்க்கை கட்டிப் போட்டதுபோல் அலுப்பைத் தந்து கொண்டிருந்தது... அதற்கு மாறுதலாக அவர்கள் வீட்டிலேயே ஒரு குழப்பம்.... புதுமணம் புரிந்து கொண்ட தம்பதிகளிடையே மனத்தாங்கல்... மிகவும் சுவையான வம்பாயிற்றே?

சமையலறையிலிருந்து துணிவுடன் கூடத்திற்கு வந்தாள் காயம்பூ.

''என்னம்மா நடந்தது, மாப்பிள்ளை ஏன் இப்படி கோபமா புறப்பட்டு போயிருக்கார்? அப்பா கேட்கிறாரே... விவரமா சொல்லும்மா....!'' குழைந்தாள் கிழவி.

அவள் எதிரில் எதுவும் பேச கங்காவுக்கு விருப்பம் இருக்கவில்லை.

அவள் சுபாவத்தில் மானத்திற்கு அஞ்சியவள்... தன் தந்தையைப் பற்றி கணவன் கொண்டுள்ள மட்டமான அபிப்பிராயத்தை அவள் எப்படி வெளிப்படையாகச் சொல்லமுடியும்?

மேலும் வைரப்பிள்ளையாரைப் பற்றிய சங்கதியை மூன்றாம் மனிதர் முன்னிலையில் என்ன பேசுவாள்?

''ஒன்றுமில்லை அப்பா... ரொம்ப நல்லாத்தான் நடந்து கொண்டிருந்தார். திடீர்னு நேத்திலிருந்து அவருக்கு நம்ப பேரிலே கோபம்....!''

''என்னத்துக்கு எதுக்குன்னு ஒரு பொண்ணு கேட்கமாட்டியோ?...'' காயம்பூ தூரத்து உறவை காரணமாக்கிக்

''எனக்குத் தெரியாது... ஏனனு தெரியாது அப்பா... நான் தவறேதும் செய்யலை!'' என்று தழுதழுத்தபடி கங்கா தன் முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு குலுங்கி அழுதாள்.

25

உண்மையில் கங்காவுக்கு வைரப்பிள்ளையாரைப் பற்றி ஒன்றுமே தெரியாது.

தன் தந்தை அப்படி ஒரு பெருத்த மோசடி செய்திருப்பார் என்று அவளால் நம்பவே முடியவில்லை.

அவள் தந்தையை மோசடிக்காரன் என்று சாடிய நரேந்திரன் மட்டும் என்ன விதத்தில் யோக்கியர்.

காதலிப்பது போல நடித்து... அவளது மனதைக் கவர்ந்து... திருமணம் செய்து கொண்டு, தேன்நிலவைக் கொண்டாடி.... அன்பான கணவன் போல் நடித்து... முடிவில் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்ட நரேந்திரன் நேர்மையானவனா? எண்ணி எண்ணி மருகினாள்.

நாட்கள் வேகமாக விரைந்தன. அக்கம் பக்கத்தவர்களிடம் அதிகம் பழக்கம் வைத்துக் கொள்ளாது அவர்கள் தானுண்டு தன் வீடு உண்டு என்று வாழ்ந்தது ஒரு வகையில் நல்லதாகப் போயிற்று. இல்லாவிட்டால் பக்கத்து வீட்டு பாட்டியோ... எதிர் வீட்டு அம்மாளோ சும்மா இருப்பார்களா?

அவள் ஏன் புக்ககம் போகவில்லை என்று கேள்விகளை அடுக்கித் துளைத்து விட்டிருப்பார்கள்.

ஆனால் என்ன? தெருவிலிருக்கும் அத்தனை பேருக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாக அந்தப் பணியைக் காயம்பூ ஏற்றுக்

கொண்டிருந்தாள். தனக்கு உதவியாக அடுப்பங்கரையில் சில்லரை வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த கங்காவை அவள் தினமும் தூண்டித்துருவிக் கொண்டிருந்தாள்.

''அப்பாகிட்ட மனம் திறந்து பேச முடியலைன்னா.... நான் வீட்டில் உன் தாய் போல் ஒரு பெண் பிள்ளை இருக்கேனே? என் கிட்டே சொல்லும்மா? மாப்பிள்ளைக்கும் உனக்கும் இடையே என்ன தகராறு?... அவருக்கு உன் மேலே ஏன் கோபம்? வரதட்சிணை, சீர், எதுவும் வேண்டாம்னு அவர்தான் சொன்னார். நாமே வலிய எதுவும் கொடுத்து அவரது கவுரவத்தைக் காப்பாத்தலைன்னு மனத்தாங்கலா? உன் அப்பா கல்யாணத்தின்போது ஏதாவது தவறா பேசிட்டாரா? நீ படிக்கிற காலத்திலே அடக்கமாத்தானே கல்லூரிக்கு போய்வந்தே எவனாவது பொறாமையில் உன்னைப் பத்திதப்பா ஏதாச்சும் மாப்பிள்ளைகிட்டே கதை கட்டிட்டானா? உண்மையை என்கிட்டே சொல்லு. நான் போய் அந்த கேடுகெட்ட பொய்யனைக் கிழிச்சு கூறு போட்டுட்டு வரேன்.

''ஏம்மா கங்கா! இப்படி செய்தா என்ன?... ஒரு நல்ல நாள் பார்த்து நானும் உன் அப்பாவுமா உன்னை உன் புக்ககத்திலே கொண்டுவிட்டா என்ன? வாசலைத் தாண்டி வந்தவளை வெளியே துரத்தி விடுவாரா மாப்பிள்ளை. அதையும் பார்த்துடுவமே? ஏம்மா கங்கா... மாப்பிள்ளை வீட்டிலே இருக்கிற பூரணி அவருக்கு உண்மையில் சொந்தம் இல்லையாமே. ஏதோ அந்த காலத்தில் அவள் பாட்டன் செய்த உதவிக்காக அவளுக்குப் பாதுகாப்புத் தருகிறாராம். இதை நீ நம்பறியா! ஒரு சமயம் இது அவள் போதனையோ? வெட்கப்படாம என் கிட்ட சொல்லும்மா?'' கிண்டிக் கிளறிக் கொண்டிருந்தாள்.

தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு உரக்கக் கத்த வேண்டும் போன்றதொரு இறுக்க உணர்வில் கங்கா தவித்துப் போனாள்.

அப்பாவுக்கு உதவியாக இருப்பாள் என்று கிராமத்தில் கிடந்த கிழவியை வீட்டில் கொண்டு வைத்துக் கொண்டது எத்தனை பெரிய பிசகாய் போய்விட்டது.

''அத்தை! அதெல்லாம் ஒண்ணுமில்லே. அவருக்கு நம்மேல ஏற்பட்டிருக்கிற மனத்தாங்கலுக்குக் காரணம் எனக்கு விளங்கவில்லை!''

''ஒண்ணுமே சொல்லாமலா கொண்டுவந்து உன்னை இங்கே தள்ளிவிட்டுப் போனார் மாப்பிள்ளை?'' காயம்பூ விடாப் பிடியாய் கேட்டாள்.

''அதான் அத்தை அவருக்கு எதுக்காக நம் மேலே கோபம்ன்னு எனக்குப் புரியலையே என்ன செய்வேன்!'' கோபத்தை அடக்கிக் கொண்டு முணுமுணுத்தாள்.

எத்தனைதான் காயம்பூ முயன்றும்.... கங்கா மூச்சு விடவில்லை. தன் தந்தையைப்பற்றி நரேந்திரன் இழிவாகப் பேசியதைப் பற்றி ஒரு வார்த்தை வெளியிட வில்லை.

ரத்னசாமி தம் மகளிடம் கேட்டுப் பார்த்தார். ஊகும்... அவள் எல்லாக் கேள்விகளுக்கும் ஒரே பதிலைத்தான் தந்து கொண்டிருந்தாள்.

எனக்குத் தெரியாது அப்பா...! அவருக்கு ஏனோ திரும்பி ஊர்வரும் வழியில் திடீர்னு கோபம் வந்துவிட்டது. எதுக்குன்னு புரியலை அப்பா... நான் தவறாக எதுவும் பேசலை நடந்து கொள்ளலை... எனக்கு உண்மை விளங்கியிருந்தால்தானே சொல்லமுடியும்...'' திரும்பத் திரும்ப அதையே சொல்லி விம்மி கண்ணீர் உகுத்தாள்.

ரத்னசாமிக்கு ஒரே குழப்பம் தாங்க முடியாத கோபம். எதற்காக நரேந்திரன் அவரது மகளை வீட்டில் கொண்டு வந்து தள்ளிவிட்டு மிகவும் அசட்டையாகப் புறப்பட்டு போயிருக்கிறான்?

அதன் காரணத்தை அவர் கண்டு பிடித்தாக வேண்டும்.

அவனிடம் போய் ஆத்திரத்தில் கத்தி சண்டை போடுவதில் பயன் இல்லை. சங்கதி இப்போது முள் மேல் போட்ட சேலையாக இருக்கிறது. மெல்ல அவனிடம் தணிவான குரலில் தாழ்ந்து நின்று பேசியாக வேண்டும்.

அடுத்த நாள் சோற்றுக்கு சிந்திக்க வேண்டிய நிலையில் இருந்த அனாதைப் பயலுக்கு அந்தஸ்து வந்ததும் ஆட்டம் போடுகிறான். பெண்ணைக் கொடுத்தாகி விட்டது. கண்ணைப் புண்ணாக்கிக் கொள்ளாமல் தந்திரமாகப் பேசிப் பார்க்க வேண்டும். இப்படியே விட்டுவிட முடியாது. கங்காவின் கதி என்னாவது? ஒரு வழி செய்தாக வேண்டும். பெற்றவன் என்ற கடமை இருக்கிறதே...!'' இரவும், பகலும் பலவித சிந்தனைகளில் தத்தளித்தார்.

அன்று காலை அவர் முடிவுக்கு வந்திருந்தார். காப்பி பலகாரத்தை விரைவில் முடித்துக் கொண்டு வெளியே செல்ல உடுத்திக் கொண்டு கிளம்பி விட்டார்.

முன்போலிருந்தால் கங்கா கட்டாயம் விசாரித்திருப்பாள்.

''உடம்புக்கு சுகமில்லாதிருக்கும்போது காலை வெய்யில் வேலையில் எங்கேப்பா புறப்பட்டீங்க - தனியா வெகு தூரம் போகக் கூடாதுன்னு எத்தனை வாட்டி சொல்றது அப்பா...!'' என்று உரிமையுடன் கடிந்து கொண்டிருப்பாள்.

கணவனால் புறக்கணிக்கப்பட்டு இப்போது தந்தையின் மதிப்பில் அவள் கொஞ்சம் மட்டமாகி விட்டிருக்கிறாளே?

வாயைத் திறக்க அஞ்சி... கைப்பிரம்பை எடுத்துக் கொண்டு உத்ரீயத்தை உதறி... மல்ஜிப்பா மீது தோளில் போட்டுக் கொண்டு காலில் செருப்புகளைத் திணித்தபடி அவர் கிளம்பிச் செல்வதை மவுனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். மெல்லப் பின்னாள் வந்து எட்டிப் பார்த்தபோது தெருவைத் தாண்டி விட்ட ரத்னசாமி சாலையில் ஓடிக்கொண்டிருந்த ஆட்டோ ஒன்றை கைதட்டிப் பிடித்து ஏறிக்கொள்வதை கவனித்தாள்.

அப்பா எங்கே புறப்பட்டு போகிறார் என்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை. ஆனாலும் மனம் பதட்டத்தில் தவித்தது.

நுங்கம்பாக்கம் ரேமெண்ட் அவன்யூவில் புகுந்த ஆட்டோ அவர் குறிப்பிட்ட பங்களா முன் வந்துநின்றது. கட்டணத்தைக் கொடுத்துவிட்டு மெல்ல இறங்கினார் ரத்னசாமி.

கேட்டருகே ஒரு முக்காலி மீது அமர்ந்து கொண்டிருந்த காக்கிச் சட்டைக் காவல்காரன் அவரைக் கண்டதும் புன்முறுவலுடன் எழுந்து சலாம் போட்டு நின்றான். எஜமானரது மாமனார் என்றவரை காவலாளி அடையாளம் கண்டு மதிக்கிறானே... நல்ல சகுனம்தான் என்றுஎண்ணிய படி... அவன் கேட்டை அகலத் திறந்துவிட மெல்ல உள்ளே நடைபாதை மீது பிரம்பை ஊன்றிக் கொண்டு நடந்தார்.

பின்பக்கமிருந்து ஆவேசமாகக் குரைத்தபடி ஓடிவந்த திம்மனை வேலைக்கார தங்கப்பன் பாய்ந்தோடி பிடித்துக் கட்டினான்.

''ஐயா எழுந்திருந்தாச்சு. குளியலறையிலே இருக்கிறார். உள்ளே வந்து உட்கார்ந்துக்கோங்க.... அம்மாவைக் கூப்பிடறேன்!'' என்று பணிவாகச் சொல்லி பற்கள் அனைத்தும் தெரிய பெரியதொரு புன்னகையுடன்.... தலை முண்டாசை உதறி இடுப்பில் கட்டிக் கொண்டு முன்னாள் நடந்தான்.

வரவேற்பறையில் அவன் காட்டிய சோபா ஒன்றில் உடலை ஒடுக்கிக் கொண்டு உட்கார்ந்தார் ரத்னசாமி.

''யாரது... வந்திருக்கிறது...'' உள்ளேயிருந்து வந்த பெண்ணின் குரலைக் கேட்டு முகம் இறுகிப் போனார் அவர்.

அவரது மகள் இருக்க வேண்டிய இடத்தில்... இவளை வைத்துக் கொண்டு... தான் செய்யும் பிசகை மறைக்க எத்தனை பெரிய நாடகமாடுகிறான் - அயோக்கியன் நரேந்திரன்... மனத்திற்குள் மாப்பிள்ளையை கடுமையாகத் திட்டிக்

கொண்டு... குரல் வந்த திசையை உன்னிப்பாகப் பார்த்தார்.

ரோஜா வண்ண நூல்சேலையில்... பளிச்சென்று தெரிந்த பூரணி சாப்பாட்டறை தடுப்புக்குப் பின்னின்று அங்கே வந்தாள்.

''வாங்கோ... உட்காருங்கோ... நரேந்திரன் இன்னும் கொஞ்ச நேரத்தில் வெளியிலே கிளம்பர நேரந்தான்!'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

சிறிது பொழுதில் ஒரு மரத்தட்டில் காப்பியும் கிண்ணத்திலே ரவா கேசரியுமாக வெளிப்பட்டாள்.

''இதெல்லாம் நான் அதிகம் சாப்பிடறதில்லையம்மா.... வேண்டாம் மன்னிச்சுக்கோ...!'' அடிக்குரலில் முனகினார். மதனசாமி.

''அப்போ கொஞ்சம் ஜூஸ் எடுத்துவரவா - ஐஸ்போட்டு மல்லி கொண்டு வரேன்!'' உபசாரமாக அவள் கேட்டபோது அவருக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

'ஒண்ணும் வேண்டாம். நீ இந்த வீட்டை விட்டுப் போனால் பெரிய புண்ணியமாகும். ஐஸ் போட்டு ஜூஸ் கொடுப்பிட்டால் என் வயிற்றெரிச்சல் தணிந்து போய்விடுமா? எனக்கு இப்பவல்லவா காரணம் புரிகிறது. நீ இங்கே உட்கார்ந்து கொண்டு...!' படபடவென்று வெடிக்கத் துடித்தார்.

ஆனால் அவர் வந்த காரியம் சுலபமாக முடியவேணுமே? கோபத்தை அடக்கிக் கொண்டு புன்னகைத்தார் ''எனக்கு இதெல்லாம் ஒத்துக்காது. மாப்பிள்ளையைப் பார்த்து பேசிட்டுப் போக வந்திருக்கேன்'' என்றார்.

அதற்கு மேல் பூரணி அங்கு நிற்கவில்லை. தேனிலவுக்குப் போன நரேந்திரன் தனியாகத் திரும்பி வந்தபோது 'அண்ணி எங்கே' என்று மட்டும் கேட்டாள் அவள்.

''உன் அண்ணி தன் பிறந்த வீட்டில் இருக்கிறாள்!...'' என்று சுருக்கமாகப் பதிலளித்த நரேந்திரன் முகத்தில் தெரிந்த கோபம் அவளுக்கு அச்சத்தை உண்டாக்கியது. அதற்குமேல் அவள் [illegible]

தொடர்ந்து பல நாட்கள் ஆகியும் கங்கா புக்ககம் வராதது குறித்து அவளுக்கும் மற்ற வேலைக்காரர்களுக்கும் ஒரே வியப்பு. கணவனுக்கும் மனைவிக்கும் இடையே மனத்தாங்கல் ஏற்பட்டு விட்டதா.... தேனிலவுக்குப் போனவர்கள் சண்டை போட்டுக் கொண்டு திரும்பி விட்டார்களா... பலவித சந்தேகங்கள்.

''கங்கா அண்ணி எப்போது இங்கே வருவார்கள்?'' என்று இரண்டொரு தடவை கேட்டுப் பார்த்தாள்.

நரேந்திரன் பதிலளிக்காது கோபத்துடன் வெறித்ததைக் கண்டு அரண்டு போய்விட்டாள்.

ரத்னசாமி தமது மகளை நல்ல நாள் பார்த்து அழைத்து வந்து விடுவது பற்றி பேச வந்திருக்கிறார் போலிருக்கிறது என்று எண்ணியபடி சாப்பாட்டறை தடுப்புக்குப் பின்னால் சென்று மறைந்து கொண்டாள்.

மாடியிலிருந்து இறங்கி வந்த நரேந்திரன்.... வரவேற்பு அறைக்குள் வந்தான்.

உடலை ஒடுக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்த ரத்னசாமி அவனைக் கண்டு எழுந்து 'வணக்கம்' சொன்னார்.

'வணக்கம்' என்றபடி ஏளனப் புன்னகையுடன் அவர் எதிரே கால்மேல் கால் போட்டபடி கர்வமாக அமர்ந்து கொண்டான் நரேந்திரன்.

மாமனாருக்கு மரியாதை சிறிதும் காட்டாது அகந்தையுடன் சோபாவில் சாய்ந்து கொண்டு அசட்டையாக அவரைப் பார்த்த நரேந்திரனது போக்கு பூரணிக்கு மிகவும் அதிசயமாகத் தெரிந்தது. அவர்கள் பேசியது... காதில் விழவில்லை.

ஆனாலும் அவர்களிடையே காரமான பேச்சு நடைபெறுகிறது என்பதைப் புரிந்து கொண்டாள். கலவரத்தில்

அவள் நெஞ்சு துடித்தது. கவலையுடன் அவர்களை தூரத்தில் இருந்தபடி கவனித்துக் கொண்டிருந்தாள்.

''மாப்பிள்ளை முடிவாக என்னதான் சொல்கிறீங்க...?'' ரத்னசாமியின் ஓங்கிய குரல் வரவேற்பறை முழுவதும் பரவி ஒலித்தது.

''முடிவைத்தான் சொல்லிட்டனே. என்னை மோசம் செய்தவருக்கு இதுதான் தண்டனை. கைப்பொருளை இழந்து நான் எப்படித் தவிச்சேன். உங்க மக வாழாவெட்டியா வீட்டோட கிடக்கிறதைப் பார்த்து நீங்க ஏங்கித் தவிக்க வேண்டாமா...? உங்க அக்கிரமத்துக்கு இது தண்டனை அவ்வளவுதான். இனி பேச ஒண்ணுமில்லை!'' என்று அதட்டலாகப் பேசிய நரேந்திரன் எழுந்து உள்ளே சென்றுவிட்டான்.

பூரணிக்கு அவர்களிருவரும் கடைசியாக உரத்த குரலில் கத்திப்பேசியது காதில் பட்டது. ஆனால் இன்னமும் அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை... குழப்பமாகவே நின்று கொண்டிருந்தாள்.

26

முகம் வெளுத்து - நடை தள்ளாடியபடி உள்ளே வந்த மகனைப் பார்த்து கங்கா திடுக்கிட்டுப் போனாள். ''என்ன நடந்தது?'' என்று கேட்க அவளுக்கு அச்சமாக இருந்தது. மறுபிராயத்திலிருந்து அவள் தந்தையிடம் நெருங்கி ஒட்டிக் கொண்டு வளர்ந்தவள் இல்லை.

அவரே முன் வந்து சொன்னால் கேட்டுக் கொள்ளும் பழக்கம். ரத்னசாமிக்கு ஏற்பட்டிருந்த அதிர்ச்சியில் அவர் எதுவும் சொல்லிக் கொள்ள விரும்பவில்லை. சமீபகாலத்தில்

அவருக்கு ஞாபக மறதி அதிகமாகிக் கொண்டு வந்தது. தமக்கு சிகிச்சை அளித்து வந்த டாக்டரிடம் இது பற்றி முறையிட்டார்.

''வயதுக் கோளாறு அப்படித்தான் இருக்கும். முதுமை அதிகரித்துக் கொண்டு போகும்போது இன்னும் பல சங்கடங்கள் ஏற்படும். இவைகளுக்கெல்லாம் மருந்து கிடையாது. எதற்கும் ஒரு குறிப்பு புத்தகம் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாக சங்கதிகளை அதில் எழுதி வைத்துக் கொள்வது நல்லது. ஞாபகத்தை நம்புவதை விட புத்தகத்தில் உள்ள குறிப்புகளை நம்ப முடியுமே...'' என்று டாக்டர் சொல்லிவிட்டிருந்தார்.

நடையில் செருப்புக்களை கழற்றி வைத்துவிட்டு... முற்றத்தில் இறங்கி கை கால் கழுவிக் கொண்டு.... மேல் துண்டால் முகத்தைத் துடைத்தபடி கூடத்திற்கு வந்தார். ஏகப்பட்ட மூச்சிரைப்பில் திணறிப் போனார்.

''அப்பா! மருந்துகள் சாப்பிடாம வெளியே போய் விட்டீங்க!'' சொல்லிய கங்கா மருந்துகள் அடங்கியதொரு சிறு பிளாஸ்டிக் டப்பாவைக் கொண்டு வந்து காப்பி மேஜைமேல் வைத்தாள். அதைப் பார்த்தவுடன் அவரது மனதில் நினைவுகள் சிதறின.

''கங்கா! உள்ளே போய் என் பீரோ கீழ் தட்டிலே வலதுகை ஓரத்தில் இருக்கும் சிவப்பு டைரியை எடுத்துவா'' உத்தரவிட்டார். மகள் கொண்டு வந்த டைரியை அவசரமாகப் பிரித்துப் பார்த்தவர் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

''உன்னை வாழவைக்கணும்னு பார்த்தா உன் துர்அதிஷ்டம் குறுக்கே நிக்குதே!'' இரைந்து கத்தினார்.

கையிலிருந்த டைரியைத் தூக்கி முற்றத்து எதிர் சுவற்றிலே விட்டெறிந்தார். அவர் தேடிய குறிப்பு அதில் காணவில்லை என்ற ஆத்திரம்.

அடுப்படியில் வேலையாக இருந்த காயம்பூ கூடத்திற்கு

ஓடிவந்தாள். பிரமிப்புடன் நின்ற கங்காவையும் கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்த ரத்னசாமியையும் வியப்புடன் பார்த்தாள்.

''என்னத்துக்கு அதுமேலே கோவிக்கணும்? என்ன ஆச்சு?'' ஆவலும் கவலையுமாகக் கேட்டாள்.

''எனக்கு வயசு ஆச்சு - வியாதி வேற வந்துட்டது - இது மாதிரிகளைத் தாங்குற உடம்பு இல்லை - நான் பொட்டுன்னு போயிட்டா இந்த பொண்ணு கதி என்ன ஆகிறது? அந்தப் பயலைப் போய் காலையிலே பார்த்துட்டு மூஞ்சியிலே கரி பூசிக்கிட்டு வந்திருக்கேன்!''

''மருமகப்பிள்ளை என்ன. சொன்னார்?'' காயம்பூ புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு கொஞ்சம் முன்னால் வந்து நின்றாள்.

''மருமகப்பிள்ளையா அவன். என் உசிரை வாங்க வந்த எமன். பாவி நிபந்தனை போடறான். உன் மகள் உன் வீட்டோடவே இருக்கட்டும் - அப்பத்தான் உனக்கு புத்தி வரும்னு அலட்சியமா பேசறான்!''

''அப்படியா. என்ன நிபந்தனை?''

காயம்பூவை ரத்னசாமி வெறித்துப் பார்த்தார். மருமகனுக்கும் தமக்கும் இடையே உள்ள உண்மை நிலையை சொல்ல முடியாத இயலாமையால்... ஆத்திரத்துடன் கத்தினார்.

'அம்மாவை இவ முழுங்கினப்பவே தெரியும். இந்தப் பொண்ணு என் தலை மேல ஒரு கருங்கல்லுபோல கால முச்சூடும் சுமையா இருப்பான்னு நினைச்சேன்...''

முகம் சிவந்து போய் - துயரம் நெஞ்சை அடைக்க கண்களில் நீர் புரள கங்கா தரையைப் பார்த்தாள்.

'அம்மாவை நான் விழுங்கினதால இந்த நிலை ஏற்பட வில்லை. அந்த வைரப்பிள்ளையாரை நீங்க விழுங்கிட்டதாக சந்தேகப்பட்டு என்னை நரேந்திரன் தண்டிக்கிறார்!' என

வார்த்தைகளை காரமாகக் கொட்ட அவள் மனம் துடித்தது.

ரத்னசாமி மூர்க்கமானதொரு மனிதர். ஆத்திரத்தில் அவள் தமது மகள் என்று கூட பாராது அவளை வாசலில் கொண்டு தள்ளி கதவை சாத்திக் கொண்டு விடுவார்.

இப்போது அவள் தந்தையை விரோதித்துக் கொள்ள முடியாதே. முற்றத்து ஓரத்தில் கிடந்த டைரியை எடுத்துக் கொண்டு வந்து மேஜை மேல் வைத்து விட்டு உள்ளே சென்று மறைந்து கொண்டாள்.

''இன்னிக்குப் போன வேளை சரியா இல்லே போலிருக்கு. மறுபடி போய் விசாரிச்சுப் பார்க்கலாம், பேசாம இப்போ இருப்போம்!'' என்றாள் காயம்பூ.

வீட்டில் ஒண்ட வந்தவள்! அந்த குழப்ப நிலையை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு.... அவர்களது சொந்த சங்கதியில் தலையிட்டுக் கொள்ள துணிந்தாள். அத்தனை தூரம் தனக்கு மதிப்பேற்பட்டு விட்டதைக் குறித்து உள்ளூர அவள் பெருமைப் பட்டுக் கொண்டாள்.

தந்தை, மகளுடன் பேசப் பிரியமில்லாதவராக எழுந்து தமது அறைக்குள் சென்று படுக்கை மீது சரிந்து கொண்டார்.

''பாவம் ரத்னசாமி! யாருக்கும் தீங்கு செய்ய நினைத்த தேயில்லை. அதுக்கு இப்படி ஒரு சிரமம் வர வேணாம்... எல்லாம் நம் தலையெழுத்து'' காயம்பூ முணுமுணுத்ததைக் கேட்கப் பிடிக்காது கங்கா ஒரு பிளாஸ்டிக் கூடையுடன் வெளியே புறப்பட்டாள்!

தனது அலுவலகத்திற்கு பத்துமணிக்கு மேல்தான் புறப்பட்டு செல்வது வழக்கம் என்று நரேந்திரன் தேன்நிலவின்போது அவளிடம் தன் பழக்க வழக்கங்களை விவரமாகச் சொல்லியிருந்தான்!

''மளிகைக் கடை வரை போயிட்டுவரேன் அத்தை!'' குரல் கொடுத்துவிட்டு பதிலுக்கு காத்திராது தெருவில் இறங்கி விரைந்தாள் கங்கா.

சாலை முனையிலிருந்த மளிகைக் கடையில் ஒரே கூட்டம். முதலாளி வியாபார மும்முரத்தில் இருந்தார்.

''என்னம்மா? சாமான் ஏதாச்சும் தேவையா?'' தயக்கமாக எதிரே நின்றவளிடம் விசாரித்தார்.

''அவசரமா உங்க டெலிபோனைக் கொஞ்சம் உபயோகிக்கணும்.''

''தாராளமா உபயோகிக்கலாம் அம்மா... உள்ளே சாமான் அறையிலே போய் பேசுங்கோ!'' உத்தரவிட்டார் முதலாளி.

சாலையில் போக்குவரத்து சந்தடியில் வாடிக்கைக் காரர்களைக் கவனிப்பதில் மும்முரமாயிருந்த கடைக்காரர் காதில் அவள் பேசுவது கேட்கப் போவதில்லை என்ற நம்பிக்கையில் நரேந்திரன் பங்களாவின் எண்களை வேகமாகச் சுழற்றினாள்.

''ஹலோ!'' மறுபுறம் அதட்டலாக எழுந்த குரலைக் கேட்டு ஒரு கணம் திடுக்கிட்டுப் போனாள்.

''நரேந்திரன் அவர்களிடம் பேசணும்...!'' அவள் குரல் பயத்தில் உடைந்தது. நின்று கொண்டு பேச்சை தொடர முடியாது போல் கால்கள் தள்ளாட அருகில் சுவர் ஓரமாக சாய்த்து வைக்கப்பட்டிருந்த அரிசி மூட்டைமீது உட்கார்ந்து கொண்டாள்.

ஜன்னல் வசதியில்லாத சாமான்கள் வைக்கும் சிறிய அறை அது. காற்றில்லாத புழுக்கத்தில் சாமான்களின் கலவை வாசனையில் மூச்சுத் திணறியபடி... நெற்றியில் பூத்து நெஞ்சை நனைத்துக் கொண்டிருந்த வியர்வையை சட்டென்று புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள் அவள்.

கரகரப்பான அந்தக் குரலைக் கேட்டதும் மேனி சிலிர்த்துப் போனாள் அவள்.... நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

''நான்தான் கங்கா பேசுகிறேன்...!''

சிறிது நேரம் மறுமுனையில் மவுனம் நிலவியது.

அவள் கலங்கிப் போய் விட்டாள்.

''என்ன சங்கதி? வீட்டு செலவுக்கு பணம் தேவைன்னு சொல்லத்தானே போன் செய்திருக்கே. ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்னிக்கு பணம் தானே வீடு தேடி வந்துடும்.''

''இல்லீங்க... நான் விரும்புறது பணம் காசு இல்லை..... உங்களோடு சேர்ந்து வாழும் பாக்கியம்தான் எனக்கு தேவை. நம்ப பங்களாவுக்கு வந்துட நான் பிரியப் படறேன்!''

தொண்டையை அடைத்த அழுகையை அடக்கிக் கொண்டாள்.

''அந்த பாக்கியம் உனக்கு இல்லேன்னு முன்னமே சொல்லிட்டேனே, மறுபடியும் கேட்டுப் பயன்? உங்கப்பாவை வேறே காலையிலே தூது அனுப்பியிருந்தியே அவர் என் முடிவை உன்கிட்ட சொல்லலியா? தெரிஞ்சும் தெரியாதது போல நாடகமா...?'' டக்கென்று போனை வைத்து விட்டான்.

கண்களை நிறைத்த கண்ணீரைப் புடவைத் தலைப்பால் அவசரமாகத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

''பேசீட்டீங்களா அம்மா...?'' கேட்டபடி அவள் மேஜை மீது வைத்த ஒரு ரூபாய் நாணயத்தை இழுப்பறைக்குள் தள்ளிக் கொண்ட முதலாளி தமது காலை வேளை வாடிக்கைக்காரர்களை கவனிப்பதில் மீண்டும் ஆழ்ந்து போனார்.

அன்று இரவு ரத்னசாமி நன்றாக உறங்கிவிட்ட பின்னர், காயம்பூ படுத்திருந்த பின் நடைக் கதவை மெல்ல இழுத்து சாத்தி தாழ்ப்பாளிட்டுவிட்டு விளக்கை போட்டுக் கொண்டு மேஜையருமே காகிதமும், பேனாவுமாக உட்கார்ந்தாள் கங்கா.

தொலைபேசியில் ஏற்பட்ட தோல்வியுடன் அவள் தன் முயற்சியைக் கைவிட விரும்பவில்லை. நரேந்திரனுக்கு தன் கைப்பட ஒரு கடிதம் எழுத முனைந்தாள்.

''அன்புமிக்க என் கணவர் நரேந்திரன் அவர்களுக்கு வணக்கம் பல சொல்லிக் கொண்டு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

மளிகைக் கடை போனில் மனம் விட்டுப் பேச இயலாது என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் தங்கள் குரலையாவது கேட்கமாட்டோமா என்ற ஆதங்கத்தில் தான் இன்று காலை உங்களைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன். எனக்குத் தங்களுடன் வாழும் பாக்கியம் கிடையாது என்று தாங்கள் என்னைத் தண்டிக்க முயலுவது தவறு என்பதை மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

என் தந்தைக்கும் உங்களுக்குமிடையே நடந்த வியாபாரப் பேச்சு வார்த்தை பற்றி இன்றளவும் எனக்கு எதுவும் தெரியாது. அப்பா செய்த தவறுக்கு என்னை தண்டிக்க முற்படுவது ஓநாயும் ஆட்டுக்குட்டியும் என்ற கதை போல்தான் இருக்கிறது.

நரேன்! தயவு செய்து என்னை அவமானப் படுத்தாதீர்கள். நான் களங்கமற்றவள். பிறந்த வீட்டில் வாழாவெட்டியாக வந்து உட்கார்ந்து விட்ட பெண்ணைப் பற்றி உற்றார் உறவினர் என்ன பேசுவார்கள் என்பது உங்களுக்குத் தெரியாத விவகாரம் இல்லை. நான் தவறு செய்திருந்தால் இந்த தண்டனையை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டு உங்கள் வாழ்க்கையினின்று ஒதுங்கிக் கொண்டு விடுவேன். உங்கள் மனத்தாங்கல் காரணத்தில் எள்ளளவும் சம்பந்தப்படாத நான் இந்த பயங்கரத் தண்டனையை ஏற்க முடியாது தவிக்கிறேன், துடிக்கிறேன்; துவண்டு அழுகிறேன்.

நரேன் தயவு செய்து என்னை ஏற்று எனக்கு வாழ்வு தந்து உதவுங்கள். மனைவியாகத் தங்களுடன் சேர்ந்து வாழ வேண்டியது என் உரிமை. அதைத் தந்து என்னை

கவுரவிக்க வேண்டியது உங்கள் கடமை. நன்றாக யோசித்துப் பாருங்கள்...

இங்ஙனம்.
தங்கள் அன்பு மனைவி
கங்கா...

கடிதத்தை எழுதி முடிப்பதற்குள் எத்தனை கண்ணீர். வரிக்கு ஒரு தடவை கண்களைத் துடைத்துக் கொண்டு துயரத்தின் சுமையில் துவண்டு போய் உணர்ச்சிகளைக் கொட்டி எழுதினாள்.

மீண்டும் ஒரு முறை படித்துவிட்டு, உறையை ஒட்டி முகவரி எழுதித் தலையணை அடியில் வைத்துக் கொண்டு விளக்கை அணைத்துவிட்டு... இடைக் கதவை திறந்துவிட்டு படுத்துக் கொண்டாள். மறுநாள் அவள் தானே கடிதத்தை எடுத்துச் சென்று தெருக்கோடியிலிருந்த தபால் பெட்டியில் சேர்த்து விட்டு வந்தாள். அடுத்த சில நாட்கள் தபால்காரர் வருகையை தினமும் ஆவலுடன் எதிர்பார்த்து ஏமாந்து கொண்டிருந்தாள்.

ஒரு வாரத்திற்குப் பின் தபால்காரர் கொடுத்து விட்டுப் போன கடிதங்களில் வெளிர் நீல வண்ண உறையின்மீது காணப்பட்ட தீர்க்கமான கையெழுத்துக் கண்டு... சட்டென்று அதைத் தனியே எடுத்து வைத்துக் கொண்டாள். தந்தைக்கு வந்திருந்த மீதி கடிதங்களை மேஜை மேல் வைத்து விட்டு.... குளியலறைக்குள் சென்று கதவை தாளிட்டுக் கொண்டு குழாயைத் திருப்பி விட்டு... கடிதத்தை அவசரமாகப் பிரித்தாள்.

உள்ளிருந்த வெளிர் நீல வண்ண கடிதத்தைப் பிரிப்பதற்குள் கைகள் நடுங்கின... மார்பு வேகமாகத் துடித்தது.

''உனது கையெழுத்து முத்துக்களைப் போல மிகவும் நன்றாக இருக்கின்றது... ஆனால் தலையெழுத்து வேறு விதமாக இருக்கிறதே? போனில் கூப்பிட்டாலும்... கடிதத்தின் மூலம் கேட்டாலும் என் பதில் ஒன்றுதான்.

நாமிருவரும் இனி சேர்ந்து கணவன் - மனைவியாக வாழ்வது என்பது நடைபெற முடியாத சங்கதி. அதனால் இனி கடிதம் எழுதியோ தொலைபேசியில் கூப்பிட்டோ என்னை தொந்திரவு செய்வதி' பலன் இல்லை.''

நரேந்திரன்

குழாயில் கொட்டிய தண்ணீர் போல அவளது கண்ணீர் வேகமாகக் கன்னங்களில் புரண்டு ஓடியது.

நெஞ்சு வெடித்து விடுவது போல விம்மி விம்மி அழுதாள்.

27

ரத்னசாமி வாயில் கதவைத் திறந்து எட்டிப் பார்த்த போது தபால்காரர் அவரிடம் ஒரு கத்தைக் கடிதங்களை நீட்டினார். திரும்பி உள்ளே வந்து கூடத்தில் கிடந்த நாற்காலியில் அமர்ந்தபடி அவைகளை மெல்லப் பார்வையிடலானார்.

அவரது மகளது திருமணத்திற்கு வர இயலாது போனது பற்றி வருத்தம் தெரிவித்து, மன்னிப்புக்கோரி வாழ்த்துக்களை தெரிவித்து மிகத் தாமதமாக வந்திருந்த அவரது வாடிக்கைகாரர்களின் கடிதங்கள் சிலவற்றை படித்தபோது அவருக்கு சிரிப்பும் -கோபமும் ஒருங்கே எழுந்தது.

அவரது மகளின் வாழ்க்கை சீரழிந்து விட்டிருப்பதைத் தெரிந்து அவருக்கு யாராவது ஆறுதல் கடிதம் எழுதப் போகிறார்களா? ஓகோ என்று வாழ்கிறவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்க பலர் முன்வருவார்கள். நொடித்துப் போய் கீழே விழுந்தவனைக் கண்டு ஆறுதல் சொல்வதற்கு பதில் பரிகசிக்கப் பலர் புறப்பட்டு விடுவார்கள். இதுதான் உலகப்போக்கு.

பலவும் எண்ணிக் குமைந்தபடி கடைசியாக இருந்த கடிதத்தைக் கையில் எடுத்தவர் மின்விசையால் தாக்குண்டவர் போல் துணுக்குற்றார்.

அனுப்புநர் என்பதில் காணப்பட்ட முகவரியைப் படித்ததும் அவரது நெஞ்சு தீவிரமாக அடித்துக் கொண்டது.

இரண்டு மாதங்களுக்குப் பின்னர் நரேந்திரன் தன் மனைவிக்குக் கடிதம் எழுதியிருக்கிறான்! முதல் முதலாக அவன் எழுதியுள்ள கடிதம்! கையில் வைத்துக் கொண்டு பிரமிப்புடன் ஒரு கணம் தயங்கினார்.

கல்யாணத்திற்கு முன்னர் என்றால் கன்னிப் பெண்ணுக்குத் தாம் பாதுகாவலர் என்ற தகுதியில் அவளுக்கு வந்திருக்கும் கடிதத்தைத் துணிவுடன் பிரித்துப் பார்த்திருப்பார். இப்போது அவள் நரேந்திரனின் மனைவி. கணவன் தன் மனைவிக்கு எழுதியிருக்கும் கடிதத்தைப் பிரித்துப் படிக்க முடியாதே.

கோபத்துடன் அவர் 'கங்கா' என்று குரல் கொடுத்தார்.

''உன் புருசன் கடிதம் போட்டிருக்கான். உள்ளூரில் இருக்கிறவன் படகு காரில் பவனி வருகிறவன்.... அவனுக்கு நேரில் வந்து சங்கதியைச் சொல்ல நேரமிருக்கலை...'' சீறிக் கொண்டு கடிதத்தை மேஜைமீது விசிறிப் போட்டார்.

தயங்கியபடி கூடத்திற்கு வந்த கங்கா படபடத்த நெஞ்சத்துடன் கடிதத்தை எடுத்துப் பிரித்தாள்.

ஒரு சமயம் கணவன் அவளை தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போக வருவதாகக் கடிதம் எழுதியிருக்கிறாரோ?

அவர்கள் வீட்டில் போன் வசதி இல்லாததால் தன்னுடன் புறப்பட அவளைத் தயாராக இருக்கும்படி சொல்லத்தான் இந்தக் கடிதமோ...

வினாடிப் பொழுதில் ஏராளமான எண்ணங்கள், எதிர்பார்ப்புகள்.

கடித உறைக்குள்ளிருந்ததை மெல்ல இழுத்தாள்.

காசோலை ஒன்றுடன் இணைக்கப்பட்டிருந்த துண்டு

கடிதத்தில் நரேந்திரன் சில வரிகள் எழுதியிருந்தான்.

''போன மாதம் நான் வெளியூருக்குச் செல்ல நேர்ந்தது. அதனால் பணம் அனுப்பப்படவில்லை. இனி என் செயலாளர் முழுங்காக அனுப்புவார். இத்துடன் இரண்டு மாதத்திற்குண்டான தொகை மூவாயிரத்திற்கு ஒரு காசோலை அனுப்பியிருக்கிறேன்... நரேந்திரன்.''

அவளைத் தூர ஒதுக்கி விட்டிருப்பதை அந்த வரிகளில் தெரிவித்து முகத்தில் வீசி எறியாத குறையாக அனுப்பியிருந்த அந்தக் காசோலையைப் பிடித்த அவளது கை விரல்கள் நடுங்கின... சுமையாகத் துயர் நெஞ்சை அடைத்துக் கொண்டது. கண்களில் ததும்பிய கண்ணீரை விழுங்கிக் கொண்டாள்.

''அப்பா! அவர் பணம் அனுப்பியிருக்கிறார்... இரண்டு மாசத்து செலவுக்கும் சேர்த்து காசோலை என் பெயருக்கு அனுப்பியிருக்கிறார்...'' ...மேலே பேசமுடியாது தடுமாறினாள்.

''அந்த செக்கை அவன் முகத்திலேயே கிழிச்சிப்போடு!'' விரக்தியாகச் சொன்ன ரத்னசாமி சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்தார்.

அந்த காசோலையை அவர் அவனுக்குத் திருப்பி அனுப்பக் கூடாது. கங்காவின் வங்கி கணக்கில் கட்டி அவளது செலவுக்கு உபயோகிக்க வற்புறுத்த வேண்டும். அவளது கல்யாணம் சட்டப்படி பதிவு செய்யப்பட்டு விட்டது மிகவும் நல்லதாகி விட்டது. கணவன் என்று தன் நிலையை ஒப்புக் கொண்டு மாதம் பணம் அனுப்பி வைப்பதை பின்னர் கோர்ட்டு, விவாகரத்து வழக்கு என்று வரும்போது அவனுக்கு எதிராக உபயோகிக்க இயலும்...! எண்ணியபடி.... லேசாக பெருமூச்செறிந்தார்.

''நமது வங்கிக்குப் போய் உன் கணக்கில் கட்டி விட்டு, வீட்டுச் செலவுக்கு ஆயிரம் ரூபாய் எடுத்து வந்து விடு...'' உத்தரவிட்டார்... மகள் வியப்புடன் அவரை ஏறெடுத்துப் பார்த்தாள்.

''தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு... இப்போ நீ நரேந்திரன் மனைவி - உன் புருஷன் அனுப்புகிற பணத்தை நீ வச்சுக் கொண்டு வாழ பழகிக்கணும். எனக்கு பாரமா இனி இருக்க முடியாது!'' படபடவென்று கோபத்தில் வெடித்தார்.

கணவனுக்கு வேண்டாதவள்... இப்போ பெற்றவனுக்கும் பாரமாகி விட்டாள்.... என்ன கொடுமை இது? ஒரு பாவமுமறியாத அவளுக்கு ஏன் இந்த தண்டனை?

தலையை ஆட்டிவிட்டு... பின் கட்டிற்குள் மறைந்தவள்... சாமான்கள் கிடந்த அறைக்குள் சென்று சுவற்றின் மீது சாய்ந்தபடி வெகுநேரம் விசும்பி... விசும்பி அழுதாள்.

மறுநாள் காலை எழுந்ததுமே வீடு தன் முன் சுற்றுவது போன்றதொரு உணர்வில் திடுக்கிட்டுப் போனாள் கங்கா.

பல் துலக்கி முகம் கழுவி விட்டு காயம்பூவுக்கு உதவி செய்ய சமையலறைக்குள் வந்தாள். அத்தையம்மாள் காலை காப்பி பலகாரம் தயாரிப்பதில் மும்முரமாக இருந்தாள்.

அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த வெங்காய சாம்பாரின் மணம் முகத்தில் மோதியதும் அவளுக்கு வயிற்றைப் புரட்டியது. தாங்கிக் கொள்ள முடியாது குளியலறைப் பக்கம் ஓடினாள். குமட்டிக் கொண்டு வாந்தியெடுக்கத் தொடங்கினாள்.

பின்னால் நிழல் போல ஓடி வந்து அவளைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு முதுகைத் தடவி விட்டாள்.

''என்ன எத்தனை நாளா இப்படி மயக்கம்-வாந்தி எடுக்கிறே.''

....அத்தை கேட்டதற்கு பதில் சொல்ல முடியாது குமட்டிய படி...கை கழுவும் பீங்கான் மீது களைப்புடன் சாய்ந்து கொண்டாள்.

கங்கா... அவளது முகம் முழுவதும் பூத்துவிட்ட வியர்வை... காதோரங்களில் வழியத் தொடங்கியது...

''இந்தா மூஞ்சியைக் கழுவிக்கோ... கொஞ்சம் சில்லுனு தண்ணி கொண்டு வரேன். ஒரு வாய் குடிச்சுக்கோ... வயிறு புரட்டலு நிக்கும். அலமாரியிலிருந்து ஒரு துண்டு உப்பிலிட்ட நார்த்தங்காய் ஊறுகாய் கொண்டு வந்து தர்ரேன். நாக்கில் அடக்கிக்கோ... எல்லாம் சரியாயிடும்'' ஆலோசனை பல கூறிவிட்டு உள்ளே விரைந்தாள்.

கையும் காலும் சோர்ந்து போனவளாக... தலையை நிமிர்த்தி பார்க்க முடியாத மயக்கத்துடன் கங்கா பின்கட்டு நடையில் காயம்பூ விரித்துப் போட்ட பாயில் படுத்து விட்டாள்.

அவளுக்கு திடீரென்று என்ன வந்து விட்டது. காலை வேளையில் இப்படி ஒரு அசதி ஏன்? ஏன் இப்படி தலை சுற்றுகிறது... என எண்ணிக் கவலையுடன் பாயின் மீது புரண்டு கொண்டிருந்தாள்.

காபி பலகாரத்திற்குப் பின் கை கழுவிக் கொண்டு மேல் துண்டில் துடைத்தபடி கூடத்தில் வந்து நாற்காலியில் உட்கார்ந்த ரத்னசாமி நாளேட்டை எடுத்துக் கொண்டார். அருகே நிழலாடுவதை உணர்ந்து... பத்திரிகையிலிருந்து பார்த்தார்.

காயம்பூ அவர் அருகே வந்து நின்றாள்.

''கங்காவுக்கு உடம்பு நல்லா இல்லை. டாக்டரிடம் காட்டணும்!'' என்றாள், மெல்லிய குரலில்.

ரத்னசாமி அவளை வெறித்தார். ''கணவன் பணம் அனுப்பியிருக்கான். டாக்டருக்கும் மருந்துக்கும் செலவழிக் கட்டும். என்கிட்டே ஏன் சொல்லணும்?'' அதட்டினார்.

''கங்காவை நான் கூட்டிகிட்டு நெடுஞ்சாலையிலே கிளினிக் வச்சிருக்கிற டாக்டர் உமாகிட்டே கேட்டுகிட்டு வரேன்!''

''தாராளமா போய்ட்டு வரலாம் - இதுக்கு என்னைக்

கேட்பானேன்'' அசட்டையாகப் பதிலளித்துவிட்டு நாளேட்டில் கவனத்தைத் திருப்பினார்.

வெளியே புறப்பட்டுச் சென்ற அவர்கள் இருவரும் கொஞ்ச நேரத்தில் திரும்பிவிட்டனர். கதவைத் திறந்து விட்ட ரத்னசாமி.... மவுனமாகக் கூடத்தில் அமர்ந்து கொண்டார். தொண்டையைச் செருமிக் கொண்டு பக்கத்தில் வந்து நின்ற காயம்பூவை திரும்பிப் பார்த்தார்.

''டாக்டர்கிட்டே போய்விட்டு வந்தோம். இன்னிக்கு அங்கே கூட்டம் அதிகம் இருக்கலை. அதனாலே சீக்கிரம் திரும்ப முடிஞ்சுது...''

''மருந்து எழுதிக் கொடுத்தாங்களா?'' ரத்னசாமி ஏளனமாகக் கேட்டார்.

''கொடுத்தாங்க... அத்தோட ஒரு சந்தோசமான சங்கதியை சொன்னாங்க... நீங்க விரைவில் தாத்தாவாகப் போறீங்களாம்.''

''தாத்தாவா?'' திடுக்கிட்டு எழுந்துநின்றார் அவர். தேள் கொட்டிவிட்டது போன்றதொரு வேதனையான திகைப்பு.

''ஆமாம். கங்கா கர்ப்பமாக இருக்கா... இந்த சங்கதியை மாப்பிள்ளைக்குத் தெரிவிக்கணும்...''

''அவனுக்குத் தெரிவிக்கணுமா?...''

''இதென்ன கேள்வி - குழந்தைக்குத் தகப்பனாகிவிட்ட அவனுக்கு சங்கதியைச் சொல்லணும். அத்தோட கொஞ்ச காலம் கங்கா தன் புருசனோட இருக்க அவளைக் கொண்டு போய் நாமவிட்டுட்டு வரணும் - பின்னாலே வளைகாப்புக்கு அழைச்சு வச்சுக்கலாம். பிரசவத்தின் போது பிறந்த வீட்டிலேதான் இருக்கணும். அதுதான்...''

''முறைப்படி எல்லாம் நடத்திவைக்கிறது யார்? தெரிஞ்சுக்கலாமா?''

''அத்தைன்னு உறவு சொல்லிக் கொண்டு ஒருத்தி இருக்கேனே?... நான் செய்கிறேன். கொஞ்சம் இனிப்பு செய்து

எடுத்துக் கொண்டு... ஒரு நல்ல நாள் பார்த்து கங்காவைக் கூட்டிக் கொண்டுபோய் மாப்பிள்ளை வீட்டில் சேர்த்துட்டு வரேன். உங்களுக்கு மருமகன் வந்து தானே கூட்டிக்கிட்டு போகலைன்னு வருத்தம். பெண்ணைப் பெத்தவங்க நாம் ரொம்ப இடக்கு பண்றது நியாயம் இல்லை...!''

''ஆகட்டும் அப்படியே செய்துட்டா போச்சு....'' என்று கூறிவிட்டு ரத்னசாமி மகளின் முகத்தைக் கடுமையாகப் பார்த்தார். டாக்டர் சொன்ன செய்தியைக் கேட்டு கங்கா அதிர்ந்து போய் விட்டிருந்தாள்.

தந்தையின் சினம் பொங்கிய முகத்தைப் பார்க்க அவளுக்கு அச்சமாக இருந்தது. மகிழ்ச்சியடைய வேண்டிய அவள் ரொம்பவே மிரண்டு போயிருந்தாள். ஏதோ தவறு நடந்துவிட்டது போன்று குற்ற உணர்வில் தவித்தாள்.

இது மாதிரி சந்தர்ப்பங்களில் பெண்கள் தாயின் அன்பைப் பெரிதும் நாடுவது வழக்கம். தந்தையை ஏறெடுத்துப் பார்க்கவும் அஞ்சி... கலவரமும் துக்கமுமாக... உள்ளே சென்று ஒண்டிக் கொண்டாள். அடுத்த நாளே உகந்ததொரு நல்ல நாள் என்று காயம்பூ அவசரமாக மாப்பிள்ளைக்கு கொஞ்சம் பாதாம் அல்வாவும், வெள்ளை முறுக்கும் செய்து டப்பாக்களில் அடைத்துக் கொண்டு புறப்பட தயாராகினாள்.

தனக்கு தேவையான சில சாமான்களை ஒரு சிறு பெட்டிக்குள் நிரப்பிக் கொண்டு... மகிழ்ச்சியும், திகிலுமான கலவர உணர்வு நெஞ்சை நிறைக்க, கங்கா அத்தையுடன் புறப்பட்டு விட்டாள்.

''வரேன் அப்பா...!'' மெல்லிய குரலில் அவள் விடை பெற்றுக் கொண்டபோது... ரத்னசாமி.... 'ம்...!' என்று உறுமினார்.

ஆட்டோ ஒன்றைப் பிடித்துக் கொண்டு இருவரும் புறப்பட்டனர். நுங்கம்பாக்கம் ரெமெண்ட் அவன்யூவில்... நரேந்திரனின் பங்களாவின் முன் ஆட்டோ நின்ற போது....

அதினின்று இறங்க கங்காவுக்கு மிகவும் பயமாக இருந்தது. எஜமானியைக் கண்டதும் பரபரப்புடன் கேட்டை காவலாளி திறந்து வைக்க... தங்கப்பன் ஓடிவந்து கையில் இருந்த பெட்டியை வாங்கிக் கொண்டு முன்னால் விரைய நரேந்திரனது செல்ல நாய் திம்மன்... ஆவேசமாக குரைக்க... மெல்ல திகைப்புடன் தோட்டத்தைத் தாண்டி வராந்தா படிகளைக் கடந்து வரவேற்பறைக்குள் வந்து நின்றாள்.

பெட்டியை ஒரு புறம் வைத்து விட்டு.... ''உட்காருங்கோ அம்மா... பெரியம்மா நீங்களுந்தான் உட்காருங்கோ!'' உபசரித்துவிட்டு ஒரே பாய்ச்சலாக மாடிப்படிகளைத் தாவி மேலே சென்றான் தங்கப்பன்.

உரிமையோடு அனுபவிக்கவேண்டிய தன் வீட்டிலேயே கங்கா... அந்நியமானதொரு பெண்போல தவிப்புடன் சுற்றும்முற்றும் பார்த்தபடி கலவரத்துடன் அமர்ந்திருந்தாள். காயம்பூ அந்த வரவேற்பறையின் அழகைப் பார்த்து பிரமித்துப் போய் விட்டிருந்தாள்.

மாடிப்படிகளில் கேட்ட பேச்சுக் குரல் இருவரையும் திடுக்கிட செய்தது...

வேகமாக இறங்கி வந்து கொண்டிருந்த... நரேந்திரனைக் கண்டதும் இருவரும் இருக்கையை விட்டு எழுந்து நின்றனர். ''என்ன சொல்வாரோ வரவேற்பு எப்படி இருக்கப் போகிறதோ?'' என்ற அச்சத்திலே கங்கா, தன் அத்தையின் பின் ஒண்டிக் கொண்டாள்.

''நான்தான் கங்காவின் அத்தை. கல்யாணத்தின் போது பார்த்திருப்பீங்க - பிறகு சந்திச்சு பேச வாய்ப்பு ஏற்படலை... கங்காவை கூட்டிக் கொண்டு வந்திருக்கேன்!'' என்று ஆரம்பித்தாள் காயம்பூ....

''தெரிகிறது... என்ன சமாச்சாரம்னு சொல்ல முடியுமா?'' நரேந்திரன் அதட்டலாகக் கேட்டபடி அருகில் வந்து நின்றான். கங்காவின் நெஞ்சு பக்பக்கென்று அடித்துக் கொண்டது...

அவள் பக்கம் திரும்பிக் கூட பாராது அத்தையிடமே வார்த்தையாடிய அவனது அசட்டையான போக்கு நெஞ்சை நொறுக்கவே... அவளது கண்கள் ஈரமாகிப் போயின.

''நல்ல சங்கதி சொல்லத்தான் உங்க மனைவியைக் கூட்டிக் கொண்டு முறைப்படி வந்திருக்கேன் - கங்கா கர்ப்பமாக இருக்கிறாள்...!''

''அதுக்கு இங்கே வந்தால் என்ன அர்த்தம்?''

''மாப்பிள்ளை, இது என்ன வேடிக்கையான பேச்சு? நீங்க விரைவில் தந்தையாகப் போறீங்க. இந்த மகிழ்ச்சியைச் சேர்ந்து பகிர்ந்து கொள்ள வேண்டாமா? அதனாலே கங்கா தன் வீட்டுக்கு வந்திருக்கா....''

கடகடவென்று நரேந்திரன் சிரித்தான்... கங்கா மிரண்டு போய் அத்தையின் தோளைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டாள். ''கங்கா என் மனைவி... ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அவள் சுமக்கும் குழந்தை என்னுடையதுதான் என்பதை நான் எப்படி நம்ப முடியும்...?''

''ஐயோ அத்தை!'' என்று அலறினாள் கங்கா... அவளுக்குத் தலை சுற்றியது...

''நான் ஒதுக்கி வச்சிருக்கும் இவள்... கர்ப்பம்னு சொன்னா அந்தக் குழந்தைக்கு நான் எப்படி தகப்பனாவேன்? மரியாதையா இரண்டு பேரும் திரும்பிப் போய் விடுங்கோ... இல்லாட்டா'' என்று கோபமாக அசட்டையாக கொடுமையாக அவன் பேசியதைக் கேட்டதும்... காலடியில் உள்ள பூமி நழுவிவிட்டது போன்ற திகைப்பில் - வேதனையில் வெட்கத்தில் கங்கா குலுங்கி அழுதாள்.

''இந்த நாடகம் இங்கே தேவையில்லை. டாக்சி ஒன்றை கொண்டு வரச் சொல்றேன்.. வந்தவழியே... சட்டுனு புறப்பட்டு போய்விடுங்கோ... இல்லாட்டா மரியாதை போய்விடும்!'' என்று கூறிவிட்டு மாடிப் படிகளில் தாவி மேலே சென்று மறைந்துவிட்டான்.

டாக்சியில் காயம்பூவின் மடியில் தலை வைத்துப் படுத்தபடி விசும்பிக் கொண்டிருந்தாள்.

''இப்படித்தான் அன்று சகுந்தலை... துஷ்யந்தனின் அரச சபையில் அவமானப்படுத்தப்பட்டாள்... இப்படித்தான் அவளும் மனம் வெடித்து... ரத்தக் கண்ணீர்விட்டு... அழுதிருப்பாள்... யுக யுகமாக ஆண்கள், பெண்களை இவ்வாறு அவமானப்படுத்தி தண்டிப்பதன் நோக்கம்....?'' எண்ணிய படியே... வழி நெடுகிலும் அவள் அழுது கொண்டிருந்தாள்...

28

விரைவாகத் திரும்பிவிட்டிருந்த அவர்கள் இருவரையும் பார்த்ததுமே ரத்னசாமி புரிந்து கொண்டு விட்டிருந்தார்.

''ஒதுக்கி வைத்துவிட்ட உன்னை மீண்டும் ஏற்க முடியாது என்று மருமகன் கங்காவைத் திருப்பி அனுப்பி விட்டிருக்கிறான். பெண்ணைப் பெற்றவனே வந்து கெஞ்சியும் நான் மசியவில்லை. தூரத்து உறவை வைத்துக் கொண்டு நியாயம் பேச நீங்க யார் அம்மா வந்திருக்கிறீங்க?'' என்று உதாசீனம் செய்து காயம்பூவை விரட்டிவிட்டிருக்கிறான், வஞ்சக நெஞ்சம் படைத்த அயோக்கியன் நரேந்திரன். சிறிதளவும் கருணை இல்லாத படுபாவி... என்ன வேண்டுமானாலும் செய்வான்!''

பலவும் எண்ணியபடி மகளின் வெளிரடைந்த முகத்தை உறுத்துப் பார்த்தார்.

தனக்கேற்பட்ட அவமானத்தை கங்கா எப்படித் தன் தந்தையிடம் சொல்வாள்?

எதுவும் பேசாது அவள் உள்ளே சென்று மறைந்து கொண்டாள்.

முற்றத்திலிறங்கி கால்களைக் கழுவிக் கொண்டு காயம்பூ தாழ்வாரத்துத் தூணைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

''நான் நினைச்சபடியேதான் நடந்தது இல்லையா? போய் முகத்திலே கரியைப் பூசிக்கொண்டு வந்ததுதான் மிச்சம்...'' மறுமியபடி ரத்னசாமி மேல்துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு கூடத்தை அளந்தார்.

''கங்கா வாழாவெட்டியா காலமுச்சூடும் பிறந்தகத்திலே இருக்க போறான்னுதானே அந்த அயோக்கியன் சொன்னான்?'' அதட்டினார்.

''அப்படிச் சொன்னாக்கூட பரவாயில்லையே...?''

விடுக்கென்று திரும்பிய ரத்னசாமி கோபத்துடன் அவளை முறைத்தார்.

''வேறே என்ன சொன்னான்? உண்மையைச் சொல்!''

''கண்டபடி என்னைப் பேசியிருந்தா அவன் நாக்கை இழுத்து வச்சு அறுத்துடறேன்... அவன் என்னை என்ன நினைச்சுகிட்டிருக்கான்?'' உரத்த குரலில் இரைந்தார்.

அவரது மார்பு படபடவென்று துடித்தது. மீசை நடுங்கியது. முகம் ரத்தமாகச் சிவந்து போனது.

''சொல்லக் கூச்சமா இருக்கு. பாவிப்பயல் கங்காவுடைய நடத்தையிலே களங்கம் கற்பிச்சுட்டான். அவ வயிற்றிலே இருக்கிற குழந்தைக்குத் தான் தகப்பனில்லையாம்'' மெல்லிய குரலில் காயம்பூ அரற்றினாள்.

அவ்வளவுதான் ரத்னசாமி துள்ளிக் குதித்தார்.

''அப்படியா சொன்னான்? அவனை நான் இப்போ என்ன செய்கிறேன் பார்...!'' வீடு அதிரும்படி கூக்குரலிட்டார். அவர் நெஞ்சின் பதற்றம் பன்மடங்காகியது. கண்கள் ரத்தமாகச் சிவந்து போயின.

''கங்கா...!'' என்று உரத்த குரலில் கூவி மகளை அழைத்தார்.

கூடத்தில் நடந்த பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த கங்கா பயத்துடன் மெல்ல அங்கே வந்தாள்.

''உன் புருஷன் உன்னை வாழா வெட்டியாக்கிய தோடல்லாம வேசிப் பட்டமும் கட்டிவிட்டிருக்கான். அதைக் கேட்டுகிட்டு நீ சும்மா வாயை மூடிக்கொண்டா திரும்பி வந்தே?'' கத்தினார்.

''புருஷனே வாய்கூசாம மனைவியின் நடத்தையைப் பத்திக் கேவலமா பேசும்போது அவ என்ன பதில் சொல்ல முடியும்? நீ என் மகளை அழைச்சுக் கொண்டு போய் ரொம்ப அவமானப்படுத்தியிருக்கே... உன்னை என்ன செய்கிறதுன்னு புரியலை...!''

''நல்லா சொன்னீங்க அண்ணா? கர்ப்பமான பெண்ணை அத்தைங்கிற முறையிலே கூட்டிக்கொண்டு போனேன். நிலமை இப்படி இருக்கும்னு யார் கண்டா?''

''என்ன நிலமை? என்ன சொல்ல சுத்தி வளைக்கிறே? அதையும் சொல்லிடு'' கூக்குரலிட்டார், ரத்னசாமி.

''இதோ பாருங்க அண்ணா, என்கிட்டே கத்தறதிலே லாபம் இல்லே. மாப்பிள்ளைக்கு கங்கா மேலே கோபம்.

''காயம்பூ! நிதானிச்சுப் பேசு - என் உப்பைத் தின்னிட்டு இப்போ உளறிக் கொட்டறயா? சோத்துக்கு இல்லாம கிராமத்திலே திண்டாடின உன்னை வீட்டிலே வச்சு கவனிச்சதுக்கு...''

''அண்ணா ரொம்ப அதிகம் பேச வேண்டாம். கங்கா செய்த தப்புக்கு என் மேலே ஏன் பாயறீங்க? நான் இங்கே வந்து சும்மா குந்திக்கிட்டு இருக்கலை... உங்க வீட்டிலே சமையல்காரியா உழைச்சுப் போடறதுக்கு சோறு போடுகிறீங்க... நான் நாதியத்தவ இல்லை. கிராமத்திலே எனக்கு ஒரு வீடு இருக்கு.

உட்கார்ந்து அள்ளித்திங்க என் புருஷன் சொத்து கொஞ்சம் வச்சுட்டு போயிருக்காரு. நான் நல்லது செய்ய நினைச்சேன். ஆனால் உங்க மக மேலே குத்தம் இருந்தா நான் என்ன பண்ணுவேன்?''

''காயம்பூ! இன்னொரு தடவை ஏதாவது தவறாப் பேசினா?...''

''பேசினா என்ன செய்வீங்க'' நீங்க சொல்றதுக்கு முன்னாடி நான் தீர்மானிச்சுட்டேன். வாழாவெட்டி பெண்ணுக்கு பிரசவம் பார்த்துகிட்டு நான் திண்டாடப் போறதில்ல. இப்பவே நான் ஊருக்குக் கிளம்பிப் போயிடறேன். நீங்களாச்சு உங்க மகளாச்சு?'' படபடவென்று பேசிய காயம்பூ, கொடியில் காய்ந்து கொண்டிருந்த தன் புடவையை இழுத்து மடித்துத் தன் பெட்டியில் திணித்துக் கொண்டாள். தன்னுடைய மற்ற பொருள்களை பரபரப்பாக சேர்த்து மூட்டை கட்டிக் கொண்டாள்.

''அண்ணா! நான் உப்புப் போட்டுத்தான் சாப்பிடறவ! எனக்கு உழைக்கக் கை போயிடலை... என்கிட்ட தாறுமாறாப் பேசினா நான் பொறுக்க மாட்டேன்...! நான் வரேன்!'' என்று கோபமாக விடைபெற்றுக் கொண்டு பெட்டி மூட்டையுடன் வெளியேறி விட்டாள்.

கங்கா அதிர்ந்து போனாள்.

அன்று முதல்நாள் குழைவாக இனிக்கப் பேசிய அத்தையா இப்படி ஒரே கணத்தில் மாறிப் போனாள்.

இல்லை, அவளது பேச்சு அத்தனையும் நடிப்பு. காட்டிய பரிவு அத்தனையும் போலி. சுபாவத்தில் வம்புக்கு அலைந்தவள் காயம்பூ. மாப்பிள்ளை வீட்டுக்குக் கங்காவை அழைத்துச் செல்ல முன் வந்ததிற்குக் காரணம் இல்லாது போகவில்லை.

நரேந்திரன் கங்காவை ஏற்றுக்கொண்டு விட்டிருந்தால்...

தான் ஒரு பெரிய காரியத்தை சாதித்துவிட்டதாக தன் கிராமத்தில் தமுக்கடித்து விட்டிருப்பாள். தோற்றுவிட்டால்... அதைப் பற்றி வயிறுமுட்டும் வரை வம்பு பேசித் திருப்தியடைந்து விட்டிருப்பாள்.

காயம்பூ ஒரு பச்சோந்தி. அவளை அப்பா வீட்டிற்குள் சேர்த்தது பெரிய தப்பு.

தமக்கேற்பட்ட திகைப்பினின்று மீண்ட ரத்னசாமி மகளை அதட்டினார்.

''என்ன குத்துக்கல் போல நிக்கிறே? நீ பெண்ணாகப் பிறந்து எனக்கு எத்தனை புகழ் தேடிக் கொடுத்திருக்கே பார்த்தியா? உன் அத்தைக்காரி ஊருக்குப்போய்.... நம்மைப்பத்தி தெரியாதவங்க கிட்டகூட கதை பரப்பி விடுவாள். ஆமாம்... நான் இப்போ கேட்கிறேன் உண்மையைச் சொல்லு...''

துயரமும் அவமானமும் உள்ளத்தைக் குலுக்க அப்பா என்று முனகினாள் கங்கா.

''ஆமாம்'' உன் கணவன் சொல்றது உண்மையா? அப்படின்னா இந்தக் குழந்தையின் தகப்பன் யார்? வீட்டில் நான் இல்லாதபோது உனக்கு எவனுடனாவது தொடர்பு இருந்ததா? பாவிப் பெண்ணே! சொல்லித் தொலை!'' உரக்கத் தொண்டை நரம்புகள் புடைக்க ஓவென்று கூச்சல் இட்டார்.

''அப்பா!...'' அடிவயிற்றினின்று அலறினாள் கங்கா...

நரேந்திரன் அவளது தந்தையைப் பழிவாங்க அவள் மேல் இப்படி ஒரு மாபெரும் பழியைச் சுமத்தி விட்டிருக்கிறானே? அது உண்மை என்று நம்பிக் கொண்டு கதை பரப்பப் புறப்பட்டு விட்டாள் காயம்பூ.

உண்மையாக இருக்குமோ என்று சந்தேகப்படுகிறார் அவள் தந்தை... கடவுளே இதென்ன சோதனை.

அவளது இருதயம் இரண்டாகிவிட்டது போன்ற தாங்க

முடியாத துயரத்தில் அவள் துவண்டு போனாள். கன்னங்களில் கோடிட்ட அவளது கண்ணீரை வெறுப்புடன் பார்த்தார்.

''நீலிக்குக் கண்ணீர் நெற்றியிலே என்பாங்க... அது சரியா இருக்கு. நரேந்திரன் மடையன் இல்லை. உண்மையைக் கண்டுபிடிச்சுதான் உன்னை உதறி விட்டான்... சண்டாளி! உன்னை அலங்கோலப்படுத்தின பாதகன் யார்னு இப்போவாவது சொல்லித் தொலை... இல்லாட்டா...'' பற்களை கடித்துக் கொண்டு கையை ஓங்கியபடி அருகில் நெருங்கிய ரத்னசாமி... ஐயோ! என்று கத்தினார்.... அருகில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

ஓங்கிய கரத்தால் நெஞ்சை தடவிக்கொண்டு மூச்சுவிடத் திணறினார். நெற்றியில் வியர்வை பூக்க - முகம் சாம்பல் வண்ணமாக திக்குமுக்காடியபடி... கண்களில் கப்பிய வேதனையுடன் நாற்காலியில் சாய்ந்தார்.

''வலிக்குதே - நெஞ்சைப் பிளக்குதே!'' என்று மெல்லிய குரலில் அரற்றினார்.

'தந்தையே தன்னைக் குற்றஞ்சாட்டிய கொடுமையைத் தாங்க முடியாது... துயரத்தில் துடித்த கங்கா, தன் அப்பாபடும் வேதனையைக் காணக் கலங்கிப் போனாள்.'

''அப்பா! உங்களுக்கு உடம்பை என்ன செய்யுது அப்பா...?'' என்று அருகில் ஓடிவந்து பதட்டமாகக் கேட்டாள். அவரது நெற்றியின் மீது கையை வைத்துப் பார்த்தாள் - உடல் சில்லென்று இருப்பதை உணர்ந்து பதறிப் போனாள்.

''தாங்க முடியலையே - நெஞ்சை வலிக்குதே...'' வலியில் துடித்தார் ரத்னசாமி.

கங்காவுக்கு அதற்குப்பின் தன்னைப் பற்றி சிந்திக்க பொழுது இருக்கவில்லை.

வாயிற் கதவை திறந்து கொண்டு ஓட்டமும் நடையுமாக சாலை முகப்பிலிருந்த மளிகைக் கடைக்கு ஓடினாள். அவசரம்

என்று கூறி கடைக்காரர் உத்திரவு பெற்று தொலைபேசியில் எண்களைச் சுழற்றினாள்.

''டாக்டர் - கொஞ்சம் உடனே வீட்டுக்கு வரணும் - அப்பா நெஞ்சு வலியிலே துடிக்கிறார்...!'' அழுகை தொண்டையடைக்க தடுமாறினார்.

சில நிமிடங்களில் அவரது குடும்ப டாக்டர் தமது காரில் விரைந்து வந்து விட்டார்.

ரத்னசாமியைப் பரிசோதித்துப் பார்த்தார்.

''உங்கள் தந்தைக்கு இரண்டாவது முறையாக மாரடைப்பு வந்திருக்கிறது. வீட்டில் வைத்துக் கவனிக்க முடியாத நோய் -நான் உடனடியாக ஆம்புலன்சுக்கு ஏற்பாடு செய்கிறேன். முன்னால் தங்கிய அதே மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டும்...'' என்றார்.

கங்கா நிலைகுலைந்து போனாள்.

துன்பம் அவளுக்கு இப்படித் தொடர் சங்கிலியாகவா வரவேண்டும். பரவாயில்லை இன்னும் என்ன வேண்டுமானாலும் வரட்டும். அவள் இது சமயம் தைரியமாக இருக்கவேண்டும். கண்களைத் துடைத்துக் கொண்டு பரபரப்புடன் செயல்பட்டாள்.

மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அப்பாவின் துணி, சோப்பு, சீப்பு இத்யாதிகளை எடுத்து பெட்டியில் வைத்து தயாராகினாள்.

ஆம்புலன்ஸ் வந்து சேர்ந்ததும் வீட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டு தந்தையுடன் அவள் கிளம்பினாள்.

சித்திரா மருத்துவமனையில் தீவிர கவனிப்பு பகுதியில் ரத்னசாமி அனுமதிக்கப்பட்டார். மாரடைப்புக்குண்டான அவசர சிகிச்சைகளை ஆரம்பித்துவிட்டனர் வைத்தியர்கள்.

கண்ணாடித் தடுப்புக்கு அப்பாலிருந்த வராந்தாவில் பெஞ்சு மேல் கவலை கப்பிய முகமும் சோர்ந்த மனமுமாக

அவள் உட்கார்ந்திருந்தாள். காலடி ஓசை கேட்டது. திரும்பிப் பார்த்தவள் திடுக்கிட்டுப் போனாள். நரேந்திரனும் அவனது அந்தரங்க செயலாளர் யோகநாதனும் வராந்தாவில் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

''என்னம்மா என்ன ஆச்சு? டாக்டர் கணபதி போன் செய்தார். அவர்தான் உங்க புக்ககத்துக்கும் குடும்ப வைத்தியர்...'' மெலிதாக புன்னகைத்தார் யோகநாதன்.

ஆடாது அசையாது தன்னைப் பார்த்துக் கொண்டு நின்ற நரேந்திரனிடம் அவள் எதுவும் பேசமுற்படவில்லை. நெஞ்சிலே புரண்டு எழுந்த கசப்பு உணர்வை சமாளித்துக் கொண்டு... யோகநாதனுக்கு பதில் சொன்னாள்.

''அப்பாவுக்கு மறுபடி மாரடைப்பு வந்திருக்கு. போன தடவையை விட அபாய நிலையில் இருக்குன்னு டாக்டர் சொல்றார். ரொம்ப கவலையா இருக்கு!...'' தடுமாறினாள்.

கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்று சில நொடிகளில் வெளியே வந்தான் நரேந்திரன்.

''நாங்கள் எல்லாம் உதவிக்கு இருக்கோம்? பணச்செலவு பத்தி நீங்க கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம்'' யோகநாதன் ஆறுதலாகச் சொன்னார்.

கணவனும் மனைவியும் இது மாதிரியான இக்கட்டான சமயத்தில் கூட பேசாது மவுனமாக இருக்க தாம் இடை புகுந்து பேசுவது பெருத்த அசம்பாவிதம் என்று யோகநாதன் நினைக்கமாட்டாரா?

நரேந்திரனின் அந்தரங்க காரியதரிசி அவர். கணவனுக்கும் மனைவிக்கும் இடையே தோன்றியுள்ள விரிசல்.... அவருக்கு தெரிந்திருக்கும்.

''கங்கா மீது ஏதோ தவறு இல்லாவிட்டால் ஆசைப்பட்டு மணந்தவளைப் பிறந்த வீட்டிலேயே ஒதுக்கி வைத்திருப்பானா மனிதன்?'' என்றுதான் தமக்குள் அவளைப் பற்றி கணிப்பு செய்திருப்பார்.

வெட்கம்... வெட்கம் நரேந்திரனின் வேலையாளிலிருந்து வாயிலைக் காக்கும் காவலாளி வரை... எல்லோரும் தவறு அவளுடையது என்றுதான் நினைப்பார்கள்.... கடவுளே... இப்படி ஒரு கேடான நிலையா அவளுக்குக் கிட்ட வேண்டும்...

'உங்க உதவி ஒன்றும் தேவையில்லை. என்னால் எல்லாத்தையும் சமாளிக்க முடியும் - நீங்கள் என் தந்தையை பார்க்க ஓடி வந்திருக்க வேண்டாம்...!' பட்டென்று சொல்ல நாக்கு துடித்தது.

கல்லாக நின்ற கணவனை மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். கண்கள் கலங்கிப் போனாள்.

''தாங்க்யூ ஸார்...!'' என்று யோகநாதனைப் பார்த்து முறுவலித்தாள். கணவனை பார்க்க மனமின்றி... கண்ணாடி கதவு பக்கம் திரும்பிக் கொண்டாள். நரேந்திரன் அதற்கு மேல் அங்கே நிற்கவில்லை.

29

சில நாட்களில் ரத்னசாமி தீவிர கவனிப்புப் பகுதியிலிருந்து ஒரு தனி அறைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

மயக்கம் தெளிந்து உடல் நிலை சிறிதளவு குணமாகி விட்டிருந்ததால் அவரால் தமது சூழ்நிலையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. துயரமே வடிவாக எதிரே ஒரு இருக்கையில் அமர்ந்திருந்த மகளின் வெளிரடைந்த முகத்தைப் பார்த்தார்.

இரக்கத்தில் மனம் நெகிழ்ந்து போனார்.

மிக்க வெறுப்பாக பேசி அவள் அவமானத்தில் துவண்டு துடிக்கும்படியாகக் கேள்விகளைக் கேட்டு... கர்ப்பிணிப்

பெண்ணை சித்ரவதை செய்தது மகா பாவம்... என்ற குற்ற உணர்வு அவர் மனதை நெருடியது. காயம்பூ இல்லாத நிலையில் தன்னந்தனியாகவல்லவா கங்கா வீட்டில் தங்க வேண்டியுள்ளது. என்ன கொடுமை? ஆமாம் அவருக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் அவள் கதி?...

சிந்தித்தபோது மகளின் இருளடைந்த வருங்காலம் அவர் மனதை மெத்த வருத்தியது.

''கங்கா...! வீட்டுக்குப் போய் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கிறதுதானே... ராத்திரியெல்லாம் கண் முழிச்சிகிட்டு உட்கார்ந்திருந்தே.... வீட்டிலே இப்போ துணைக்கு யாருமே இல்லேன்னு பயமா அம்மா!'' அவரது வாழ்நாட்களில் முதல் முதலாக மகளிடம் ரத்னசாமி மிகக் கனிவாகப் பேசினார்.

வியப்புடன் தந்தையை நிமிர்ந்து பார்த்தாள் கங்கா.

ரத்னசாமி மிகவும் கடுமையானவர்தான். குழந்தை என்று அவளிடம் அவளது சிறு பிராயத்திலேயே அன்பை கொட்டி கொஞ்சி சீராட்டியவர் அல்ல அவர். ஆனாலும் தந்தை என்ற ரத்தபாசம் அவரை விட்டுப் போகவில்லை.

கிழிந்த நார்போல உடல் நலிந்து - கன்னங்கள் உள் அடங்கி ஆபத்திற்குள் அமுங்கியது போன்ற கண்களில் ஏக்கம் நிறைந்து நிற்க மெல்லிய குரலில் அவர் வினவிய போது... அவளுக்கு அழுகை தொண்டையை அடைத்தது.

''வீட்டு வேலைக்கார பொன்னம்மா நாள் முழுதும் தங்கி வீட்டை பார்த்துக்க ஒப்புக் கொண்டிருக்காங்க.... இரவில் கூட துணை இருக்காங்க... பயமில்லை அப்பா!'' பதவிசாகப் பதில் அளித்தாள்.

காய்ந்த உதடுகளை நாவால் தடவிக் கொண்டார் ரத்னசாமி.

''உன்னைப் பத்திதான் இப்போ எனக்கு பெரிய கவலை ஏற்பட்டிருக்கும்மா...''

''உங்க உடம்பு நல்லா குணமாகின பிறகு என்னைப்

பத்தியெல்லாம் சிந்திக்கலாம் — இப்போ எதுக்கு அலட்டிக்கிறீங்க...?''

''நான் ஒரு பெரிய தப்புக் காரியம் செய்துட்டேன். பணம் — பதவின்னு மயங்கி உன்னை ஒரு பாவிப்பயலுக்கு கட்டிக் கொடுத்துட்டேன். பாழும் கிணற்றிலே தள்றாப்பல...''

''அதைப் பத்தி பிறகு பேசலாம் அப்பா...'' தொண்டையை இறுக்கிய துயரத்தை சமாளித்துக் கொண்டாள் கங்கா...

அவள் தந்தை அந்த மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டு இரண்டு வாரங்கள் கடந்து விட்டிருந்தன.

நரேந்திரன் முதல் நாள் வந்து எட்டிப் பார்த்தவன்தான். பிறகு வரவேயில்லை. ஆனால், அன்றாடம் அவனது செயலாளர் யோகநாதன் வந்து விசாரித்துவிட்டு போய்க் கொண்டிருந்தார். ஆஸ்பத்திரிக்கு முன்னதாக கட்ட வேண்டிய தொகையை நரேந்திரன் சார்பில் அவர் கட்டி விட்டார். அன்றாடம் மருந்துகளுக்கு உண்டான தொகையையும் தவறாது கட்டிக் கொண்டு வந்தார். கங்கா மறுத்துப் பார்த்தாள். ஆனால் யோகநாதன் கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

''நரேந்திரன் அவர்களது உத்திரவு. அதை நான் மீற முடியாது.''

அதற்கு மேல் தர்க்கம் செய்ய கங்காவுக்கு பொழுது இருக்கவில்லை. வீட்டிற்கும் — மருத்துவமனைக்கும் இடையே அவள் நாளைக்கு இருமுறையேனும் அலைய வேண்டியிருந்தது. இரவு வேளையில் தந்தையை கவனித்துக் கொள்ள மருத்துவனையில் தங்கியிருக்க வேண்டியதிருந்தது. வீட்டைப் பற்றியும் தந்தையின் உடல்நலத்தைப் பற்றியும் கவலையில் அவள் தவித்துக் கொண்டிருந்தாள். ஆனாலும், அவளுக்கு உள்ளூர கோபம் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

ஒருபுறம் வெறுப்பை உமிழ்ந்த நரேந்திரன் இன்னொரு புறம் கருணையைப் பொழிகிறானே? இதென்ன இரட்டை

வேடம்? கள்ளங்கபடமில்லாது வெளிப்படையாகப் பேசி பழக்கப்பட்டவள் அவள். எத்தனை நாள் இந்த கபட நாடகத்தைப் பார்த்துக் கொண்டு இருக்க முடியும்?

''அம்மா! இப்படி கிட்டக்க வந்து உட்காருகிறாயா?'' தந்தை மெல்லிய குரலில் கூப்பிட்டதும் அவள் திடுக்கிட்டு விழிப்பதற்குள் பரபரப்புடன் எழுந்து நாற்காலியை அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள்.

''வீட்டையும் கடையையும் நான் உன் கணவனுக்கு வித்து விட்டது தெரியுமில்லையா?''

மௌனமாக அவள் தலையை அசைத்தாள்.

''அந்தப் பணத்தை நான் நம் இருவர் பேரிலும் சேர்த்து வங்கியில் கட்டியிருக்கேன் - தெரியுமில்லையா?''

''அதைப் பற்றி இப்போ என்ன யோசனை அப்பா?''

''யோசிக்க வேண்டிய காலம் வந்திருக்கு! எனக்கு ஏதாச்சும் நேர்ந்துட்டா அந்தப் பணத்தை நீ கையாள எந்த விதமான தொல்லையும் இருக்காது. மீதியிருந்த என் சொத்து சுகமெல்லாம் கடனுக்குப் போய் விட்டதாலே உனக்கு இந்த ரொக்கம்தான் மிஞ்சும். எனக்கு பிறகு நீ நம் வீட்டிலேயே தங்கிக்கலாம்னு நரேந்திரன் அனுமதிச்சா நல்லது. வங்கியில் உள்ள தொகைக்கு வரும் வட்டியில் நீ சிரமப்படாம வாழ முடியும். ஆனால், சிதைந்து போயிருக்கிற உன் வாழ்க்கையை நினைக்கிறப்போ...!'' தடுமாறினார் ரத்னசாமி. அவருக்கு மூச்சு அடைத்தது. பேச முடியாது மகளை இரக்கமாகப் பார்த்தார். கண்களில் பெருகிய கண்ணீர் கடை வழியே... காதோரத்தை நனைத்தோடியது.

கட்டில் தலைமாட்டில் கிடந்த தூவாலையை எடுத்து கங்கா தந்தையின் கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

''அப்பா பேசினது போதும். உடம்பு பூரண குணமாகி நீங்க வீட்டுக்கு வந்ததும் நாம் இதுபற்றிமேலே ஆராயலாம்!'' என்றாள் கனிவுடன்.

''என்ன? நோயாளி ரொம்ப பேசுகிறாப்பல இருக்கே. வேண்டாம் உடம்புக்கு ஆகாது. இந்த மருந்தை சாப்பிட்டுட்டு தூங்கணும் தெரிஞ்சுதா?'' அன்போடு அதட்டிக் கொண்டு உள்ளே நுழைந்தாள் நர்ஸ். கையில் கொண்டு வந்த மாத்திரைகள் இரண்டை அவர் வாயில் போட்டு தண்ணீரை ஊற்றி விழுங்கச் செய்து போர்வையை இழுத்து கழுத்து வரை வழிய விட்டாள்!

''அம்மா! நீங்க கூட வீட்டுக்குப் போய் கொஞ்சம் ஓய்வா இருந்துட்டு பிறகு வரலாமே... நாங்க பார்த்துக்க பல பேர் இங்கே இருக்கோம். கவலை வேண்டாம்'' என்று உத்தரவிட்டாள்.

வீடு திரும்பிய கங்கா சோர்வு அடங்க நன்றாகக் குளித்து விட்டு மாற்றுடை அணிந்து கொண்டு வேலைக்காரி பொன்னம்மாள் தயாரித்து வைத்திருந்த சோற்றில் ரசம் ஊற்றி இரண்டு வாய் சாப்பிட்டாள். வாந்தி எடுக்கும் போல வயிற்றை புரட்டவே டாக்டர் அவளுக்கு தந்திருந்த மாத்திரை ஒன்றை விழுங்கிவிட்டு... கூடத்திலே பாய் மீது படுத்து விட்டாள்.

அவளையும் மீறிய தூக்கத்தில் அவள் நன்றாக ஆழ்ந்து போனாள். திடுக்கிட்டு விழித்துக் கொண்ட போது முற்றத்திலே உக்கிரமாக வீசிக் கொண்டிருந்த வெய்யில் சுவற்றின் மீது தாவி ஏறி... பொன்னிறமாகப் பொலிந்து கொண்டிருப்பதைக் கண்டாள்.

''கொஞ்சம் டீ போட்டுக் கொண்டு வரவா — அய்யாவை ஆஸ்பத்திரியிலே போய் பார்க்க வேணாமா?'' பொன்னம்மாள் நினைப்புக் கூட்டினாள்.

பகலில் சாப்பிட்ட அந்த சோறு இன்னமும் நெஞ்சைக் கரித்துக் கொண்டிருந்தது. தனக்கு எதுவும் தேவையில்லை என்று கூறிவிட்டு [illegible] கொஞ்சம் ஹார்லிக்ஸை கலக்கி பிளாஸ்க்கில் ஊற்றி [illegible] ஆயத்தமானாள்.

முன்னர் போல நெடுஞ்சாலை வரை விரைவாக நடக்க அவளால் இயலவில்லை. மசக்கையினால் ஏற்பட்ட உடல் அசதி, மாரடைப்பு வந்து அவதிப்படும் தந்தை குணமாகி வீடு திரும்ப வேண்டுமே என்றதொரு கவலை. கணவனால் நிராகரிக்கப்பட்டு விட்டோமே - இனி வருங்காலம் எப்படி இருக்கப் போகிறதோ? என்றதொரு பீதி எல்லாம் சேர்ந்து அவளை நொறுக்கவே... கங்கா மிகவும் ஆடிப்போய் விட்டிருந்தாள்.

கால்கள் பின்னிக் கொள்ள நடக்க முடியாது சட்டென்று ஒரு ஆட்டோவைப் பிடித்து ஏறிக் கொண்டாள்.

அவள் மருத்துவமனைக்குள் நுழைந்து வராந்தாவில் மெல்ல நடந்து அந்த தனி அறைக்குள் நுழைந்த போது ரத்னசாமி விழிப்புடன் தலையணைக் குவியல் மீது சாய்ந்தபடி அமர்ந்திருந்தார்.

''அப்பா, தாகத்துக்கு கொஞ்சம் ஆர்லிக்ஸ் ஊத்தித் தரவா'' மகள் கனிவுடன் கேட்டாள்.

''வேண்டாம்! அதை மேஜை மேல் வச்சுட்டு... இப்படி உட்கார். உன்கிட்டே முக்கியமா ஒண்ணு சொல்லணும். எனக்கு இப்பத்தான் நினைப்பு வந்தது?'' மூச்சு விடத் திணறினார் ரத்னசாமி.

''வீட்டை வித்தப்போ என் அறைக்குள்ளேயிருந்த வேண்டாத சாமான்கள் சிலதையும் வித்தேன். ஞாபகம் இருக்கா?''

''தெரியும் அப்பா.... அதைப் பத்தி இப்போ என்ன?''

''நம் உபயோகத்துக்குன்னு வச்சுக் கொண்ட...'' பேச முடியாது தவித்தார் ரத்னசாமி - அவருக்கு மூச்சு முட்டல் அதிகமாகியது.

''அப்பா என்னப்பா! என்ன ஆச்சு?'' மகள் பரபரப்புடன்

கேட்டபடி நாற்காலியினின்று விடுக்கென்று எழுந்து நின்றாள். முகம் முழுவதும் வியர்வை பூக்க மூச்சு விட முடியாது மார்பில் கை வைத்துக் கொண்டு தடுமாறினார் ரத்னசாமி.

''நெஞ்சு வலிக்குதே... தாங்க முடியலை'' குழறினார்.

''நர்ஸ்... ஓடிவாங்க டாக்டரைக் கூப்பிடுங்கோ. அப்பாவுக்கு பொறுக்க முடியாத நெஞ்சுவலி'' கூவியபடி கங்கா அறைக்கு வெளியே பதட்டமாக ஓடினாள்.

மறுபடியும் ரத்னசாமிக்கு சிகிச்சை தடபுடல் பட்டது. அறையை விட்டு வெளியே வந்த டாக்டரிடம் வேகமாக வந்தாள் கங்கா.

''அப்பாவுக்கு இப்போ எப்படியிருக்கு டாக்டர்?''

''ஸாரி மேடம்! உயிர் போய் கொஞ்ச நேரம் ஆகுது!''

''இந்த முறை அவருக்கு கடுமையானதொரு மாரடைப்பு வந்துவிட்டிருக்கிறது. எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை.''

''உயிர் போயிட்டுதா...? நிசமா எங்கப்பா செத்து விட்டாரா?'' புலம்பிய கங்கா உள்ளே ஓடிச்சென்று அமைதியாக மீளா உறக்கத்தில் ஆழ்ந்துவிட்ட தன் தந்தையின் முகத்தைப் பார்த்து அலறினாள்.

''இது ஆஸ்பத்திரி! இரைந்து அழக் கூடாது. மத்த நோயாளிகள் பயந்துடுவாங்க...''நர்ஸ் மெல்ல அதட்டவே கங்கா புடவைத் தலைப்பை வாயில் அடைத்துக் கொண்டு அவரது கால் அருகே... தரை மீது உட்கார்ந்து கட்டில் காலைப் பிடித்துக் கொண்டு குலுங்கி அழுதாள்.

நர்ஸ்கள் உள்ளே வருவதும் - சீருடை காவல் ஊழியர் எட்டிப் பார்த்துப் போவதும்... பக்கத்து அறை நோயாளிகளின் பார்வையாளர்கள் தலை நீட்டி பார்த்துவிட்டு ''ஐயோ பாவம்!'' என்று அரற்றுவதுமாக கொஞ்ச நேரம் சென்றது.

தன் சூழ்நிலையை மறந்து இருதயம் இரண்டாகி விட்டது

போன்று வலியில் துயரம் தாளாது... அவள் மெல்ல அழுது கொண்டிருந்தாள். தேற்றுவார் இன்றி விசும்பி அழுது கொண்டிருந்தாள்.

"அடப்பாவமே இப்படியாச்சே... உடம்பு நல்லா தேறி வந்து கொண்டிருந்திச்சு. இன்னும் ஒரு வாரத்திலே வீட்டுக்கு போகலாம்னு டாக்டர் சொன்னார். இந்த மாரடைப்பு நோயின் போக்கே இப்படித்தான். பிழைக்க மாட்டான்னு நினைச்சா கல்லுப் பிள்ளையார் போல எழுந்து உட்கார்ந்திடுவான்... நல்லாயிட்டதுன்னு நம்பிக் கொண்டிருந்தப்போ... திடீர்னு இப்படித் தலையிலே தூக்கி போட்டுவிடும் இந்த நோய்."

பழக்கமான குரலைக் கேட்டு மெல்லக் கண்களைத் துடைத்துக் கொண்டு திரும்பிப் பார்த்தாள்.

யோகநாதன் உள்ளே வந்து நின்று கொண்டிருந்தார். அவர் பின்னால் நரேந்திரன் மவுனமாக நின்றான்.

கழுகுக்கு வேர்க்கும் என்பார்களே... அதுபோல அவளது துயரத்தை வேடிக்கை பார்க்க சமயத்திற்கு வந்துவிட்டிருக்கிறானே நரேந்திரன்?

அனாதையாகிவிட்ட அவளைப் பார்த்து அனுதாபப்படவா? ஆனந்தப் படவா...? நெஞ்சு குமுறி.. அவள் அடக்கமாட்டாது மேலே விம்மி விம்மி அழுதாள்.

அதற்குப் பின் என்ன நடந்தது என்பது அவளுக்கு ஒரு கனவு போலத்தான் இருந்தது.

நரேந்திரன் சார்பில் சிலரும்... ரத்னசாமிக்கு தெரிந்தவர் சிலரும், தெருவிலிருந்த சில ஆண் - பெண்களும் அவர்களது வீட்டில் கூடியிருந்தனர். சுவற்றில் சாய்ந்தபடி அவள் துயரமே உருவாக அமர்ந்திருந்தாள். காரியங்கள் துரிதமாக நடைபெற்றன. அவைகளை செவ்வையாக யோகநாதன் கவனித்துக் கொண்டார்.

ரத்னசாமியின் உடல் தனது இறுதி யாத்திரைக்கு வெளியே

எடுத்துச் செல்லப்பட்ட போது... ''அப்பா'' என்று அடிவயிற்றிலிருந்து ஓலமிட்ட கங்கா மயங்கி, விழுந்து விட்டாள்.

கண்களை விழித்துக் கொண்ட போது... வீடு பெருத்த அமைதியில் மூழ்கிக் கிடந்தது. கூடத்தில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வீடு முழுவதும் கழுவப்பட்டு துடைக்கப் பட்டிருந்தது. ரத்னசாமியின் போட்டோ அருகே ஒரு கத்தை ஊதுவத்தி கமழ்ந்து கொண்டிருந்தது.

மெல்ல எழுந்தவளைக் கைத்தாங்கலாக குளியலறைக்கு எடுத்துச் சென்று தலை முழுக உதவினாள் பொன்னம்மாள். மாற்றுடை அணிந்து கொண்டு... கூடத்தில் வந்து நின்ற கங்காவுக்கு துக்கம் குமுறிக் கொண்டு வந்தது.

அப்பாவின் மறைவில் வெறுமையாகி விட்ட அந்த வீட்டில் அவள் தன்னந்தனியாக... வாழ்வது சாத்தியமாகுமா...? இப்படி ஒரு பயங்கர நிலை அவளுக்கா ஏற்பட்டிருக்கிறது...? ஏன்?

பொன்னம்மாளின் தோளில் சாய்ந்தபடி... மீண்டும் ஒரு மூச்சு அவள் விசும்பி அழுதாள்.

30

சில நாட்கள் சென்றன.

இனி என்ன செய்வோம். தந்தையின் துணையும் இன்றி நீடித்து அந்த வீட்டில் தங்கிக் கொண்டு வாழ்வது சாத்தியப்படுமா? எனக் கங்கா கலங்கிக் கொண்டிருந்த போது வேலைக்காரி பொன்னம்மாள் ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டாள்.

''அவசரத்துக்கு ஐயா காரியங்கள் நடக்கற மட்டும்

செய்வோம்னு துணை இருந்துட்டேன். இனிமேலே என்னாலே முடியாது. பாண்டிச்சேரியில் இருக்கிற என் தங்கச்சி உங்களாட்டம் அறியாத வயசு பொண்ணு. புருஷன் போயிட்டார், தனியா இருக்கா. அவளுக்கு உதவி செய்ய நான் போகணும். நீங்க வேற ஏதாச்சும் வழி தேடிக்கோங்க... இன்னும் ஒரு வாரத்திலே நான் கிளம்பிடுவேன்.''

உறவினர்களையே உதவிக்கு நம்ப முடியாத காலம் இது. வேலைக்காரர்களிடம் அதிக விசுவாசத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்.

''முன்னமே நீ சொன்னது நல்லதாப் போச்சு பொன்னம்மா... நான் சீக்கிரம் ஏதாச்சும் வழி பண்ணிக்கிறேன். அதுவரை என்னைவிட்டுட்டு போயிடாதே!'' வேண்டிக் கொண்டாள்.

இப்படிப்பட்டதொரு அவல நிலையில் தன்னைத் தவிக்கவிட்டு வேடிக்கை பார்த்த கணவன் மீது அவளுக்கு கசப்பு மண்டிக் கொண்டு வந்தது.

மறைந்து போன தந்தையை நொந்து கொள்ள முடியவில்லை. ஆனாலும், அவர் செய்த ஒரு தவறுக்கு அவள் எத்தனை சிரமம் அனுபவிக்கிறாள் என்பதை நினைக்காமல் இருக்கவும் முடியவில்லை.

எங்கேயாவது கருணை இல்லத்திற்குச் சென்று வேலை கேட்டு அங்கேயே தங்கிக் கொண்டால்...?

காசு பணம் உள்ள கொஞ்சம் வசதியாக இருக்கிறவர்களுக்கு அனாதை இல்லங்களில் இடம் கிடைக்காதே, வேலை செய்யும் பெண்கள் ஹாஸ்டலில் முயன்று பார்க்கவும் முடியாது. அவள் வேலை செய்யும் பெண் அல்லவே?

நடுத்தெருவில் நிற்கும் கதி ஏற்பட்டாலும் சரி இனி தொடர்ந்து கணவனுக்கு சொந்தமாகிவிட்ட அந்த வீட்டில்

அவனது தயவால் அவன் தரும் பிச்சைக் காசை வாங்கிக் கொண்டு பிழைக்க வேண்டியது அவசியமல்ல. இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும்.

அப்பொழுதுதான் அவளுக்கு சிவகாமி அம்மாளின் ஞாபகம் வந்தது. ஆரம்ப காலத்தில் அப்பா தமது நகை வியாபாரத்தில் அந்தம்மாளின் கணவர் பொன்னுரங்கத்தை கூட்டாகச் சேர்த்துக் கொண்டு துவங்கினார்.

கங்கா சிறு பெண்ணாக இருந்தபோது... அவர்களுக்குள் ஏதோ மனத்தாங்கல், பிரிந்து விட்டனர். பேச்சு வார்த்தை கிடையாத அளவுக்கு விரோதம். பொன்னுரங்கம் இறந்தபோது ரத்னசாமி போகவில்லை. அதைப் போல ரத்னசாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்க சிவகாமி வரவில்லை.

சென்னையில்தான் வாழ்கிறாள் சிவகாமி.

அவளைப் போய் பார்த்து தன் நிலையைக் கூறினால்...

இந்த எண்ணம் அவளுள் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது. கருணை இல்லங்களை நாடி வேலை தரும்படி கேட்குமுன் சிவகாமி அம்மாவைப் பார்த்தால்? அப்பாவின் அலமாரியிலிருந்த புத்தக அடுக்குக்குள்ளே கிடைத்த அப்பாவின் டைரியை எடுத்துப் புரட்டினாள். சிவகாமியின் முகவரியும் தொலைபேசி எண்ணும் கிடைத்தன. உடனேயே அவள் தெரு முனையிலிருந்த அந்த பலசரக்கு கடைக்கு விரைந்தாள்.

கடைக்காரருக்கு காற்று வாக்கில் ரத்னசாமி வீட்டுச் செய்தி தெரிந்துவிட்டிருந்தது. தந்தையை இழந்து கணவனால் புறக்கணிக்கப்பட்டு அனாதையாகி இந்த இளம் வயதில் எப்படித்தான் நீண்ட காலம் தனியாக வாழப் போகிறாளோ? என்ற அனுதாபம் அவருக்கு.

''தொலைபேசியை உபயோகிக்கணுமா...? தாராளமா செஞ்சுக்கோங்க...'' மிகவும் அனுசரணையுடன் அனுமதி தந்துவிட்டு தம் காரியத்தில் மூழ்கிப் போனார்.

சாமான் அறைக்குள் நுழைந்து தொலைபேசியில் எண்களைச் சுழற்றினாள்.

மறுபக்கம் அதட்டலாக ஒலித்த சிவகாமியின் குரலைக் கேட்டு நெஞ்சு பக் பக்கென்று அடித்துக் கொண்டது.

''வீட்டுக்கு வந்து என்னைப் பார்க்கணுமா? என்ன சங்கதி? நேரிலேதான் சொல்ல முடியுமா? சரி வா... பத்து மணிக்கு மேலே வந்தால்தான் சவுகரியப்படும்...!'' அதே அதட்டல் குரலில் கூறி முடித்தாள்.

தொலைபேசிக் கட்டணத்தைக் கொடுத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிய கங்கா... பொன்னம்மாளிடம் வீட்டைக் கவனிக்கச் சொல்லிவிட்டு அவசரமாக வேறு ஆடை அணிந்து கொண்டு வெளியே புறப்பட்டாள். பூந்தமல்லி நெடுஞ்சாலையின் முடிவிலிருந்ததொரு சிறு சந்து போன்ற நிருப்பத்தில்... சிவகாமியின் பங்களா இருந்தது.

அத்தனை தூரம் பஸ்சில் போனால் நேரம் ஆகிவிடும் என்று டாக்சி ஒன்றைப் பிடித்துக் கொண்டாள்.

கணவன் விட்டுப்போன சொத்தை வைத்துக் கொண்டு அந்தக் கால தர்பாரில் வாழ்ந்து கெண்டிருந்தவள் சிவகாமி. நெருங்கிப் பழகியதின் விளைவாக அத்தை என்று அவளை கங்கா அழைப்பது வழக்கம்.

சொந்தமுமில்லை - பந்தமுமில்லை - இடையே ஏற்பட்ட மனத்தாங்கல் சுவர் போல நிற்கிறது. வரவேற்பு எப்படி இருக்குமோ? கவலையுடன்தான் பங்களாவின் எதிரில் டாக்சியிலிருந்து இறங்கிக் கொண்டாள். கட்டணத்தை டாக்சிக்காரருக்குக் கொடுத்துவிட்டு லேசாகக் கேட்டைத் தொட்டாள்.

பக்கத்திலிருந்த இரண்டு பழைய பங்களாக்களும் இடிக்கப்பட்டு... மிகவும் நாகரிகமாகக் கட்டப்பட்டிருந்தன.

அவைகளுக்கு திருஷ்டி பரிகாரம் போல சிவகாமியின் வீடு சாயம் அழிந்த சுவர்களும், பாசி பிடித்த தூண்களும் காடாக புதர் மண்டிவிட்ட தோட்டமுமாக பார்க்க என்னவோ போல்தான் இருந்தது.

மற்ற இரு பங்களாக்களின் பின்புறத்திலிருந்து ஆவேசமாக நாய்கள் குரைக்கும் சத்தம் அந்த பகுதியை கிடுகிடுக்க வைத்தது. காக்கி சீருடையில் கேட்டருகே உட்கார்ந்து இருந்த இரண்டு பங்களாவின் காவலாளிகளும் அவளை வியப்புடன் எட்டிப் பார்த்தனர்.

நல்லவேளை சிவகாமி நாய் ஒன்றும் வைத்துக் கொள்ளவில்லை. கேட்டை மெல்லத் திறந்து - புதர்கள் நடுவே தெரிந்த நடைபாதையில் வேகமாக நடந்து வராந்தாவை அடைந்தாள் அவள்.

அத்தை சிவகாமி வீட்டின் பெரிய வராந்தாவிலே ஒரு கூடை நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். தரைமீது இங்குமங்கும் நாளேடுகள் பிரித்துப் போடப்பட்டிருந்தன.

வந்தவளை கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தாள். 'உட்கார்!' என்று எதிரே கிடந்த இன்னொரு பிரம்பு நாற்காலியைக் காட்டினாள்.

சிவகாமி எழுபது வயதை எட்டிக் கொண்டிருந்தாள். முழுவதும் நரைத்துப் போன தலை - சுருங்கிய முகம் -ஒடிசலான உடல் - கஞ்சியில் மொடமொடத்த வெள்ளைப் புடவையில்... கால்களை ஒரு முக்காலி மீது நீட்டிக் கொண்டு சாய்ந்தபடி அமர்ந்திருந்தாள். கண்களில் அதிகாரம் ரொம்பவே தெரிந்தது.

''உன் கல்யாணத்துக்கு உன் அப்பா அழைப்பு அனுப்பிச்சார். அவர் சமீபத்தில் இறந்து போனார் என்கிறதை பத்திரிகையிலே துக்கச் செய்தியிலே பார்த்தேன். வாழ்வு தாழ்வு எதுக்கும் கலந்து கொள்ள முடியாதபடி மனம் சங்கடப்பட்டு போச்சில்லையா? அதனாலே கம்முனு இருந்துட்டேன்.''

''அப்பாவுக்கும், உங்களுக்கும்தானே மனத்தாங்கல். என் மேலே ஏதும் இல்லையே, அதனால்தான் உங்களைப் பார்க்க வந்தேன்!'' என்று ஆரம்பித்து மெல்ல எல்லாவற்றையும் கூறி முடித்தாள் கங்கா.

அனாதையாகி விட்டாள் என்பதால் சிவகாமி இரங்கிப் போய்விடவில்லை.

ஆரம்ப காலத்தில் சிவகாமியும் கணவனிடம் மிகவும் கஷ்டப்பட்டவள். பத்தாண்டு காலம் அவளை அவள் கணவன் தள்ளி வைத்து விட்டிருந்தார். பல சிறுமைகளை அனுபவித்துவிட்டு நடு வயதைத் தாண்டிய பின் உறவினர் நாலுபேரின் தயவால் மறுபடி கணவன் வீடு திரும்பினாள்.

வயது காலத்தில் தான் செய்த பிசகுக்கு ஈடு செய்யும் வகையில் அவள் கணவன் அவளை நன்றாக கவனித்துக் கொண்டதுடன் - தன்னுடைய சொத்து அனைத்தையும் அவளுக்கே எழுதி வைத்துவிட்டுப் போயிருந்தார். தன் வாழ்வில் நடந்த சோகம் இன்னொரு பெண்ணுக்கும் ஏற்பட்டு விட்டதே என்ற ஆதங்கத்தில் ஏற்பட்ட துளி பரிவு. தொண்டையை செருமிக் கொண்டாள் சிவகாமி.

''நான் இந்த பெரிய பங்களாவில் வீட்டோடு ஒரு வேலைக்காரி, அவ்வப்போது வந்து உதவுகிற ஒரு தோட்டக்காரன் என்ற இரண்டு பேரோட வாழ்கிறேன். தனியே இருந்து எனக்கு அலுத்துப் போச்சு. வாய் பேச்சுக்கு உதவுவேன்னு உன்னை என்கூட வச்சுக்க சம்மதிக்கிறேன். ஆனால், சில நிபந்தனைகள்!''

''சொல்லுங்க அத்தை! அவைகளின்படி நடக்கிறேன்.''

''இங்கே - உன்னைத் தேடிக்கிட்டு உன் புருஷன் அடிக்கடி வரக்கூடாது!''

''அவருக்குத் தெரியாத இடத்தில் வந்து தங்கி வாழ விரும்புகிறேன். அதனால் அந்த சிரமம் இருக்காது!''

''உன் பணத்தைக் கொண்டு உனக்கு தேவைப் பட்டதுகளுக்கு நீ செலவு செய்துக்கணும். கர்ப்பமாயிருக்கே. டாக்டர் பில், மருந்து அது இதுன்னு ரொம்ப பிடிக்கும்!''

''அப்படியே செய்வேன் அத்தை - சாப்பாட்டுக்கும் தங்க இடம் கொடுக்கிறதுக்கும் ஏதாச்சும் வேணுமானால் தந்துடறேன்!''

''தேவையில்லை. அதுக்கு பதிலா நீ வீட்டை நல்லா கவனிச்சுக்கணும், வேலைக்காரி இடக்கு பண்ணினா சமைக்கணும்?''

''நீங்க என்னை மகளா நினைச்சு அடைக்கலம் கொடுங்கோ... நான் உங்களை பெத்த தாய் போல பாவிச்சு வேளைக்கு ருசியா சமைச்சுப் போட்டு நல்லா... கவனிச்சுக்கிறேன். இந்த வீட்டையும் நிர்வகிக்கிறேன். கவலைப்படாதீங்க...''

''அடிக்கடி நீ அங்கே... இங்கேன்னு வெளியே போய் சுத்தக் கூடாது. நீ சின்ன வயசுப் பொண்ணு. வம்பு தண்டா எனக்கு தேவையில்லை...!''

''வெளியே அனாவசியமா போக மாட்டேன் அத்தை... நீங்க என்னை நம்பலாம்.''

''பிரசவம் வரை இருந்துட்டு நீ உடனே கம்பி நீட்டணும்னு நினைச்சா... இது ஓட்டல் அல்ல. அதையும் முதல்லேயே சொல்லிடறேன். காலம் கெட்டு கிடக்கு. தனியா ஒரு கிழவி இருக்கா இத்தனை பெரிய பங்களாவிலேன்னு தெரிஞ்சு திருடன் எவனாவது பூந்து கழுத்தை நெரிச்சுடப் போரானேன்னுதான் ஒரு துணை தேடிக்கிட்டிருந்தேன். தெரிஞ்சவர் வீட்டுப் பொண்ணு நீ. உன்னை வச்சுக்க சம்மதிக்கிறேன். நீயும் அதுக்கு தக்கபடி நடந்துக்கோ!''

''நீங்க போன்னு சொல்றவரை நான் நகரமாட்டேன் அத்தை!''

''எப்ப வரே...? இந்த வார முடிவுக்குள்ளே வந்துடறியா... கண்ட சாமான்களை தூக்கிட்டு வராதே... தேவைப்பட்டதை உனக்குத் தர அறையிலே போட்டு வச்சுக்கோ... மிச்சத்தை அவுட் அவுசுலே போட்டு வை... சரியா?''

''சரி அத்தை!'' என்று தலையை ஆட்டினாள் கங்கா.

''இரு - ரொம்ப தூரத்திலிருந்து வந்திருக்கே - காப்பி சாப்பிட்டுட்டு உனக்கு நான் தரப்போற அறையை பார்த்துட்டு வேணும் வேணாததை கவனிச்சுட்டு போகலாம். ஏ நீலம்மா...!'' என்று வாயிலிலிருந்தபடி குரல் கொடுத்தாள் சிவகாமி.

''என்னத்துக்கு கூவுறாங்க. அடுப்படியிலே ஆயிரம் வேலை இருக்கு!'' முணுமுணுத்தபடி நீலம்மா... அத்தையை விட கொஞ்சம் வயதில் இளையவள். அத்தையைப் போலவே நரைத்த தலையும் ஒடுங்கிய உடலுமானதொரு கிழவி மெல்ல எட்டிப் பார்த்தாள்.

''காப்பியை கலக்கிக் கொண்டு வா!'' என்று சிவகாமி உத்தரவிட வந்திருக்கும் இளம் பெண்ணை ஏற இறங்கப் பார்த்துவிட்டு உள்ளே சென்றாள்.

காப்பி கஷாயமாகக் கசந்தது. மடக்கென்று ஒரே வாயில் குடித்துவிட்டு எழுந்தாள். அத்தை சிவகாமி அவள் தங்கக் காட்டிய அறை பின் பக்கத்திலிருந்தது. ஒரு ஒடிந்த முக்காலியைத் தவிர அறை வெறுமையாக இருந்தது.

அதைப் பார்த்ததுமே கங்கா மனதிற்குள் கணக்குப் போட்டுக் கொண்டாள்.

அப்பாவின் கட்டில், அவளது இரும்பு பீரோ, சாய்வு நாற்காலி இவைகளை கொண்டு வந்து அறைக்குள் போட்டுக் கொள்ளலாம். சன்னல் திரைகளைக் கொண்டு வந்தால் இங்கே உபயோகமாகும்... மீதி சாமான்களை வீட்டுப் பாத்திரங்களை ஒரு பெரிய கள்ளிப் பெட்டியில் போட்டு அவுட் அவுசில் வைத்து விடலாம்!'' என்று பரபரத்தாள்.

விடை பெற்றுக் கொண்டு நிம்மதியாகத் திரும்பினாள். அதற்குப் பின் கவனிக்க அவளுக்கு ஆயிரம் வேலைகள் இருந்தன. டெம்போ ஒன்றில் சாமான்களை ஏற்றி அனுப்பி விட்டு அத்தனை காலம் ஆண்டு அனுபவித்த வீட்டை மறுபடி ஒரு முறை துயரத்துடன் பார்த்துவிட்டு வாயிற் கதவை நன்றாகப் பூட்டிக் கொண்டு டாக்சியில் கிளம்பி விட்டாள்.

தன் முகவரிக்கு வந்த சாவி பார்சலைக் கண்டு திகைத்துப் போனான் நரேந்திரன்.

உடனடியாகக் காரில் புறப்பட்டு திருவல்லிக்கேணி முத்துவீரன் தெரு ஐந்தாம் எண் வீட்டை அடைந்தான்.

வாசலில் பூட்டு தொங்கியது. தான் எங்கே போனாள் என்ற விபரம் சொல்லாது கங்கா மறைந்துவிட்டதை எண்ணியபோது ஆத்திரம்... பொங்கிக் கொண்டு வந்தது.

''என்ன துணிச்சல்?'' என்று உறுமியபடி பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனான்.

வீடு சுத்தமாக காலியாக இருந்தது. கங்கா காற்றோடு கலந்து விட்டாள் போன்ற அதிர்ச்சியில் திகைத்துப் போய் நின்று விட்டான்.

31

அன்று மாலை மனைவி சொன்ன சில மளிகை சாமான்களை வாங்கி வர நெடுஞ்சாலையில் இருந்த ஒரு கடைக்கு விரைந்திருந்தான் தங்கப்பன்.

சில நாட்களாக அவனுக்கு மனதிலே ஒரு குழப்பம். வீட்டு வேலை முடிந்ததும் மின்னாலிருக்கும் கங்கன் அறைக்குர்

சென்று கணவனும், மனைவியும் அடிக் குரலில் பேசி அலுத்துக் கொள்வது வழக்கமாகி விட்டிருந்தது.

"நீ என்ன நினைக்கிறே தாயம்மா... இது பெரிய அக்ருமமாக இருக்குதே?"

"அழகான கல்யாணம் கட்டிகிட்ட எசமான் பெண் சாதியை வச்சு குடித்தனம் நடத்த மாட்டேங்கிறாரே?"

"அந்தப் பெண் மேலே குத்தம் ஏதாச்சும் இருக்கும்னு நினைக்கிறியா? பச்சைக் குழந்தையாட்டம் பால் வடிகிற அதோட மொகத்தைப் பார்த்தா என் குரல் புரண்டு... அழுவாச்சி வந்துட்டது எனக்கு. நான் மெல்ல சமையல் கட்டிலிருந்து அன்னிக்கு எட்டிப் பார்த்தேன். ஐயா அசிங்கமா பேசி அவமானப்படுத்திட்டாரே. கல்யாணத்துக்குப் பிறகு அந்த பெண்ணைக் கூட்டிக்கிட்டு பெங்களூர் மைசூர்னு திரிஞ்சிட்டு இப்போ அது சுமக்கற குழந்தை தன்னுது இல்லேன்னு அடம்பிடிக்கிறாரே, என்ன நியாயம்? எனக்கு இவர் குணம் ஒண்ணுமே பிடிபடலை... நான் முதல்லே வேற என்னவெல்லாமோ நினைச்சேன்!"

"பூரணி அம்மாளைத் தானே சொல்றே? பாவம் அது இவரைத் தன் அண்ணனா பாவிச்சு நடந்ததுக்கறதே. நாம்தான் பார்த்துகிட்டு வரோமே, இப்போ ஐயா அந்தம்மாகிட்டே கூட முகம் கொடுத்துப் பேசறது இல்லே...!"

"தன் மாமனார் செத்ததுக்குப் போனவர் - பிறகு அந்த பெண்ணை ஏன்னுகூட கேட்கலை. இது பெரிய கோராமையாக இருக்கு. வயித்துப் பிழைப்புன்னு பாக்கிறேன்... நான் மட்டும் கொஞ்சம் கையிலே காசைப் பிடிச்சு வச்சிட்டு இருந்தா, இந்தாய்யா... நீயுமாச்சு உன் வேலையுமாச்சு... இப்படி ஒரு நல்ல பொண்ணை வாட்டி வதைக்கிற மனுஷன் வீட்டிலே வேலை பாக்கிறதும் ஒரு பிழைப்பான்னு கேட்டுட்டு புறப்பட்டு போயிருப்பேன்... இப்படி அக்கிரமம் செய்கிற

தினமும் கணவனும் மனைவியும்... பேசி வருந்தினர்.

அன்று காலை... பரபரப்புடன் வீடு திரும்பிய நரேந்திரனை தங்கப்பன் வியப்புடன் பார்த்தான். ஆசையுடன் தன்மேல் வந்து விழுந்த தன்னுடைய அருமை நாய் திம்மனை கோபத்துடன் தள்ளி விட்டான்.

''போ அப்பால். நேரம் காலம் தெரியாது விளையாட வந்துட்டது சனியன்!'' உரத்துச் சொன்னது தங்கப்பனுக்குக் கேட்டது.

காலை தன் காரை ஓட்டிச் சென்றவன் இப்படிக் கோபத்துடன் திரும்புவானேன்?

பூரணி கொண்டு வந்து வைத்த காப்பியைக் கூட தொடாது அவன் மாடிக்கு விரைந்து விட்டான்.

சில நாட்களாக பூரணிக்கு அவனிடம் ரொம்ப பயம் ஏற்பட்டு விட்டிருந்தது என்பதை தங்கப்பன் தம்பதியர் புரிந்து கொண்டு விட்டிருந்தனர்.

வரவேற்பறையிலிருந்த தடுப்புக்குப் பின்னால் நின்றபடி அதில் வைக்கப்பட்டிருந்த அலங்காரப் பொருள்களை எடுத்து ஓசைப்படாது தூசி போக துடைத்துக் கொண்டு நின்றான் தங்கப்பன். ஒரு நாள் காலை அவன் அங்கு இருப்பதை அவர்கள் கவனிக்கவில்லை. கண்ணாடி டம்பளரில் பழரசத்தை நிறைத்து எடுத்துக் கொண்டு வந்தாள் பூரணி. அதை மேடை மேல் வைத்துவிட்டு நெற்றியில் பூத்து வடிந்து கொண்டிருந்த வியர்வையைத் தன் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

''அண்ணா! உங்ககிட்ட ஒண்ணு பேசணும்.''

நரேந்திரன் கையில் பிடித்துக் கொண்டிருந்த நாளேட்டைத் தாழ்த்திக் கொண்டு அவளை வெறித்தான்.

''உங்களை என் சகோதரராக பாவித்துக் கொண்டு இங்கே

தங்கி வாழ்வதனால் கேட்கிறேன். கோபிக்கக் கூடாது!'' பீடிகையுடன் ஆரம்பித்தாள் அவள்.

பொறுமை இல்லாத வகையில் நரேந்திரன் பதில் அளித்தான். ''சுற்றி வளைக்காம நேரே சங்கதியைச் சொல்லலாமே?''

''கல்யாணத்துக்குப் பிறகு நீங்க பெங்களூரிலிருந்து திரும்பிய போது... தனியா வீட்டுக்கு வந்தீங்க. நான் உடனே அண்ணி எங்கேன்னு கேட்டேன். பிறந்த வீட்டில் இருக்காங்கன்னு பதில் சொன்னீங்க!''

''ஆமாம், உண்மையைச் சொன்னேன். அதுக்கு இப்போ என்ன?'' காரமான குரலில் அதட்டினான்.

உங்க மாமனார் வந்தப்போ நீங்க பேசினதிலிருந்து ஏதோ பெரிய மனத்தாங்கல் அவர் மேலே உங்களுக்கு ஏற்பட்டிருக்குன்னு புரிஞ்சுது...''

''தெரிஞ்சு கொண்டு விட்டிருக்கியே - அதுக்குப் பிறகு ஏன் இந்தக் கேள்வி?''

''மாமனார் மேலே ஏற்பட்ட கோபத்துக்கு நீங்க அண்ணியை தண்டிக்கறீங்கன்னும் புரிஞ்சது - பிறகு அண்ணி தன் அத்தையோட இங்கே வந்தப்போ நீங்க அவங்களை ரொம்ப அவமானப்படுத்தி பேசினது பின் அறையிலிருந்த என் காதிலே நல்லா கேட்டது. எனக்கு ரொம்ப மனவேதனையா போச்சு!''

''எல்லாம் ஓரளவு தெரிஞ்சு கொண்டு விட்டேன்னு சொல்றே? அவ்வளவுதானே?''

''இல்லை அண்ணா! நீங்க செய்கிறது தப்புன்னு என் மனசிலே படறது. அண்ணி தன் தந்தையை இழந்து அனாதையா இருக்காங்க. கர்ப்பமா வேற இருக்காங்க - கொஞ்சம் மனசு இறங்கி அவங்களை அழைச்சிட்டு வந்து நீங்க வாழ்க்கை நடத்தணும் என்கிறது என் கோரிக்கை!''

''உனக்கு நான் இங்கே பாதுகாப்பும் வாழ வசதியும் அமைச்சு கொடுத்தேனே தவிர எனக்கு புத்தி சொல்ல அல்ல.''

அவமானத்தால் முகம் சிவந்து போனாள் அவள்.

''நீங்க மறுத்தால் நான் வீண் பழிக்கு ஆளாவேன். யாரோ ஒரு அனாதைப் பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு அவ பேச்சைக் கேட்டு கட்டின மனைவியைத் தள்ளி வச்சிருக்கார் நரேந்திரன்னு என்னை வெளியார் தூற்றுவாங்க. அந்தப் பெண்ணுக்கும், நரேந்திரனுக்கும் இடையே ஏதோ... என்று பலதும் பேசுவார்கள். இல்லையா?''

''ஊர் வாய்க்கு நீ ஏன் பயப்படணும். உன் மனசாட்சிக்கு பயப்பட்டா போதும். இந்த வீட்டில் உனக்கு சகல வசதியும் உண்டு... ஆனால், என் சங்கதியில் தலையிடும் உரிமை கிடையாது. இனி நீ என் மனைவி சம்பந்தமாக என்னிடம் வந்து எதுவும் பேசக் கூடாது. எச்சரிக்கிறேன்'' கோபமாகக் கூறிவிட்டு எழுந்து போனான்.

வரவேற்பறை தடுப்பின் பின்னால் மூச்சை அடக்கிக் கொண்டு அத்தனையையும் கேட்டுக் கொண்டிருந்த தங்கப்பன் பெரிதும் அதிர்ந்து போனான்.

அன்று இரவு அவன் தன் மனைவியிடம் அதை சொல்லி மாய்ந்து போனான்.

''நம்ப அய்யாவுக்கு புத்தி சரியில்லைன்னு நினைக்கிறேன். இந்த பூரணி அம்மாளை இங்கே தங்க வச்சுக் கொண்டபோது ரொம்ப பரிவா நடத்தினப்போ... நான் என்னென்னவோ நினைச்சுட்டேன். இந்தப் பொண்ணைத் தான் ஐயா கட்டிக்கப் போறார்னு எண்ணிக்கிட்டிருந்தேன். திடீர்னு கங்கா அம்மாளை கட்டிக்க தீர்மானிச்சப்போ...

''நமக்கு கொஞ்சம் ஏமாத்தமா இருந்துச்சு. ஐயோ பாவம் பூரணின்னு ரொம்ப அனுதாபப் பட்டோம். அந்த ஏமாத்தத்தை சமாளிச்சுக்கிட்டு பூரணியம்மா நம்ப ஐயாவை அண்ணன்னு

வாய் நிறையக் கூப்பிட்டப்போ மனசு சமாதானப்பட்டது. ஆசைப்பட்டு கட்டிக்கிட்ட கங்கா அம்மாவை வச்சு வாழ மாட்டேன்னு அடம் பிடிக்கிறார். பூரணியம்மா புத்தி சொன்னதுக்கு கோவிச்சிக்கிறார். இவரைப் புரிஞ்சுக்க முடியலையே...!'' ரொம்பவும் கவலைப்பட்டான் தங்கப்பன்.

மேல் துண்டைச் சுருட்டி சும்மாடாக்கி தலையில வைத்துக் கொண்டு கடைக்காரர் அடுக்கித் தந்த சாமான்கள் கொண்ட அட்டைப் பெட்டியை தலையில் சுமந்தபடி மெல்ல நடந்து வீடு நோக்கி வந்து கொண்டிருந்த தங்கப்பன் எதேச்சையாகத் திரும்பியவன் திடுக்கிட்டு நின்று விட்டான்.

நெடுஞ்சாலையிலிருந்ததொரு புத்தகக் கடைக்கு பூரணி சில சமயம் தனக்கு வேண்டிய பத்திரிகைகள் வாங்கிவர செல்வதுண்டு. மாலை மங்கும் நேரத்தில் அந்தக் கடை வாசலில் மிகவும் நெருக்கமாக நின்றபடி ஒரு இளைஞனுடன் மிகவும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள் பூரணி.

யார் அவன்...? எப்படி பூரணிக்கு சிநேகிதமானான். எத்தனை நாட்களாக இந்த சந்திப்பு நடக்கிறது... பலவும் எண்ணி குழப்பமடைந்த அவன் வேகமாக வீடு வந்து சேர்ந்தான்.

உக்கிராண அறையில் அட்டைப் பெட்டியை இறக்கி வைத்துவிட்டு... இரவு சாப்பாடு தயாரிப்பில் மும்முரமாக இருந்த மனைவியிடம் ஓடி வந்தான்.

நெடுஞ்சாலைப் புத்தகக் கடையில் தான் கண்டதை மூச்சிறைக்க படபடத்தான். அவன் எதிர்பார்த்தபடி தாயம்மாள் மிகைத்துப் போய்விடவில்லை.

''சுருட்ட முடியும் கொஞ்சம் சிவந்த நிறமுமா உசரமா இருக்கானா பையன்?''

''அதெப்படி பார்த்தது போல கேட்கிறே?''

''ஒரு நாள் நீ வீட்டில் இல்லாதப்போ பூரணியைத்

தேடிக்கிட்டு வந்தான் சின்ன வயசுப் பையன் ஒருத்தன்... ஒண்ணுவிட்ட மாமன் மகனாம். முறைப்பையன். அவனோட பேசிச் சிரிக்கிறதிலே என்ன தப்பு? பூரணிக்கும் கல்யாணம் காட்சி மேலே ஆசை இருக்குமில்ல?''

''ஐயா பார்த்தா கோவிச்சுக்குவாரே?''

''ஐயாவுக்கு சொந்த பந்தமில்லாத பொண்ணு பூரணி. அதை அடக்கிறதுக்கு அவருக்கு என்ன ரயிட் இருக்குதுய்யா சொல்லு?''

''என்னவோ எனக்கு கவலையா இருக்கு தாயம்மா!'' என்றான் தங்கப்பன்.

அடுத்த சில நாட்களுக்குப் பின் ஒரு நாள் மாலை தங்கப்பன் எதிர்பார்த்தது நடந்து விட்டது.

நரேந்திரன் தன் காரிலிருந்து கோபாவேசமாக இறங்கினான்.

''பூரணி'' என்று வீடே கிடுகிடுக்கும் வண்ணம் கூவினான்.

''அண்ணா கூப்பிட்டீங்களா?'' என்று கேட்டபடி பின் பக்கத்து அறையிலிருந்து வந்தவளை... சினம் பொங்கப் பார்த்தான்.

''மாலை வேளையில் நீ அடிக்கடி கடைத்தெருவுக்குப் போறியா?''

''ஏன் கேட்கிறீங்க? சில சமயம் புத்தகக்கடை பக்கம் போறதுண்டு!''

''அங்கே ஒரு இளைஞனை சந்தித்து பேசுகிறியாம். கேள்விப்பட்டேன். யார் அவன்?'' அதட்டினான்.

''என் மாமன் மகன் சுந்தரம், இங்கே ஒரு அலுவலகத்திலே கணக்கரா வேலை செய்கிறான். எதிர்பாராத விதமா சந்திப்பு ஏற்பட்டது!''

''அது நீண்டு தொடர்ந்து கொண்டு போகிறதாக்கும்.

கண்டவனோடு கண்ட இடத்தில் பேசிக் கொண்டு நிற்க உனக்கு வெட்கமாயில்லை.''

''இதிலே வெட்கப்பட என்ன இருக்கு - அவர் எனக்கு முறை மாப்பிள்ளை. அவரை நான் விரும்பறேன் - அவரும் என்னை விரும்பறார்.''

''அவ்வளவு தூரம் சங்கதி முன்னேறி விட்டதா? உனக்கு ஒரு நல்ல இடத்திலே கட்டிக் கொடுத்து உன்னை சிறப்பா வாழ வைக்கணும்னு நான் நினைச்சுக் கொண்டிருக்கிறபோது நீயே மாப்பிள்ளை தேடிக்கிறியா?''

''உங்களுக்கு ஏன் சிரமம்?''

''பலே! நீயே ஒரு அன்னக்காவடியைத் தேடிக் கொண்டால் என் கவுரவம் என்ன ஆகிறது?''

''என் மனசுக்குப் பிடிச்சவரை நான் தேடிக்கிறது என் உரிமை. அதில் நீங்க தலையிடுகிறது தவறு இல்லையா அண்ணா?''

''அண்ணன்னு உறவு கொண்டாடிக் கொண்டு என்னோட தங்கிக் கொண்டு பிறகு உரிமை இல்லேன்னு எதிர்த்துப் பேசறே ரொம்ப ஒழுங்குதான் போ... உனக்கு அத்தனை சுதந்திரம் தேவைப்பட்டால் இந்த வீட்டில் தொடர்ந்து தங்குகிறது சரியில்லையே...'' கோபமாகப் பேசிவிட்டு... மாடிக்கு விரைந்து விட்டான் நரேந்திரன்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர் வேலையிலிருந்து வீடு திரும்பியவன் மாடியறையில் தன் மேஜை மேல் தன் பெயரிட்டு ஒரு காகித உறை இருப்பதைக் கண்டு ஆவலுடன் எடுத்துப் பிரித்துப்படித்தான் - அதிர்ந்து போனான்.

அன்புள்ள அண்ணா...!

நானாக உங்களைத் தேடிக் கொண்டு அடைக்கலம் வேண்டி இங்கு வந்து தங்கினேன் - இப்போது நானாக சுதந்திரம் வேண்டி வெளிக் கிளம்பிப் போகிறேன்.

என்னுடைய சில பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு தாங்கள் பரிசு அளித்த நகைகள் புடவைகள் எல்லாவற்றையும் இரும்பு பீரோவில் வைத்துவிட்டுப் போகிறேன். நானும் சுந்தரும் விரைவில் திருமணம் செய்து கொள்ள தீர்மானித்திருக்கிறோம். எளிய முறையில் திருநீர் மலையில் நடக்கப் போகும் எங்களது திருமணத்திற்கு அழைப்பிதழ் அனுப்பி வைப்பேன். தாங்கள் வந்து வாழ்த்த வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்.

அன்பு தங்கை பூரணி.

கடிதத்தை சுக்கல் சுக்கலாகக் கிழித்துப் போட்டான்.

மனைவி என்று வாய்த்தவள் சொல்லாது கொள்ளாது ஓடிப் போனாள்.

தங்கை என்று அன்பு காட்டி சீராட்டப்பட்டவள் கடிதம் மூலம் சொல்லிக் கொண்டு ஓடி விட்டாள்.

கொஞ்சம் கல்வி அறிவு வந்ததும் - சில பெண்களுக்கு துணிச்சலும் திமிரும் தானே வந்து விடுகின்றனவே...

ஆத்திரத்துடன் அறையை அளந்தான், நரேந்திரன்.

32

ஆரம்பத்தில் சில நாட்கள் கங்காவுக்கு அந்த புதிய வாழ்க்கை மிகவும் சிரமமாகத்தான் இருந்தது.

சிவகாமி மிகவும் கண்டிப்பானவளாக இருந்தாள். தான் செய்யும் உதவிக்கு இம்மியளவு குறைபடாது பதிலுக்கு உழைப்பை எதிர்பார்த்தாள்.

கங்கா வந்து குடியேறிய மறுநாளே அவளுக்கு தான் தந்து

விட்டிருந்த அறையை மேற்பார்வையிட்டாள் சிவகாமி.

அறையில் தொங்கிக் கொண்டிருந்த ஒட்டடையை அடித்து கருப்பாகத் தெரிந்த மின்விசிறியை நன்றாகத் துடைத்து அறையின் தரையை தேய்த்துக் கழுவிவிட்டு தன் சாமான்களை ஒழுங்காகப் போட்டு வைத்திருந்தாள் கங்கா...

ஜன்னலுக்கு எதிர்புறம் சுவர் ஓரமாக கட்டிலைப் போட்டு... படுக்கையை விரித்து அதன்மீது சுத்தமானதொரு விரிப்பைப் பரத்தி விட்டிருந்தாள். அறைக்குள் கிடந்த ஒடிசல் நாற்காலியை அப்புறப்படுத்தி விட்டு, தான் கொண்டு வந்த சிறு மேசையையும் நாற்காலியையும் ஒரு பக்கம் போட்டு வைத்திருந்தாள். அப்பாவின் சாய்வு நாற்காலியை ஒரு ஓரமாக மடித்து வைத்திருந்தாள். அவளது இரும்பு பீரோ இன்னொரு பக்கத்தில் சுவரை ஒட்டினார் போல வைக்கப்பட்டிருந்தது. ஜன்னல் கண்ணாடிகளை ஈரத்துணியால் துடைத்து சுத்தப்படுத்தி விட்டு... தான் கொண்டு வந்த திரைச்சீலையை மாட்டி விட்டிருந்தாள்.

அறை படுசுத்தமாகக் காணப்பட்டதை சிவகாமியால் வியக்காதிருக்க முடியவில்லை.... ஆனாலும் அதை வெளிப்படையாக ஒப்புக் கொள்ள மனமின்றி, ''பரவாயில்லை... சொன்னபடி நீ அதிகம் சாமான்களை கொண்டு வராதது நல்லாதாப்போச்சு... அந்தப்பெட்டியை கட்டில் அடியில் தள்ளி வை... இல்லாவிட்டால் பார்ப்பவர் கண்ணில் அசிங்கமாகப்படும்!'' என்று குற்றம் சொல்லிவிட்டு போனாள்.

பின்னர் கங்காவுக்குத் தன்னைப் பற்றி நினைக்கநேரம் இருக்கவில்லை. காலையிலிருந்து இரவு படுக்கும் வரை வேலை... வேலை என்று அவளது பொழுது... உழைப்பிலே கழிந்து கொண்டிருந்தது.

பூஜை அறையிலிருந்த எண்ணைப் பிசுக்கை அகற்றி... விளக்குகளைத் தேய்த்து வைத்து... படங்களின் மீது

படிந்திருந்த தூசியைத் துடைத்து ஒழுங்கு செய்யவே ஒருநாள் பொழுது ஓடிவிட்டது.

தோட்டக்காரனுடன் கூட சுற்றி வந்து காடு போல மண்டிக் கிடந்த புதர்களை வெட்டி தோட்டத்து மூலையிலிருந்த குழியில் போட்டு எரியவிட்டு.. தோட்டத்தை சுத்தம் செய்ய சில நாட்கள் சென்றன. வேலைக்காரியுடன் சுற்றி வந்து வீட்டை ஒழுங்கு செய்ய மேலும் சில நாட்கள்... என பொழுது விரைவாக விரைந்து கொண்டிருந்தது.

ஆனால் கங்கா கவலைப்படவில்லை.

புறக்கணித்து விட்ட கணவன் கண்களில் தென்படாது கவுரவம் குலையாது... ஆபத்துக்களை அணுகாது... இருக்க இடமும் - பசிக்குச் சோறும் தந்து உதவிய சிவகாமிக்கு அவள் உயர்மட்டத்து வேலைக்காரியாக உழைக்க வேண்டியது கடமை என எண்ணிக் கொண்டாள்.

சிவகாமிக்கு உள்ளூர திருப்திதான். இதற்கு முன்னர் அவள் தன் தனிமையைப் போக்க தனக்கு உதவ உறவினர் சிலரின் உதவியை நாடியிருக்கிறாள். தூரத்து உறவுப் பெண்ணான கல்லூரி மாணவி ஒருத்திக்குத் தன் வீட்டில் தங்க இடம் தந்து... சோறு போட்டு உதவிப் பார்த்தாள். தனக்கு உதவி செய்யக் கூட வைத்துக் கொண்ட அந்த பெண்ணிற்கு சிவகாமிதான் பணிவிடைகள் பல செய்ய வேண்டி வந்து விட்டது.

காலையில் அவசரமாகக் கல்லூரிக்குப் புறப்பட்டு போய் விட்டு மாலை வீட்டுக்கு வந்து... குளித்து உடைமாற்றிக் கொண்டு நீலாம்பாள் செய்து வைத்த காப்பி... டிபனை ஒரு கை பார்த்து விட்டு டைப்படிக்க கற்றுக் கொள்ள கிளம்பி விடுவாள் அவள்.

''இருட்டின பிறகு வருகிறியே...? எனக்கு கவலையாக இருக்கு...'' சிவசாமி சொல்லிப் பார்த்தாள்.

''எதுக்குக் கவலைப்பட வேணும் - நான் பச்சைக்

குழந்தையா?'' என்று பதிலுக்கு கேட்டாள் அந்த இளம் பெண்.

இரவு சாப்பிட்டதும் தட்டை எடுத்துக் கழுவாது அப்படியே போட்டுவிட்டு தன் அறையில் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு விடுவாள்.

இரவு முழுவதும் விளக்கைப் போட்டுக் கொண்டு... என்ன செய்கிறாள் என அதட்டிக் கேட்க முடியாது... திண்டாடிப் போனாள் சிவகாமி. விடுமுறை நாட்களிலாவது... கொஞ்சம் உதவியாக இருப்பாள் என எதிர்பார்த்தால்... சொல்லி வைத்தது போல கல்லூரி விடுமுறை ஆரம்பாகும் முதல் நாளே தன் பெற்றோர்களைப் பார்க்க ஊருக்குப் போய் விடுவாள்.

''என் வீடு என்ன தண்டச் சோறு தின்று உறங்கும் தர்ம சத்திரமா?'' எனப் பலமுறை வெகுண்டு போனாள் சிவகாமி.

மெல்ல அந்தப் பெண்ணை பரீட்சை முடிந்ததும் ஊருக்கு அனுப்பிவிட்டு... அப்பாடா என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

இளம் பெண்களால்தான் இந்த விதமான தொல்லை... வேலையில்லாதிருக்கும் தூரத்து அண்ணன் பேரனைக் கொண்டு வந்து துணையாகவும்... உதவவும் வைத்துக் கொண்டால்... என்று மறுபடி முயன்றபோது பட்டபாடு?

அந்தக் கல்லூரிப் பெண்ணாவது தனக்கு கொடுத்த அறையை ஓரளவு சுத்தமாக வைத்திருந்தாள்.

ஆனால் அந்த பிள்ளை! தன் அறையை ஒரே கோலமாக்கி விட்டிருந்தான். அழுக்குத் துணிகள் அறையெங்கும் இறைபட்டுக் கிடந்தன. மேஜைமேல் அடுக்கி வைக்காது புத்தகங்களை அறையின் நாலா பக்கமும் விரித்துப் போட்டிருந்தான். சுவர் முழுவதும் அவள் பார்க்க சகிக்க முடியாத அரை நிர்வாண பெண்களின் பெரிய படங்கள்... அவனைத் தேடிக் கொண்டு வந்த நண்பர்கள் கூட்டம் விட்டை கிடுகிடுக்க வைத்ததுடன்.. சிகரெட்டுப் புகையை

அடுப்பங்கரை வரை... எழுப்பிவிட்டுப் போயினர். எப்படியாவது அவனைக் கிளப்பினால் போதும் என்று தவித்துப் போனாள் சிவகாமி....

வயது காலத்தில் உதவி செய்வார்கள் என எண்ணி கூடத் தங்க வைத்துக் கொண்டவர்கள் எல்லாம் அவளைப் பாடாய் படுத்திவிட்டுப் போயிருந்ததால் அவளுக்கு கங்காவைப் பற்றியும் ஆரம்பத்தில் சந்தேகம் எழுந்தது இயல்பு.

அதனால்தான் கண்டிப்பும் கராருமாக இருந்தாள்.

அதென்ன அங்கே? ஈரத்துணிகளை அப்படியே வாளியில் போட்டு விட்டு... வேற என்னமோ செய்துகிட்டிருக்கியே -கையோட அதுகளை காய வைக்க வேணாம்?''

''என்னது... பேப்பர்களை படிச்சதும் ஒழுங்கா மடிச்சு முன்னறை மேசை மேலே வைக்க வேண்டாமா?.... இன்னுமா படிக்கிறே? சமையலறையில் எண்ணை கமறும் வாசனை போய் பார். நீலாம்பா அடுப்பை கவனிக்காம தூங்கப் போயிருப்பா!''

நாள் முழுவதும் கங்காவை ஏவி விரட்டிக் கொண்டிருந்தாள்.

ரத்னசாமி கண்டிப்பானவர்தான். ஆனால் மகள் வீட்டை நிர்வகிக்கும் பொறுப்பில் அவர் தலையிட்டுக் கொண்டதில்லை.

பிறந்த வீட்டிலிருந்த பூரண சுதந்திரம் அவளுக்கு சிவகாமியின் பங்களாவில் கிடைக்கவில்லை...

என்ன செய்வது...? குழந்தை பிறந்து கொஞ்சம் வளரும் வரை அவளுக்கு ஒரு பாதுகாப்பான இடம் தேவையாயிற்றே? பகல் முழுவதும் பொறுமையாக சிவகாமியின் அதட்டல்களைக் காதில் போட்டுக் கொள்ளாது... அவளது ஏவலுக்கு அடிபணிந்து உழைத்தாள்.

ஆனால் இரவில் தனியே கட்டிலின் மீது களைப்புடன்

சாய்ந்து கொண்டபோது அவளுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. இப்படிப்பட்டதொரு நிலை அவளுக்குத் தேவையா?... எத்தனை காலம் சிவகாமியுடன் அவள் தங்கியிருக்க இயலும்...?

வயதாகி விட்ட அந்த அம்மாளுக்கு திடீரென்று உடம்புக்கு ஏதாவது வந்து அவள் காலமாகி விட்டால்?

சொத்தைக் கட்டிக் கொள்ள கழுகு போல் பறந்தோடி வரும் அவளது உறவினர்கள் கங்காவை அங்கே தொடர்ந்து வாழ அனுமதிப்பார்களா? முதலில் விரட்டி விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பார்கள்.

பிறகு அவள் எங்கே போவாள்? என்ன செய்வாள்?...

இந்தக் கேள்விக்கு பதில் கிடைக்காது அவள் தன்னுள்ளே பலவும் எண்ணி... மருகி கண்ணீர் உகுத்தாள்.

நாட்கள் வேகமாக நழுவின.

தன் புதிய சூழ்நிலைக்கு தகுந்தபடி ஓரளவு தன்னை பழக்கப்படுத்திக் கொண்டு வாழத் தொடங்கியிருந்தாள் கங்கா.

தனக்குப் போட்டியாக வேலைக்கு வந்துவிட்டாளோ என்று ஆரம்பத்தில் எண்ணிய நீலா.... மெல்ல எஜமானியிடம் பேச்சுவாக்கில் தெரிந்து கொண்ட விவரத்திலிருந்து... மனதை மாற்றிக் கொண்டு விட்டிருந்தாள்.

மாமனார் மேலே கொண்ட மனத்தாங்கல் காரணமாக கட்டின பெண்டாட்டியை ஒதுக்கி வச்சுட்டானாமே பாவிப்பயல்!... கர்ப்பிணி பெண்-சிரத்தையோடு கவனிக்கப்பட வேண்டியவள் - சிவகாமி அம்மாளிடம் தங்கிக் கொண்டு மாடாக உழைக்கிறாளே - பாவம்... நாளடைவில் நீலாம்பாளுக்கு, அவள் மேல் பரிதாபம் ஏற்பட்டு விட்டது.

''இதோ பார் கங்கா...! நீ டாக்டர் கிட்டே போய் உடம்பை காட்டிக் கொண்டு வா... அலட்சியமாக இருக்காதே... நான் நான்கு குழந்தைகளைப் பெற்றவள்... என் அனுபவத்தைச்

சொல்றேன் கேட்டுக்கோ... ரொம்ப கடினமான வேலைகளை எங்கிட்ட விட்டுடு... ராத்திரி படுக்கப் போறதுக்கு முன்னாடி பால் காய்ச்சித் தரேன் - தினமும் ஒரு தம்ளர் சாப்பிடு, உன் காசைப் போட்டுத் தானே வாங்கப் போறே - யாருக்கும் நீ பயப்பட வேண்டாம்.. பருப்பிலே தாராளமா நெய் ஊற்றி சாப்பிடு - பட்டினி கிடக்காதே - நீ கிடக்கலை உன் வயிற்றுப் பிள்ளை பட்டினி கிடக்குதுன்னு தெரிஞ்சுக்கோ... உனக்கு பிடிச்சதை சொல்... நான் சமைச்சுப் போடறேன்.. அடுப்படியிலே உழலரதை விட்டு விட்டு சிவகாமி அம்மாளுக்கு பத்திரிகை படிச்சு காட்டிக் கொண்டு நிம்மதியா சிறிது நேரம் உட்கார்...''

என அனுசரணையாகப் பலதும் பேசினாள்.... உதவினாள் நீலாம்பாள்.

அருகிலிருந்ததொரு பெண் வைத்தியரிடம் சென்று தன் உடல் நிலையை பரிசோதனை செய்து கொண்டாள்.

அந்த வைத்தியர் கூறியபடியே ஆரம்பத்தில் வாரத்திற்கு ஒரு முறையும் பின்னர் மாதமொரு தடவையும் சென்று ஆலோசனை பெற்று வந்தாள். டாக்டர் எழுதிக் கொடுத்த மருத்துகளை வாங்கி சாப்பிட்டாள். குழந்தையின் ஆரோக்கியத்தை எண்ணி பால்... பழம் இந்தியாதிகளை வாங்கி சாப்பிட்டாள்.

அவளது பொருளாதார நிலைக்கு ஏற்றபடி தனக்கு தொடர்பு இருக்கும் ஒரு சாதாரண மருத்துவமனையில் அவளது பிரசவத்தைத் தானே நடத்திக் கொடுக்க டாக்டர் அம்மா ஒப்புக் கொண்டு... ஏற்பாடும் செய்து விட்டிருந்தாள்.

ஆரம்பத்தில் சிவகாமி சொன்னபடி - தனது சொந்த செலவுகளை அவள் தானே கவனித்துக் கொண்டாள். அவள் தந்தை விட்டுப்போன பணத்திலிருந்து வந்த வட்டிப் பணம் அவளது செலவுக்குப் போதுமானதாக இருந்தது.

குழந்தை பிறந்த பின்னர்.... அதனுடைய தேவைகளுக்கு

செலவழிக்க அந்த சிறிய தொகை போதுமானதா... என்று எண்ணி சில சமயம் அவள் தூங்க முடியாது இரவுகளைக் கவலையில் கழித்தாள்.

கொஞ்ச காலம் தனது நகைகளை விற்று செலவை சமாளிக்க முடியும்.... அதற்குப் பின்னர்?

குழந்தை வளர்ந்து... பெரியவனாகி விட்டால்... படிக்க வைத்து ஆளாக்க வேண்டுமே?

பெண் குழந்தையாக இருந்துவிட்டால்... படிப்புக் கொடுத்து தக்க வயதில் கல்யாணம் செய்து வைத்து... கல்யாணம் அப்படி லேசாக முடிந்துவிடும் காரியமில்லையே... 'கணவன் ஏன் ஒதுக்கி வைத்தாராம்?' என்று கேட்பவர்களுக்குப் பதில் சொல்லி... ஐயோ! அவள் வருங்காலத்து பொறுப்பை எப்படி தனியாக சமாளிக்கப் போகிறாள்?

தலையணை நனைய அவள் பல நாட்கள் அழுதாள், துயரத்தில் துவண்டாள்...

நாட்கள் வேகமாக விரைந்தன.

ஒரு நாள் மாலை நீலாம்பாளுக்கு அடுப்பருகில் உதவி செய்து கொண்டு நின்றவள்... அடிமுதுகிலே தாங்க முடியாத வலி ஏற்படவே.... இடுப்பைப் பற்றிக் கொண்டு... 'அம்மா!' என்று அரற்றியபடி தரைமீது உட்கார்ந்து விட்டாள்.

குழம்பைக் கிளறிக் கொண்டிருந்த நீலா திடுக்கிட்டுத் திரும்பினாள். வேகமாக அடுப்பை அணைத்துவிட்டு, அவள் அருகே வந்து ஆதரவுடன் அவள் கரத்தைப் பற்றிக் கொண்டாள்.

''பயப்படாதே கங்கா... உனக்கு பிரசவ நோவு ஆரம்பிச்சுட்டது. அம்மாகிட்டே சொல்லிட்டு உன்னை உடனே ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்துடறேன்...!'' என ஆதரவாகச் சொன்னாள்.

கொஞ்ச நேரத்தில் ஒரு டாக்சியுடன் வந்து கங்காவை ஏற்றிக் கொண்டு அந்த மருத்துவமனையில் கொண்டு சேர்த்து விட்டாள் நீலாம்பாள்.

அன்று இரவு முழுவதும் பிரசவ நோவில் அவதிப் பட்டு... மறுநாள் விடியற்காலை... வேளைபோது கங்கா... ஒரு ஆண் மகனுக்குத் தாயாகிவிட்டாள்.

மருத்துவமனை தாதி குழந்தையை சுத்தப்படுத்தி அவள் அருகே கொண்டு வந்து படுக்கையில் கிடத்தியபோது... ஆசையுடன் தன் மகனைத் தொட்டுப் பார்த்தாள் கங்கா.

அவள் கண்களில் நீர் புரண்டது.

'எதுக்கு அழறே?' அவளுடன் கூடவே இருந்த நீலாம்பாள் அதட்டினாள்.

''இருக்கிறபடி இருந்தால் இந்த பிள்ளை எத்தனை பெரிய மருத்துவமனையில் பிறந்திருப்பான். வீடு எத்தனை அமர்க்களப்பட்டிருக்கும்... இப்படி ஒரு ஏழையைப் போல?'' பேச முடியாது கண்கள் கலங்கிப் போனாள் கங்கா...

''இப்ப என்ன குறைஞ்சு போச்சு? இது ஒரு சாதாரண மருத்துவமனைதான். ஆனால் உன்னை டாக்டர் அம்மா எத்தனை பத்திரமா பார்த்துக்கிட்டாங்க தெரியுமா? நான் கூட இங்கேயே உட்கார்ந்திருந்தேன். ராஜா போல மகன் பிறந்திருக்கான் - இதைவிட என்ன வேணும், கண்ணை துடைச்சுக்கோ - இவனால் உனக்கு நல்ல காலம் பிறக்கப் போகிறது!'' நீலாம்பா... அன்புடன் கடிந்து கொண்டாள்.

உண்மையில் அவள் வாழ்க்கையில் இனி நல்ல காலம் என்று ஒன்று இருக்கிறதா... மகனது வரவால் அந்த நல்லகாலம் விரைவில் அவளை அடையப் போகிறதா... என எண்ணியவள் கட்டுப்படுத்த இயலாத துயரத்தில் தன் பச்சிளங் குழந்தையை பரிவுடன் அணைத்துக் கொண்டு... கண்ணீர் உகுத்தாள்.

33

நீலாம்பாள் காட்டிய பரிவிலும் சிவகாமி தந்த பாதுகாப்பிலும் நாட்கள் விரைந்து கொண்டிருந்தன.

நாலு பேரைக் கூட்டித் தொட்டிலிலிட்டு பெயர் சூட்ட முடியாத சூழ்நிலையில் வாழ்ந்ததினால் ஒரு நல்ல நாள் பார்த்து குழந்தையை அருகிலிருந்த விநாயகர் கோவிலுக்கு எடுத்துச் சென்று நீலாம்பாளின் ஆலோசனைப்படியே ஆனந்தன் என்று பெயரிட்டாள் கங்கா.

அவனது வருகையால் தன் வாழ்வில் கொஞ்சம் ஆனந்தம் ஏற்படாதா என்ற ஆதங்கம்.

குழந்தை ஆனந்தன் தாயின் கவனிப்பில் - நீலாம்பாளின் அன்பில் - சிவகாமியின் கருணையில் வேகமாக வளரத் தொடங்கினான். டாக்டர் அம்மாவின் யோசனைப்படியே அவனைத் தவறாது அவ்வப்போது அவர்களிடம் காட்டி தடுப்பு ஊசி இத்யாதி போட்டு மிகவும் கவனமாக... ஆரோக்கியமாக வளர்த்தாள் கங்கா. தான் சாப்பிட நேரமானாலும் கவலைப்படாது.. வேளைக்கு மகனுக்கு தேவைப்பட்ட உணவை ஊட்டி கருத்துடன் வளர்த்தாள்.

ஆனந்தன் சில மாதங்களில் கொழு கொழுவென்று... ஆரோக்கிய செழிப்பில் திண்ணென்று வளர்ந்து விட்டான். தாயின் முகம் பார்த்து சிரித்தான். மெல்ல தரையில் தவழ்ந்து கொண்டு நீந்தினான்.... பின்னர் எழுந்து உட்கார முயன்றான்.... கைகளையும், கால்களையும் ஆட்டிக் கொண்டு ஆ-ஊ என்று சப்தமிட்டு விளையாடினான்.

அவனது ஒவ்வொரு வளர்ச்சியையும்... விளையாட்டையும் பார்த்து கங்கா விரைவில் தன் துயரத்தை

மறந்து போய் மகிழ்ச்சியில் மூழ்கிப் போனாள். தொய்ந்து போன உணர்வுகள் நிமிர்ந்து நெஞ்சில் தெம்பு கூடி உற்சாகமாக வளைய வந்தாள்.

வீட்டு வேலைகளை முடித்துவிட்டு ஒழிந்த நேரத்தில் மகனை அள்ளி எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு தோட்டத்தைச் சுற்றி அவனுக்கு வேடிக்கை காட்டினாள்.

சில நாட்களில் மாலை வேளையில் அருகிலிருந்த கோவிலுக்கு மகனுடன் போய் வரத்தொடங்கினாள். இரவில் தன் நெஞ்சோடு மகனை அணைத்துக் கொண்டு தாய்மையின் சுகத்தில் நிம்மதியாக உறங்கினாள்.

முன்போல் அவள் இப்போது நரேந்திரனை எண்ணி கண்ணீர் உகுக்கவில்லை. மகனது சிரிப்பும் விளையாட்டும் அவளைப் பூரணமாக ஆக்கிரமித்துக் கொண்டு விட்டன.

தன்னைப் பற்றி மறந்தாள். தன்னை வாட்டிய நரேந்திரனது நினைவை உதறினாள். தன் பிள்ளை... அவனது வருங்காலம் என்பதையே பற்றி தீவிரமாக எண்ணிக் கொண்டு... முற்றிலும் மாறிவிட்டதொரு கங்காவாக வாழ்ந்து கொண்டிருந்தாள்.

ஆறுமாத காலம் ஓடிச் சென்று விட்டிருந்தது.

அன்று மாலை அவள் தன் மகனுடன் கோவிலுக்குக் கிளம்பினாள். குழந்தையின் முகத்தைத் துடைத்து... முடியை வாரி சீராக்கிப் பொட்டிட்டு... சுத்தமான உடை அணிவித்து இடுப்பில் தூக்கிக் கொண்டு புறப்பட்டிருந்தாள்.

மாலைப் பொழுது மஞ்சளாகிவிட்டநேரம். கோவிலுக்கு முன்னர் இரு பக்கமும் வரிசையாக உட்கார்ந்திருந்த பூ விற்போர் பரத்தி வைத்திருந்த தட்டுகளிலிருந்த மல்லிகை மலர் பந்துகளிலிருந்து மணம் முழுவதையும் அள்ளிக் கொண்டு விட்டது போன்று காற்று குப்பென்று மணமாக இதமாக.... குளுமையாக முகத்தில் மோதியதை அனுபவித்தபடி அவள் கோவிலுக்குள் நுழைந்தாள்.

சிவகாமி அம்மாளின் உத்தரவைக் கேட்டுப் பறித்துக் கொண்டு வந்த ரோஜா மலர்கள் சிலவற்றை அர்ச்சகர் நீட்டிய தட்டில் போட்டுவிட்டு... கற்பூர ஜோதியை வணங்கி காசுகள் சிலவற்றை உண்டியலில் போட்டு விட்டு பிரசாத விபூதியை தன் நெற்றியிலும் மகனது நெற்றியிலும் தீட்டிக் கொண்டு கோவில் பிரகாரத்தைச் சுற்றி வலம் வரத் தொடங்கினாள்....

பின்னால் காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பினாள்... திடுக்கிட்டுப் போனாள்.

''உங்களை நான் இங்கே சந்திப்பேன்னு நினைக்கவே இல்லை. எங்கேயோ டெல்லிக்குப் போய் விட்டதாகவல்லவா கேள்விப்பட்டேன்!'' என்ற குரல் அவளை மிரட்சி அடையச் செய்தது.

மவுனமாக தலையை நிமிர்த்திப் பார்த்தாள் கங்கா...

வழிமறிப்பவள் போல எதிரே வந்து நின்ற பூரணியின் கழுத்தில் தெரிந்த மஞ்சள் சரடு மனதிலே பலவித கற்பனைகளை எழுப்ப... நெஞ்சு படபடக்க அவளையே பார்த்துக் கொண்டு நின்றுவிட்டாள்.

மறக்க வேண்டுமென்று உதறிவிட்டிருந்த நரேந்திரன் நினைவு நீர் வீழ்ச்சியாக மனதை அலைக்கழிப்பதை உணர்ந்தாள்.

''அண்ணி! நீங்க எங்கே இருக்கீங்கன்னு தெரியாததால் என் கல்யாணத்துக்கு உங்களை அழைக்க முடியலை. எனக்கும் என் ஒன்றுவிட்ட மாமன் மகன் சுந்தரத்துக்கும் கல்யாணமாகி சில மாதங்கள் ஆகிறது. என் பாட்டனும் அவர் தந்தையும் பேச்சுவார்த்தை இல்லாத விரோதிகளாக இருந்தாங்க... அதனால்தான் என் தாத்தா போனதும் நான் அனாதையாகி நரேந்திரன் அண்ணனைத் தேடி அடைக்கலம் வேண்டினேன். அவர் அப்பா போன பின்னர்... என்னைப் பார்க்க... அண்ணன் வீட்டுக்கு வந்தார்.... சந்தித்தோம்.... பேசினோம். விரோதத்தை மறந்து... உறவைத் தொடர திட்டமிட்டோம்... கல்யாணம் செய்து கொண்டோம்!''

எத்தனைதான் பாடுபட்டும்... பூரணியைக் கண்டதும் மறந்துபோன நினைவு ஏன் இப்படி அவளைத் தடுமாறச் செய்கிறது?

நரேந்திரனைப் போல மனதைப் பாறாங்கல்லாக மாற்றிக் கொண்டு வாழ முடியாது. ஏன் இப்படி கங்கா உணர்ச்சி வசமாகிப் போகிறாள்... உதட்டைக் கடித்துக் கொண்டாள் கங்கா... ''அப்படியா?'' என்றாள் மெல்லிய குரலில்.

''என் மருமகனை இப்படிக் கொடுங்க.... அண்ணி! கண்களும் மூக்கும்.... முகச்சாயலும் அப்படியே அப்பாவைப் போல இருக்கு. ஆனால் அம்மாவின் அமைதியான குணம் படைத்தவனாக வளரவேண்டும் என்கிறது என் ஆசை. பெயர் என்ன வச்சிருக்கீங்க.''

''ஆனந்தன்னு கூப்பிடறோம்!''

''அழகான பேர்... கேட்கும்போதே மகிழ்ச்சி பொங்கறதே... இப்படி வாடா கண்ணா?'' என்று கொஞ்சியபடி குழந்தையை வாங்கி அணைத்துக் கொண்டாள் பூரணி. தன் தோள்பையைத் துளாவி இரண்டு ரூபாய் நாணயங்களை எடுத்து ஆனந்தனின் இரு உள்ளங்கைகளிலும் வைத்துத் திணித்தாள்.

''என்னத்துக்கு இதெல்லாம்...?'' என்று கங்கா இடைமறித்தபோது பூரணி புன்னகைத்தாள்.

''இந்த அத்தையாலே இப்போ இதுதான் பரிசாகத் தரமுடியும். உங்கப்பா பார்த்து முடிவெடுக்க நினைச்ச வரனைக்கட்டிக் கொண்டிருந்தால்... உனக்குப் பட்டுச் சட்டை, தங்க சங்கிலி, மோதிரம், வைரம் பதித்த டாலர் என்று பரிசுகள் தந்திருப்பேன்... இப்போ அன்பான முத்தங்கள்தான் தரமுடியும்!'' என்று அவனது பட்டுக் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டாள்.

புதியவளைக் கண்டு மிரண்டு குழந்தை சிணுங்கிக்

கொண்டு தாயிடம் வரக் கைகளை நீட்டினான்.... கண்களில் நீர் பளபளக்க.. உதட்டைச் சுழித்துக் கொண்டு அழ பயமுறுத்திய மகனை திரும்ப அள்ளிக் கொண்டு மார்புடன் அணைத்து சமாதானப் படுத்தினாள் கங்கா..

''அண்ணி! நானும் என் கணவரும் இந்தாதிரிப்பேட்டையில் வசிக்கிறோம். முகவரி தந்து விட்டுப் போறேன். கட்டாயம் நீங்க ஒருநாள் குழந்தையை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து விருந்து சாப்பிடணும்!''

வறட்சியாகச் சிரித்தாள் கங்கா...

''யார் கண்களிலும் படாமல் இருக்கத்தானே இங்கே வந்து அப்பாவின் நண்பர் மனைவியின் வீட்டில் தஞ்சமடைந்திருக்கேன் - நீ அழைச்சதுக்கு நன்றி. நான் வெளியே எங்கேயும் வரமுடியாது. மன்னிக்கணும்!''

''உங்களுக்கு மறுப்பு இல்லேன்னா நான் ஒண்ணு செய்யலாமா அண்ணி! என் கணவர் அலுவலகத்து லீவு நாளிலே நானும் அவரும் வந்து உங்களை இங்கே பார்த்துட்டு போகிறோம் சரிதானே?''

''நான் இங்கே சிவகாமி அம்மா ஆதரவிலே தங்கியிருக்கேன். என்னைப் பார்க்க உறவினர்கள், நண்பர்கள் யாரும் அடிக்கடி வரக்கூடாதுன்னு ஆரம்பத்திலேயே அவங்க சொல்லியிருக்காங்க.''

''நான் இங்கே எப்படி வந்தேன்னு கேட்கலையே அண்ணி! என் கணவரோட அலுவலகத்திலே வேலைபார்க்கிற ஒரு நண்பர் இந்த நெடுஞ்சாலையிலே தெரிகிற அந்த டீக்கடை பின்னால் ஒரு வீட்டில் அவுட் அவுசிலே குடியிருக்கார். அவங்க அம்மா உடம்புக்கு முடியாம படுத்திருக்காங்க... அவங்களைப் பார்த்திட்டு போக வந்தேன். எதிர்பாராத விதமா உங்களை சந்திச்சேன்'' பற்கள் பளிச்சிட மென்மையாக சிரித்தாள் பூரணி.

முதல் சந்திப்பிலேயே அவளது கவர்ச்சியான

தோற்றத்தைக் கண்டு... அதிசயித்தவள் கங்கா... திருமணம் அவளது கவர்ச்சிக்குக் கூடுதலான மெருகைத் தந்துவிட்டிருந்தது. பூரணி மிக்க அழகும் செழுமையுமாகத்தான் தென்பட்டாள்.

பிடித்தமானதொரு கணவனுடன் இனிமையாக வாழ்கிறாள் என்பதை அவளது பிரகாசமான முகம் சொல்லியது.

''அண்ணி! நீங்க வெளியூர் எதுக்கும் போய் விடாம பட்டணத்திலேயே தங்கிவிட்டது நல்லதாப் போச்சு!'' என்றாள்.

கங்கா கலவரத்துடன் விழித்தாள்.

''ஆரம்பத்திலே அண்ணனுக்கு என் மேலே கோபம்... சுந்தரம் பெரிய இடத்துப்பிள்ளை இல்லைன்னு கொஞ்ச வருத்தம். நான் எனக்குப் பிடித்தவரைத் தேடிக் கொண்டு விட்டேன் என்கிற மனத்தாங்கல். அதனால் எங்க கல்யாணத்துக்கு அண்ணன் வரலை. கொஞ்ச நாள் பொறுத்து நான் என் கணவரைக் கூட்டிக் கொண்டு அண்ணன் பங்களாவுக்கு போய், மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு... கண்ணீருடன் அவர் காலில் விழுந்து கும்பிட்டேன். அண்ணன் மனம் இளகிப் போய் விட்டார்.

''பைத்தியம் எழுந்திரு! எதுக்கு அழுகிறே'' என்று என்னை சமாதானப்படுத்தினார். எங்களுக்கு கல்யாணப் பரிசு கொடுத்து.. விருந்து வச்சு ரொம்பவே கவுரவிச்சார்.''

கங்கா மவுனமாக நின்றாள்.

''அண்ணன் முன்போல இல்லை. ரொம்பவே மாறி விட்டிருக்கார். இளைச்சு கருத்துப் போயிருக்கிறார். முன்னைப் போலக் கோப'ம் கொண்டு வேலையாட்களிடம் கத்தறதில்லையாம்... அவரைப் பார்த்தப்போ எனக்கு ரொம்பப் பரிதாபமா இருந்தது. தாயம்மாளும், தங்கப்பனும் கூட

இருக்கிறாங்கதான்... ஆனால் அவங்க வீட்டு வேலைக்காரங்க... துணைக்கு வீட்டில் வேண்டியவங்க இருந்து கவனிக்கிறது வேறே இல்லையா?''

கங்கா பதிலளிக்காது அவளை ஊன்றிப் பார்த்தாள்.

''நான் இருந்தப்போ அண்ணனுக்கு வேளா வேளைக்கு சாப்பாடு போட்டு... கவனிச்சுக் கொண்டேன். இப்போ தாயம்மா எல்லாத்தையும் மேசை மேலே வச்சுட்டு.. உள்ளே போய் விடறாங்க... அவங்களுக்கு அண்ணனைக் கண்டா எசமான்னு பயம். உங்களை எப்படியாவது அண்ணன் கிட்டே கொண்டு சேர்த்து வைக்கணும்னு என் மனம் ரொம்ப நாளா ஆசைப்பட்டுக்கிட்டிருந்தது. எங்கே போய் தேடுவோம்னு தவிச்சேன். இங்கே நீங்க அடி நிலத்திலே இருக்கீங்க.... ஆனால் உங்க மனசிலே அண்ணனை வெகு தொலைவில் வச்சுட்டீங்க... குழந்தை ஆனந்தனோட வருங்காலத்தை நினைச்சுப்பாருங்க.... அதனாலே ஒரு நாள் குறிப்பிடுங்கோ... நான் உங்களை உங்க வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போறேன்... குழந்தையைப் பார்த்துட்டா அண்ணன் விடவே மாட்டார்.''

இமைகளைச் சுட்ட கண்ணீரை கங்கா விழுங்கிக் கொண்டாள். நெஞ்சிற்குள், குமுறிய உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''ஆனந்தன் உன் அண்ணனின் மகனாக இருந்தால் தானே இந்த பேச்சு?'' வெறுப்பையும் கசப்பையும் உமிழ்ந்தாள்.

''அண்ணி! நடந்ததெல்லாம் எனக்குத் தெரியும். உங்க அப்பாகிட்டே ஏற்பட்ட மனத்தாங்கலில் உங்ககிட்டே வெறுப்பா அண்ணன் நடந்து கொணடுவிட்டார். அது தவறுன்னு நான் விவாதித்ததாலே அண்ணனுக்கு என்மேலே கடுப்கோபம் ஏற்பட்டது. ஆனால் என்ன? இப்போ என்கிட்டே முன்போல அன்பாத்தான் நடந்துக்கிறார். காலம் எல்லாத்தையும் மறக்க வச்சுடும். அண்ணி! நீங்க அண்ணனோட சேர்ந்து சந்தோசமா வாழணும்னு நான் ஆசைப்படறேன்.''

''வேண்டாம்.... பிறக்கும் முன்பே அவமானப்படுத்தப்பட்ட இந்த பச்சைக் குழந்தை அவரது வெறுப்புக்கு மறுபடியும் ஆளாக வேண்டாம். என் மனம் ரொம்பவே புண்ணாகிப் போயிட்டது. அந்த ரணத்தைக் காலம்கூட மாத்தமுடியாது... நீயும் உன் கணவரும் நல்லா இருக்கணும்னு நான் வாழ்த்தறேன்...''

''அண்ணி! நீங்க ரொம்ப பிடிவாதமா இருக்கிறீங்க!''

''இந்த நிலைக்கு என்னைக் கொண்டு வந்தவர் உன் அண்ணன். என் மேலே நீ அலுத்துக்கிறதுலே பயன் இல்லே...''

''இந்தாங்க என் முகவரி... எப்பவாவது உங்க மனம்மாறினால் எனக்கு ஒரு கடிதம் போடுங்க போதும்!'' என்றபடி தன் தோள்பையைத் திறந்து ஒரு சிறு நோட்டுப் புத்தகத்தைத் திறந்து அதில் பரபரப்புடன் தன் விலாசத்தை எழுதி அந்தப் பக்கத்தைக் கிழித்துக் கங்காவிடம் கொடுத்தாள்.

அதைப் பெற்றுக் கொண்ட கங்கா புன்முறுவலித்து விட்டு அங்கிருந்து நகரத் திரும்பியபோது... சட்டென்று அருகில் வந்தாள் பூரணி.

''உங்க முகவரியும் எனக்குத் தேவை. நீங்க இருக்கிற இடத்துக்கு நான் வந்து தொந்திரவு தர மாட்டேன். தொலைபேசி எண் கொடுத்தால்கூட போதும்.. எப்பவாவது உங்களைக் கூப்பிட்டுப் பேசி மன ஆறுதலடைவேன்!'' மிகவும் கெஞ்சினாள்.

''கொடுக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை... நீ உன் அண்ணனுக்கு எக்காரணம் கொண்டும் நான் இருக்குமிடத்தைத் தெரிவிக்கக் கூடாது என்று உறுதியளித்தால் தருகிறேன்!''

''அப்படியே செய்கிறேன் அண்ணி... உங்களை இங்கே சந்தித்தது பற்றி என் கணவருக்குக்கூட தெரிவிக்க மாட்டேன். கோவிலில் சுவாமி சந்நதியருகே நான் கொடுக்கும் வாக்கு இது. அதை மீறமாட்டேன் என்று நம்பினால் கொடுங்கள்...

இல்லாட்டா... வேண்டாம்'' தழுதழுத்தாள் பூரணி.

ஒரு கணம் யோசித்துவிட்டு... கங்கா தான் தங்கியிருக்கும் இடத்தின் முகவரியையும், தொலைபேசி எண்களையும் தந்தாள்.

வீடு திரும்பியவளுக்கு அதற்குப் பின்னர் வேலையே ஓடவில்லை. எத்தனை கட்டுப்படுத்திய போதிலும்.... நரேந்திரன் அவளது நினைவை அலைக்கழித்தான்...

ஒரு நிலையிலும் மனம் அடங்காது தத்தளிக்க... துயரம் நெஞ்சை அடைக்க... இவு முழுதும் உறங்காது மகனை இறுக்கி அணைத்தபடி... படுக்கையிலே கிடந்தாள் கங்கா...

34

ஓராண்டு காலம் ஓடிச்சென்று விட்டது.

வேலைக்காரி நீலம்மாளுடன் தனிமையில் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்த சிவகாமிக்கு தங்கள் வீட்டில் ஒரு குழந்தை வளர்வது பற்றி ஆரம்பத்தில் ஆயிரம் கவலைகள்.

குழந்தையின் அழுகை அவளது தூக்கத்தை கெடுத்து விடுமோ என்று அஞ்சினாள். தவழ்ந்து கொண்டு வரும் குழந்தை வீட்டில் பல இடங்களை அசுத்தப் படுத்தி விடலாம் என பயந்தாள்.

முன்னறை அலமாரிகளில் காட்சிப் பொருளாக வைத்திருக்கும் சாமான்களைப் பிடித்து இழுத்து உடைத்துப் போட்டுவிட்டால்... என்றதொரு மிரட்சியும் ஏற்பட்டது.

தனக்கு பெரிய துணையாக, வீட்டை சிறப்பாக மேற்பார்வையிட்டு எல்லாவற்றையும் அக்கறையுடன் கவனித்துக் கொண்ட கங்காவை இழந்துவிட மனமிருக்க வில்லை.

ஆனால் அவள் எதிர்பார்த்தது எதுவும் நடந்து விட வில்லை.

தன்னாலும் தன் மகனாலும் சிவகாமி அம்மாளுக்குத் துளியும் சிரமம் ஏற்படக் கூடாது என்று கங்கா மிக்க பொறுப்பு உணர்ச்சியுடன் நடந்து கொண்டாள். வீட்டில் ஒரு சிறு குழந்தை வளர்ந்து கொண்டிருக்கிறான் என்ற சந்தடியே தெரியா வண்ணம் - சிவகாமி தனக்களித்த பின் பக்கத்து அறையைக் குழந்தை தாண்டாத வண்ணம் கவனித்துக் கொண்டாள்.

குழந்தையின் துணிகளைத் துவைத்து அவள் கண்ணில் படாதபடி தோட்டத்து பின்புறத்தில் காய வைத்து எடுத்து வைத்தாள். குழந்தை ஏதோ காரணம் பற்றி கையில் பிடிபடாது அழுதுவிட்டால்... சிவகாமி காதுகளில் படாத தொலைவில் பின் பக்கம் எடுத்துச் சென்று சமாதானப்படுத்த முயன்றாள்.

அவளைப் பொறுத்தவரை - மிகவும் சாமர்த்தியமாகத்தான் நடந்து கொண்டாள். நாளடைவில் சிவகாமிக்கு அவளையுமறியாது ஆனந்தன் மேல் ஒரு சிறு பிடிப்பு ஏற்பட்டது உண்மை.

வராந்தாவிலே தவழ்ந்து கொண்டிருந்த குழந்தையின் கள்ளங்கபடமற்ற முகத்தைக் கண்டு மனம் கனிந்து போனாள்.

அரிசிப் பற்கள் தெரிய முகத்தை ஆட்டிக் கொண்டு —கைகளைக் கொட்டி அவளைப் பார்த்து சிரித்து வேடிக்கை செய்ததை ரசித்து மகிழ்ந்தாள்.

''அத்தை!'' என்று தன்னைப் பார்த்துக் கொஞ்சிய குழந்தையின் மழலையைக் கேட்டு மனம் கரைந்து போனாள்.

''கங்கா! எங்கே ஆனந்தன்?.. இப்படி அவனைக் கொண்டு வா... அவனைத் தனியே அறையில் விட்டு வச்சுட்டு நீ வாசப்பக்கம் வந்து வேலையை கவனிக்கிறது தப்பு'' என்று கூறி ஆனந்தனை வாங்கித் தன்மடிமீது வைத்துக் கொள்ளும் அளவு

அவள் வெகுவாக மாறி விட்டிருந்தாள். அந்தச் சிறு குழந்தையின் வரவால் வெறுமையாகிவிட்டிருந்த தன் வாழ்க்கையில் கொஞ்சம் ஒளி வீசத் தொடங்கியிருந்ததை சிவகாமி நன்றாகவே புரிந்து கொண்டு விட்டிருந்தாள்.

''நமக்கென்ன? அவள் குழந்தை அவள் பாடு' என்று அசட்டையாக இராது ஆனந்தனுக்கு சோறு ஊட்டனியா? ஆனந்தன் காலையிலே ஏன் அப்படி அழுதான். உடம்புக்கு ஒண்ணுமில்லையே?'' என்று பரிந்து வினவத் தொடங்கி விட்டிருந்தாள்.

மறுநாள் ஆனந்தனின் பிறந்தநாள்.

தன் கையிருப்புக்குத் தக்கபடி குழந்தைக்கு புத்தாடை வாங்கி வைத்திருந்தாள் கங்கா. சிவகாமி அம்மாளிடம் சொல்லிவிட்டு பிறந்தநாள் அன்று காலை குழந்தையை எடுத்துக் கொண்டு வினாயகர் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்துவிட்டு வர விரும்பினாள்.

''நாளைக்கு ஆனந்தனுடைய பிறந்தநாளா? அட ஒரு வருசம் ஓடிப் போனதே தெரியவில்லையே... இந்தா குழந்தைக்கு என் சார்பிலே விளையாட ஒரு பந்து வாங்கித் தந்துடு...!'' வேலைக்காரி நீலாம்பாள் மகிழ்ச்சியுடன் தன் புடவைத் தலைப்பில் முடிந்து கொண்டிருந்த சில்லரையில் கொஞ்சம் எடுத்துக் கொடுத்தாள்.

குழந்தையின் கன்னங்களைத் தொட்டு தன் கன்னத்தோடு திருஷ்டி சொடுக்கினாள்.

''என்ன ஆனந்தனுக்கு ஒரு வயசாகப் போகிறதா? நேத்திக்குத்தான் பிறந்தான் போல இருக்கு... காலம் எப்படி ஓடுது பார்த்தியா?'' புன்னகைத்தபடி சிவகாமி எழுந்து உள்ளே சென்று பீரோவைத் திறந்தாள்.

''இந்தா இந்த அத்தையோட பரிசுன்னு நூறு ரூபாய்க்கு நல்லதா ஒரு சட்டை பாண்ட் எடுத்துப்போடு. அத்தோடு இந்த

இருபத்தஞ்சு ரூபாவுக்கு ஒரு கேக்கு வாங்கிட்டு வா...!'' பணத்தை அவளிடம் நீட்டினாள். கங்காவுக்கு வாங்கிக் கொள்ள வெட்கமாக இருந்தது.

''நகரத்தில் மிகவும் பிரபலமானதொரு தொழிலதிபராக வாழ்கிறான் நரேந்திரன் - அவன் மகனது பிறந்த நாளைக் கொண்டாட இப்படிப் பிச்சை எடுத்தா செய்ய வேண்டும்...? என்ன ஒரு துர்பாக்கியம்?...'' கண்களில் பனித்தக் கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு புன்னகைத்தாள்.

''நன்றி அம்மா!... நாளைக் காலை வீட்டு வேலைகளை சீக்கிரம் முடிச்சுட்டு... கோவிலுக்குப் போய் வர விரும்பறேன்...!''

''நம்ப சாலையிலேயே புதுசா இப்போ ஒரு பஜார் கட்டியிருக்காங்களே அதிலேயே நீ சட்டையையும் கேக்கையும் வாங்கிட்டு வந்துடு... டவுனுக்குப் போய் அலைய வேண்டாம்!''

''சட்டை வாங்கிட்டு வரேன்... ஆனால் கேக் என்னத்துக்கு...?'' தாழ்வான குரலில் கேட்டாள் கங்கா...

''காலை சமையலுடன் கொஞ்சம் பாயசமும் வடையும் செய்ய நீலாம்மாளுக்கு சொல்லிடறேன்.... மாலை குழந்தைக்கு புது சட்டை போட்டு... கேக்கை வெட்டச் செய்து நமக்குள்ளே ஒரு சின்ன பார்ட்டி... அவன் மட்டும் அப்பாவோட இருந்திருந்தால் அவன் பிறந்தநாள் எத்தனை அமர்க்களப்படும். நம்வரை கொஞ்சம் ஏதாவது வேடிக்கையா செய்யாமலிருக்க முடியுமா சொல்லு?'' சிரித்தாள் சிவகாமி...

நரேந்திரனின் பங்களாவின் பெரிய வரவேற்பறையில் வண்ணத் தோரணங்கள் தொங்க... அண்டை அயலார் வீட்டுக் குழந்தைகளின் கூட்டம் நிரம்பி வழிய... பெரிய மேஜை மேல் பெரியதொரு கேக்கின் முன்னால் தன் குழந்தை தந்தையின் அணைப்பிலே நிற்பது போன்றதொரு கற்பனையில் அவள் ஒரு கணம்... தன்னை மறந்து போனாள்.

திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள் நெஞ்சை அழுத்திய கற்பனையை உதறிவிட்டு...

''மிக்க நன்றி அம்மா... உங்க விருப்பப்படியே செய்துடுவோம்!'' என்று கூறிவிட்டு அப்பால் நகர்ந்தாள்.

மறுநாள் காலை அவளுக்கு நிற்க நேரம் இருக்கவில்லை. விடியுமுன்பே எழுந்து தலை முழுகி விட்டு மாற்றுடை அணிந்து தோட்டத்து மலர்களைக் கொஞ்சம் பறித்து வந்து பூஜை அறையை சுத்தப்படுத்தி படங்களுக்கு மலர்களைச் சூட்டி விளக்கேற்றி வணங்கி விட்டு வெளியே வந்தாள். சிறிது நேரம் நீலாம்பாளுக்கு சமையலறையில் கைகொடுத்து விட்டு... சிவகாமிக்கு காப்பி பலகாரம் தந்து உதவினாள்.

பின்னர் தன் மகனுக்கு ஸ்நானம் செய்வித்து கொஞ்சம் காலை ஆகாரம் கொடுத்துவிட்டு... குழந்தையைத் தூக்கிக் கொண்டு கையில் ஒரு பிளாஸ்டிக் கூடையுடன் கோவிலுக்குக் கிளம்பினாள்.

அர்ச்சனையை முடித்துக் கொண்டு தேங்காய், பழ, விபூதி பிரசாதங்களை கூடையில் எடுத்துக் கொண்டு மெல்ல பொடி நடையாக சாலையில் புதிதாகத் துவக்கப்பட்டிருக்கும் யோகாவதி பஜாரை நோக்கி நடந்தாள்.

நெடுஞ்சாலையின் உள்ளே ஓடிய ஒரு பிரதான தெருவின் முனையிலிருந்த பழைய பங்களா இடிக்கப்பட்டு அமர்க்களமானதொரு பெரிய கட்டடம் உருவாகியிருந்தது. சதுர வடிவிலே எதிர் எதிராகக் கடைகள் கட்டப்பட்டிருந்தன. ஒரு முறை சுற்றிவர கொஞ்சம் நேரம் பிடித்தது. அத்தனை ஒரு பெரிய பஜார்.

இதுதான் முதல் தடவையாக அவள் அங்கே செல்வது. காலை வேலை கடைகள் திறக்கப்பட்டு கொஞ்ச நேரம் சென்றிருந்தது. பெருத்த கூட்டம் இருக்கவில்லை.

சிவகாமி அம்மாள் சொல்படி நூறு ரூபாய்க்குள் அவள்

ரெடிமேட் கடையொன்றில் தன் மகனுக்கு அழகானதொரு உடுப்பு வாங்கினாள். அருகிலிருந்த பேக்கிரிக்குள் சென்று ஒரு கேக்கை வாங்கி பத்திரமாக பிளாஸ்டிக் கூடைக்குள் வைத்துக் கொண்டாள்.

ஊசியிலிருந்து ஊறுகாய்வரை கிடைத்த அந்த பஜாரை சுற்றி வந்தாள். ஒரு பொம்மைக் கடையில் மகனுக்கு நீலாம்மாளின் பரிசாக ஒரு சிறு பந்தை வாங்கி அவன் கையில் கொடுத்தாள். ஆனந்தன் அம்மாவின் இடுப்பில் இருப்புக் கொள்ளாது நெளிந்தான்.

அவனைக் கீழே இறக்கி விட்டுவிட்டு கடைக்காரருக்கு பணம் கொடுக்க பர்சைத் திறந்து பணம் எடுத்து கொடுத்து விட்டு சில்லரையை வாங்கிப் போட்டுக் கொண்டு திரும்பியவள் திடுக்கிட்டுப் போனாள்.

கால் முளைத்துவிட்ட ஆனந்தன் எங்கேயோ மாயமாகி விட்டிருந்தான். கண்களுக்கு எட்டியவரை... அந்தப் பகுதியில் குழந்தையைக் காணவில்லை. திக்கென்ற உணர்வில் உடம்பு முழுதும் வியர்த்துக் கொட்ட உள்ளம் பதைபதைக்க, நெஞ்சு கிலியில் உலர்ந்து போக அவள் பிளாஸ்டிக் கூடையைத் தூக்கிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக அந்த பஜாரின் நான்கு பக்கமும் தேடினாள். குழந்தையைக் காணவில்லை.

ஒவ்வொரு கடையாக எட்டிப் பார்த்தாள்... ''இங்கே ஒரு குழந்தை ஓடி வந்தானா?'' என்று விசாரித்தும் பார்த்தாள்.

ஆனந்தனை அங்கு எங்குமே காணவில்லை.

'இதென்ன சோதனை கடவுளே! எனக்கிருந்த சொத்து எல்லாம் ஆனந்தன் ஒருவன்தானே... அவனையும் பறிச்சுக் கொண்டு விட்டாயா?' அழ முடியாது துயரம் நெஞ்சை இறுக்க.... முன்னாலிருந்த பெரிய வராந்தாவை வேகமாகக் கடந்து படியிறங்கி கார்கள் நிறுத்தப்பட்டிருந்த இடத்தை நோக்கி விரைந்தாள். அதைத் தாண்டினால் நெடுஞ்சாலை... போக்குவரத்து நெருக்கமாக இருக்கும் காலை நேரம்...

அதற்கு மேல் கற்பனையில் கூட அவளால் அந்த பயங்கரத்தைச் சிந்திக்க இயலவில்லை.

அவனுக்கு ஒரு ஆபத்து நேர்ந்து விட்டால்... அதன் பின்னர் கங்காவால் உயிர் வாழ முடியுமா?

''ஐயோ!... நான் என்ன செய்வேன்... வினாயகப் பெருமானே... உன்னை இப்பத்தானே வேண்டிக் கொண்டு கடைப் பக்கம் வந்தேன்... இப்படி ஒரு வேடிக்கையை நீ செய்யணுமா.... பகவானே!'' பலவாறு பிரார்த்தித்துக் கொண்டு வரிசையாகக் கார்கள் நின்ற பகுதியில் இங்குமங்கும் இடுக்குகளில் ஓடிக்கொண்டிருந்தாள்.

விடியற்காலையிலேயே வீட்டை விட்டுப் புறப்பட்டிருந்தான் நரேந்திரன். பூந்தமல்லி நெடுஞ்சாலையிலிருந்ததொரு பழைய பங்களாவை விலைக்கு வாங்க வேண்டுமென்ற திட்டம். ஒரு ஏக்கர் தோட்டத்திற்குள் இருந்த அந்த பங்களாவை வாங்கி இடித்து ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டல் கட்ட வேண்டுமென்பது அவன் ஆசை.

சமீபகாலத்தில் அவனது உற்சாகம் ஒடுங்கி விட்டிருந்தது. கங்கா தன்னை அசட்டை செய்துவிட்டு மறைந்து போனாள் என்ற சங்கதி அவனது அகங்காரத்திற்கு ஒரு பெருத்த அடியாக அமைந்து விட்டிருந்தது.

காணாமல் போய்விட்ட விவரத்தைப் பத்திரிகையில் போட்டோ தொலைக் காட்சியில் தெரிவிக்க வைத்தோ அல்லது போலீசுக்குத் தெரியப்படுத்தியோ அவன் கண்டு பிடித்திருக்கலாம். அது ஒரு கவுரவப் பிரச்சனையாக இருந்தது. தன் அந்தரங்க செயலாளர் மூலம் மெல்லத் தேடிப் பார்த்து தானே கண்டு பிடிக்க முயன்று தோல்வியடைந்து விட்டிருந்தான்.

ஒரு சமயம் அவள் வெளியூர் எங்கேயாவது சென்று தற்கொலை செய்து கொண்டு விட்டாளோ என்றவாறு

பலவிதமான கலவரங்கள் அவனை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன.

'எதைத் தின்றால் பித்தம் அடங்கும்' என்ற நிலையில் தன் மனத்தை வருத்திய கவலைகளை மறக்க அவன் தன் தொழிலில் தீவிரமாக இறங்கிவிட்டிருந்தான். நாள் முழுவதும் அலைந்து திரிந்து கொண்டிருந்தான். ஓட்டலுக்கு அடுத்தபடி ஓட்டினாற்போல் ஒரு ஷாப்பிங் சென்டரையும் கட்ட தீர்மானித்தவனாக... புதிதாக உருவாகியிருந்த யோகாவதி பஜாரைப் பார்வையிட காரை அந்தப் பக்கம் திருப்ப முயன்றபோது பெருத்த அதிர்ச்சி.

ஒரு நிமிடம் மட்டும் அவன் எச்சரிப்புடன் இல்லாதிருந்தால் ஒரு வண்ணப் பந்தை இரண்டு கைகளிலும் கெட்டியாகப் பற்றிக் கொண்டு மகிழ்ச்சியுடன் அரிசி பற்களைக் காட்டி சிரித்தபடி சுதந்திரமாக தத்திக் கொண்டு வந்த அந்த சிறு குழந்தை மீது மோதி... பலத்த காயத்தை உண்டாக்கியிருப்பான்...

காரை பட்டென்று நிறுத்திவிட்டு முன் சக்கரத்தடியே நின்று கொண்டிருந்த அந்த குழந்தையை வாரி நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்... அவனது மார்பு தீவிரமாக அடித்துக் கொண்டது.

அவனையுமறியாது எழுந்த பரிவில்... அந்தக் குழந்தையின் குண்டு கன்னத்தில் அழுத்தி முத்தமிட்டான்.

எங்கேயோ பார்த்தது போன்று தெரிந்த அந்த குழந்தையை வியப்புடன் ஊன்றிக் கவனித்தான்.

''என்ன சார்?... யாரு இப்படி குழந்தையைத் தனியா தெருவில் ஓடவிட்டிருக்கிறது...? இந்த பொம்பளைகளுக்கே புத்தி கிடையாது சார்... கடைக்குள்ளே பூத்துட்டா... குழந்தை... புருஷன்... வீடு எல்லா நினைப்புகளும் மறந்து போயிடும்!''

''நல்லவேளை சார்... நீங்க பிரேக்கை போட்டிருக் காட்டா... இத்தனை நேரம் சட்டினியாயிருக்கும்...!''

''அழகான குழந்தை. இதுக்கு விபத்து ஏற்பட்டிருந்தா ஆயுசு வரை மறக்க முடியாத கொடுமை சார்!''

பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டு அவனை சூழ்ந்து கொண்டனர்.

''இதனுடைய அம்மா... யார்னு பார்த்துக் கொடுத்துட்டு வரேன் நகருங்கோ!'' என்றபடி குழந்தையைத் தன் காருக்குள் வைத்து வண்டியை கார் நிறுத்தத்திற்கு ஓட்டி... நிற்க வைத்துவிட்டு குழந்தையுடன் வண்டியை விட்டு இறங்கி நின்றான்.

படகு போன்றதொரு கார் அருகே... நிற்கும் உயரமான மனிதனின் முதுகு பக்கத்திலிருந்து எட்டிப் பார்த்த தன் மகனைக் கண்டு ஆவலுடன் ஓடினாள் கங்கா...

''ஏம்மா... இந்த குழந்தை?'' என்று ஆரம்பித்தவன் வாயில் வார்த்தைகள் உறைந்து போயின.

கணவனின் அணைப்பிலிருந்த தன் மகனை வாங்கக் கை நீட்டிய கங்கா... அதிர்ச்சியில்... செயலற்று நின்று விட்டாள்.

நேரம் நகராது அவர்களுடன் நின்று விட்டது போன்றதொரு பிரமிப்பில் இருவரும் ஒருவரையொருவர் வியப்புடன் பார்த்தபடி நின்றனர்.

35

திடுக்கிட்டு விழிப்புற்றாள் கங்கா.

அவளைக் கண்டதும் நரேந்திரனின் அணைப்பிலிருந்து விடுபட முரண்டு கொண்டு குழந்தை ஆனந்தன் அழ ஆரம்பித்து விட்டான்.

''ஏம்மா! குழந்தையை வாங்கி சமாதானப்படுத்தாம

அப்படியே நிக்கிறியே சித்த ஏமாந்திருந்தா அது கதி என்ன வாயிருக்கும். நல்ல பொண்ணு நீ...!'' அருகில் நின்ற கூட்டத்திலிருந்து ஒரு பெரியவர் அதட்டினார்.

குழந்தையைக் கணவனிடமிருந்து பெற்றுக் கொள்ள கைகளை நீட்டியபோது ஏதேச்சையாக நரேந்திரனது கை விரல்கள் அவள் கரங்களின் மீது பட்டுவிட்டதும் தள்ளி நகர்ந்தாள் கங்கா...

காதலித்தவனை மணந்து கொண்டு அவன் கரத்தைப் பற்றிக் கொண்டு அக்னியை வலம் வந்தபோது இன்ப உணர்வை வாரித் தந்த அந்தக் கரங்கள் இப்போது... நெருப்பாக அவள் உடலைச் சுடுவதை உணர்ந்தாள்.

தாயும் சேயும் சேர்ந்துவிட்டனர் என்பதை அறிந்ததும் கும்பல் வேகமாக நாலாபுறமும் நகர்ந்து மறைந்து போனது.

அருகில் யாரும் இருக்கவில்லை என்பதைக் கண்ட நரேந்திரன் வேகமாக அவளை நெருங்கி, அவளது இடையிலிருந்த குழந்தை கன்னத்தில் வழிந்து கொண்டிருந்த கண்ணீரைத் தன் கைக்குட்டையால் துடைத்தான்.

குழந்தை சிணுங்கிக் கொண்டு தன் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டான்.

''நல்லவேளை நான் எச்சரிக்கையாக இருந்தேன். இல்லாவிட்டால் என் மகனை நானே காயப் படுத்தியிருப்பேன்!'' என்றான் மெல்லிய குரலில்.

''உங்கள் மகனா? யார் சொன்னது?'' அடக்கமாட்டாத கோபத்துடன் பட்டென்று கேட்டுவிட்டு நெருப்பாக எரிந்த கண்களால் அவனை வெறித்தாள் கங்கா.

''கடந்து போன சம்பவத்தை நினைத்து நீ என்மேல் வெறுப்படையக் கூடாது கங்கா. நான் என் தவறை உணர்ந்து வருந்தாத நாளே இல்லை. அடி நிலத்திலே வாழும் உன்னை எங்கே எங்கேயோ தேடி அலைந்து வருந்தியிருக்கேன். என்

குழந்தையுடன் உன்னைப் பார்த்து இப்போ நான் அடையும் ஆனந்தம் விவரிக்க முடியாது...''

''இதை நான் நம்புவேன்னு நினைக்கிறீங்களா? இவன் என் குழந்தையில்லைன்னு சொன்ன அப்பவே என்னையும் இவனையும் கொன்னுட்டீங்க. இப்போ வண்டியை ஏத்தி இவனைக் கொன்னு அந்த வேதனையிலே என்னை சாகடிக்கப் பார்த்தீங்க - கடவுள் கிருபையில் இரண்டு பேரும் பிழைத்தோம்... இவனைத் தூக்கிட்டு வந்து என்கிட்டே ஒப்படைச்சதுக்கு நன்றி!'' படபடவென்று பேசிவிட்டு வேகமாகத் திரும்பி... நடந்து சாலைக்குள் புகுந்தாள் கங்கா.

சிறிது தூரம் கூட அவள் சென்றிருக்க மாட்டாள். நரேந்திரனின் படகு கார் அவள் அருகே விரைவாக நகர்ந்து வந்து 'சர்' என்ற ஓசையுடன் நின்றது.

''வண்டியில் ஏறிக்கோ - அவனை வெய்யிலில் தூக்கிட்டு ஏன் நடக்கறே?''

''பத்து மாசம் அவனை நான் வயித்திலே சுமந்தேன். இப்போ இடையிலே சுமக்கிறேன். என்னைப் பொருத்தவரை அவன் எனக்கு ஒரு பாரம் இல்லே... திடீர்னு எங்க மேலே ஏன் உங்களுக்கு இந்தக் கருணை? வேண்டாம்னு எங்களை ஒதுக்கிட்டு இப்போ வலிய வந்து ஏன் இந்த உபச்சாரம்?''

''கங்கா நடந்ததை மறந்துடுவோம்... வண்டியில் ஏறிக்கோ... விவரமா பேசுவோம்!''

''பேச நமக்குள் இனி எதுவுமே கிடையாது. தயவு செய்து வழியில் நின்று வம்பு செய்யாதீங்க. உங்களைவிட்டு ஒதுங்கினபோதும் நான் மானம் மரியாதையோட வாழ்ந்து கிட்டிருக்கேன்... இந்த பக்கத்து மனிதர்கள் என் மேலே ரொம்ப மதிப்பு வச்சிருக்காங்க... ஒரு படகு கார்க்காரனிடம் நான் நின்று பேசுவதை யாராவது பார்த்தா... தப்பா நினைப்பாங்க. ஏன்னா... இந்த ஏழைப் பொண்ணுக்கு இப்படி ஒரு பணக்காரக் கணவன் இருப்பார்னு அவங்களால் நம்ப முடியாது!''

துயரம் தொண்டையை அடைக்க வார்த்தைகள் தடுமாறப் பேசிவிட்டு.... அவள் வேகமாக நடந்தாள்.

வண்டியை ஓட்டிக் கொண்டு அவளைப் பின்தொடர்ந்து அவள் வேதனையை அதிகரிக்கச் செய்ய மனமின்றி... பிரமித்துப் போய் ஒரு ஓரத்திலே காரை நிறுத்திவிட்டு... அவள்போன திக்கையே பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தான் அவன்.

நரேந்திரனைத் திரும்பிப் பாராது தன் புடவைத் தலைப்பைக் குழந்தையின் தலைமீது வெய்யில் படாதிருக்கப் போர்த்திவிட்டு... மடமடவென்று மேலே நடந்தாள் கங்கா...

அவனது பணம் - பதவி... அத்தனையும் அவளது அசட்டைக்கு முன் தூள் தூளாகி தூசிக்கும் கீழ்மட்டமாகி விட்டன போன்றதொரு அதிர்ச்சி அவனுக்கு...

விருப்பமில்லாது வெடுக்கென்று பேசிவிட்டு போகிறவளைப் பின் தொடர்ந்தால் விபரீதம் ஏதாவது ஏற்படலாம் என அஞ்சி காரைத் திருப்பி கன வேகத்தில் வீட்டை நோக்கி விரைந்தான்.

இரண்டு தினங்களுக்குப் பின்...

அடுத்த வீட்டு சின்னப்பெண், ''உங்களை போனில் உங்க அண்ணன் கூப்பிடுகிறார்!'' என்று கூறிக் கொண்டு உள்ளே வந்தாள்.

காலை வேளையில்... நரேந்திரன் அவளை தொலைபேசியில் அவசரமாக அழைக்கும் காரணம்? அலுவலகம் கிளம்பிக் கொண்டிருந்த கணவனிடம் சொல்லிவிட்டு அடுத்த வீட்டுக்கு விரைந்தாள் பூரணி.

''உன் கணவர் அலுவலகம் புறப்பட்டு போனதும் பத்துமணி அளவில் கார் அனுப்பி வைக்கிறேன். நீ உடனடியாகப் புறப்பட்டுவா... உன்னிடம் மட்டும் பேச வேண்டிய ஒரு முக்கிய சங்கதி இருக்கு; அதனால் சுந்தரத்தை

கூட வரும்படி நான் அழைக்கலை!'' என்றான் நரேந்திரன் மறுமுனையில்.

''முக்கிய சங்கதியா? என்னவாக இருக்கும்..'' திகைத்தபடி வீடு திரும்பினாள் பூரணி.

''அண்ணன் போன் செய்தார். அவசரமா அவர்வீட்டுக்கு நான் வரணுமாம்...!'' என்றாள் கணவனிடம் அவள்.

''போய்ட்டு வா... நீ கல்யாணத்துக்கு முந்தி அந்த வீட்டை நிர்வாகம் செஞ்சவ. ஏதாவது ஒரு அறை சாவியை உன் அண்ணன் தொலைச்சிருப்பார். மறு சாவி எங்கே இருக்குன்னு கேட்க கூப்பிட்டிருக்கலாம் அல்லது முக்கிய ஆபீஸ் ஃபைலை எங்கே வச்சிருக்கேன்னு தேடி எடுத்து தரக் கூப்பிட்டிருக்கலாம். தாராளமா போய்ட்டு வா!'' சிரித்தபடி உத்திரவு கொடுத்தான் அவன்.

''நீங்க சொல்றபடிதான் இருக்கும். அண்ணனுக்குக் கொஞ்சம் ஞாபக மறதி உண்டு...!'' கூடச் சிரித்தாள் பூரணி. ஆனால் உள் மனதில் லேசாக உறுத்தல்.

கணவன் வெளியே சென்றதும் அவசரமாக உடுத்திக் கொண்டு அண்ணன் வீட்டுக்குச் செல்ல ஆயத்தமானாள். குறித்த நேரத்தில் வந்த காரில் கிளம்பிவிட்டாள். வீட்டுக்குள் நுழைந்தவளுக்கு உற்சாகமாகக் குரைத்த திம்மன் வரவேற்புக் கொடுத்தது.

கை வேலையைப் போட்டுவிட்டு சமையலறையிலிருந்து தாயம்மாள் ஓடிவந்தாள்.

பின்பக்கத்து தோட்டத்தில் வேலையாக இருந்த தங்கப்பன் முண்டாசை அவிழ்த்து இடுப்பில் வேட்டி மேல் இறுக்கக் கட்டிக் கொண்டு விரைவாக உள்ளே வந்தான்.

இருவரும் ஏக காலத்தில் பதட்டமாகப் பேசினார்கள்.

''அம்மா நீங்க வந்தது நல்லதாப் போச்சு. இரண்டு நாளா ஐயா ஆபீசுக்குக்கூட போறதில்லே, மாடி அறையிலே சித்த

நேரம் தோட்டத்தில் கொஞ்ச நேரம்னு அலைஞ்சு கொண்டு பித்துப் பிடிச்சவர்போல இருக்கார். வியாபாரத்திலே ஏதாச்சும் தொந்திரவு ஏற்பட்டுவிட்டதோ என்னவோ.... சரியா சாப்பிடறதில்லை, தூங்கறதில்லை... எங்களுக்கு பயமா இருக்கும்மா... எங்களுக்கு ராத்தூக்கமில்லை... பசியில்லே அரண்டு போய் இருக்கோம்....!'' மூச்சுவிடாது இருவரும் பேசினார்கள்.

''கவலைப்படாதீங்க. ஐயாவை நான் போய் பார்த்துப் பேசறேன்!'' என்று கூறிவிட்டு மடமடவென்று மாடிப்படிகளைக் கடந்து மேலே சென்றாள்.

மாடியின் பெரிய முன்னறையில் கிடந்த சோபா ஒன்றில் நரேந்திரன் சாய்ந்து கொண்டிருந்தான்... காலடி ஓசை கேட்டு நிமிர்ந்தவனின் முகத்தைப் பார்த்த பூரணி... திடுக்கிட்டுப் போனாள்.

ஒரு மாதம் ஓயாது அடித்த காய்ச்சலில் சோர்ந்து சுணங்கிப் போனவன் போன்ற முகபாவம்... சில நாட்களாக மழிக்கப்படாத முகம்... அலங்கிப்போன உடை... தாறுமாறாக நெற்றி மீது புரண்ட கிராப்பு முடி?...

அண்ணனுக்கு என்ன வந்துவிட்டது...? கவலையுடன் வேகமாக அருகில் வந்தாள்.

''வாம்மா! உட்கார் பூரணி!'' என உபசரித்த அவன் குரல் துயரத்தில் கனத்து ஒலித்தது.

''உடம்புக்கு என்ன ஆச்சு அண்ணா? ஏன் இப்படி இருக்கீங்க?'' வியப்புடன் வினவியவண்ணம் எதிரே கிடந்த இருக்கை ஒன்றில் அவள் அமர்ந்தாள்.

''உடம்பு கல்லுகுண்டு மாதிரித்தான் இருக்கு... மனசுதான் நொறுங்கிப் போச்சு!'' பரிதாபமாக முறுவலித்தான் நரேந்திரன்.

வியாபாரத்திலே ஏதாச்சும் சிரமம் ஏற்பட்டுவிட்டதா அண்ணா...?''

''அதுக்கெல்லாம் நான் அசந்து போறவன் இல்லே. அந்த நிலையைத் தாண்டி விட்டவன்!''

''வேறே என்ன தொல்லை ஏற்பட்டது அண்ணா... என்கிட்ட விவரமா சொல்லுங்கோ... என் மனம் உங்களை இப்படிப் பார்க்கறச்சே ரொம்ப வேதனைப்படுகிறது!''

''சொல்லத்தான் உன்னைக் கூப்பிட்டு அனுப்பி இருக்கேன்...! இரண்டு நாளைக்கு முன்னால் பூந்தமல்லியிலே யோகாவதி பஜாரைப் பார்வையிட நான் காரை ஓட்டிக் கொண்டு உள்ளே போனபோது... தத்தி நடந்து கொண்டு வந்த ஒரு குழந்தை மேலே காரை மோதி...!''

''பலத்த காயம் ஏற்பட்டுவிட்டதா அந்த குழந்தைக்கு பாவம்...'' பதறினாள் பூரணி..

''காயம் என் மனசிலே தான் ஏற்பட்டிருக்கு.. சட்டுனு பிரேக் போட்டு முன்பின் தெரியாத அந்த குழந்தையை அள்ளி எடுத்து அணைச்சிக் கொண்டேன். என் உடம்பெல்லாம் பதறிப் போச்சு...!''

''தாய்கிட்டே பத்திரமா சேத்துட்டீங்க இல்லையா அண்ணா!''

''குழந்தையை தேடிக்கிட்டு வந்த தாயைப் பார்த்து அப்படியே நான் திகைச்சுப் போனேன். அவன் என் குழந்தைன்னு தெரிஞ்சப்போ... பூரணி என் மனம் பட்டபாடு...!'' நரேந்திரன் பேசமுடியாது தடுமாறினாள்.

''அண்ணியை நீங்க பூந்தமல்லியில் அந்த பஜாரில் சந்திச்சுப் பேசுனீங்களா....?''

''இந்த ஊரிலே இப்படி ஒரு பக்கம் ஒண்ணரை வருஷமா என் கண்களில் படாம ஒளிஞ்சு கொண்டிருக்கிறாளே கங்கா அதை என்னால் நம்பமுடியலை...!''

பூரணி தனக்கு ஏற்கனவே கங்கா அங்கே தங்கியிருப்பது பற்றி தெரியும் என்பதைக் காட்டிக் கொள்ளவில்லை.

''நீங்க அண்ணியை மறந்துட்டு வாழ்கிறீங்கன்னு நான் நினைச்சேன்....!''

''கங்காவை மறப்பதா? அவள் என் உயிருடன் உணர்வுடன் கலந்து விட்டவளாச்சே எப்படி மறப்பேன்... பூரணி? நீ நம்பமாட்டாய். ஆனால் உண்மை இது. அவளை நான் அன்றிலிருந்து இன்றுவரை நேசிக்கிறேன். என் உயிர் உள்ளவரை நேசிப்பேன்!''

''என்னால இந்த பேச்சை ஒத்துக்க முடியலையே அண்ணா! உயிருக்கு உயிராக நேசித்தவளையா இப்படி ஒதுக்கி வச்சு தண்டிச்சீங்க?''

''மத்தவங்களைப் பத்தி எனக்கு அக்கறையில்லை... நான் உயிராக நேசிக்கிற என் மனைவி... தன் தகப்பனுடன் சேர்ந்து கொண்டு என்னை வஞ்சித்து விட்டாள்னு... நினைச்சு ஆத்திரத்தை அடக்க முடியாது நான் ஒரு பெரிய அரக்கனாகிப் போனேன். உண்மையை இப்போ நான் புரிந்து கொண்டு விட்டேன். என் மனைவி என்றாகி விட்டதும் அவளுக்கு புக்ககந்தானே பெரிசு. தகப்பனுக்கு பரிஞ்சு தப்புக்காரியம் செய்திருக்க மாட்டாள்னு என் மனம் உறுதியா எண்ணத் தொடங்கி விட்டது...''

''ஆமாம் அண்ணா! ஒரு பெண்ணுக்கு கல்யாணமானதும் புக்ககந்தான் சுவர்க்கம் - கணவன் தான் அவளுக்கு சகலமும் -கங்கா அண்ணி அப்படித்தான் உங்களைப் பத்தி உயர்வா நினைச்சிருப்பாங்க. நீங்கதான் தப்பா நினைச்சு அவங்களை அக்கிரமமா தண்டிச்சிட்டீங்க!''

''ரத்னசாமியை தண்டிக்கணும்னா அவர் மகளை அவமானப்படுத்தினாத்தான் மனுசன் வழிக்கு வருவான்னு தப்புக் கணக்குப் போட்டேன். என்னையே நான் சித்ரவதை செய்துகிட்டேன் என்கிறது பிறகுதானே புரிஞ்சது?''

''அண்ணியை ஒண்ணரை ஆண்டுக்குப் பிறகு நேருக்கு நேர் பார்த்து இப்படி ஒரு மன மாறுதல் ஏற்பட்டதா அண்ணா?''

''இல்லை! கொஞ்ச காலமா எனக்கு கங்காவைப் பற்றி பெருத்த மன மாறுதல் ஏற்பட்டிருக்கு... அவளைப் பார்க்கணும் நான் செய்த தவறுக்கு அவளை என்னோடு வாழ வழிசெய்து அவளை சுகமாகப் பாதுகாக்கணும்னு துடிச்சுக் கொண்டிருக்கேன். உன்னிடம் சொல்லிக் கொள்வதில் எனக்கு வெட்கம் இல்லை... திடீர்னு சந்தித்து நான் மார்போடு அணைத்துக் கொண்ட அந்த பிள்ளை என் மகன்னு தெரிஞ்சப்போ என் உடம்பிலே உள்ள ஒவ்வொரு அணுவும்... பாசத்தில் துடியா துடிச்சது... என் நாடி நரம்பெல்லாம் அன்பிலே மெழுகா... கரைஞ்சு போனது. என் ஆணவம் பொடியாகிப் போய் நான் வெறும் தக்கையாகி விட்டவன் போல அசந்துபோய் நின்னுவிட்டேன். பேசத் திராணி இல்லாம தடுமாறிட்டேன்!''

''புராண காலத்து துஷ்யந்தன் கதையா போயிடுச்சு அண்ணா!''

''அப்படித்தான் வச்சுக்கோயேன். அந்த சகுந்தலை தன் கணவனை மன்னிச்சு ஏத்துக் கொண்டு விட்டாள்!''

''அண்ணி கங்கா இந்தக் காலத்துப் பெண், தனக்கு இழைக்கப்பட்ட அவமானத்தை எதிர்த்து போராடினாங்க...!''

''நம் குழந்தைன்னு நான் சொன்னதும் அவளுக்கு எத்தனை கோபம் வந்தது தெரியுமா...?''

''அப்போ நீங்க அந்தக் குழந்தை உங்களுடையது இல்லைன்னு அவமானப்படுத்திட்டீங்க — இப்போ சொந்தம் கொண்டாடுகிறீங்க — அதை அண்ணியால ஏற்க முடியலை...!''

''குழந்தை வேத்து மனுசன்னு என்னைப் பார்த்து அழுதுட்டது. முத்து முத்தா எத்தனை கண்ணீர்னு நான் என் கைக்குட்டையால் துடைச்சேன். கங்கா என்ன சொன்னாள் தெரியுமா? 'இந்த பிள்ளையோட அம்மா கண்ணிலிருந்து வடிஞ்ச கண்ணீர் முத்துக்கள் எத்தனைன்னு உங்களுக்குத்

தெரியுமா - அதுகளை கோத்தா... உங்க பங்களா வாசல் முழுதும் தோரணம் கட்டிடலாம்... உங்க கைக்குட்டையால துடைச்சுட முடியாத அளவு கண்ணீர்!' வெடுக்குனு பதில் சொல்லிவிட்டு குழந்தையை எடுத்துக் கொண்டு போய்விட்டா, நான் பின்தொடரலை. ஆனால், அவள் போன ஒரு சந்தை பார்த்து வச்சுக் கொண்டு என் காரியதரிசியை ஏவி அவளது முகவரியைக் கண்டு கொண்டு விட்டேன்!''

''அண்ணி ரொம்பவே மனம் கசந்து போயிருக்காங்கன்னு புரிகிறது. சீரும் சிறப்புமா வாழ வேண்டிய என் பிள்ளை ஒரு ஏழையின் குழந்தையாக... ஒரு வேலைக்காரி மகனாக வளர்கிறான்னு தெரிஞ்சப்போ என் மனம் படுகிற வேதனை கொஞ்ச நஞ்சமில்லே.. .வைரமும் தங்கமும் மேனியில் மின்ன வாழ வேண்டிய கங்கா... இடையில் நூல் சேலையும்... கையில் கண்ணாடி வளையல்களும்... கழுத்தில் தாலிச் சரடுமாக... வறுமைக் கோலத்தில் நின்றதைப் பார்த்து நான் அதிர்ந்து போய்விட்டேன்...!''

''அண்ணா நீங்கள் இப்படிக் கண் கலங்கலாமா? முகத்தைக் கழுவிக் கொண்டு முடியை வாரி சீராக்கிக் கொண்டு வாங்கோ நாமிருவரும், காபி பலகாரம் சாப்பிட்டுக் கொண்டு பேசுவோம்.''

''பெரும் யுத்தத்தில் தோல்வி ஏற்பட்டு விடும்போது வீரத்தின் விளக்காக விளங்கும் சேனாதிபதியே கண்கலங்கி அழுது விடுகிறான். வாழ்க்கையில் ஏற்பட்ட இந்தத் தோல்வியில் சாதாரண மனிதனான நான் மட்டும் அதற்கு விதி விலக்கா...?'' என்றபடி கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தான். ''பூரணி நீதான் இந்த சிக்கலைத் தவிர்த்து உதவணும்'' என்று குழைந்தான்.

36

சிவகாமி அம்மாள் அன்று காலை காப்பி பலகாரம் சாப்பிட்ட பின்பு வழக்கம்போலக் காலை பத்திரிகைகளுடன் வாயில் வராந்தாவில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

கங்கா தயாரித்திருந்த வெங்காய சாம்பாரின் வாசனை இன்னமும் கையில் மணத்துக் கொண்டிருந்தது.

அளவுக்கு மீறி அன்று ஒரு இட்லியைக் கூட சாப்பிட்டு விட்டதால் அவளுக்கு லேசாக மூச்சு திணறியது. பகல் சாப்பாட்டின் போது ஒரு பிடி சோற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியபடி... ஒரு நாளேட்டை மட்டும் கையில் வைத்துக் கொண்டு மற்றவைகளைத் தரையில் தன் அருகே போட்டுவிட்டு மெல்ல அதைப் பிரித்து நாட்டு நடப்பை ஊன்றிப் படிக்கத் தொடங்கினாள்.

விடிந்தவுடன் அவள் நாளேடுகளைப் படிப்பதில்லை. பத்திரிகையைப் புரட்டியதும், ஒரு நாளைக்கு குறைந்தது ஐம்பது பேராவது இங்குமங்கும் செத்துவிட்ட விவரம் கண்களில் பளிச்சிடும்.

லாரி மோதி பையன் சாவு. கிணற்றில் விழுந்து கிழவர் மாண்டார். குடிசைப் பகுதியில் நெருப்பு-தாயும் சேயும் தீயில் மாண்டனர். வெள்ளத்தால் தடம் புரண்ட தண்டவாள விபத்தில் முப்பது பேருக்கு காயம் - ஐந்து பேர் ஸ்தலத்திலேயே இறந்து போனார்கள்... இப்படி பல துயரச் செய்திகள்.

வயிறு நிரம்பிய பின்தான் அவளால் சோகச் செய்திகளைப் படிக்கத் தெம்பு இருந்தது.

பத்திரிகைச் செய்திகளில் ஆழ்ந்து போய் தன்னை மறந்த நிலையில் உட்கார்ந்திருந்த சிவகாமி திடுக்கிட்டு

செய்தித்தாளை முகத்தினின்று தாழ்த்தி கூர்ந்து நோக்கினாள்.

கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்த அந்த இளம் பெண் யார்?

கஞ்சியில் மொட மொடத்த வாயில் சேலையில் தோளில் பையைச் சுமந்து கொண்டு வந்த அந்தப் பெண் வேகமாக வராந்தாவை நோக்கி வருவதைக் கண்டு சிவகாமி வியப்புற்றாள்.

பார்த்தால் படித்தவள் போல காணப்படும் அந்த பெண் சிவகாமியைத் தேடிக்கொண்டு வருவதின் நோக்கம்?

ஏதாவது சங்கத்திற்கு நிதி திரட்ட கிளம்பியிருக்கிறாளோ?

எத்தனை சர்க்கரையாகப் பேசினாலும் கண்டிப்பாக இருக்க வேண்டும். மாதத்திற்கு இரண்டு பேராவது இப்படிக் கிளம்பி விடுகிறார்களே? இவர்களுக்கெல்லாம் வேறு வேலை கிடையாதா?

— பலவும் எண்ணி சிவகாமி... தலையை நிமிர்த்திக் கொண்டு பதிலளிக்கத் தயாராகக் காத்திருந்தாள்.

படியேறி வராந்தாவிற்கு வந்தவள், அவள் எதிரே நின்றாள்.

''நீங்கதான் திருமதி சிவகாமி அம்மான்னு நினைக்கிறேன்'' புன்னகைத்தாள் அவள்.

''ஆமாம். என்னத்துக்கு என்னைப் பார்க்க வந்திருக்கிறேன்னு தெரிஞ்சுக்கலாமா?'' சிவகாமி எச்சரிக்கை மிக்க குரலில் கேட்டாள்.

''என் பெயர் பூரணி - இங்கே உங்களோடு தங்கியிருக்கும் கங்காவுக்கு ஒரு வழியில் நான் உறவுக்காரி. அவங்களைக் கொஞ்சம் பார்த்து பேச வந்திருக்கேன். உங்க உத்திரவைக் கேட்டுக் கொண்டு!'' முடிக்காது நெற்றியில் புரண்ட முடியை விரலால் ஒதுக்கி சீராக்கிக் கொண்டு... புன்னகைத்தபடி நின்றாள்.

அப்பாடா என்ற நிம்மதி சிவகாமிக்கு.

அதற்குப் பின்னர் வந்தவளிடம் சுமூகமாக அவளால் பேச முடிந்தது.

''அப்படியா... நிற்கவச்சே பேசறேனே நான்... அடப்பாவமே... உட்கார உனக்கு ஒரு நாற்காலி கொண்டு வரேன்!'' என்றபடி எழுந்தாள்.

''வேண்டாம்மா...! நீங்க பெரியவங்க நான் நின்று கொண்டு பேசறதிலே தப்பில்லே... நீங்க கங்காவை கொஞ்சம் கூப்பிடுகிறீங்களா...?'' மிகவும் குழைவான குரலில் கேட்டாள்.

குழந்தைக்கு உணவு தந்துவிட்டு - முகத்தைத் துடைத்து முடியை சீராக்கி மாற்றுடை அணிவித்துக் கொண்டிருந்த கங்காவின் காதில் வாசலில் எழுந்த பேச்சுக் குரல் கேட்டது. அதில் தன் பெயர் அடிபடுவதைக் கேட்டு வியப்புடன் குழந்தையைத் தூக்கி இடையில் வைத்துக் கொண்டு வேகமாக வந்து எட்டிப் பார்த்தாள்.

''பூரணியா! என்னைத் தேடிக் கொண்டா வந்திருக்கே?'' வியப்புடன் புன்னகைத்தாள் கங்கா.

''உன்னோட பேசணுமாம். உள்ளே கூட்டிக் கொண்டு போய் உன் அறையிலே வச்சு பேசும்மா! தாகத்துக்கு ஏதாச்சும் கொடு...'' சிவகாமி தாராளமாக உத்திரவிட்டாள்.

''அதெல்லாம் ஒன்றும் வேணாம். கங்காவைப் பார்த்துப் பேச அனுமதி தந்தீங்களே அதுக்கு மிக்க நன்றி...'' எனப் புன்னகைத்துவிட்டு வேகமாகக் கங்காவைப் பின்தொடர்ந்தாள் பூரணி.

நடையின் பின் பகுதியிலிருந்த அறைக்குள் நுழைந்ததும் நாற்காலியில் அமரச் சொல்லி உபசரித்துவிட்டு குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு கட்டிலின் மீது அமர்ந்தாள் கங்கா. அவள் நெஞ்சு படபடவென்று துடித்துக் கொண்டது. பூரணி அங்கு எதற்காக வந்திருக்கிறாள் என அவளால் ஊகிக்கவா முடியாது...?

''அண்ணி நான் உங்களுக்கு வாக்குத் தந்துவிட்டுப் போனபடி இங்கே வர நான் முயற்சிக்கவேயில்லை. உங்களை சந்தித்ததைப் பத்தியோ, நீங்க இருக்கும் இடத்தையோ நான் யார்கிட்டேயும் சொல்லலை... ஆனால், அண்ணன் தன் மகனை எதிர்பாராதவிதமாக சந்திக்கணும்னு நேரம் வந்துட்டது. இப்போ அவர் சார்பில் நான் தூது வந்திருக்கேன்...''

''தூதர்களை மரியாதையாக நடத்தணும் என்பார்கள். அதனாலே உன்னை நான் கோவிச்சுக்கக் கூடாதுன்னு சொல்ல வர்றே...!'' மகனை இறுக்க அணைத்துக் கொண்டு கோபத்துடன் சிரித்தாள் கங்கா...

''உங்களை சந்தித்ததிலிருந்து அண்ணன் சாப்பாடில்லாம -தூக்கமில்லாம துயரத்திலே மூழ்கிப் போய் வீட்டிலேயே இருக்கார். வேலை மீது கூட அவருக்கு உற்சாகம் இல்லை!''

''அவரைப் பிரிஞ்சு வாழ நேர்ந்தப்போ நான் எத்தனை நாட்கள் அன்ன ஆகாரமின்றி - தூக்கமின்றி... எதிலும் நாட்டமில்லாம வருந்தியிருக்கேன்னு உனக்குத் தெரியுமா?''

''அவர் நடந்து போன சம்பவத்திற்காக ரொம்ப வருத்தப்படறார். உங்களைப் பத்தி தப்புக் கணக்குப் போட்டதற்காக மிகவும் மனம் நொந்துக்கிறார். உங்களுக்கு இழைத்த தவறுக்கு ஈடுசெய்ய ஒரு சந்தர்ப்பம் தரணும். நீங்க திரும்ப வந்து அவரோட சுகமா வாழணும்னு விரும்பறார்? தன் மகனுக்கு நல்லதொரு வாழ்க்கை தர வேண்டியது தமது கடமைன்னு நம்புறதால... நீங்க அவருக்கு ஒத்துழைத்து உதவணும்னு கேட்டுக்கிறார்...!''

''ரொம்ப அழகா பேசறே பூரணி...! திரும்பி வந்து நான் அவரோட வாழ்க்கையைத் தொடருகிறது அத்தனை சுலபம் இல்லை...!''

''ரொம்ப வைராக்கியமுடையவரான அண்ணனே மனம்

தளர்ந்து போயிட்டார். அன்பு உள்ளம் கொண்ட உங்களால் மனதை மாத்திக்க முடியாதா அண்ணி. உண்மையான அன்புக்கு மன்னிக்கும் குணம் இயற்கையாகவே அதிகம் உண்டு. உங்களுக்கு நான் இதைப் பற்றி எடுத்துச் சொல்லத் தேவையில்லை. ஆனந்தனின் உரிமைக்காக நீங்க உங்க பிடிவாதத்தை மாத்திக்க வேண்டாமா? யோசிச்சு ஒரு நல்ல பதில் கொடுங்கோ... பிறகு அண்ணனோட நான் வந்து உங்களைக் கூட்டிக்கொண்டு போய் உங்க வீட்டில் விட்டு வருவேன்!''

''அது நடக்காத சங்கதி பூரணி. நீ மறுபடி என்னை இங்கே தேடிக் கொண்டு வரத் தேவையில்லை. அவரும் வர வேண்டாம்!'' கோபத்துடன் சீறினாள் கங்கா.

''எத்தனையோ குடும்பத்திலே இது மாதிரியான சங்கதி நடந்திருக்கு. இன்னும் நடக்கலாம். இது தனிப்பட்டதொரு அதிசயம் இல்லே. ஏதோ தவறாப் புரிஞ்சு கொண்டு அண்ணன் உங்களிடம் கடுமையா நடந்து கொண்டு விட்டார். இப்போ மனம் திருந்தி மன்னிப்புக் கேட்கிறார். நீங்க பிடிவாதமாக இருக்கிறது மனிதாபிமான செய்கையா சொல்லுங்க...?''

''அவருக்கு வாழ்க்கையின் தனிமை கசந்துவிட்டால்... இந்த திருமணத்திலிருந்து விடுதலை தந்துடறேன்... வேறே தமக்குப் பிடித்தமானதொரு பெண்ணை மணந்து கொண்டு சுகமா வாழட்டும்...!'' கங்கா சொல்லி முடிப்பதற்குள்...

பூரணி துள்ளி எழுந்து அருகில் வந்து அவள் வாயைப் பொத்தினாள்.

''அண்ணனுக்கு நீங்க ஒருத்திதான் மனைவி... அப்படி ஒரு அன்பு உங்கள் மேல்...!''

''ஆகா...! இவரும் ஒரு ராமர்னு சொல்லறே...? நீ அவருக்காக பெரிசாதான் வக்காலத்து வாங்கிக் கொண்டு வந்திருக்கே!''

''அண்ணி என்கிட்டே கூட நீங்க கடுமையா பேசணுமா? நீங்க ரெண்டு பேரும் ஒண்ணு சேர்ந்து வாழணும்னு நான் வேண்டாத தெய்வமில்லை. நல்லா யோசிங்கோ. இரண்டு நாள் கழிச்சு நான் மறுபடி வரேன். உங்க முடிவு நல்லதா இருக்கட்டும்...!''

''வேண்டாம்! வரத் தேவையில்லை. நான் என் முடிவை மாத்திக்க மாட்டேன். நீ மறுபடி தொல்லை கொடுத்தா இங்கேயிருந்து என் குழந்தையோட வேற எங்கேயாவது போய்விடுவேன். என்னைப் பொறுத்தவரை என் மனதிலிருந்த ஆசை அனைத்தும் செத்துப் போச்சுன்னு அவர்கிட்டே சொல்லு...!''

''பட்டமரம் துளிர்த்ததை நாம் பார்த்ததில்லையா? அது போல உங்க மனதிலும் புதிதாக அன்பு துளிர்க்கும். எனக்கு நம்பிக்கை இருக்கு அண்ணி...'' என்றபடி ஆனந்தனை வாரி அணைத்து அவன் கன்னங்களில் ஆசையுடன் முத்தமிட்டாள் பூரணி.

''முரண்டு பண்ணாதே - இந்த அத்தை உனக்கு ரொம்ப வேண்டியவள்'' என்று சிரித்தபடி குழந்தையைத் தாயிடம் கொடுத்தாள்.

''என் முகவரி உங்களுக்குத் தெரியும் - ஒரு கார்டு போட்டால் கூட நான் ஓடி வருவேன். எத்தனை காலமானாலும் உங்கள் பதிலுக்கு காத்திருப்பேன். நீங்கள் இங்கேயே தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருங்கள். அண்ணி உங்களுக்கு நான் மேலும் சிரமம் தர மாட்டேன்!'' கூறியபடி கண் கலங்கியவளாகப் பூரணி விடைபெற்றுக் கொண்டாள்.

பகல் உணவின் போது சிவகாமியால் ஆவலை அடக்க முடியவில்லை. கங்காவிடம் கேட்டு விட்டாள்.

''வந்தவள் உனக்கு நெருங்கிய உறவுக்காரியோ?''

''ஒரு வகையில் நாத்தி. நாத்தி போல...!''

''ஏதாவது முக்கிய சங்கதியைப் பேச வந்தாளோ?''

''உங்களுக்கு என் வாழ்க்கையைப் பத்தி ஓரளவு ஏற்கனவே தெரியும். என்னையும் என் மகனையும் திரும்ப அழைத்துக் கொள்ள என் கணவர் விரும்புவதாகச் சொல்லி தூது பேச வந்தாள்.''

''நல்ல காரியந்தான். நீ ஒப்புக் கொண்டாயா?''

''இல்லை. நான் போக விரும்பலை. உங்களுக்கு மறுப்பு இல்லாதவரை நான் இங்கேயே தங்கிக்கறேன். பிறகு...!''

''எனக்கு மறுப்பு இல்லே. ஆனால், எனக்குப் பின் நீ என்ன செய்யப் போறே? எங்கே போவே? ஒரு இளம் பெண் தனியா வாழ முயலுவது சிரமமான சங்கதி. உலகம் ரொம்ப பொல்லாதது!''

''ஏதாவது ஒரு ஆசிரமத்தில் சேர்ந்து அங்கே வேலை செய்து கொண்டு என் மகனை வளர்த்து ஆளாக்க முடியும் என்கிற நம்பிக்கை இருக்கு!''

''இது உன் சொந்தப் பிரச்சினை. நீ உன் கணவனிடம் போய் வாழ்வதுதான் முறைன்னு என் மனதில் பட்டதை சொன்னேன். மேற்கொண்டு வற்புறுத்த எனக்கு உரிமை கிடையாது. எதற்கும் நீ நல்லா யோசித்து ஒரு முடிவு எடுப்பதுதான் சிறந்தது!''

அதற்கு மேல் சிவகாமி அந்த சங்கதியைப் பற்றி பேச்சே எடுக்கவில்லை. அரை குறையாகப் புரிந்து கொண்டிருந்த நீலாம்மாள் பலமுறை கங்காவிடம் கேட்க விரும்பினாள். புத்தி சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டாள். சிவகாமி அம்மாள் கோபிப்பாள் எனப் பயந்து வாளா இருந்தாள். ஆனால், மனம் என்னவோ தவியாகத் தவித்தது.

இரண்டு தினங்கள் சென்றன. பூரணி வரவில்லை. போன் செய்யவில்லை. வாக்குக் கொடுத்தபடியே அவள் மறைந்து விட்டிருந்தாள்.

நாட்கள் பல விரைந்தன. ஒரு நாள் மாலை குழந்தையை

நீலாம்மாளிடம் கொடுத்துவிட்டு சிவகாமிக்கு சாப்பிடப் பழங்கள் வாங்கிவரப் புறப்பட்டாள் கங்கா...

சில தினங்களாக மனதை இறுக்கிய உணர்வுகளின் அழுத்தத்தை அவளால் தாங்கவே முடியவில்லை.

தன்னந் தனியாக வெளியே சிறிது நடந்தால் மனம் லேசாகிப் போகும் போன்றதொரு பிரமை... நடைபாதை மீது அவள் பழக்கடையை நோக்கி மெல்ல நடந்தாள்.

தாரை தம்பட்டை ஒலியுடன் ஒரு இளம் பெண்ணின் கடைசி யாத்திரை எதிர்ப்படவே... அந்தக் கூட்டத்திற்கு வழி விட்டபடி கடையொன்றின் முகப்பில் நின்றாள் அவள்.

பின் தொடர்ந்து கொண்டிருந்த உறவினர்களில் இரண்டு பேர் வாயில் குதப்பிய வெற்றிலையைத் துப்பக் கடை முகப்பருகே வந்தனர்.

வாயிலிருந்த சங்கதி... நடைபாதை ஓரத்தில் பளிச்சென்று விழுந்ததும் பேச்சு புரண்டது.

''போன வாரம் கூட பார்த்துட்டு வந்தேன். தம்பி... நல்லா இருந்தா. சாகிற வயசா சொல்லு? தலைவலின்னு படுத்தாளாம் பொசுக்குன்னு போயிட்டா?''

''என்னவோ மூளைக் காய்ச்சலாம்... அதனாலே காப்பாத்த முடியலைன்னு டாக்டர் கைவிரிச்சுட்டாராம்!..''

ஏனோ கங்காவின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

மேலே நடக்காது... அவர்கள் பேசிய விவரத்தைக் கேட்டபடி நின்று விட்டாள்.

''விபரீதம்! மூளைக் காய்ச்சலா அவளுக்கு வரணும்?''

''போறாத காலம் வந்தா புடலங்காயும் பாம்பாகிக் கடிக்கும்னு சொல்லுவாங்க. கேட்டதில்லையா... ஆயுசு அவ்வளவுதான், போய்ட்டா — ஆனால், அந்தக் குழந்தை கதி?

அதை நினைச்சுதான் என் மனசு வேதனைப் படுது. ரொம்ப பிடிவாதக்காரி — புருசனோட சண்டை போட்டுகிட்டு குழந்தையோட பிறந்த வீட்டுக்கு வந்தா... ஆனால், பாவம் புருசன் பல தடவை வந்து கெஞ்சிக் கூப்பிட்டான். வர முடியாதுன்னு மறுத்துட்டா. இப்போ வர முடியாத இடத்துக்கே போயிட்டா. அதனால என்ன அவ புருசன் இப்போ நிம்மதியா வேறே ஒருத்தியைக் கட்டிப்பான். இளையவளா வருகிறவ மூத்தா விட்டுப் போன குழந்தையைக் கூட்டி வந்து கொண்டாடிப்பாளா? அதன் தலையெழுத்து அனாதையாகிப் போறது...!''

பிளாஸ்டிக் கூடையை கங்காவின் கை அழுத்தமாகப் பற்றியது. மார்பு வேகமாக அடித்துக் கொண்டது. வேண்டுமென்று அவளுக்காக அந்த மனிதர் பேசியதைப் போலத் தோன்றியது. முகம் சூடாக நெற்றியில் வியர்வை துளிர்க்க கால் தடுமாற அவள் மேலே நடந்தாள்.

அன்று இரவு அவளுக்கு உறக்கமே இல்லை.

நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்த மகனது அழகு முகத்தைப் பல தடவைகள் அவள் விடிவிளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் பார்த்தாள். பாதை ஓரத்தில் மென்று கொண்டிருந்த வெற்றிலையைத் துப்ப ஒதுங்கிய அவர்கள் இருவரும் பேசியது போல திடீரென்று ஏதோ ஒரு காரணத்தால் அவள் இறந்து போனால்?

சிவகாமி அம்மாள் ஆனந்தனை வைத்துக் கொண்டு எப்படி சமாளிப்பார்கள்? அவர்களுக்கும் மறைவு ஏற்பட்டு நரேந்திரன் இரண்டாவது திருமணம் செய்து கொண்டு விட்டால்? மகன் மேல் இப்போது உள்ள அன்பு இரண்டாவது மனைவி வந்த பிறகு தொடர்ந்து இருக்கக் கூடும் என்று எப்படி நம்ப முடியும்?

இரண்டாவதாக வருகிறவளுக்கு மூத்தவள் விட்டுப் போன குழந்தை மீது அக்கறை ஏற்படும் என்று எப்படி நம்ப முடியும்...?

ஆவேசம் வந்துவிட்டது போல மகனை அள்ளி மார்போடு அணைத்துக் கொண்டாள்.

அப்படி ஒரு துன்பம் ஏற்பட்டு விட்டால்... ஆனந்தனின் கதி...?

அந்தக் கற்பனையின் கொடுமையைத் தான் தாள முடியாது, அவளது உடல் பதறியது... உள்ளம் கலங்கியது. கண்களிலிருந்து பொல பொலவெனக் கண்ணீர் கொட்ட அவள் நெஞ்சு வெடித்து விடும் போல குமுறி அழுதாள்.

37

சுற்றிச் சுழன்ற சிந்தனைக் குழப்பத்திலிருந்து ஒரு தெளிவான முடிவு ஏற்பட்டதும்தான் அவளுக்கு உறக்கம் வந்தது.

மறுநாள் காலை எழுந்ததுமே அவள் மனம் பரபரத்தது.

இனி காலதாமதம் செய்து கொண்டிருப்பது தவறு. வீண் பிடிவாதத்தினால் அவள் ஆனந்தனின் வருங்காலத்தை நாசமாக்குவது மகாபாவம்.

பூரணியைக் கூப்பிட்டு உதவி கேட்கத் தேவையில்லை.

அவளது கணவனை அவர் வீட்டில் சந்தித்துப் பேச அவள் ஏன் பயப்பட வேண்டும்? தயங்க வேண்டும்? தடுமாற வேண்டும்?

தானே கெஞ்சிக் கொண்டு காருடன் பின்னால் ஓடி வந்தவர். மனம் மாறிப்போன நிலையில் இருக்கிறார்.

உலையில் சூடாகிப்போன இரும்பை தட்டிச் சமம் செய்வதுபோல இப்போது அவளால் நிதானமாக நேருக்கு நேர்

நின்று பேச முடியும் என்ற எண்ணத்துடன் விரைவாக செயல்படத் தொடங்கினாள்.

காலை வேளையில் அவள் கவனிக்க வேண்டிய வேலைகளை செய்து முடித்தாள். குழந்தையைக் குளிப்பாட்டி உடை அணிவித்து உணவு கொடுத்து தூங்க வைத்து விட்டு தானும் காப்பி பலகாரம் சாப்பிட்டுவிட்டு, சமையலறையில் நீலாம்பாளுக்கு செய்ய வேண்டிய உதவிகளை விரைவாக முடித்துக் கொண்டு தன் அறைக்குள் புகுந்தாள்.

மறுநாள் காலையில் அவள் குழந்தையை எடுத்துச் சென்று கணவனிடம் ஒப்படைத்து விட்டு திரும்பிவிட வேண்டும் என்ற தீவிரமானதொரு முடிவு.

தேன் நிலவின் போது நரேந்திரன் வாங்கித் தந்த பெரிய பெட்டியையும் அதற்குள்ளிருந்த பொருள்களையும் அவள் பிறந்த வீட்டிற்கு வந்த பின்னர் தொடவேயில்லை. கல்யாணத்திற்கு கணவன் போட்ட நகைகளை உடனடியாகத் திருப்பித்தர நேரமும் வசதியும் இன்றி அவர்களது வங்கி லாக்கரில் தன் உடமைகளுடன் பத்திரமாக வைத்து விட்டிருந்தாள்.

திருப்பித்தர வேண்டிய பொருள்களுக்காக அவள் மீண்டும் நரேந்திரனிடம் சென்று அவமானப்பட விரும்பவில்லை. அப்போது...

ஆனால், இப்பொழுது நிலமை மாறி விட்டிருந்தது. குழந்தையுடன் — அவன் தந்த பொருள்கள்... நகைகள் அனைத்தையும் கொண்டு கொடுத்துவிட வேண்டு மென்றதொரு ஆவேச உணர்வு அவளைக் குலுக்கிக் கொண்டிருந்தது.

சிவகாமியின் வீட்டிற்கு வந்த போதுதான் அந்த பெட்டியைத் திறந்து அதிலிருந்த புடவை இத்தியாதிகளை ஒரு துண்டில் போட்டு மூட்டையாகக் கட்டி... இரும்பு பீரோவின் அடித்தட்டிற்குள் தள்ளி வைத்திருந்தாள்.

சிவகாமி உத்திரவுப்படி கட்டில் அடியே ஒதுக்கி விட்டிருந்த அந்த பெட்டியை இழுத்து தூசிபோகத் தட்டி திறந்து வைத்துக் கொண்டு இரும்புப் பீரோவில் இருந்த மூட்டையை எடுத்துப் பிரித்து... புடவைகளை ஒழுங்காக அடுக்கினாள்.

ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு கதையைச் சொல்ல அவள் மனம் வேதனையில் கனத்துப் போயிற்று.

'அடியிலிருந்த பச்சை வண்ண மைசூர் பட்டுச்சேலையைக் கையில் எடுத்தபோது... இதைக் கட்டிக் கொண்டால் நீ எப்படி இருப்பாய் தெரியுமா... பச்சைக் கொடிபோல என் தோள் மீது படர்ந்து கொண்டு...!' என்று காதல் மொழியில் கிசுகிசுத்த நினைவு நெஞ்சில் சம்மட்டியாக ஓங்கி அடித்தது.

அத்தனையும் ஒரு வேஷம்... அவளைப் பின்னர் அவமானப்படுத்த திட்டமிட்டுத் தீட்டியதொரு பயங்கர நாடகம்... கண்களில் பெருகிய கண்ணீரை முந்தானையால் துடைத்துக் கொண்டு புடவையை எடுத்துப் பெட்டிக்குள் வைத்தாள்.

உடல் முழுவதும் பரவலாகப் பளிச்சிட்ட சரிகை நட்சத்திரங்கள் அவளைப் பார்த்துப் பரிகசித்துக் கண் சிமிட்டுவது போன்றதொரு பிரமையில் அயர்ந்து போனாள்.

இப்பவும் நரேந்திரன் ஒரு நாடகம் போடுகிறாரே...

பிள்ளையையும் அவளையும் ஏற்றுக் கொள்ள விரும்புவதாகப் பாசாங்கோ...

அவளுக்கு அவரது ஆதரவு தேவையில்லை...

ஆனந்தனை ஏற்றுக் கொள்வதாக நடித்துவிட்டுப் பின்னர் குழந்தையை அனாதையாக்கி விடுவாரோ...

சந்தேகமும்... குழப்பமும் மீண்டும் அவளை ஆட்டிப் படைத்தன. முன் வைத்த காலைப் பின் வைப்பது தவறு. குழந்தையை உரிய இடத்தில் கொண்டு சேர்த்து விட வேண்டியது பெற்ற தாயான அவளது தலையாய கடமை. தூ

இருந்து அதற்கு மேல் என்ன நடக்கிறது என்று பார்க்கலாம். பட்டைக் கடித்துக் கொண்டு உறுதியை மீண்டும் மேற்கொண்டு... பரபரப்பாக எல்லாவற்றையும் பெட்டிக்குள் அடுக்கினாள்.

ஆனந்தனின் ஆடைகள் - அவனது பொம்மைகள் எல்லாவற்றையும் சேகரித்து அதே பெட்டிக்குள் மீதியிருந்த இடத்தில் அடுக்கி வைத்தாள். பெட்டியை மூடி பூட்டிய பின்பு மறுபடி அதைக் கட்டிலுக்கடியில் தள்ளி வைத்துவிட்டு எழுந்தாள்.

இரும்பு பீரோவைப் பூட்டுமுன் அவளுக்கு அந்த யோசனை பளிச்சிட்டது. அப்பாவின் மறைவுக்குப் பின் சிவகாமி வீட்டில் தங்க வந்தபோது அவள் கொண்டு வந்த அவரது இரும்பு பீரோவின் லாக்கரை அவள் அதுவரை திறக்கவேயில்லை.

அப்பாவின் கடை சம்பந்தப்பட்ட சில முக்கிய காகிதங்களும்... அப்பாவின் டைரி, முதலியவைகள் மட்டும் அதில் இருந்தன என்ற ஞாபகம்?

அப்பா தமது சொத்துக்களை விற்று விட்டார் - செத்தும் விட்டார். இன்னமும் அந்தக் காகிதங்கள் ஏன்? குப்பையாக லாக்கரை அடைத்துக் கொண்டிருப்பானேன்? அவைகளை எடுத்துப் பார்த்து தேவையற்றவைகளை கிழித்துப் போட்டு விடவேண்டும் என்ற எண்ணத்துடன் லாக்கரைத் திறக்க இடுப்பிலிருந்த சாவியை எடுத்தாள்.

''என்ன செய்துகிட்டிருக்கே? சாப்பிட நேரமாச்சே... அம்மாவுக்கு முதல்லே சாப்பாடு பரிமாறிட்டு... நீ சாப்பிட உட்கார். நேத்து இரவு கூட நீ நல்லாவே சாப்பிடலை. ஆமாம் ஏன் உன் முகம் ஒரு மாதிரி இருக்கு...?'' கவலையுடன் விசாரித்தாள் வாசற்படியருகே வந்து நின்ற நீலாம்பாள்.

''ஒண்ணுமில்லை. கண்ணிலே தூசி பட்டு விட்டது...!'' என்றாள்.

''உன் உடம்பை நீதான் பார்த்துக்கணும். நல்லா சாப்பிடணும் - தூங்கணும், உன் மகனுக்காகவாவது நீ தெம்பா இருக்க வேண்டாமா?''

'இனி தேவையில்லை!' என்று சொல்லத் துடித்தது நாக்கு. அடக்கிக் கொண்டாள். ''இதோ ஒரு நொடியில் வந்துட்டேன்!'' என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

''சிவகாமி அம்மாளுக்கு எல்லாத்தையும் எடுத்து தட்டிலே போட்டு தயாரா வச்சுடறேன். நீ கொண்டு மேஜை மேலே வைச்சா போரும். உள்ளுக்கும் வெளிக்கும் நீ ஓயாம நடக்க வேண்டாம். உன்னை உக்கார வச்சு நாலு பேர் உபச்சாரம் செய்ய வேண்டியது. அதுபோக, வேளைக் கோளாறு... நீ இங்கே வந்து...!'' மேலே பேசாது அனுதாபத்துடன் அவளைப் பார்த்துவிட்டு நகர்ந்தாள் நீலாம்பாள்.

மகனை வாரி எடுத்து மெல்லக் கட்டிலின் சுவர் பக்கமாகப் போட்டாள். தாய் தொட்டதும் உடம்பைக் குலுக்கிக் கொண்டு தூக்கக் கலக்கமான கண்களால் அம்மாவை ஒரு முறை விழித்துப் பார்த்தான் ஆனந்தன்.

பூப்போன்ற அந்த பார்வை அவளை என்னவோ செய்து விட்டது. நாளை அந்நேரம் அவன் அப்பாவின் பங்களாவில் கண்ணுறங்கிக் கொண்டிருப்பான். அவளைப் போல அன்புடன் அவனைக் கண்காணிக்க அங்கே யார் இருப்பார்கள்!

தாயம்மாள் உண்மை உணர்வோடு குழந்தையைப் பார்த்துக் கொள்வாள். அது போதுமா?

அடுப்புக்கும் அறைக்குமாக அவள் ஓடிக் கொண்டிருக்க முடியுமா, கால் முளைத்துவிட்ட தன் மகனைப் பத்திரமாக வளர்க்க தனியாக ஒரு தாதியை நரேந்திரன் அமர்த்துவார். அவருக்குக் கட்டுப்படியாகும். ஆனால், அன்புடன் வளர்க்க தாதி தாயாகி விட முடியுமா?

மீண்டும் கண்களில் புரண்ட கண்ணீரை அடக்க

முயன்றவளாக... மெல்ல... குழந்தையின் முதுகில் தட்டி மறுபடி அவனைத் தூங்க வைத்தாள். போர்வையை முதுகு வரை இழுத்துவிட்டு... வெளியே நீண்டு கொண்டிருந்த பிஞ்சு விரல்களைத் தொட்ட போது... தாய்ப்பாசம் அவள் மேனியைச் சிலிர்க்கச் செய்தது.

அவனை அப்பாவிடம் சேர்த்துவிட்டு அவள் இனி எப்படித்தான் வாழப் போகிறாள்?

தொண்டையை துக்கம் இறுக்கியது. அவள் வாழ்க்கையில் வரப்போகிற அந்த வெறுமையை எண்ணியபோது... பயங்கரமான உணர்வில் ஆடியது.

சிவகாமி வராந்தாவிலிருந்து சாப்பிட எழுந்து விட்டாள் எனக் காலடி ஓசை அறிவித்ததும்... தாமதமின்றி அறைக்கதவை ஒருக்களித்துவிட்டு... வெளியே வந்தாள்.

சிவகாமி சாப்பிட்டு எழுந்து... முன்னறைக்குப் போய் அமர்ந்து கொண்டதும் தானுண்டு தன் பத்திரிகைகள் உண்டு என மூழ்கிப் போய் விடுவாள். கொஞ்ச நேரத்திற்குப் பின்னர்... கொஞ்ச நேரம் தூங்கத் தன் அறைக்குப் போய் விடுவாள். நீலாம்பாளும் அவளும் நிம்மதியாக உட்கார்ந்து உணவு கொள்ள முடியும்...

ஆனால், அன்று அவளுக்கு நிம்மதி இருக்கவில்லை...

''இன்னும் கொஞ்சம் காரக் குழம்பு ஊற்றட்டுமா...? நெய் விட்டுக்க மறந்து போய்ட்டியே!'' என நீலாம்பாள் உபசரித்துக் கொண்டேயிருந்தாள்.

ஆனால், சோறு விஷமாகத் தொண்டையை விட்டு இறங்க மறுத்தது.

முடிவில் நீலாம்பாள் சொல்லி விட்டாள்.

''உனக்கு உடம்பு நல்லாவேயில்லை. முகமே சொல்கிறது. நீ எனக்கு உதவி ஏதும் செய்ய வேண்டாம். நான் வந்து கூப்பிடற வரை நீ நன்றாகத் தூங்கு... தலை வலிச்சா மாத்திரை சாப்பிடு, மறக்காதே!'' என்று அன்போடு உத்திரவிட்டாள்.

அவளிருந்த மன நிலையில் அவள் தனிமையைப் பெரிதும் விரும்பினாள். இரும்பு பீரோவின் லாக்கரில் இருந்த கடிதங்களை கிழித்துப் போட்டு அதை சுத்தப்படுத்தி விட்டு படுக்க வேண்டும் என்ற தீவிரத்துடன் கதவைத் தாளிட்டுக் கொண்டு லாக்கரைத் திறந்தாள்.

அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஃபைல்களை எடுத்து மேலெழுந்த வாரியாக பார்த்தாள்.

அப்பா கடை ஆரம்பித்த காலத்தில் தயாரிக்கப்பட்ட கணக்குகள்... பழுப்பேறி கைபட்டால் தூளாகிவிடும் நிலையில் இருந்தன.

தேவையற்றவைகளை வேகமாகக் கிழித்து ஒரு பக்கமாகக் குவித்தாள். அவைகளை அள்ளிக் கொண்டு பின் பக்கத்திலிருந்த குப்பைக் கூடைக்குள் போட்டுவிட வேண்டும் என்று தீர்மானித்தவளாக... லாக்கரில் இன்னும் என்னவெல்லாம் தேவையற்று இடத்தை அடைத்துக் கொண்டிருக்கிறது என நுனி காலில் நின்று எம்பிப் பார்த்தாள்.

அப்பாவின் சிவப்பு டைரியும்... அதன் பக்கத்தில் மூலைக்குள் அடங்கி விட்டிருந்த சிறு துணி முடிப்பும் காணப்பட்டது.

அப்பா சில சமயம் தெய்வத்துக்கு நேர்த்திக் கொண்டு மஞ்சள் துணி ஒன்றில் பண முடிப்பு கட்டி வைப்பது வழக்கம்...

வெள்ளைக் கைக்குட்டையின் மீது மஞ்சள் நீரைத் தெளித்து அவசரமாக காணிக்கை முடிப்பு தயாரிப்பதும் உண்டு.

முதல் தடவை உடம்புக்கு வந்தபோது அவர் வேண்டிக் கொண்டிருந்திருப்பார். வீட்டுக்கு வந்ததும் தாமே முடிப்பு எடுத்து வைத்திருக்கலாம். அந்த பிரார்த்தனையை ஈடேற்றாமல் அவர்தான் போய்விட்டாரே...? அதில் முடித்து வைத்துள்ள காசை விநாயகர் கோயில் உண்டியில் போட்டு விட்டால்?

கையை நீட்டி மெல்ல அதை எடுத்தாள். அப்பாவின் வெள்ளைக் கைக்குட்டையில் கட்டப்பட்டிருந்த முடிச்சு அது.

படுக்கை மீது உட்கார்ந்து கொண்டு... அதை மெல்ல அவிழ்த்து விரிப்பின் மீது பரத்தினாள்.

பஞ்சு சுருளில் பொதித்து வைக்கப்பட்டதொன்று கையில் தட்டுப்பட்டது.

அதை நீக்கிவிட்டு உள்ளேயிருந்ததை கையில் எடுத்த போது மின் விசையால் தாக்குண்டது போன்றதொரு பெரும் அதிர்ச்சி அவளுக்கு...

ஜன்னல் வழியே வீசிய ஒளியில்... அவளது உள்ளங்கையில் வைரப்பிள்ளையார் ஒளி வீசிக் கொண்டிருந்தார்.

குப்பென்று அவள் உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டி விட்டது. நெஞ்சு வெடித்து விடும் வேகத்தில் துடித்தது. நா வரண்டு போனது.

கண்கள் அதையே பார்த்தபடி நிலைகுத்திப் போயின.

அப்படியென்றால் இவ்வளவு காலமும் அந்த வைரப் பிள்ளையார் அப்பாவிடமா இருந்தது?

அதை நரேந்திரனிடமிருந்து அப்பா அபகரித்து வைத்துக் கொண்டு விட்டாரே... இது பெருத்த மோசடிதான். மகளைக் கல்யாணம் செய்து கொடுத்த பின்னரும் தொடர்ந்து அதை ஏன் தம்மிடம் வைத்துக் கொண்டிருந்தார்.

திருப்பிக் கொடுக்க முடியாத நிலை — நண்பன் மகனிடம் இருந்த விலையுயர்ந்த பொருளை வஞ்சனையாகத் திருடிக் கொண்டு விட்டதை ஒப்புக்கொள்ள முகமில்லை... துணிவில்லை...

நரேந்திரன் அவர் மீது கடும் கோபம் கொண்டதில் இப்போது நியாயம் இருக்கிறது.

ஆனால்... அவளுக்கு இதில் எந்தவிதமான சம்பந்தமுமில்லையே அதையேன் புரிந்து கொள்ளவில்லை?

இன்னமும் என்ன பொருள்கள் பிறரிடமிருந்து களவாடியவைகளை அப்பா லாக்கரில் ஒளித்து வைத்திருக்கிறார்...? கோபத்துடன் எழுந்து மறுபடியும் நுனி காலில் நின்று எம்பி கையை விட்டுத் துழாவினாள். டைரியைத் தவிர வேறு எதுவும் காணப்படவில்லை.

அவரது சிவப்பு டைரியை — எட்டி எடுத்தாள். அதில் ஒரு காகித உறை வைக்கப்பட்டிருந்தது. பரபரப்புடன் எடுத்தாள். அப்பா அவளுக்கு எழுதி வைத்திருந்த கடிதம் கொண்ட காகித உறை — அதன் மீது அவள் பெயர், எழுதிய தேதி, இடம் எல்லாம்... அப்பாவின் கையெழுத்தில் காணப்பட்டது.

இத்தனை நாள் இவைகளைப் பார்க்காது இருந்தது எப்பேர்ப்பட்ட பிசகு... உறையைக் கிழித்து கடிதத்தை எடுத்துப் பிரித்தாள்.

அன்புள்ள கங்காவுக்கு,

எனக்கு திடீரென மறுபடியும் மாரடைப்பு வந்து இறந்து போனால் இந்த பீரோவில் உள்ள பொருள்களை ஒழுங்கு படுத்த முயலும்போது இந்தக் கடிதம் உன் கையில் தப்பாமல் கிடைக்கும் என்ற நோக்கத்துடன் எழுதுகிறேன்.

உன்னை ஏற்றுக் கொள்ளச் சொல்லி மாப்பிள்ளையைக் கெஞ்சிவிட்டு... அவன் வைரப் பிள்ளையார் தந்தால் ஒழிய வாழ்வு உனக்குத் தர முடியாது என்றபோது வீட்டுக்கு ஒரே உறுதியுடன் வந்தேன். அவனிடமிருந்து அந்த விலை உயர்ந்த பொருளை நான் அபகரித்துக் கொண்டதை ஒப்புக் கொண்டு அதையும் உன்னையும் அவனிடம் சேர்ப்பித்து விடுவது என்ற தீர்மானம். வீட்டுக்கு வந்தவுடன் சிவப்பு டைரியை எடுத்து வரச் சொல்லி கூச்சல் இட்டேன்.

நான் சில சமயங்களில் அதில் முக்கியமான சங்கதிகளுக்கு குறிப்பு வைத்திருப்பது உண்டு. சமீப காலத்தில் ஏற்பட்ட பல குழப்பங்களில் எனக்கு அந்த வைரப் பிள்ளையாரை எங்கே ஒளித்து வைத்தேன் என்ற சங்கதி மறந்து போய்விட்டது. டைரியில் குறித்து வைத்திருப்பேன் என எண்ணி அதைப் புரட்டியபோது எந்தக் குறிப்பும் காணவில்லை. குழப்பமும் ஆத்திரமும் தாளாது, 'உனக்கு அதிர்ஷ்டம் இல்லை!' என கத்தினேன். ஆனால், அடுத்த நாள் என் பெட்டிக்குள் நான் வேறு எதையோ தேடியபோது என் கைக்குட்டையில் பத்திரமாக முடிச்சிட்டு வைத்திருந்த வைரப்பிள்ளையார் அகப்பட்டு விட்டது.

இன்று நீ உன் அத்தையுடன் உன் கணவன்வீட்டுக்குக் கிளம்பியிருக்கிறாய்... அவன் உன்னை ஏற்று வாழ்க்கை கொடுத்துவிட்டால் நான் இறந்த பிறகு இதைக் கண்டுபிடித்து அவன் வசம் ஒப்படைத்து எனக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள். அவன் உன்னை ஏற்காவிட்டால்... உன்னிடம் இதை எடுத்துத் தந்துவிடுகிறேன். வைரப் பிள்ளையாருடன் போய் அவன் காலில் விழுந்தால் மனம் கனிந்து ஏற்றுக் கொண்டு விடுவான்.

பேராசையினால் நான் செய்த பிசகு இப்படி உன் வாழ்வில் மண்ணை அள்ளிப் போடுமென நினைக்கவில்லை. என்னை மன்னித்துவிடு. எனக்கு எப்பொழுதுமே பண ஆசை இருந்தது. அதன் பலனை நன்றாக அனுபவித்து விட்டேன்.

உன் அன்புள்ள அப்பா..

ரத்னசாமி.

இப்போது அவளுக்குப் புரிந்து விட்டது. அவள் தந்தை அவளது கணவனை மோசடி செய்தது உண்மை. அதை விற்கக்

கொண்டு வந்து நரேந்திரன் கொடுத்ததுமே அதைத் திருடிக் கொள்ளத் திட்டமிட்டு விட்டார். எடுத்துக் கொண்டு அவர் ஏமாற்றி விட்டார்.

அதைச் சொல்லத்தான் அன்று ஆஸ்பத்திரியில் அவர் அவளை அருகில் அழைத்துப் பேச முற்பட்டார்.

வாய்ப்பு இல்லாது... அவர் மறைந்து போனார்; கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாகி விட்டன. அவளும் அப்பாவின் பீரோவைத் திறந்தே பார்க்காது... நாட்களை வீணே ஓட்டி விட்டிருக்கிறாள்.

ஆமாம்! அவள் இப்போது என்ன செய்ய?

கடிதத்தை மீண்டும் படித்துவிட்டு பிரமிப்புடன் நின்று கொண்டிருந்தாள்.

38

கடிதத்தையும் வைரப் பிள்ளையாரையும் பத்திரமாக லாக்கருக்குள் வைத்துப் பூட்டினாள்.

இத்தனை காலம் மனதைப் பாறாங்கல்லாக அமுக்கிக் கொண்டிருந்த வேதனை திடீரென்று மறைந்து மனம் லேசாகி விட்டதை உணர்ந்தாள்.

இந்தத் திடுக்கிடும் உண்மையை ஜீரணித்துக் கொள்ள அவளுக்கு அவகாசம் தேவைப்பட்டது.

இரண்டு நாட்களுக்குப் பின்னர்தான் அவள் குழந்தையுடன் நரேந்திரனை சந்திக்கச் செல்ல வேண்டும்.

அந்தக் கடிதத்தைப் படித்த பின் நரேந்திரன் வெட்கித் தலை குனியப் போகிறார்.

ரத்னசாமி செய்த மோசடியில் கொஞ்சமும் பங்கு இல்லாத

நிரபராதியான அவளை இம்சை செய்து அவமானப்படுத்தி ஒதுக்கி வைத்தது மிருகத்தனமான செயல் என்பதை உணர்ந்து வேதனைப் படப் போகிறார்.

நன்றாக வேதனைப்படட்டும். வெட்கி மனம் குமையட்டும். இத்தனை காலம் அவள் படாப் பழியைச் சுமந்து எத்தனை கண்ணீர் வடித்திருக்கிறாள்.

இனி அவள் செய்யப்போவது இதுதான்.

கடிதத்தை கணவனிடம் கொடுத்துத் தன்மீது ஏற்பட்ட மாசைத் துடைத்துக் கொள்ளப் போகிறாள்.

அவரது பொருளான வைரப் பிள்ளையாரை அவரிடமே கொடுத்துவிட்டு... தன் தந்தையின் அடாத செயலுக்கு மன்னிப்பு கேட்கப் போகிறாள்.

ஆனால், முதலில் எடுத்த அந்த முடிவை அவள் மாற்றிக் கொள்ளப் போவதில்லை.

என்னையும் நீ மன்னிக்க வேண்டும் என்று நரேந்திரன் அவளிடம் குழைந்து பேசுவார். எத்தனை வற்புறுத்தினாலும் ஏமாந்து போய் அவள் மீண்டும் அவருடன் வாழ சம்மதிக்கப் போவதில்லை.

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போதாதா?

தான் வரப்போவதை அவள் தொலைபேசியில் முன்னதாகவே நரேந்திரனுக்கு தெரிவிக்கவும் விரும்ப வில்லை. கணவன் அலுவலகம் கிளம்ப ஆயத்தமாகு முன் வீட்டுக்குள் நுழைந்து திடுக்கிட வைக்க விரும்பினாள்.

எத்தனை தடவை அவள் கணவன் அவளை திடுக்கிட வைத்திருக்கிறார். திகைத்து அழ வைத்திருக்கிறார்?

ஒரு தடவை அவரும் அந்த உணர்வை அனுபவித்து இருதயம் வாய்க்குள் வந்துவிட்டது போல பதைக்கட்டும்.

பலவும் எண்ணி ஆத்திரம் கலந்த ஒரு சிரிப்பில் அவள்

உடல் குலுங்கினாள். கொஞ்ச நேரம் சிரித்துக் கொண்டேயிருந்தாள்.

அன்று காலை சிவகாமி காப்பி பலகாரத்திற்குப் பின்னர் வராந்தாவில் வழக்கம் போல காலை பத்திரிகைகளுடன் உட்கார்ந்திருந்தாள்.

''மருந்து சாப்பிட மறந்துட்டீங்களே?'' என்றபடி கங்கா தண்ணீர் டம்ளரும் மருந்துப் பட்டையுமாக அங்கு வந்தாள். அவைகளை அருகிலிருந்ததொரு முக்காலி மீது வைத்தாள்.

வெள்ளித் தாளை உரித்து மாத்திரையை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு தண்ணீருடன் விழுங்கினாள் சிவகாமி.

''என்னம்மா கங்கா... முகம் ஒரு மாதிரி இருக்கு. ஏதாவது சொல்ல வந்தியா?'' சிவகாமி புன்னகைத்தபோது திடுக்கிட்டுப் போனாள் அவள்.

''ஒண்ணுமில்லை. மருந்து பட்டையையும் டம்ளரையும் எடுத்துப் போகக் காத்திருக்கேன்?'' மழுப்பினாள்.

ஒரு கணம் சிவகாமியின் ஆலோசனையைக் கேட்க அவளது மனம் தயங்கியது உண்மைதான்.

'குழந்தையைக் கொண்டு போய் தகப்பனிடம் சேர்த்து விடப் போகிறேன் சரித்தானே?' என்று கேட்க நினைத்தாள்.

'இந்தச் சின்ன வயதில் குழந்தைக்குத் தாயின் அரவணைப்பு ரொம்பத் தேவையாச்சே. அவனைப் பிரியவா நினைக்கிறே?' என்று சிவகாமி சொல்லிவிட்டால்?

அவசரப்படக் கூடாது. மறுநாள் காலைதானே அவள் குழந்தையுடன் புறப்படப் போகிறாள்.

அன்று இரவு சிவகாமி உணவுக்குப் பின்னர் தொலைக்காட்சியை செய்திவரை பார்த்துவிட்டு எழுந்து படுக்கப் போகுமுன் மெல்ல சொல்லி யோசனை கேட்க வேண்டும்.

இத்தனை காலம் அவளுக்கும், ஆனந்தனுக்கும் அடைக்கலம் கொடுத்து உதவியிருக்கும் அந்த அம்மாளிடம் சொல்லாமல் அவள் எந்தக் காரியமும் செய்வது சரியல்ல.

சிவகாமி அம்மாள் என்ன சொல்லப் போகிறாள்?

'இது உன் பிரச்னை நீயே நன்றாக சிந்தித்து செயல்பட வேண்டும்' என்று முடிவாகச் சொல்லிவிடுவாள்.

பிறரது அந்தரங்கத்தில் தலையிட்டுக் கொண்டு குழப்ப விரும்பாத ஒரு குணம் அந்த அம்மாளுடையது.

''கங்கா...!'' என்று மெல்லிய குரலில் சிவகாமி அழைத்தாள்.

தண்ணீர் டம்ளரை எடுக்கக் குனிந்த கங்கா... திகைப்புடன் நிமிர்ந்தாள்.

''பெற்ற பெண்ணைப் போல நீ என்னை ரொம்பவே கவனிச்சுக் கொள்றே! என்னிக்காவது ஒரு நாள் மனம் மாறி நீ உன்வீட்டுக்குப் போய்விட்டால் ஆனந்தனும் நீயும் இல்லாத இந்த வீடு எனக்கு ரொம்ப வெறுமையாகத் தெரியும்?''

மவுனமாக கங்கா அவளைப் பார்த்தாள்.

''அதுக்காக நீ எப்பவும் என் வீட்டிலேயே இப்படி வாழணும்னு நான் விரும்பலை. உனக்கும் ஒரு நல்ல காலம் வரணும்னு நான் ரொம்ப வேண்டிக்கிறேன்...!''

சிவகாமி அம்மாள் சட்டென்று தன் மனதில் உள்ளதை வாரிக் கொட்டும் ஆசாமியல்ல...

உள்ளம் குளிர்ந்து அவள் சொன்னதைக் கேட்டு மனம் சிலிர்த்துப் போனாள் கங்கா...

''நன்றி அம்மா!'' என்று கூறிவிட்டு டம்ளர் மருந்து பட்டையுடன் உள்ளே சென்று விட்டாள்.

பகல் உணவுக்கு நீலாம்மாளுக்கு உதவ சமையலறைக்குள் புகுந்தபோது ஆனந்தன் காரணமின்றி வீரிட்டு அழ ஆரம்பித்தான்.

''குழந்தையை எடுத்துக் கொண்டு வாசலில் போய் நின்று விளையாட்டுக் காட்டி சமாதானப் படுத்து... போம்மா'' என்று நீலாம்மாள் அன்புடன் அதட்டினாள்.

நடையில் அழுத்தமான காலடி ஓசை கேட்டது.

சிவகாமியம்மாள் கையில் பிடித்த பத்திரிக்கைத் தாளுடன்... மூச்சிறைக்க வேகமாக வந்து கொண்டிருந்தாள்.

''கங்கா! உனக்கு போன் வந்திருக்கு. பூரணி கூப்பிடுகிறாள். உன்னிடம் அவசரமாகப் பேசணுமாம்!'' என்றாள்.

இந்த காலை வேளையில் பூரணி அவளை ஏன் அழைக்க வேணும்? சொன்ன கதையையே திரும்பிச் சொல்ல மறுபடி அங்கே வர உத்திரவு கேட்கவா...

உரத்த குரலில் அழுத மகனை வாரி அணைத்துக் கொண்டு அவனது கண்ணீரைப் புடவைத் தலைப்பால் துடைத்து விட்டு... அவனது விளையாட்டு பொம்மைகளில் இரண்டை எடுத்துக் கொண்டு முன்னறைக்கு விரைந்தாள். குழந்தையை பொம்மைகளுடன் தரையில் விளையாட விட்டுவிட்டு தொலைபேசியின் ரிசீவரை எடுத்தாள்.

''அண்ணி! நான்தான் பூரணி பேசறேன். எப்படிச் சொல்றதுன்னு தெரியலை. ஆனால் சொல்லாமலிருக்கவும் முடியாது...!''

கங்கா அரண்டு போனாள்... பூரணி என்ன சொல்ல இந்த பீடிகை போடுகிறாள்? அவளது நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. கற்பனை பல உருவங்களில் சிறகடிக்கத் தொடங்கியது.

''எந்த சங்கதியானாலும் சொல்லு கேட்கிறேன்!''

கங்காவுக்கு வாயுலர்ந்து போனது.

''கொஞ்ச நாளா வேலைக்குக்கூட போகாத அண்ணன் முந்தாநேத்து காலையிலிருந்துதான் தன் தொழிலைக் கவனிக்க ஆரம்பிச்சார். நேத்து மாலை புதுசா அவர் கட்டிக்கிட்டிருக்கிற ஒரு ஃபிளாட்டைப் பார்வையிடப் போன இடத்திலே... கல் ஆலியல் ஒண்ணு சரிஞ்சு அவர் மேல விழ; படு காயமடைஞ்சு நினைவில்லாம அமிர்தா மருத்துவமனையிலே அனுமதிக்கப் பட்டிருக்கார். நானும், என் கணவரும் அவரைப் பார்க்கப் புறப்பட்டுக் கொண்டிருக்கோம். உங்ககிட்ட இதைச் சொல்ல வேண்டியது என் கடமை. நேரிடையாக வந்து சொல்ல நேரமில்லை - எனக்கே செய்தி இப்பத்தான் தெரிஞ்சது...''

''அப்படியா...?'' கேட்ட கங்கா திகைப்புடன் உறைந்து போனாள்.

அவளையும் மீறி கண்களில் பெருகிய கண்ணீர் கன்னங்களில் கோடிட்டது.

''அண்ணி... நான் கிளம்பறேன் -வாசலில் என் கணவர் எனக்காகக் காத்துக் கொண்டு நிக்கிறார்... அண்ணன் நிலை எப்படியிருக்கோன்னு நினைக்கவே எனக்குப் பயமா இருக்கு. வச்சுடட்டுமா?'' போனை டக்கென்று பூரணி வைத்து விட்டாள்.

தூது வந்த அன்று அவளிடம் கடுமையாகத்தான் தன் முடிவைத் தெரிவித்திருந்தாள் கங்கா.

அதனாலோ என்னவோ பூரணி நடந்த செய்தியை மட்டும்தான் சொன்னாள்.

''உடனே கங்கா புறப்பட்டு வந்து நரேந்திரனைப் பார்க்க வேண்டும்!'' என்று ஏதும் சொல்லவில்லை...

முன்னறைக்குள் தலையை நீட்டிய சிவகாமி ஆவலை அடக்கமாட்டாது கேட்டு விட்டாள்.

''கண் கலங்கி நிற்கிறியே... பூரணி ஏதாவது மனசு வேதனைப்படற சங்கதி சொன்னாளா என்ன?''

''ஆமாம் அம்மா...! என் கணவர் மேற்பார்வையில் நடக்கும் கட்டடவேலை ஒன்றில் அவருக்கு பெருத்த விபத்து ஏற்பட்டு விட்டதாம்... மருத்துவமனையில் நினைவில்லா நிலைமையில் சேர்க்கப்பட்டிருக்கிறாராம்!''

''அட கடவுளே!''

''நான் உடனடியாகக் கிளம்பணும் அம்மா. குழந்தையையும் எடுத்துக் கொண்டு போக விரும்பறேன்... ஒரு சமயம் அவருக்கு நினைவு வந்ததும் குழந்தையைப் பார்க்கணும்னு கேட்டா...!'' அடக்க முடியாது விசும்பினாள்.

என்ன விந்தை இது! சற்று நேரத்திற்கு முன் வரை நரேந்திரனைப் பற்றிக் கடுமையாக சிந்தித்தவள் அந்த செய்தி கேட்டதும் எப்படி மனம் கரைந்து... துயரத்தில் துவண்டு போய் விட்டாள்?

''கங்கா நீ தைரியமா இருக்கணும்... என்ன நடந்தது... நிலைமை எப்படி இருக்குன்னு நேரே போய் பார்த்து தெரிஞ்சுக்கோ... பணம் ஏதாவது தேவைப்பட்டா நான் தரேன்...!'' இடுப்பிலிருந்த கொத்துச் சாவியை உருவிக் கொண்டாள் சிவகாமி...

''வேண்டாம் அம்மா டாக்சி செலவுக்கு தேவைப்பட்டது கைவசம் இருக்கு... நான் போய்ட்டு வரேன்...'' என்று கூறியபடி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு குழந்தையை வாரி இடுப்பில் எடுத்துக் கொண்டாள்.

சங்கதி தெரிந்ததும் நீலாம்மாள் ஓடி வந்தாள்.

''டாக்சி நிறுத்தம் வரை நான் கூட துணையா வரேன். தனியா போறியே அம்மா...'' ஆதங்கத்துடன் கேட்டாள்.

''வேண்டாம் அம்மா. என்னால் சமாளிக்க முடியும். வீட்டு வேலைகளைப் பாதியிலே போட்டுட்டு போறேன்னு நினைக்காதீங்க... ரொம்ப அவசரம்'' என்று தடுமாறினாள் கங்கா...

''அது கிடக்கட்டும்... உன் கணவரை உடனே போய் பாருமம்மா... அதுதான் முக்கியமான வேலை...!'' என்ற நீலாம்மாள் ஒரு துணிப்பையில் குழந்தையின் உடைகள் மலவற்றையும் அவள் மாற்றுப்புடவை - ரவிக்கை முத்தியாதிகளையும் பொறுக்கி போட்டு நிரப்பிக் கையில் கொடுத்து உதவினாள்.

''உங்க வீடு இருக்கும்மா -அவசரப்படாம அங்கே தங்கியிருந்து வரலாம்... எல்லாம் நல்லபடியா முடியும்... கடவுள் நம்மைப் போன்றவர்களைக் கைவிட மாட்டார்...'' ஆறுதலாகப் பேசியபடி கேட் வரை வந்து வழிவிட்டாள்.

''தொலைபேசியில் பிறகு உங்ககிட்ட எல்லாம் சொல்றேன் -வரேன்'' என்று கூறிவிட்டு விரைவாக நடந்தாள் கங்கா...

முதலில் அவள் நேரிடையாக அமிர்தா மருத்துவ மனைக்குப் போக முடியாது. குழந்தையை உள்ளே அனுமதிக்க மறுத்து விடுவார்கள்... அதனால் அவள் நேரே நரேந்திரனின் பங்களாவுக்குத்தான் போக வேண்டும்...

நுங்கம்பாக்கம் ரேமெண்ட் அவென்யூவுக்குப் போகணும் என்று கூறிவிட்டு டாக்சிக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டாள். அது மெல்ல ஊர்வது போன்ற பிரமையில் தவித்துப் போனாள்.

டாக்சிக்குள் இருப்பவளைப் பார்த்ததும் காவலாளி கேட்டை அகலமாகத் திறந்து வைத்து சலாம் போட்டான்.

பணத்தைக் கொடுத்துவிட்டு இடுப்பில் குழந்தையை தூக்கிக் கொண்டு கையில் துணிப்பையை சுமந்தபடி வராந்தா படிகளில் ஏறியவளை தூரத்திலிருந்தபடியே அடையாளம் கண்டு கொண்டு விட்டான் தங்கப்பன்.

உற்சாகமாகக் குரைத்துக் கொண்டு ஓடிவந்த நிம்மனுக்குக்கூட எஜமானி அவள் என்று புரிந்து விட்டிருந்தது... வாலை ஆட்டியபடி அவளது புடவை நுனியை முகர்ந்து பார்த்தபடி நின்றது அது.

''அது உங்க வீட்டு நாய் அம்மா... ஒண்ணும் செய்யாது -குழந்தையையும், பையையும் இப்படிக் கொடுங்க... உள்ளே வாங்க!'' என்று வரவேற்றான் தங்கப்பன்.

''அம்மா... வந்துட்டீங்களா நீங்க கட்டாயம் வருவீங்கன்னு தெரியும்... அய்யாவுக்கு'' என்று பதட்டமாகப் பேசியபடி உள்ளேயிருந்து விரைந்து வந்த... தாயம்மாள் கண்ணீருடன் விம்மினாள்.

''இந்தா... நீ ரொம்ப கலாட்டா செய்யாதே. அவங்களே அரண்டு புரண்டு வந்திருக்காங்க... புள்ளையைப்பிடி - நான் ஆபீசுக்குப் போன் போட்டு காரை வரவழைக்கிறேன். பிறகு அம்மாவோட நீ... கூட ஆஸ்பத்திரிக்கு துணையா போய்ட்டு வா... நான் வீட்டிலே குழந்தையை வச்சுக் கொண்டு இருக்கேன்... கைப்புள்ளைகளை உள்ளார விட மாட்டாங்கன்னு தெரியுமில்லையா?'' மனைவியை அதட்டினான்... அவன்.

சிறிது பொழுதில்... நரேந்திரனது படகுக் கார்... வாசலில் வந்து நின்றது.

''தாகத்துக்கு கொஞ்சம் இதை சாப்பிட்டுட்டு... கிளம்புங்கம்மா!'' என்று தாயம்மாள் உபசரித்த... காப்பியை மறுத்துவிட்டு... கால்கள் தள்ளாட தொய்ந்த உணர்வுகளுடன்... காரில் ஏறிக் கொண்டாள்.

அருகிலிருந்த அமிர்தா நர்ஸிங் ஹோமை கார் அடைவதற்குள் ஆயிரம் யுகங்கள் ஆகிவிட்டன போன்ற திகைப்பு அவளுக்கு.

39

கார் பெரியதொரு தோட்டத்திற்குள் நுழைந்தது. பளிச்சென்று புது சாயத்துடன் தெரிந்த மிகப்பெரியதொரு கட்டடத்தின் வாசலில் நின்றது.

சில கோடி ரூபாய்களை விழுங்கிவிட்டு வானத்தைப் பார்த்து உயரமாக சில அடுக்கு மாடிகளுடன் நின்ற அந்த புது மருத்துவமனை சமீப காலத்தில்தான் அங்கே உருவாகி செயல்பட்டுக் கொண்டிருந்தது.

ஓட்டல்களில்தான் சாப்பிட ஒரு கூட்டம் என்றால் மருத்துவமனையில் கூடவா அனுமதியைத் தேடி இப்படி ஒரு கூட்டம்... தோட்டத்தில் இங்குமங்கும் கும்பலாக நின்றவர்களைக் கண்டு கங்கா பிரமித்துப் போனாள்.

வாசல் முன்னாலிருந்த பெரிய வரவேற்பறையை அடைத்துக் கொண்டிருந்த கண்ணாடிக் கதவையும் அதைக் காவல் செய்து நின்று கொண்டிருந்த காக்கி சீருடைக் காவலாளியையும் பார்த்த மாத்திரமே... அவள் குடல் புரண்டு பீதி வயிற்றைக் கப்பிக் கொண்டது.

தாயம்மாளுக்கு ஆஸ்பத்திரிகள் என்றாலே பயம். கழுத்திலே ஸ்டெதஸ்கோப் மாலையுடன் வெள்ளைக் கோட்டில் பரபரவென்று உள்ளே வருவதும் போவதுமாக இருந்த இளம் வைத்தியர்களையும் கஞ்சியில் மொடப்பாகி நின்ற வெள்ளைச் சீருடையில் பாதணி சப்திக்க வேகமாக நடந்து உள்ளே சென்று கொண்டிருந்த நர்ஸ் பெண்களையும் வியப்பும் கலவரமுமாகப் பார்த்தபடி காரினின்று மெல்ல இறங்கினாள்.

ரிசப்ஷன் மேஜைக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த

அழகி தன் பார்வையை கண்ணாடிக் கதவு வழியே வெளியே செலுத்தினாள். அன்று காலையிலிருந்து அந்த படகுக்கார்... பலரைச் சுமந்து கொண்டு வருவதும் போவதுமாக இருந்ததை அவள் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்.

மூன்றாவது தளத்தில் வராந்தாவின் முடிவிலிருந்த வி.ஐ.பி. தீவிர கண்காணிப்பு அறையில் தன் நினைவு இன்றி பலத்த காயத்துடன் படுக்கையில் கிடக்கும் நரேந்திரனது கார் அது என்றவரை அவள் புரிந்து கொண்டிருந்தாள்.

வியாபார உலகில் பெரியதொரு புள்ளியாக இருக்க வேண்டும்... மருத்துவமனையில் அனுமதித்த கொஞ்ச நேரத்தில் அவனைப் பார்க்க எத்தனை பேர்கள்... எத்தனை கார்களில் வந்து போய்க் கொண்டிருந்தனர்? அந்த படகுக்காரில் வந்து போன அவனது அலுவலக ஊழியர்கள்தான் எத்தனை பேர்?

சிலருக்கு நோய் நொடிகள் ஏற்படும்போது கூட ஒரு தனி ராசி. அவள் தாய் முற்றத்து பாசியில் வழுக்கி விழுந்து காலை ஒடித்துக் கொண்டு... கட்டுப் போட்டுக் கொண்டு வீட்டோடு இருந்த போது... அவளைப் பார்க்கப் பக்கத்து வீட்டுக்காரியும் - எதிர்வீட்டு அம்மாளும் ஒரே ஒரு தடவை வந்து போனார்கள். அதற்குப்பின் இருக்கிறாளா செத்தாளா என்று கேட்க... யாருமே கிடையாது.

ஏழைகளுக்கு ஏற்படும் இடர்களைப் பற்றி யாருக்கு அக்கறை? பணக்காரர்களுக்கு பல்வலி வந்துவிட்டால் கூட எத்தனை ஆர்ப்பாட்டம், எத்தனை சிகிச்சை? - எத்தனை பார்வையாளர்கள்?...

தனக்குள்ளே குமைந்தபடி வண்டியிலிருந்து இறங்கிய இரண்டு பெண்களையும் ஊன்றிப் பார்த்தாள்.

கொஞ்சம் வயதானவள் போலத் தெரிந்த பெண் நரேந்திரன் வீட்டு வேலைக்காரி என்பதில் சந்தேகமில்லை...

எஜமானரைப் பார்க்க அவசரமாக எண்ணை தடவி முடியை வாரி இழுத்து முடிச்சிட்டு கொண்டு வந்திருக்கிறாள். கொடியில் காய வைத்திருந்த சேலையை சுருக்கம் கலையாது அப்படியே அணிந்து கொண்டு வந்திருக்கிறாள். நெற்றியில் அப்பிக் கொண்டிருந்த குங்குமத்துடன் வியர்வையும் தலையில் பூசியிருந்த எண்ணையும் கலந்து புருவங்களிடையே மூக்கின் மீது வழிந்து கொண்டிருந்தது.

அவள் பக்கத்தில் ஒடிசலாக உயரமாக பார்க்க லட்சணமாகத் தெரிகிறவள்... உறவுக்காரியோ?

இருக்க முடியாது... வேலைக்காரியுடன் வந்து இறங்கிய அந்தப் பெண் வீட்டு சமையற்காரியாக இருக்க வேண்டும். இடையில் வாயில் புடவையும் - கழுத்தில் தாலிச் சரடும் கைகளில் கண்ணாடி வளைகளும் - நெற்றி நிறைந்த குங்குமமுமாக வந்து நிற்கும் அவள் நரேந்திரன் போன்ற பெரிய மனிதரின்... ஏழை உறவுக்காரியோ?...

சற்றுமுன் பூரணி - அவள் கணவன் - யோகநாதன் முதலியோர் காரில் வந்து இறங்கி உள்ளே செல்ல விவரம் கேட்டபோது தன் முத்துப் பற்கள் தெரிய முறுவலித்து... பணிவோடு பதில் சொன்ன அவளுக்கு... அந்த இருவரையும் கண்டதும் கொஞ்சம் அசட்டையாகத்தான் இருந்தது.

அலுவலகத்து மானேஜரிலிருந்து வீட்டுத் தோட்டக்காரன் வரை பார்க்க வந்தவர்களுக்கு பதில் சொல்லி போலியாகப் புன்னகைத்து அவளுக்கு தாடை வலித்துப் போயிருந்தது.

கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு மேஜை முன் வந்து நின்றவர்களைப் பாராதது போல... ஒரு ஃபைலைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

''திரு. நரேந்திரன் அவர்கள் காயமுற்று இங்கே அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டோம். அவரைப் பார்க்க வந்திருக்கிறோம்'' கங்கா பேசுவதற்குள் திணறிப் போனாள்.

''எந்த நரேந்திரனைக் கேட்கறீங்க...?'' தலை நிமிராது ஃபைலையே பார்த்துக் கொண்டிருந்தாள் ரிசப்ஷன் பெண்.

''ரெமண்ட் அவென்யூவிலிருந்து அனுமதிக்கப் பட்டிருக்கும் 'நரேந்திரன் ரியல் எஸ்டேட்' என்ற கம்பெனியின் முதலாளி திரு. கே.நரேந்திரன் என்பவரைப் பார்க்கணும்!'' படபடவென்று சொன்னாள் கங்கா.

''காலையிலிருந்து அவரைப் பார்க்க எத்தனை பேர் வந்துட்டாங்க. டாக்டர்கள் இப்போ தங்கள் ரவுண்டுக்கு வரநேரம். அனாவசியமாக அறைக்கு முன்னே கூட்டம் போட்டுக்கிட்டிருந்தா கோபிப்பாங்க... சாயங்காலம் பார்வையாளர் நேரத்திலே வாங்க...!'' என்றாள் அதட்டலாக.

கங்காவுக்குத் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. யார் இவள்? அவளது கணவரைப் பார்க்கக்கூடாது என்று தடை உத்திரவு போடுகிறாள்.

அவள் தந்தை மருத்துவமனையிலிருந்ததால் ஏற்பட்ட அனுபவம் - அவளுக்கு அதுபற்றி சில சட்ட திட்டங்கள் தெரியும்.

''ரொம்ப வேண்டியவங்களை டாக்டர் உள்ளே அனுமதிக்க மறுக்க மாட்டாங்க... அவசர கேஸ்கள் என்றால், உறவினர் யாராவது கூட இருக்க ஒப்புக் கொள்வாங்களே?''

''நீங்க நரேந்திரன் அவர்களுக்கு எந்த விதத்தில் வேண்டியவர்கள்?'' வெடுக்கென்று அந்தப் பெண் ஏளனமாகக் கேட்டபோது, கங்கா அவமானத்தில் முகம் சிவந்து போனாள்.

''நான் அவரது மனைவி!'' என்று கூறிவிட்டு வெட்டி விடுவது போல அந்தப் பெண்ணைக் கோபத்துடன் வெறித்தாள்.

'நீங்களா அவரது மனைவி...! என்ன கதை இது?' என்று ஏளனமாகக் கேட்க வாயைத் திறந்தவள்... லிஃப்டிலிருந்து வெளிவந்த யோகநாதனைப் பார்த்துவிட்டு... நிறுத்திக் கொண்டாள்.

''அம்மா? வந்துட்டீங்களா... நானே நேரே வந்து கூட்டிக் கொண்டு வந்திருக்கணும். இங்கே கவனிக்க வேண்டிய வேலைகள் ரொம்ப இருந்ததால் முடியலை - மன்னிக்கணும். இப்படி வாங்கோ... தாயம்மா நீயும் கூட வா!'' என்று அவர்களை அழைத்ததைக் கேட்டு அந்தப் பெண் திடுக்கிட்டுப் போனாள்.

உண்மையில் இந்த ஏழைப்பெண்ணா நரேந்திரனது மனைவி... அதற்குமேல் அவளுக்கு சிந்திக்கப் பொழுது இருக்கவில்லை. மற்ற நோயாளிகளைப் பற்றி விவரம் அறிய வந்து கொண்டிருந்தவர்களுக்கு பதில் அளிக்கவும் - ஓயாது ஒலித்த தொலைபேசியை எடுத்துப் பதில் சொல்லவுமே அவளுக்கு சரியாக இருந்தது.

இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால்தானே உறவுக்கும் மதிப்பு உண்டு. சிவகாமி அம்மாள் வீட்டில் வேலைக்காரியாக உழன்று கொண்டிருந்த அவளை... பிரபல தொழிலதிபர் நரேந்திரன் மனைவி என நம்ப அந்தப் பெண் மறுத்ததில் நியாயம் இருக்கிறதே... தன்னுள் எண்ணி நொந்து கொண்டு... யோகநாதனைப் பின்பற்றி லிஃப்டுக்குள் நுழைந்தாள் கங்கா...

மூன்றாவது தளத்தில் இறங்கி மெல்ல வராந்தாவில் நடந்தார்கள் அவர்கள்.

''தாயம்மா! ஐயாவைப் பார்த்து இரைஞ்சு அழுது கலாட்டா பண்ணக்கூடாது. டாக்டர்கள் வர நேரம். ஒரு அஞ்சு நிமிசம் பார்த்துட்டு நீ போய் காரில் உட்கார்ந்துக்கோ தெரிஞ்சுதா?'' யோகநாதன் மெல்லக் கூறினார்.

தாயம்மாள் தலையை ஆட்டியபடி பின்னால் மெல்ல நடந்தாள். வராந்தாவில் ஒருபுறம் காத்துக் கொண்டு நின்ற பூரணி ஓடி வந்து கங்காவை அணைத்துக் கொண்டாள்.

''அண்ணி! நமக்குப் போதாத காலம் - இல்லாட்டா

இப்படி ஒரு விபத்து ஏற்பட்டிருக்குமா... அண்ணன் கிடக்கிற கோலத்தைப் பார்த்தால்!'' முடிக்காது விசும்பினாள்.

வராந்தாவில் பலத்த காலடி ஓசை கேட்டதும் பூரணி விலகிக்கொண்டு கண்களைத் துடைத்துக் கொண்டு நகர்ந்து தன் கணவன் அருகே நின்று கொண்டாள்.

மருத்துவமனையின் தலைவர் தமது உதவி டாக்டர்கள் -நர்ஸ்களுடன்... நரேந்திரனைப் பார்க்க வந்து கொண்டிருந்தார்.

யோகநாதனைப் பார்த்துத் தலை அசைத்து விட்டு டாக்டர் தமது குழுவினருடன் உள்ளே சென்றார்.

அரைமணி நேரத்திற்கு மேலாகியது.

கங்கா நெஞ்சு படபடக்க... 'டாக்டர் என்ன சொல்லப் போகிறாரோ?' என்று கிலியுடன் நின்று கொண்டிருந்தாள்.

ஒரு நர்ஸ் கதவைத் திறந்து எட்டிப் பார்த்து யோகநாதனை உள்ளே அழைத்தாள். சிறிது பொழுதில் கங்காவையும் உள்ளே வருமாறு கூப்பிட்டாள்.

பெரிதாக தெரிந்த அறையின் மத்தியில் கிடந்த கட்டிலின் மீது வெள்ளை விரிப்பின் மேல் தலையில் பலத்த கட்டுடன் தன் நினைவின்றி நரேந்திரன் கிடந்தான் - கைமடக்கில் ரப்பர் குழாய் மூலம் குளுகோஸ் துளித்துளியாகச் சென்று கொண்டிருந்தது. கட்டிலின் தலைமாட்டிலும், பக்கத்திலும் ஏகப்பட்ட பரிசோதனை சாதனங்கள் இதயத்துடிப்பை எடுத்துக்காட்டும் மானிட்டர் இத்யாதிகளைப் பார்த்தபோது... அவள் திகைப்பும், துயரமும் மேலிட்டு நடுங்கிப் போய் விட்டாள்.

அவள் தந்தை நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் இருந்த போது... பல தடபுடல் கிசிச்சைகள் நடந்தன... ஆனால் இத்தனை அமர்க்களப்படவில்லையே...

''நரேந்திரனுக்கு ஏற்பட்டிருக்கும் காயம் மிகப் பலமானதாக உள்ளதோ? அவரைக் குணப்படுத்துவது கடினம் என டாக்டர்களே பயப்படுகிறார்களோ... ஏதாவது செய்து

பார்க்கலாம் என்ற எண்ணத்துடன்தான் இந்த பலத்த சிகிச்சை முறைகளை அப்பியாசிக்கிறார்களோ?... எனக்குக் கணவன் என்ற உறவுக்காக இல்லாவிட்டாலும் - ஆனந்தனுக்குத் தந்தையாக இவர் வாழ அருள்பாவிக்க வேண்டும். கடவுளே... கருணை செய்யும்!'' என பலவும் எண்ணிக் கண்களில் நீர் பூரள... துயரத்தில் திணறிக் கொண்டு நின்றாள்.

''ஏம்மா! நீங்கதானே இவர் மனைவி...'' சிறிது சந்தேகத்துடன் தலைமை டாக்டர் அவளை ஏற இறங்கப் பார்த்தபோது உடல் குறுகிப் போனாள். மவுனமாகத் தலையசைத்தாள்.

''அப்போது விஷயத்தை உங்களிடம் சொல்ல வேண்டியது என் கடமை. இவருக்கு ஏற்பட்ட விபத்தில் தலையில் பலத்த அடி ஏற்பட்டிருக்கிறது - உடம்பில் அங்குமிங்கும் ஏற்பட்ட சிராய்ப்புக் காயத்தைப் பற்றிக் கவலையில்லை. தலைக்காயம்தான் நமக்கு இப்போது பெருத்த பிரச்சனை. கைக்கடிகாரம் கீழே தவறி விழுந்து விடுகிறது என வைத்துக் கொள்ளுங்கள். அதன் கண்ணாடி உடையாது அப்படியே இருக்கலாம். ஆனால் உள்ளேயிருக்கும் யந்திரங்கள் நொறுங்கி விட்டிருக்கலாம். ஒரு சமயம் கண்ணாடி நொறுங்கிப் போய் காணப்படலாம். ஆனால் உள்ளேயிருக்கும் யந்திரங்கள் துளியும் அடிபடாது அப்படியே இருக்கலாம்... அதைப் போலத்தான் தலையில் ஏற்படும் காயங்களும்... மண்டை எலும்பு உடைந்திருக்கலாம்... உள்ளே மூளை காயமின்றி பத்திரமாகக் காணப்படலாம்... மண்டை எலும்பு முறிவு இல்லாது உள்ளே மூளை எக்கச்சக்கமாகக் காயப்பட்டிருக்கலாம்... எக்ஸ்ரே எடுத்துப் பார்த்து விட்டோம். ஸ்கான் செய்தாகிவிட்டது... அவைகளில் கோளாறு ஏதும் தெரியவில்லை. இன்னும் எழுபத்திரண்டு மணி நேரத்தில் கண் விழித்து நினைவு திரும்பி விட்டால் கவலையில்லை... இல்லாவிட்டால்!''

''டாக்டர்... நினைவு திரும்பாவிட்டால்?'' கவலையுடன் முனகினாள் கங்கா.

''கேஸ் விபரீதமாகி விடலாம்... நாம் நல்லதையே நினைப்போம்! நினைவு திரும்பி விட்டாலும் இங்கே பத்து நாளுக்கு மேல் பாதுகாப்பாக எங்கள் மேற்பார்வையில் இருக்க வேண்டும்!''

''எத்தனை நாள் வேணுமானாலும் இருக்கட்டும்... பூரண குணமடைந்தால் போதும் டாக்டர்!'' தடுமாறினாள் கங்கா.

''சிலருக்கு மண்டை காயத்திற்கு பிறகு ஒரு கால், கை வராது விழுந்துவிடும் - சிலருக்கு ஞாபக மறதி ஏற்படும்... இன்னும் சில கோளாறுகள் ஏற்படலாம்... ஒரு சிலருக்கு ஒருவித மாற்றமும் இன்றி பூரண குணம் ஏற்படலாம்... அது அவரவர் அதிர்ஷ்டத்தைப் பொருத்தது. நாங்கள் எங்கள் கடமையை செய்ய சிறிதும் தவற மாட்டோம்... அரை மணிக்கு ஒரு தடவை நர்ஸ் வந்து இவரது நாடித்துடிப்பு முதலியவற்றை பார்த்து குறிப்பு எழுதி வைப்பாள்... ஆனால் கூட நீங்கள் இங்கேயே இருப்பது நல்லது!'' என்று கூறிவிட்டு தமது படையுடன் வைத்தியர் வெளியேறினார்.

பயத்தில் முகம் வெளுத்துப் போனாள் கங்கா... கடவுளே பூரண குணமடையும் அந்த நல்ல அதிர்ஷ்டத்தை என் கணவருக்குக் கொடும்... உம் சந்நிதானத்தை ஆயிரம் முறை வலம் வருகிறேன்!'' என்று தங்கள் குலதெய்வத்தை மனதிற்குள் வேண்டிக் கொண்டாள்.

கணவன் மீது மனத்தாங்கல் பட்டுக் கொண்டு சிவகாமியம்மாள் வீட்டில் ஒளிந்து கொண்டு வாழ்ந்த போதிலும் அடி மனதில் அவர் சவுக்கியமாக இருக்கிறார் என்ற நினைவு... நிம்மதியைத் தந்து கொண்டிருந்தது.

ஆனால் இப்போது?... பொல பொலவென்று உதிர்ந்த கண்ணீரைப் புடவைத்தலைப்பால் அவசரமாகத் துடைத்துக் கொண்டாள்.

''நீங்க இங்கேயே இருங்க... தாயம்மாவும், தங்கப்பனும் குழந்தையைப் பார்த்துக் கொள்வாங்க... வேளைக்கு சாப்பாட்டை இங்கே கொண்டு வந்து உங்களுக்குத் தரும்படி ஏற்பாடு செய்கிறேன்!'' என்று யோகநாதன் கூறிவிட்டு... மெல்ல நகர்ந்தார்.

பூரணியும் அவள் கணவனும் உள்ளே வந்து ஒருகணம் எட்டிப்பார்த்து விட்டு விடைபெற்றுக் கொண்டனர்.

''அண்ணன் குணமாகி வீடு திரும்பும்வரை நானும் இவரும் அண்ணன் பங்களாவில் தங்கியிருப்பதாகத் தீர்மானித்திருக்கோம். ஆனந்தனைப் பற்றிய கவலையை விடுங்கள் - நான் கவனித்துக் கொள்வேன்... நீங்கள் அண்ணனுடன் இங்கேயே இருந்து பார்த்துக் கொள்ளுங்கள்...'' என்றுகூறி விட்டு மெல்ல வெளியேறி விட்டாள்.

கதவை சாத்திவிட்டு கட்டில் அருகே வந்தாள் கங்கா. தன் நினைவே தெரியாது கிடந்த நரேந்திரனைப் பார்க்கப் பார்க்க அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

''நரேன்... எனக்கு உங்கள்மேல் இப்போது கோபம் இல்லை. நடந்ததையெல்லாம் மறந்துட்டேன்... ஆனந்தனுக்காக நீங்கள் உயிர் பெற்று எழவேணும்... கட்டாயம் அவனுக்காக நீங்கள் வாழணும்... நரேன்!... நரேன்... கொஞ்சம் கண்ணை விழிச்சுப் பாருங்கள் நரேன்!'' என்று மெல்லிய குரலில் புலம்பியபடி... அந்த கட்டிலின் காலைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தவள் உடல் குலுங்க அழுதாள்.

40

'அம்மாவைப் பிடிக்குமா? உனக்கு அப்பாவைப் பிடிக்குமா?' என்று சிறு குழந்தையை வேடிக்கையாகக் கேட்டால்... 'அம்மாவையும் பிடிக்கும் - அப்பாவையும் பிடிக்கும்' என்றுதான் குழந்தை பதில் சொல்லும்.

யாரை விடுவது.... யாரை ஏற்றுக் கொள்வது என்று புரியாத குழப்பம். அந்த மாதிரியானதொரு உணர்ச்சிப் போராட்டத்தில் கங்கா ஊசலாடிக் கொண்டிருந்தாள்.

பழக்கமில்லாத தாயம்மாள், பூரணி இருவரிடமும் தங்கியிருக்கப் பிரியமின்றி அழுது அடம்செய்து சாப்பிட மறுத்து - கண்கள் சிவந்து முகம் உப்பி முடிவில் களைத்துப் போய் தூங்கச் சென்றுவிடும் மகன் ஆனந்தனின் நிலையைக் கற்பனை செய்து பார்த்தபோது அவளது தாயுள்ளம் தத்தளித்தது. உடனேயே நரேந்திரன் பங்களாவுக்கு ஓடிச்சென்று அரைத் தூக்கத்திலும் விசும்பிக் கொண்டிருக்கும் தன் பிள்ளையை வாரி மார்புடன் அணைத்து சமாதானம் செய்ய வேண்டுமென்றதொரு தாபம்...

தன் நினைவே இன்றி மிகவும் அபாயமான நிலையில் இருக்கும் கணவனைப் பார்த்தபோது... டாக்டர் வைத்திருக்கும் எழுபத்திரண்டு மணி நேர கெடுவில் விபரீதம் ஏதும் ஏற்படாது... அவர் குணமடைய வேண்டுமே என்றதொரு நிலையில் மனம் நிலை கொள்ளாது தவித்தது.

'பிள்ளையா? கணவனா?'... என்று அவளது உணர்வு நிதானிக்க முடியாது... அலைபாய்ந்தது...

நாடித்துடிப்பு இத்யாதிகளைக் குறித்து வைக்க உள்ளே நர்ஸ் நுழைந்ததும் சட்டென்று தன்னை சமாளித்துக் கொண்டு எழுந்து நின்றாள் கங்கா.

''என்னம்மா இப்படி அழுதுகிட்டு இருந்தா யாருக்கு லாபம்? இவரைக் கவனித்துக் கொள்ள இங்கு வந்திருக்கும் நீங்க தைரியமா இருக்க வேண்டாமா? கொஞ்சம் தள்ளி நில்லுங்க... என் வேலைகளை நான் கவனிக்கணும்!'' என்று மெல்லிய குரலில் அதட்டினாள்.

வெட்கத்துடன் தன் கண்ணீரைப் புடவைத் தலைப்பில் கங்கா துடைத்துக் கொண்டாள்.

''வீட்டுக்கு ஒரு போன் செய்யணும். எங்கே போனால் தொலைபேசி கிடைக்கும்னு சொல்ல முடியுமா அம்மா?'' கங்கா குழைவாகக் கேட்டாள்.

''சீக்கிரம் வந்துடுங்க.. நான் இங்கே வெகுநேரம் காத்துக்கிட்டு இருக்க முடியாது. பக்கத்தறை நோயாளி மாரடைப்பு கேஸ் - அவரையும் நான் கவனிக்கணும்... இந்த வராந்தா கோடியிலே / பார்வையாளர்கள் உபயோகத்துக்கு போன் வச்சிருக்காங்க... ஒவ்வொரு மாடியிலும் அப்படி ஒரு வசதி இருக்கு... போய் சீக்கிரம் பேசிட்டு.... அங்கேயிருக்கும் அலுவலகத்தில் ஒரு ரூபாய் கட்டணம் செலுத்தினாலும் சரி... இல்லாட்டா உங்க பில்லில் சேர்த்துக்க சொன்னாலும் சரி... சீக்கிரம் வந்துடுங்கோ!'' என்று படபடவென்று பேசினாள்.

கதவைத் திறந்து கொண்டு வேகமாக தொலைபேசியை நோக்கி ஓடினாள் கங்கா....

முதலில் சிவகாமி அம்மாளைக் கூப்பிட்டாள்.

''என் கணவர் மிக அபாய நிலையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார். அருகே இருந்து யாராவது கவனித்துக் கொள்ள வேண்டிய நிலை... அதனால் நான் வீடு திரும்ப முடியாமல் இங்கேயே இருக்கிறேன் - மன்னிச்சுக்கணும்...'' என்றாள்.

''உன் கணவரை கவனிக்க வேண்டியதுதான் இப்போ உன் முக்கிய கடமை. நீலாம்மாள் என்னைப் பார்த்துக் கொள்வாள்.

கவலைப்படாதே தைரியமாக இரு... அடிக்கடி... அவர் நலனைப் பற்றி தெரிவித்துக் கொண்டிரு...!''

அடுத்ததாக அவள் நரேந்திரன் பங்களாவுக்கு போன் செய்தாள்.

''அண்ணா எப்படி இருக்கிறார் அண்ணி...?'' பரபரப்பாக மறுமுனையிலிருந்து பூரணி வினவினாள்.

''அதே நிலையில்தான் இருக்கார். இந்த இக்கட்டிலிருந்து நம்மைக் கடவுள்தான் காப்பாத்தணும்... ஆனந்தன் எப்படி இருக்கான். ரொம்ப அழுகிறானா.. அதைத் தெரிஞ்சுக்கத்தான் கூப்பிட்டேன்!''

''நீங்க அழைச்சதும் பயந்துட்டேன். அண்ணி - நம்ப எல்லோரையும் டாக்டர் ஒரு கத்திமுனை மேலே நிக்க வச்சிருக்காரே... அண்ணாவுக்கு நினைவு தெளிஞ்சுடும்னு எனக்கு நம்பிக்கை இருக்கு அண்ணி. நீங்களும் அதேபோல் நல்ல நம்பிக்கையோட இருங்கோ... ஆனந்தனைப் பத்திக் கவலையே வேண்டாம். நானும் தாயம்மாளும் அவனைக் கீழே விடாம தூக்கி வச்சுக் கொண்டு... விளையாட்டுக் காட்டி சமாதானப்படுத்திக் கொண்டிருக்கோம்... தாயம்மா பகல் பொழுது சாப்பாடு எடுத்துக் கொண்டு வரும். பட்டினி கிடக்காதீங்க!'' என்றபடி போனை வைத்தாள்.

குழந்தையை நினைத்தபோது நெஞ்சில் பாறாங்கல் அழுத்துவது போன்றதொரு வேதனை...

ஆமாம் ஒரு சில மணி நேரம் பிரிந்து இருக்கும்போதே இப்படி மனம் தவிக்கிறதே.

நரேந்திரனிடம் நிரந்தரமாக மகனை ஒப்படைத்துவிட்டு அவள் எப்படி வாழப்போகிறாள்?

இரண்டு ரூபாய் தாளை தன் பர்சிலிருந்து எடுத்து அலுவலக ஊழியரிடம் கொடுத்து விட்டு வேகமாக அறைக்குத் திரும்பினாள்.

''என் வேலையும் முடிஞ்சுவிட்டது... நான் கிளம்பறேன்'' என்றபடி நர்ஸ் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு நகர்ந்துவிட்டாள்.

அசையாது பொம்மைபோல படுக்கைமீது கண்களை மூடியபடி கிடந்த கணவனைப் பார்த்தபோது இதயம் கூக்கலாகிவிடும் போன்ற வேதனையால் துடித்தது.

நினைவு வந்து கொஞ்சம் கண்களைத் திறந்து பார்க்க மாட்டாரா என்ற ஆவலுடன்... அவனது முகத்தையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தவளின் கண்கள் பூத்துப் போயின.

உள்ளே அடிக்கடி வந்து நாடி பிடித்துப் பார்த்துக் கொண்டு ரப்பர் குழாய்களை சரி செய்து விட்டுப்போன நர்ஸ் பெண்ணிடமோ மணிக்கொரு தடவை வந்து இதயத் துடிப்பைப் பரிசோதித்துக் கொண்டிருந்த இளம் டாக்டரிடமோ அவள் எதுவும் கேட்க முடியவில்லை.

''எப்படி இருக்கார் அம்மா...?'' என்று பகல் பணிக்காக புதிதாக உள்ளே வந்த நர்ஸ் பெண்ணிடம் கேட்டபோது அவள் பட்டென்று பதிலளித்தாள்.

''இன்னும் எழுபத்திரண்டு மணி நேரம் போனால்தான் சொல்லமுடியும்னு டாக்டர் சொல்லிட்டாரே?... சும்மா எங்களைக் கேட்டால்?'' அலுத்துக் கொண்டாள் அவள்.

வரக்கூடாத துன்பம் வந்துவிட்டால் அனுபவிக்க வேண்டிய சிரமங்களையெல்லாம் பாராட்டவே கூடாது என்பது அவள் தந்தை நோயாளியாக மருத்துவமனையில் இருந்தபோதே அவளுக்கு ஏற்பட்டிருந்த அனுபவம்தான்.

ஆனாலும் பாழும் மனம் கேட்கவில்லை. சட்டென்று நிலைமையைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்ற பரிதவிப்புதான்.

''பொறுமையாக இருங்கம்மா...!'' என்று புன்னகைத்து விட்டு நர்ஸ் வெளியேறிவிட்டாள்.

சிறிது பொழுதில் தாயம்மாள் பகல் உணவை டிபன் செட்டில் எடுத்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

முன்னறை போன்ற அமைப்பில் அமர்ந்து... தட்டில் தாயம்மாள் பரிமாறிய உணவைக் கையால் தொடக்கூட கங்காவுக்குப் பிடிக்கவில்லை. வயிறு பசித்தது. ஆனால் குழம்பைக் கலந்து பிசைந்து வாயில் போட்டுக் கொண்ட சோற்று உருண்டை நெஞ்சிற்குள் இறங்க மறுத்தது...

கூஜாவிலிருந்த தண்ணீரை டம்ளரில் ஊற்றிக் குடித்து விட்டு எழுந்தாள்.

''என்னம்மா இது... அவரை கவனிச்சுக்க உடம்பிலே தெம்பு கொஞ்சம் வேணாமா... இப்படி பட்டினி கிடந்தால்?'' தாயம்மாள் அன்புடன் கடிந்து கொண்டாள்.

''என்னை வற்புறுத்தாதே... என் மனநிலையில் இப்போ என்னால் சாப்பிட முடியலை... கண்ணை சிறிதுநேரம் மூடிக்கொண்டு ஓய்வாக இருக்க முடியலை... என்ன பாவம் செஞ்சேனோ... இப்படி தவியா தவிக்கிறேன்!'' பேசமுடியாது திணறினாள்...

எஜமானி என்ற உறவை ஒதுக்கிவிட்டுத் தாயம்மாள் அருகில் வந்து அவளை அன்புடன் அணைத்துக் கொண்டாள். கலைந்து நெற்றியில் புரண்ட கூந்தலை ஒதுக்கிவிட்டாள்.... கண்களிலிருந்து கன்னத்தில் உருண்ட கண்ணீர் துளிகளைக் கையால் துடைத்துவிட்டாள்.

''அம்மா... கொஞ்சம் இரண்டு நாளைக்கு எப்படியாவது... தைரியத்தை வரவழைச்சுக்கிட்டு பல்லை கடிச்சிட்டு... இருந்துடுங்கோ... மூணாவது நாள் பாருங்க.... கண்ணை முழிச்சுக்கிட்டு... உங்களைக் கூப்பிடுவார். எனக்கு நம்பிக்கை இருக்கும்மா... கவலைப்படாம இருங்க!'' என்று அனுசரணையாகப் பேசிவிட்டு... பாத்திரங்களை சேகரித்து எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

கட்டிலின் அருகே... கிடந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு தன் கைப்பையில் எப்பொழுதுமே வைத்துக் கொண்டிருக்கும் கந்தர் சஷ்டி கவசம் எனும் புத்தகத்தை எடுத்துத் திறந்து வாசிக்கத் தொடங்கினாள். எத்தனை தடவை அதைப் படித்து முடித்தாளோ... அவளுக்கே தெரியாது...

ஆறிரு தடந்தோள் வாழ்க-
ஆறுமுகம் வாழ்க
வெற்பைக் கூறு செய்தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க
செவ்வேள் ஏறிய மஞ்சை வாழ்க
யானை தன்னணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீரடியா ரெல்லாம்.

என்று, அதிலுள்ள வாழ்த்துப் பாடலை தனக்குள்ளே பிரார்த்தித்தபடி புத்தகத்தை மூடி பைக்குள் வைப்பதற்குள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே யோகநாதன் வந்தார்.

பொழுது அமிழ்ந்து கொண்டுவந்த நேரம் -பார்வையாளர்கள் வந்து போக வேண்டிய கடைசி காலகட்டம்.

''இன்னும் கொஞ்ச நேரத்திற்குப் பிறகுதான் டாக்டர் தமது ரவுண்டுக்கு மறுபடி வருவார். அதற்குள் நீங்க வீட்டுக்குப் போய் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டு நாளை காலை குளியலுக்குப்பின் உடுத்த தேவைப்பட்டதை எடுத்து வாருங்கள் - அதுவரை நான் இவரைப் பார்த்துக் கொள்வேன்'' என்றார்.

ஒரு கணம் தயங்கினாள் கங்கா. வீட்டுக்குப் போனால் குழந்தையைக் கொஞ்சம் தூக்கி வைத்து கொஞ்சிவிட்டு வரமுடியுமே என்றதொரு ஆசை. இன்னொரு புறம் யோகநாதன் பத்திரமாகப் பார்த்துக் கொள்வார் என்ற நினைவில்... கிளம்பினாள்.

தாயைக் கண்டதும் தத்தி நடந்தபடி உரத்த குரலில் அழுது தன் சிறு கைகளை நீட்டியபடி ஓடிவந்தான் மகன். அவனை வாரி அணைத்துக் கொண்டு கண்கலங்கிப் போனாள்.

இது என்ன சோதனை அவளுக்கு..

ஒரு பக்கம் நினைவே இல்லாது கிடக்கும் கணவனின் பரிதாபநிலை... இன்னொரு புறம் தாயைப் பிரிந்து துடிக்கும் குழந்தையின் அழுகை...

முகத்தைக் கழுவித் துடைத்து முடியை வாரிக்கட்டிக் கொண்டு நெற்றியில் பெரிதாக பொட்டொன்றை வைத்துக் கொண்டாள்.

கண்ணாடி பிரதிபலித்த அவளது முகம் அவளுக்கே அடையாளம் தெரியாத வகையில் சோகம் கப்பிக் கொண்டு வித்யாசமாக இருந்தது.

மருத்துவமனையில் அவள் தொடர்ந்து ஒரு வாரம் தங்கியிருக்கத் தேவைப்பட்ட ஆடைகளைத் தன்பெட்டியில் வைத்து அடுக்கிக் கொண்டாள் - சோப்பு சீப்பு... இத்யாதிகளையும் மறக்காது அதில் போட்டுக் கொண்டு -தாயம்மாள் தயாரித்துத் தந்த காப்பியை சாப்பிட்டுவிட்டு... பூரணியிடம் ஒரு சில நிமிடம் பேசிவிட்டு... குழந்தை காணாத சமயம்... எதையோ திருடிவிட்டு ஓடுகிறவள் போல காருக்குள் ஏறி மறைந்து உட்கார்ந்து கொண்டாள்.

கார்... பங்களாவை விட்டு நகரும்போது உள்ளேயிருந்து வந்த ஆனந்தனின் ஓலக்குரல் அவள் மனதை நொறுக்கிப் பிழிந்தது.

நெஞ்சை அடைத்த உணர்வை விழுங்கிக் கொண்டு அவள் விரைவாக மருத்துவமனைக்குத் திரும்பிவிட்டாள்.

அதற்குள் அறையில் டாக்டர்களும் - நர்ஸ்களும் நிரம்பி விட்டிருந்தனர்... யோகநாதனும் அவளும் வராந்தாவின் கைப்பிடி சுவரின் மீது சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தனர்.

வெளியே வந்த பெரிய டாக்டர் அவளைப் பார்த்து மெல்லிதாக முறுவலித்துவிட்டு... வேகமாக நடந்து போய் விட்டார். பின்னால் அவரைத் துரத்தியபடி நடந்த பேராகநாதனுக்கும் செய்தி ஏதும் கிட்டவில்லை.

''என்னம்மா செய்வார்கள்? அவர்களால் முடிந்தவரை வைத்தியம் செய்கிறார்கள்! மீதி நம் அதிர்ஷ்டத்தைப் பொறுத்து இருக்கு!'' என்று முணுமுணுத்தார்.

அவர் விடைபெற்றுக் கொண்டு போனதும்... அறைக்குள் மெல்லிதாக எரிந்த விளக்கொளியில்... கணவனை உற்றுப் பார்த்தாள்.

அப்பா செய்த தவறினால்... அந்த வைரப்பிள்ளையாரை தாமே எடுத்துக் கொண்டுவிட வேண்டுமென்ற பேராசையால்... அவளது வாழ்க்கையை எத்தனை தூரம் பாழடித்து விட்டார்.

அப்பாவின் கடிதத்தைப் படித்து -கங்கா குற்றமற்றவள் என்பதைத் தெரிந்துக் கொள்ளவாவது... பகவான் அவருக்கு உயிர்ப் பிச்சை தந்தருள மாட்டாரா? எண்ணி உருகிக் கண்கலங்கியபடி ஏக்கத்துடன்... அவன் அருகே அமர்ந்திருந்தாள்.

இரவில் அருகிலிருந்த சோபாவின் மீது சரிந்து கொண்டு களைப்பை மீறிக் கண்களை மூடிய போதிலும்... ஒரு சிறு சத்தம் கேட்டாலும்.... சட்டென்று விழித்துக் கொண்டு எழுந்து சென்று அவனை உன்னிப்பாகப் பார்த்தாள். மூச்சு விடுகிறாரா... என்று பலமுறை அருகில் நின்றபடி நெஞ்சு படபடக்க... கணவனை உற்றுப் பார்த்தபடி நிற்பது வழக்கமாகி விட்டது.

பத்து நிமிடம் - அரைமணி.... ஒரு மணி... இருபத்தி நான்கு மணிநேரம் என்று பொழுதை அவள் எதிர்பார்ப்புடன் கழித்துக் கொண்டிருந்தாள். கணவனைக் கவனித்துக் கொள்ளும் அதிகமான சிரத்தையால்... அவள் மெல்ல மகனைக்

கூட மறந்தவளாக இருந்தாள்... டாக்டர் வைத்த கெடுவரை மருத்துவமனையைவிட்டு அந்த அறையை விட்டு... நகரக் கூடாது என்கிறதொரு பிடிவாதத்தில் அவள் ஆனந்தனைப் பற்றி... உணவு கொண்டு வந்த தாயம்மாளிடம் விசாரித்து அறிந்து கொண்டாள்.

டாக்டர்கள் நரேந்திரனை பரிசோதிக்கும்போது வராந்தாவில் வந்து நிற்க நேரிட்ட அந்த சில நிமிடங்களில் ஓடிச் சென்று சிவகாமி அம்மாளை தொலைபேசியில் அழைத்து... கணவனது உடல்நிலையைப் பற்றி அன்றாடம் சொல்லி வந்தாள்.

மூன்றாவது நாள் காலை... விடியலுக்கு முன் உள்ளே நுழைந்த பகல் வேளை நர்ஸ் - இரவு பணி நர்ஸிடம் தகவல்கள் கேட்டு குறிப்பு எழுதிக் கொண்டிருந்த சமயம் அறைக்குள்ளே அடங்கியிருந்த குளியலறைக்குள் புகுந்து பச்சைத் தண்ணீரில் அவசரமாகக் குளித்து மாற்றுடை அணிந்து கொண்டு தலையை வாரி முடிச்சிட்டு பளிச்சென்று நெற்றியில் பொட்டுடன் வெளி வந்தாள்....

'துதிப்போருக்கு வல்வினைபோம்.... துன்பம்போம்' என்று கந்தர் சஷ்டி கவசத்து ஆரம்ப துதியைத் தன் மனதிற்குள்ளே சொல்லிக் கொண்டு ஜன்னல் ஓரம் நின்றாள்.

யோகநாதன் காப்பி பிளாஸ்க்குடன் அங்கு வந்தார்.

''எழுப்பத்திரண்டு மணி என்றால் டாண் என்று அந்த நேரத்திலே குணம் 'தெரியவேண்டும் என்று எதிர்பார்த்து உணர்வுகளின் இறுக்கத்தில் புழுங்காதீர்கள். கொஞ்சம் காப்பி சாப்பிடுங்கள் -டாக்டர்கள் வரும்நேரம்'' என்றார்.

மூன்றாவதுநாள் கெடு முடிந்துவிட்டதே... இன்னமும் நரேந்திரன் மயக்கமாகவே இருக்கிறாரே... என்ற கவலையுடன் யோகநாதன் அவளிடம் நீட்டிய பிளாஸ்க்கைத் திறந்து... கொஞ்சம் காப்பியை மூடியில் ஊற்றி விழுங்கினாள்.

வராந்தாவில் டாக்டர்களின் பேச்சுக் குரலும் பலத்த காலடி சப்தமும் கேட்கவே.... கையில் பிடித்த பிளாஸ்குடன் பியாகநாதனுடன் வெளியே வந்து வராந்தாவில் நின்று கொண்டாள்... மனதிலே ஏகப்பட்ட பரபரப்பு... மேலே காப்பியை குடிக்க முடியாது பிளாஸ்கை மூடி... ஒரு பக்கம் கீழே வைத்து விட்டு... தவிப்புடன் நின்று கொண்டிருந்தாள்.

டாக்டர் தமது உதவி வைத்தியர்கள் நர்ஸ்களுடன் உள்ளே நுழைந்தார். கதவு சாத்தப்பட்டது.

அறைக்குள்ளே இப்போது என்ன நடக்கிறது? என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் அவள் மனம் -பதை பதைத்தது...

ஒரு சில நிமிடங்கள் கழித்து படக்கென்று அறைக்கதவைத் திறந்து பெரிய டாக்டர் தலையை நீட்டினார்...

''கங்கா என்பது நீங்கதானே... கொஞ்சம் உள்ளே வர்றீங்களா?'' ...புன்னகைத்தார்.

மார்பு படபடக்க கால்கள் தள்ளாட வாய் உலர்ந்து போன கங்கா சட்டென்று உள்ளே நுழைந்தாள்.

''உங்கள் பெயரைச் சொல்லி கூப்பிடுகிறார்... கிட்டசென்று பாருங்கள்... அவருக்கு நினைவு... மெல்ல வந்து கொண்டிருக்கிறது'' என்றார் மகிழ்ச்சியுடன்.

அசையாது கிடந்த நரேந்திரனது கால்களும் கைகளும்..... மெல்ல இப்படியும் அப்படியும் புரண்டன.... கண்களை இலேசாகத் திறந்து பார்த்தான்.

''கங்கா! கங்கா!...'' என்று மெல்லிய குரலில் கூப்பிட்டான்.

''நான்தான் கங்கா... கிட்டக்கத்தான் நிற்கிறேன்!'' என்று கங்கா தழுதழுத்தாள்.

வெறுமையான அவனது பார்வை... அவள் முகத்தின் மீது நிலைத்து ''கங்கா... நீயா!.... உண்மையில் நீயா....?'' என்றபோது.... கட்டு போட்டிருந்த பகுதியைத் தவிர சிறிது

தெரிந்த அவனது கன்னங்களை மெல்ல வருடினாள்.

''நரேன்! நான்தான்... உங்க கங்காதான் வந்திருக்கேன்... நரேன் என்னைப் பாருங்கள்...!'' என்று அவள் விசும்பியபோது நர்ஸ் அவளை மெல்ல அணைத்து அப்பால் அழைத்துக் கொண்டு சென்றாள்.

''இப்பத்தான் அவருக்கு நினைவு திரும்பியிருக்கு... நீங்க அழுது... கலாட்டா பண்ணக்கூடாது...'' என்று மெல்ல அதட்டினாள்.

கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்த யோகநாதன் முகத்தில் ஒரே மகிழ்ச்சி... டாக்டர்கள்... நர்ஸ்கள் எல்லோரும் புன்னகைக்க... கங்கா... கணவனைப் பார்த்து... ஆனந்தத்தில் கண்களில் நீர் புரள நின்றாள்.

கடவுள் அவனைக் காத்தருளி விட்டாரே?

41

முன்னறை போன்ற பகுதிக்கு கங்காவை வருமாறு டாக்டர் மெல்லிய குரலில் கூப்பிட்டார்.

கங்கா திடுக்கிட்டுப் போனாள்.

குறித்த கால கட்டத்திற்குள் நரேந்திரனுக்கு நினைவு திரும்பி விட்டதைக் கண்டு எல்லோரும் மகிழ்ந்து கொண்டிருந்த சமயம் டாக்டர் ஏன் அவளைத் தனியாக அழைக்கிறார்?

கவலையுடன் அவள் மெல்ல அந்தப் பகுதிக்கு விரைந்தாள்.

டாக்டர் முகத்தில் இன்னமும் புன்னகையின் ரேகை மறையவில்லை. அதைக்கண்டு அவளுக்கு சிறிது நிம்மதி

ஏற்பட்டது என்றாலும்... மனதிற்குள் ஒரு பதட்டம்.

''என்ன டாக்டர்? என்ன சொல்ல விரும்புகிறீங்க...?'' பவ்வியமுடன் கேட்டாள்.

''உங்கள் கணவருக்கு நினைவு திரும்பிவிட்டதைக் குறித்து நாம் எல்லோரும் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் நரேந்திரன் அவர்கள் தொடர்ந்து இன்னும் பதினைந்து தினம் இங்கேயே தங்கி எங்களது கண்காணிப்பில் இருக்க வேண்டும். அதற்கு உங்களுக்கு மறுப்பு உண்டா?''

மறுப்பா? இந்த வகையில் அவளுக்கு எதுவும் கூற உரிமை இருக்கவில்லை என்பது பாவம் அந்த வைத்தியருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

அவமானத்தில் குறுகிப் போனாள்.

''நீங்கள் அவரைக் கவனித்துக் கொண்டு வரும் டாக்டர். உங்கள் உத்திரவுப்படியே தானே நாங்கள் எல்லோரும் நடக்கணும்... அதனால் மறுப்பு சொல்வதற்கு இடமே கிடையாதே...?'' சாமர்த்தியமாகப் பதிலளித்தாள்.

''இவருக்கு ஏற்பட்ட விபத்து சாதாரணமானதல்ல. ஒரு பயங்கர சம்பவம். இதனின்று எந்தவிதமான பெரிய கோளாறுகளும் இல்லாமல்... நினைவு திரும்பி விட்டிருப்பது ஒரு அற்புதம் என்றே சொல்ல வேண்டும். எதிர்பாராத வகையில் உடல்நிலையில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. அதைப் பத்திரமாகப் பாதுகாத்து இவர் பூரண சுகமடைந்து வீடு திரும்பச் செய்வது எங்கள் பொறுப்பு...''

''புரிகிறது டாக்டர்! இன்னும் எத்தனை நாள் இங்கே இருக்க வேண்டுமென்றாலும் தங்கி இருக்கட்டும். அபூர்வ சிகிச்சைகள் தேவைப்பட்டாலும் தயங்காமல் செய்யுங்கள்!''

''நாங்கள் எங்களால் முடிந்தவரை பலவித சிகிச்சைகளையும் செய்து கொண்டிருக்கிறோம்...

தேவைப்படும்போது நிபுணர்களை வரவழைத்து ஆலோசனைகள் கேட்கத் தவற மாட்டோம். நீங்கள் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டும்!''

''நான் என்ன செய்ய வேண்டும் டாக்டர்?'' ...பதட்டத்துடன் வினவினாள்.

''இந்த மூன்று நாட்களிலேயே நீங்கள் மிகவும் சோர்ந்து காணப்படுகிறீர்கள்... இன்னும் இரண்டு வாரகாலம் இவரை இரவு பகல் இரண்டு வேளைகளும் நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். உங்களால் சாத்யப்படாவிட்டால் வேறு ஸ்பெஷல் நர்ஸ் யாரையாவது அமர்த்தலாமா என்று யோசிக்கிறேன்!''

''சிகிச்சை சம்பந்தப்பட்ட வகையில் வேறு தனிப்பட்டதொரு நர்ஸ் பெண்ணை அமர்த்த வேண்டுமானால் எனக்கு மறுப்பு இல்லை... இதுவரை என் கணவரை நான் கவனித்துக் கொண்டது போலத் தொடர்ந்து நானே பார்த்துக் கொள்கிறேன்!''

''களைத்துப் போய்விட மாட்டீர்களே?''

''ஆபத்தான நிலையில் படுத்துக் கிடக்கும் கணவனை கவனித்துக் கொள்ள நேரும்போது... மனைவி சோர்ந்து போகமாட்டாள் டாக்டர்!''

வைத்தியர் மெலிதாகப் புன்னகைத்தார்.

''அவ்வப்போது கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நீண்ட நாள் நரேந்திரன் மயக்கமாக இருந்து விடுவாரோ என்று உள்ளூர நாங்கள் பயந்து கொண்டிருந்தோம். உங்கள் பாக்கியம். குறித்த காலத்திற்குள்ளாகவே அவருக்கு நினைவு திரும்பி விட்டிருக்கிறது. ஆனால், இப்போது அவரது நினைவில் கொஞ்சம் குழப்பம் இருக்கும். எங்கிருக்கிறோம் என்று தெரியாது... சிலசமயம் வேகமாகப் புரண்டு படுக்கையினின்று விழுந்து விடலாம்... அப்படி நேராது பார்த்துக் கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு. தற்சமயம் நாங்கள் உணவை

குளுகோஸ் திரவமாக டிரிப் மூலம் உள்ளே செலுத்திக் கொண்டிருக்கிறோம்... தம் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு மெதுவாக எழுந்து உட்காரத் தெம்பு வந்த பிறகுதான் வாய்மூலம் உணவை திரவ ரூபத்தில் கொடுக்க வேண்டும். நீங்கள்தான் அது சமயம் அவருக்கு உணவை ஊட்ட வேண்டிவரும்!''

''என்ன விதமான பணிவிடைகள் செய்ய வேண்டும் என்று நீங்கள் கட்டளை இட்டாலும் நான் செய்யத் தயாராக இருக்கிறேன் டாக்டர்!'' அவளது குரல் தடுமாறியது...

''தலையில் அடிபட்டதென்றால் அதன் பின் விளைவுகள் பலருக்கு ஏற்படலாம். பயந்து விடாதீர்கள்... நினைவு தெளிவு ஏற்பட்ட பிறகுகூட மூளைக்கு மேலே போர்த்தியிருக்கும் மூவ்வு தசை மேல் ரத்தக்கசிவு ஏற்பட்டு... சிரமம் கொடுக்கலாம்... அதையும் கண்டுபிடித்து தக்க சிகிச்சை செய்ய எங்களால் முடியும்... அதற்காகத்தான் இரண்டு வாரம் இவர் எங்கள் பார்வையில் இங்கே இருக்க வேண்டும்...!''

''நீங்கள் மனதிருப்தியுடன் வீட்டுக்கு அனுப்பும்வரை இவர் இருக்கட்டும் டாக்டர். நான் கூடவே இருந்து கவனித்துக் கொள்வேன்...!'' தழதழத்தாள் கங்கா...

''இதுவரை எல்லாம் நல்லபடியாக நடந்து கொண்டிருக்கிறது. இப்போது நீங்கள் மன தைரியத்தை இழக்கக்கூடாது. பக்கத்திலிருந்து அவரைக் கவனித்து அவரை மீண்டும் ஆரோக்கியமான மனிதனாக்குவது உங்கள் பொறுப்பு... மறக்காதீர்கள்...''

''மறக்கமாட்டேன் டாக்டர் - இவரை கவனிப்பதைத் தவிர வேறு எனக்கு எதுவுமே இந்த உலகத்தில் கிடையாது டாக்டர்...''

''சரிம்மா... நாம மறுபடியும் உள்ளே போய் பார்ப்போம்'' என்றார்.

கண்களை விழித்து கங்காவின் பெயரைச் சொல்லி

அழைத்த நரேந்திரன் பின்னர் சில நிமிடங்களில் மிகவும் சோர்ந்தவனாகக் கண்களை மூடிக்கொண்டு விட்டிருந்தான்.

நாடித்துடிப்பு — மூச்சின் இயக்கம்... கை, கால் தசைகளின் அசைவு கண்களின் பாப்பாவின் சுருங்கி விரியும் தன்மை முதலியவற்றை பரிசோதித்து திருப்தியுடன் டாக்டர் வெளியேறினார்.

யோகநாதனுக்கு பெருத்த மன அமைதி ஏற்பட்டது. இந்த சில தினங்களாக அவர் மிகவும் பயந்து விட்டிருந்தார். நரேந்திரனிடம் வகிக்கும் உத்தியோகத்தை நம்பி அவர் கிராமத்திலிருந்த தமது பெற்றோர்களையும் பட்டணத்திற்குக் கிளப்பிக் கொண்டு வந்திருந்தார்.

நரேந்திரன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் ஒரே மனிதனால் உருவாக்கப்பட்ட திறமையுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அவனது ரியல் எஸ்டேட்டைச் சேர்ந்த நிறுவனம்... பொடியாகி... சீர்குலைந்து போகும். அதை நம்பி வாழும் அத்தனை பேர்களும் அல்லல்பட நேரிடுமே என்றதொரு ஆதங்கம்.

பார்வையாளர் நேரத்தில் அன்று மாலை அவர் தமது மனைவியுடன் நரேந்திரனைப் பார்த்து விட்டுப் போக வந்திருந்தார்.

பூரணி தன் கணவனுடன் வந்திருந்தாள்.

அவர்கள் அனைவரையும் அடையாளம் கண்டு கொண்டதின் அறிகுறியாக நரேந்திரன் முகத்தில் புன்னகை ஒளியிட்டது.

''அண்ணா! நான் வந்திருக்கேன் — தெரியுதா?...'' என்று அருகில் வந்து குனிந்தபடி பூரணி மெல்லிய குரலில் கேட்டாள்.

அறைக்குள் நுழைந்த நர்ஸ் அவளை அப்பால் அழைத்து அடிக்குரலில் அதட்டினாள்.

''ஆளுக்கு ஆள் இப்படி கேட்டு அவரைத் தொந்தரவு

செய்யக்கூடாது என்பது டாக்டர் உத்திரவு. கண் விழிச்சுப் பார்க்கிறார். கால் — கைகளை அசைக்கிறார்... அதுவரை மகிழ்ச்சியாக இருங்க... அவராகப் பேச முயன்றால் ஒழிய யாரும் வற்புறுத்தக் கூடாது. அறைக்குள் கூட்டம் போடக் கூடாது...'' கடுமையாகச் சொல்லிவிட்டு போய்விட்டாள்.

அவளது எச்சரிப்புக்குப்பின், யாரும் அங்கே நிற்கத் துணியவில்லை. சில நிமிடம் மவுனமாக நின்று பார்த்துவிட்டு அனைவரும் வெளியே வந்தனர்.

அவர்களைப் பின்தொடர்ந்த கங்கா, யோகநாதன் அருகில் வந்து கவலையுடன் கேட்டாள்.

''இது ஒரு பெரிய மருத்துவமனை — இவரை அனுமதித்துள்ள வி.ஐ.பி. அறையின் தினசரி வாடகையும் மிக அதிகமாகவே இருக்கும். மேலும் தீவிர சிகிச்சை முறை நடக்கின்றது. இவைகளுக்கு செலவு எக்கச்சக்கமாகவே இருக்குமே. பணம் போதாவிட்டால் என்ன செய்வீங்க... சம்பாதிக்கிற மனிதனே படுத்துக் கிடக்கிறாரே? பணம் தேவைப்பட்டால் நான் கொடுத்து உதவலாம்னு நினைக்கிறேன்...!''

''என்னம்மா சொல்றீங்க?'' அன்புடன் கேட்டார் யோகநாதன்.

கங்கா மிகவும் தாழ்வான குரலில் அவருக்கு மட்டும் கேட்கும் குரலில் பேசினாள்.

''எங்கள் கல்யாணத்தின் போது எனக்கு என் கணவர் மிக விலை உயர்ந்த வைர நகைகள் சிலவற்றை பரிசாகத் தந்தார். அத்தனையும் என் வங்கி லாக்கரில் இருக்கு. அத்துடன் என் தாயின் நகைகள் சிலவும் இருக்கு. என் தந்தை விட்டுப்போன கொஞ்ச பணமும் வங்கியில் இருக்கு. வைத்திய செலவை சமாளிக்க முடியாவிட்டால் என்னிடம் சொல்லுங்கோ... நகைகள் சிலவற்றை விற்று மருத்துவமனையின் கட்டணத்தை சரிக்கட்டி விடலாம்!''

யோகநாதன் நெஞ்சுருகிப் போனார் — தாம் பெற்ற மகளைப் பார்ப்பது போல பரிவுடன் அவளை நோக்கினார்.

நரேந்திரன் தானே விரும்பித் திருமணம் செய்து கொண்ட அந்தப் பெண்ணை என்ன காரணத்தினாலோ மிகவும் அவமானப்படுத்தி ஒதுக்கி வைத்து விட்டிருந்தான்.

அப்படியிருந்தும் கணவனுக்கு ஆபத்து என்றதும் கலங்கிப் போய் கண்ணீர் வழிய... ஓடோடி வந்து விட்டிருந்தாள். இப்போது தன் நகைகள் அனைத்தையும் விற்று அவனுக்கு சிகிச்சை செய்யத் தயாராக இருக்கிறாள்... இந்த நாட்டுப் பெண்கள் அனைவரும் கண்ணகியின் பரம்பரை என்பதில் சந்தேகம் ஏது?

அவர் நெஞ்சை துயரமும், இரக்கமும் என்னவோ செய்தன.

''கவலை படாதீங்க அம்மா... இப்போதிருக்கும் நிலையில் நரேந்திரன் அவர்களால் இதைவிடப் பெரியதொரு மருத்துவமனையில் சிகிச்சை செய்து கொள்ள இயலும். மேலும் இந்த மருத்துவமனையின் தலைவர் நரேந்திரன் அவர்களது நெருங்கிய நண்பர். நமது மேற்பார்வையில் தான் டாக்டரது மகளுக்கு ஒரு பெரிய வீடு கட்டப்பட்டு வருகிறது... இவர்கள் பெரிய பில் கொடுத்தால் நாமும் பெரிய பில்லைக் கொடுத்து சமாளித்து விடுவோம்'' லேசாகச் சிரித்தார்.

அதிக நேரம் அதற்கு மேல் பேசிக் கொண்டு நிற்காது அவள் உள்ளே திரும்பிவிட்டாள்.

நாற்காலியை நகர்த்தி கட்டிலின் அருகே போட்டுக் கொண்டு இப்படியும் அப்படியும் புரள நெளிந்தவனை சமாதானப் படுத்திக் கொண்டு... டிரிப் சரியாக உள்ளே செல்கிறதா என்று கண்காணித்தபடி... இரவு முழுவதும் உறங்காது உட்கார்ந்திருந்தாள்.

மறுநாள் காலை... சிறிது நேரம் தான் கவனித்துக்

கொள்வதாக அறையின் பொறுப்பை ஏற்கும் நர்ஸ் சொன்னதும்தான் அவள் நரேந்திரன் பங்களாவுக்குச் சென்று குளித்து மாற்றுடை அணிந்து கொண்டு மகனைத் தூக்கிச் சில நிமிடம் கொஞ்சிவிட்டு வெறும் காப்பியுடன் புறப்பட முடிந்தது.

அவள் உள்ளே வருவதற்குள் நரேந்திரன் முனகல் ஒலி துல்லியமாக முன்னறையில் கேட்டுவிட்டது.

''அம்மா நீங்க அந்தப் பக்கம் போனதிலிருந்து வாய் ஓயாது உங்க பேரையே சொல்லிக் கொண்டு முனகிக்கிட்டு கிடக்கிறார்'' என்றாள் நர்ஸ்.

வேகமாக ஓடிச் சென்று குனிந்து கணவனது முகத்தை ஆவலுடன் பார்த்தாள். மெல்ல கண்களைத் திறந்தான் நரேந்திரன். முகத்தில் புன்னகை ஒளியிட்டது...

''கங்கா வந்துட்டியா?... என் கங்கா வந்துடுவான்னு எனக்குத் தெரியும்... குழந்தை ஆனந்தனைப் பார்க்கணும் கங்கா... எடுத்துக் கொண்டு வந்து காட்டமாட்டியா?'' மிகவும் மெல்லிய குரலில் தட்டுத் தடுமாறியபடியே கேட்டான். அவன் கண்களில் நிறைந்த நீரைக் கண்டு துணுக்குற்று சட்டென்று துவாலையால் துடைத்துவிட்டாள் கங்கா.

''ஆனந்தனைப் பார்க்கலாம் — இன்னும் கொஞ்சம் உடம்பு குணமாகட்டும் கொண்டு வந்து காட்டறேன்...'' சமாதானப்படுத்தினாள்.

''தலையில் சும்மாடு மாதிரி கட்டுப் போட்டிருக்கிறதைப் பார்த்து குழந்தை அழுவான்னு பயப்படறியா?'' மெல்லச் சிரித்தான் நரேந்திரன்.

அத்தனை அளவுக்கு அவன் நினைவு தெளிந்து விட்டிருப்பதை உணர்ந்து மகிழ்ச்சியுடன் கூடச் சிரித்தாள் கங்கா.

''அதிகம் பேசாதீங்க... ஓய்வா இருங்க... ஆனந்தனைக்

கட்டாயம் அழைச்சிட்டு வருவேன்!'' என்று மெல்ல அவனது தோளைத் தட்டி ஆறுதல் சொன்னாள்.

ஒரு வார காலத்திற்குள் படிப்படியாக அவனது உடல் நலத்தில் குணம் தெரிந்தது.

டாக்டரிலிருந்து நர்ஸ் வரை அனைவரையும் அடையாளம் கண்டு... பேசினான். — கை கால்களை நன்றாக அசைக்க முடிந்தது — மெதுவாக நிமிர்ந்து தலையணைக்குவியல் மீது சாய்ந்து கொள்ளவும் அவனால் முடிந்தது.

நொடிக்கு பல தடவை 'கங்கா! கங்கா...!' என்று அன்போடு அழைத்து அவளது கைகளை இறுக்கமாகப் பற்றிக் கொண்டான்.

என்னென்னவோ அவன் சொல்ல விரும்புவதை கண்கள் கனிவாகக் காட்டின.

''ரொம்ப அலட்டிக்காதீங்க — பிறகு பேசிக்கலாம்'' என பலமுறை கங்கா அவனது உற்சாகத்தை அடக்கி கண்காணிக்க வேண்டியிருந்தது.

டிரிப் நிறுத்தப்பட்டு... 'வாய் மூலம் திரவ உணவு தரலாம்' என டாக்டர் உத்திரவிட்டதும்... அவனுக்காக தனியாக வெஜிடபிள் ஸூப் செய்து வைக்க தாயம்மாளுக்கு உத்திரவிட்டு... அதைத் தானே சென்று எடுத்து வந்து... ஸ்பூனால் துளித்துளியாக அவன் வாயில் ஊட்டினாள்.

''இப்போ எனக்கொரு ஞாபகம் வரது கங்கா... நான் சிறுவனாக இருந்தபோது ஒரு சமயம் காய்ச்சல் வந்து படுத்திட்டேன் —இப்படித்தான் அம்மா எனக்கு ஸூப் ஊட்டி விடுவாங்க...'' என்றபடி அவளது கரத்தைப் பற்றிக் கொண்டான்.

''கங்கா... என்னை மன்னிச்சுட்டியா?'' துயரத்தில் தடைப்பட்ட குரலில் கேட்டான்.

''இப்போ இதைச் சாப்பிடுங்கோ — பிறகு உடம்பு தேறி

வீட்டுக்கு வந்த பிறகு பழைய கதைகளைப் பேசலாம்!'' அன்போடு அதட்டினாள் அவள்.

அன்று மறுநாளே மருத்துவமனை தலைவரிடம் மிகவும் கேட்டுக் கொண்டு... கங்கா குழந்தை ஆனந்தனை எடுத்து வந்திருந்தாள்.

படுக்கையில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்த நரேந்திரன் தன் கைகளை நீட்டி, ''என் குழந்தையை இப்படிக் கொடு. கொஞ்சம் மடியில் வைத்துக் கொண்டு அவனைத் தொட்டுப் பார்க்க விரும்புகிறேன்! ஆனந்தன் என் கண்ணே — இப்படி வா!'' என்று அன்புடன் அழைத்தான்.

அவனது தோற்றத்தைக் கண்டு பயந்து அழ முயன்ற குழந்தையை சமாதானப்படுத்தி... கட்டிலின் ஓரத்தில் அவன் அருகே உட்கார வைத்தாள் கங்கா...

தன் மகனின் மென்மையான கன்னங்களை மெல்ல வருடி விட்டு மிகச் சிரமப்பட்டு குனிந்து குழந்தையின் கன்னங்களில் முத்தமிட்டான் நரேந்திரன்.

''ஆனந்தன்! என் கண்ணே!... நம்ப வீட்டுக்கு நீ வந்துட்டியா! அது போதும்!'' என்று கூறிவிட்டு மெல்லத் தன் மார்புடன் மகனை அணைத்துக் கொண்டான்.

ஆனந்தனை அவன் மிகவும் நேசிக்கிறான் என்ற உண்மை... கங்காவின் மனதை நெகிழச் செய்தது.

பொங்கி வந்த கண்ணீரை — சமாளிக்க அவள் தரையைப் பார்த்தாள்.

''போதும் கொஞ்சியது — உடம்பை அலட்டிக்கக் கூடாது!'' என்று குழந்தையை வாரித் தூக்கிக் கொண்டு போலியான கோபத்துடன் சிரித்தாள் கங்கா.

42

நரேந்திரன் உடல்நிலை வேகமாக அபிவிருத்தியடைந்து வந்தது.

அவனால் நன்றாக எழுந்து உட்கார முடிந்தது. மெல்ல கட்டிலின் ஓரத்தைப் பிடித்துக் கொண்டு நிற்கவும் முடிந்தது. கங்காவின் கையைப் பிடித்துக் கொண்டு அறைக்குள் மெல்ல நடக்க முயன்றான்.

தலையிலிருந்த கட்டுகள் அவிழ்க்கப்பட்டு... காயத்தின் மேல் போட்ட தையல்களை டாக்டர் பிரித்து எடுத்துவிட்டார். நெற்றி ஓரமாக கோடு போன்று முடி ஓரத்தில் தெரிந்ததொரு காயம் நன்றாகவே ஆறிவிட்டிருந்தது. இரண்டு வாரக் கண்காணிப்பிற்குப் பிறகு அன்று அவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டார் டாக்டர்.

நரேந்திரனுக்கு மகிழ்ச்சி கட்டுக் கொள்ளவில்லை.

மருத்துவமனை வாசம் அவனுக்கு சிறையிலிருப்பதைப் போன்று மனதில் ஒரு இறுக்க உணர்வை உண்டாக்கி விட்டிருந்தது.

வீட்டில் ஒரு மாதத்திற்கு குறையாமல்... ஓய்வாகத் தங்கியிருக்க வேண்டும். பின்னர் மறுபடி ஒரு மருத்துவ பரிசீலனைக்கு அவன் அங்கே வரவேண்டும். அதற்குப் பின்னர் உடல்நிலை திருப்திகரமாக இருந்தால்... இன்னும் ஒரு மாதங்கழித்து அலுவலகத்திற்குப் போகலாம் என்று டாக்டர் அறிவுரை வழங்கினார்.

என்னதான் யோகநாதன் கவனித்துக் கொண்டாலும் அவனது வேலைகளை அவனே பொறுப்புடன் கவனிப்பதற்கு சமமாகாது என்ற கவலை அவனுக்கு. ''வீட்டிலேயே நான் என் அலுவலக ஃபைல்களை கவனிக்கலாமா டாக்டர்?'' என்று தயக்கமுடன் கேட்டான்.

''காலை மாலை இரு வேளைகளிலும் கொஞ்ச நேரம் உங்கள் செயலாளரிடம் அலுவலக சம்பந்தமான காரியங்களைப் பற்றி பேசுவதில் தவறு இல்லை... இடையே அதற்கு பின்னர் நன்றாகத் தூங்கிக் கொண்டு நான் எழுதிக் கொடுக்கும் மாத்திரைகளை சாப்பிட வேண்டும். மறக்கக் கூடாது... நீங்கள் ஒரு சமயம் மறந்தாலும் உங்கள் மனைவி மறக்க மாட்டார்கள்... நன்றாகக் கவனித்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு!'' மெல்லக் கூறிய டாக்டர் சிரித்தார்.

''அந்த நம்பிக்கை எனக்கும் உண்டு டாக்டர்'' என்று நரேந்திரன் கூடச் சிரித்தான்.

''இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகப் பகிர்ந்து கொண்டு ஒருவருக்கொருவர் துணையாக இருப்பதுதானே தாம்பத்தியம்!'' என்று புன்னகையுடன் தலைவர் தன் உதவி டாக்டர்களுடன் அறையைவிட்டு வெளியேறினார்.

கங்கா அவனது சாமான்களை எடுத்து வேகமாகப் பெட்டியில் அடுக்கி அவனை வீட்டுக்கு அழைத்துச் செல்ல ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள். நரேந்திரன் மனதை டாக்டரின் வார்த்தைகள் உறுத்தின.

ஆபத்துக் காலத்தில் ஓடி வந்து கங்கா உதவியது போல அவன் அவளுக்கு என்ன செய்தான்? கர்ப்பிணியான அவள் வீடு தேடி வந்தபோது அவமானப்படுத்தி எத்தனை பெரிய அநியாயத்தைச் செய்து விட்டிருக்கிறான்? கங்கா அதையெல்லாம் மறந்து அவனை மன்னித்து திரும்ப அவனுடன் அன்பான மனைவியாக வாழ ஒப்புக் கொள்வாளா? பலவும் சிந்தித்தான் அவன்.

டாக்டர் சொல்படி கீழேயிருந்த ஒரு அறையை அவனுக்குத் தயார் செய்து வைத்திருந்தாள் பூரணி. மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு வாசலில் நின்றவனுக்கு அவள் ஆரத்தி சுற்றி

உள்ளே வரச் செய்தாள்.

''எப்பவோ செய்திருக்க வேண்டிய சாங்கியம் இது. இப்பவாவது செய்ய எனக்கு பாக்யம் கிடைச்சதே அண்ணி! மனசுல இப்பத்தான் மகிழ்ச்சியா இருக்குது'' என்று அவள் சொன்னபோது, நரேந்திரன் குற்ற உணர்வுடன் மனைவியின் முகத்தைப் பார்த்தான். கங்காவின் முகம் எந்தவிதமான உணர்ச்சியின் பாதிப்புமின்றி சலனமற்று இருந்தது.

படுக்கையை ஒழுங்கு செய்து அதில் தலையணைகளை அடுக்கினாள். அவனைக் கைத்தாங்கலாகப் பிடித்து அதன் மீது சாயந்தபடி உட்காரச் செய்தாள். ஆனந்தனையும் அருகே அமர வைத்ததன் மூலம், தகப்பன் — மகன் என்ற நல்லுறவிற்கும் அடிகோலினாள்.

நரேந்திரன் மருத்துவமனையிலிருந்த போது மறுபடியும் ஒரு முறை டாக்டர் அனுமதியுடன் ஆனந்தனை எடுத்துப் போயிருந்தாள் கங்கா. இரண்டு தடவை ஏற்பட்ட அறிமுகத்தில் ஆனந்தனுக்குத் தந்தையின் முகம் பழக்கமாகி விட்டிருந்தது. இப்போது பயந்து அழாது மெல்லத் தவழ்ந்து நரேந்திரனது மார்பின் மீது ஏறி அமர்ந்து கொண்டான்.

மிருதுவாகத் தன் சின்னஞ்சிறு விரல்களால் மழிக்கப்படாத தந்தையின் தாடையை வருடினான். குழந்தை, 'அப்பப்பா... ப்பா...' என்று கொஞ்சி அழைத்தபோது உடல் சிலிர்த்துப் போன நரேந்திரன், மிகுந்த வாஞ்சையுடன், மகனை ஆவேசமாக அணைத்துக் கொண்டான்.

'என்ன தவறு செய்துவிட்டேன்! இந்த அற்புதமான மழலை இன்பத்தை அனுபவிக்காது... எத்தனை நாட்கள் வீணாக்கி விட்டேன்...!' தன்னையே சாடிக் கொண்டபடி மகனது சுருண்ட கூந்தலை விரல்களால் கோதிவிட்டான். மார்பு மீது ஆதரவாக அணைத்தபடி மகனை மெல்லத் தட்டிக் கொடுத்தான். அவனது அணைப்பின் சுகத்தில், நிம்மதி அடைந்த குழந்தை சற்று நேரத்தில் ஆழ்ந்து உறங்கிப் போய்விட்டான்.

''பூரணி அத்தை அவனுக்குப் பரிசாக வாங்கித் தந்திருக்கும் தொட்டிலில் கொண்டு போய் விட்டுவிட்டு வரேன். நீங்க பேரனுக்காக அவனை சுமக்கறீங்க'' என்ற கங்கா குழந்தையை தூக்கியபோது அவனுக்கு மனம் இருக்கவில்லை. இப்படி ஒரு பாசம். விவரிக்க இயலா அன்பு... ஆனந்தன் மீது ஏற்படும் என அவன் நினைத்துப் பார்த்ததே இல்லை.

ரத்த பாசத்திற்கு அப்படி ஒரு ஈர்ப்பு! என்ன அதிசயம்? பகல் உணவைத் தட்டில் போட்டு எடுத்து வந்த கங்கா அருகிலிருந்த உயரமான முக்காலி மீது அதை வைத்தாள்.

''கையைக் கழுவிக்கிட்டு நீங்களே தட்டுல இருந்து சாப்பிடலாம்னு டாக்டர் சொல்லி இருக்கார்'' என்றபடி முக்காலியை அவனருகில் நகர்த்தினாள். அவளது உதவியுடன் குளியலறைக்குள் சென்று, கைகளையும், முகத்தையும் கழுவித் துடைத்துக் கொண்டான். கண்ணாடியில் தெரிந்த தன் உருவம் அவனைத் திகைக்க வைத்தது.

''நான் ரொம்ப மாறிப் போய்த் தெரியறேன் கங்கா.''

அவள் மவுனமாக அவனைப் பிடித்து அழைத்து வந்து சாப்பிட ஒரு நாற்காலியில் அமர்த்தினாள். சோற்றையும் குழம்பையும் கலந்து ஒருவாய் விழுங்கியவன் அதிசயத்துடன் அவளை ஏறிட்டான்.

''இது தாயம்மா சமையல் போல இல்லையே?''

''ஏன் வாய்க்கு ருசியா... இல்லியா?'' கேட்டபடி டம்ளரில் நீரை நிரப்பி அருகில் வைத்தாள்.

''இந்த சாம்பாரின் ருசி... ஏற்கனவே பழக்கமானது. திருவல்லிக்கேணி முத்துவீரன் தெரு ஐந்தாம் எண் வீட்டிலே நான் முதல் முதலா சாப்பிட்ட போது இதே சாப்பாட்டோட ருசி... என் நாக்கில் இன்னும் இருக்கு. அப்படிப்பட்ட சாப்பாட்டை தயாரிச்சவளை பிரமிப்போட பார்த்து மயங்கிப்போன நினைப்பு இன்னமும் நீங்காம மனசில நிக்குது.''

''தட்டைப் பார்த்து சாப்பிடுங்க. இன்னம் கொஞ்சம் பொரியல் வைக்கிறேன்.''

''நீ வீட்டுக்கு வந்ததும் இத்தனை வேலைகளுக்கு இடையில் எனக்காக சமையல் செய்திருக்கே? உனக்கு என் மேலே ரொம்பக் கருணை!'' சட்டென எச்சிற் கையால் அவள் கரத்தைப் பற்றிக் கொண்டான்.

''கங்கா! உன்னை நான் மிகவும் நேசிக்கிறேன். உன் அன்புக்கும், கடமை உணர்ச்சிக்கும் ஈடு இணையே கிடையாது.'' அவன் குரல் தழுதழுத்தது.

''உணர்ச்சி வசப்பட்டுக்கிட்டு, சாப்பிட்டால் ஜீரணம் ஆகாது. உடம்புக்கு நல்லதில்லே. இரவு சாப்பாட்டுக்கு நான் தாயம்மாளை அனுப்பிடறேன். நானும் ஆனந்தனும் அடுத்த அறையில் இருக்கறதுதான் நல்லதுன்னு நினைக்கிறேன்!'' என்று மெலிதாகக் கூறியபடி அவள் தன் கரத்தை விடுவித்துக் கொண்டாள்.

''இல்லே இல்லே, நான் அமைதியா இருக்கேன். அப்படி செய்திடாதே. உன் அருகாமைதான் என் உடல்தேற அருமருந்தா இருக்கும் கங்கா!'' கெஞ்சுதலுடன் சாப்பிட்டு முடித்தான்.

உணவுக்குப் பின் நன்கு உறங்கிப் போனான். மாலைப் பொழுதுதான் கங்காவைப் பார்க்க முடிந்தது.

தேநீர் கோப்பையும் ஒரு சில பிஸ்கெட்டுகளும் கொண்டதொரு மரத்தட்டை தூக்கி வந்து அவன் முன் வைத்தாள்.

''ஆனந்தன் எங்கே?'' கேட்டபடி தேநீர் கோப்பையை கையில் எடுத்து உறிஞ்சினான்.

''உங்களோட போட்டி போட்டுக் கொண்டு நல்லா தூங்கிட்டிருக்கான்'' அவள் முறுவலித்தாள்.

''கங்கா! நான் ஒண்ணு கேட்பேன். நீ கட்டாயம் பதில் சொல்லணும்.''

அவள் அவனை உற்றுப் பார்த்தாள்.

''ஆனந்தனுக்கு என்னைப் போலவே சுருண்ட முடி. அவனைப்பார்த்தால் முகச்சாயல்லே எங்கம்மா... என் தாயுடைய அகன்ற நீண்ட விழிகளை... அப்படியே உரிச்சிக்கிட்டு வந்திருக்கான். பாவம் என்பது சதவிகிதம் எங்கள் வீட்டையும் இருபது சதவிகிதம் உங்க வீட்டையும் கொண்டு வந்திருக்கான் இல்லியா?''

கணவன் முகத்தை மீண்டும் பார்த்தாள் கங்கா. ''ஆனந்தன் உங்க மகன்னு... இப்போது ஒப்புக் கொள்றீங்களா?''

''கங்கா! என்னுடைய அரக்கத்தனத்தை ஞாபகப் படுத்தாதே.''

அதற்கு மேல் மவுனமானாள் அவள். காலி கோப்பையை மரத்தட்டில் வைத்தபடி சென்றுவிட்டாள்.

பூரணி தன் கணவனுடன் தங்கள் வீடு திரும்பினாள். புறப்படுமுன் வீட்டின் கொத்துச் சாவியைக் கொண்டு வந்து கங்காவிடம் அளித்தாள்.

''ஆரம்பத்தில் இந்த வீடு கட்டி புது மனை புகுந்த சமயம், அண்ணன் வீட்டை நிர்வகிக்கிற பொறுப்பை தந்து, இந்த சாவிக்கொத்தைக் கொடுத்தார். நான் திருமணம் ஆன பிறகு வெளியே தங்கினதும் இது அண்ணன் கிட்டத்தான் இருந்தது. இப்ப மருத்துவமனையில் அவர் இருந்த காலத்தில், இதே பொறுப்பு என்கிட்டே வந்திட்டது. இனி... இது உங்க சொத்து. பிடியுங்க!'' அன்புடன் கங்காவை அணைத்துக் கொண்டு விடை பெற்றாள்.

கங்காவிற்கு கணவனைக் கவனிக்கும் பொறுப்புடன் வீட்டு நிர்வாகமும் கூடிக் கொண்டது. தாயம்மாளுக்கும், தங்கப்பனுக்கும் மிகவும் மகிழ்ச்சி.

''வீட்டுக்கு வரவேண்டிய மகராசி, விபத்தின்

மூலமாகவாவது வந்து சேர்ந்து விட்டாளே'' என்று நிம்மதி அவர்களுக்கு.

நாட்கள் வேகமாக நகர்ந்தன. வீட்டையும் கணவனையும் அவள் கருத்துடன் கவனித்துக் கொண்டாள். அறைக்குள்ளேயே நடைபயின்று கொண்டிருந்த நரேந்திரன் உடல் தெம்புகூடி மெல்ல தோட்டத்திற்குள் உலவத் துவங்கினான்.

ஒரு மாத முடிவில் அவனது ஆரோக்கியம் ஏறக்குறைய முழுவதுமாகத் திரும்பி விட்டிருந்தது. மகனைத் தூக்கியபடி, மெல்ல சிறிது தூரம் நடக்க முடிந்தது.

சோர்வு ஏற்பட்டால்... ஆனந்தனைக் கீழே இறக்கிவிட்டு அவனது பிஞ்சு விரலைப் பிடித்துக் கொண்டு மெல்ல தோட்டத்திற்குள் நடந்தான்.

''ஆனந்தன் சாப்பிட்டானா... ஆனந்தன் தூங்கினானா, ஆனந்தன் விளையாடுகிறானா...?'' என்று சதா மகனைப் பற்றிய கேள்விகள்தான் அவன் மனதை நிறைத்துக் கொண்டிருந்தன.

யோகநாதன் அன்றாடம் கூடச் சுமந்து வந்த அலுவலக ஃபைல்களைப் பார்வையிட்ட பின், மகனுடன் கொஞ்சுவது அவனுக்கு பெரும் பொழுதுபோக்காக இருந்தது.

மாத முடிவில் மீண்டும் மருத்துவமனைக்குச் சென்று டாக்டர் சொன்னபடி உடலைப் பரிசீலனை செய்து கொண்டான். வைத்தியர் எதிர்பார்த்ததைவிட அவன் நன்றாகவே குணமடைந்து விட்டிருந்தான்.

''இன்னும் ஒரு மாதம்கூட தேவையில்லை. நாளை மறுநாளே நீங்கள் அலுவலகத்துக்குச் சென்று தினசரி கொஞ்ச நேரம் வேலையைக் கவனிக்கத் தொடங்கலாம்'' டாக்டரின் உத்திரவு அவனை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

அடுத்த நாள் அவன் தன் அலுவலகத்திற்குச் சென்று சிறிது நேரம் தங்கிய பிறகு வீடு திரும்பியபோது கங்கா அவனிடம்

கேட்டாள். ''காரை எடுத்துக்கிட்டுக் கொஞ்சம் வெளியே போகலாமா?''

''இது என்ன கேள்வி கங்கா? இது உன் வீடு. உன் கார். இந்த சொத்து சுகம் எல்லாம் உன்னதுதானே. ஏன் நானே உன்னுடையவன் தானே'' கொஞ்சலாகச் சொன்னான்.

''தாயம்மாள் ஆனந்தனைப் பார்த்துக் கொள்றதாகச் சொல்லி இருக்கா... அதனால நான் கொஞ்சம் வெளியே போய்ட்டு வந்திடறேன்.''

'எங்கே போகணும்? ஏன்?' என்று மனைவியைக் கேட்க உரிமையில்லாத வெட்கம் அவனைத் தடை செய்தது. அதே சமயம்... ''தாயம்மா எதுக்கு? ஆனந்தனை முன்னறையில் விட்டுட்டுப்போ... நான் கவனிச்சுக் கொள்றேன்'' என்றான்.

மருத்துவமனையில் கணவன் இருந்த போது அவள் அவ்வப்பொழுது சிவகாமி அம்மாளுக்குத் தொலைபேசியில் அழைத்து நிலையைத் தெரிவித்துக் கொண்டிருந்தாள்.

கணவன் வீடு வந்து சேர்ந்ததும் உடனேயே அவனை விட்டு சிவகாமி அம்மாளைக் காணச் செல்ல முடியவில்லை. போனில்தான் பேச முடிந்தது.

அன்று அவள் ஒரு வேலை நிமித்தம் சிவகாமி அம்மாளது வீடு சென்று வர முடிவு செய்திருந்தாள். காரில் வந்திறங்கிய கங்காவை வியப்புடன் வரவேற்றாள் சிவகாமி.

''உங்களைப் பாத்திட்டு... அப்படியே என் சாமான்களில் ஒன்றை எடுத்துப் போக வந்தேன்'' புன்னகைத்தாள் கங்கா.

''மத்த சாமான்களைப் பின்னால் வந்து எடுத்துப் போவாயாக்கும். எப்படியோ கணவனும், மனைவியும் ஒண்ணு சேர்ந்திட்டால் சரி'' என்று புன்முறுவலித்த சிவகாமிக்கு அவள் நேரிடையாகப் பதில் எதுவும் கூறவில்லை.

நீலாம்மாளைப் பார்த்து நலன் விசாரித்துவிட்டு தனக்காக அளிக்கப்பட்ட அறைக்குள் நுழைந்தாள். நீலாம்மாள் அவளது

அறையை சுத்தப்படுத்தி நன்றாகத்தான் வைத்திருந்தாள். கதவைத் தாளிட்டுக் கொண்டு தந்தை விட்டுப்போன சொத்தான இரும்பு பீரோவின் லாக்கரை அவசரமாகத் திறந்தாள். அதற்குள் அவள் வைத்துவிட்டுப் போன துணி முடிப்பும், கடித உறையும் பத்திரமாக இருந்தன.

அவள் பங்களாவுக்குத் திரும்பியபோது அப்பாவும் மகனுமாக முன்னறை கம்பளத்தின் மீது உட்கார்ந்தபடி வண்ண மரக்கட்டைகளை வைத்து வீடு கட்டிக் கொண்டிருந்தனர்.

முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு குழந்தையைத் தூக்கிக் கொண்டாள். ''தயவு செஞ்சு உங்க அறைக்குள்ளே கொஞ்சம் உக்காருகிறீர்களா? உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் காட்டவேணும்'' என்றாள்.

கலவரத்துடன் நரேந்திரன் அவள் சொல்படி உள்ளே சென்று படுக்கை மீது அமர்ந்தான். அவன் முன்னால் துணி முடிப்பையும், கடிதத்தையும் வைத்தவளைப் பார்த்து, ''இதெல்லாம் என்ன கங்கா?'' என்றான் வியப்புடன்.

''பிரிச்சுப் பாருங்க, புரியும்'' என்று அவனையே ஆவலுடன் பார்த்தபடி நின்றாள் கங்கா.

43

நரேந்திரன் கண்கள் வியப்பினால் விரிந்தன. மறக்க முடியாத அளவு ஆழமாக அவன் மனதில் இழப்பு உணர்வை ஏற்படுத்தி வெகு நாட்கள் அலைக்கழித்துக் கொண்டிருந்த அந்த வைரப்பிள்ளையாரா அது?

துணி முடிப்பை நன்றாக அகற்றிவிட்டு ஜன்னல் வழியே வீசிய வெளிச்சத்தில் வண்ண ஜாலங்களை வாரி வீசிய அதைக் கையில் எடுத்துப் பார்த்தான். அவனது பாட்டன் காலத்து

பார்த்தவரை சொத்தை வியப்புடன் உற்று நோக்கினான் — நெஞ்சு லேசாகவாகத் துடித்தது.

மெல்ல கங்காவின் பக்கம் திரும்பினான். கேட்க வேண்டுமென்று நினைத்த அந்த கேள்வியை அடக்கிக் கொள்ள முடியவில்லை. முகம் சிவந்து போய் அவனுக்கு மூச்சு முட்டியது.

''இத்தனை நாள் உன் கைவசம் இருந்த இந்த வைரப் பிள்ளையாரை இப்பொழுது என்னிடம் கொண்டு வந்து காட்டும் நோக்கம்?'' மெதுவாக — அழுத்தமாகக் கேட்டான்.

கங்கா பதிலுக்கு புன்முறுவலித்தாள்.

அதைக் கண்டதும் அவன் மனதில் கொதித்தெழும் சந்தேகத்தை அவளால் ஊகிக்க முடியாதா என்ன?

''நான் நிரபராதி என்பதை நிரூபிக்க இதை உங்களிடம் கொண்டு வந்து காட்ட நான் நினைத்தபோது உங்களுக்கு விபத்து ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு விட்டீங்க. உடம்பு குணமடையட்டும்னு காத்திருந்தேன். வேளை வந்துட்டது — உங்கள் பொருளை உங்களிடம் கொடுத்துட்டு என்மேல் சுமத்தப்பட்டிருக்கும் குற்றத்தை போக்கிக் கொள்ள வந்திருக்கேன்''

''இதை முதலில் நான் கேட்டபோதே என்னிடம் கொடுத்திருக்கலாமே?''

''அதைத்தான் விபரமா சொல்ல வரேன். வைரப்பிள்ளையார் ஒன்றை நீங்க கொண்டு வந்து என் அப்பாவிடம் கொடுத்ததோ அதை அவர் விற்றுத் தருவதாக சொல்லியதோ எனக்குத் தெரியாது. என் தந்தை தமது வியாபார சங்கதிகளை என்கிட்டே பேசற பழக்கம் இல்லை — நானும் தூண்டிக் கேட்கிறவளுமில்லே. அவரோட நண்பரது மகன் நீங்கள் என்றவரை உங்களை நான் ரொம்ப மதித்தேன். பார்த்த முதல் தடவையே எனக்கு உங்களை ரொம்ப பிடிச்சுப் போச்சு!''

''எனக்கும் அதே உணர்வுதான் கங்கா. நமது முதல் சந்திப்பிலேயே நம்மைப் பத்தி ஒருவருக்கொருவர் தெரிஞ்சுக்கிறதுக்கு முன்னாலேயே நாம் ஒருவரையொருவர் விரும்பினோம்!''

''என்னைப் பொருத்தவரை என் அன்பிலே துளியளவுகூட களங்கம் இருக்கலை — உங்களை நான் எப்பவும் வெறுத்ததேயில்லை. நீங்கள் செய்த அவமானத்திலே உணர்வு சுருங்கி மனம் கசந்து போனேன். அவ்வளவுதான்!''

''உன்னைப் பார்த்ததும் நான் காதலித்தேன். என் உயிரே உன்னுடன் கலந்து விட்டது போன்றதொரு உணர்விலே தவித்தேன். உங்கப்பாவின் பிறந்த நாளன்று உங்க வீட்டிலே சாப்பிட்டபோது நீ என்கிட்டே தாராளமா பேசியது பற்றி மகிழ்ச்சியா இருந்தேன்.''

''ஆனால் இந்த வைரப்பிள்ளையாரைக் காணாமல் உன் அப்பாவிடம் வந்து நான் கேட்டப்போ... வெளிரடைந்த முகத்தோட நீ உள்ளேயிருந்து எட்டிப் பார்த்தே — உன் மேல் எனக்கு சந்தேகம் ஏற்பட்டது உண்மை. உன் சகஜமான பேச்சு — பட்டுப் போன்ற உன் பார்வை எல்லாம் வெறும் நடிப்பு —அப்பாவுக்கு ஒத்துழைக்கும் கள்ளி இவள்னு ஆத்திரம் பொங்கியது. என் வருங்கால வாழ்வுக்கு நம்பியிருந்த வைரப்பிள்ளையாரைக் களவாடிக் கொண்டுவிட்ட உன் அப்பாவை நான் நஞ்சு போல வெறுத்தேன். அவரைப் பழிவாங்க மனம் துடித்தது...''

''அதுக்குத்தான் என்னைப் பகடைக்காயா உபயோகிச்சுக் கொண்டு விட்டீங்களே?''

''அப்படி சொல்லாதே கங்கா. என் மன நிலையில் நீ இருந்தா இப்படித்தான் செய்திருப்பே. நீ இன்னமும் எனக்கு இதைப் பத்தி விளக்கம் தெரிவிக்கலையே?''

''தாராளமா சொல்றேன் — சொல்லி முடிச்சு நான் நிரபராதி என்பதை நிரூபிக்கத்தானே உங்க முன்னாடி நிக்கிறேன். அப்பா

மலையுலகு போனதும் அவரது சாமான்கள் பலதை வித்துட்டு அவரது இரும்பு பீரோவை மட்டும் ஒரு அடையாளத்துக்கு வைக்கக் கொண்டிருந்தேன். அதில் இருந்த வேண்டாத பொருள்களை எல்லாம் அப்புறப்படுத்த ஆரம்பிச்சப்போ இந்த துணி முடிப்பும் — இந்த கடித உறையும் கிடைச்சது. துணி முடிப்பில் உங்க வைரப்பிள்ளையார் இருந்தது — இந்த கடிதத்தை படிச்சுப்பாருங்கோ. உங்களுக்கு எல்லாம் விளங்கும்?'' சொல்லியபடி கடித உறையை அவனிடம் கொடுத்தாள்.

நரேந்திரன் பரபரப்புடன் கடிதத்தை உறையினின்று எடுத்துப் படித்தான். அவனது நெஞ்சு விரிந்து வேதனையில் துவண்டது.

எத்தனை ஒரு பெரிய பிசகை அவன் செய்து விட்டிருக்கிறான்? அவனுக்கு மன்னிப்பு உண்டா?

''கங்கா! நானும் ஒரு உண்மையை உன்கிட்டே இப்போ சொல்லிடறேன்! 'கங்கா எனக்கு துரோகம் செய்திருக்க மாட்டாள்... அவளுக்கு இதில் சம்பந்தம் இல்லை' என்று என் அடி மனம் குரல் கொடுத்தும்... என் பேய் மனம்... நீ குற்றவாளிதான்னு கூக்குரலிட்டு என்னைக் குழப்பிடிச்சு —உன்னை நான் சித்திரவதை செய்துட்டேன். ஒப்புக்கிறேன். ஆனால் உன்னை நான் இத்தனைக் குழப்பங்களுக்கும் இடையே காதலித்துக் கொண்டுதான் இருந்தேன் என்றால் நம்புவாயா? உன்னைத் தவிர என் கண்கள் வேறு ஒரு பெண் பக்கமும் திரும்ப மறுத்ததுன்னா நீ உண்மைன்னு ஏத்துக்குவியா?''

''கங்கா மறுபடியும் என் வாழ்க்கையில் வந்தாள். வந்து புகுந்து என் உள்ளத்தோட ஒன்றி விட்டாள்னு.... அன்னிக்கு நான் மயக்கத்திலிருந்து நினைவு பெற்றப்போ ரொம்ப மகிழ்ந்து போனேன். உனக்கு நான் இன்னமும் விளக்கணுமா கங்கா?'' என்றபடி அவள் அருகே சென்று அவளது இடையிலிருந்து தன்

மகனை வாரி மார்புடன் அணைத்துக் கொண்டான். வலது கையை நீட்டி, அவளது கரம் ஒன்றைப் பற்றித் தன் முகத்தில் பதித்துக் கொண்டான் நரேந்திரன்.

விரல்களின் இடுக்குகள் வழியே சூடாக வழிந்த கண்ணீர் அவளைத் துணுக்குறச் செய்தது.

''இதென்ன கோழைத்தனம்?'' — என்றபடி தன் முந்தானையால் அவனது கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

''கங்கா! இது கோழைத்தனமல்ல. நான் உனக்கு செய்த கொடுமையை நினைத்து மனம் உருகி... பச்சாதாபத்திலே என் கண்கள் உகுக்கும் கண்ணீர். இதைப் பத்தி வெட்கப்பட ஏதுமில்லை. நீ நிரபராதி... நான் குற்றவாளி! ஒப்புக்கிறேன்... ஆனால் ஒன்று கங்கா... விருப்பு வெறுப்புங்கிற இரண்டு உணர்வுகளுக்கிடையே இடைவெளி ரொம்பக் குறைவு. உனக்குத் தெரியாதா?... அப்பாவுடன் நாடகமாடி என்னை ஏமாத்திட்டதாக உன்னை வெறுத்தேன். அதே சமயம் என் ஊனுடன் கலந்துவிட்ட உன் அன்பை உதற முடியாது தவித்தேன்... கங்கா இந்தப் பாவியை மன்னிச்சுடு...!'' தழதழத்தான் நரேந்திரன்.

''உங்களை நான் எப்பவோ மன்னிச்சுட்டேன் — உங்க பொருளான வைரப்பிள்ளையாரை பத்திரமா எடுத்து வச்சுக்கோங்க... அடுத்தபடியாக உங்க மகனை உங்ககிட்டே சேர்த்துட்டேன்... அவனை நல்லா வளர்த்து ஆளாக்குங்க...!''

''இது என்ன பேச்சு கங்கா... என் சொத்து சுகம் எல்லாத்துக்கும் நீ பாத்தியதை உடையவ இல்லையா?... என் வாழ்வில் உள்ள எல்லாத்தையும் சமமா பங்கிட்டுக் கொள்ள வந்த என் துணைவி நீ இல்லையா...? இந்த பிள்ளையார் இனி நம்ம சொத்து — ஆனந்தன் நம்ப மகன். அவனை வளர்த்து, ஆளாக்கக் கடமைப்பட்ட பெற்றோர் நாம் இருவர் இல்லையா சொல்லு...?''

கங்கா தன் கையை மெல்ல அவனது பிடியினின்று இழுத்துக் கொண்டாள்.

''வெகு நேரம் பேசிக் கொண்டிருந்துட்டோம். இந்தாங்க சாவி — முதலில் லாக்கரில் பிள்ளையாரை வச்சுப் பூட்டுங்கோ...''

''வீட்டுச் சாவி இனி உன் பொறுப்பு — நீயே எடுத்து உள்ளே வை கங்கா...!'' என்றான் நரேந்திரன்.

''அப்பா அந்த மஞ்சள் பிளாஸ்டிக் பெட்டியில் வைச்சுக் கொடுத்த பின்னாடி காணாமல் போனது போல் நான் உங்க பீரோவில் வச்சு மறுபடியும் பிள்ளையார் காணாமல் போயிட்டா?'' லேசாகச் சிரித்தாள் அவள்.

நரேந்திரன் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான். ''கங்கா! பல தடவைகள் இது மாதிரி என்னைக் குத்திப் பேசினாலும் நான் கோபம் கொள்ள லாயக்கில்லாதவன். தயவு செய்து இதை எடுத்துவை. அப்படியே மறுபடி காணாமல் போயிட்டா நான் கலங்க மாட்டேன். வைரப்பிள்ளையாரைக் காட்டிலும் பன்மடங்கு விலையுயர்ந்த ஈடு இணையில்லாத என் கங்கா... வந்தாளே அது போதும்னு மகிழ்ச்சியோட இருப்பேன்.''

அப்பாவின் அணைப்பிலிருந்த ஆனந்தன் நெளிந்துக் கொண்டு சிணுங்கி அழத் தொடங்கினான்.

கணவனது பீரோ லாக்கரில் பிள்ளையாரையும் கடிதத்தையும் வைத்துப் பூட்டினாள்.

''குழந்தைக்குப் பசி... இப்படி கொடுங்கோ...!'' என்று ஆனந்தனைத் தன் கையில் வாங்கிக் கொண்டாள்.

''குழந்தைக்கு மட்டும் பசியில்லை — அவனது அப்பனுக்கும் பசி. இரண்டு பேருக்கும் சாப்பிட எதாவது தரமுடியுமா?'' செல்லமாகக் கேட்டபடி அவளது கன்னத்தை மெல்லக் கிள்ளினான்.

ஆனந்தனுக்குப் பருப்பு சோற்றில் நெய் ஊற்றிப் பிசைந்து ஊட்டி முடித்து அவனைத் தாயம்மாளிடம் ஒப்படைத்துவிட்டு

கணவனுக்கு மேசை மீது தட்டை வைத்துப் பறிமாறத் தொடங்கினாள்.

''நீயும் எதிரே வந்து உட்கார்ந்து சாப்பிடு கங்கா. இனி நமக்குள் எந்தவிதமான பிரிவும் ஏற்படத் தேவையில்லை. எனது வேலைகளை கவனிக்கும் நேரம் தவிர மீதியுள்ள ஒவ்வொரு நிமிஷத்தையும் உன்னுடனும் ஆனந்தனுடனும் கழிப்பதுன்னு முடிவுக்கு வந்துட்டேன்!'' என்று கொஞ்சிக் குழைந்தான் நரேந்திரன்.

''அம்மா! உங்களுக்கு ஒரு தட்டு கொண்டு வந்து வைக்கிறேன். உக்காருங்க! என் புருஷன் குழந்தையைப் பாத்துப்பார். நான் உங்க ரெண்டு பேருக்கும் பரிமாறறேன்!'' தாயம்மாள் உற்சாகத்துடன் உள்ளே வந்தாள்.

''முதல்லே இவர் சாப்பிடட்டும் — பிறகு என்னைப் பத்தி கவனிக்கலாம். கூட இருந்து இவருக்கு நான் சோறு பரிமாறுகிறேன்... நீ கவலைப்படாதே...!'' மறுத்து விட்டாள் கங்கா.

பகல் உணவிற்குப் பின் மகனை அணைத்துக் கொண்டு ஏ.சி அறையின் குளுமையில் சூழ்நிலையை மறந்து நன்றாக உறங்கி விட்டான். விழித்து அவன் எழுந்தபொழுது மாலை ஐந்து மணிக்கு மேலாகி விட்டிருந்தது.

ஒரு முறை புரண்டு படுத்த ஆனந்தன் நிம்மதியாக அப்பாவின் படுக்கை மீது தூங்கிக் கொண்டிருந்தான். சப்தமிடாது மெல்லக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான் நரேந்திரன்.

வீடு முழுவதையும் வெறுமை கவ்விக் கொண்டு விட்டது போன்று அமைதியாக இருந்தது.

சமையலறைப் பக்கம் தலையை நீட்டினான். சுவர் ஓரமாக ஒடுங்கியபடி தாயம்மாள் கலவரத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

[illegible]... நிம்மனுடைய குரைப்பு கேட்டது.

[illegible] கங்கா...!'' என்று குரல் கொடுத்தபடி [illegible] பக்கம் வந்தான்.

[illegible] கண்களில் படும்படி ஒரு கடித உறை மேசை மேல் [illegible]ருந்தது. திக்கென்ற உணர்வுடன் முத்துபோன்ற [illegible]யெழுத்தில் தன் பெயரை எழுதிவிட்டிருந்த அந்த கடித [illegible]யை பரபரப்புடன் எடுத்தான். அவசரமாக உள்ளேயிருந்த [illegible]தத்தை இழுத்து பிரித்து படித்தான்.

கங்கா அவனுக்கு எழுதியிருந்த சுருக்கமான கடிதம் அது.

அன்புள்ள கணவருக்கு கங்கா எழுதும் கடைசி கடிதம்.

கடந்த இரண்டாண்டு காலமாக குழம்பித் தவித்துக் கொண்டிருந்த என் மனதில் இப்போது பெருத்த நிம்மதி ஏற்பட்டுள்ளது. உங்கள் சொத்தான வைரப்பிள்ளையாரை உங்களிடம் திரும்ப சேர்த்துவிட்டேன். உங்களது ஆசை மகனை உங்களிடம் கொண்டு வந்து தந்துவிட்டேன்.

இந்த வீட்டின் கொத்து சாவியை உங்கள் அறை அலமாரியின் மேல் தட்டில் வைத்திருக்கிறேன். இனி எனக்கு இங்கே வேலை எதுவும் இல்லை. அதனால் புறப்பட்டு போகிறேன்.

உங்கள் கங்கா.

''தாயம்மா!'' என்று வீரிட்டுக் கத்தினான் நரேந்திரன்.

''ஐயா! கூப்பிட்டீங்களா...?'' நடுங்கியபடி அவன் எதிரே கைகளைப் பிசைந்து கொண்டு வந்து நின்றாள் அவள்.

''அம்மா எங்கே போனாங்க! எப்ப போனாங்க... என்னை ஏன் எழுப்பிச் சொல்லலை?'' கடுமையான குரலில் அதட்டினான்.

''நீங்க படுக்கப் போன பிறகு கொஞ்ச நேரத்திலே என்

புருஷனை ஒரு டாக்சி பிடிச்சு வரச் சொன்னாங்க. தன் பெட்டியைத் தூக்கிட்டு... அதிலே ஏறி எதுவும் சொல்லாம போயிட்டாங்க... அவங்க சாப்பிடக் கூட இல்லை!'' திக்கலும் திணறலுமாகச் சொன்னாள்.

அதுசமயம் முன்னறையிலிருந்த போன் கிணுகிணுத்தது. தங்கப்பன் மூச்சிறைக்க உள்ளே ஓடி வந்தான்.

''அவசரமாம் — உங்களை யாரோ போனில் கூப்பிடுகிறாங்க!'' என்று குழறினான்.

முன்னறையை அடைவதற்குள் மூச்சு நின்றுவிடும் போல நரேந்திரன் நெஞ்சை ஒரு பயங்கர உணர்வு அழுத்தியது.

44

பல பயங்கரக் கற்பனைகள் நெஞ்சை இறுக்க நடுங்கும் கரத்தால் போனை எடுத்தான்.

''வணக்கம். நரேந்திரன்... பேசுகிறேன்...!'' குரல் கம்மி வார்த்தைகள் உடைந்தன.

''நாமிருவரும் சந்தித்ததில்லை... ஆனால் எனக்கு எல்லாம் ஓரளவு தெரியும்!'' மறுபக்கம் ஒலித்த பெண்ணின் குரலை அவன் அதற்கு முன் கேட்டதில்லை. மார்பு பட படக்க... நெற்றி மீது வியர்வை அரும்புகட்ட தாழ்ந்த குரலில் கேட்டான், ''நீங்க யாருன்னு சொன்னா...?''

''என் பெயர் சிவகாமி. என் வீட்டில்தான் கங்கா கடந்த ஒண்ணரை ஆண்டு காலமா தங்கியிருந்தா...!''

''எனக்குத் தெரியும். அவளையும், என் குழந்தையையும் வச்சுக் காப்பாத்தினதுக்கு மிக்க நன்றி அம்மா... இப்போ கங்கா இங்கே இல்லை... ஒரு சமயம் அவள் உங்க வீட்டுக்கு

வந்திருக்கிறாளோ'' நரேந்திரன் குரல் அச்சத்தில் நடுங்கியது.

கங்காவைப் பற்றி ஏதாவது விபரீதமான செய்தியைச் சொல்லத்தான் சிவகாமி கூப்பிட்டாளோ? கங்கா வாழ்வு பிடிக்காது ஏதாவது... மேலே சிந்திக்க முடியாது துக்கம் அவனது நெஞ்சை பலமாகக் கவ்வியது.

''கங்கா நல்ல வெய்யில் வேளையில் இங்கே ஒரு பெட்டியோட டாக்சியில் வந்து இறங்கினா... குழந்தையை உங்களிடம் சேர்ப்பித்து விட்டு வந்ததாகச் சொன்னாள். பகல் உணவு சாப்பிட்டதும் என் கிட்டே உத்திரவு கேட்டுட்டு வெளியே போயிருக்கா. இன்னமும் திரும்பி வரலை... சித்த முன்ன ஒரு டிராவல் ஏஜென்சியிலிருந்து எனக்கு போன் பண்ணினா. நாளைக் காலை விமானத்திலே அவள் ஐதராபாத்துக்கு பறக்க ஏற்பாடு செய்துகிட்டிருப்பதாகவும், கொஞ்ச நேரத்தில் பயணச் சீட்டோட வீடு திரும்பி விடுவதாகவும் சொன்னாள்!''

''ஐதராபாத்துக்கா போகப் போறா? ஏன்?'' நரேந்திரன் குரல் நடுங்கியது.

''வெளியே புறப்படும் முன் என்கிட்டே மனம் விட்டுக் கொஞ்ச நேரம் பேசினாள்... உங்க பங்களாவில் இருந்து கொண்டு உங்களைக் கவனிச்சுக் கொண்டிருந்த சமயமே அவள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாகச் சொன்னாள்.''

''என்ன முடிவு அது?'' கேட்க அவசரப்பட்டான் அவன்.

''குழந்தையை உங்களிடம் ஒப்படைச்சுட்டுத் தான் உங்க வாழ்விலிருந்து ஒதுங்கிக் கொள்வது என்ற தீர்மானம். சென்னையில் என்னுடன் தங்கியிருந்தா நீங்க வந்து வற்புறுத்தி அழைச்சிட்டு போய் விடுவீங்கன்னுதான் இப்போ ஐதராபாத்துக்குக் கிளம்பிக்கிட்டிருக்கா...''

''அவள் அப்படி செய்கிறது நியாயமா அம்மா?''

''நியாயம் என்று வரும்போது உங்ககிட்டேயும் நான் கேட்க வேண்டியது பல சங்கதி இருக்கே!''

''ஐதராபாத்தில் போய் அவள் என்ன செய்வாளாம்?''

''பயண அலுவலகத்திலிருந்து என்னோடு தொலை பேசியில் தொடர்பு கொண்டப்போ நான் கேட்டேனே... அவளுக்கு அங்கே கல்லூரி நாள் தோழி ஒருத்தி இருக்காளாம் — அவளை வந்து விமான நிலையத்தில் சந்திச்சு தன் வீட்டுக்கு அழைச்சுப் போகும்படி முன்னமே ஏற்பாடு செய்து விட்டாளாம். கொஞ்ச நாள் அங்கே தங்கிவிட்டு ஒரு வேலை தேடிக் கொண்டு பின்னர்...''

நரேந்திரனுக்கு அதற்கு மேல் கேட்கப் பொறுக்கவில்லை. ''அம்மா நான் உடனடியாக உங்க வீட்டுக்கு வரப் போகிறேன். கங்கா என்னை விட்டுப் போறதை நான் அனுமதிக்கப் போறதில்லே...!''

''நீங்கள் உடனே புறப்பட்டு வரணும் என்று கேட்டுக் கொள்ளத்தான் உங்களை தொலைபேசியில் அவசரமா அழைச்சேன். சீக்கிரம் நீங்க இங்கே வாருங்கள்... கங்கா வீடு திரும்பும் சமயம். கங்கா தனியாகப் போய் வாழ நினைப்பதை நானும் விரும்பலை — உடனே புறப்படுங்கள்!'' சிவகாமி போனை வைத்தாள்.

குழந்தை ஆனந்தனை பத்திரமாகப் பார்த்துக் கொள்ள தாயம்மாளிடம் சொல்லிவிட்டு... உடல் பலவீனத்தைப் பொருட்படுத்தாது தனது காரைத் தானே ஓட்டிக் கொண்டு பூந்தமல்லிக்கு விரைந்தான் நரேந்திரன்.

கங்கா அதற்குள் திரும்பி விட்டிருந்தாள். தன் பயணத்திற்கு வேண்டிய பொருள்களை நிதானமாகத் தன் பெட்டிக்குள் அடுக்கிக் கொண்டிருந்தாள். வாயிலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டு ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள்.

நரேந்திரன் காரின் கதவைத் திறந்து கொண்டு தள்ளாடியபடி இறங்கி வராந்தாவைத் தாண்டி உள்ளே

வாரலையைக் கண்டு பதைத்துப் போனாள்.

அவள் அங்கேதான் போயிருக்க வேண்டும் என்ற ஊகத்தில் அவளைத் தேடிக் கொண்டு அவள் கணவன் வருகிறார்...

'எத்தனைக் கெஞ்சிக் குழைந்தாலும் அவள் ஒரே முரடியாக இருக்க வேண்டும்' தன்னுள் எண்ணியபடி... நெஞ்சு பிலாகமாகத் துடிக்க கதவோரம் வந்து காத்துக் கொண்டு நிற்றாள்.

சிவகாமி அம்மாள் அவனை வரவேற்று முன்னறையில் உட்கார வைத்து உபசரிப்பது கேட்டது... அவள் மேலே பியாசிக்கும் முன் எஜமானி அம்மாள் அவளை அழைப்பதாக நீலாம்மாள் பதட்டமாக வந்து சொன்னாள்.

''நீயும் இப்படி உட்கார்... உன்னை வீட்டுக்கு அழைத்துப் போக உன் கணவர் வந்திருக்கிறார்...'' என்றாள் சிவகாமி.

மறுப்பு சொல்ல முடியாது ஒரு சோபாவில் உட்கார்ந்த கங்கா நரேந்திரனை நிமிர்ந்து பார்க்காது... முக்காலி மீது வைக்கப்பட்டிருந்த பூச்சாடியை வெறித்துக் கொண்டிருந்தாள்.

''கங்கா! நீ ஐதராபாத்துக்குப் போவது பற்றி எனக்கும், உன் கணவருக்கும் விருப்பமில்லை...?''

''அம்மா... நான்...!'' கங்கா பேசி முடிக்குமுன் சிவகாமி சற்று கடுமையான குரலில் குறுக்கிட்டாள்.

''நடந்த அத்தனையையும் நீ ஏற்கனவே எனக்கு சொல்லியிருக்கே. இப்போ உன் கணவர் முன் நான் வெளிப்படையா பேசப்போறேன். என் கணவர் உன் தந்தையோடு கூட்டு வியாபாரம் செய்து கொண்டிருந்தார் என்கிற காரணத்துக்காக உன்னை நான் இங்கே தங்க வைத்துக் கொள்ளலை — உண்மையில் வியாபாரத்தில் ஏற்பட்ட மனத்தாங்கல் காரணமாக நமக்குள் பேச்சு வார்த்தை இன்றி விலகி இருந்தோம். அப்படியிருந்தும் உன்னை நான் என்னோடு ஏன் வச்சுக் கொண்டேன்...?''

கங்கா மவுனமாக அவளைப் பார்த்தாள்.

''ஒரு காலத்தில் நானும் என் கணவரால் ஒதுக்கப்பட்டு... பத்து வருஷ காலம் பிறந்த வீட்டோட வாழாவெட்டியாக இருந்தவ... அதன் கொடுமையை ரொம்ப அனுபவிச்சவ. நம்மைப் போல இந்தப் பெண்ணும் கணவனால் கைவிடப்பட்டிருக்காள் என்கிற அனுதாபம் காரணமாகத்தான் உன்னை இங்கே தங்க வச்சுக் கொண்டேன். பெரியவங்க நாலு பேர் நல்லது பேசி என்னையும் என் கணவரையும் சேர்த்து வச்சாங்க... அதைப் போல நான் உன் தாயாரின் நிலையில் இருந்து உன்னையும் உன் கணவரையும் சேர்த்து வைக்க விரும்பறேன்.''

''அம்மா... எனக்கு ஏற்பட்ட அவமானம் போல நீங்க அனுபவிச்சிருக்க மாட்டீங்க...'' கங்காவின் கண்கள் கலங்கிப் போயின.

''உன்னைவிட அதிகம் அனுபவிச்சவள் நான். நீயாவது ஒண்ணரை ஆண்டுதான் உன் கணவனிடமிருந்து பிரிஞ்சு வாழ்ந்திருக்கே — புராண கால சகுந்தலை அஞ்சு வருச காலம் தன் கணவனைப் பிரிந்து வாழ்ந்ததாக கதை சொல்லுது —ஆனால் இந்த சிவகாமி பத்து ஆண்டு காலம் வாழாவெட்டியாக இருந்திருக்கா. நீ பட்டணத்திலே வாழறப் பொண்ணு — அக்கம் பக்கம் அதிகம் பேசுமுன்... இடத்தைக் காலி பண்ணிகிட்டு என்கிட்டே வந்துட்டே... இந்தப் பக்கத்தில் உன்னைப் பற்றி யாருக்கும் எதுவும் தெரியாது — அதனால் நிம்மதியா இருந்தே...

''ஆனால் நான் என் பிறந்த வீட்டில்... கிராமத்தில் இருந்தேன். உற்றார் — உறவினர் கண்டபடி பேசி என்னை ரொம்பவே அவமானப் படுத்தினாங்க... நல்லது பொல்லாததுக்கு நாலு பேர் முன்னே வரக்கூசி... கதவு பின்னால் நின்று கொண்டு காலம் கழிச்சவ. உன்னை உன் கணவர் ஒருவர் தான் அவமானப்படுத்தினார். ஆனால் என்னை

மனசு கண்டபடி பேசி அவமானத்திலே துடிக்கச் செய்தது. அப்படியிருந்தும் என் கணவர் மன்னிப்புக் கேட்டப்போ எல்லாத்தையும் மறந்து அவரோட மறுபடி வாழ ஒப்புக் கொண்டேன்!''

''உங்களுக்கு கருணையான உள்ளம் மன்னிச்சுட்டீங்க!'' பதிலளித்த கங்கா... கோபத்துடன் தன் கணவன் பக்கம் பார்த்தாள்.

''உனக்கும் என்னைப் போல கருணையான மனம் இருக்கு... நரேந்திரனை மன்னிச்சுட்டு அவரோட ஒத்துப்போய் நல்லா வாழும்மா... எனக்குக் குழந்தை குட்டி ஏதும் கிடையாது. என் கணவரிடம் திரும்பிப் போய் வாழ வேண்டிய நிர்பந்தம் இருக்கவில்லை. பத்து வருஷம் பழியைச் சுமந்தோம் மீதி காலத்தை அப்படியே ஓட்டிடலாம்னு நான் வீம்பு பிடிச்சிருக்கலாம். என் கணவரிடம் இருந்த சொத்துக்களைப் பார்த்து நான் அவரிடம் திரும்பி வாழ வந்துடலை... வாலிபம் ஒடுங்கி — இருதய நோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த அவரைப் பார்த்து பரிதாபப்பட்டு அவருக்குத் துணையாக இருக்கத்தான் திரும்பி வந்தேன்.''

''நரேந்திரன் பூரண குணமடைந்து விட்டார். இனி அவருக்கு நான் தேவையில்லையே?''

''குழந்தை ஆனந்தன் இருக்கானே. அவனுக்கு தாய் தேவையாச்சே. உன் கணவர் அவனுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க முடியும். கேட்ட பொருளை வாங்கித் தர முடியும். ஆனால் அம்மாவின் அன்பை வாங்கித் தர முடியுமா? நல்லா சிந்தித்துப்பார்...''

சிந்திச்சுப் பார்த்தேன் — மறுபடி சேர்ந்து வாழறது என்பது சாத்தியப்படாதுன்னுதான் இந்த முடிவுக்கு வந்தேன்... மனம் அத்தனை ஆழமாக நொந்து போயிருக்கு...''

''உண்மையில் நீ இவரை மன்னிச்சிருந்தா — மனம் இப்படி வேதனைப்படாது. உன்னை வஞ்சித்தார்

நரேந்திரன்னுட்டு இப்போ பழிவாங்க நீ புறப்பட்டிருக்கே...!''

''அதெல்லாம் இல்லேம்மா. என்னைத் தவறாகப் புரிந்து கொண்டு பேசுகிறீங்க...'' தழுதழுத்தாள் கங்கா.

''ஆண்கள் செய்கிற கொடுமையை சகித்துக் கொண்டு புழுவாகப் பெண்கள் பொறுமையாக இருக்கக் கூடாது —புரண்டு எழ வேண்டும்... அநீதியைக் கண்டு ஆவேசம் கொண்டு எதிர்க்க வேண்டும். ஒத்துக்கறேன் நான்... ஆரம்பத்திலே நீ பொறுமையா இருந்தே... துன்பம் தாங்காது எதிர்த்துக் கொண்டு பிரிஞ்சு வந்துட்டே... இனி புரட்சின்னு தப்பு காரியம் செய்யக் கூடாது. வேறே ஒரு ஊரில் போய் தனியே வாழ நீ நினைப்பது தப்பும்மா... இந்த இளம் வயசில் சரியான துணையின்றி தனித்து இருந்தால்... பல ஆபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கு. ஒரு ஆண் கோவிச்சுக்கிட்டு வீட்டைவிட்டு வெளியே போய்விட முடியும். பாதை ஓரத்தில் கூட அவனால் படுத்து உறங்க முடியும். ஆனால் பெண்... நான்கு சுவர்கள் கொண்ட வீடு எனும் பாதுகாப்பிலிருந்து வெளி நடப்பு செய்ய முடியாது. பெண்கள் புரட்சி எது — தவறு எதுன்னு புரிஞ்சுக்கிட்டு நடக்கணும்மா...'' சிவகாமி படபடவென்று பேசினாள்.

இதுவரை மவுனமாகக் கேட்டுக் கொண்டு இருந்த நரேந்திரன் எழுந்து மனைவியருகில் வந்தான்.

''கங்கா! என்னை மன்னிச்சுடு —எனக்காக நீ மறுபடி திரும்பி வரவேண்டாம். என் மனைவியாக என்னோடு இணைந்து நீ வாழ ஆசைப்படாவிட்டால் நான் வற்புறுத்த மாட்டேன்... ஆனால் ஆனந்தனுக்கு அன்பான ஒரு தாயாக இரு... நாம ரெண்டுபேரும் அவனை வளர்த்து ஆளாக்குவோம். அதுக்கு நீ எனக்கு உதவி செய்யணும்...'' கெஞ்சியபடி அவளது கரங்களை இறுக்கமாகப் பற்றிக் கொண்டான்.

அவனது கண்கள் ஈரமாகிப் பளிச்சிடுவதைக் கண்ட சிவகாமி மனம் கரைந்து போனாள்.

தவறு செய்து விட்டார் நரேந்திரன் — அதற்காக மன்னிப்பு கேட்கிறார். கங்கா மனிதாபிமானத்துடன் எல்லாத்தையும் மறந்து அவரோட வாழப் புறப்பட வேண்டியதுதானே முறை... அதைவிட்டு என்னத்திற்கு இப்படி இடக்குப் பண்ணுகிறாள்? சிவகாமி ஒரு கணம் தனக்குள்ளே எண்ணி வெகுண்டாள்.

''கங்கா!'' அதட்டும் குரலில் கூப்பிட்டாள்.

''என்னோட உன்னை இத்தனை காலம் வச்சு அரவணைச்சிருக்கேன் அதற்கு பிரதியா உன்கிட்டே ஒரு உதவியை கேட்கப் போறேன் —செய்வியா?''

''கேளுங்கம்மா கட்டாயம் செய்வேன்!''

''என் வயசுக்கும், அனுபவத்துக்கும் மதிப்பு கொடுத்து உன் கணவரோட வாதாடாம நீ இப்பவே இவரோட உன் வீடு திரும்பணும்.. உங்களுக்குள் ஏற்பட்ட பல கசப்பான சங்கதிகளை மறந்து இரண்டு பேரும் அந்நியோன்யமாகின பிறகு... ஒரு நாள் நீ உன் குழந்தையோட இங்கே வரணும்... உன்னை அப்படிப் பார்க்கணும்னு நெடு நாளைய ஆசை எனக்கு...!''

கங்கா பதில் சொல்லாது விழித்தாள்...!

''கங்கா... வீட்டுக்கு வாம்மா...!'' மிகவும் அன்புடன் அழைத்தான் நரேந்திரன்.

நெஞ்சை அடைத்துப் பொங்கிப் புரண்ட உணர்ச்சிக் கொந்தளிப்பைத் தாங்க முடியாது கங்கா, நரேந்திரன் தோள்மீது சாய்ந்து கொண்டு... விசும்பி அழ ஆரம்பித்தாள். இருவரையும் அங்கேயே விட்டு மெல்ல பின்பக்கம் சென்று விட்டாள் சிவகாமி. எல்லாவற்றையும் தூர நின்று பார்த்துக் கேட்டுக்கொண்டிருந்த நீலாம்மாள் சட்டென சமையலறைக்குள் மறைந்து கொண்டு தன் கன்னங்களில் கோடிட்ட ஆனந்தக் கண்ணீரை அவசரமாகப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

இது நடந்து பல நாட்களுக்குப் பின்னர் — கடந்து போன கசப்பான நிகழ்ச்சிகளை மறந்து கங்கா, கணவனுடன் பழைய கங்காவாகி —இணைந்து வாழத் தொடங்கிய பின்னர்... நரேந்திரன் தனது பூரண ஆரோக்கியத்தைத் திரும்பப்பெற்ற பின்னர்... ஆனந்தனைக் கூட அழைத்துக் கொண்டு கணவனும், மனைவியும் திருப்பதி ஆண்டவனை சேவிக்கக் காரில் கிளம்பினர்.

''உங்க நினைவு திரும்ப வந்துட்டா... படியேறி வந்து கோவிந்தனை தரிசிப்பதாக வேண்டிக்கிட்டிருக்கேன்...'' புன்னகைத்தாள் கங்கா...

''என் கங்கா வந்தாள். திரும்ப என் வாழ்விற்குள் வந்து விட்டாள் என்ற அற்புதம் நேர்ந்தால்... நானும் படியேறி வந்து அந்த பரந்தாமனைத் தரிசிப்பதாக வேண்டுதல்... அதனாலே ரெண்டு பேரும் கைகளைக் கோர்த்துக் கொண்டு... கடவுள் நாமத்தைச் சொல்லிக் கொண்டு படியேறுவோம். சரிதானே!'' மெல்ல சிரித்தான்.

''ஆனந்தனுக்கு மொட்டையடிக்க வேணும். அதையும் முடிச்சுட்டுத் திரும்பலாம்!'' மகிழ்ச்சியுடன் கூறினாள் கங்கா.

அவர்கள் தாங்கள் நேர்த்திக் கொண்டபடி எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு... பிரகாரத்தைச் சுற்றி உண்டியருகே வந்தார்கள்.

நரேந்திரன் தன் சட்டைப் பைக்குள்ளிருந்து ஒரு சிறு நகைப்பெட்டியை எடுத்தான்.

''இதுக்குள்ளே என்ன இருக்கு தெரியுமா?'' புன்முறுவலித்தபடியே பெட்டியைத் திறந்தான்.

''வைரப்பிள்ளையார்... ஆமாம்... அதை இங்கே எதுக்கு கொண்டு வந்திருக்கீங்க...?''

''புரியலையா கங்கா...? இதை நீ சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்க்கணும்னு என்கிட்டே கொண்டு வந்து

கொடுத்தே. நமக்குள் பலத்த மனத்தாங்கல் ஏற்படக் காரணமா இருந்த இந்த வைரப்பிள்ளையார் இனி இருக்க வேண்டிய இடம் பகவானின் உண்டியல்தான்னு மனசில் தோணித்து... உன் கையாலும் இதைக் கொஞ்சம் பிடி. ரெண்டு பேரும் சேர்ந்து இந்த வைரப்பிள்ளையாரை திருப்பதி ஆண்டவன் உண்டியில் போட்டுடுவோம்'' என்றான்.

கங்கா மகிழ்ச்சியுடன் அவனது கரத்தின் மீது தன் கையை வைக்க... இருவரும் அந்த அபூர்வமான கலைப் பொருளை கடவுளுக்கு காணிக்கையாக உண்டியில் சேர்த்தனர்.

கார் வீட்டை நோக்கி விரைந்து கொண்டிருந்தது... இரு மருங்கிலும் தெரிந்த பசிய வயல்கள் மீது மாலை வெய்யில் மஞ்சளைப் பூசிக் கொண்டிருந்ததை ரசித்துக் கொண்டிருந்தான். கங்கா... சற்று திறந்திருந்த கண்ணாடி வழியே குளுமையாக வீசிய காற்று தன் கூந்தலைப் புரட்டிக் கொண்டிருப்பதை சரி செய்து கொண்டு பின் ஆசனத்தில் மொட்டைத் தலையில் அப்பிய சந்தனம் காய்ந்த நிலையில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த தன் மகனை ஆசையோடு திரும்பிப் பார்த்தாள்.

''சில நாளைக்குப் பின் பத்திரிகையில் ஒரு செய்தி கட்டாயம் வெளிவரும். யாரோ ஒரு பக்தன் விலையுயர்ந்ததொரு வைரக் கல்லில் செதுக்கிய பிள்ளையார் உருவத்தை —உண்டியில் தன் காணிக்கையாக போட்டிருக்கிறார். அது பல லட்சங்கள் பெறும் என மதிப்பிடப் பட்டிருக்கிறது என்பதை நீங்க படிக்கப் போறீங்க...'' என்று மகிழ்ச்சியுடன் சிரித்தாள் கங்கா.

''அதற்கு மேலாக விலை மதிப்பில்லாத கங்கா எனும் ஒரு நல்ல பெண் நரேந்திரனுடன் வாழ திரும்பி வந்தாள் எனும் செய்தியை என் மனம் தனக்குள்ளேயே சொல்லிக்கப் போறது இல்லையா!'' வேடிக்கையாகக் கேட்டு அவளது கன்னத்தை தன் இடது கரத்தால் மெல்ல வருடினான் நரேந்திரன்.

''வழியிலே திருத்தணியில் வண்டியைக் கொஞ்சம்

நிறுத்துங்க —முருகனை தூர இருந்தாவது வணங்கிட்டு போகணும்... எனக்கு இன்னொரு தடவை நிதானமாக திருப்பதிக்கு வந்து ஆண்டவனை வணங்கி — திருத்தணி முருகனை தரிசித்துட்டுப் போகணும்னு ஆசையா இருக்கு'' என்றாள் கங்கா.

''நான் நினைச்சேன் —- நீ சொல்லிட்டே... நம்ம மனசு எப்படி ஒண்ணா இணைஞ்சுட்டது பாத்தியா?... நாம் குடும்பத்தோட கட்டாயம் இன்னொருமுறை வருவோம்... கூட ஆனந்தனின் தங்கையையும் கூட்டிக் கொண்டு வருவோம்... அப்படித்தான் நான் வேண்டிக் கொண்டிருக்கேன்...'' என்று நரேந்திரன் கூறியதும்... மகிழ்ச்சியும் வெட்கமுமாக அவனது தோள் மீது முகத்தைப் புதைத்துக் கொண்டாள் கங்கா...

நரேந்திரன் வேகமாக காரை ஓட்டிக் கொண்டிருந்தான். அவர்கள் இருவர் மனதிலும் வருங்காலத்தின் வளமான வாழ்க்கை — அதன் எதிர்பார்ப்புகளுடன் வேகமாக —இனிமையாக... பலவித கற்பனைகளாக... மென்மையாக மலரத் தொடங்கியது.

(முற்றும்)